உ

# ஸ்ரீ கிருஷ்ணசரித்திரவிமர்சம்

V. S. ராமஸ்வாமி சாஸ்திரி, B.A., B.L. அவர்களால்

வங்கபாஷையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.

தமிழ்ச்சங்கப்பிரசுரம்—ககூ.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை.

1938.

ஸ்ரீ

இம்மொழிபெயர்ப்பு

ஸ்ரீஸ்ரீ உ. வே. கெ. ராமையங்கார், பி.ஏ., பி.எல்.

அவர்களுடைய கரகமலங்களில்

அவர்கள் அனுமதிபெற்று

அன்புடன் ஸமர்ப்பிக்கப்பெற்றது.

*Dedicated to*

M. R. Ry., ***K. Ramiengar Avl.***, B.A., B.L.,

an old class-mate & life long friend,

as a token of affectionate regard

and brotherly love,

by

*V. S. Ramaswami Sastri*, B.A., B.L.,

the Translator.

"[illegible] ।

[illegible] ॥

([illegible])

"தத்தையன்னார் பெற்றமக்கள் தம்மின் மிகப்பெரியர்

வித்தைபெற்ற மக்களிது மெய்"

—

# PREFACE

By Mr. T. C. Srinivasa Aiyangar, B.A., B.L., M.L.C.,
Advocate & Vice-President,
Madura Tamil Sangam, Madura.

## SREE KRISHNACHARITRA VIMARSAM.

My friend Mr. V. S. Ramaswami Sastri has placed the Tamil lovers under yet another debt of gratitude by rendering "Krishna Charitram" a work of the great Bengali author Bankim Chunder Chatterjee into Tamil. "Krishna Charitra Vimarsam" is an appropriate name for this translation. It is not a mere narration of the entrancing story of Sri Krishna, nor is it a panegeric, nor is it an exposition, of the profound philosophy associated with Him. No subject has created so vast a devotional literature as Sri Krishna, and yet no subject has in recent times provoked so large a quantity of polemical literature. The Krishna tradition has exercised a lasting influence on the lives, thoughts, and beliefs of India, through the ages and Sri Krishna's life and teachings present lessons and problems from many aspects. Doubts and difficulties, now regarding the personality and again regarding the accounts in the diverse works held sacred, arise; whether He has a historical personality or He is simply mythical and is the creation of the imagination of Pouranics or the Epic Poets. It is no wonder that Sri Krishna is a subject of considerable interest to students and savants as well as to devotees.

Bengal, though largely Saktaic, yet has developed a Vaishnavaism devoted to Sri Krishna. The excesses of unthinking devotion and belief have added further layers of fiction and legend to the already heavy thick crust enveloping the life and message of Sri Krishna. In the conflict of the sectarian schools, and in the onslaughts of certain foreign missonaries, Sri Krishna's life and purpose have been the objects of attack and defence, but neither afford useful data for serious study and constructive criticism.

Bankim Chandra took up the subject and the older literature in Sanskrit bearing on it, for critical study.

Bankim Chandra lived in a period of transition in Bengal. Intellectually, he was a product of the modern renaissance in Bengal. He had his roots in the old Hindu culture. His outlook was modern, and he derived his critical and historical method from his European culture. The work bears the impress of the author in the severely modern critical approach he has adopted.

In the nature of things, it would be difficult to expect a general agreement to his views. But few would contend that a large quantity of legend has not gathered round the subject. Bankim Chandra's treatment of the subject has opened a line of research.

The subject of Sri Krishna is dealt with in seven parts. The author subjects some of the Puranic accounts to searching analysis, rejects some as unauthentic, and builds on a foundation of unquestionable authorities and historical probabilities. The author presents, as a result of his researches, Sri Krishna, as a superman, endowed with superior capacity, intellectual and moral, carrying a high sense of public and individual duty, playing His part with a relentless will, to purge society and state-policies of all that was unrighteous and oppressive and to steadily restore the reign of law and order, tending to progress and welfare of peoples and kingdoms, and stressing all through, the supreme dictates of "DHARMA".

Bankim Chandra's work deserves to be known to the Tamilians.

Mr. V S Ramaswami Sastri's qualifications to translate the work are many. He is a Sanskrit poet and scholar. He is a keen student of Tamil, commanding an easy and fluent style. He possesses a good knowledge of Bengali and Hindi. His love of letters led him to change his practice at the bar for the Principalship of the Rameswaram Sanskrit College. His friends were anxious about his health when he retired from the principalship. The rest he earned has somewhat improved his health, and the leisure he acquired has stimulated his literary activities and not the least of his recent contributions, is this translation.

Madura
22-12-'38

T. C. SRINIVASAN.

# முன்னுரை.

கீதாசாரியனான கண்ணபிரானுடைய சரிதங்களின் உண்மை காணும் நோக்கத்துடன், வங்கதேசத்துக் கவிதிலகமான ஸ்வர்க்க வாஸி, பாபு—வங்கிமசந்திர சட்டோபாத்தியாயரவர்கள் வங்கபாஷை யில் எழுதிய ஸ்ரீகிருஷ்ணசரித்திரம் என்னும் அரிய ஆராய்ச்சிநூலை என்னால் இயன்றவாறு தமிழில் மொழிபெயர்த்து ஸ்ரீகிருஷ்ண சரித்திரவிமர்சம் என்று நாமஞ்சூட்டித் தமிழ்மக்களுக்கு உவந்த தாயிருக்குமென நம்பிப் புத்தகவுருவமாக வெளியிட்டிருக்கிறேன்.

இந்த மொழிபெயர்ப்பானது முதனூலிற்கண்ட வங்கமொழி களுக்கு நேரான தமிழ்மொழிகளால் இயன்றதன்று. முதனூற் கருத்தைத் தழுவித் தமிழ்மக்கள் எளிதிலுணரும்படி வசனமாக எழுதப்பெற்றது.

இடையிடையே முதனூலிற் கண்ட வடமொழிச்சுலோகங்க ளும் அவற்றுக்குச் சரியான தமிழுரையும் வரையப்பெற்றது.

இது, சென்ற மூன்று வருடங்களுக்குமுன்வரை இந்நகரத்து நடைபெற்றுவந்த ஹரிஸமயதிவாகரம் என்னும் பத்திரிகையில் மாதந்தோறும் சிறிது சிறிதாக வெளியிடப்பட்டுவந்தது; இப்பால் அப்பத்திரிகை நின்றுவிட்டமையால் முழுதும் வெளிவரா திருந்தது.

எனதுவேண்டுகோளுக் கிசைந்து இதனைத் தமிழ்ச்சங்கப் பிரசுரமாக வெளியிடுவித்த மதுரைத் தமிழ்ச்சங்கத்தார்க்கும் இதற்குச் சிறந்ததொரு ஆங்கில முகவுரை யெழுதியுதவிய என் நண்பர் ஸ்ரீமான். T. C. ஸ்ரீநிவாஸையங்கார் B.A., B.L. (M.L.C.) அவர்களுக்கும் என்மனமார்ந்த நன்றியறிவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிற் காணப்பட்ட பிழைகளைத் திருத்தியுதவிய செந்தமிழ்ப் பத்திராசிரியர்பால் நான் மிகக் கடப்பாடுடையேன்.

மேலும் என்னுடன் கல்விபயின்றவரும் என் உயிர்த்தோழரு மான ஸ்ரீ. உ. வே. K. ராமையங்காரவர்களுக்கு இதனை உரிமை யாகச் சமர்ப்பிக்கவிரும்பி அவர்களை நான் பிரார்த்தித்தபோது அவர்கள் பெரியமனதுடன் இதனை யேற்றுக்கொண்டதுபற்றி அவர்களுக்கும் என் நன்றியறிவைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

24—12—38<br>மதுரை. } V. S. ராமஸ்வாமி சாஸ்த்ரி, B.A., B.L.

ஸ்ரீ:

# ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சம்.

## முதலாவது கண்டம்.

### முதலதிகாரம்.

[illegible] ।
[illegible] ॥

இப் பாதகண்டத்திற் பெரும்பாலோரான இந்துக்கள் யாவரும், ஸ்ரீகிருஷ்ணபகவான் ஈசுவராமிசமாய் அவதரித்தவரென்று நம்புகின்றனர். மேலும், நம்நாட்டில் எவ்விடத்திலும் ஸ்ரீகிருஷ்ணனுடைய உபாஸனை பெரும்பாலும் அநுஷ்டிக்கப்பட்டுவருகிறது. கிராமந்தோறும் கிருஷ்ணன்கோயில்; வீடுதோறும் கிருஷ்ணபூஜை; மாதந்தோறும் கண்ணன் திருவிழா; விழாக்களிலெல்லாம் கண்ணன் வீதிப்புறப்பாடு; வாய்தோறும் கண்ணன் நாமம். எவரும் கண்ணன் பெயரை நினையாமல் வேறிடத்திற்கு யாத்திரை புறப்படுவதில்லை. கண்ணன்பெயரை எழுதாமல் யாவரும் கடிதமெழுதுவதில்லை. பிச்சைக்காரரும் 'ஹரே! ஸ்ரீக்ருஷ்ணாயநம:' என்று சொல்லாமல் பிச்சையெடுப்பதில்லை. ஏதாவது அவச்சொல் காதில் விழுந்தால் 'கிருஷ்ண கிருஷ்ண' என்று சொல்லி நாம் காதை மூடிக்கொள்கிறோம். வீட்டில் வளர்க்கும் கிளிகளுக்கும் 'கிருஷ்ண கிருஷ்ண' என்று உச்சரிக்கும்படி நாம் கற்பிக்கிறோம்.

"[illegible]" "கிருஷ்ணஸ்துபகவாந்ஸ்வயம்" (கண்ணனே பரம்பொருள்) என்று இவ்விதமான நம்பிக்கையிருப்பதால் எல்லாச்சமயங்களிலும் கிருஷ்ணபூஜையும், கண்ணன்பெயரை நினைத்தலும் கிருஷ்ணன்கதையும் ஆகிய இவைகளெல்லாம் தர்மத்திற்குச் சிறப்பைக்கொடுக்கின்றன. எச்சமயத்திலும் கடவுளை நினைவதைக்காட்டிலும் மனிதருக்கு வேறு மங்களமென்ன விருக்கிறது?

*

ஆனால் சிலர், கிருஷ்ணபகவானை எவ்வாறெண்ணுகிறார்கள்? பால்யத்தில் திருடனென்றும் (வெண்ணெயும் தயிரும் திருடியுண்டானென்றும்), குமாரப்பருவத்தில் விடனென்றும் (அநேக கோபஸ்திரீகளின் கற்பை அழித்தானென்றும்), முதிர்ந்த வயதில் வஞ்சகனென்றும் (வஞ்சனையால் துரோணர் முதலானவர்களை வதைசெய்தானென்றும்) நினைக்கிறார்கள். பகவானுடைய சரித்திரம் இவ்வித மிருக்குமா? எவர் கேவலசுத்தஸத்வரோ—எவரிடமிருந்து தூய்மை வருகிறதோ—எவருடைய பெயரை நினைத்தமாத்திரத்தில் வாலாமையும் பாபமும் விலகிவிடுகின்றனவோ—அவர், மனிதனாக அவதரித்துப் பாபத்தைச்செய்தாரென்பது பொருந்துமா?

பகவானுடைய சரித்திரத்தை இவ்விதமாகக் கற்பனைசெய்ததானது பாரதவருஷத்தின் பாபவெள்ளத்தைப் பெருக்கிற்று. சநாதனதர்மவிரோதிகள் இவ்விதமாகப் பிதற்றிக்கொண்டு தங்களுக்கு வெற்றிகிடைத்ததாக நினைக்கிறார்கள். நாம் உண்மையாகக் கிருஷ்ணனே பகவானென்று நம்பியிருக்கிறோம். மேற்றிசைக் கல்வியால் இந்நம்பிக்கை தவறியிருக்கிறது. பகவானான ஸ்ரீ கிருஷ்ணனுடைய உண்மையான சரித்திரம் புராணங்களிலும் இதிஹாஸங்களிலும் வருணிக்கப்பெற்றிருக்கிறது. அதைத் தெரிந்துகொள்வதற்காக நம்மால் இயன்றவரை புராணங்களையும் இதிஹாஸங்களையும் ஆராய்ச்சிசெய்வோமானால் அவைகளிலிருந்து, கிருஷ்ணனைக்குறித்து எவ்வகைக் கெட்ட எண்ணங்கள் உள்ளவாறுணராதாரிடம் பரவியிருக்கின்றனவோ அவைகளெல்லாம் ஆதாரமற்றவைகள் என்று வெளியாகும். உபந்யாஸகர்களால் கிருஷ்ணன்விஷயமாகச்செய்யப்படும் உபந்யாஸங்களெல்லாம் மிகவும் தூய்மைவாய்ந்தவைகள்; இத்தகைய புண்யசரித்திரம் வேறெவ்விடத்திலும் காண்பதரிது.

எவ்விதமான ஆராய்ச்சியால் இந்தக் கொள்கை கைக்கொள்ளப்பட்டதென்பதைத் தெரிவிப்பது இந்நூலின் முக்கியநோக்கம். மேலும் பகவானுடைய கதையை ஆராய்ச்சிசெய்வதால் விசேஷநன்மையிருக்கிறது. நமக்கு எவ்வாறு க்ருஷ்ணனே பரமாத்மாவென்று நம்பிக்கையிருக்கிறதோ அவ்வாறே இதைப் படிப்போர்

களுக்கும் நம்பிக்கையை உண்டாக்கவேண்டுமென்பது நம்முடைய கொள்கையன்று. இந்நூலில் நாம் மனிதத்தன்மையையே ஆராய்வோம். இந்துதர்மங்கள் எவை? என்று தெரிந்துகொள்வதில் கிருஷ்ணசரித்திர ஆராய்ச்சி மிகவும் பயனைக்கொடுக்கும். இச்சரித்திரத்தை அறியாவிடில் பழைய ஒழுக்கங்களின் நிலைமையைப் பற்றிச் சிறிதும் தெரிந்துகொள்ளமுடியாது.

இன்னும் நமக்கு வேறொரு பெரியநோக்கமும் இருக்கிறது. முன்னால் "தர்மதத்வம்" என்று ஒரு புத்தகம் வெளியிடப்பட்டது. அதிலிருந்து நாம் சிலவிஷயங்களைத் தெரிந்துகொண்டோம். அவை யாவன:—(1) மனிதன் எவ்வெவ்வகையான பக்திகளையுடையனாதல்வேண்டும்? (2) மனிததர்மங்கள் எவை? (3) மக்கள் செய்தொழிலால் ஒற்றுமையுடையராதலும் அதனால் இன்பம்விளைதலும் எப்படி? என்பனவாம். இப்பொழுது இவ்விஷயங்களை முழுதும் ஆராய்ச்சிசெய்வது ஒரேசமயத்தில் முடியாதகாரியம். இவ்விஷயத்தைப்பற்றி முற்கூறியநூலிற் சொல்லியிருக்கிறவிஷயங்களிற் சிலவற்றை இங்குக் குறிப்போம்.

சீடன்:—அறிவின்முதிர்ச்சியும் ஆராய்ச்சியில் திறமையும், காரியத்தில் கண்ணோக்கமும், நினைவில் தருமசிந்தையும், நல்ல ரஸங்களின் சுவையறிவும் ஆகிய இவையாவும் மனதின் முதிர்ச்சியைக் காண்பிக்கின்றன. மேலும், சரீரசம்பந்தமான முதிர்ச்சியும் உண்டு. அதாவது சரீரம் பலமுள்ளதாயும் நோயற்றதாயும் எவ்வகைக்காரியத்திற்கும் உதவுவதாயும் இருத்தல் வேண்டும். இவ்வித *ஆதர்சத்தை எவ்விடம் காண்போம்? இவ்விதமான மனிதனை நாம் கண்டதில்லையே?

குரு:—மனிதரில் காண்பதரிது. ஈசுவரனே எல்லாக்குணங்களும் வாய்ந்த எடுத்துக்காட்டாவன். அநந்தப்ரகிருதியான ஈசுவரன் உபாசனையின் முதலவஸ்தையில் பக்தருக்கு ஆதர்சமாகப் புலப்படுவதில்லை. அவருடைய குணாதிசயங்களைப்பார்த்து

---

* ஆதர்சம் - எடுத்துக்காட்டு.

ஈசுவரத்தன்மையை ஆராய்ந்து மனிதவுருக்கொண்ட ஈசுவரனை மனதில் நினைந்துநினைந்து சிந்திப்பவனெவனோ அவனுக்கு அவர் ஓர் ஆதர்சமாகப் புலப்படுகிறார். இவ்வாறே கிரிஸ்துவர்களுக்கு இயேசுகிரிஸ்து ஆதர்ஶம். பௌத்தர்களுக்கு சாக்கியசிம்ஹர் ஆதர்ஶம். தருமத்தை ஓங்கச்செய்வதாக இந்துக்களின் சாஸ்திரங்களில் எவ்விதமான ஆதர்சம் கூறப்படுகிறதோ அவ்விதமான ஆதர்சம் இவ்வுலகில் வேறெங்கும் எந்தச்சமயநூல்களிலும் இல்லை. ஜநகர்முதலிய ராஜரிஷிகளும் நாரதர்முதலிய தேவரிஷிகள் யாவரும் பிந்திய ஆதர்சங்களாவர். அவர்களிலும் இராமசந்திரன், யுதிஷ்டிரன், அர்ஜுனன், இலக்குமணன், தேவவிரத பீஷ்மன் முதலிய க்ஷத்திரியர்கள் ஸம்பூர்ண ஆதர்சங்களாவர். இவர்களிடம் எவ்விதத்திலும் நிறைவு காணப்படுகிறது. இவர்கள் ஸிம்ஹாசனத்திலிருந்துங்கூடப் பற்றற்றவர்கள்; கையில் வில்லேந்தியும் தருமமறிந்தவர்கள்; அரசர்களாகியிருந்தும் பண்டிதர்கள்; ஆற்றலுடையவர்களாயிருந்தும் யாவரிடத்தும் அன்புடையவர்கள். ஆனால் இவ்வெல்லா ஆதர்சங்களைக்காட்டிலும் இந்துக்களுக்கு மேலான ஆதர்சம் ஒன்றுண்டு. எவரிடமிருந்து யுதிஷ்டிரன் தருமத்தைக் கற்றுக்கொண்டானோ, அர்ஜுனன் எவருடைய சிஷ்யனோ, இராமலக்குமணர்கள் எவருடைய அம்சபூதர்களோ, எவருடைய சரித்திரத்திற்கு ஒப்பாக மஹாமகிமைபொருந்திய பிறிதொருசரித்திரம் எப்பாஷையிலும் சொல்லப்படவில்லையோ அவரே நமக்கு மேலான ஆதர்சமாவர். இந்தத் தத்துவத்தைப் பிரமாணமூலமாக மெய்ப்பிப்பதற்காகவே நாம் ஸ்ரீ க்ருஷ்ணசரித்திரத்தை ஆராயத்தொடங்கினோம்.

---

## இரண்டாவது அதிகாரம்.

கிருஷ்ணனுடையசரித்திரம் எப்படியிருக்கிறது? அதையறியுமாறென்னை?

இதையறியும்விஷயத்தில் முதலில் இரண்டு பெரிய தடைகள் எழுகின்றன. ஸ்ரீ கிருஷ்ணனிடத்து நம்பிக்கையுடையோர் அவர் அவதாரபுருஷரென்று கூறுகின்றனர்; ஆனால் இதை வாசிப்பவர்கள் யாவரும் இவ்விதநம்பிக்கையுள்ளவர்களல்லர். எவர்களுக்கு இவ்விதமான நம்பிக்கையில்லையோ அவர்கள் கிருஷ்ணசரித்திரத்தின் உண்மையென்னவென்று வினவுகிறார்கள். கிருஷ்ணனென்று பெயர்வாய்ந்ததொரு வ்யக்தி எப்பொழுதாவது இருந்ததுண்டா? அதற் காதாரமென்ன? இருந்தால் அவருடைய சரித்திரத்தை எவ்வாறு அறியலாம்? அதை அறிவதற் கெவ்வித உபாயங்களுண்டு? நாம் முதலில் இரண்டுசந்தேகங்களைப்பற்றி ஆலோசித்தல்வேண்டும். கிருஷ்ணனுடையவிருத்தாந்தம் கீழ்க்குறித்த க்ரந்தங்களினின்று அறியப்படுகிறது. அவை: (1) மஹாபாரதம் (2) ஹரிவம்சம் (3) புராணங்கள் என்பன. இவற்றில் புராணங்கள் 18. சிவபுராணங்களில் க்ருஷ்ணன்வரலாறு கூறப்படவில்லை. அடியிற் கண்ட புராணங்களில் அவர்வரலாறு சொல்லப்பட்டிருக்கிறது. அவை, (1) ப்ரும்மபுராணம் (2) பத்மபுராணம் (3) விஷ்ணுபுராணம் (4) வாயுபுராணம் (5) ஸ்ரீபாகவதம் (10) பிரும்மவைவர்த்த புராணம் (13) ஸ்கந்தபுராணம் (14) வாமனபுராணம் (15) கூர்ம புராணம் என்பனவாம்.

மஹாபாரதத்திலும் மேலேகண்ட புராணங்களிலும் காணப்படும் கிருஷ்ணசரித்திரத்தில் அநேக வேறுபாடுகளிருக்கின்றன. மஹாபாரதத்திற்காணப்படும் விஷயங்கள் ஹரிவம்சத்திலும் புராணங்களிலும் இல்லை. ஹரிவம்சத்திலும் புராணங்களிலும் காணப்படும் விஷயங்கள் பாரதத்தில் காணப்படுவதில்லை. இவ்வேறுபாட்டுக்குக் காரணம் ஒன்றுண்டு. மஹாபாரதம் பாண்டவர்களின் சரித்திரம். ஸ்ரீ க்ருஷ்ணன் பாண்டவர்களுக்கு நேயர்; அவர்களுக்கு உதவிசெய்தவர். அவர் பாண்டவர்களுக்குச்சகாயராயிருந்து செய்த செயல்கள் மஹாபாரதத்திற் காணப்படுகின்றன. பிரசங்க க்ரமத்தில் வேறுசிலகதைகளையும் அதிற் காணலாம். அவருடைய சரித்திரத்தின் எஞ்சியபாகங்கள் மஹாபாரதத்திற் சொல்லப்படாமையால் ஹரிவம்சமென்ற வேறொருகிரந்தம் இயற்றப்பெற்றது. அப்பாகங்களை ஹரிவம்சத்திற் காணலாம். 'வியாசர் நாரதரிடம்

மஹாபாரதத்தின் முடிவுபெறுமையைப்பற்றிச் சொல்ல, நாரதர் வியாசருக்குக் கிருஷ்ணசரித்திரத்தை இயற்றும்படி உபதேசித்தருளினார்' என்று பாகவதத்திற் கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் மஹாபாரதத்தில் உள்ளபடி பாகவதத்திலாவது வேறு புராணங்களிலாவது இல்லை. மஹாபாரதத்தில் எவை விடப்பெற்றிருக்கின்றனவோ அவைகளே பாகவதத்திலும் மற்றைப்புராணங்களிலும் காணப்படுகின்றன.

ஆகையால் மஹாபாரதம் எல்லாவற்றிற்கும் முதன்மை பெற்றிருக்கிறது. ஹரிவம்சம் முதலியன மஹாபாரதத்திற் காணப்படாதவைகளைப் பூர்த்திசெய்வதற்காகவே இயற்றப்பட்டன. எல்லாவற்றிற்கும் முன்பு எது இயற்றப்பட்டதோ அதே எல்லாவற்றுக்கும் மூலக்கிரந்தமாகும். மகாபாரதம் ஹரிவம்சம் பதினெண்புராணங்கள் இவை யாவும் வியாசமஹருஷி ஒருவராலேயே இயற்றப்பட்டனவென்னும் இது உண்மையோ? அன்றோ? என்ற விசாரித்தல் இப்பொழுது பொருந்தாது. மகாபாரதத்தில் இதிகாச கதை உண்டா? இல்லையா? என்று பின்னால் விசாரிப்போம். மகாபாரதத்தில் இல்லாவிடில் ஹரிவம்சத்தில் ஐதிஹாசிகதத்வத்தைக் குறித்துப் பரிசீலனைசெய்வது வீணேயாகும்.

இச்சமயத்தில் நாம் விசாரிக்கப்புகுந்தவிஷயத்தில் இரண்டு பக்கத்திலும் இரண்டுதடைகள் உண்டாகின்றன. ஒருபக்கத்தில், 'ஸம்ஸ்கிருதபாஷையில் எவ்வகைக்கிரந்த மியற்றப்பட்டிருந்தாலும் அவையாவும் தீர்க்கதர்சிகளான ருஷிகளாற் செய்யப்பட்டவை; அவற்றுட்சொல்லப்பட்டவை யாவும் சந்தேகமற்றவுண்மைகள்; அவைகளையே நாம் கைக்கொள்ளல்வேண்டும். வேதவிபாகமும், லக்ஷம்சுலோகங்கள்நிறைந்த மஹாபாரதமும், ஹரிவம்சமும், பதினெண்புராணங்களும் ஆகிய இவையாவும் ஒருவராற்செய்யப்பட்டன; அவை இயற்றப்பட்டு, ஐயாயிரமாண்டுகளுக்குமேலாயிற்று; இவை யாவும் கலியுகத்தின் தொடக்கத்தில் நிகழ்ந்தவைகள்' என்று ஒரு சாரார் கூறுவர். பலர் இதை மறுக்கலாம். இதுதான் ஒரு பக்கத்திருந்துவரும் தடை.

மற்றொருபக்கத்தில் ஆங்கிலஅறிவு தடையாயிருக்கிறது. ஐரோப்பா அமெரிக்கா முதலிய தேசங்களில் சிலர் வடமொழியைக்

கற்றிருக்கின்றனர். அவர்கள் பழைய ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களி லிருந்து ஐதிஹாஸிகதத்வத்தைத் தெரிந்தெடுக்கப்புகுந்தனர். அவருள் ஒருசிலர், 'ஸ்வாதீனமற்றதாயும் வலியற்றதாயுமுள்ள இந்தியநாடு, எக்காலத்தில் நாகரிகமுடையதாயிருந்தது? ஒரு நாளும் இல்லை. நாகரிகமுடையதேயெனினும், அந்நாகரிகம் மிக வும் பழமையானது; உபயோகமற்றது' என்பர். அவர்களிற் சிலர் தவிர மற்றவர் பாரதவருஷத்தின் ப்ராசீனகௌரவத்தை அழிக் கப்புகுந்து, 'பாரதவருஷத்திற் காணப்படும் எல்லாக்கிரந்தங்க ளும் பிற்காலத்தவை; அவைகளிற் காணப்படும் விஷயங்களும் பிற்காலத்தவைகளிற் காணப்படும் விஷயங்களும் முழுப்பொய்; அயல்நாட்டினரிடமிருந்து திருடப்பட்டன' என்பர். ஹோமரின் காப்பியத்தைப் பார்த்து இராமாயணம் எழுதப்பட்டதென்று ஒரு வர் சொல்லுகிறார். பகவத்கீதை பைபிளின் சாயாமாத்திரம் என்று மற்றொருவர் உரைக்கிறார். இந்துக்களின் ஜோதிடம், சீன யவன சாலடீய மக்களிடமிருந் தடையப்பட்டதென்றும் இந்துக்க ளின் கணிதம் அயலாரிடமிருந்து கற்றுக்கொள்ளப்பட்டதென்றும் அக்ஷரங்கள் வேறு யாரிடமிருந்தோ தெரிந்துகொள்ளப்பட்டன வென்றும் வேறுசிலர் கூறுகிறார்கள்.

இவைகளை உறுதிப்படுத்துவதற்கான மூலஸூத்ரம், 'இந்துக் களின் க்ரந்தங்களில் அவர்கள்பெருமையைக்குறித்துக் காணப்படு கிறவையெல்லாம் பொய்யானவைகள்; பிரக்ஷிப்தங்கள்' என்பதே. அன்றியும், 'எவைகள் இந்துக்களுக்கு விரோதமாகக்காணப்படு கின்றனவோ அவைகளே உண்மைகள்; பாண்டவர்களைப்போன்ற வீரபுருஷருடைய கதைகளெல்லாம் பொய்யானவைகள்; பாண்ட வர்களென்பது கவியின் கற்பனை; ஆனால் பாண்டவர்பத்தினியான துரௌபதிக்கு ஐந்துபுருஷர்கள் உண்டென்பதுமட்டும் மெய்; ஏனென்றால் புராதன இந்துக்கள் நாகரிகமற்றவர்களாயிருந்தார் கள்; அக்காலத்துப்பெண்டிர் அநேகரை மணம்புரிந்துகொள்வது வழக்கமாயிருந்தது' என்கின்றனர். இது மற்றொருபக்கமிருந்து வரும் தடை. இது, ஒருவர் பழமையான இடிந்த மாளிகையில் ஆடையில்லாத ஒரு பதுமையைப் பார்த்து இத் தேசத்துப்பெண் டிர் முன்னாளில் ஆடையே அணியாதிருந்தனரென்றுகூறுவது

போனும். இவ்வாறு பிதற்றுவோர்கொள்கைகளை ஆராய்வதில் யாதொருபயனுமில்லை; ஏனென்றால் நாம் நம் நாட்டுமக்களைநோக்கி எழுதப்புகுந்தோம்; இந்துக்களின் விரோதிகளுக்காக எழுதவில்லை; நம் நாட்டுமக்களிற் சிற்சில கல்விமான்கள் மேனாட்டார்களின் அபிப்பிராயங்களையே தழுவுகிறார்களென்பது மிகவும் வருந்தத்தக்கது. அவர்கள் தாங்களாக யாதொருபரிசீலனையும் செய்யாமல் அயலார்களின் அபிப்பிராயங்களையே கொள்கிறார்கள். எவர்களுடைய உள்ளத்தில் அயலாருடைய வழக்கங்களே நல்லவை என்றும் நம் நாட்டுக்ரந்தங்கள்படிப்பதை விலக்கவேண்டுமென்றும் தோன்றுகிறதோ, நம் நாட்டிரவலர்களுக்குப் பிச்சையிடக்கூடாதென்று எவர்கள் கருதுகிறார்களோ—அவர்களுக்காக நாம் ஒன்றும் செய்யமுயலவில்லை. ஆனால் நம்நாட்டுக் கல்விமான்களில் அநேகர் உண்மையை விரும்புகிறவர்களாகவும் தேசப்பற்றுடையவர்களாகவும் இருக்கின்றனர். அவர்களுக்காக இதை எழுதலானோம்.

---

## மூன்றாவது அதிகாரம்.

*மகாபாரதத்தின் ஐதிகாஸிகத்தன்மை.*

கிருஷ்ணபகவானுடைய சரித்திரத்தைச் சொல்லப்புகுந்த க்ரந்தங்களுக்குள் மஹாபாரதமே முதன்மைபெற்றிருக்கிறதென்று முன்பே சொன்னோம். மஹாபாரதத்தை இதிஹாஸமென்று சொல்லுகிறோம். இதிஹாஸமென்றால் சரித்திரமென்று பொருள்படும். இதிஹாஸமென்று எதைச் சொல்லமுடியும்? இக்காலத்தில் நாய் நரி முதலியவைகளைப்பற்றிப் பொய்க்கதை எழுதி அதற்கு இதிஹாஸமென்று பெயர் அளிக்கிறார்கள். ஆனால் எந்தக் கிரந்தத்திலிருந்து பூர்வத்தில் உண்மையாய் நடைபெற்றவைகளை உள்ளபடி தெரியமுடியுமோ அந்தக்கிரந்தமே இதிஹாஸமெனப்படும். அதைத் தவிர மற்றக்கிரந்தங்களை இதிஹாஸமெனக்கூறுதல் இயலாது.

“தர்மார்த்த காமமோக்ஷாணாம் உபதேச ஸமந்விதம்,
பூர்வவ்ருத்த கதாயுக்தம் இதிஹாஸம் ப்ரசக்ஷதே”

இதன்பொருள்:—தர்மார்த்தகாமமோக்ஷங்களைக்குறித்த உபதேசங்கள் நிரம்பியதாயும் முன்னிகழ்ந்த கதைகளை வெளியிடுவதாயுமுள்ள க்ரந்தத்தையே இதிஹாஸமெனப் பெரியோர் சொல்லுகிறார்கள் என்பதாம்.

இப்பாரததேசத்தில் பழமையான க்ரந்தங்களுக்குள் மஹாபாரதமும் ஸ்ரீராமாயணமும் ஆகிய இரண்டுமே இதிஹாஸமெனப் பெயர்பெற்றன. மற்ற க்ரந்தங்களுக்கு இந்தப்பெயர் இல்லை. ஆராய்ந்துபார்க்குங்கால் இவையிரண்டிலுமே விசேஷமாய் இதிஹாஸத்தன்மை காணப்படுகிறது. மஹாபாரதத்திற் சிலகதைகளிருக்கின்றன. அவைகள் உண்மையற்றனவாயும் அஸம்பவமாயுமிருக்கின்றனவென்று அவைகளைத் தள்ளிவிடக்கூடும். ஆனால் இவ்விததோஷமொன்றும் காணப்படாத பாகங்களை இதிஹாஸமில்லையென்று நாம் எவ்விதம் தள்ளுவது? இவ்வுலகில் எத்தேயத்துப் பிராசீன இதிஹாஸங்களிலும் உண்மையும் பொய்யும் கலந்தேயிருக்கின்றன. மஹாபாரதத்தில் உண்மையற்ற சில கதைகள் அதிகமாகப் புகுந்ததற்கு விசேஷகாரணங்கள் உண்டு. மற்றத் தேசங்களில் இயற்றப்பெற்ற இதிஹாஸக்கிரந்தங்கள் எழுதப்பட்டே பிரசாரஞ்செய்யப்பட்டன. புராதன எழுத்தாளர்கள் மூலக்கிரந்தத்துடன் ஒத்துப்பார்த்துப் பிழைகளைத் திருத்திக்கொண்டார்கள். இத்தேயத்துப் பிராசீன க்ரந்தங்களெல்லாம் வாய்ப்பாடமூலமாகவே பிரசாரஞ்செய்யப்பட்டன.

எழுத்துக்கள் வழக்கத்தில்வந்தபிறகும் பிராசீன க்ரந்தங்கள் முந்தியவழக்கத்தையநுசரித்துக் குரு சிஷ்ய பரம்பரையாக வாய்மொழியாகவே ப்ரசாரஞ்செய்யப்பட்டுவந்தன. ஆதலால் இடைச்செருகல்கள் க்ரந்தமத்தியில் புகுவதற்கு அவகாசம் ஏற்பட்டது. இரண்டாவதுகாரணம்:—ரோம் கிரீஸ் முதலான தேசங்களிலுள்ள இதிகாசக்கிரந்தங்கள் மஹாபாரதம்போல் ஜனசமாஜத்தில் ஆதரவுபெறவில்லை. ஆகையினால் இத்தேசத்தின் எழுத்தாளர்கள் ப்ரக்ஷிப்தங்களை க்ரந்தங்களின் நடுவில் நுழைக்கமுயன்றதுபோல மற்றைத்தேசத்து எழுத்தாளர்கள் முயலவில்லை. மூன்றாவது காரணம்:—மற்றத்தேசத்து க்ரந்தகர்த்தாக்கள் தங்களுடைய

புகழையோ மற்றெவ்விதப் பயன்களையோ கருதி நூல்களையியற்றினர். தங்களுடைய க்ரந்தங்களைத் தங்கள் பெயரைக்கொண்டே பிரசாரஞ்செய்வதில் அவர்களுக்கு மிகவும் விருப்பமிருந்தது. தாம் இயற்றியவைகளைப் புகவிட்டுத் தம் பெயர் வெளிப்படாதபடி செய்ய அவர்கள் விரும்பமாட்டார்கள். இத்தேசத்திலோ, பிராமணர்கள் சுயநலங்கருதாமல் நிஷ்காமமாய் நூல்களை இயற்றினார்கள். லோகஹிதத்தைத்தவிரத் தங்களுடையபுகழைப் பெருக்குவதற்கு அவர்கள் விரும்பவில்லை. சிற்சில நூல்களில் அதை ஆக்கியோரின்பெயரே புலப்படவில்லை. அநேக உயர்ந்த க்ரந்தங்களில் அவைகளை இயற்றியவர்கள் என்னவர்ணத்தைச் சார்ந்தவர்களென்று அறியவுமே முடியாமலிருக்கிறது. இத்தேசத்தில் இவ்வாறு சுயநலம் பாராட்டாத க்ரந்தகர்த்தாக்கள் தேசநன்மைக்காகச் சிறந்தநூல்களை நிஷ்காமமாக இயற்றி அவைகளைப் பிரசாரஞ்செய்து உலகநன்மையைப் பெருக்கினார்கள்; இதனால் மற்ற க்ரந்தகர்த்தாக்களும் தாங்களியற்றியவைகளையும் சிறந்த க்ரந்தங்களில் நுழைத்துவிட்டார்கள்.

இக்காரணங்களால் மஹாபாரதத்தில் ப்ரக்ஷிப்தங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. ப்ரக்ஷிப்தங்கள் அதிகமாகக்காணப்படுவதால் இப்பெரிய இதிஹாஸக்கிரந்தத்தில் உண்மையானவிஷயங்களே இல்லையென்றுசொல்வது பேதைமையாகும்.

---

## நான்காவது அதிகாரம்.

### குருக்ஷேத்திரயுத்தம் எப்பொழுது நிகழ்ந்தது ?

இன்றைக்கு ஐயாயிரவருடங்களுக்குமுன் கலியுகத்தொடக்கத்தில் மஹாபாரதயுத்தம் நடந்ததென்பது நம்மவர்கொள்கை. இது சரியானதன்றென்று நம்முடைய க்ரந்தங்களின்மூலமாகவே நிரூபிக்கமுயல்வோம். கலியுகம் பிறந்து 953 வருடங்களானபின்பு கோநர்த்தன் என்பான் காஷ்மீரத்தில் அரசுபுரிந்தான். கோநர்த்தன் யுதிஷ்டிரன் காலத்திலிருந்தவன். அவன் 35 வருடம் அரசாண்டானென்று ராஜதரங்கிணி என்கிற க்ரந்தத்திற் காணப்படுகிறது.

மேலும் விஷ்ணுபுராணத்தில் 8-ஆம் அம்சம் 24-ஆம் அத்யாயம் 33, 34-ஆம் சுலோகங்களில், 'ஸப்தருஷிமண்டலமத்தியில் எந்த இரண்டுநக்ஷத்ரங்கள் ஆகாசத்திற் கிழக்கே காணப்படுகின்றனவோ அவைகளுக்கு ஸமசூத்ரத்தில் எந்த நக்ஷத்ரம் காணப்படுகிறதோ அந்த நக்ஷத்ரத்திலேயே ஸப்தருஷிமண்டலம் நூறுவருஷத்திற்கு நிலைத்திருக்கும். பரீக்ஷித்தின்காலத்தில் ஸப்தருஷிமண்டலமானது மகநக்ஷத்ரத்தில் இருந்தது. அப்பொழுது கலியுகம் ஆரம்பமாகி 1200 வருஷங்களாயின' என்று காணப்படுகிறது. இதனால், கிறிஸ்துபிறப்பதற்கு 1900 வருஷங்களுக்கு முன்பு குருக்ஷேத்ரயுத்தம் நடந்ததென்று தெரிகிறது. புராணகர்த்தாக்களான ரிஷிகளின் சொற்களை ஆராய்வோம். யுதிஷ்டிரன் காலத்தில் மகநக்ஷத்ரத்தில் இருந்த ஸப்தருஷிமண்டலம் நந்தமஹாபத்மன்காலத்தில் பூர்வாஷாடநக்ஷத்ரத்தில் இருந்தது. இது, விஷ்ணுபுராணம் 114-ஆம் அம்சம் 24-ஆம் அத்யாயம் 39-ஆம் சுலோகத்தில், 'இம்மஹரிஷிகள் பூராடநக்ஷத்ரத்தைவிட்டு எப்பொழுது செல்லுகின்றனரோ அப்பொழுது நந்தராஜ்யத்தின் தொடக்கம். அதுமுதல் கலியானவன் விருத்தியடைவான்' என்று கூறப்படுவதனாலும் விளங்கும்.

மகத்திலிருந்து பூராடம் 10-ஆவது நக்ஷத்ரம். ஆகையால் யுதிஷ்டிரன்காலத்திற்குப்பின் $10 \times 100 = 1000$ வருடங்களுக்குப் பிந்தியதே நந்தன்காலம் என்று ஏற்படுகிறது. ஸ்ரீமத் பாகவதத்திலும், 13-ஆம் ஸ்கந்தம் 2-ஆம் அத்யாயம் 32-ஆம் சுலோகத்தில் இவ்வாறே காணப்படுகிறது.

விஷ்ணுபுராணத்திலிருந்து மேலேகுறிப்பிட்ட 'வ்யாஸஜதி' என்ற சுலோகத்திற்கு முன் சுலோகத்தில், 'பரீக்ஷித்தின் ஜனன முதல், நந்தமஹாபத்மன் பட்டாபிஷேகம்வரை ஆயிரத்தைந்நூறுண்டுகளாயின' என்று காணப்படுகிறது. நந்தனுடைய முழுப் பெயர் நந்தமஹாபத்மன் என்பது. விஷ்ணுபுராணத்தில் இதே நான்காவது அம்சத்தின் இருபத்துநான்காவதத்யாயத்தில், 'மஹாபத்மனும் அவன் புதல்வர்களும் ஒருநூறுவருடம் அரசர்களாயிருப்பார்கள்; கௌடில்யனென்னும் பெயர்வாய்ந்த பிராமணன் நந்தர்களை நாசஞ்செய்வான்; அவர்கள் அழிந்தபின் மௌரியர்கள்

பூமியை அநுபவிப்பார்கள்; கௌடில்யனென்னும் பிராமணன் சந்த்ரகுப்தனுக்கு ராஜ்பாபிஷேகஞ்செய்வான்' என்று காணப்படு கிறது.

ஆகையால், யுதிஷ்டிரன்காலத்திலிருந்து 1115 வருடங்களுக் குப்பின் சந்திரகுப்தன் பெயர்பெற்ற சக்கிரவர்த்தியாயிருந்தான். இவனே அலெக்ஸாண்டர்காலத்தவன். ஸெல்யூகஸ் என்பவனை யுத் தத்தில் வென்று அவன்மகளை விவாகஞ்செய்துகொண்டவன் சந்திரகுப்தனே. அலெக்ஸாண்டர் கி. மு. 325-ஆம் வருஷத்தில் இந்நாட்டின்மேற் படைபெடுத்தான்.

சந்திரகுப்தன் கி. மு. 315-ஆம் வருஷத்தில் ராஜ்யம்பெற் றான்; ஆகையால் (இந்த 315 என்னும் எண்ணுடன் மேலே காணப் பட்ட 1115 என்னும் எண்ணையுஞ் சேர்த்தால்) கி. மு. 1430-ஆம் வருடத்தில் மஹாபாரதயுத்தம் நடந்தது என்பது விளங்கும். மற் றப்புராணங்களிலும் இவ்விதமான கதைகள் காணப்படுகின்றன.

மத்ஸ்யபுராணத்திலும் வாயுபுராணத்திலும் 1115-க்குப் பதி லாக 1150 என்று காணப்படுகிறது. அதிலிருந்து 1465 வருடம் கிடைக்கிறது.

வருஷத்தில் இரண்டுநாட்களிலேயே இரவும் பகலும் ஒரே அளவாயுள்ளனவென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். இவை களை விஷு என்று சொல்லுவார்கள். ஆகாசத்தில் எந்தெந்த இடத் தில் உதயாஸ்தமனகாலத்தில் சூரியன் காணப்படுவானோ அந்தந்த இடங்களை க்ராந்திபாதம் அல்லது க்ராந்திபாதபிந்துவெனச் சொல்லுவார்கள். இவைகளுக்குச் சரியாக 90 அம்சங்களுக்குப் பின்னால் அயனபரிவர்த்தனம் காணப்படுகிறது. இந்த 90 அம் சத்திலிருந்துதான் சூரியன் தக்ஷிணாயனத்திலிருந்து உத்தராயணத் திற்கும் உத்தராயணத்திலிருந்து தக்ஷிணாயனத்திற்கும் செல்வான்.

பீஷ்மருக்குத் தான் கருதியபோது மரணமென்று மஹாபார தத்திற் சொல்லியிருக்கிறது. அவர் 'சரசயன'த்திலிருந்தபடியே தனக்குத் தக்ஷிணாயனத்தில் மரணங்கிட்டாதென்றுசொல்லி உத்தராயணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். மாகமாதத் தில் உத்தராயணம் ஆரம்பமானபிறகு அவர் உயிர்துறந்தார்.

பீஷ்மர் பிராணனை விடுவதற்குமுன்பு 'யுதிஷ்டிர! இந்த அழகான மாகமாசமானது இப்பொழுது வந்திருக்கிறது' என்று சொல்லி யிருக்கிறார்.-

ஆகையால் அக்காலத்தில் உத்தராயணம் மாகமாதத்தில் ஆரம்பமாயிற்றென்று தெரிகிறது. பீஷ்மரின் மரணகாலத்தில் மாகமாதத்தில் உத்தராயணம் வந்தது. ஆனால் ஸௌரமான மாக மாதத்தில் எவ்வளவுநாள்களிருந்தனவென்று சொல்லப்படவில்லை. ஒவ்வொரு *'பௌஷ மாக' மாசத்திலும் 28 அல்லது 29 நாட்கள் காணப்படுகின்றன. இவ்விருமாசங்களையும் சேர்த்துநோக்கின் 57 நாட்களே பெரும்பாலும் காணப்படுகின்றன. இவ்வாறு (வான சாஸ்த்ரக்கணக்குப்படி) பார்த்தால் கி. மு. 1430 வருடங்களுக்கு முன்பு மகாபாரதயுத்தம் நடந்ததென்பது தெளிவாம். இவ்வித மான பிரமாணங்களைப் பார்த்தபிறகு மகாபாரதயுத்தம் த்வாபர யுகத்தினிறுதியில் (இற்றைக்கு ஐயாயிரவருஷங்களுக்குமுன்பு) நிகழ்ந்ததென்று எவர் நம்புவார்?

---

## ஐந்தாவது அதிகாரம்.

### பாண்டவர்கள் இருந்தனரா?

பாணினிசூத்திரத்தில் (6. 2. 38.) பாரதமென்ற சப்தம் காணப்படுகிறது. ஆகையால் பாணினிகாலத்துக்குமுன்பே மகா பாரதமென்னும் க்ரந்தம் பிரசாரத்திலிருந்ததென்று தெரிகிறது. மேலும், "ഗവിയുധിഭ്യാം സ്ഥിരഃ" ("கவியுதிப்யாம் ஸ்திர:") என்று ஒரு பாணினிசூத்திரம் உளது. இதன்பொருள்:--கவி யுதி சப்தங்களுக்குப்பின்வரும் ஸ்திரசப்தத்தில் ஸகாரத்துக்குப் பிரதியாக ஷகாரம் வரும்; [உதாரணம்:—'ഗവിഷ്ഠിരഃ, യുധിഷ്ഠിരഃ' ('கவிஷ்டிர:, யுதிஷ்டிர:')] என்பதாம். இதனுள் யுதிஷ்டிரன் என்ற பெயர் காணப்படுகிறது.

இன்னும் பாணினிஸூத்ரவுரையில் (2. 4. 66-ல்) பாதகோத் திரத்தின் உதாரணம் யுதிஷ்டிரா: என்று காட்டப்பட்டுள்ளது.

---

* பௌஷம் - தைமாதம். மாகம் - மாசிமாதம்.

பின்னும், பாணிநிஸூத்திரத்தில் "ஸ்த்ரியாமவந்தி குந்தி குருப்யச்ச", "வாஸுதேவார்ஜுநாப்யாம் வுந்", 4. 1. 174., 4. 3. 98. (ஸ்திரியா மவந்தி குந்தி குருப்யச்ச", "வாசுதேவார்ஜுநாப்யாம் வுந்".) என்பவற்றுள், குந்தி, குரு, வாசுதேவ, அர்ஜுந சப்தங்களும், "நப்ராண்ணபாந்நவேதாநாஸத்யாநமுசி 'நகுல' நக நபும்ஸக நக்ஷத்ர நக்ர நாகேஷு ப்ரக்ருத்யா" 6. 3. 75. ("நப்ராண்ணபாந்நவேதாநாஸத்யாநமுசி'நகுல' நகநபும்ஸகநக்ஷத்ரநக்ரநாகேஷுப்ரகிருத்யா") என்பதனுள், நகுலசப்தமும் காணப்படுகின்றன. அன்றியும், '"த்ரோண" பர்வத ஜீவந்தாதந்யதரஸ்யாம்' 4. 1. 103. ('"துரோண" பர்வத ஜீவந்தாதந்யதரஸ்யாம்') என்பதனுள், துரோணசப்தம் காணப்படுகிறது. இதனால் அசுவத்தாமனும் குறிக்கப்படுகிறான்.

இவ்வாறு பாண்டவர்களுள், யுதிஷ்டிரன், அர்ஜுனன், நகுலன் பெயர்களும் குந்தி, துரோணர், அசுவத்தாமன், வாசுதேவன் முதலிய பெயர்களும் காணப்படுதலால் கி. மு. ஆயிரத்துக்கு அதிகமான வருஷங்கட்குமுன் யுதிஷ்டிரர் முதலானவர்களுடைய விருத்தாந்தமடங்கிய மஹாபாரதம் ப்ரசாரமாயிருந்ததென்று தெரிகிறது.

மேலும், "வாஸுதேவார்ஜுநாப்யாம்வுந்" ("வாஸுதேவார்ஜுநாப்யாம்வுந்") என்னும் பாணினிஸூத்ரத்திற்கண்ட வாசுதேவ அர்ஜுநசப்தங்கட்கு வாசுதேவனை உபாஸிப்பவன் அர்ஜுநனை உபாஸிப்பவன் என்ற பொருளில் விகுதி விதிக்கப்படுகிறது. ஆகையால் பாணினிஸூத்ரங்களியற்றியகாலத்திற்குமுன்பே கிருஷ்ணார்ஜுநர்கள் தேவதைகளாகக்கொள்ளப்பட்டார்கள் என்பதும் விளங்கும்.

இன்னும், ஆசுவாலயன ஸாங்க்யாயந க்ருஹ்யஸூத்ரங்களில் மஹாபாரதத்தைப்பற்றிச் சொல்லியிருப்பதும் இங்கு நோக்கத்தகும். ஆகையால் மஹாபாரதம் மிகவும் பழமையானதென்னும் விஷயத்தில் எவரும் எவ்வித ஆக்ஷேபணையும் செய்யமுடியாது.

## ஆருவது அதிகாரம்.

*ஸ்ரீகிருஷ்ணனென்று ஒருவர் இருந்தாரா?*

பாணினீயத்தில் ஸ்ரீகிருஷ்ணன்பெயர் இருக்கிறதா? இல்லையா? என்று விசாரிக்கவேண்டியதில்லை. ஏனென்றால் ருக்வேத ஸம்ஹிதையில் முதல்மண்டலம் 115-ஆம் சூக்தம் 23-வது ருக்கிலும் 119-ஆம் ஸூக்தம் 9-வது ருக்கிலும் கிருஷ்ணன் என்ற பெயர் காணப்படுகிறது. அதில் குறிப்பிட்டிருக்கும் கிருஷ்ணன் யார்? என்று நிச்சயஞ்செய்யமுடியவில்லை. இவர் வசுதேவர்புதல்வரென்று நிச்சயித்தல் பொருந்தாது. ருக்வேதத்தில் அநேக ஸூக்தங்களில் இருடிகள்பெயர் கிருஷ்ணனென்று குறிக்கப்பட்டுளது. அதர்வஸம்ஹிதையில் க்ருஷ்ணகேசியென்கிற அசுரனைவதைத்த க்ருஷ்ணன்கதை உள்ளது. இவர் வசுதேவர்புதல்வரான கிருஷ்ணனேயென்பதில் ஐயமில்லை.

பாணிநிசூத்திரத்தில் வாசுதேவனென்கிற பெயர் காணப்படுகிறது. ஸ்ரீகிருஷ்ணன் மஹாபாரதத்தில் அநேக இடங்களில் வாசுதேவனென்று குறிக்கப்பட்டிருக்கிறார். தருமபிடகம் என்பது பௌத்தசாஸ்திரங்களுக்குள் மிகவும் பழமையானது. அதிலும் ஸ்ரீகிருஷ்ணனுடையபெயர் காணப்படுகிறது.

சாந்தோக்யோபநிஷத்தில் 'ஆங்கீரசவம்சத்தில் கோரனென்ற பெயருள்ள ஒரு ருஷி தேவகீபுத்திரனான ஸ்ரீகிருஷ்ணனுக்கு ஒரு கதை சொன்னார்' என்று காணப்படுகிறது. இக் கோரருஷியின் புதல்வராகிய கண்வருஷியானவர் ருக்வேதத்தில் அநேக சூக்தங்களில் ருஷியாகக்காணப்படுகிறார். கோரரின் சிஷ்யராகிய கிருஷ்ணன் அவர்காலத்தவரென்பதில் சந்தேகமில்லை. ருக்வேத ஸம்ஹிதை 8-வது மண்டலத்திலும், 10-வது மண்டலம் 42, 44-வது சூக்தங்களிலும் கிருஷ்ணன் என்று ஒரு ருஷியின்பெயர் காணப்படுகிறது. இந்தக்கிருஷ்ணன் தேவகீநந்தனனாகிய கிருஷ்ணனோ? அன்றோ? என்று நிச்சயிக்கமுடியவில்லை. ஆனால், கிருஷ்ணன் க்ஷத்திரியனாதலால் சூக்தங்களுக்கு ருஷியாக இருந்திருக்க முடியாதென்பது பொருந்தாது. ஏனெனில், "த்ரஸதஸ்யு த்ரைவ்ருஷ்ண ராஜாமீட ப்ரஜாமீட ஸிந்துத்வீப ஸாக்ஷாவ மாந்தாதா ஶிபி ப்ரதர்த்தந கக்ஷீவாந்" முதலியவர்கள் க்ஷத்திரியர்களாயிருந்தும் சூக்தத்தின் ருஷிகளாகக் காணப்படுகிறார்கள், மேலும்

சூத்திருங்கூட ருஷியாகக்காணப்படுகின்றனர். 10-வது மண்டலத்தில் கவஷன் என்று ஒரு சூத்திருருஷி காணப்படுகிருர். ஆகையால் ருஷி என்பதால் க்ஷத்ரியனுன கிருஷ்ணன் ருஷியாயிருக்க முடியாதென்பது நியாயமில்லை. ருக்வேதஸம்ஹிதையின் அநுக்ரமணிகையிலிருந்து சௌநககிருஷ்ணன் ஆங்கீரசருஷியென்று தெரியவருகிறது.

உபநிஷத்துக்களெல்லாம் வேதங்களின் இறுதிப்பாகங்கள். ஆதலால் அவைகளுக்கு வேதாந்தம் (வேதமுடிவு) என்று பெயர் உண்டாகியது. வேதங்களின் அம்சங்களான ப்ராம்மணங்கள் இவ்வுபநிஷத்துக்களுக்கு முந்தியவைகள். ஆகையால் சாந்தோக்யோபநிஷத்தைக்காட்டிலும் கௌஷீதகிப்பிராம்மணம் முந்தியது. அதிலும் ஆங்கீரசகோரருடைய பெயர் காணப்படுகிறது. கிருஷ்ணனுடையபெயரும் காணப்படுகிறது. அவ்விடத்தில் கிருஷ்ணனைத் தேவகிநந்தனனென்று குறிக்கவில்லை. ஆங்கீரஸனென்று குறித்திருக்கிறது. க்ஷத்திரியர்களில் அநேகர் ஆங்கீரசர் என்று பிரஸித்திபெற்றிருந்தமை,

ஏதே க்ஷத்ர ப்ரஸூதா வை புநச்சாங்கிரஸ: ஸ்ம்ருதா: ।
ரதீதராணாம் ப்ரவரா: க்ஷத்ரோபேதா த்விஜாதய: ॥

என்பதனுல் விளங்கும். இதனுள் கூறப்பட்ட ரதீதராராஜா சூரியவமிசத்தோன். கிருஷ்ணனுடைய பூர்வபுருஷன் யது; அவன் யயாதியின்புதல்வன்; சந்திரவமிசத்தோன்; அக்கதைகளெல்லாம் ஹரிவமிசம் விஷ்ணுபர்வத்திற் காணப்படுகின்றன. மதுரையிலிருந்த யாதவர்கள் இக்ஷ்வாகுவமிசத்தோர் என்று ஹரிவமிசத்திலேயே காணப்படுகிறது. இது பொருந்தக்கூடியதாயிருக்கிறது. ஏனெனில் இக்ஷ்வாகுவமிசத்தவரான ஸ்ரீராமனுடைய இளையசகோதரனுன சத்துருக்கனன் மதுரையைஜயித்தானென்று ஸ்ரீராமாயணத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அது, எவ்விதமிருந்தாலும் இருக்கட்டும். "வாஸுதேவார்ஜுநாப்யாம் வுந்" என்கிற சூத்திரத்தை நாம் பாணினீயத்திலிருந்து காட்டினேம். பாணிநிகாலத்தில் உபாஸ்யதேவதையாக ஸ்ரீகிருஷ்ணன் கருதப்பட்டாரென்பதனுலேயே அவர் வெகுகாலத்திற்குமுன்பே இருந்திருக்கவேண்டுமென்பது நிச்சயமாகிறது.

---

## ஏழாவது அதிகாரம்.

### மஹாபாரதத்தில் ப்ரக்ஷிப்தங்கள்.

நாம் இதுவரை சொல்லிவந்ததிலிருந்து மஹாபாரதத்தில் ப்ரக்ஷிப்தங்களும் இருக்கின்றன; கிருஷ்ண பாண்டவ ஸம்பந்தமான உண்மையான கதைகளும் இருக்கின்றனவென்று வெளியாகும். ஐரோப்பியர்கள், 'மஹாபாரதமென்று ஒரு க்ரந்தம் ஆதியிலிருந்தது; ஆனால் இப்பொழுது காணப்படும் மஹாபாரதம் அதுவன்று; தற்காலத்திற் காணப்படும் மஹாபாரதத்தில் ப்ராசீன பாரதத்திற்கண்டவிஷயங்கள் ஒன்றுமில்லை;' என்று நினைக்கிறார்கள். ஆதியில் மஹாபாரதம் சிறிதாயிருந்தது, பிறகு அநேக ப்ரக்ஷிப்தங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறதென்று அவர்கள் அபிப்பிராயப்பட்டால் நமக்கு யாதொரு விவாதமுமில்லை. மஹாபாரதத்திற் காணப்படும் உண்மையான சரித்திரம் ஆதி மஹாபாரதத்தைச் சேர்ந்தது. ஆகையால் தற்காலங் காணப்படும் மஹாபாரதத்தில் ஆதி மஹாபாரதத்திற் சேர்ந்த விஷயங்கள் எவையென்று விசாரிக்கப்புகுவோம். அதில் 'ஸ்ரீகிருஷ்ணனுடைய கதையாகக் காணப்படுவனவெல்லாம் மஹாபாரதத்தைச் சேர்ந்தன; மஹாபாரதமே ஸ்ரீகிருஷ்ணனைப்பற்றிக் கூறுகிற க்ரந்தங்கள் யாவற்றிலும் ப்ராசீனமானது; மஹாபாரதத்திற் சில அம்சங்கள் ப்ரக்ஷிப்தங்கள்' எனச் சொல்வதற்கு யாது ப்ரமாணம்? எனச் சிலர் வினவக்கூடும். இவ்வதிகாரத்திற் சில ப்ரமாணங்களைக் காட்டுவோம். ஆதி பர்வத்தின் 2-வது அத்தியாயத்தின்பெயர் பர்வஸங்க்ரஹாத்யாயம் என்பது. மஹாபாரதத்திற் கண்ட விஷயங்களெல்லாம் இவ்வத்யாயத்திற் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆகையால் இந்த அத்யாயத்தை மஹாபாரதத்தின் அட்டவணையென்று சொல்லலாம். இவ்வத்தியாயத்திற் காணப்படாத வேறு விஷயங்கள் ப்ரக்ஷிப்தங்களெனத் துணிவாய்ச் சொல்லலாம். ஓர் உதாரணம் காண்பிப்போம். ஆச்வமேதிகபர்வத்தில் அநுகீதை யென்றும் ப்ராமண கீதை யென்றும் இரண்டு பெரியவிஷயங்கள் இருக்கின்றன. இவைகள் பர்வசங்க்ரகாத்யாயத்திற் காணப்படவில்லை. ஆகையால் இவைகளை ப்ரக்ஷிப்தங்கள் என்று சொல்லத் தடையென்ன?

அநுக்ரமணிகாத்யாயத்தில் மஹாபாரதத்தில் லக்ஷம் சுலோகங்கள் உள்ளனவென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பர்வ ஸங்க்ரஹாத்யாயத்தில் இன்னின்னபர்வங்களில் இவ்வளவு இவ்வளவு சுலோகங்கள் உளவென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஆதிபர்வத்தில் 8880 சுலோகம் என்றும், ஸபாபர்வத்தில் 2511 சுலோகம் என்றும், இவ்வாறே மற்றப்பர்வங்களிலும் இவ்வளவிவ்வளவென்றும் கணக்கிடப்பட்டிருக்கின்றது. இவைகளைச் சேர்த்தால் லக்ஷம் சுலோகம் ஆகவில்லை; 84836 சுலோகங்களே ஆகின்றன.

இவ்வாறு பதினெண்பர்வங்களும் விஸ்தாரமாய்ச் சொல்லப்பட்டன. இவைகளின்பிறகு ஹரிவமிசமும் பவிஷ்யபர்வமும் சொல்லப்பட்டுள்ளன. மஹருஷியானவர் ஹரிவமிசத்தில் பன்னீராயிரம் சுலோகம் கணக்கிட்டிருக்கிறார்.

தற்காலத்திலிருக்கிற மஹாபாரதத்தில் ஒவ்வொரு பர்வங்களிலும் முன் சொன்ன தொகையைக்காட்டிலும் அதிகமாக சுலோகங்கள் காணப்படுகின்றன. இவ்வாறு சுலோகங்கள் பெருக்கப்பட்டனவென்று ஒரு உதாரணத்தால் விளக்குவோம். அநுக்ரமணிகாத்யாயத்தில் 102-ஆம் சுலோகத்தில் 'வியாசர் 150 சுலோகங்களுள்ள அநுக்ரமணிகையெழுதினார்' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தற்காலத்திலிருக்கிற மஹாபாரதத்தின் அநுக்ரமணிகாத்யாயத்தில் 272 சுலோகங்கள் காணப்படுகின்றன. ஆகையால் பர்வ ஸங்க்ரஹாத்யாயம் எழுதப்பட்டபின் இந்த அநுக்ரமணிகாத்யாயத்தில் 122 சுலோகங்கள் அதிகமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பது வெளியாகும். 'மஹாபாரதம் ஆதியில் உபாக்யானங்களைத் தவிர 24000 சுலோகங்கொண்டதாயிருந்தது. அதை வேத வியாஸர் தம் புதல்வரான சுகருக்கு அத்யயனம்செய்துவைத்தார்' என்று அநுக்ரமணிகாத்யாயத்திற் கூறப்பட்டிருக்கிறது.

ஆரம்பத்தில் 24000 சுலோகங்கொண்ட கிரந்தமாயிருந்த பாரதம் பின்னால் ப்ரக்ஷிப்தங்களைச் சேர்த்து அதற்கு நான்குமடங்கதிகமாகப் பெருக்கப்பட்டது,

அன்றியும், 'வேதவியாசர் அறுபதுலக்ஷம் சுலோகங்கொண்ட மகாபாரதத்தை இயற்றினர். அதிற் சிலபாகம் தேவலோகத்திலும், மற்றுஞ் சிலபாகம் பிதிருலோகத்திலும், வேறுசிலபாகம் கந்தருவலோகத்திலும், ஒரு லக்ஷங் கிரந்தங்கொண்டபாகம் மாத்திரம் மனிதவுலகத்திலும் படிக்கப்பட்டுவருகிறது' என்றுங் கூறப்பட்டிருக்கிறது. இது, அநுக்ரமணிகாத்யாயத்தினிடையே ப்ரக்ஷிப்தமாகப் புகுந்திருக்கிறது. இதர லோகங்களிற் காணப்படுவனவாகச் சொல்லப்படும் சுலோகங்களால் நமக்குப் பயனென்ன?

இவ்விதமான (பிரக்ஷிப்தங்களெனப் பலவகை ஆதாரங்களாற் கண்டுபிடிக்கப்பட்ட) பாகங்களைத் தவிர்த்து மற்றப்பாகங்களில் ஸ்ரீ கிருஷ்ணபகவானைக் குறித்த விஷயங்களைப்பற்றி ஆராய்வோம்.

---

## எட்டாவது அதிகாரம்.

*ஈசுவரன் பூமியில் அவதரித்தானென்பது பொருந்துமா?*

இக் கேள்விக்கு விடையளித்தல் மிகவும் அவசியம். நம் தேயத்தினர்க்கு ஸ்ரீகிருஷ்ணன் ஈசுவரனுடைய பூர்ணவதாரமானவரென்று திடமான நம்பிக்கையுண்டு. ஆனல் மேற்றிசையோருக்கும் மேற்றிசைக்கல்வியுடையவருக்கும் அவ்விதமான நம்பிக்கையில்லை.

இவ்விடத்தில் இரண்டுகேள்விகள் உதிக்கின்றன. அவை:— 1. ஈசுவரன் பூமியில் அவதரித்தல் அவசியமா? 2. கிருஷ்ணன் ஈசுவராமிசமாய் அவதரித்தவரா? என்பனவாம்.

முதற்கேள்விக்கு இப்பொழுது விடையளிப்போம். சிலர் ஈசுவரனே இல்லை என்று சாதிக்கிருர்கள். அந்த நாஸ்திகர்களைப் பற்றி நாம் ஒன்றும் சொல்லப்புகவில்லை. அவர்களை நாம் கவனிக்க வேண்டா. ஆஸ்திகர்களிற் சிலர் ஈசுவரன் நிர்க்குணன்; அவனுக்கு அவதாரம் எப்படி சம்பவிக்கும்? என வினவுகிருர்கள். நிர்க்குணனை ஈசுவரன் எவன்? அவனை நாம் எப்படிக் கருதமுடியும்? என்று அவர்களைக் கேட்கிறேம். நிர்க்குணனை ஈசுவரனை மனத்தாற் சிந்திக்கவொண்ணுது. ஈசுவரன் நிர்க்குணகை இருக்கட்டும். அவனைச் சிந்திக்க நம் மனத்துக்கு ஆற்றல் இல்லை. நான்கு கோண

முள்ளது உருண்டையென்று சொல்லும் அசம்பவத்தினை மனத்தாற் சிந்திக்கமுடியாதவாறுபோல நிர்க்குணனான ஈசுவரனை நாம் மனத்தாற் சிந்திக்கமுடியாது. ஈசுவரன் நிர்க்குணனென்றால் சிருஷ்டித்தல் ரக்ஷித்தல் முதலிய காரியங்கள் அவனுக்குஎவ்விதம் ஒவ்வும். ஆகையால் நாம் ஈசுவரனை ஸகுணனென்றே கொள்வோம்.

சகுணனான ஈசுவரனுங்கூடப் பூமியில் அவதரிப்பதற்கு அவசியமென்ன? அவன் இச்சாமயன்; ஸர்வசக்திமான்; அவன் இச்சையால் எவ்விதமான வடிவத்தையும் எடுத்துக்கொள்வான்; அவனுடைய சக்திக்கு யாதொரு அளவுமில்லை. எவன் இந்தப் பிரபஞ்சத்துக்கு ஓர் உருவத்தையளித்தானோ அவன் தானாகவே இச்சையால் எவ்வித உருவத்தையும் எடுக்கக்கூடுமன்றோ? ஆனால் ஸர்வசக்தியும்வாய்ந்த அவன், ஜகத்தின்நன்மைக்காக இக் கேவலமான மனிதவுருக்கொண்டதன் காரணமென்ன? எவன் இச்சாமாத்திரத்தால் கோடிக்கணக்கான பிரும்மாண்டங்களைச் சிருஷ்டித்து அழிக்கவல்லவனோ அவன், இராவணன் கும்பகர்ணன் கம்ஸன் சிசுபாலன் முதலியவர்களைக் கொல்வதற்காக ஜன்மம் எடுக்கவேண்டுமா? குழந்தைப்பருவம் அடைந்து தாய்ப்பாலருந்தவேண்டுமா? அரிவரி எழுதிச் சாஸ்திராப்பியாஸம் செய்யவேண்டுமா? அதன்பிறகு மனித ஜீவனத்தின்கஷ்டங்களை அநுபவிக்கவேண்டுமா? பிறகு தானே கையில் அஸ்திரமேந்தி யுத்தத்தில் தானும் அடிபட்டு எதிரியைத் தோற்கச்செய்யவேண்டுமா? கிரமப்பட்டுத் துராத்மாக்களான எதிரிகளை வதைத்தல் வேண்டுமா? இக் கதைகளையெல்லாம் நம்புவதெங்ஙனம்?

இவ்வாறு சிலர் வாதிக்கிறார்கள். நம்மைப்போல் ஈசுவரனும் மனிதவுருக்கொண்டு நாம் அடையும் கஷ்டங்களை அநுபவித்தான் என்பது அவர்கள் எண்ணம்போலும். ஈசுவரன் சுகதுக்கங்களைக் கடந்தவன். அவனுக்கு ஒன்றினாலும் கஷ்டமில்லை. ஜகத்தின் சிருஷ்டியும் பாலனமும் லயமும் ஈசுவரனுக்கு எவ்விதம் லீலை என்கிறோமோ அவ்விதமே அவதாரம் செய்தலும் ஈசுவரனுடைய லீலையாக ஏன் ஆகக்கூடாது? நினைத்தமாத்திரத்தில் துஷ்டர்களை ஸம்ஹரிக்க எவனால் முடியுமோ அவன் அக்காரியத்திற்காக மனிதவுருவெடுத்துக் கஷ்டங்களை ஏன் அநுபவிக்கவேண்டும் என்று நினைப்பது பொருந்தாததாகும்.

எந்த மனிதனுக்கு இந்துதர்மத்தின்மர்மம் புலப்படவில்லையோ—அந்த மனிதன், அநந்தசக்திமானுன ஈசுவரன் துஷ்டர்களைச் சிக்ஷிப்பதற்காகமாத்திரம் அவதாரஞ்செய்தானென்று நினைப்பான். அவதாரத்தின் உண்மை,

𑌪𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌯 𑌸𑌾𑌧𑍂𑌨𑌾𑌂 𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌚 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌾𑌮𑍍 ।
𑌧𑌰𑍍𑌮𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑌿 𑌯𑍁𑌗𑍇 𑌯𑍁𑌗𑍇 ॥

என்று பகவத்கீதையிற் சுருக்கிச்சொல்லப்பட்டிருக்கிறது. தர்மஸம்ரக்ஷணமென்முல் துஷ்டர்களைவதைத்தல்மாத்திரமா? தர்மம் எது? தர்மஸம்ரக்ஷணம் என்பது எது? நம்முடைய சரீரஸம்பந்தமானதும் மனதின் சம்பந்தமானதுமான எவ்வித விருத்திக்கும் ஸ்பூர்த்தியும் சாரிதார்த்தியமுமே தர்மம். இந்த தர்மம் அநுசீலனத்தையே அபேக்ஷித்திருக்கிறது. அநுசீலனம் கர்மாவை அபேக்ஷிக்கிறது. ஆகையால் கர்மமே தர்மத்திற்குப் ப்ரதான உபாயம். இக்கர்மத்தையே ஸ்வதர்மபாலனம் என்று சொல்லுதல் பொருந்தும். மனிதன் தன்னைக் காப்பாற்றுதல் முதலிய விருத்திகளின்வசப்பட்டவனுய்த் தானே கர்மஞ்செய்யமுயலுகிருன். இதனுல் தனக்கு மேன்மைசம்பாதித்தல் மிகவும் அரிது. உபதேசத்தினுல்மாத்திரம் சரியான கர்மங்கள் செய்யவொண்ணுது. மனிதருக்கு ஆதர்சம் அவசியம் வேண்டும். ஸம்பூர்ணதர்மங்கள் நிறைந்த ஸம்பூர்ண ஆதர்சம் ஈசுவரனைக்காட்டிலும் வேறெது உளது? ஆனுல் நிராகாரனுகிய ஈசுவரன் நமக்கு ஆதர்சமாக எப்படியிருக்கமுடியும்? அவன் அசரீரி; சாரீரிகவிருத்தியற்றவன். நாம் சரீரிகள்; நமது சரீரவிருத்திகளே நமது தர்மங்களுக்கு முதன்மையான இடையூறுகள். அவன் அநந்தன். நாம் அந்தமுள்ளவர்கள்.

நாம் அற்பர்கள். ஆகையால் ஈசுவரன் சரீரமெடுத்து நமக்குத் தரிசனமளிப்பதனுலேயே (அந்த ஆதர்சத்தைப்பார்த்து) நாம் உண்மையான தர்மங்களைக் கைக்கொள்ளக்கூடும். மேன்மையை அடையக்கூடும். இதுவே ஈசுவராவதாரத்தின் பயன். மனிதனுக்குக் கர்மத்தின் ரஹஸ்யம் தெரியாது. எந்தக்கர்மம் செய்தால் தர்மம் மேன்மைபெறுமோ—அந்தக்கர்மம் இன்னதென்று மனிதன்

அறியான். ஈசுவரன் தானே அவதாரஞ்செய்தால் மனிதர்களுக்குப் புத்திபுகட்டல்கூடும். இதை உத்தேசித்து ஈசுவரன் கருணைகூர்ந்து அவதாரஞ்செய்தானென்பது ஏன்பொருந்தாது?

"புருஷன் ஆஸக்தியைவிட்டுக் கர்மாநுஷ்டானஞ்செய்தால் மோக்ஷலாபத்தை அடைவான். ஆகையால் நீயும் ஆஸக்தியை விட்டுக் கர்மாநுஷ்டானஞ்செய். ஜநகர்முதலிய மகாத்மாக்கள் கர்மாநுஷ்டானத்தினுலேயே ஸித்திபெற்றார்கள். சிரேஷ்டன் எதை ஆசரிக்கிறானோ அதையே மற்றவர்களும் ஆசரிக்கிறார்கள்; எதை ஆதாரமாகக்கொள்ளுகிறானோ அதையே மற்றவரும் ஆதாரமாகக் கொள்ளுகிறார்கள். ஆதலால் நீயும் உலகத்தின் தர்மரக்ஷார்த்தமாகக் கர்மாநுஷ்டானஞ்செய். கவனித்துக்கொள். மூவுலகத்திலும் எனக்கு ஒரு அபேக்ஷையுமில்லை. எனக்கு ஒரு கடமையும் இல்லை. ஆனாலும் நான் கர்மாநுஷ்டானஞ்செய்துகொண்டிருக்கிறேன். நான் உதாசீனமாகக் கர்மாநுஷ்டானஞ்செய்யாதிருந்தால் சகலஜனங்களும் என்னையே அநுசரித்துக் கர்மாநுஷ்டானஞ் செய்யாதிருப்பார்கள். நான் கர்மஞ்செய்யாவிட்டால் இவ்வெல்லாவுலகமும் உத்ஸந்நமாகிவிடும். நானே வர்ணஸங்கரத்திற்குக் காரணமாய்ப் பிரஜைகளின் அழிவுக்கும் காரணமாவேன்." என்று பகவானே பகவத்கீதையில் திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்.

"பகவான், ஜகத்பதியாயிருந்தும் சத்ருக்களைக் குறித்து அஸ்திரவிக்ஷேபணஞ்செய்தான்; அவன் மனுஷ்யாவதாரமெடுத்ததால் மனுஷ்யதர்மத்தையநுசரித்து அவ்வாறுசெய்தான். எவன் சங்கல்பமாத்திரத்தினால் ஜகத்தைச் சிருஷ்டிக்கவும் அழிக்கவும் வல்லனோ— அவனுக்கு சத்ருவை ஜயிப்பதற்காக இவ்வித முயற்சி ஏன்? மனுஷ்யதர்மத்தை யநுவர்த்தித்ததால் பலவான்களுடன் சந்தியையும், பலவீனர்களுடன் போர்புரிதலையும், சாம தான பேத —உபாயங்களை முன்னிட்டுத் தண்டம்விதித்தலையும், சில இடங்களிற் புறங்காட்டுதலையும் அநுசரித்துக்காட்டினான். மக்கள்செயல்களின் அநுசாரமாக ஜகத்பதியும் இச்சாமாத்திரத்தில் இவ்விதம் லீலைபுரிந்தான்" என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலும் கூறப்பட்டுள்ளது.

மேற் கூறியவைகளால், ஸ்ரீ கிருஷ்ணபகவான் மனிதவுருவெடுத்து அதிமாநுஷசக்தியால் யாதொருகாரியமும் செய்யவில்லையென்று யாவருக்கும் புலப்படும். ஆதலால், கீழ்ச்சொல்லப்படுகிற முறைப்படி விசாரஞ்செய்யப்புகுவோம்.

1. எவைகளைப் பிரக்ஷிப்தங்களென்று நிரூபிப்போமோ அவைகளை விலக்கிவிடுவோம்.

2. எவைகள் அதிப்பிரகிருதமாகவும் நம்பவொண்ணாததாகவு மிருக்கின்றனவோ அவைகளையும் தள்ளிவிடுவோம்.

3. எவைகள் வேறுவித ப்ரமாணங்களால் உண்மையற்றனவென்று காணப்படுகின்றனவோ அவைகளையும் புறக்கணிப்போம்.

இவ்வித நியமங்கள் முன்பே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவைகளை மறுபடியும் நினைப்பூட்டினோம்.

---

## ஒன்பதாவது அதிகாரம்.

இனி, புராணங்களைப்பற்றி விசாரிக்கப்புகுவோம். புராணங்கள் விஷயமாக இரண்டுவித அபிப்பிராயங்கள் ஏற்படுகின்றன. அவை:–1. நம்நாட்டார்கருதுவதும், 2. அயல்நாட்டார்கருதுவதுமாம்.

நம்மவர் எல்லாப்புராணங்களும் ஒருவராலேயே இயற்றப்பட்டனவென்று கருதுகிறார்கள். அயல்நாட்டார் ஒவ்வொரு புராணமும் ஒவ்வொருவராலேயே செய்யப்பட்டனவென்று நினைக்கிறார்கள்.

பதினெண்புராணங்களும் ஒருவராலேயே இயற்றப்பட்டிருக்க முடியாதென்று சில பிரமாணங்கள் காட்டுவோம். ஒரே மனிதன் எவ்விதம் கையெழுத்து ஐந்துவிதமா யெழுதமுடியாதோ—அதுபோல் ஒரே மனிதனுடைய ரசனையும் வெவ்வேறுவிதமாயிருக்க முடியாது. பதினெண்புராணங்களின் ரசனையும் வெவ்வேறுவிதமாயிருக்கிறது. விஷ்ணுபுராணத்திற்கூறிய விஷயங்கள் பாகவத புராணத்தில் வேறுவிதமாய்க் காணப்படுகின்றன. ஒரு மனிதன் ஒரு விஷயத்தைப்பற்றி வெவ்வேறுகிரந்தங்களில் வெவ்வேறுவித

மாக எழுதியிருக்கமுடியாது. ஆனால் ஒரு புராணத்திற் சொல்லப்பட்ட விஷயமே வெவ்வேறு புராணங்களிலும் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய சரித்திரமானது ப்ரும்மபுராணம் பூர்வபாகத்திலும், விஷ்ணுபுராணம் 5-ஆவது அம்சத்திலும், வாயுபுராணத்திலும், ஸ்ரீமத்பாகவதம் 10, 11-ஆவது ஸ்கந்தங்களிலும், பிரம்மவைவர்த்தபுராணம் 3-ஆவது கண்டத்திலும் காணப்படுகிறது. இவ்விதமே பத்மபுராணத்திலும் வாமனபுராணத்திலும் சுருக்கமாக ஸ்ரீகிருஷ்ணன்கதை சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வொரோர்விஷயத்தின் வர்ணனையே மறுபடியும் ஒவ்வொரு புராணங்களிலும் வெவ்வேறுவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது. ஒருவரே பதினெண்புராணங்களையும் செய்திருந்தால் ஓரேவிஷயத்தைக்குறித்துப் பல புராணங்களில் பரஸ்பர விரோதம் ஏற்படுவதெங்ஙனம்? விஷ்ணுபுராணத்தில், "புராணார்த்தங்களறிந்த வேதவியாசரானவர் ஆக்யாநம் உபாக்யானம் காதாகல்பசுத்தி மூலமாக புராணஸம்ஹிதையைச் செய்தார். லோமஹர்ஷன் புதல்வன் வியாசருடைய சிறந்த சீடனாக இருந்தான். வியாசமஹாமுனிவர் அவனுக்குப் புராணஸம்ஹிதையை யளித்தார். சுமதி, அக்நிவர்ச்சஸ், மித்ராயு, ஸாம்சபாயநர், அகிருதவிருணர், ஸாவர்ணி: இவ் வறுவர்களும் அவருடைய சிஷ்யர்களாயிருந்தார்கள். இவர்களுள், காசியபர் ஸாவர்ணி ஸாம்சபாயநர் இவர்கள் ரோமஹர்ஷணிகா என்கிற மூலசம்ஹிதையிலிருந்து மூன்று சம்ஹிதைகளை வெளியிட்டார்கள்" என்று கூறப்பட்டுளது.

'க்ரையாருணி காசிபர் ஸாவர்ணி அகிருதவிரணர் ஸிம்ஸபாயநர் ஹாரீதர் என்னும் அறுவரும் பௌராணிகர்கள். வியாஸருடைய சிஷ்யரான என் தந்தையாரிடம் நானும் காசிபரும் ஸாவர்ணிமுனிவரும் அகிருதவிருணரும் ஆகிய நால்வரும் நாள்தோறும் வாய்மொழியாக சம்ஹிதையைக் கற்றுக்கொண்டோம்.' (ஸ்கந்தம். 12. அத். 3. சுலோ. 4–6.) என்று பாகவதத்திற் காணப்படுகிறது.

வாயுபுராணத்திலும் அக்கினிபுராணத்திலும் இப்பெயர்கள் இல்லை. வேறுபெயர்கள் காணப்படுகின்றன.

மேற்கூறியவற்ருல் பதினெண்புராணங்களையும் வியாச ரொருவரே யியற்றினரென்று கொள்ளமுடியவில்லை. வேதவியாச ருடைய சிஷ்யர்களும் பிரசிஷ்யர்களும் புராணசம்ஹிதையை இயற்றினர்கள். அது இப்பொழுது பிரசாரத்திலில்லை. தற்காலத்தில் எவை பிரசாரத்திலிருக்கின்றனவோ, அவை எக்காலத்தில் யாரால் இயற்றப்பட்டனவென்று சொல்லமுடியாது.

இனி, ஐரோப்பியர்களின் அபிப்பிராயத்தையும் சற்றுக் கவனிப்போம். 'ஒவ்வொரு புராணமும் தனித்தனி ஒவ்வொருவராலேயே இயற்றப்பட்டது. தற்காலத்திற் காணப்படும் புராணங்களெல்லாம் ஸம்க்ஷேபங்கள். அவைகள் வெவ்வேறு காலத்திற் செய்யப்பட்டன' என்பது ஐரோப்பியர்கொள்கை.

உண்மையில் ஒரு புராணத்திற்கண்ட எல்லாவிருத்தாந்தங்களும் ஒருவராலேயே செய்யப்படவில்லை. தற்காலத்தில் பிரசாரத்திலிருக்கும் புராணங்கள்யாவும் சங்கிரகங்களே. அவைகள் வெவ்வேறுகாலங்களில் இயற்றப்பட்டன. புராணமென்ற பதத்திற்குப் பழமையானதென்பது பொருள். இச்சொல் முன்பு நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லும் கிரந்தமெனப் பின்பு பொருள்பெற்றது. வேதத்திலும் புராணமிருக்கிறது. சதபதப்பிராமணத்திலும் கோபதப்பிராமணத்திலும், ஆசுவலாயநசூத்திரத்திலும், அதர்வணஸம்ஹிதையிலும், பிரகதாரண்யகத்திலும், சாந்தோக்யோபநிஷத்திலும், மகாபாரதத்திலும், இராமாயணத்திலும், மானவ தர்மசாஸ்திரத்திலும் புராணமெனப் பெயர்வாய்ந்த சரித்திரக்கதைகள் காணப்படுகின்றன. அதிப்பிராசீனகாலத்தில் பாரதவர்ஷத்தில் எழுத்து ஏற்பட்டிருந்தபோதிலும் எல்லாக்கிரந்தங்களும் எழுதப்படவில்லை. கேள்விமூலமாகவே கற்பிக்கப்பட்டும் கற்கப்பட்டும் வந்தன. பிறகு இந்தப் பிராசீனகதைகள் ஒருங்கு சேர்க்கப்பட்டு ஒவ்வொருபுராணமாகத் தொகுக்கப்பட்டன. ஆதியில் ஒன்ருயிருந்த வேதராசியானது பிறகு வேதவியாசரால் ருக்,யஜுஸ், ஸாமம், அதர்வம் என்று வெவ்வேருக வகுக்கப்பட்டதுபோல ஒன்ருயிருந்த புராணமும் வெவ்வேருய்ப் பிரிக்கப்பட்டது. வியாச

4

ரென்பது காரணப்பெயர். வேதவியாசரின் உண்மைப்பெயர் கிருஷ்ணத்வைபாயனர் என்பது.

சகலபுராணங்களும் ஒரேசமயத்தில் ஒருவராலேயே தொகுக்கப்பெறவில்லையென்பதற்குப் பிரமாணங்கள் புராணங்களினிடையிலேயே காணப்படுகின்றன. பிராசீன பௌராணிக விருத்தாந்தங்களைத் தெரிந்துகொண்டு எவர் அவற்றை ஒருங்குசேர்த்துக் கிரந்தரூபமாக இயற்றினாரோ, அவரே வியாசரெனப் பெயர்பெற்றார். இதனாலேயே வியாசரெனும் பெயர்பெற்று அநேகம்பேரிருந்தார்களென்று சொல்லப்படுகிறது. வேதவிபாகஞ்செய்தவர் வியாசர். மஹாபாரதம் இயற்றியவர் வியாசர். பதினெண்புராணங்களையும் இயற்றியவர் வியாசர். வேதாந்த சூத்திரத்தைத் தொகுத்தவர் வியாசர். பாதஞ்சலதர்சனத்துக்குப் பாஷ்யம் எழுதியவர் வியாசர். இவர்களை வியாசரெனப் பெயர்பூண்ட ஒருவரேயெனச் சொல்ல இடமில்லை. இக்காலத்திலும் அநேகர் வியாசரெனப் பெயர்பெற்றிருக்கிறார்கள். உதாரணம்: ஹரேகிருஷ்ணவியாசர், அம்பிகாதத்தவியாசர் முதலியனவாம்.

கிருஷ்ணத்வைபாயனரே முதன்முதல் புராணஸங்கியானம் செய்தவர். வியாஸரெனப்பெயர்வாய்ந்த எவரெவர் எந்தஎந்தக் காலத்தில் எந்தெந்தப்புராணங்களைச் செய்தனர் எனக் கூறமுடியவில்லை. ஐரோப்பியர்கள், புராணங்களெல்லாம் பிற்காலத்தில் (இற்றைக்கு 1000 வருடங்களுக்குமுன் முதல்) இயற்றப்பட்டனவென்று கருதுகிறார்கள்.

இக்கொள்கை முழுதும் தவறென்று வேறு பிரமாணங்களால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. எந்தப் புராணங்களில் ஸ்ரீகிருஷ்ணன் கதை காணப்படவில்லையோ, அவைகளைப்பற்றி நாம் இப்பொழுது பரிசீலனைசெய்யவேண்டியதில்லை. பிரும்மபுராணம், விஷ்ணுபுராணம், பாகவதம், பிரும்மவைவர்த்தம் என்னும் நான்குபுராணங்களிலுமே கிருஷ்ணசரித்திரம் விரிவாய்க் காணப்படுகிறது. அவைகளில் பிரும்மபுராணத்திலும் விஷ்ணுபுராணத்திலும் கிருஷ்ண சரித்திரம் ஒரேபடியாய்க் காணப்படுகிறது.

இனி, ஹரிவம்சத்தைப்பற்றிச் சற்று விசாரிப்போம்.

## பத்தாவது அதிகாரம்.

### ஹரிவம்சம்.

மகாபாரதமியற்றப்பட்ட பிறகு உக்கிரசிரவஸ் ஸௌதி ஸௌநகர் முதலிய ருஷிகளின்வேண்டுகோளால் ஹரிவம்சம் உரைக்கப்பட்டது. ஆகையால் இக்கிரந்தம் மஹாபாரதத்திற்குப் பிற்பட்டது; ஆயினும் எவ்வளவுகாலத்திற்குப் பிற்பட்டதென்று நிச்சயித்தல் இன்றியமையாதது. மஹாபாரதத்தின் பதினெண் பர்வங்களிலும் எவ்விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவென்று அட்டவணையாக ஆதிபர்வம் பர்வசங்கிரகாத்யாயத்திற் சொல்லப்பட்டதுபோல, ஹரிவம்சத்திற் சொல்லப்பட்ட விஷயங்களுக்கு அட்டவணை அக்கிரந்தத்திற் காணப்படவில்லை. ஹரிவம்சத்தில் தற்காலத்தில் மூன்றுபர்வங்கள் காணப்படுகின்றன. அவை: ஹரிவம்சபர்வம், விஷ்ணுபர்வம், பவிஷ்யபர்வம் என்பனவாம். இந்த மூன்று பர்வங்களிலும் 16000 சுலோகங்களுக்குமேற் காணப்படுகின்றன. மஹாபாரதத்தில் ஹரிவம்சத்தின் ஹரிவம்சபர்வமும், பவிஷ்யபர்வமும் ஆகிய இரண்டுபர்வங்களின் பெயர்மாத்திரம் கூறப்பட்டுள்ளது. விஷ்ணுபர்வத்தின்பெயர் கூறப்படவில்லை. ஆதலால் விஷ்ணுபர்வம் பிரக்ஷிப்தமென்றுகொள்ளல் பொருந்தும். மஹாபாரதத்திற்கு எவ்வளவுகாலத்திற்குப்பிறகு ஹரிவம்சம் இயற்றப்பட்டதென்று உறுதியாய்ச்சொல்லமுடியவில்லை. ஆனால் மஹாபாரதம் விஷ்ணுபுராணம் இவைகளுக்குப் பின்பும், பாகவத புராணம் பிரும்மவைவர்த்தபுராணம் இவைகட்குமுன்பும் ஹரிவம்சம் இயற்றப்பட்டதென்று சில பிரமாணங்களினாற் சொல்லலாம். யஜுர்வேதஸம்ஹிதையின் ஐந்தாவதத்தியாயத்தில் ஸ்ரீகிருஷ்ணனைக்குறித்துச் சொல்லியிருக்கிற விருத்தாந்தம் அதிப்ராசீனமானது. அதற்குப்பிந்தியது ருக்வேதஸம்ஹிதையின் பத்தாவது மண்டலம் 95-வது சூக்தத்திற் காணப்படும் விருத்தாந்தம்; அதற்குப்பிந்தியது மஹாபாரதம். பாத்மம் முதலிய புராணங்களிற் காணப்படும் ஸ்ரீ கிருஷ்ணசரித்திரம் மஹாபாரதத்துக்கும் பிந்தியது. இவைகளிலிருந்து ஸ்ரீ கிருஷ்ணசரித்திரத்தின் உண்மையை ஆராய்வோம்:—

இச்சரித்திரநிகழ்ச்சிகள் ஆதியில் சுருக்கியும் பிறகு விரித்தும் கற்பிக்கப்பட்டிருக்கின்றன: மஹாபாரதமும், விஷ்ணுபுராணத்தின் 5 அம்சமும், ஹரிவம்சமும், பாகவதமும் ஆகிய இவற்றுள் முறையே ஸ்ரீ கிருஷ்ண சரித்திரப்பகுதிகள் விரிக்கப்பட்டுள்ளன. எந்தக் கிரந்தத்தில் அடியற்றனவும் இயற்கையின் மாறுபட்டனவுமான விஷயங்கள் அதிகமாகக் காணப்படுகின்றனவோ, அவைகள் பிராசீனமானவையல்ல. பிராசீனக் கிரந்தங்களில் ஸ்ரீ கிருஷ்ண சரித்திரத்தைப்பற்றி எவ்விஷயங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றனவோ, அவைகளைக்கொண்டே இந்தச்சரித்திரவிமர்சத்தைச் செய்வோம்.

---

# இரண்டாவது கண்டம்.

## பிருந்தாவனம்.

யோ மோஹயதி பூ⁴தாநி ஸ்நேஹபாஶாநுப³ந்த⁴நை꞉ ।
ஸர்க³ஸ்தி²த்யந்தரக்ஷணாய தஸ்மை மோஹாத்மநே நம꞉ ॥

## முதலதிகாரம்.

### யதுவம்சம்.

---

பூரூரவஸின்புதல்வன் ஆயுவின்கதையை நாம் முதலில் ஆராய்வோம். யஜுர்வேதத்தில் ஆயுஸ் என்று யாகத்தில் பயன்படுகிற நெய் வழங்கப்படுகிறது. ஆனால் ருக்வேதஸம்ஹிதை 10-ஆவது மண்டலத்தில் ஆயுஸ் என்ற பெயருடன் ஓரரசனிருந்தானென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆயுஸ் என்கிற அரசன்புதல்வன் நகுஷன்; நகுஷன்தனயன் யயாதி. நகுஷன் யயாதி என்னும் பெயர்கள் ருக்வேதஸம்ஹிதையிலும் காணப்படுகின்றன. யயாதிக்கு ஐந்து மைந்தர்கள் என்று இதிகாசபுராணங்களிற் கூறப்பட்டிருக்கிறது. அவருள் மூத்தவன் யது. இளையோன் பூரு. இவர்களுக்கிடையே பிறந்த மூவர்பெயரும் துர்வசு, துருஹ்யு, அணு என்பன. இப்பெயர்கள் ருக்வேதத்திற் காணப்படுகின்றன. இவர்கள் உடன்பிறந்தவர்களென்றேனும் வெவ்வேறானவர்களென்றேனும் ருக்வேதத்திற் சொல்லப்படவில்லை.

யயாதியின்மக்களில் மூத்தவர்நால்வரும் தங்கள் தந்தையின் சொற்படிநடவாததால், அவன் அவர்களைச் சபித்துக் கடையோனை பூருவிற்கே ராஜ்யமளித்தானென்று சொல்லப்பட்டிருக்கிறது. பூருவின்வம்சத்தில் துஷ்யந்தன், பரதன், அஜமீடன் முதலிய அரசர்கள் பிறந்தார்கள். துரியோதனன் யுதிஷ்டிரன் முதலிய கௌரவரும் இப்பூருவின்வழியினரே.

இவ்வாறே கிருஷ்ணன் முதலிய யாதவர்கள் யதுவின் வம்சத்தினராவர். யயாதியின்புத்திரனை யதுவினிடமிருந்தே மதுராவாசிகளான யாதவர்கள் உண்டானார்களென்று புராணங்களும் இதிகாசங்களும் சொல்லிவருகின்றன. ஆனால் ஹரிவம்சபர்வத்தில் யதுவம்சத்தைப்பற்றிச் சொல்லுங்கால், யயாதியின்புத்திரனை யதுவையே குறித்து விஸ்தரித்திருக்கிறது. ஆனால் விஷ்ணுபர்வத்தில் 'இக்ஷ்வாகுவம்சத்தவனை ஹர்யச்சுவன் என்போன் அயோத்தியில் அரசாண்டுவந்தான். அவன் மதுவநாதிபதியான மதுவின்மகள் மதுமதியை மணம்புரிந்துகொண்டான். அம்மதுவனமே மதுரையென்பது. எக்காரணத்தினாலோ ஹர்யச்சுவன் அயோத்தியைவிட்டுத் துரத்தப்பட்டுத் தன் மாமனாகிய மதுவின் நகரமான மதுரையிற் சிலகாலம் வசித்தான். இவன் புதல்வனே யதுவென்பவன். ஹர்யச்சுவன் லோகாந்தரம் அடைந்தபின் யதுவானவன் மதுரைக்கு அரசனானான். யதுவின்மைந்தன் மாதவன். மாதவன்புதல்வன் ஸத்வதன். ஸத்வதன்புத்திரன் பீமன். மதுவின்மகனை லவணனை ஸ்ரீராமனுக்கு இளையவனை சத்ருக்கன் போரில்வென்று ராஜ்யத்தைக் கைப்பற்றி மதுராநகரத்தை நிர்மாணஞ்செய்தான். ராகவர்கள் மதுரையைவிட்டு வெளியேறிய பின் பீமன் அந்நகரில் மறுபடியும் அரசுசெய்துவந்தான். மதுராவாசிகளான யாதவர் இந்த யதுவின்வழிவந்தவர்களே' என்று முன்னதனோடு மாறுபட்டுக் காணப்படுகிறது.

ருக்வேதஸம்ஹிதை பத்தாவதுமண்டலம் 62-வது சூக்தத்தில் யது, துர்வா (துர்வசு) என்னும் இருவர்பெயரும் காணப்படுகின்றன. ஆனால் இவர்கள் தாஸஜாதிகளின் அரசர்களென்று கூறப்படுகிறார்கள்.

மேலும் இம்மண்டலம் 49-வது சூக்தத்தில் 'இவ்விருவரும் பலவான்களென்று பெருமைப்படுத்தினோம்' என்றும் சொல்லப் பட்டுளது. மேற்கூறியவற்றால் இந்த யது ஆர்யனா? அல்லது அநார்யனாவென்று துணிந்துசொல்ல இயலவில்லை. மேலும், முதல் மண்டலம் 37-வது சூக்தத்தில், 'துர்வசு யது என்ற இரண்டு உக்ரதேவதைகளையும் தூரத்திலிருந்தே நாம் அக்னிமூலமாய் ஆஹ்வாநம் செய்வோம்' என்று கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் அநார்ய ராஜர்களாயிருந்தார்களானால் அவர்களைக்குறித்து ஆரியருஷிகள் இவ்வாறு கூறியிருப்பார்களா?

அது எவ்விதமிருப்பினும் இருக்கட்டும். 1. யயாதியின்புத்திரன். 2. இக்ஷ்வாகுவம்சத்தோன். 3. அநார்யராஜா: என்னும் மூன்று யதுக்களைக் குறித்த பிரஸ்தாவங்களை நாம் காண்கின்றோம்.

ஸ்ரீ கிருஷ்ணன் இவர்களுள் எந்த யதுவமிசத்தில் பிறந்தாரென்பது நிச்சயிக்கமுடியாதகாரியம். ஸ்ரீ கிருஷ்ணன் எந்த யதுவின்வமிசத்தில் அவதரித்தாரோ அவ்வமிசத்திலேயே மது, போஜன் முதலான அரசர்களும் உதித்தார்கள். இவர்களே மதுரையிலிருந்தனர். ஸ்ரீகிருஷ்ணன் விருஷ்ணிவம்சத்தோன். கம்சனும் தேவகியும் போஜவம்சத்தவர். கம்சனுக்கும் தேவகிக்கும் பிதாமஹன் ஒருவனே.

---

## இரண்டாவது அதிகாரம்.

### ஸ்ரீ கிருஷ்ணனின் அவதாரம்.

கம்சனுடைய தந்தையான உக்கிரசேனனென்கிற அரசன் யாதவர்தலைவனென வருணிக்கப்படுகிறான். வசுதேவர் தேவகியின்கணவனும் ஸ்ரீகிருஷ்ணனுடைய தந்தையும் ஆவர்.

'வசுதேவன் தேவகியை மணம்புரிந்து அவளுடன் தன்கிருகத்திற்குப் புறப்படுங்கால் கம்சன் அன்புபாராட்டித் தானே தேர்ப்பாகனாயிருந்து அவர்களுடையதேரை நடாத்திவந்தான். அச்சமயத்தில் தேவகியின் 8-வது கர்ப்பத்திலுதிக்கும் புதல்வன் கம்சனை வதைப்பானென்று ஆகாயவாணி உண்டாகியது. உடனே

அவ்வாபத்தினின்றும் தப்பும்பொருட்டுக் கம்சன் தேவகியைக் கொல்ல எத்தனித்தான். அப்பொழுது வசுதேவர் கம்சனைச் சாந்தப்படுத்தும்பொருட்டுத் தன் மனைவி பெறுகிற பிள்ளைகளையெல்லாம் தானே அவனிடம் ஒப்புவிப்பதாக வாக்களித்தார். இதனால் தேவகியின் உயிர் தப்பியது. ஆனால், தேவகியையும், வசுதேவரையும் கம்சன் சிறையிலடைத்துவிட்டான். அவர்களுடைய முதலாறு குழந்தைகளையும் அவை பிறந்தவுடனேயே வதைத்துவிட்டான்; ஏழாவதுகர்ப்பம் சிதைந்துவிட்டது; மகாவிஷ்ணுவின் ஆணைப்படி யோகநித்திரை அவ் வேழாவதுகர்ப்பத்தை ஆகர்ஷணம்செய்து வசுதேவரின் மற்றொருமனைவியான ரோகிணியின் கர்ப்பத்தில் ஸ்தாபித்ததென்று புராணங்கள் கூறுகின்றன.

மதுரையின்சமீபத்தில் இடைச்சேரியில் நந்தகோபன் வசித்துவந்தான். அவன் வசுதேவரின் நண்பன். ரோகிணியை நந்தன்கிருஹத்தில் வசிக்கும்படி வசுதேவர் திட்டஞ்செய்திருந்தார். அவ்விடத்தில் ரோகிணி ஒரு புதல்வனைப் பெற்றாள். அப்புதல்வனே பலராமன். தேவகியின் 8-வதுகர்ப்பத்திலிருந்து ஸ்ரீகிருஷ்ணன் உதித்தார். அவர் பூமியிலவதரித்த அன்றை யிரவிலேயே அவரை வசுதேவர் எடுத்துக்கொண்டுபோய் நந்தன்வீட்டில் விட்டுவிட்டார். அப்பொழுது ஒரு பெண்மகவை ஈன்றிருந்த நந்தன்மனைவியாகிய அசோதையானவள் யோகநித்ரையால் மயங்கிக்கிடந்தகாலத்தில் வசுதேவர் அம்மகவை எடுத்துக்கொண்டு, தன் குழந்தையான கிருஷ்ணனைச் சூதிகாக்ருகத்தில் விட்டுவிட்டுத் தன்வீடுதிரும்பி, எடுத்துவந்த பெண்குழந்தையைத் தன்குழந்தையெனக் கம்சனிடம் ஒப்புவித்தார். ஆனால் அக்குழந்தையைக் கம்சனால் வதைக்கமுடியவில்லை. யோகநித்திரையாகிய அக்குழந்தை ஆகாயவழியாகச் செல்லுங்கால் 'உன்னைக் கொல்லுகிறவன் வேறிடத்திருக்கிறான்' என்றுசொல்லி மறைந்தது. அதன்பிறகு தனது தங்கையைக் கம்சன் சிறையிலிருந்து விடுவித்தான். ஸ்ரீ கிருஷ்ணன் நந்தன்வீட்டில் வளர்ந்துவந்தான்' என்று புராணங்கள் கூறுகின்றன.

இக்கதைகள் எளிதில் நம்பவொண்ணாதவைகள். நாம் முன்பு எடுத்துக்கொண்ட நியமப்பிரகாரம் இவைகளைத் தள்ளிவிடுவோம்.

இவற்றிலிருந்து, '(1) ஸ்ரீகிருஷ்ணன் மதுரையில் வந்த யதுவமிசத்தோன்; (2) தேவகியின்கர்ப்பத்தில் வசுதேவருக்குப் பிறந்தவன்; (3) இளமைப்பருவத்திலேயே வசுதேவர் குழந்தையை நந்தன் வீட்டில் விட்டுவிட்டார்;' என்று இம்மாத்திரம் கிரகித்துக்கொள்வோம்.

அக்காலத்திற் கம்சன் மிகக் கொடியனும் தீய ஒழுக்கமுடையவனும் இருந்தானென்றும், தன் தந்தையாகிய உக்கிரசேனனைச் சிங்காதனத்திலிருந்து கீழேதள்ளித் தானே அரசுரிமை பெற்றானென்றும் பாகவதத்திலும் பாரதத்திலும் சொல்லப்பட்டுள்ளன. இங்கு, 'அவன் யாதவன். அவன் ஜனங்களிடத்தில் அதிகக் கொடுமைபாராட்டினனாகையால், அவர்கள் அவ்வூரைவிட்டகன்று அன்னியநாட்டிற்குடியேறினர். வசுதேவர்தன் மனைவியான ரோகிணியையும்அவள் புதல்வனையும் நந்தன்வீட்டில் வைத்திருந்தார்; இவ்வாறே க்ருஷ்ணனையும் நந்தன்வீட்டில் ஒளித்துவைத்திருந்தார்' என்று இம்மட்டும் நாம் சரித்திரத்தை ஒப்புக்கொள்வோம்.

---

## மூன்றுவது அதிகாரம்.

### இளமைப்பருவம்.

ஸ்ரீகிருஷ்ணனைக்குறித்து நம்பமுடியாத அநேக கதைகள் புராணங்களிற் கூறப்பட்டுள்ளன.

**பூதனைவதம்.** பூதனை கம்சனால் அனுப்பப்பட்ட அரக்கி. அவள் மிகவும் அழகிய உருக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணனைக் கொல்வதற்காக நந்தன்வீட்டிற்குச் சென்றாள். தன் தனங்களில் விஷத்தைத் தடவிக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணனை வாரியெடுத்துப் பாலூட்டினாள். ஸ்தன்யபானஞ்செய்யுங்கால் ஸ்ரீகிருஷ்ணன் அவளுடைய உயிரையுஞ்சேர்த்து உறிஞ்சினான். அவள் தனது உண்மையுருவுடன் பூமியில்வீழ்ந்தாள். அவ்வுருவம் 6 குரோசம் நீளமுடையதாயிருந்தது.

மகாபாரதத்துச் சிசுபாலவதபர்வாத்யாயத்தில் பூதனாவதத்தைப்பற்றிக் குறித்திருக்கிறது. சிசுபாலன் பூதனையைச் சகுனி

யென்று கூறியுள்ளான். சகுனி யென்றால் கழுகு, பருந்து, அல்லது ஒரு கருத்த பறவையைக் குறிக்கும். ஒரு பலமுள்ள குழந்தை சகுனியைக்கொல்வது பொருந்துவதன்று.

புராணகதைக்கு வேறொருபொருள் கூறலாம். அரைக் குழந்தைக்கு ஒருவிதநோய் வருவதுண்டு; அந்த நோயின் பெயர் பூதனை. குழந்தை பலமாக ஸ்தன்யபானஞ்செய்தால் அந்நோய் நீங்குமென்பது யாவரும் அறிந்தவிஷயம். இதே பூதனாவதமென்று கொள்ளக்கூடும்.

**சகடவிபர்யயம்:**—'அசோதை ஒருநாள் ஸ்ரீகிருஷ்ணனை ஒரு வண்டியின் அடியில் விட்டுவைத்திருந்தாள். ஸ்ரீகிருஷ்ணனுடைய காலுதையால் வண்டி புரண்டு அப்பால் விழுந்தது' என்பது. ருக்வேதஸம்ஹிதையில் இந்திரனால் சொல்லப்பட்ட ஒரு கதை உளது. அது, இந்திரன் உஷையின் சகடத்தை முறித்தான் என்பதாம். இக்கிருஷ்ணன் செய்த சகடபஞ்சனம் ப்ராசீனசகடபஞ்சனக் கதையின் புதிய மாறுதலேயாம். வைதிக உபாக்யானங்களிற் பல ஸ்ரீகிருஷ்ணலீலைகளினிடையே காணப்படுகின்றன. அவைகளைப் பரிசீலனஞ்செய்வதால் மிக்க பயனுண்டு.

**தாயின்மடியில் ஸ்ரீகிருஷ்ணன் விசுவரூபமெடுத்தலும் குழந்தையின் வாயில் அசோதை பிரபஞ்சமுழுமையும் காணுதலும்:**—இக் கதையை முதலிற் பாகவதத்திலேயே காண்கிறோம். இது பாகவதம் செய்தவரால் கூறப்பட்ட உபந்யாஸமெனத் தோன்றுகிறது.

**த்ருணாவர்த்தவதம்:**—'த்ருணாவர்த்தனென்று பெயர்படைத்த ஒரு அசுரன், குழந்தை ஸ்ரீகிருஷ்ணனை ஆகாயவழியில் எடுத்துக் கொண்டுபோனான். அவனைக் கண்ணன் கொன்றான்.' இதனால் த்ருணாவர்த்தமென்பது சுழற்காற்றெனப் புலப்படுகிறது. இப் புராணக்கதைக்கு ஆதாரமொன்றும் காணப்படவில்லை. பலமுள்ளதான இக்குழந்தை சுழற்காற்றிலகப்பட்டுத் தப்பியிருக்கக்கூடும்.

ஸ்ரீகிருஷ்ணன் குழந்தைப்பருவத்தில் வெளியில் திரியும் போது கோபிகைகளின் வீடுகளிற் புகுந்து பல குறும்புகள் புரிந்து வெண்ணெயும் பாலும் திருடினானென்று பாகவதத்திற்

சொல்லப்பட்டிருக்கிறது. இக்கதை விஷ்ணுபுராணத்திலும் பாரதத்திலும் காணப்படவில்லை. ஹரிவம்சத்தில் வெண்ணெயும் தயிரும் களவுகண்ட கதை பிரசங்கக்கிரமத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. பாகவதத்தில் இக்கதை விரிவாய்க் காணப்படுகிறது. குழந்தைப்பருவத்தில் தருமம் அறியாக்குழந்தை வெண்ணெயும் தயிரும் எடுத்துண்டதில் தவறென்ன? ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கு எவ்வயதிலும் பகுத்தறிவு உண்டென்றுசொல்லும்பக்ஷத்தில், 'ஈசுவரன் செய்த செயல் களவாமா? இதைக் களவென்று சொல்லலாமா? எல்லா உலகமும் எவருடையவை? பால், தயிர், வெண்ணெய், நெய், யாவும் எவரால் சிருஷ்டிக்கப்பட்டன? அவர் யார் பொருளைத்திருடினார்? அவருக்குப் பாபம் ஏது?' என்று கண்ணனை வழிபடுவோர் வினவுகிறார்கள்.

அவர் மனிததருமத்தைக் கைக்கொண்டதால், மனுஷ்ய தருமத்தில் திருடுதல் பாபமன்றோ என்று வினவினால், 'ஒன்றுமறியாக் குழந்தை எக்காரியமும் செய்யுமல்லவா? குழந்தைக்குத் தருமம் அதருமம் எனப் பகுத்தறியும் அறிவு இல்லையே' என்று யாம் விடையளிப்போம். இக்கதையைப்பற்றி அதிகமாக விசாரிக்க அவசியமில்லை. இக்கதை நிராதாரமானது. இது ஆதாரமுள்ளதாயினும், பாகவதம் இயற்றினவர் எந்த அபிப்பிராயத்தில் இந்தக் கதையைச் சொன்னாரோ, அந்த அபிப்பிராயம் மிகவும் மனோகரமானது.

மேலும், பகவானனவர் தனக்குப்பயன்வேண்டித் திருடவில்லை. உணவின்றி வருந்திக்கொண்டிருந்த குரங்குகளுக்காக அவர் திருடிவந்து உணவளித்தார். கோபியரிடம் வேண்டுமளவு பாலும் வெண்ணெயும் இருந்தன. குரங்குகளைப் பசிதணிக்கும்பொருட்டுச் சிறிது திருடினார் என்பதில் தோஷமென்ன? ஸ்ரீ கிருஷ்ணன் எல்லாப்பிராணிகளிடமும் பொதுநோக்குடையவர். ஈசுவரன். இக்கதைக்குப் பாகவதத்தையன்றி வேறு பிரமாணம் இல்லை. ஆனால் இதிலிருந்து பிறருக்கு இதஞ்செய்வதே கிருஷ்ணனுடைய நோக்கமென்றும் ஜன்மவிரதமென்றும் நாம் தெளிவாய் அறியலாம்.

யமலார்ஜுனபங்கம். 'ஒரு சமயத்தில் கிருஷ்ணன் மிகவும் குறும்புசெய்தானென்று அசோதை அவனிடுப்பிற் கயிற்றைக் கட்டி ஒரு உரலில் பிணைத்திருந்தாள். கிருஷ்ணன் உரலையும் இழுத்துக்கொண்டுபோய் 'யமலார்ஜுனம்' என்று பெயர்வாய்ந்த இரண்டுமரங்களின் நடுவில் நுழைந்துசென்றான். அம்மரங்களின் அடிப்பாகத்தில் உரல் சிக்கிக்கொண்டது. கிருஷ்ணன் பலமாயிழுத்ததால் மரங்கள் முறிந்துவிழுந்தன.' இக்கதை, விஷ்ணுபுராணத்திலும் மஹாபாரதத்தில் சிசுபாலனுடைய வசைப்பேச்சிலும் காணப்படுகிறது. பலமுள்ள குழந்தை இம்மரங்களை முறியச்செய்தது என்பது பொருந்தும்.

ஆனால் பாகவதகாரர் மேற்கூறிய உண்மையின்பேரில் மிகவும் இனிதான ஒரு கதையைச் சேர்த்திருக்கிறார். அது, 'இம்மரங்கள் முதலிற் குபேரனுடைய பிள்ளைகள்; அவர்களுடைய பாபத்தால் மரமானார்கள்; ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஸ்பர்சத்தால் முக்தியடைந்து தம்மிருப்பிடம் சென்றார்கள்;' என்பதாம்.

விஷ்ணுவுக்குத் தாமோதரனென்று ஒருபெயர் உண்டு. பஹிரிந்திரியநிக்கிரகத்தைத் தமமென்று சொல்லுவர். 'உதா- உத்க்ருஷ்டகதி; த³மமூலமாக எவன் உயர்ந்தபதவியையடையச் செய்கிறானோ அவனே தாமோதரன்; விஷ்ணுவானவர் தவஞ் செய்து விஷ்ணுபதவியைப்பெற்றார்' என்று வேதத்திற் கூறப் பட்டுளது. ஸ்ரீசங்கராசாரியர் தாமோதர சப்தத்திற்கு இவ்விதமே வியாக்யானஞ்செய்திருக்கிறார். த³மாத்³தா³மோத³ரம்விது³: என்று மகாபாரதமும் கூறுகிறது.

ஆனால், 'தா³மமென்கிறசப்தத்தால் மாடுகட்டுகிறகயிறு குறிப் பிடப்படுகிறது; அக்கயிற்றை இடுப்பிற் கட்டியதனால் பகவானாகிய கிருஷ்ணனுக்கு இப்பெயர் வந்தது' என்று பாகவதகாரர் கூறுகிறார். ஸ்ரீகிருஷ்ணன் கயிற்றாற் கட்டுண்டான் என்று கதையேற்படு வதற்குமுன்பே தாமோதரனென்கிற சப்தம் காணப்படுகிறது.

'இச்சமயத்தில் நந்தன்முதலான ஆயர்கள் பூர்வ வாஸஸ்தானத் தைவிட்டுப் பிருந்தாவனஞ்சென்றார்கள். கோகுலத்திலிருத்தலால்

ஸ்ரீ கிருஷ்ணனுக்கு எவ்வளவோ இடையூறுகள் நேர்ந்தமையால் அவற்றிலிருந்து தப்புவதற்காகப் பிருந்தாவனஞ்சென்றூர்கள்' என்று புராணங்களிற் கூறப்பட்டிருக்கிறது. பிருந்தாவனம் மிக்க சுகத்தைத் தரக்கூடிய வாசஸ்தலம். ஆகையால் அங்கேயிருத்தல் பொருத்தமானது. 'இச்சமயத்தில் இடைச்சேரியில் மிருகங்களுள் ஓநாயால் பயம் அதிகமாயிருந்தது. ஆகையால் கோபர்கள் அவ்விடத்தைவிட்டு வேறிடஞ்சென்றூர்கள்' என்று ஹரிவம்சங் கூறுகிறது.

---

## நான்காவது அதிகாரம்.

பால்ய லீலைகள்:—இந்தப் பிருந்தாவனம், ஜகத் சிருஷ்டியில் மிகவுஞ் சிறந்தஇடம். நறுமணம் வீசுகின்ற புஷ்பங்கள் நிறைந்த மரங்களால் அலங்கரிக்கப்பெற்றவையான இருகரைகளுடன் கூடியதும், குறுமணல் பரந்ததும், மதுரமான ஓசைகள் நிறைந்ததுமான யமுனைத்தலத்தில் குயிலும் மயிலும் ஆகிய இவற்றின் த்வனிகளால் நிறைந்த லதாகிருகங்கள் நிரம்பியதும், இடைச்சிறுவர்களின் வேணுகானத்தால் செவிகளுக்கு ஆனந்தமளிக்கக் கூடியதும், எண்ணற்கரிய மலர்களின் மணத்தால் எல்லாப்பக்கமும் கமழ்வதும், ஆடையாபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவர்களாயும் கறுத்து நீண்ட நயனங்களுடையவர்களாயுமுள்ள வ்ரஜஸுந்தரிகளால் அலங்கரிக்கப்பெற்றதுமான இப்பிருந்தாவனத்தை மனத்தில் நினைத்தமாத்திரத்தில் ஹ்ருதயம் மலர்கிறது. இவ்வாறு வர்ணனையில் காலங்கழிப்பது நமது உத்தேசமில்லை; நாம் பெரிதான தத்வத்தைப் பராமர்சிப்பதில் தற்காலம் பிரவர்த்தித்திருக்கிறோம்.

பாகவதங் கூறுவதாவது:—பிருந்தாவனத்தில் ஸ்ரீகிருஷ்ணன் மூன்று அசுரர்களை வதைத்தார். அவர், 1. வத்ஸாசுரன். 2. பகாசுரன். 3. அகாசுரன் என்போர். இவர்களில் முன்னேன் கன்றுவடிவு கொண்டவன். பகாசுரன் பறவையுருக்கொண்டவன். அகாசுரன் பாம்புருவமுடையவன். கோபர்களுக்குத் தீங்குவிளைத்துவந்த

இம்மூவரையும் பலவானான ஸ்ரீ கிருஷ்ணன் வதஞ்செய்தாரென்பது பொருந்தும். ஆனால் இம்மூன்றுவிஷயங்களுள் ஒருகதை யாவது விஷ்ணுபுராணத்திலும், மகாபாரதத்திலும், ஹரிவம்சத்திலும் காணப்படவில்லை. ஆதாரமற்றவைகளாதலால் இம்மூன்று அசுரவிருத்தாந்தங்களும் நம்மால் ஏற்றுக்கொள்ளத்தகாதனவாகும்.

இக்கதைகளில் வேறு தத்வங்கள் அடங்கியிருக்கின்றன. "வஹி" தாதுவிலிருந்து வத்ஸ, "வக்" தாதுவிலிருந்து வக, "அவ" தாதுவிலிருந்து அக: என்னும் பதங்கள் வந்தன. "வஹி" தாதுவிற்குப் பிரகாசித்தல் அர்த்தம். "வக்" தாதுவிற்கு கௌடில்யம் அர்த்தம்; கௌடில்யம்-கெடுதிசெய்தல். அகி தாதுவிற்குப் பாபம் அர்த்தம். எவன் வெளிப்படையாய்நிந்திக்கிறானோ அவன் வத்ஸன். கெட்டவழியில் நடப்பவன் பகன். பாபியானவன் அகன். ஸ்ரீகிருஷ்ணபகவான் இளமைப்பருவத்திலேயே இம்மூன்றுவித ஆத்மசத்துருக்களையும் திரஸ்கரித்து ஜயித்தார். யஜுர்வேதத்தில் அக்நிசயனம் 70-ஆம் கண்டிகையில் அடியிற்கண்ட மந்திரமானது, இவ்விதச் சத்ருக்களை விலக்கவேண்டுமென்று பிரார்த்தனாரூபமாய்க் காணப்படுகிறது. "ஓ அக்நியே! எவர்கள் எங்கட்குச் சத்ருக்களோ, எவர்கள் எங்களை நிந்திக்கிறார்களோ, எவர்கள் எங்களை த்வேஷிக்கிறார்களோ, எவர்கள் எங்களைக் கொல்லவிரும்புகிறார்களோ அப்படிப்பட்ட நான்குவித சத்ருக்களையும் எரித்துச் சாம்பலாக்குவீராக" என்னும் அம்மந்திரார்த்தத்தை மனத்திற் கருதியே பாகவத மியற்றியவர் இவ்வசுரரின்கதைகளைக் கற்பனை செய்தார்போலும்.

மேலும், 'கிருஷ்ணனைப் பரீக்ஷைசெய்வதற்காகப் பிரும்மாவானவர் மாயையினால் இடைச்சிறுவர்களையும் பசுக்கன்றுகளையும் கொண்டுசென்று ஒளித்துவிட்டார். ஸ்ரீகிருஷ்ணபகவான் தானே சிறுவர்களையும் கன்றுகளையும் சிருஷ்டித்து, முன்போல் அவர்களுடன் விளையாடிக்கொண்டிருந்தார்' என்று பாகவதத்திற் கூறப்பட்டிருக்கிறது. இக்கதையின் தாத்பரியமாவது: ஸ்ரீகிருஷ்ணன் மகிமை பிரும்மாவாலும் அறியமுடியாதது என்பதே.

ஸ்ரீகிருஷ்ணன் அதற்குப்பிறகு ஒருநாள் காட்டுத்தீயின் ஜ்வாலைகள் யாவற்றையும் உண்டார் என்று கூறப்படுகிறது. சைவர்கள் நீலகண்டர் காலகூடவிஷத்தைப் பானஞ்செய்தாரென்று சொல்லியிருப்பதால் வைஷ்ணவசூடாமணியான பாகவதகாரர், இங்கே அதற்குப் பதிலாக ஸ்ரீகிருஷ்ணபகவான் அக்நிஜ்வாலையையுட்கொண்டாரென்று சொன்னாரென்று தோன்றுகிறது.

இவ்விடத்தில் காலீயதமனகதை சொல்லவேண்டியதவசியம். மஹாபாரதத்தில் இக்கதை குறிக்கப்படவே இல்லை. ஹரிவம்சத்திலும் விஷ்ணுபுராணத்திலும் உள்ளது; பாகவதத்தில் மிகவும் விஸ்தரித்துச்சொல்லப்பட்டிருக்கிறது. இக்கதையில் நடக்கவியலாத சங்கதிகள் நிரம்பியிருக்கின்றன. இதில் ஒரு மனோகரமான உருவகம் இருக்கிறது.

கதை:—'யமுனையில் ஒரு மடுவில் காலியனென்ற கொடிய விஷமுள்ள சர்ப்பமானது தனது பரிவாரங்களுடன் வசித்து வந்தது. அதற்கு அநேகம் முடிகள் (படங்கள்) உண்டு. [விஷ்ணு புராணத்தில் மூன்று என்றும், ஹரிவம்சத்தில் ஐந்தென்றும், பாகவதத்தில் 1000 என்றும் அதன் முடிகள் கணக்கிடப்பட்டிருக்கின்றன.] அப்பாம்பின் விஷக்கொடுமையால் அவ்விடத்தில் புல் பூண்டு முதலியவைகளுண்டாவதில்லை. அதனருகில் எவராலும் செல்லமுடியாது. மேலே பறக்கும் பறவைகளின் சிறகுகள் விஷத்தீயால் கருகி, அப்பறவைகள் அந்த மடுவில் விழுந்து மூழ்கி மாண்டன. யமுனையின் நீர் விஷமயமானதால் அந்த நீரைப் பருகிக் கோபர்களும் சிறுவர்களும் பசுக்களும் கன்றுகளும் உயிர் விட்டனர்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் இக்கெடுதியை நீக்க ஒருநாள் திடீரென்று மடுவில் குதித்தார். குதித்து அவ்வரவின்படத்திலேறி நர்த்தனஞ்செய்தார். அதைச் சகிக்கமுடியாமல் அப்பாம்பு விழிகள் பிதுங்கியும் வாய்களிலிருந்து விஷத்தையும் ரத்தத்தையும் கக்கியும் சாகுந்தருவாயிலிருந்தது. அதைக்கண்டு சகிக்காமல் அப்பாம்பின் மனைவியர் மாணிடமாதருருக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ண பகவானைப் பலவாறுகத் தோத்தரித்தார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் அவர்கள்பால் கருணைகூர்ந்து அந் நாகத்தை அவ்வளவோடுவிட்டு அதைப் பரிவாரத்துடன் சமுத்திர மேகக் கட்டளையிட்டருளினார். அவ்வரவும் தன் மனைவிமக்க ளோடும் சுற்றத்தாரோடும் யமுனையைவிட்டகன்று கடலுக்குச் சென்றது. அதுமுதல் யமுனையும் சுத்தமாயும் மதுரமாயுமுள்ள ஜலம் நிரம்பியதாயிற்று.' உபந்யாஸம் இத்தன்மைத்தாயிருக்கிறது. இதன் மத்தியில் ஒரு உருவகம் காணப்படுகிறது. மதுரசப்தம் நிறைந்ததும் கருப்புநிறமுள்ள நீர்வாய்ந்ததுமான காளிந்திநதி, இருள் நிரம்பியதாயும் கோரசப்தமுள்ளதாயுமுள்ள காலப்பிர வாகமே. இதன் மத்தியில் பயங்கரமானதோர் சுழல் இருக்கிறது. நாம் எதைத் துக்கமயமென்றும், ஆபத்தென்றும் மனத்தில் கொள் கிறோமோ அதுதான் காலவெள்ளத்தின் சுழல். மிகவும் பயங்கர மானவையும் விஷமுடையவையுமான மனுஷ்யசத்ருக்களெல்லாம் இச்சுழலில் மறைந்துகொண்டுவசிக்கின்றன. அரவுபோல் அவை கட்கு மறைவானஇருப்பிடமும், குடிலநடையும், அதிக விஷமும் உண்டு. ஆதிபௌதிகம் ஆத்யாத்மிகம் ஆதிதைவிகம் என்னும் இம்மூன்று விசேஷங்களுமே இவ்வரவின் மூன்றுமுடிகள். நமது இந்திரியங்கள்மூலமாய் நமக்குச் சகல அநர்த்தங்களு மேற்படு கின்றனவென்று நாம் மனத்தில் கருதினால் இப்பஞ்சேந்திரியங் களுமே இவ்வரவின் ஐந்து தலைகளெனக் கொள்ளலாம்.

இவ்விதம் நம்முடைய அமங்களங்களுக்கு எண்ணிறந்த கார ணங்களிருக்கின்றனவென்று நினைத்தால் அவைகளே அவ்வரவின் ஆயிரந்தலைகளாம். நாம் கோரமான விபத்தாகிற சுழியில் இவ்வர வின்வசமாகுவோமானால் ஜகதீசுவரன் பாதபத்மத்தையன்றி நமக்கு உய்வதற்கு வேறுவழியு முண்டோ? கிருபாமூர்த்தியான ஈசுவரன் இப்பாம்பைக் காலால்மிதித்து மனோஹரமான அவரது மூர்த்தியை விகாசப்படுத்தி அபயமாகிற புல்லாங்குழலைவாசித்து நம்மைக் கடைத்தேற்றிவிடுகிறார். புல்லாங்குழலின் இசையைச் செவியுற்று ஜீவன் ஸம்ஸாரயாத்திரையைச் சிரமமின்றி நடத்து கிறான். கோரசப்தமுள்ள காலப்பிரவாகமானது அப்பொழுது தெளிந்த நீருள்ளதாகிறது. இக்காலவெள்ளத்தில் சுழலின் மத்தி யில் அமங்களரூபமான அரவின்முடியிலேறி நடித்த அபயவம்சீ

தாரனை மூர்த்தியின் தோற்றம், புராணகாரர்களின் சமத்கார மான கல்பனையே. இவ்விதமாக மனத்திற்கருதி ஈசுவரனைப் பூஜை செய்வோமானால் நம்மைப் பரிகசிக்க எவர் துணிவார்?

தேனுகாசுரன், ப்ரலம்பாசுரன் இவர்களையழித்த விருத்தாந் தங்களைக்குறித்து நாமொன்றும் விசேஷமாய்க் கூறவில்லை. ஏனெனில் இவை பலராமனால் செய்யப்பட்டன. வஸ்திரக்கிரகண சம் பந்தமாய்க் கூறவேண்டியதை மற்றோரதிகாரத்திற் கூறுவோம்.

இவ்விடத்தில் கிரியஜ்ஞ விருத்தாந்தத்தைப்பற்றிக் கொஞ்சஞ் சொல்லி இவ்வதிகாரத்தை முடிப்போம். பிருந்தாவனத்தில் கோ வர்த்தனமென்று ஒரு பருவதம் இருந்தது. தற்காலத்திலும் இருக்கிறது. இது பிருந்தாவனத்தின் எல்லையோரமுள்ளது. இப் பருவதத்தின் தற்கால ஸ்திதியை நோக்குங்கால் இது, ஏதோவொரு இயற்கைமாறுதலால் உயரக்கிளப்பப்பட்டு மறுபடியும் கீழே தள் ளப்பட்டதுபோற் காணப்படுகிறது. அநேக ஆயிரவருஷகாலங்க ளாக இந்தச் சிறிய மலையானது இந்நிலைமையிலேயே இருக்கிறது. இக்காரணத்தைக்கொண்டே ஸ்ரீ கிருஷ்ணபகவான் இக்கிரியை மேலேதூக்கி ஏழுநாட்கள்வரை கையால் தாங்கிக்கொண்டு மறு படியும் கீழே வைத்தாரென்கிற உபந்யாஸம் ஏற்பட்டதுபோலும்.

உபந்யாஸம் இவ்வாறுள்ளது. 'வருஷக்கடைசியில் நந்தன்முத லிய கோபர்கள் வருஷந்தோறும் ஓர் இந்திரவிழாச் செய்வதுண்டு. அந்த யாகத்தை நிறைவேற்றுவதற்காக அவர்கள் ஒருகால் யோசனைசெய்தார்கள். இதைப்பார்த்து ஸ்ரீகிருஷ்ணன் இஃதெதற் காக என்று வினவினான். 'இந்திரன் மழையைப்பொழியச்செய் வான். மழையால் பயிர்களுண்டாகும். அவற்றையுண்டு நாமும் நம்மைச்சார்ந்த கோபர்களும் ஜீவனம் செய்வோம். பசுக்கள் பால் நிரம்பக்கொடுக்குமாகையால் இந்திரபூஜைபுரிதல் மிகவும் அவசி யம்' என நந்தகோபர் விடையளித்தார். இதற்கு ஸ்ரீகிருஷ்ணன் 'நாம் கிருஷிகர்களில்லை; நாம் பசுக்களைமேய்த்து ஜீவனஞ்செய்பவர் கள்; ஆதலால் பசுக்களுக்குப் பூஜைசெய்வதும் அவைகளுக்கு உத்தமமான ஆகாரங் கொடுப்பதுமே நம்மால் செய்யத்தக்கது; நாம் இப்பருவதத்தை யாச்ரயித்து இதையே பூஜைசெய்வோம்;

பிராமணர்களுக்கும் பசியால் வருந்துவோருக்கும் உணவளிப்போம்; பசியால் வருந்துகிற அநேக தீனர்களுக்கும் தரித்திரர்களுக்கும் அவ்வேழைகளின் மத்தியில் பிராமணஜனங்களுக்கும் போஜனஞ் செய்விப்போம்; பசுக்களை நன்றாக மேய்ப்போம்; கோவர்த்தனம் உருக்கொண்டதுபோல் குவியல் குவியல்களாக அந்நங்களையும் வ்யஞ்ஜனங்களையும் எளியோருக்குக்கொடுப்போம்' என்று பதிலளித்தான்.

இதனால் இந்திரயக்ஞம் நடைபெறவில்லை. இந்திரனுக்குக் கோபம் மூண்டது. கல்மழையாய் வருஷித்துப் பிருந்தாவனத்தை மூழ்குவிக்கும்படி மேகங்களுக்குக் கட்டளையிட்டான். மேகங்களும் அக்கட்டளையை நிறைவேற்றின. பசுக்களுக்கும் கன்றுகளுக்கும் கோபர்களுக்கும் உண்டான துக்கத்துக்கு எல்லையில்லை. ஸ்ரீ கிருஷ்ணன் அப்பொழுது கோவர்த்தனத்தைத் தூக்கி மழை கீழே விழாதபடி தடுத்தான். பிருந்தாவனம் ரக்ஷிக்கப்பெற்றது.

இந்திரன் தான் தோல்வியடைந்ததாக உணர்ந்து ஸ்ரீகிருஷ்ணனுடன் ஸந்திசெய்துகொண்டான்.' மஹாபாரதத்தில் சிசுபால வாக்யத்தில் இந்தக் கிரியஜ்ஞத்தைப்பற்றிக் கொஞ்சம் சொல்லப்பட்டுளது. 'கிருஷ்ணன் வன்மீகத்தையொத்த கோவர்த்தனத்தைக் கையால் தூக்கினனென்பது ஓர் ஆச்சரியமான கதையா?' என்று சிசுபாலன் கூறினன். கிருஷ்ணனால் பிறருக்கு அளிக்கப்பட்ட அன்னம், காய்கறிகள் இவைகளைப்பற்றி ஓர் குறிப்புளது. ஸ்ரீகிருஷ்ணன் இப்பருவதத்தைக் கையால் தூக்கி ஏழுநாள் பரியந்தம் தாங்கியிருக்கமுடியுமா? ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஈசுவராவதாரமென்று எவர்கள் கொள்கிறார்களோ அவர்கள் ஈசுவரனுக்கு எக்காரியந்தான் செய்யவியலாதென்று வினவக்கூடும். அவர்களை நாம் கேட்போம். ஈசுவராவதாரமான ஸ்ரீ கிருஷ்ணன் பருவதத்தைத் தாங்கியதால் யாது பயன்? எவருடைய இச்சையின்றி முகில் ஓர் துளியும் வருஷிக்காதோ அப்பகவான் ஜனங்களை மழையினின்றும் காப்பதற்காக ஏழுநாள்வரை மலையைச்சுமப்பது எதற்காக? எவருடைய இச்சாமாத்திரத்தினல் கோரமேகங்களும் விலகிவிடுமோ மழை நின்றுவிடுமோ ஆகாயம் நிர்மலமாகிவிடுமோ அப்பகவான் பருவதத்தை ஏழுநாள் சுமக்கவும்வேண்டுமோ?

6

இது ஈசுவரனின் லீலையென வேறுசிலர் கூறக்கூடும். பகவா னுடைய லீலையை நாமறியமுடியுமா? இது சரியே. பிரயோஜன மின்றி ஈசுவரன் லீலைக்காக மலையைத் தாங்கினனென்று கொண் டால் ஈசுவரன் நிஷ்ப்ரயோஜனமாக யாதொரு காரியத்தையும் செய்வானுவென்று நாம் அவர்களைத் திருப்பிக் கேட்போம். ஆகையால் நாம் முன்பெடுத்துக்கொண்ட சித்தாந்தத்தை யனு சரித்தே இந்தக் கிரிதாரணகதையை ஒரு விசித்திர உபந்யாச மாகக் கொள்வோம். இதிலிருந்து நாம் ஒருண்மை தெரிந்துகொள் கிறோம். அது ஸ்ரீகிருஷ்ணபகவான் கோபர்களை இந்திரயஜ்ஞஞ்செய் வதிலிருந்து தடுத்துக் கிரியஜ்ஞத்தைநடத்தும்படி ஏவினரென்பது. இதுசம்பந்தமான வேறு கதைகள் இயல்புக்கு மாறுனவைகள்.

இவ்வாறுன கதையில் ஒரு ஆழ்ந்த தாத்பரியங் காணப்படு கிறது. இச் சகத்திற்கு ஒருவனே ஈசுவரன். அவனைத்தவிர வேறு ஒரு ஈசுவரனில்லை. இந்திரனென்று வேறு ஒரு தேவதையில்லை. உந் என்னும் யாதுப, வஷீணம் (வருஷித்தல்) என்ற பொரு ளுடையது. அதன்பேரில் ரக்விகுதியைச்சேர்த்தால் இந்திரசப்தம் வருகிறது. இந்திரன்-வருஷிப்பவன். விருஷ்டியை உண்டாக்கு பவன் யார்? எவன் ஸர்வவியாபியோ அவனே விருஷ்டியைச் செய் பவன். விருஷ்டிக்காக வேறு ஒரு விதாதாவைக் கற்பனைசெய்வது நம்பவொண்ணுதது. ஆகையால் இந்திரனைக்குறித்து ஈசுவரபுத்தி யால் யஜ்ஞஞ்செய்வது பொருந்தும். ஈசுவரன் அநந்தப்பிரகிருதி. அவர் அநந்தகுணவிசிஷ்டர். அநந்தமான செயலுள்ளவர். அநந்த மான சக்திமான். அவருடைய செயல்களைக் கணக்கிடமுடியாது. இவ்விதமிருக்கிற அந்த ஈசுவரனை யெவ்விதம் தியானஞ்செய்வது? ஈசுவரனுடைய ஒவ்வொருசக்தியையும் வேறுபடுத்தி நமக்கு இயன்றவளவு உபாசிக்கலாம். இவ்வுலகில் காண்கிற ஒவ்வொரு பதார்த்தத்திலும் அவர்சக்தி விளங்குகிறது. இவ்வாறு அநந்த ரான ஈசுவரனைத் தியானித்தல்கூடும். இதனுலேயே பிராசீனருஷி கள் ஜகத்ஸ்ருஷ்டா என ஈசுவரனைத் தியானித்துச் சூரியனிடத் திலும், அவருடைய எல்லாவற்றையும் மறைக்குந்தன்மையை மனதில்நினைந்து வருணனிடத்திலும், அவருடைய மஹாதேஜஸ் ஸைச் சிந்தையிற்கருதி அக்னியிடத்திலும், அவர் ஜகத்துக்குப்

பிராணனுயிருக்கிறுரென்பதையுணர்ந்து வாயுவினிடத்திலும், இவ்விதம் அவருடைய ஒவ்வொரு சக்தியையும் நினைந்து நினைந்து வேறு வேறு பதார்த்தத்திலும் ஈசுவரபாவனைசெய்து உபாஸித்திருக்கிறுர்கள். அவருடைய வருஷிக்கும் சக்தியை இந்திரனுகப் பாவித்து உபாஸனைசெய்தார்கள். நாளடைவில் உபாஸனையின் வாஸ்தவார்த்தத்தை ஜனங்கள் மறந்து அவ்வுபாஸனைகளின் வெளித்தோற்றத்தைமட்டும் கவனிப்பார்களானுர்கள். இவ்வாறே சகல தர்மத்தின் தத்வத்தையும் ஜனங்கள் மறந்துவிட்டார்கள். வெளிவேஷம்மட்டும் எஞ்சியது. ஸ்ரீகிருஷ்ணபகவான் தர்மத்தின் தத்துவத்தையும் உபாஸனையின் வாஸ்தவார்த்தத்தையும் ஜனங்களுக்குப் போதிக்கமுயன்றுர். அவர் முதியவயதில் எந்தத் தர்மோபதேசத்தைச்செய்தாரோ அதே உபதேசத்தை இளவயதில் கிரியஜ்ஞம் என்கிற செயலால் உபதேசித்தருளினுர். ஜகதீசுவரன் எல்லாப்பூதத்திலுமிருக்கிறுர். மேகத்திலுமிருக்கிறுர். பசுவிலுமிருக்கிறுர். கன்றினிடத்திலுமிருக்கிறுர். மேகத்தையோ ஆகாசத்தையோ பூஜைசெய்தால் அது, அவருடையபூஜையாகவேயிருக்குமென்றுல் மலையையும் பசுக்களையும் பூஜைசெய்வதும் அவருடைய பூஜையாகவேமுடியுமன்றே? ஆனுல் எல்லாவிடத்திலும் ஈசுவரபாவனைசெய்து பூஜைசெய்தல்வேண்டும். ஆகாசம் முதலிய ஜடபதார்த்தங்களைப் பூசிப்பதைக்காட்டிலும் தரித்திரர்களுக்கும் பசுக்கன்றுகளுக்கும் வயிருர உணவளிப்பது மிகவும் தர்மானுஸாரமாகும். கிரியஜ்ஞத்தின் தாத்பர்யம் இதுதானென்பது பொருந்தும்.

---

## ஐந்தாம் அதிகாரம்.

### வ்ரஜஸௌஹாவீ — விஷ்ணுபுராணம்.

கிருஷ்ணத்வேஷிகளுடைய திருஷ்டியில் இந்தக் கதை கிருஷ்ணசரித்திரத்தில் ஒரு களங்கமாகக் காணப்படுகிறது. கிருஷ்ணனை உபாஸிப்பவர் இக்கதையையே கிருஷ்ணபக்திக்கு முக்ய சாதனமாகக் கொள்கிறுர்கள். ஆகையால் இக்கதையை நாம் விஸ்தாரமாய்ப் பரிசீலனஞ்செய்வோம்.

மஹாபாரதத்தில் வ்ரஜகோபிகளின்கதை சிறிதும் காணப்படவில்லை. ஸபாபர்வத்தில் சிசுபாலவதபர்வாத்யாயத்தில் சிசுபாலனுற் செய்யப்பட்ட கிருஷ்ணநிந்தை விஸ்தாரமாகக் காணப்படுகிறது. மஹாபாரதம் இயற்றியகாலத்தில் வ்ரஜகோபிகள்விஷயமான களங்கமேற்பட்டிருந்தால் சிசுபாலன் அல்லது சிசுபால விருத்தாந்தத்தை யெழுதியுள்ளோர் ஸ்ரீகிருஷ்ணனை நிந்திக்கும் சமயத்தில் இந்தச் சங்கதியைச் சொல்லாமலிருப்பார்களா? ஆகையால் ஆதிமஹாபாரதமியற்றியகாலத்தில் இக்கதை வழங்கவில்லை. அக்காலத்திற்குப் பிறகே இக்கதை தொடுக்கப்பட்டிருக்கிறதென்று நிச்சயமாய் விளங்கும்.

மஹாபாரதத்தில் சபாபருவத்தில் திரௌபதி வஸ்திரஹாரண காலத்தில் த்ரௌபதியானவள் ஸ்ரீகிருஷ்ணனைக் குறித்துச் செய்த ஸ்தோத்திரத்தில் "கோபீஜந ப்ரிய" என்ற பதம் மாத்திரம் காணப்படுகிறது.

பிருந்தாவனம் கோபிகளின் வாஸஸ்தானம். அவ்விடத்தில் கோபர்களும் கோபிகளும் நிரம்பியிருந்தார்கள். ஸ்ரீகிருஷ்ணன் அதிகசுந்தரன். மாதுர்யமயன். விளையாட்டுள்ள குழந்தை. இதனால் அவன் கோபகோபிகள் யாவருக்கும் பிரியபாத்திரமாயிருந்தான். சிறுமிகள், யுவதிகள், கிழவிகள் எல்லோருக்கும் பிரியபாத்திரமாயிருந்தான் ஸ்ரீகிருஷ்ணன். இதுபற்றியே யமலார்ஜுநபங்கம் முதலான உத்பாதகாலத்திலும் பாலனான ஸ்ரீகிருஷ்ணனுக்குத் தீங்கு நேரிட்டதைநோக்கிக் கோபிகள் யாவரும் வருத்தமுற்றார்கள் என்று ஹரிவம்சத்திற் கூறியிருக்கிறது. ஆதலால் "கோபீஜந ப்ரிய" என்கிற பதத்திற்குச் சுந்தரவடிவமான இக் குழந்தையின் பேரில் ஸ்திரீஜனங்கள்யாவரும் பிரியம்வைத்தார்கள் என்கிற அர்த்தத்தைத்தவிர வேறு ஒன்றுமில்லை.

நாம் முதலில் எந்த நியமம் ஏற்படுத்திக்கொண்டோமோ அந்த நியமாநுஸாரமாக மகாபாரதத்திற்குப் பிறகு விஷ்ணு புராணத்தைக் கவனித்தோம்; நாம் முன்பு காட்டியபடி விஷ்ணு புராணம், ஹரிவம்சம், பாகவதபுராணம்: இவைகளில் இக்கதை

முறையே விருத்தியடைந்திருக்கிறது. இந்த வ்ரஜகோபீ தத்வ மானது மஹாபாரதத்திற் காணப்படவில்லை. விஷ்ணுபுராணத்தில் பவித்திரபாவத்தோடு காணப்படுகிறது. ஹரிவம்சத்தில் முதன் முதல் இதில் ச்ருங்காரவிலாஸம் நுழைந்திருக்கிறது. அதன்பிறகு பாகவதத்தில் இந்த ச்ருங்காரரஸபாவங்கள் மிகவும் விஸ்தரிக்கப் பட்டிருக்கின்றன. கடைசியில் பிரம்மவைவர்த்தபுராணத்தில் ச்ருங் கார ரஸபாவங்கள் வெள்ளம்வெள்ளமாயிருக்கின்றன.

இவ்விஷயங்களை விஸ்தாரமாய்த் தெரிவிப்பதற்காக நாம் விஷ்ணுபுராணத்தில் கோபிகளின்கதை எவ்விதம் கூறப்பட்டிருக் கிறதோ அவ்விதம் இங்கே யெழுத முயலுவோம். (அம்சம் 5. அத்யாயம் 13.)

"நிர்மலமான ஆகாயத்தையும், சரத்காலத்துச்சந்திரனது நிலவையும், மலர்ந்த குமுதத்தடாகங்களையும், வாஸனைநிரம்பிய எண்டிசைகளையும், வண்டுக்கூட்டங்களின் சத்தம் நிறைந்த மனோ ஹரமான வனத்தின்வனப்பையும் பார்த்து, ஸ்ரீகிருஷ்ணன் அச் சமயத்தில் கோபிகளுடன் விளையாடவேண்டுமென மனத்தில் நினைந் தான். பலராமனுடன் ஸ்ரீகிருஷ்ணன் அதிமதுரமாக, கானம் செய்யத்தொடங்கினன். அந்த மதுரத்வனியைக்கேட்டுக் கோபி கள் தம் வீட்டுக்காரியங்களையும்விட்டு எவ்விடம் ஸ்ரீகிருஷ்ணன் விளங்கினனோ அவ்விடமே விரைந்துசெல்லவேண்டுமென்று முயன்றனர்கள். ஒரு கோபி அக்காலத்தில் லயாநுஸாரமாக மெள்ளமெள்ளப் பாடத்தொடங்கினள். மற்றொருத்தி ஸ்ரீகிருஷ் ணனை மனதில் நினைந்து நினைந்து அவனிடமே மனம் முழுதையும் செலுத்திவிட்டாள். சிலர் ஸ்ரீகிருஷ்ண ஸ்ரீகிருஷ்ணவென்று கூறி வெட்கப்பட்டார்கள். வேறு சிலர் பிரேமமிக்கு வெட்கத்தை விட்டு அவனை யணுகினர்கள். மற்றுஞ் சிலர் வாசலிற் குருஜனங்க ளிருக்கிறார்களெனக் கண்டு வீட்டிற்குள்ளேயே கண்களை மூடிக் கொண்டு ஸ்ரீகோவிந்தனைத் தியானித்தார்கள். மற்றொரு கோப கன்னிகை ஸ்ரீகிருஷ்ணனைநினைந்து மிகவும் ஆஹ்லாதமடைந்தாள்; ஸ்ரீகிருஷ்ணனை நேரிலடையாமல் மஹாதுக்கத்தையடைந்தாள்; அதனல் அவள் பாபமெல்லாம் விலகியது. இன்னுமொருத்தி

பரப்பிரும்மஸ்வரூபியும் ஜகத்காரணவஸ்துவுமான ஸ்ரீகிருஷ்ணனைச் சிந்தித்துச் சிந்தித்துப் பரோக்ஷார்த்தஜ்ஞானமடைந்து முத்தியையடைந்தாள். சரத்காலசந்திரிகை நிறைந்த அவ்விரவில் கோபீஜனங்களாற் சூழப்பெற்று ராஸக்கிரீடைசெய்யவிரும்பிய ஸ்ரீகிருஷ்ணன் வேறிடஞ்சென்று மறைந்தான்.

அப்பொழுது கோபிகள் ஸ்ரீகிருஷ்ணனுடைய லீலைகளைத் தாங்களும் அநுஸரணஞ்செய்து கூட்டங் கூட்டமாகப் பிருந்தாவன மத்தியில் அங்குமிங்கும் ஸ்ரீகிருஷ்ணனைத் தேடத்தொடங்கினார்கள். ஸ்ரீகிருஷ்ணனையே மனத்திற்கொண்டு ஒருவரோடொருவர் பின்வருமாறு பேசத்தொடங்கினர். ஒருத்தி 'நான் ஸ்ரீகிருஷ்ணன்; இதுதான் அவனுடைய அழகிய நடை. நீங்கள் என் நடையைப் பாருங்கள்' எனக் கூறினாள். வேறு ஒருத்தி, 'நான் ஸ்ரீகிருஷ்ணன்; என் கானத்தில் செவிசாயுங்கள்' என்றாள். மற்றொருத்தி, 'துஷ்டக்காளியனே! நீ இவ்விடமேயிரு. நான் ஸ்ரீகிருஷ்ணன்' எனக்கூறிக் கையைத்தூக்கி ஸ்ரீகிருஷ்ணலீலையை அநுகரணஞ் செய்தாள். வேறொருத்தி, 'ஏ கோபர்களே! நீங்கள் வீணே மழைக்குப் பயப்படவேண்டாம்; நான் இவ்விடத்திலேயே கோவர்த்தனத்தை உயரத் தூக்கிப் பிடிப்பேன்' என்றனள். மற்றுமொருத்தி, கிருஷ்ணலீலையை அநுகரணஞ்செய்து, 'நான் தேனுகாசுரனைச் சுழற்றியெறிவேன். நீங்கள் பயப்படாதீர்கள்' என்றாள். எல்லாக் கோபிகளும் இவ்வாறு ஸ்ரீகிருஷ்ணனிடம் மனம்பற்றியவர்களாய்ப் பிருந்தாவனத்தில் திரிந்துகொண்டிருந்தார்கள். ஒரு அழகிய கோபி பூமியைநோக்கி எல்லா அவயவங்களிலும் மயிர்க்கூச்செடுத்தவளாய் நயனோத்பலங்களை மலரச்செய்துகொண்டு, 'யாவரும் வாருங்கள்; த்வஜ சக்கர அங்குச ரேகைகளால் அலங்கரிக்கப்பட்ட இந்த அடிச்சுவடு நடையழகுவாய்ந்த ஸ்ரீகிருஷ்ணனுடையது. யாரோ புண்யவதியாயும் அழகுவாய்ந்தவளாயுமுள்ள ஒரு கோபி இப்பொழுது பகவானுடன்சென்றிருக்கிறாள். இந்தக் கனமாயும் சிறிதாயுமுள்ள அடிச்சுவடு அவளுடையது. அந்த மஹாத்மாவான ஸ்ரீகிருஷ்ணனின் அடிச்சுவட்டின் நுனிமாத்திரம் எவ்விடம் காணப்படுகிறதோ அவ்விடத்தில் ஸ்ரீகிருஷ்ணன் மேலே இருக்கும் புஷ்பங்களை யெட்டிப் பறித்திருக்

கிறான். புஷ்பங்களால் பாக்கியவதியான கோபி ஒருத்தியை அவன் அலங்கரித்திருக்கிறான். அவள் ஜன்மாந்திரத்தில் பரமாத்மாவான விஷ்ணுபகவானை ஆராதித்திருக்கவேண்டும். மெல்லியதான அடிச்சுவட்டைக்காண்பதிலிருந்து நிதம்பபாரத்தால் மெள்ள மெள்ள நடக்கிற யாரோ ஒரு கோபியைக் கையிற்பிடித்துக்கொண்டு பகவான் அழைத்துப்போனாரெனத் தெரிகிறது. கூடினமாத்திரத்தில் அவளைக்கைவிட்டு ஸ்ரீகிருஷ்ணன் வேறிடஞ்சென்றதால் அவனைத் தேடியுங் காணாமல் நிராசையாய் மெல்லமெல்ல அவள் திரும்பினாளென்றும் காணப்படுகிறது. அந்த ஸ்ரீகிருஷ்ணனே சீக்கிரம் நான் திரும்பி உங்களிடை நிச்சயமாய் வந்துவிடுவேன் என்று கூறியுள்ளாரன்றோ? அதற்காகவே அவருடைய திரும்பிய அடிச்சுவடு விரைவாய் வைக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. இந்த வீட்டில் ஸ்ரீகிருஷ்ணன் நுழைந்திருக்கவேண்டும். ஏனெனின் இதற்குப்பிறகு ஸ்ரீகிருஷ்ணனின் அடிச்சுவட்டைக்காணோம். இவ்விடத்திற் சந்திரகிரணங்கள் நுழையவில்லை. திரும்பிப்போவோம் வாருங்கள்' என்று கூறுவாளாயினாள்.

பிறகு மலர்ந்த முகபங்கஜத்தோடும் புன்சிரிப்போடும் த்ரைலோக்ய ரக்ஷகனான ஸ்ரீ கிருஷ்ணபகவான் வந்தார். ஸ்ரீகோவிந்தன் வருவதைப் பார்த்துச் சில கோபிகள் மிகவும் ஆநந்தமடைந்தவர்களாய் 'ஸ்ரீகிருஷ்ண ஸ்ரீகிருஷ்ண'வென்று சொல்லத்தொடங்கினர். மற்றுஞ் சிலருக்கு ஆநந்தப்பெருக்கால் பேசவே நா எழவில்லை. சில கோபிகள், புருவத்தைநெறித்து ஸ்ரீ ஹரியைப்பார்த்து, அவருடைய முகபங்கஜத்தைத் தம் நயனங்கள் வாயிலாகத் தம்மிஷ்டப்படி பானஞ்செய்யத்தொடங்கினர். பிறகு பகவான் கோபிகளைத் தேற்றிச் சிலரைக் கடாக்ஷவீக்ஷணத்தாலும், வேறு சிலரைப் பிரியபாஷணத்தாலும், மற்றுஞ் சிலரைக் கரஸ்பர்சத்தாலும் சமாதானஞ்செய்தார். பிறகு உதாரசீலனான ஸ்ரீபகவான் பிரஸந்நசித்தர்களான கோபியருடன் கூடி ஆதரவுடன் ராஸமண்டல மத்தியில் விளையாடவாரம்பித்தார். ஆனால் அவர்கள் ஸ்ரீகிருஷ்ணனின் அருகிலேயே நின்றுகொண்டு அவனைவிட்டு விலகவில்லை. ஆதலால் கோபியர்களுடன்கூடி ராஸமண்டலம் இயற்றமுடியவில்லை. பிறகு அவர் ஒவ்வொருகோபியையும் கையால் பிடித்து

அவர்கள் பகவானின் கரஸ்பர்சத்தால் ஆனந்தபரவசர்களாய்க் கண்களை மூடிக்கொண்டிருக்கும்பொழுது ராஸமண்டலத்தைத் தொடங்கினர். அவர் கோபிகளின் அலைகிற வளையொலியுடனும் கோபிகளின் கீதத்துடனும் ராஸக்கிரீடைசெய்யத்தொடங்கினர். கோபிகள் அடிக்கடி கிருஷ்ணநாமாவையே பாடத்தொடங்கினர் கள். ஒரு கோபி நர்த்தனசிரமத்தால் களைப்படைந்து சல் சல் என வொலிக்கிற வளையல்பூண்ட பாகுலதையை (கையை) ஸ்ரீகிருஷ் ணன் தோளின்மேல் வைத்தாள். மற்றொருகோபி ஸ்ரீகிருஷ்ண கீதத்தின் லயாநுசாரமாய்க் கபடமாகக் கிருஷ்ணனை ஆலிங்கனஞ் செய்து முத்தமிட்டாள். பகவானின் புஜத்வயங்கள் ஒருகோபியின் இருகன்னங்களிலும் தொட அவள் மயிர்க்கூச்செடுத்தவளாயி னள். எதுவரை ஸ்ரீகிருஷ்ணபகவான் ராஸகாநத்தைப் பாடிக் கொண்டிருந்தாரோ அதுவரை கோபிகள் "நல்லது கிருஷ்ண! நல்லது கிருஷ்ண!" எனச் சொல்லிக்கொண்டு இருமடங்கு பாட வாரம்பித்தார்கள். ஸ்ரீகிருஷ்ணன் மெல்ல நகர்ந்தான். அவர்களும் நடந்தனர். ஸ்ரீ கிருஷ்ணன் திரும்பிநிற்க அவர்களும் திரும்பி நின்றனர். இவ்வாறு "அநுலோம ப்ரதிலோம கதி" மூலமாகக் கோபிகணங்கள்கூடி ஸ்ரீகிருஷ்ணபஜனைசெய்தார்கள். மதுசூதனன் கோபிகளுடன் அவ்விடத்திலேயே கிரீடைசெய்தான். அவர்கள் பகவானைவிட்டுப்பிரிந்த ஒருக்ஷணத்தையும் கோடி வருஷங்க ளாகக் கருதினர்கள். கணவன் தடுத்தலையும், தந்தை தடுத்தலை யும், உடன்பிறந்தோன் தடுத்தலையும் பாராட்டாது கோபிகள் இராக்காலத்தில் கண்ணனுடன் கிரீடைசெய்தார்கள். பரமாத்மா வான மதுசூதனன் தன் குழந்தைப்பருவத்தை அறிந்து கொண்டே ராத்திரியில் கோபிகளுடன் கிரீடைசெய்தான்."

இவ்வநுவாத விஷயத்தில் ஒருவிஷயம்சொல்லவேண்டும். 'ரம' தாதுவிலிருந்து உண்டான சப்தத்தின் அர்த்தத்தை விளையாட் டாகக்கொண்டோம். ரதிப்ரிய என்கிற வார்த்தைக்கு விளையாடு பவன் எனப் பொருள்கொண்டோம். இப்பதங்கட்கு வேறு அர்த் தங்கள் விளையாட்டென்கிற அர்த்தத்திலிருந்து பிறகு உண்டா யின. 'ரதிப்ரிய' என்னும் இவ்விரண்டுபதங்களும் கிருஷ்ணனின் விளையாட்டைக்குறிக்குமென்று பல உதாரணம் காட்டலாம்.

ஹரிவம்சம் 68-வது அத்யாயத்தில் விளையாட்டில் ஆசையுள்ள கோபாலர்களை 'ரதிப்பிரியர்களான கோபாலர்கள்' எனக் கூறியிருக்கிறது. இவ்விடத்தில் இவ்வர்த்தமே பொருந்தும்; ஏனெனில் ராஸமென்பது ஒருவகை விளையாட்டு. இற்றைக்கும் இப்பாரதவருஷத்தில் சிற்சில இடங்களில் இவ்விளையாட்டும், நடனமும் வழக்கத்திலிருக்கின்றன. ராஸ மென்கிற பதத்தின் அர்த்தத்தை ஸ்ரீதரஸ்வாமி, இவ்வாறே கூறுகிறார், 'ஸ்திரீ புருஷர்கள் ஒருவரோடொருவர் கைகோத்துப் பிடித்துப் பாடிக்கொண்டு மண்டலரூபமாகச் சுற்றி யாடும் நடனத்திற்கு ராஸமென்று பெயர். குழந்தைகள் இவ்வித நடனஞ்செய்ய நாம் கண்டிருக்கிறோம். பிறதேசங்களில் குழந்தைப்பருவம் நீங்கியவர்களும் இவ்வித நடனஞ்செய்வதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். இத்தகைய விளையாட்டில் ச்ருங்கார ரஸத்தின் நாமமும் இல்லை. கந்தமும் இல்லை. ராஸமென்பது ஒருவகை விளையாட்டு. அவ்வாறே ரதி என்பதும் ஒருவகை விளையாட்டு. ஆகையால் ராஸவர்ணநத்தில் ரதியென்கிற சப்தம் உபயோகிக்குங்கால் அதற்குக் கிரீடையெனப் பொருள்கொள்ளல் பொருந்தும்.

இந்த ராஸலீலாவிருத்தாந்தத்தின் தத்வத்தை நன்றாயறிந்துகொள்வது அசாத்யம். இவ்விஷயத்தில் கூடார்த்தமொன்றுளது. அதை இப்பொழுது நாம் விஸ்தரிக்கப்புகவில்லை. மனுஷ்யனுக்கு மனுஷ்யத்வமே தர்மம். நம்முடைய விருத்திகளை அநுசீலனஞ்செய்வது நமது சிறந்த கடமையேயாம். மனுஷ்யவிருத்திகள் சாரீரகாவென்றும், ஜ்ஞாநார்ஜநீ என்றும், கார்யகாரிணீயென்றும், சித்தரஞ்சனீ என்றும் நான்குவிதமாகப் பிரிக்கப்பட்டுள்ளன. எந்தச் சித்தவிருத்தியின்மூலமாகச் சௌந்தர்யத்தை அநுபவித்து நிர்மலமான ஆனந்தத்தை யடைகிறோமோ அந்த விருத்தி சித்தரஞ்சனி யென்று சொல்லப்படுகிறது. அவ்விருத்தியை அநுசீலனஞ்செய்வதால் சச்சிதானந்தமயமான ஜகத்தையும் ஜகன்மயமான சச்சிதானந்தத்தையும் சம்பூர்ணமாக ஸ்வரூபாநுபவஞ்செய்யமுடியும். சித்தரஞ்சனிவிருத்தியை அநுசீலனம் செய்யாவிட்டால் தர்மத்திற்கு ஹானி ஏற்படும். நமக்கு ஆதர்சமானவருடைய விருத்தி ஒவ்வொன்றையும் நாம் அநுசீலனஞ்செய்து

ஆனந்தமடையவேண்டும். இந்த ராஸலீலையானது, ஸ்ரீ கிருஷ்ணனும் கோபீஜனங்களும் நிகழ்த்திய சித்தாஞ்சினிவிருத்தியின் அநுசீலனத்துக்கு உதாரணம்.

இது, கிருஷ்ணன்பக்கலில் உபபோகமாகும். ஆனால் கோபிகளின் பக்ஷத்தில் இது ஈசுவரோபாஸனை. ஒருபக்கம் அனந்தனின் ஸௌந்தரியவிகாஸம். மற்றொருபக்கத்தில் அவ்வழகின் உபாசனை. சித்தரஞ்ஜனிவிருத்தியின் கடைசி அநுசீலனத்தால் அவ்விருத்திகளை ஈசுவரமுகமாய்ச் செய்யவேண்டும். பிராசீன பாரதவருஷத்தில் ஸ்திரீகளுக்கு ஞானமார்க்கம் நிஷேதிக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் அவர்கள் வேதாத்யயனம் செய்யக்கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கின்றனர். ஸ்திரீகள் கர்மமார்க்கத்தை அநுஷ்டிப்பது இயலாத காரியம். ஆகையால் அவர்களுக்குப் பக்தி மார்க்கத்தில் விசேஷ அதிகாரமுண்டு. பக்தியாவது ஈசுவரனிடத்தில் முழுமனதையும் செலுத்திப் பற்றுதலாம். அநுராகம் பல காரணங்களாலுண்டாகும். ஆனால் ஸௌந்தரியத்திலீடுபட்டு எந்த அநுராக மேற்படுகிறதோ அதே சிறந்த அநுராகம். ஆகையால் அனந்தசுந்தரமூர்த்தியான பகவானுடைய அழகில் ஈடுபட்டு அம்மூர்த்தியை ஆராதிப்பது ஸ்திரீகளுக்குச் சிறந்த உபாயம். இத்தத்துவத்தை உருவமாகக்கொண்டது ராஸக்கிரீடை. இப்பிரபஞ்சத்திலுள்ள அழகெல்லாம் அவரிடம் காணப்படுகிறது. சரத்கால பூர்ணசந்திரனும், வெள்ளம் நிறைந்த யமுனையும், மலர்ந்து நறுமணம் வீசுகிற புஷ்பங்கள் நிறைந்த லதாகிருகங்களும், மதுரமான சப்தத்துடன் பாடுகிற பக்ஷிகள்நிறைந்த பிருந்தாவனமும் அதன்மத்தியில் அநந்தசுந்தரமான பகவானின் திருமேனியின் விகாஸமும் இவைகளுக்கு உதவியாக பகவானின் இனிமைநிரம்பிய கானமும் ஆகிய இவ்வெல்லாப்பிரகாரத்தாலும் சித்தரஞ்சனத்தின்மூலமாகக் கோபீஜனங்களுக்குப் பக்தி யதிகரித்தது. அவர்கள் அவ்விதமாகக் கிருஷ்ணனிடம் பிரேமைகொண்டு தங்களைக் கிருஷ்ணனென்றே நினைக்கமுற்பட்டார்கள். ஜகதீசுவரனின் ஸௌந்தர்யத்தில் அநுராகமுடையவர்களாய் ஜீவாத்மா பரமாத்மாக்களின் அபேதஞானத்தையுமடைந்து யோகிகளுக்கு யோக மூலமாகவும் ஞானிகளுக்கு ஞானமூலமாகவும் எது மிக விரும்பப்

பெறுகிறதோ அந்தப்பயனைக் கோபிகள் பக்திமூலமாகப்பெற்றுப் பகவானிடத்து லயமடைந்துநின்றார்கள்.

யுவர்களும் யுவதிகளும் ஓரிடத்திற் கூடி நிருத்தகீதம் செய்வது நம்முடைய தற்கால ஒழுக்கமுறைப்படி நிந்திக்கத்தகுந்ததே. மற்றத் தேசங்களில் இவ்வழக்கம் நிந்திக்கத் தகுந்ததன்று. விஷ்ணுபுராணமியற்றிய காலத்தில் இவ்வழக்கம் ஸமாஜசம்மதமாயிருந்திருக்கலாம். பிற்காலத்தில் இவ்வழக்கம் ஆசரணையில் இல்லாமலிருக்கலாம்.

ஈசுவரன் சர்வவியாபியாயிருப்பவன், சர்வபூதங்களிடத்திலும், ஆகாயத்திலும், அக்கினியிலும், பூமியிலும், ஜலத்திலும், வாயுவிலும் எங்கும் நிறைந்தவன். ஆதலால் அவனுடன்கூடி விளையாடினால் யாதொரு தோஷமுமில்லையென்று சிலர் கருதுகிறார்கள். இவ்விதம் சமாதானஞ்செய்வதில் சிறிதும் பயனில்லை. ஸ்ரீகிருஷ்ண பகவானவதரித்தகாலத்தில் ஸ்திரீபுருஷர்கள் ஒன்றுகூடி விளையாடுவது அக்காலத்துஜனங்களால் தோஷமாகக் கொள்ளப்படவில்லை போலும்.

---

## ஆறுவது அதிகாரம்.

### விரஜகோபி—(ஹரிவம்சம்.)

விஷ்ணுபுராணத்திலிருந்து முந்திய அத்யாயத்தில் எக்கதையை எடுத்துக்கூறினோமோ அக்கதையானது 5-வது அம்சம் 13-வது அத்யாயத்திலிருந்து எடுக்கப்பட்டது. இவ்வத்யாயத்தைத் தவிர விஷ்ணுபுராணத்தில் வேறிடத்தில் வ்ரஜகோபிகளின்கதை காணப்படவில்லை.

இவ்வாறே ஹரிவம்சத்திலும் வ்ரஜகோபிகளின்கதை விஷ்ணு பர்வம் 11-ஆவது அத்யாயத்திற் காணப்படுகிறது. ராஸ என்கிற சப்தமானது ஹரிவம்சத்தில் கூறப்படவில்லை. அதற்குப் பதிலாக ஹல்லீக: என்கிற சப்தம் இருக்கிறது. ஹல்லீகம் என்பது ஒரு வ்ருத்திவிசேஷம். ஹரிவம்சத்தின் 11-ஆவது அத்யாயத்தின் கதையை இங்குச் சுருக்கி வரைவோம்.

'ஸ்ரீகிருஷ்ணன் ராத்திரியில் சந்திரன் விகாஸிப்பதைப்பார்த்து விளையாட்டில் ஆசைகொண்டான்; ஓரிடத்தில் கொழுத்த எருதுகளோடு பலசாலியான கிருஷ்ணன் சண்டைசெய்தான்; மற்றோரிடத்திற் பலத்தினுற் கொழுப்படைந்த கோபாலர்களோடு யுத்தஞ்செய்தான்; கிருஷ்ணபகவான் தான் பால்ய வயதினனாயிருந்தும் யுவதிகளான கோபிகளுடன் விளையாடிக் களித்தான்; கோபிகள் கிருஷ்ணனுடைய அழகிய முகமண்டலத்தைக் கண்களாரக் கண்டு களிகூர்ந்தார்கள்; சுந்தரமூர்த்தியான கிருஷ்ணன் பீதாம்பரமணிந்துகொண்டு அதிகமாகப் பிரகாசித்தான்; அங்கதமணிந்த தோள்களோடு மாலையணிந்த மார்புமுடையனாய் விளங்கிய அவன் அவ்விடைச்சேரிக்கு ஓர் ஆபரணமாய்ப் பிரகாசித்தான்; அவ்வழகுநிறைந்த கிருஷ்ணனைநோக்கிய கோபிகள் அப்பொழுது அவனைத் தாமோதரனென்று அழைத்தார்கள்; விளையாட்டில் பிரியமுள்ள கோபிகள் தாய் தந்தை சகோதரன் முதலானோர் தடுப்பதையும் பாராட்டாமல் கிருஷ்ணனை அணுகினார்கள்; அவர்கள் யாவரும் வரிசைவரிசையாயிருந்துகொண்டு மனோஹரமாய் விளையாடினார்கள்; இடையிடையே கிருஷ்ணசரித்திரத்தைக் கானஞ்செய்தார்கள்; நிருத்யத்தையும் கீதத்தையும் பார்வையையும் அநுகரணஞ்செய்து கிருஷ்ணனுடன் ஆனந்தமாக விளையாடத்தொடங்கினார்கள்; கிருஷ்ணபராயணைகளான அப்பெண்டிர்கள் ஹாவம் நிரம்பிய கீதங்களைப் பாடிகொண்டு ஆனந்தமாக அவ்விடத்தில் அங்குமிங்கும் திரிந்தார்கள்.

கிருஷ்ணன் ஹா! ஹா!! என ஆரவாரித்துக் கானஞ்செய்தான்; கிருஷ்ணபகவானுடைய திருமுகமண்டலத்திலிருந்து வெளிவந்த அந்த சப்தத்தையே கோபிகள் அநுகரணஞ்செய்யத் தொடங்கினார்கள். விளையாட்டினால் யுவதிகளின் கூந்தல் கட்டவிழத்தொடங்கியது. ஸ்ரீகிருஷ்ணன் இவ்விதமாக நல்ல நிலவுடன் கூடிய சரத்காலராத்திரியில் கோபிகளுடன் கூடி ஆநந்தமடைந்தான்.'

இக்கதையால், பாலனாகிய ஸ்ரீ கிருஷ்ணன் வேடிக்கையாக விளையாடினானெனக் கொள்ளவேண்டுமேயொழிய வேறுவிதமாக நினைப்பதற்கு அவகாசமில்லை.

இந்த ஹல்லீசக்கிரீடாவர்ணனையானது விஷ்ணுபுராணத்தில் கூறியுள்ள கதையை அநுசரித்தே சுருக்கிச்சொல்லப்பட்டிருக்கிறது. விஷ்ணுபுராணத்தில் கோபிகள் சபலைகளான பாலிகைகளென்றும், ஹரிவம்சத்தில் கோபிகள் விலாஸினிகளென்றும் கூறப்பட்டிருக்கின்றனர். நாம் முந்திய அத்யாயத்தில் ராஸக்கிரீடையைப்பற்றி எதெது கூறினோமோ அவையெல்லாம் ஹல்லீசக்கிரீடையிலும் பொருந்தும்.

---

## ஏழாவது அதிகாரம்.

விரஜகோபி—(பாகவதம்.)

[வஸ்திரஹரணம்]

ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீகிருஷ்ணசம்பந்தமுடைய கோபிகளின்கதை ராஸநிருத்யத்துடன்மாத்திரம் நிற்கவில்லை. கோபிகளுடன் கிருஷ்ணன் புரிந்த லீலைகளைப் பாகவதகாரர் விசேஷமாகக் கூறியிருக்கிறார். அவற்றுட்சில வெளிப்படையாகக் கூறுவதற்கு இயலாதவைகளாயிருக்கின்றன. ஆனால் அவற்றினிடையிடையே பவித்திரமான பக்தி தத்வங்களும் அடங்கியிருக்கின்றன. உதாரணமாக ஒரு கதையை இங்கு எடுத்துக்காட்டுவோம்.

வஸ்திரஹரணமெனப் பிரஸித்தமான ஓர் உபந்யாஸம் பாகவதத்துள் இருக்கிறது. வஸ்திரஹரண சம்பந்தமாக எவ்வித கதையும்மஹாபாரதத்திலாவது விஷ்ணுபுராணத்திலாவது ஹரிவம்சத்திலாவது காணக்கிடைக்கவில்லை. ஆராயுங்கால் இது பாகவதகாரர் கற்பனையெனத் தோற்றுகிறது. ஸ்ரீகிருஷ்ணனிடம் அநுராகம் கொண்ட கோபிகள் கிருஷ்ணனையே கணவனாக அடையவேண்டுமென்று காத்தியாயனீவ்ரதம் அநுஷ்டிக்கத்தொடங்கினர். இந்த வ்ரதம் ஒருமாதகாலம் அநுஷ்டிக்கவேண்டும். அவர்கள் ஒருங்கு கூடி அதிகாலையில் யமுனையில் ஸ்நானஞ்செய்தார்கள். [இக்காலத்திற் சில இடங்களில் மாதர்கள் ஸ்நானஞ்செய்யும்பொழுது அவர்கள் ஜலத்தில் மூழ்குமுன் ஆடையைக்களைந்து கரையில்வைத்து ஆடையின்றியே ஜலத்தில் மூழ்குகின்றனர். இது ஒரு கெட்ட

வழக்கம். இவ்வாறே வ்ரஜாங்கனைகளும் செய்தார்கள்.] மாதக் கடைசியில் வ்ரதம் முடியுங்காலத்திலும் இவ்வாறே ஸ்நானஞ்செய் தார்கள். அவர்களுக்குக் கர்மபலத்தை அளிப்பதற்காக அவர்கள் ஸ்நானஞ்செய்யுமிடத்திற்கு ஸ்ரீகிருஷ்ணன் சென்றான். ஆடைகளை யெடுத்துக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணன் கரையிலுள்ள கடம்பமரத்தில் ஏறிக்கொண்டான்.

கோபிகள் மிகவும் வெட்கமடைந்தார்கள். வஸ்திரமின்றிக் கரையிலேற முடியவில்லை; குளிர்ந்த காலைவேளையாதலால் நீரிலும் வெகுநேரம் நிற்கமுடியவில்லை. கழுத்தளவுள்ள நீரில் நின்று கொண்டு குளிரால் நடுங்கினார்கள்; கிருஷ்ணனை வஸ்திரங்கொடுக் கும்படி யாசித்தார்கள்; கிருஷ்ணன் எளிதிற் கொடுக்கவில்லை; கோபிகளுக்கு கர்மபலனைக்கொடுக்க விரும்பினான். பிறகு யாது நிகழ்ந்ததோ-அதை ஸ்திரீகளும் குழந்தைகளும் அறியக்கூடிய தமிழ்ப்பாஷையில் வெளிப்படையாய்க்கூற நாம் விரும்பவில்லை. ஆதலால் அவர்களே பாகவதம் 10-வது ஸ்கந்தம் 22-வது அத்யா யத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

இதனுள் அடங்கிய பக்திதத்வத்தை இங்குக் கூறுவோம். பக்தியால் ஈசுவரனையடைவதற்கு அவரிடம் எல்லாவற்றையும் ஸமர்ப்பணம் செய்வதே முக்யசாதனம். பகவத்கீதையில் ஸ்ரீகிருஷ் ணன்,

'அர்ஜுந! நீ செய்யுஞ்செயல்களையும், நீ உண்ணுமவற்றை யும், நீ வழங்கும் அவிகளையும், நீ தானஞ்செய்யுமவற்றையும், நீ செய்யும் தவங்களையும் எனக்கு அர்ப்பணஞ்செய்வாயாக.' என்று திருவாய்மலர்ந்தருளினான்.

கோபீஜனங்கள் கிருஷ்ணனிடம் எல்லாவற்றையும் அர்ப் பணஞ்செய்தார்கள். ஸ்திரீகள் எல்லாவற்றையும் விட்டுவிடுவார் கள். உயிரையும் விட்டுவிடுவார்கள். வெட்கத்தைமாத்திரம் விட மாட்டார்கள். லஜ்ஜையென்பது ஸ்திரீகளுக்குச் சிறந்த அணிகலன். கோபிகள் ஸ்ரீகிருஷ்ணபகவானிடம் லஜ்ஜையையும் அர்ப்பணஞ் செய்தனர்.

இது காமவேட்கையால் நாணத்தை அர்ப்பணஞ்செய்த தன்று. தங்களை மறந்தே அர்ப்பணஞ்செய்ததாகும். அவர்கள் ஈசுவரனிடத்தில் தங்களுடைய எல்லாவற்றையுமே ஸமர்ப்பணஞ் செய்தார்கள். ஸ்ரீகிருஷ்ணன் அவர்கள் பக்திமிகுதியால் கொடுத் ததை பேற்றுக்கொண்டான். "நம்மிடம் ஒருவருடைய மனம் பக்தியுடன் வைக்கப்படுமானால், அவர் அம்மனத்தைக் காமார்த்த மாகவைத்தவராகார். தானியம் வறுக்கப்பட்டும் வேகவைக்கப் பட்டுமிருக்குமானால், அதை விதைத்தாலும் முளையாது. எவர்கள் என்மீது ஆசைவைத்தார்களோ, அவர்களிடம் காமம் முழுதும் அருது, இருந்துகொண்டேயிருக்கும். நீங்கள் எதற்காக இந்த விரதத்தை அநுஷ்டித்தீர்களோ அதை நான் இரவில் அளிப்பேன்." என்று ஸ்ரீகிருஷ்ணன் மொழிந்தார்.

இப்பொழுது கோபீஜனங்கள் ஸ்ரீகிருஷ்ணனைக் கணவனாக அடையவிரும்பியே விரதத்தை அநுஷ்டித்தார்கள். ஆகையால் ஸ்ரீகிருஷ்ணன் அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற் காகக் கணவனாயிருக்க இசைந்தார். அதனால் கார்யத்தில் நீதிக் குறைவு ஏற்பட்டது. கோபிகள் பரபுருஷர்களுக்கு வாழ்க்கைப் பட்டவர்கள்; அவர்களுக்குப் பதியாயிருக்கக் கண்ணன் உடன் பட்டது பரஸ்திரீகமனத்தை அங்கீகரித்ததுபோலாகும். ஸ்ரீ கிருஷ்ணனிடம் இந்தப்பாபம் ஏன் சுமத்தப்பட்டது?

இதற்கு விடையளித்தல் நமக்கு மிகவும் எளிது. "இவை யெல்லாம் புராணகாரர் கற்பித்த உபந்யாஸங்களே; இவைகளில் உண்மையென்பதே கிடையாது" என்று நாம் அடிக்கடி பிரமாணங் கள் மூலமாகக் குறிப்பிட்டிருக்கிறோம். ஆனால் புராணகாரர்களால் இதற்குப் பதில் அளிப்பது எளிதன்று. அவர்கள் பரீக்ஷித்துமகா ராஜன் கேட்ட கேள்விக்குப் பதிலாக, சுகமகரிஷியின்வாயிலாக ஒரு விடை அளித்திருக்கிறார்கள். தகுந்த இடத்தில் அவர்கள் கதை யைச் சொல்வோம். ஆனால் நம்மால் இவ்விடத்தில் ஒன்று சொல்லத் தக்கது. ஹிந்துதர்மத்தின் பக்திசாஸ்திராநுஸாரமாக, கோபீ ஜனங்கள் பதியாக அவரை அடையவேண்டுமென்ற கோரிக்கையை அவர் நிறைவேற்றவேண்டும்.

"𑌯𑍇 𑌯𑌥𑌾 𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑌾𑌂𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌭𑌜𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥

'எவர்கள் எந்த எந்தப் பாவனையுடன் என்னைப் பஜிக்கிறார்களோ அவர்களுக்கு அந்த அந்தப் பாவனையுடன் நான் அருள் புரிகிறேன். அதாவது நம்மிடத்தில் எவர்கள் விஷயபோகத்தை விரும்புகிறார்களோ, அவர்களுக்கு நாம் அதையே கொடுப்போம். எவர்கள் மோக்ஷத்தை விரும்புகிறார்களோ அவர்களுக்கு மோக்ஷத்தைக் கொடுப்போம்' என்று பகவத்கீதையில் ஸ்ரீகிருஷ்ணபகவானே திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார். விஷ்ணுபுராணத்திலும் "தேவர்களுக்கு மாதாவான அதிதி ஸ்ரீவிஷ்ணுவை நோக்கி நான் உன்னைப் பிள்ளையாகப் பெறவேணுமென்று ஆசைப்படுகிறேன்" என்று சொல்ல, அவரும் அவ்வாறே அவளுக்குப் பிள்ளையாகப் பிறந்தார் என்று கூறப்பட்டுள்ளது. வஸுதேவரும் தேவகியும் ஜகதீசுவரனைப் பிள்ளையாகப்பெறவேணுமென்று ஆசைப்பட்டதால், அவர் அவர்களுக்குப் பிள்ளையாகப் பிறந்தார் என்று ஸ்ரீபாகவதத்திலும் சொல்லியிருக்கிறது. அவ்வாறே கோபிகள், அவரைப் பதியாக அடைவதற்கு வேண்டிய சாதனங்களைக் கைக்கொண்டார்கள். ஆதலால் அவர் அவர்களுக்குப் பதியாகும்நிலையுடையராயினார்.

அவ்விதமிருந்தால் அவர் அதர்மம்செய்தார் என்பது எவ்விதம்? புண்யமயராயும் புண்யங்களுக்கு இருப்பிடமாயும் புண்ய மூர்த்தியாயுமிருக்கிற ஜகதீசுவரனுக்குப் பாவங்கள்மூலமாய் என்ன குறையேற்படும்? பாவம் என்பது எது? புண்யம் என்பது எது? எந்தக் காரியமூலமாய் ஜகதீசுவரனுடைய சந்நிதி ஏற்படுமோ அதுவே புண்யம்; அதுவே தர்மம். அதற்கு மாறான செயல்களே பாவம்; அவைகளே அதர்மம்.

புராணகாரர் இந்த உண்மையை விசதப்படுத்துவதற்காகவே, பாவம்வரக்கூடிய வழியைப்பற்றியே சொல்லவில்லை. கண்ணனை உபபதி (சோரநாயகன்) ஆக அடையவேண்டுமென்று ஆசைப்பட்டவர்கள் சுயசரீரத்துடன் அவரை அடையவில்லை; அவர்களுடைய கணவர்களும் அவர்களை வெளியிற் போகவிடவில்லை; ஸ்ரீகிருஷ்ணனை மனதில் நினைத்துக்கொண்டே உயிரைவிட்டார்கள்:—

தமேவ பரமாத்மாநம் ஜாரபுத்த்யாபி ஸங்கதா: ।
ஜஹுர் குணமயம் தேஹம் ஸத்ய: ப்ரக்ஷீணபந்தநா: ॥

(ஸ்ரீபாகவதே ஸ்கந்தம்-10. அத்தியாயம்-33. சுலோகம்-26.)

வேறுமனிதனை அவர்கள் (கோபியர்கள்) உபபதியாக அடையக்கருதியதேயன்றி அவனையே ஸ்ரீகிருஷ்ணனாகக் கார்யத்திலும் பாவித்தார்கள். ஸ்ரீகிருஷ்ணனைவிட்டு அவர்கள்மனம் விலகவேயில்லை. அப்படியிருந்தும் அவர்கள் ஈசுவரனையடையத் தகுதிபெறவில்லை. எப்பொழுது "ஜாரன்" (சோரபுருஷன்) என்ற புத்திவருமோ, அப்பொழுது பாவ எண்ணமும் தோன்றும்; ஜாரனுடன் சேர்தல் பாவம். எப்பொழுது "ஜார" எண்ணம் இருக்குமோ, அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணனை ஈசுவரன் என்று தியானிக்கமுடியாது. இவ்வாற்றால் கோபிகள் ஸ்ரீகிருஷ்ணனைச் சரீரத்துடன் அடையமுடியவில்லை.

ஆகையால் எவர்கள் ஸ்ரீகிருஷ்ணனைப் புருஷனாக அடையவேண்டுமென்று நினைத்தார்களோ, அவர்களுக்குப் பாவமில்லை. ஸ்ரீகிருஷ்ணனுக்குப் பாவம் உண்டா? இந்தக்கதைக்குப் பதில் ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் எவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறதோ, அவ்வாறே பாகவதகாரரும் கூறியிருக்கிறார். ஈசுவரனுக்கு நம்மைப்போல் பாபபுண்யம் ஏது? அவர் நம்மைப்போல் சரீரம்படைத்தவரில்லை; சரீரம் இல்லாமல், இந்திரியங்களுக்கு வசப்படுதல் இல்லை; இந்திரியங்களுக்கு வசப்படுவதால் விளையக்கூடிய தோஷங்களும் இல்லை. அவர் எல்லாப்பூதங்களிலும் இருக்கிறார்; கோபிகளிடத்திலும் இருக்கிறார். அவர்களுடைய புருஷர்களிடமும் இருக்கிறார். அவருக்குப் பரஸ்திரீ கமனமெனும் பாவமே ஏற்படுவதற்கு இடமில்லை.

இந்தக்கதையில் நமக்கு ஒரு சந்தேகம் தோன்றுகிறது. ஈசுவரன் எப்போது சரீரத்தை எடுத்துக்கொண்டாரோ, அப்பொழுது அவர் இந்திரியங்களுடன்கூடியவரே. எப்பொழுது அவர் மனுஷ்யசரீரத்தை எடுத்துக்கொண்டாரோ, அப்பொழுது மனுஷ்யசுபாவத்தை அநுசரித்து நடப்பதற்காகவே சரீரத்தை எடுத்துக்கொண்டார் என்பது பொருந்தும். மனிதநிலைமையில் கோபிகள் பரஸ்திரீகளே; அவர்களை அணுகுதல் பரஸ்திரீகமனமென்ற பாவமே. ஸ்ரீகிருஷ்ணன் உலகத்துக்கு நற்புத்திகற்பிப்பதற்காகவே காரியங்களைச்செய்துபோந்தார் என்று பகவத்கீதையில்

சொல்லியிருக்கிறதே. பரஸ்திரீகமனமென்கிற பாவத்தொழிலை அவர் செய்தால் உலகத்தில் உள்ளோரும் பாவம்செய்தலிலே அவரைப் பின்பற்றுவார்களன்றோ! ஆதலால் புராணகாரர் மேலே கூறியுள்ள விடை சரியானதில்லை. பாகவதகாரரே, ராஸமண்டலமத்தியில், ஸ்ரீகிருஷ்ணனை ஜிதேந்திரியர் (இந்திரியங்களை ஜயித்தவர்) எனக் கூறியிருக்கிறார்.

> 𑌏𑌵𑌂 𑌶𑌶𑌾𑌂𑌕𑌾𑌂𑌶𑍁𑌵𑌿𑌰𑌾𑌜𑌿𑌤𑌾 𑌨𑌿𑌶𑌾𑌃
> 𑌸 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑍋𑌽𑌨𑍁𑌰𑌤𑌾𑌬𑌲𑌾𑌗𑌣𑌃।
> 𑌸𑌿𑌷𑍇𑌵 𑌆𑌤𑍍𑌮𑌨𑍍𑌯𑌵𑌰𑍁𑌦𑍍𑌧𑌸𑍌𑌰𑌤𑌃
> 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌶𑌰𑌤𑍍𑌕𑌾𑌵𑍍𑌯𑌕𑌥𑌾𑌰𑌸𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌃॥

(பாகவதம். ஸ்கந்தம் 10. அத்தியாயம் 33. சுலோகம் 26.)

விஷ்ணுபுராணகாரரைக்காட்டிலும் பக்தியின் உண்மையைக் கூறுவதில் பாகவதகாரர் மிகவும் உயர்ந்தவர். ஜகத்தில் ஸ்திரீ என்பது மிகவும் உயர்ந்த வஸ்து; இரத்தினமெனக் கூறுவதுமுண்டு, எந்த ஸ்திரீக்கு ஜகதீசுவரனிடத்தில் மிகுந்த பக்தி உளதோ. அவள் அவரைப் புருஷனாக அடையவிரும்பினால், அது மிகவும் பொருந்தியதென்று ஆங்கிலம் கற்றவர்களான நமக்குத் தோன்றும். அழகினால் ஒருவர்மேலொருவர் ஈடுபட்டு இருவரும் காதல் மிகுதியால் மணஞ்செய்துகொண்டால் அது பொருத்தமானதே.

* * * * * * *

ஆனால் இந்திரியங்களின் வசப்பட்டு இப்படிச்செய்தல் நலமென்று நமக்குத் தோன்றவில்லை.

பாகவதத்திற் சொல்லியிருக்கிற "ராஸக்கிரீடை" விளையாட்டு மட்டுமன்று. எந்தக் காமன் கயிலாயமலையின்சிகரத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த பரமசிவனுடைய கோபாக்கினியால் சாம்பலாக எரிக்கப்பட்டானோ, அவனே கண்ணன் பிருந்தாவனத்தில் கோபிகைகளுடன்செய்த ராஸ்க்கிரீடையை ஆசிரயித்து, மறுபடியும் உயிர்பெறவேண்டுமென்று திரிந்துகொண்டிருந்தான். அநங்கன் இவ்வாறு நுழைந்தான்.

புராணகாரரின் வார்த்தை தீயதன்று; ஈசுவரனை அடைந்த முக்தஜீவர்களுக்கு எந்த இன்பமோ அந்த இன்பத்தைக் கோபிகைகளும் அடைந்தார்கள். அவர்கள் எந்த நினைவுடன் ஈசுவரனை அணுகினார்களோ, அந்த நினைவின்படியே அவர்களுக்குப் பயன் கிடைத்தது. ஆனால் சாமான்ய ஜனங்கள் அவ்வாறு நினைக்கவில்லை. பகவத்பக்தியென்பது பாதாளத்தில் அமிழ்ந்துவிட்டது.

* * * * * * *

பாகவதத்திற் சிறப்பித்துச்சொல்லப்பட்ட பக்திதத்துவமானது, ஜெயதேவ கோஸ்வாமியின்கையில் ஒருபெரிய மதனோற்சவமாகிவிட்டது. ஸ்ரீகிருஷ்ணசரித்திரமோ, தூய்மையிலும், குணத்திலும் உலகத்திலே ஒப்பற்றது. நம்மைப்போல் பொறுமையில்லாத அதமர்கள் ஸ்ரீகிருஷ்ணசரித்திரத்தை உரைத்து அதை உலகத்தாரும் கேட்டுப் புதிதாய் ஸ்ரீகிருஷ்ணகீதை செய்வதில் ஸாஹஸஞ் செய்தார்கள்.

---

## எட்டாவது அதிகாரம்.

### வ்ரஜகோபி — பாகவதம்.

*பிராமணகன்னியர்கள்.*

வஸ்திராபஹரண விருத்தாந்தத்தில் மறைவாக ஒரு தாத்பர்யம் இருக்கிறதென்று நாம் முன்பே தெரிவித்திருக்கிறோம்; அது சம்பந்தமாக வேறொரு கதையும் இருக்கிறது.

யத் கரோஷி யதஶ்நாஸி யஜ்ஜுஹோஷி ததாஸி யத் ।
யத்தபஸ்யஸி கௌந்தேய தத்குருஷ்வ மதர்ப்பணம் ॥

(ஹே! குந்தியின் புதல்வ! நீ எதைச் செய்கிறாயோ, எதை உண்ணுகிறாயோ, எதை ஹோமம்செய்கிறாயோ, எதைக்கொடுக்கிறாயோ, யாது தவம்செய்கிறாயோ, அதை எனக்கு அர்ப்பணம்செய்துவிடு) என்றுள்ள இந்த வாக்கியத்தை அநுசரித்து, எவர்களால் தங்களுடைய பொருள்களையெல்லாம் ஜகதீசுவரனுக்கு அர்ப்பணம் செய்யமுடியுமோ, அவர்களே ஈசுவரனை அடைய அதிகாரிகளாவார்கள். வஸ்திரஹரணகாலத்தில் கோபிகள் ஸ்ரீகிருஷ்ணனிடம்

எல்லாவற்றையும் அர்ப்பணஞ்செய்யச் சித்தமாயிருந்தார்கள்; அதனால் அவர்கள் ஸ்ரீகிருஷ்ணனையடைய அதிகாரிகளானார்கள். பாகவதகாரர் வேறொரு உபந்யாஸத்தையும் எழுதி, இந்த உண்மையைப் பரிஷ்காரப்படுத்தியிருக்கிறார். அந்த உபந்யாஸம் இதுவே.—

ஒருநாள் மாடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும்போது, இடையர்கள் (கோபாலர்கள்) மிகவும் பசியடைந்து ஸ்ரீகிருஷ்ணனிடம் தங்களுக்கு உணவளிக்கும்படி பிரார்த்தித்தார்கள். சமீபத்திற் சில பிராமணர்கள் வேள்வி நடத்திக்கொண்டிருந்தார்கள். அவ்விடத்திற்குச் சென்று தன்னுடைய திருநாமத்தைச்சொல்லி அன்னத்தை யாசிக்கும்படி ஸ்ரீகிருஷ்ணன் அவர்களிடம் சொன்னார். அவ்விதமே கோபாலர்களும் வேள்வித்தலம் சென்று ஸ்ரீ கிருஷ்ணன்பெயரை உரைத்து உணவைக் கேட்டார்கள். அந்தணர்கள் அவர்களுக்கு ஒன்றும் கொடுக்காமல் திரஸ்கரித்தார்கள். கோபாலர்கள் ஸ்ரீகிருஷ்ணனிடம் திரும்பிவந்து, எல்லாச்சங்கதிகளையும் உரைத்தார்கள். ஸ்ரீகிருஷ்ணன் அவர்களிடம் "மறுபடியும் நீங்கள் வேள்வித்தலம் சென்று அந்தப்புரத்திலிருக்கிற அந்தணருடைய மனைவிமார்களிடம் என்பெயரைச் சொல்லி உணவைக் கேட்பீர்களாக" என்று கூறினார். கோபாலர்கள் அவ்விதமே செய்தனர். பிராமணப்பெண்கள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய திருநாமத்தைக் கேட்டுக் கோபாலர்களுக்கு நிறைய அன்னத்தையும் வியஞ்சனங்களையும் கொடுத்தார்கள்; ஸ்ரீகிருஷ்ணன் சமீபத்தில் இருக்கிறார் என்பதையும் தெரிந்துகொண்டு அவரைத் தரிசனம்செய்வதற்காக அவரிடம் வந்தார்கள். அவர்கள் ஸ்ரீகிருஷ்ணனை ஈசுவரனென்று தெரிந்துகொண்டார்கள். ஸ்ரீகிருஷ்ணனை அவர்கள் தரிசனம் செய்தபிறகு அவர்களை வீடுகளுக்குத் திரும்பிச்செல்லும்படி அவர் உத்திரவிட்டார். பிராமணப்பெண்கள் "நாங்கள் உம்மிடத்துப் பக்தியுடையவர்கள்; நாங்களோ எங்களுடைய தாய்தந்தையர்கள், அண்ணன்தம்பிகள், குழந்தைகள் யாவரையும் விட்டுவிட்டு வந்திருக்கிறோம்; அவர்கள் மறுபடியும் எங்களைச் சேர்த்துக்கொள்ளார்கள். நாங்கள் உம்முடைய பாதங்களில் விழுந்துவிட்டோம். எங்களுக்கு வேறு கதியை நீரே அளிக்க

வேண்டும்" என்று பிரார்த்தித்தும் ஸ்ரீகிருஷ்ணன் அவர்களைக் கிரகித்துக்கொள்ளவில்லை. "அங்கஸங்கமே (தழுவிக்கொள்ளுதலே) அநுராகத்துக்குக்காரணமாகாது; நீங்கள் நம்மிடம் சித்தத்தை நிலைநிறுத்தினுல் நம்மைச் சீக்கிரம் அடைவீர்கள்; நம்முடைய சிரவணம், தரிசனம், தியானம், கீர்த்தனம் இவைகளாலேயே நம்மை அடைவீர்கள்; இப்பொழுது அடையமுடியாது; ஆதலால் நீங்கள் உங்கள் வீடுபோய்ச்சேருங்கள்" என்று கண்ணன் கூற அவர்களும் திரும்பிப்போனுர்கள்.

இப்பொழுது பிராமணப்பெண்கள் ஸ்ரீகிருஷ்ணனை அடைவதற்குத் தகுந்தவர்களானுர்களா? தகப்பன்முதலிய சுற்றத்தாரை விட்டுவிட்டுக் கேவலம் வியபிசாரிகளைப்போல் சோரநாயகனைச் சேர்வதற்காக அவர்கள் வந்தார்கள். பகவானிடத்தில் எல்லாவற்றையும் அவர்கள் அர்ப்பணம்செய்யவில்லை. ஸித்திபெற அவர்களுக்குத் தகுதி ஏற்படவில்லை. ஆகையால் ஸித்திபெறுவதற்காக அதற்குப் படிக்கட்டுக்களான, சிரவணம் மநநம் நிதித்தியாஸநம் முதலியவைகளை அநுஷ்டிக்கும்படி அவர்களுக்கு உபதேசஞ்செய்து ஸ்ரீகிருஷ்ணன் அவர்களை அவ்விடத்தைவிட்டுப் போகும்படி உத்திரவிட்டார். பவித்திரமான குலத்தில் பிறந்தும், பிராமணப்பெண்களுக்குத் தகுதி ஏற்படவில்லை. கோபிகளுக்கோ அவர்களுடைய தீவிரமான உறுதியால் தகுதி உண்டாயிற்று. முன்னமே பாகவதகாரர் கோபகன்னிகைகளிடமுள்ள சிரவணம் மநநம் நிதித்தியாஸநம் முதலானவற்றை விஸ்தாரமாய்த் தெரிவித்திருக்கிறுர்.

இப்பொழுது நாம், பாகவதத்தில் முக்கியமான ராஸபஞ்சாத்தியாயத்தில் உள்ளதை விவரித்தோம். ஆனுல் இந்த "ராஸலீலை"யின் தத்துவத்தை "வஸ்திரஹரணம்" என்கிற இடத்திலே விஸ்தாரமாகத் தெரிவித்திருக்கிறேும். ஆதலால் இப்பொழுது சுருக்கமாய் உரைத்து மேலே செல்வோம்.

## ஒன்பதாவது அதிகாரம்.

### வ்ராஜகோபி – பாகவதம்.

*ராஸலீலை.*

பாகவதம் தசமஸ்கந்தத்தில் 29-30-31-32-33 இவ்வைந்து அத்தியாயங்களும் "ராஸபஞ்சாத்தியாயம்" என்று கூறப்படும். சரத்காலத்துப்பூர்ணிமையன்று இரவில் ஸ்ரீகிருஷ்ணன் மதுரமான வேணுகானத்தைச்செய்தார். விஷ்ணுபுராணத்தில் ஸ்ரீகிருஷ்ணன் மிகவும் இனிமையாகப் புல்லாங்குழல் வாசித்தார் என்று சொல்லியிருப்பது இதை வாசிப்போர்க்கு ஞாபகத்தில் இருக்கலாம். இனிமை என்பதற்கு மிகவும் உயர்ந்தது என்று பொருள். இதற்கு 'டீகை' (டீகா) எழுதின விசுவநாத சக்கிரவர்த்தி என்பவர் இந்த வார்த்தையிலிருந்து ஸ்ரீகிருஷ்ணமந்திரத்தின் பீஜாக்ஷரமாகிய 'க்லீம்' (க்லீம்) என்ற எழுத்து உண்டாயிருக்கிறதென்று சொல்லுகிறார். இதை அவர் 'காமகீதை' என்றும் சொல்லுகிறார். டீகாகாரர்களின் மகிமையோ அளவிடக்கூடாதது. புராணகாரர்கள் இந்தக்கீதையையே 'அநங்கவர்த்தனம்' (அநங்கவர்த்தனம்) என்று உரைக்கிறார்கள்.

புல்லாங்குழலின் தொனியைக்கேட்டுக் கோபிகள் ஸ்ரீகிருஷ்ணனைக் காண ஓடிவந்தார்கள். காளிதாஸனால் பட்டினத்து மடந்தையர்களுக்கு எவ்விதம் பரபரப்பு ஏற்பட்டதென்று சொல்லப்பட்டதோ, அவ்விதமே கோபிகளுக்கும் பரபரப்பு உண்டானதென்று புராணகாரர் எழுதியிருக்கிறார். எவரைப்பார்த்து எவர் எழுதினார் என்பதை நிச்சயிக்கமுடியவில்லை.

கோபியர்கள் வந்தார்கள். ஸ்ரீகிருஷ்ணன் அவர்கள் எந்தக் கருத்துடன் வந்தார்களோ அதைத் தெரிந்துகொண்டு "உங்களுக்கு மங்களம் உண்டாகட்டும்; உங்களுக்குப் பிரியமான எந்தக் காரியத்தை நான் செய்யவேண்டும்? நீங்கள் எதற்காக வந்தீர்கள்?" என்று கேட்டார். இவ்விதம் உரைத்து ஸ்ரீகிருஷ்ணன் மறுபடியும் சொல்லுகிறார்; "இவ்விரவு கோரமானது; பயங்கரமான துஷ்டமிருகங்கள் இங்கே இருக்கின்றன; இது பெண்டிர் இருக்கத்

தருந்த இடமில்லை; ஆதலால் நீங்கள் கோகுலத்துக்குத் திரும்பிச் செல்லுங்கள்; உங்களுடைய தாய் தந்தையரும், குழந்தைகளும், சகோதரர்களும் உங்களைக் காணமல் தேடுவார்கள்; பந்துக்களுக்கு அச்சத்தை விளைக்காதீர்கள்; பூர்ணிமைச்சந்திரனல் அலங்கரிக்கப்பெற்றதும் யமுனையிலிருந்து பரவுகிற காற்றினல் வீசப்பட்டதும் தளிர்களும் மலர்களும் நிறைந்த விருக்ஷங்களால் அலங்கரிக்கப்பட்டதுமான கானகத்தைப் பார்த்தீர்களா? ஹே! ஸ்திரீகளே! நீங்கள் சீக்கிரம் திரும்பிப்போய் உங்களுடைய கணவர்களுக்குச் சேவைசெய்யுங்கள்; உங்கள் குழந்தைகள் அழுகின்றன; அவைகளுக்குப் பால் ஊட்டுங்கள்; அல்லது நம்மிடம் நட்பு வைத்து நட்பின்வசப்பட்டு இங்கேயே இருங்கள்; எல்லாப்பிராணிகளுக்கும் நம்மிடம் இவ்விதமே பிரீதி இருக்கிறது; ஆனல் ஹே! கல்யாணிகளே! கணவர்களிடம் கபடமில்லாமற் சேவைசெய்தலும், பந்துக்களையும் குழந்தைகளையும் காப்பாற்றுதலுமே மடந்தையர்களின் முக்கியமான தர்மம். கணவன் கெட்டநடத்தையுள்ளவனயினும், துர்ப்பாக்கியனயினும், முட்டாளாயினும், வியாதியுள்ளவனயினும், பிறருடைய அடிமையாயினும், பாபத்திற்குப் பயந்து இம்மையிலும் மறுமையிலும் மங்களத்தை விரும்புகிற ஸ்திரீகளால், கணவன் தியாகஞ்செய்யத்தகுந்தவனல்லன்; நற்குலத்துமடந்தையர்களுக்கு உபபதியை அடைதல், நல்லதன்று; நல்லகதியைத் தரக்கூடியதன்று; புகழைக் கெடுக்கக்கூடியது; உபயோகமற்றது; எவ்விதத்திலும் பழிக்கத்தக்கது. சிரவணம், தர்சனம், தியானம், கீர்த்தனம் இவைகளால் என்னைப்பாவித்தல் கூடும். ஆனல் சமீபத்திலிருந்து என்னைப்பாவித்தல் தகாது; ஆதலால் நீங்கள் திரும்பிக் கிருகம் செல்லுங்கள்" என்று உத்தரவிட்டார். ஸ்ரீகிருஷ்ணனுடைய முகத்தில் இந்தவார்த்தையை நுழையவிட்டுப் புராணகாரர் பாதிவிரத்தியதர்மத்தைக் கவனிக்காமல் இந்திரியங்களுக்கு வசப்படுதலை வர்ணிப்பதில் ஆசைகொள்ளவில்லை. அவருடைய அபிப்பிராயத்தை முன்பே குறிப்பிட்டிருக்கிறோம். ஸ்ரீகிருஷ்ணன் பிராமணப்பெண்களிடமும் இவ்விதமே உரைத்திருக்கிறார். அவர் வார்த்தையைக் கேட்டு அவர்கள் திரும்பிச்சென்றார்கள். ஆனல் கோபிகள் திரும்பிச்செல்லவில்லை. அவர்கள் அழத்தொடங்கினர்கள் "நீர் இவ்விதம்

சொல்லக்கூடாது. உம்முடைய பாதத்தில் நாங்கள் எல்லாவற்றை யும் தியாகம் செய்துவிட்டோம். ஆதிபுருஷனை பகவானை, மோக்ஷமடையவிரும்புவோர் எவ்விதம் விட்டுவிடமாட்டார்களோ, அவ்விதமே நாங்களும் உம்மை விடமாட்டோம்; நீர் கட்டாயப் படுத்தினாலும் உம்மை விடமாட்டோம். நீரே தர்மம் அறிந்தவர்; பதி குழந்தைகள் முதலியவர்களை அநுஸரித்தலே மடந்தையர்க ளுக்குத் தர்மம் என்று நீங்கள் எங்களுக்கு உபதேசித்தீர்கள். அது பொருந்தாது. ஏனெனில், நீரே ஈசுவரர்: தேகம் படைத்தவர்க்குப் பிரியமான உறநிச்சுற்றமும் நீங்களே. நீங்களே ஆத்மா. ஹே! ஆத்மாவே! எவர்கள் க்ஷேமமடைந்தவர்களோ அவர்களுக்கு நீங்கள் எப்பொழுதும் பிரியமாயிருப்பீர்கள்; அவர்கள் உங்களிடமே, பிரீதிவைத்துச் சுகமாய் இருக்கிறார்கள். துன்பத்தைவிளைக்கக்கூடிய பதி புத்திரர் முதலியவர்களால் என்ன கிடைக்கும்? என்று கோபிகள் வருத்தத்துடன் சொன்னார்கள். இதில் புராணகாரர் கருத்து 'கோபிகள் ஸ்ரீகிருஷ்ணனை ஈசுவர னென்று கருதிப் பஜனைசெய்தார்கள்; ஈசுவரனை அடைவதற்காக வே கணவன்முதலானவர்களை விட்டுவிட்டார்கள்; ஸ்ரீகிருஷ்ண னது அற்புதமான அழகில் ஈடுபட்டு மோகமடைந்து அவரையே அநுசரித்துச் சென்றார்கள்' என்பதாம். புராணகாரர் "ஸ்ரீகிருஷ் ணன் ஆத்மாராமர்; தன்னைத்தவிர அவருக்கு விருப்பும் வெறுப் பும் இல்லை. அவ்வாறிருந்தும் கோபிகளின்வார்த்தைகளால் களிப் படைந்து, அவர்களுடன் விளையாடினார்; அவர்களுடன் கானம் (மாநம்) செய்தார். யமுனை யாற்றின் மணலில் சுற்றிவரத்தொடங் கினார்' என்கிறார்.

சிற்சிலர் "பாகவதத்தில் சொல்லப்பட்ட ராஸலீலையில் இந்தி ரிய சம்பந்தமே சற்றுமில்லை" என்கிறார்கள். அந்தக்கதை சரியா யிருக்குமானால் நாம் ராஸலீலைக்குக் கூறியுள்ள பொருள் எவ் விதத்திலும் பொருந்ாது. ஆனால் அது பொருத்தமானதன் றென்று காட்டுவதற்குப் பாகவதத்திலிருந்தே ஒரு சுலோகத்தை எடுத்துரைப்போம்.

பாஹுப்ரஸாரபரிரம்பகராலகோரு
நீவீஸ்தநாலபந நர்மநகாக்ரபாதை: ।

𑌕𑍍𑌷𑍍𑌵𑍇𑌲𑍍𑌯𑌾𑌵𑌲𑍋𑌕𑌹𑌸𑌿𑌤𑍈𑌰𑍍𑌵𑍍𑌰𑌜𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑍀𑌣𑌾𑌮𑍍
𑌉𑌤𑍍𑌤𑌂𑌭𑌯𑌨𑍍 𑌰𑌤𑌿𑌪𑌤𑌿𑌂 𑌰𑌮𑌯𑌾𑌂𑌚𑌕𑌾𑌰 ॥

(இ-ள்) கைகளைநீட்டித் தழுவிக்கொண்டும், இடுப்பு மார்பு முதலிய உறுப்புக்களில் நகக்குறிகளை வைத்தும், விளையாட்டுப் பார்வையாலும் புன்சிறிப்பாலும் அழகிய கோபிகைகளை உற்சாகப்படுத்திக்கொண்டும், மன்மதனைத் தன்வசப்படுத்தினன்.

[மற்றும் சிலசில இடங்களிலிருந்து இவ்விதமான பலபல பிரமாணங்களை எடுத்தெழுதலாம். ஆனல் அவைகளை மொழி பெயர்ப்பது தகாத காரியமாகும்.]

அதன்பிறகு ஸ்ரீகிருஷ்ணனுடைய சேர்க்கையை அடைந்து கோபிகள் களிப்படைந்தார்கள். அவர்கள் சந்தோஷத்தின் மிகுதியால் கொழுப்படைந்தபடியால், ஸ்ரீகிருஷ்ணன் மறைந்துவிட்டார். கோபிமார்கள் ஸ்ரீகிருஷ்ணனைத் தேடுவதைப் பாகவதம், வருணித்திருக்கிறது. அது பெரும்பாலும் விஷ்ணுபுராணத்தையே அநுசரித்திருக்கிறது. ஆனல் பாகவதகாரர் மிகவும் அதிகமாகத் தொகுத்திருக்கிருர். ஆதலால் இந்த அத்தியாயவிஷயமாய் அதிகமாய்ப் பேசுவதில் பயன் ஒன்றுமில்லை. 31-வது அத்தியாயத்தில் கோபிகள் இனியபாடல்களைப் பாடிக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணனைத் தேடுகிருர்கள். இதில் பக்திரஸமும் சிருங்காரரஸமும் கலந்திருக்கின்றன. குறிப்பிடத்தகுந்த கதை ஒன்றுமில்லை. 32-வது அத்தியாயத்தில் ஸ்ரீகிருஷ்ணன் மறுபடியும் அவர்கள்முன் தோன்றுகிருர். இவ்விடம் கோபிகள் இந்திரியங்களுக்கு வசப்பட்டவர்களாய்ச் செயல்புரிந்தார்கள் என்று காட்டுவதற்காக ஒரு சுலோகத்தை எடுத்து எழுதுவோம். அது,

𑌕𑌾𑌚𑌿𑌦𑌂𑌜𑌲𑌿𑌨𑌾𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑍍 𑌤𑌨𑍍𑌵𑍀 𑌤𑌾𑌮𑍍𑌬𑍂𑌲𑌚𑌰𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌏𑌕𑌾 𑌤𑌦𑌂𑌘𑍍𑌰𑌿𑌕𑌮𑌲𑌂 𑌸𑌂𑌤𑌪𑍍𑌤𑌾 𑌸𑍍𑌤𑌨𑌯𑍋𑌰𑌧𑌾𑌤𑍍 ॥

(இ-ள்.) 'ஒரு கோபியானவள் தாம்பூலம் சுவைத்த (அவருடைய) வாயைக் கைவிரலால் தடவினள்; வேறு ஒரு கோபி வேட்கையடைந்தவளாகி அவர் திருவடித்தாமரையைத் தன்னுடைய மார்பில் வைத்து ஒற்றிக்கொண்டாள்'— என்பதாம்.

இந்த அத்தியாயத்தின் இறுதியில் ஸ்ரீகிருஷ்ணனுக்கும் கோபிகளுக்கும் ஆத்மசம்பந்தமான சில சம்பாஷணைகள் நடந்தன. அந்தச் சுலோகங்களை எடுத்தெழுதுவது இன்றியமையாததென்று நாம் கருதவில்லை. அதன்பிறகு 33-ஆவது அத்தியாயத்தில் "ராஸக்கிரீடை"யின் வர்ணனை உளது. "ராஸக்கிரீடை" என்பது விஷ்ணு புராணத்திற் சொல்லியிருப்பதைப்போல் பாட்டும் ஆட்டமுமே. அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணனைக் கோபிகள் கணவனாகப் பாவித்து அடைந்தார்கள்; ஆதலால் இந்திரியங்களின் சம்பந்தமும்,

𑌕𑌸𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌾𑌟𑍍𑌯𑌵𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌤𑍍𑌵𑌿𑌷𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑌮𑍍 ।
𑌗𑌣𑍍𑌡𑌂 𑌗𑌣𑍍𑌡𑍇 𑌸𑌨𑍍𑌦𑌧𑌤𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌦𑌾𑌤𑍍𑌤𑌾𑌮𑍍𑌬𑍂𑌲𑌚𑌰𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ॥

𑌨𑍃𑌤𑍍𑌯𑌤𑍀 𑌗𑌾𑌯𑌤𑍀 𑌕𑌾𑌚𑌿𑌤𑍍𑌕𑍂𑌜𑌨𑍍𑌨𑍂𑌪𑍁𑌰𑌮𑍇𑌖𑌲𑌾 ।
𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌸𑍍𑌥𑌾𑌚𑍍𑌯𑍁𑌤𑌹𑌸𑍍𑌤𑌾𑌬𑍍𑌜𑌂 𑌶𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌧𑌾𑌤𑍍𑌸𑍍𑌤𑌨𑌯𑍋𑌃 𑌶𑌿𑌵𑌮𑍍 ॥

* * * * * *

𑌤𑌦𑌙𑍍𑌗𑌸𑌙𑍍𑌗𑌪𑍍𑌰𑌮𑍁𑌦𑌾𑌕𑍁𑌲𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌃
𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌦𑍁𑌕𑍂𑌲𑌂 𑌕𑍁𑌚𑌪𑌟𑍍𑌟𑌿𑌕𑌾𑌂 𑌵𑌾 ॥

(12–13 சுலோகங்கள்.)

(இ-ள்.) 'ஒரு கோபியானவள் நாட்டியத்தினால் அவிழ்ந்து நானாபக்கங்களிலும் தொங்கிக்கொண்டிருக்கிற கூந்தலால் அலங்கரிக்கப்பட்ட தன் கன்னத்தை ஸ்ரீகிருஷ்ணனுடைய கன்னத்துடன் சேர்த்துத் தாம்பூலம் கொடுத்தாள். ஒரு கோபி பாடிக்கொண்டும் காற்சிலம்பும் மேகலையும் ஒலிக்க ஆடிக்கொண்டும், சற்றுக் களைப்படைந்தவளாகி அடுத்திருக்கிற ஸ்ரீகிருஷ்ணனுடைய கைகளைப் பிடித்துத் தன்மார்பில் வைத்துக்கொண்டாள். அவரைத் தழுவிக் கொள்ளும் ஆசையால் கூந்தல் அரையாடை மேலாடை........' என்றவாறு சிறிது காணப்படும்.

இவ்விதமான கதையைத்தவிர வேறொன்றும் இல்லை. ஆனால் புராணகாரர் ஸ்ரீகிருஷ்ணனை ஜிதேந்திரியனென்று வருணித்திருக்கிறார் என்பதை முன்பே சொல்லியிருக்கிறோம். பிரமாணத்தாலும் நிரூபித்திருக்கிறோம்.

## பத்தாவது அதிகாரம்.

### ஸ்ரீ ராதை

பாகவதத்தில் ராஸபஞ்சாத்தியாயத்தின் நடுவில் ராதையென்று பெயருள்ள ஒருத்தியைப்பற்றிய செய்தியொன்றும் நாம் காணவில்லை. (வங்கநாட்டு) வைஷ்ணவாசாரியர்களின் எலும்பிலும் ஊனிலும் ராதையைப்பற்றிய கதையே நிறைந்துள்ளது. அவர்களுக்கு ராதைதான் பரதேவதை. அவர்கள் 'டீகை' எழுதும்போது ராதையைப்பற்றி அடிக்கடி கூறியிருக்கிறார்கள். ஆனால் மூலக்கிரந்தத்தில் ராதையின் பெயர் எங்குமே காணப்படவில்லை. அநுராக மிகுதியால் ஸ்ரீகிருஷ்ணனைக் கோபிகள் தேடியும் அகப்படவில்லை. எங்கேயோ மறைந்துவிட்டார். அவருடைய அடிச்சுவடுகளைப் பார்த்து, 'ஒருவருமில்லாத இடத்தில் ஏகாந்தத்தில் யாரோ ஒரு மடந்தையை ஸ்ரீகிருஷ்ணன் அழைத்துக்கொண்டு காட்டில் நுழைந்துவிட்டார்' என்பது பொறாமையால் கோபிகளுக்கு உண்டான பிரமையே. ஸ்ரீகிருஷ்ணன் மறைந்துவிட்டார் என்பதுமட்டும் காணப்படுகிறது; யாரையோ கூட அழைத்துக்கொண்டு சென்றார் என்று ஒருவார்த்தையையும் காணோம்; ராதையென்ற மடந்தையின் பெயரும் காணப்படவில்லை.

ராஸபஞ்சாத்தியாயத்திலாவது அல்லது வேறு இடத்திலாவது ராதையின்பெயர் காணப்படவில்லை. விஷ்ணுபுராணத்திலாவது, ஹரிவம்சத்திலாவது, மகாபாரதத்திலாவது ராதையின் பிரஸ்தாவம் இல்லை; ஆனால் "ராதை" என்பவள் எங்கிருந்து வந்தாள்? ஸ்ரீகிருஷ்ண உபாஸனையின் முதலாவது அங்கம் ராதையே. வங்காளத்தில் ராதையின்றி ஸ்ரீகிருஷ்ணன்பெயர் இல்லை; ராதையின்றி ஸ்ரீகிருஷ்ணன்கோவில் இல்லை; மூர்த்தி இல்லை. ஸ்ரீகிருஷ்ண உபாஸகர்களில் அநேகர், ஸ்ரீகிருஷ்ணனைக்காட்டிலும் ராதைக்கு மேன்மைகூறுகிறார்கள். அவள் எங்கிருந்து தோன்றினாள்?

பிரும்மவைவர்த்தபுராணத்திலேதான் 'ராதை'யை முதன் முதலாகக் காண்கிறோம். வில்சன் (Wilson) என்பவர், "புராணங்களுக்குள் இது மிகவும் தாழ்ந்தது" என்று கூறுகிறார். அதன் வசனநடையும் இக்காலத்துப் பட்டாசாரிகளின் நடையை ஒத்தது.

இங்கே "ஷஷ்டிமனஸா"வின் கதையிருக்கிறது. ஆதி பிரும்ம வைவர்த்தபுராணம் முன்பே மறைந்துவிட்டது. அதற்குப் பிரமாணமும் காட்டியிருக்கிறோம். நவீனமான பிரும்மவைவர்த்த புராணத்தில் புதிதாக ஒரு தெய்வீக உண்மை ஸ்தாபிக்கப்பெற்றிருக்கிறது. இதற்குமுன் ஸ்ரீகிருஷ்ணன் விஷ்ணுவின் அவதாரமென்பது பிரஸித்தம். "விஷ்ணுவின் அவதாரமென்பதைத் தூரத் தள்ளிவிடுங்கள். விஷ்ணுவே ஸ்ரீகிருஷ்ணனைச் சிருஷ்டிசெய்தார்; விஷ்ணு வைகுந்தத்தில் இருக்கிறார்; ஸ்ரீகிருஷ்ணன் கோலோகத்தில் ராஸமண்டலத்தில் விளங்குகிறார்; வைகுந்தமென்பது கோலோகத்தைக் காட்டிலும் எவ்வளவோ தாழ்ந்தது." என்று "பிரும்ம வைவர்த்த"புராணம் கூறுகிறது. அங்கே கோக்களும் கோபர்களும் கோபிமார்களும் வசிக்கிறார்கள்; அவர்கள் தேவர்களையும் தேவஸ்த்ரீகளையும்காட்டிலும் மேலானவர்கள். அந்தக் கோலோகத்துக்கு ஸ்ரீகிருஷ்ணனுடைய விலாஸினியான ராதையே தலைவி. ராதைக்கு முன்பேயுள்ள ராஸமண்டலத்திலிருந்து ராதையைச் சிருஷ்டிசெய்தார். 'ரா' 'யா' என்னும் யாதங்களிலிருந்து "ராதை" என்ற பெயர் பிறந்திருக்கிறது. கோப கோபிகளுக்கு வாஸஸ்தானமாயும், ராதையால் ஆளப்படுவதாயும் இருக்கிற கோலோகமானது, பிருந்தாவனத்தினுடைய ஒரு மனோஹரமான படியெடுப்பே யாகும்.

பிருந்தாவனத்தில் ஸ்ரீகிருஷ்ணயாத்திரையில் சந்திராவளியென்கிற கோபி ராதைக்குப் போட்டியாகத் தோன்றியதுபோல் கோலோகத்தில் ராதைக்குப் போட்டியாக 'விரஜை' யென்ற கோபி இருக்கிறாள். மானபஞ்சனயாத்திரையில் கிருஷ்ணனைச் சந்திராவளியின் லதாகுஞ்சத்தில் காண்பதுபோலக் கோலோகத்தில் அவரை விரஜையின் லதாகுஞ்சத்தில் காண்கிறோம். ஆதலால் பிருந்தாவனயாத்திரையில் ராதைக்குச் சந்திராவளியின்மீது பொறாமையும் கோபமும் உண்டானதுபோலக் கோலோகத்தில் விரஜையின்மீது ராதைக்குக் கோபம் உதித்தது. விரஜையின்வீட்டில் கிருஷ்ணனைப் பிடிக்கவெண்ணி ராதை இரதத்தில் ஏறி அவ்வில்லம் சென்றாள். அவ்விடத்தில் விரஜையின் வாயில்காப்போனான ஸ்ரீதாமா இருந்தான். ராதைக்கு வாயிலைக் கடந்து உள்ளே செல்ல இயல

வில்லை. ராதையின்வரவைக் கண்டு, விரஜையானவள் அச்சமிகுதியால் உருகி நீராகி ஆற்றின் உருக்கொண்டாள். அதனால் ஸ்ரீ கிருஷ்ணன் துக்கத்தையடைந்து, விரஜையின் நதீரூபத்தை மாற்றி முன் உருவத்தையே அவளுக்கு அளித்தான். விரஜையானவள் கோலோகநாதனுடன் இடைவிடாமல் கூடி ஆநந்தமடையத்தொடங்கினாள். இதனால் ஒரு புதிய உண்மை விளக்கிக் காட்டப்பட்டது.

படிப்படியாக அவளுக்கு ஏழுகுழந்தைகள் பிறந்தன. ஆனால் குழந்தைகள் ஆநந்தத்தை அனுபவிப்பதற்குத் தடையாயிருக்கின்றனவென்று பெற்ற தாயே அவர்களை ஏழு சமுத்திரங்களாக வேண்டுமென்று சாபம் கொடுத்தாள். அதனால் ஏழு சமுத்திரங்கள் உண்டாயின. கிருஷ்ணன் விரஜையின் வீட்டுக்குச் சென்று அவளுடன் கூடினதால், அவரை மிகவும் பயமுறுத்தி அவரைப் பூலோகத்தில் சென்று வாசம் செய்யும்படி ராதை சபித்தாள். ஸ்ரீதாமா ராதையை வீட்டுக்குள் செல்லாமல் தடுத்தபடியால் அவனை அசுரனாக ஆகும்படி சபித்தாள். அவனும் ராதையைப் 'பூலோகத்துக்குச் சென்று அங்கே களங்கமுள்ளவளாக ஆகக்கடவாய்' என்று சபித்தான்.

பிறகு இவ்விருவரும் கிருஷ்ணனருகில்வந்து, அழுது கீழே விழுந்தார்கள். ஸ்ரீகிருஷ்ணன் ஸ்ரீதாமனை அசுரேசுவரனாகும்படிக்கும் போரில் அவனை யாரும் வெல்லமுடியாதென்றும் சங்கரரின் சூலத்தால் தொடப்பெற்று அவன் சாபம் நீங்குமென்றும் கூறினார். பிறகு ராதையைச் சமாதானப்படுத்தி, "நீ வா, நாமிருவரும் செல்வோம்" என்றுசொல்லிப் பூமியின் பாரத்தைக் குறைப்பதற்காகப் பூவுலகில் அவர் அவதாரம்செய்தார்.

இவ்வாறு அநேககதைகளை எடுத்தெழுதலாம். ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் ஸ்ரீதேவியைப்பற்றிச் சொல்லப்பட்டபடியே பிரும்மவைவர்த்தபுராணத்திலும் ராதையைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறதென்று இதைப் படிப்போர் அறியலாகும். ராதையே ஸ்ரீதேவி. ராதை ஈசுவரனுடைய சக்தி. இருவர்க்கும் விதியால் ஏற்பட்ட நட்பே வல்லமையுள்ளவனுடைய சக்திவிகாஸம். சக்தியின் விகாஸமே இருவர் விளையாட்டும்.

இது ஸாங்கியர்களின் பிரகிருதிபுருஷவாதமும் அன்று. ...... பிரகிருதியும் புருஷனும் வெவ்வேறானவை. பிருகிருதியுடன் புருஷ ஸம்பந்தத்தை, ஸ்படிகபாத்திரத்தில் சம்பந்தப்பட்டுள்ள செம்பரத்தம்பூவின் ஒளிபோல் விவகரித்திருக்கிறார்கள். ஸ்படிகக்கலமும் செம்பரத்தம்பூவும் வெவ்வேறானவையாயினும் செம்பரத்தம்பூவின் ஒளி ஸ்படிகபாத்திரத்தில் விழுந்து இரண்டும் ஒன்றுபட்டுத் தோன்றுகின்றன. ஆனால் சக்திக்கும் ஆத்மாவுக்கும் சம்பந்தம் எவ்விதமெனில், ஆத்மாவே சக்திக்கு ஆதாரம்; ஆதாரத்தைவிட்டு ஆதேயத்தை எவ்வாறு வேறுபடுத்தமுடியாதோ, அவ்வாறே ஆத்மாவையும் சக்தியையும் பிரிக்க இயலாது.

.......................................................................

𑌨𑌿𑌤𑍍𑌯𑍈𑌵 𑌸𑌾 𑌜𑌗𑌨𑍍𑌮𑌾𑌤𑌾 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌶𑍍𑌰𑍀𑌰𑌨𑌪𑌾𑌯𑌿𑌨𑍀 ।
𑌯𑌥𑌾 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑌸𑍍𑌤𑌥𑍈𑌵𑍇𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑍋𑌤𑍍𑌤𑌮 ॥

விஷ்ணுபுராணம். அம்சம் 1. அத்தியாயம் 8.

(இ-ள்.) 'அந்த ஜகன்மாதாவாகிய ஸ்ரீதேவி எப்பொழுதுமுள்ளவள். அவள் விஷ்ணுவைவிட்டுப் பிரியாதவள்; விஷ்ணுவைப் போல லக்ஷ்மீதேவியும் எங்கும் இருப்பவளே' என்பதாம்.

.......................................................................

வேதாந்தத்தில் மாயாவாதம்போல் ஸாங்கியமதத்தில் பிரகிருதிவாதமும், பிரகிருதியிலிருந்து சக்திவாதமும். விஷ்ணுபுராணத்தில் சக்திவாதமும் அத்வைதவாதமும் கலந்திருக்கின்றன. இதை நினைத்துத்தான் பிரும்மவைவர்த்தபுராணகாரர், ஸ்ரீகிருஷ்ணன் ராதையிடம் "பாலும் அதன் நிறமான வெண்மையும்போல நானும் நீயும்; நீ என்னுடன் இல்லாவிட்டால் நான் கிருஷ்ணன், நீ என்னுடன் இருந்தால் நான் ஸ்ரீகிருஷ்ணன்" என உரைத்தார் என்று கூறியிருக்கிறார்.

இந்தக்கதை புதியதாயிருந்தாலும், பிரும்மவைவர்த்த புராணத்திலிருப்பதால் வங்கவைஷ்ணவ தர்மத்துக்கு முக்கிய ஆதாரமாயிருக்கிறது. ஜயதேவர் முதலிய வைணவகவிகள் இதைக் கைக்கொண்டார்கள். உற்சவங்களிலும், மற்றும் விசேஷகாலங்களிலும், வங்காளிகளுக்குப் பிரும்மவைவர்த்தபுராணமே முக்கியமான கடைப்பிடியாக விளங்குகிறது.

பிரும்மவைவர்த்தபுராணத்தின் மூலகதையை அவர்கள் அங்கீகரிக்கவில்லை. அதில் ராதை, ராயாணனுடைய மனைவி என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பிரும்மவைவர்த்தபுராணத்திலோ இராதையைக் கிருஷ்ணனால் சாஸ்திரப்படி விவாகம் செய்துகொள்ளப்பெற்ற மனைவியென்று கூறப்பட்டிருக்கிறது.

விவாகச்செய்தியைவிஸ்தாரமாய்க் கூறாமல் "கீதகோவிந்த"த்தின் முதற்சுலோகத்தை இதைட்படிப்போர்க்குத் தெரிவிக்கிறோம்.

𑌮𑍇𑌘𑍈𑌰𑍍𑌮𑍇𑌦𑍁𑌰𑌮𑌮𑍍𑌬𑌰𑌂 𑌵𑌨𑌭𑍁𑌵𑌃 𑌶𑍍𑌯𑌾𑌮𑌾𑌸𑍍𑌤𑌮𑌾𑌲𑌦𑍍𑌰𑍁𑌮𑍈𑌃
𑌨𑌕𑍍𑌤𑌂 𑌭𑍀𑌰𑍁𑌰𑌯𑌂 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌤𑌦𑌿𑌮𑌂 𑌰𑌾𑌧𑍇 𑌗𑍃𑌹𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑌯 ।
𑌇𑌤𑍍𑌥𑌂 𑌨𑌨𑍍𑌦𑌨𑌿𑌦𑍇𑌶𑌤𑌶𑍍𑌚𑌲𑌿𑌤𑌯𑍋𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌧𑍍𑌵𑌕𑍁𑌞𑍍𑌜𑌦𑍍𑌰𑍁𑌮𑌂
𑌰𑌾𑌧𑌾𑌮𑌾𑌧𑌵𑌯𑍋𑌰𑍍𑌜𑌯𑌨𑍍𑌤𑌿 𑌯𑌮𑍁𑌨𑌾𑌕𑍂𑌲𑍇 𑌰𑌹𑌃𑌕𑍇𑌲𑌯𑌃 ॥

(இ-ள்.) 'ஹே! ராதே! ஆகாயம் மேகங்களால் கறுத்திருக்கிறது; தமாலவிருக்ஷங்களால் வனம் இருளடர்ந்திருக்கிறது; இவனோ இராக்காலத்தில் அச்சம்மிருந்தவன்; ஆதலால், இவனை நீயே வீட்டுக்கு அழைத்துப்போவாயாக' என இவ்விதமாக நந்தனிட்ட ஆணையால் நடந்துபோய்க்கொண்டிருக்கிறவர்களான ராதை மாதவன் இருவரிடையிலும் யமுனையாற்றின்கரையில் புதர்களிலும் மரத்தடிகளிலும் இரகஸ்யமாகநடந்த விளையாட்டுக்கள் ஜயத்துடன் விளங்குக.

இந்தச் சுலோகத்தின் உட்கருத்தை டீகை எழுதினவரும், இதற்கு அநுவாதம் எழுதினவரும் தெளிவாகக் கூறவில்லை.

ராதையென்ற சப்தத்துக்கு வியுத்பத்தி உண்டு. 'ராத்.' என்கிற தாதுவுக்கு ஆராதித்தல் என்பது பொருள். எவள் கிருஷ்ணனைப் பூஜிக்கிறாளோ, அவளே ராதை. இவ்விதமான வியுத்பத்தி புதிய பிரும்மவைவர்த்தபுராணத்தில் எங்குமே காணப்படவில்லை. வியாகரணசாஸ்திரமறியாத சிலர் இவ்விதம் பொருள்கூறாமல், ராதையென்ற சப்தத்தின் வியுத்பத்தி ஸாமவேதத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லுகிறார்கள்.

ராதை என்கிற சொல்லுக்கு வேறொரு அர்த்தமும் உண்டு. விசாகாநக்ஷத்திரத்திற்கு ராதையென்று ஒரு பெயர் உண்டு. கார்த்திகைநக்ஷத்திரத்திலிருந்து விசாகம் 14-வது நக்ஷத்திரம். முற்காலத்திற் கார்த்திகையிலிருந்தே வருஷகெணனம் ஏற்பட்டிருந்தது. கார்த்திகையிலிருந்து கணக்கிட்டால் விசாகம் சரியாக மத்தியில் இருக்கும். இதனால் ராஸமண்டலத்தில் நடுவில் இருப்பவள் என்றும் பொருள் சொல்லலாகும். இதைப்பற்றிப் பிரும்மவைவர்த்தபுராணம் ஒன்றும் கூறாததால் நாம் ஒன்றையும் நிச்சயிக்கமுடியவில்லை.

---

## பதினோராவது அதிகாரம்.

### பிருந்தாவனலீலையின் முடிவு.

பிருந்தாவனலீலையின் சம்பந்தமாக இன்னும் சில கதைகள் பாகவதத்தில் இருக்கின்றன. அவை வருமாறு:—

(1) நந்தன் ஒருநாள் ஸ்நாநம்செய்வதற்காக யமுனையில் மூழ்கினான்; வருணன்வேலையாள் ஒருவன் வந்து நந்தனைப் பிடித்து வருணனினிடம் கொண்டுபோனான்; ஸ்ரீகிருஷ்ணன் அங்கேபோய் நந்தனை அழைத்துவந்தார்; என்பது. [இதில், நந்தன் ஒருநாள் யமுனையில் மூழ்கிவிட்டான்; ஸ்ரீகிருஷ்ணன் நந்தனைத் தாங்கி வந்து கரைசேர்த்தார் என்பது ஒரு சாதாரணமான கதை.]

(2) ஒருநாள் ஒருபாம்பு நந்தனை விழுங்கிவிட்டது. ஸ்ரீகிருஷ்ணன் அந்தப் பாம்பின்வாயிலிருந்து நந்தனை விடுவித்து அதைக் கொன்றார். பாம்பாக வந்தவன் ஒரு வித்தியாதரன். ஸ்ரீகிருஷ்ணன் கரஸ்பர்சத்தால் அவன் முக்தியடைந்து தன்னுடைய ஸ்தானம் போய்ச்சேர்ந்தான் என்பது. [இதில், ஒருநாள் நந்தனைப் பாம்பின்வாயிலிருந்து ஸ்ரீகிருஷ்ணன் தப்புவித்தான் என்பது இயல்பானது.]

(3) சங்கசூடன் என்ற ஓர் அசுரன் வந்து சேரியிலுள்ள மடந்தையர்களைக் கவர்ந்துசென்றான். ஸ்ரீகிருஷ்ணனும் பலராமனும் அவனைப் பின்தொடர்ந்து ஓடிக் கோபஸ்திரீகளை விடுவித்தார்கள்; சங்கசூடனை வதம்செய்தார்கள் என்பது. [பிரும்மவைவர்த்தபுராணத்தில் சங்கசூடன்கதை வேறுவிதமாயிருக்கிறது.]

இந்த மூன்றுகதைகளும், விஷ்ணுபுராணத்திலாவது ஹரி வம்சத்திலாவது மகாபாரதத்திலாவது இல்லை. ஆனால் ஸ்ரீகிருஷ்ணனால் செய்யப்பட்ட அரிஷ்டாசுரவதமும் கேசியின் வதமும் ஹரிவம்சத்திலும் விஷ்ணுபுராணத்திலும் கூறப்பட்டிருக்கின்றன. மகாபாரதத்தில், சிசுபாலன் ஸ்ரீகிருஷ்ணனை நிந்தித்தசமயத்திலும் இவைகளின் பிரஸ்தாவம் வருகிறது. அரிஷ்டாசுரன் காளையுருக் கொண்டவன்; கேசியென்பான் குதிரைபோல் வடிவமெடுத்தவன்; சிசுபாலன் இவர்களைக் காளையென்றும், குதிரையென்றும் குறிப்பிட்டிருக்கிறான்.

முன்கூறப்பட்ட மூன்று விருத்தாந்தங்களும் பாகவதகாரரால் சொல்லப்பட்டனவென்று எடுத்து எழுதப்பட்டன. அரிஷ்டவதமும் கேசியின்வதமும் அவைபோல் எடுத்துக்கூறப்படவில்லை. கேசிவதவிருத்தாந்தம் அதர்வசம்ஹிதையில் காணப்படுகிறது. அவ்விடத்தில் கேசியின்பெயர் கிருஷ்ணகேசியென்று குறிக்கப்பட்டிருக்கிறது. கிருஷ்ணகேசியென்றால் கருத்தமயிர்கொண்டவன் என்று பொருள். ருக்வேதஸம்ஹிதையிலும் கேசிஸூக்தமென்று ஒரு ஸூக்தம் உளது. (10-வது மண்டலம் 136-வது ஸூக்தம்) இந்தக் கேசியென்பான் தேவனோ அல்லனோ என்று நிச்சயிக்கமுடியவில்லை. இந்த ஸூக்தத்தின் 5-வது, 6-வது ருக்குக்களிலிருந்து "கேசி" யென்பான் தேவதை என்றும் "ஹயன்" (குதிரை) ஓர் முனியென்றும் தெரிகிறது. இந்த இரண்டு ருக்குகளிலும் முனிவர்களைப்புகழ்ந்திருக்கிறது. ம்யூர் (Muir) என்பவர் அவ்வாறு சொல்லியிருக்கிறார். ஆனால் முதலாவது ருக்குக்கு வேறுவிதமாகப் பொருள்செய்யக்கூடும். முதலாவது ருக்குக்கு ரமேசரென்போர், "கேசியென்ற தேவனே, அக்கினியையும் ஜலத்தையும் பூலோகத்தையும் தேவலோகத்தையும் தாங்கிக்கொண்டிருக்கிறான்; கேசியே ஒளியின்மூலமாக எல்லாவஸ்துக்களையும் பார்க்கக் கூடியனவாகச் செய்திருக்கிறான். எது ஜோதியோ அதன்பெயரே கேசி" என்று பொருள்கூறுகிறார். [அவ்விதமே யிருக்கட்டும். ஜகத்தைவெளிப்படுத்தும் ஜோதியே கேசி; ஜகத்தை மறைக்கிற ஜோதியே கிருஷ்ணகேசி. ஸ்ரீகிருஷ்ணன் அவனைக் கொன்றார்; அதாவது ஜகத்தை மறைத்த இருளை விலக்கினர்.]

இங்கே பிருந்தாவனலீலை முடிகிறது. இதனால் நாம் என்ன முடிவை அடைந்தோம் என்று ஆலோசிக்கவேண்டியதுண்டு. ஐதிஹாஸிகமான யாதொரு கதையையும் நாம் காணவில்லையென்று சொல்லல் பொருந்தும். இந்தப் பௌராணிக கதைகளெல்லாம் உண்மையல்லாத விருத்தாந்தங்கள் நிரம்பியவை. இவைகளுக்குள் ஐதிஹாஸிக உண்மையைக் காண்பது அரிது. ஸ்ரீகிருஷ்ணனைக்குறித்து அவர் திருடனென்றும், பரதாரகெமனம் செய்தவரென்றும் கொள்ளும்படி கூறப்பட்ட வார்த்தைகளெல்லாம் ஆதாரமற்றவைகள், பொய்யானவைகளென்பதை நாம் தெரிந்துகொண்டோம். இதை நிரூபிப்பதற்காகவே நாம் விரஜலீலாவிருத்தாந்தத்தை விஸ்தாரமாக விசாரித்தோம். ஐதிஹாஸிக உண்மை ஏதாவது இருக்குமானால் அது இதுவே:—'மிகவும் துஷ்டனும் அக்கிரமம் செய்கிறவனுமாக இருந்த கம்சனுக்குப் பயந்து, வஸுதேவர் ராமனையும் கிருஷ்ணனையும் நந்தன்வீட்டில் மறைத்து வைத்திருந்தார். கிருஷ்ணன் பாலப்பருவத்தையும் குமாரப்பருவத்தையும் அவ்விடத்திலேயே கழித்தார். அவர் குழந்தையாயிருக்கும்போது ரூபலாவண்யத்தாலும், குழந்தைகளுக்குரியவையான குணங்களாலும் எல்லா ஜனங்களுக்கும் பிரியமானவராய் இருந்தார். பால்யத்தில் அவர் மிகவும் பலசாலியாயிருந்து பிருந்தாவனத்தில் கெடுதிசெய்தனவான மிருகம் முதலானவற்றைக் கொன்று கோபாலர்களை எப்பொழுதும் காத்துவந்தார். அவர் குழந்தையாயிருக்கும்போதே எல்லாஜனங்களிடமும் எல்லாப் பிராணிகளிடமும் கருணையுள்ளவராயிருந்தார்; எல்லோருக்கும் உபகாரம்செய்தார். கோபாலர்களிடமும் கோபச்சிறுமியரிடமும் அவர் நேசமுள்ளவராயிருந்தார். எல்லாருடனும் கூடிக் களித்தார்; எல்லோரையும் களிக்கச்செய்யமுயன்றார். இவ்வாறு பாலப் பருவத்திலேயே, தர்மதத்வம் (தர்மத்தின் உண்மை) அவருடைய மனத்தில் விளங்கியது' இங்ஙனம் ஐதிஹாஸிக உண்மையைக் கண்டோம். வேறுவிதமாக மாற்றிச்சொல்லமுடியாது. இதுகொண்டு ஒன்றைமட்டும் சொல்லிமுடிப்போம்; இவருக்குச் சமானமானவர்கள் வேறொருவருமே இல்லை.

# மூன்றாவது கண்டம்.

## மதுரை—துவாரகை.

यस्तनोति सतां सेतुमृतेनामृतयोनिना ।
धर्मार्थव्यवहाराङ्गैस्तस्मै सत्यात्मने नमः ॥

(சாந்திபருவம் 41-ஆம் அத்தியாயம்.)

அமிர்தத்திலுதித்த ஸத்யத்தைக்கொண்டு தர்மம் அர்த்தம் என்கிற வியவஹார அங்கங்களால் எவர் நல்லோர்களுக்கு அணை கோலுவதுபோல் நன்மையைச் செய்கிறாரோ அந்த ஸத்தியரூபியான பரமாத்மாவை நான் வணங்குகிறேன்.

## முதல் அதிகாரம்.

### கம்ஸவதம்.

—

பிருந்தாவனத்தில் ஸ்ரீ கிருஷ்ணனும் பலராமனும் மிக்க பலசாலிகள் என்று ஒருஸமயம் கம்ஸனுக்குத் தெரிந்தது. கம்ஸனுடைய பணியாளர்களான பூதனைமுதல் அரிஷ்டாசுரன்வரை யாவரையும் ஸ்ரீகிருஷ்ணன் அழித்துவிட்டான். தேவரிஷியான நாரதர் கம்ஸனிடம் சென்று ராமகிருஷ்ணர்கள் வஸுதேவரின் புதல்வர்களென்று அறிவித்தார். மேலும், "தேவகியின் எட்டாவதுகர்ப்பத்தில் பிறந்தது என்று எந்தப்பெண்குழந்தையை நீர் வதைத்தீரோ, அது, நந்தன் யசோதையாகிய இருவருடைய குழந்தையாகும். வசுதேவர் தம் குழந்தையான கிருஷ்ணனை மாறுதல்செய்து நந்தன்வீட்டில் மறைத்துவைத்திருக்கிறார்" என்று சொன்னார். இதைக்கேட்டுக் கம்ஸன் அதிக பயமும் கோபமும் அடைந்தான்; வஸுதேவரை இகழ்ந்தான்; அவரைக் கொல்ல முயன்றான்; அதற்காக ராமகிருஷ்ணர்களை அழைத்துவரும்படி யாதவர்களில் முக்கியரான 'அக்ரூரர்' என்ற பெரியோரைப் பிருந்தாவனத்துக்கு அனுப்பிவைத்தான். அவ்வமயம் ராமகிருஷ்ணர்களை மிகவும் பலசாலிகளான மல்லர்களின் மூலமாகக் கொல்லக்கருதித் 'தனுர்மகம்' என்ற யாகத்தைச் செய்வித்தான். ராமகிருஷ்ணர்கள் அக்ரூரரால் அங்கு அழைத்துவரப்பெற்றார்கள்.

அவர்கள் அரங்கமேடையில் பிரவேசித்துக் கம்ஸனால் நன்றாகப் பழக்கப்பட்ட 'குவலயாபீடம்' என்ற யானையையும், மிகவும் பெயர் பெற்றவர்களான சாணூரனையும் முஷ்டிகனையும் இலகுவாய் வதைத்துவிட்டார்கள். இதைக்கண்டு கம்ஸன், நந்தனுக்கு விலங் கிடும்படிக்கும், வஸுதேவரைக் கொன்றுவிடும்படிக்கும், கிருஷ்ண னையும் பலராமனையும் அடிக்கும்படிக்கும் கட்டளையிட்டான். அப்பொழுது மற்போரைக் கண்காணிப்பதற்காக அநேக யாதவர்க ளுடன் மேடையின்மேல் கம்ஸன் ஓ ராஸநத்தி லமர்ந்திருந்தான். ஸ்ரீகிருஷ்ணன் குறிவைத்து அம்மேடையின்மேல் ஏறிக் கம்ஸ னைப்பிடித்துத் தலைமயிரைப்பற்றி யிழுத்துப் பூமியில் வீழ்த்தி யமனுலகத்திற் கனுப்பிவிட்டார். பிறகு அவர் பெரியோர்க ளான தேவகி வஸுதேவன் முதலானவர்களை மரியாதையுடன் வணங்கிக் கம்ஸனுடைய தந்தையான உக்ரஸேனரை ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்வித்தார். ஸ்ரீகிருஷ்ணன், தான் ராஜ்யத்தை விரும்பவில்லை. அரசனாகவில்லை.

ஹரிவம்சத்திலும் ஏனைய புராணங்களிலும் இவ்விதமாகவே 'கம்ஸவதம்' வருணிக்கப்பெற்றிருக்கிறது. 'கம்ஸவதம்' என்பது உண்மையில் நிகழ்ந்ததுதான். ஆனால் அதுசம்பந்தமான மற்ற விவரங்கள் உண்மையாக நடக்கவில்லை. அவைகள் நம்பத்தக்கவை கள் அல்ல. தேவரிஷியான நாரதர் ஒருவர் இருந்தாரென்று நம்பி னாலும் நம்பலாம்; ஆனால் எந்த ஆகாசவாணியின் வார்த்தையால் கம்ஸனுக்குப் பயம் உண்டானதென்று நினைக்கிறார்களோ அந்த ஆகாசவாணியென்பது நம்பத்தக்கதில்லை. அன்றியும், இரண்டு இடைக்குலச்சிறுவர் அங்குவந்து சண்டை ஒன்றும் செய்யாமல் சபையின் மத்தியில் மதுரையரசனைக் கொன்றார்கள் என்பது இலகுவாய் நம்பத்தக்கதல்ல. ஆகையால் பழமையான கிரந்த மாகிற மகாபாரதத்தில் இவ்விஷயத்தைப்பற்றிச் சொல்லியிருக் கிறதா என்பதை ஆராயவேண்டியது மிகவும் அவசிமாகிறது. மகாபாரதம் ஸபாபர்வம் ஜராஸந்தவதபர்வாத்யாயத்தில் பூர்வ விருத்தாந்தத்தைக்குறித்து ஸ்ரீகிருஷ்ணன் யுதிஷ்டிரரிடம்,

"கொஞ்சகாலத்துக்குமுன், யாதவர்களை வென்று கம்ஸன், பார்ஹத்ரதனென்ற அரசனுடைய குமாரிகளான, 'ஸஹதேவை' 'அநுஜை' என்ற இரண்டுகன்னிகைகளை மணஞ்செய்துகொண்டான். அக்கொடியோன் தன் கைவலிமையால் ஞாதிகளை முறிய அடித்து, யாவரினும் சிறந்தவனைக் கிளம்பிவிட்டான். போஜவம்சஸ்தர்களான க்ஷத்திரியப்பெரியோர்கள், மூடனும் துஷ்டனுமான கம்ஸனின் துர்நடத்தையைக்கண்டு மிகவும் வருந்தி உறவினர்களைத் துறக்கும்படி எங்களைத் தூண்டினார்கள். அக்காலத்தில் அக்ரூரருக்கு விவாகம் செய்துவைத்து ஞாதிகளின் நன்மைக்காகப் பலபத்ரரும் நானும் கூடிக் கம்ஸனை வதைத்துவிட்டோம்" என்று கூறியதாகக் காணப்படுகிறது. பிருந்தாவனத்திலிருந்து கிருஷ்ண பலராமர்களை அழைத்துவந்த விருத்தாந்தம் யாதொன்றும் இக்கிரந்தத்திற் காணப்படவில்லை. மேலும் கம்ஸவதத்துக்கு முன்னமேயே ஸ்ரீ கிருஷ்ணபலராமர்கள் மதுரையில் வசித்துவந்தார்கள் என்று தெரியவருகிறது. மேலும் ஞாதிகளைவிட்டு விலகும்படி ஸ்ரீ கிருஷ்ணன் யாதவப்பெரியோர்களைத் தூண்டினார்; அதாவது தம்மைக் காத்துக்கொள்வதற்காக ஊரைவிட்டு ஓடும்படி சொன்னார்: என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணன் கம்ஸனைக் கொன்றுவிட்டது ஞாதிகளின் க்ஷேமத்துக்காகவே. இக்காரியத்தில் ஸ்ரீ கிருஷ்ணனுக்குப் பலராமரைத்தவிர வேறு எவரும் உதவிபுரிந்ததாக வெளிப்படையாய்த் தெரியவில்லை. அவர்களுக்கு ஏனை யாதவர்கள் உதவிசெய்ததாகவும் வெளியாகவில்லை. ஆனால் அவர்கள் ஒருவராவது கம்ஸனுக்கு உதவிபுரியவில்லையென்று ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது. தங்கள் எல்லோருக்கும் கம்ஸன் கெடுதிசெய்ததால், வலிமையுள்ள ராமகிருஷ்ணர்களைத் தலைவர்களாகக்கொண்டு கம்ஸனைக் கொல்ல அவர்கள் ஏற்பாடுசெய்தார்களென்றும் தெரியவருகிறது. இதைத்தவிர வேறு ஒரு உண்மைச்சரித்திரக்கதையும் அங்குக் காணக்கிடைக்கவில்லை.

மேலும், இவ்விடத்தில் மற்றொரு உண்மையான சரித்திரக் கதையையும் காணலாம். கம்ஸனைக் கொன்றபிறகு அவன் தந்தையான உக்ரஸேநரை, ஸ்ரீகிருஷ்ணன் யாதவர்தலைவன் ஸ்தானத்தில் ஸ்தாபித்தார் என்பது மற்றொரு உண்மைச் சரித்திரக்கதை. ஏனெனின் மகாபாரதத்தில் உக்ரஸேநர் யாதவர்களின் தலைவராக வருணிக்கப்பெற்றிருக்கிறார்.

அரசனை எவன் கொல்கிறானோ அவனே அவ்விராச்சியத்துக்கு உரியவனாவான் என்ற வழக்கமும் நியாயமும் அத்தேசத்தில் தொன்றுதொட்டு ஏற்பட்டிருந்தன. கம்ஸனை ஜயித்தவரான ஸ்ரீ கிருஷ்ணனால் இலகுவாய்ச் சிங்காதனத்தில் ஏறியிருக்கமுடியும். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. ஏனெனில் தர்மப்படி அத் தேயத்தரசன் உக்ரசேனனேயாவான். அவரைப் பலவந்தமாக வெருட்டிவிட்டுக்"கம்ஸன்"சிங்காதனமேறினான். ஸ்ரீகிருஷ்ணனுக் குத் தர்மமே பிரதானம். அவர் குழந்தைப்பருவமுதற்கொண்டு தர் மாத்மா. ஆகையால் ராச்சியம் யாருடையதோ அவருக்கே அதைத் தந்துவிட்டார். அவர் தர்மத்துக்குக் கட்டுப்பட்டவராதலால் கம் ஸனைக் கொன்றார். பிறருக்கு நன்மைசெய்வதே தர்மம் என்று ஸ்ரீகிருஷ்ணனே திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார் என்பதை நாம் இக்கிரந்தத்தில் பிறகு காண்போம். மிகவும் துஷ்டனான கம்ஸனைக் கொன்றதால் எல்லா யாதவர்களுக்கும் ஹிதமுண்டாயிற்று. அவனைக் கொன்றபிறகு தயாசீலரும் *ஆதர்சபுருஷருமான ஸ்ரீ கிருஷ்ணன் கம்ஸனைக்குறித்துத் துக்கித்துப் புலம்பினார் என்ற விவரமும் கிரந்தத்தில் எழுதப்பெற்றிருக்கிறது. கம்ஸவதசரித் திரத்திலிருந்து நாம் தெரிந்துகொள்வது யாதெனில், 'ஸ்ரீகிருஷ் ணன் மஹாபலசாலி; காரியங்களை நிறைவேற்றவல்லவர்; மிகவும் நீதி மான்; பரம தர்மாத்மா; பிறருக்கு எப்போதும் நன்மைசெய்வோர்; மற்றவர்களுக்குக் கெடுதிசெய்வதில் பயந்தவர்' என்பதே. இதனால் அவர் ஆதர்சபுருஷர் என்பது தெளிவாகிறது.

---

## இரண்டாவது அதிகாரம்.

### கல்விகற்றல்.

கம்ஸவதத்தின்பிறகு ஸ்ரீகிருஷ்ணனும் ராமனும் ஸாந்தீபினி ருஷியிடத்தில் வித்யாப்யாஸஞ்செய்வதற்காக ஸ்ரீகாசிக்குச் சென் றார்கள். 64 நாட்களில் ஆயுதவித்தையில் தேர்ச்சிபெற்று, குரு தக்ஷிணையைச் சமர்ப்பித்து மதுரைக்குத் திரும்பிவந்தார்கள்.

---

* ஆதர்சபுருஷர்:—எவரைப்பார்த்துத் தாமும் அவர்போல் நடக்க வேண்டுமென்றும் இருக்கவேண்டுமென்றும் யாவரும் விரும்புவார்களோ அவர் ஆதர்சபுருஷர்.

இதைத்தவிர ஸ்ரீகிருஷ்ணனின் வித்யாப்யாஸசம்பந்தமாக வேறு விருத்தாந்தம் காணப்படவில்லை. நந்தன்வீட்டில் அவருக்கு எவ்விதக்கல்வியாவது கற்பிக்கப்பட்டதென்று எந்தப்புராணத்திலும் காணப்படவில்லை. மேலும் நந்தன் ஜாதியில் வைசியன். வைசியர்களின் தேசத்தில் அவன் அதிகாரம் செலுத்திவந்தான். அவன் வைசியனாயிருந்தும் கிருஷ்ணனுக்கு யாதொரு கல்வியும் கற்பிக்கவில்லையென்பது ஆச்சரியமாயிருக்கிறது. கல்விகற்கும் பருவத்துக்குமுன் நந்தன்வீட்டைவிட்டு அவர் மதுரைக்கு அழைத்துவரப்பட்டாரென்று தோன்றுகிறது. முன் அதிகாரத்தில் எடுத்தெழுதப்பெற்ற ஸ்ரீகிருஷ்ணவாக்கியத்திலிருந்து, கம்ஸவதத்திற்கு வெகுகாலத்துக்குமுன்னிருந்தே கிருஷ்ணன் மதுரையில் வசித்துவந்தாரென்று அனுமானம் செய்யலாகும். இவ்விதமாகவே மகாபாரதம் ஸபாபர்வத்தில் ஸ்ரீகிருஷ்ணனைச் சிசுபாலன் நிந்தனை செய்யும்போது கம்ஸன்வீட்டில் வயிறுவளர்ப்பவன் என்று அவரைத் தூஷித்திருக்கிறான்.

"𑌯𑌸𑍍𑌯 𑌚𑌾𑌨𑍇𑌨 𑌧𑌰𑍍𑌮𑌜𑍍𑌞 𑌭𑍁𑌕𑍍𑌤𑌮𑌨𑍍𑌨𑌂 𑌬𑌲𑍀𑌯𑌸𑌃 ।
𑌸 𑌚𑌾𑌨𑍇𑌨 𑌹𑌤𑌃 𑌕𑌂𑌸 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌨𑍍𑌨 𑌮𑌹𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌂 ॥"

"எந்தப் பலசாலியான கம்ஸனின் சோற்றைத் தின்று கிருஷ்ணன் வளர்ந்தானோ அந்தக் கம்ஸனையே அவன் கொன்றானென்பது மிகவும் விந்தையல்லவா?" என்று சிசுபாலன் சொல்லியிருக்கிறான்.

ஆகையால் கல்விகற்கும் வயது வந்தும் வராமலுமிருக்கும்போதே கிருஷ்ணன் மதுரைக்கு அழைத்துவரப்பட்டாரென்று தெரிகிறது. கிருஷ்ணன் கோபிமார்களுடன் பிருந்தாவனத்தில் பால்யலீலைகளை நடத்திக்கொண்டிருந்தாரென்பதும், அங்கே அவர் கல்விகற்கவில்லையென்பதற்கு மற்றொரு சான்றாகும். மதுரையில் வசித்துவந்தகாலத்தில் அவர் எவ்விதமான கல்விகற்றார் என்பதைப்பற்றிய விவரமும் காணப்பெறவில்லை. ஸாந்தீபினி ருஷியிடம் 64 நாட்களில் அஸ்திரவித்தையைக் கற்றுக்கொண்டார் என்கிற கதைமாத்திரம் இருக்கிறது. அக்காலத்தவர்கள் கிருஷ்ணனை ஸாக்ஷாத் ஈசுவரன் என்று கருதியிருந்தார்கள்.

ஈசுவரனுக்குக் கல்வி கற்பிப்பதால் யாதுபயன் என்று அவர்களுக்குள் சிலர் சொல்லிக்கொண்டார்கள். ஸ்ரீகிருஷ்ணன் ஈசுவரனுடைய அவதாரமாயிருந்தும் மனிதருடைய ஒழுக்க நெறிகளையே அனுசரித்தும் மனுஷ்யசக்தியின்மூலமாகவே எல்லாக்காரியங்களையும் நிறைவேற்றியும்வந்தார் என்பதை நாம் முன்பே சொல்லியிருக்கிறோம். இவ்விதமாகவே அவருடைய மகிமையைப்பற்றிப் பலபல பிரமாணங்களையும் காட்டுகிறோம். அவர் தமது மனிதசக்தியை அடிக்கடி வெளிப்படுத்தியிருக்கிறார். மனுஷ்யசக்தியானது தானாகவே வெளிக்கிளம்பி எல்லாக்காரியத்தையும் செய்யவல்லதாக ஆகுமானால் அது 'தைவிக' சக்தியேயாகும். ஸ்ரீகிருஷ்ணனுக்குப் பெரியோரால் கல்வி கற்பிக்கப்பட்டது என்றதற்கு ஸாந்தீபினிருஷியின்விருத்தாந்தத்தைத்தவிர மற்றும் பிரமாணமிருக்கிறது. மகாபாரதத்தில் அர்க்கியாபிஹரண பர்வாத்தியாயத்தில் ஸ்ரீகிருஷ்ணன் யாராலும் பூஜிக்கத்தகுந்தவர் என்பதற்குப் பீஷ்மர் ஒருகாரணம் காட்டியிருக்கிறார். அதாவது:— ஸ்ரீகிருஷ்ணன் எல்லா வேதவேதாங்கங்களிலும் கரைகண்டவர்; அவரைப்போல் வேதவேதாங்கங்களறிந்த மற்றொருவரைக் காண்பதரிது என்பதே.

"𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑌾𑌂𑌗𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌬𑌲𑌂𑌚𑌾𑌪𑍍𑌯𑌧𑌿𑌕𑌂 𑌤𑌥𑌾 ।
𑌨𑍃𑌣𑌾𑌂𑌲𑍋𑌕𑍇𑌹𑌿𑌕𑍋 𑌨𑍍𑌯𑍋𑌸𑍍𑌤𑌿𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌃𑌕𑍇𑌶𑌵𑌾𑌦𑍃𑌤𑍇 ॥

(மகாபாரதம் ஸபாபர்வம் 38-வது அத்தியாயம்.)

"இவ்வுலகில் ஸ்ரீகேசவனைத்தவிர வேதவேதாங்களின் அறிவிலும், பலத்திலும் சிறந்தவர் வேறு எவர் இருக்கிறார்".

ஸ்ரீகிருஷ்ணனுக்கு வேதங்கள் நன்றாய்த் தெரியும் என்ற விஷயத்தில் பிரமாணங்கள் அநேக இடங்களில் அகப்படுகின்றன. வேதத்தின் அறிவு அவருக்குத் தானாகவே தோன்றவில்லை. அவர் 'ஆங்கிரஸர் என்ற மகருஷியிடம் அத்தியயனஞ் செய்தார்' என்று சாந்தோக்யோபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அச்சமயம் பிராமணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கும் ஏற்பட்ட உயர்தரப் படிப்பையே 'தபஸ்' என்று சொல்லிவந்தார்கள். இக்காலத்தில்

நாம் வனவாஸம்செய்து மூச்சையடக்கிக் கண்களைமூடிக்கொண்டு ஈசுவரத்தியானம்செய்தலையே 'தபஸ்' என்று சொல்லுகிறோம். தேவர்களில் சிலர் இவ்விதம் தபஸ்செய்தார்கள் என்று அநேகம் கிரந்தங்களிற் சொல்லியிருக்கிறது. விசேஷமாகப் பரப்பிரும்மமே சிருஷ்டிசெய்வதற்காகத் தானே தவம்செய்து பிறகு சிருஷ்டிசெய்தது என்று நாம் தெரிந்துகொள்ளலாம்.

𑌸𑍋𑌕𑌾𑌮𑌯𑌤 𑌬𑌹𑍁 𑌸𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑍇𑌯𑍇𑌤𑌿
𑌸 𑌤𑌪𑍋𑌤𑌪𑍍𑌯𑌤 𑌸 𑌤𑌪𑌸𑍍𑌤𑌪𑍍𑌤𑍍𑌵𑌾 𑌇𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑌸𑍃𑌜𑌤 ॥

இதன்பொருள்:—'நாம் பிரஜாசிருஷ்டிக்காகப் பலவாறாக ஆவோம் என்று அவர் விரும்பினார். அவர் தவஞ்செய்தார். தவஞ்செய்து சகல சிருஷ்டிகளையும் செய்தார்' என்பதாம்.

இவ்விடங்களிலெல்லாம் 'தவம்' என்பதற்கு என்ன அர்த்தமெனில் சித்தத்தை ஒருநிலையில் நிறுத்தித் தன்னுடைய ஆத்மசக்திகளை ஒருங்குசேர்த்து வெளிப்படுத்தலாம். ஸ்ரீகிருஷ்ணன் 10 வருஷம் வரை ஹிமாலயபர்வதத்தில் தவஞ்செய்தார் என்று மகாபாரதத்திற் சொல்லியிருக்கிறது. அசுவத்தாமாவால் தொடுக்கப்பட்ட 'பிரம்மசிரம்' என்ற அஸ்திரத்தால் உத்தரையின் கருச் சிதைந்தபோது, இறந்த சிசுவை மறுபடியும் உயிர்ப்பிக்கிறேன் என்று உறுதிசெய்து 'என்னுடைய தபோபலத்தைக் காண்பாயாக' என்று ஸ்ரீகிருஷ்ணன் அசுவத்தாமாவிடம் சொல்லியிருக்கிறார். இவ்வசனம் மகாபாரதம் ஐஷீகபர்வத்தில் காணப்படுகிறது. ஆதர்சபுருஷனுடைய கல்வியானது எல்லாராலும் போற்றப்பட்டு அனுசரிக்கப்படும் கல்வியேயாகும். முடிவிலும் அவ்விதமே காணப்படும். ஆனால் பிராசீனகாலத்தில் எல்லாராலும் அனுசரிக்கப்படும் வித்தை எவ்விதமாயிருந்ததென்று இப்பொழுது யாராலும் அறியக்கூடவில்லையே என்றவிஷயம் மிகவும் துக்கிக்கத்தக்கது.

---

## மூன்றும் அதிகாரம்.

### ஜராஸந்தன்.

---

பாரதவர்ஷத்தில் வடபாதியில் ஒரு அரசன் சக்கரவர்த்தியாயிருந்தான். மற்ற அரசர்கள் அவனுடைய ஆளுகையை ஒப்புக்கொண்டு சிலர் கப்பம் கட்டுகிறவர்களாகவும் வேறு பலர் அவனுடைய உத்திரவுப்படி நடப்பவர்களாகவும் இருந்தபடியால் யுத்தகாலத்தில் எல்லோருடைய உதவியும் அவனுக்குக் கிடைத்தது. சரித்திரகாலத்திற் சந்திரகுப்தன், விக்கிரமாதித்தன், அசோகன், பிரதாபம் பொருந்தின குப்த அரசர்கள், ஹர்ஷவர்த்தனன், சிலாதித்யன் முதலியவர்களும், பிற்காலத்தில் பட்டாணிய அரசர்களும், மொகலாய அரசர்களும் மேற்சொன்ன பிரகாரம் சக்ரவர்த்திகளாக இருந்தார்கள். இந்துராஜ்யகாலத்தில் சக்ரவர்த்தியென்ற பதவி பெரும்பாலும் மகததேசமன்னர்களிடமேயிருந்தது. நாம் எக்காலத்தைக் குறித்து வர்ணனைசெய்யத்தொடங்கினோமோ அக்காலத்தில் மகதமன்னன் வடக்குப்பகுதியில் சக்கரவர்த்தியாயிருந்தான். இவன்தான் பெயர்பெற்ற ஜராஸந்தன். அவனுடைய பலமும் பிரதாபமும் மகாபாரதத்திலும் ஹரிவம்சத்திலும் எல்லாப் புராணங்களிலும் மிகவும் வருணிக்கப்பட்டுள்ளன. குருக்ஷேத்திர யுத்தத்தில் க்ஷத்திரியர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. குருக்ஷேத்திரத்தில் இருகட்சியிலும் சேர்ந்து 18 அக்ஷௌகிணிசேனை கூடிற்று. ஜராஸந்தனிடம் மட்டிலும் 20 அக்ஷௌகிணிசேனை இருந்தது. கம்ஸன் ஜராஸந்தனுடைய மாப்பிள்ளை. அவனுடைய இரண்டுகன்னிகைகளையும் கம்ஸன் விவாகம் செய்திருந்தான். கம்ஸன் கொல்லப்பட்டபிறகு தங்கள் புருஷனைக் கொன்றவனைச் சிக்ஷிக்கவேண்டுமென்று அப்பெண்கள் தகப்பனிடம் முறையிட்டழுதார்கள். அவன் ஸ்ரீகிருஷ்ணனை வதைப்பதற்காகப் பெரிய சேனையுடன் வந்து மதுரையை முற்றுகையிட்டான். அவனுடைய சைன்யத்துடன் யாதவசேனையை ஒப்பிட்டுப்பார்த்தால் பிந்தியது மிகவும் சிறியதாகக் காணப்படும். அப்படியிருந்தும், தங்களுடைய சேனைத்தலைவர்களின் சாமர்த்தியத்தால் யாதவர்கள் ஜராஸந்தனை வெருட்டிவிட்

டார்கள். ஆனாலும் ஜராஸந்தன்படையை அழிப்பது யாதவர்களால் முடியாதகாரியமாகவிருந்தது. ஏனெனில் ஜராஸந்தன் சைன்யம் கணக்கிலடங்காதது. ஜராஸந்தன் மறுபடியும் மறுபடியும் வந்து மதுரையைத் தாக்கினான். அடிக்கடி விரட்டப்பட்டும், வந்து வந்து முற்றுகையிட்டு உபத்திரவம் செய்தான். அடிக்கடி அடிபட்டு அவன் சைன்யம் குறைந்துகொண்டுவந்தாலும் அது முற்றிலும் அழியவில்லை. கடலின் ஆழமான அலைகளைப்போல் ஜராஸந்தன்சேனை பெரியதாக இருந்தது. அதன் நிறைவும் குறைவும் தெரியவில்லை. இவ்விதமாக ஜராஸந்தன் 18-தடவை முற்றுகையிட்டான். அதன்பின்னர் ஸ்ரீகிருஷ்ணனுடைய யோசனையின்பிரகாரம் மதுரையை விட்டுவிட்டுப் பகைவர் இலகுவாகப் புகக்கூடாதவிடத்தில் கோட்டைகளைக்கட்டிக்கொண்டு வாசம் செய்வதாக யாதவர்கள் நிச்சயஞ்செய்தார்கள். சமுத்திரத்தீவில் துவாரகை என்ற நகரைக் கட்டிமுடித்து அதைக்காப்பதற்காக 'ரைவத' பர்வதத்தின்மேல் கோட்டைகளையும் அமைத்தார்கள். யாதவர்கள் துவாரகைக்கு வருமுன்னமேயே ஜராஸந்தன் மதுரையை 18-தடவை தாக்கினான்.

இதே சமயத்தில், ஜராஸந்தனைத் தூண்டிவிடுவதற்கும் கிருஷ்ணனை எதிர்ப்பதற்கும் பலத்த எதிரியொருவன் தலைப்பட்டான். பாரதபூமியில் முற்காலத்தில் அங்கங்கே யவனர்களின் இராச்சியங்கள் இருந்தனவென்று அநேக கிரந்தங்களிற் காணப்படுகிறது. பண்டிதர்கள், பாரததேசத்தின் பூர்வகுடிகளையே 'யவனர்கள்' என்று வழங்கினார்கள். ஆனால் இந்தச் சித்தாந்தம் சரியல்ல. அவ்விஷயத்தில் அநேக சந்தேகங்கள் இருக்கின்றன. சகர், ஹூணர், கிரேக்கர் முதலிய ஹிந்துக்களல்லாத ஜாதியினரையெல்லாம் 'யவனர்கள்' என்று பாரதவாசிகள் சொல்லிவந்தார்கள். அது எவ்விதமிருப்பினும், அக்காலத்தில் காலயவனன் என்ற ஒரு பலவானான அரசன் பாரதவருஷத்தில் மிகவும் பலமுள்ளவனாகக் கிளம்பினான். தன்சேனையுடன்வந்து அவன் மதுரையை முற்றுகையிட்டான். ஆனால் ரகஸ்யமறிந்த கிருஷ்ணபகவான் தன்சேனையின் உதவியைக்கொண்டு அவனுடன் போர்புரியவிரும்பவில்லை. தன்னால் அவனையெதிர்த்துவெல்லக்கூடுமானாலும், தனது சிறியசேனைக்கு இன்னும்

குறைவுவரக்கூடுமென்று நினைத்து அவனுடன் சண்டைக்குப் போகவில்லை. இறந்தவர்கள் போக எஞ்சினவர்கள், ஜராஸந்தனது சேனையை வெல்லமுடியாதவர்களாயிருந்தார்கள். எல்லாப்பிராணிகளிடமும் தயவுள்ளவரான ஸ்ரீகிருஷ்ணன் தர்மத்தை நிலைநிறுத்துவதைத்தவிர மற்றைக் காரியங்களில் பிராணிகளின் ஹிம்சையை ஒருக்காலும் விரும்பவில்லை. நியாயமான யுத்தங்கள் நிகழ்ந்தாலும் அச்சமயங்களில் யுத்தம் செய்யாமல், எப்பொழுது தர்மத்துக்குக் குறைவுவரும்போலிருக்கிறதோ அப்பொழுதுமட்டும் யுத்தம்செய்வது நியாயமென்று கீதையில் ஸ்ரீகிருஷ்ணபகவான் சொல்லியிருக்கிறார். காலயவனனுடனும் ஜராஸந்தனுடனும் யுத்தம் செய்வது தர்மயுத்தம்; தன்னையும் தன்னுடைய ஜனங்களையும் காத்துக்கொள்ளுவதற்காகவும், பிரஜைகளை ரக்ஷிப்பதற்காகவும் சண்டைசெய்யாமலிருப்பது மிகவும் அதர்மம். சண்டைசெய்வதிலிருந்து ஜனங்களுக்கு நாசம் ஏற்பட்டாலும் தர்மசீலர்கள் அக்காலங்களிற் சண்டைசெய்யவேண்டியது அவசியமே. எக்காரியம் செய்வதால் அதிகஜனங்களுக்கு நாசம் ஏற்படாதோ, ஜராஸந்தனுக்கு அழிவும் ஏற்படுமோ அந்த உபாயத்தை ஸ்ரீகிருஷ்ணன் கைக்கொண்டார் என்று மகாபாரதத்தில் ஜராஸந்தவதபர்வாத்தியாயத்திற் கூறப்பட்டுளது. காலயவனன்விஷயத்திலும் அவ்வுபாயத்தையே அவர் அனுசரித்தார். தனது சைன்யத்துடன் காலயவனனை நேரில் எதிர்க்காமல் அவனைக் கொல்வதற்கு ஒருபாயம்செய்தார். தானே ஒருவராகக் காலயவனன்சைன்யத்துக்குள் புகுந்தார். அவன் அவரைப் பிடிக்கமுயன்றான். பிடிப்பதற்காகக் கையை நீட்டினான். ஸ்ரீகிருஷ்ணன் பிடிபடாமல் ஓட்டம்பிடித்தார். காலயவனன் பின்தொடர்ந்தான். வேதங்களிலும் யுத்தவித்தையிலும் ஸ்ரீகிருஷ்ணன் எவ்விதம் தேர்ச்சிபெற்றவரோ அவ்விதமாகவே சரீரப்பயிற்சியிலும் சிறந்தவர். ஸ்ரீகிருஷ்ணன் எவ்விதத்திலும் மேன்மைபொருந்தியவராயிருந்தார். காலயவனன் அவரைப் பிடிக்கமுடியவில்லை. காலயவனனால் துரத்தப்பட்ட ஸ்ரீகிருஷ்ணன் ஒரு மலைக்குகைக்குள் நுழைந்துவிட்டார். அவ்விடத்தில் 'முசுகுந்தர்' என்ற ஒரு ருஷி நித்திரைசெய்துகொண்டிருந்தார். குகையின் நடுவில் இருளின்மிகுதியால் ஸ்ரீகிருஷ்ணன் இருந்தவிடம் காலயவனனுக்குத் தெரியாமல், அந்த ருஷி தன்கண்ணுக்குப்

புலப்பட்டவுடன், அவரைக் கிருஷ்ணன் என நினைத்துக் காலால் ஒரு உதை உதைத்தான். நித்திரைகலைந்து அவருடைய திருஷ்டி காலயவனன்மீது பட்டமாத்திரத்தில் அவன் சாம்பலாய்த் தீர்ந்தான். அதிப்பிராகிருதமான இந்தவிஷயத்தை நாம் நம்புவது இயலாது. ஸ்ரீகிருஷ்ணபகவான் காலயவனனை அவனுடைய சைன்யத்தைவிட்டு வேறாக்கித் தனிமையான இடத்துக்கு அழைத்துப் போய் அவனுடன் கைச்சண்டைபுரிந்து அவனைக் கொன்றுவிட்டார் என்பதைமட்டும் நாம் நம்பமுடியும். காலயவனன் நாசமடைந்தபின் அவனுடைய சேனைகள் மதுரையைவிட்டு ஓடிப் போயின. அதன்பிறகு மறுபடியும் மதுரையை எதிர்க்க ஜராஸந்தன் விரும்பவில்லை. இவ்விதமே ஹரிவம்சத்திலும் விஷ்ணுபுராணம் முதலான புராணங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. யுதிஷ்டிரரின் சார்பாக ஸ்ரீகிருஷ்ணன் ஜராஸந்தனுடன் நேசம்செய்து கொண்டார் என்று எவ்விடத்தில் சொல்லப்பட்டிருக்கிறதோ அவ்விடத்தில் 18-தடவை யுத்தம் நடந்ததான கதை காணப்படவில்லை; யாதொரு யுத்தமும் நடந்ததாக ஸ்பஷ்டமாயுமில்லை. அங்கிருக்கும் விருத்தாந்தங்களிலிருந்து, ஜராசந்தன் மதுரையை ஒருதடவை யெதிர்த்தான்; ஆனால் ஹம்ஸன் என்ற ஜராசந்தன் தோழனைப் பலராமர் கொன்றுவிட்டதால் ஜராசந்தன் துக்கமடைந்து தன்னிடம் போய்விட்டானென்று தெரியவருகிறது. அதையேயிவ்விடத்தில் எடுத்தெழுதுகிறோம். "கம்ஸன் யாதவர்களை ஜயித்து பார்ஹத்ரதனின் இரண்டு குமாரிகளான 'ஸஹதேவை' 'அனுஜை' என்ற கன்னிகைகளை விவாகம்செய்துகொண்டான். இத் துராத்மாவானவன் தனது கைவலிமையால் ஞாதிகளை ஜயித்து யாவருக்கும் முதல்வனாய்க் கிளம்பினான். போஜவம்சத்தர்களான க்ஷத்திரியப் பெரியோர்கள் துஷ்டனான கம்ஸனுடைய துர்நடத்தையால் வருந்தி ஞாதிவர்க்கத்தைத் துறக்கும்படி நம்மிடம் தூண்டினார்கள். நாம் அக்காலத்தில் அக்ரூரருக்கு ஆஹுகரின் கன்னிகையை விவாகஞ் செய்வித்து ஞாதிகளுக்கு நன்மைபுரிவதற்காகவே யாதவர்களுடன் கூடிக் கம்ஸனையும் ஸுநாமாவையும் கொன்றோம். யாதவர்களுக்குக் கம்ஸனிடமிருந்து பயம் ஒழிந்தது. ஆனால் சில நாட்கள் கழித்து ஜராசந்தன் மிகவும் பராக்கிரமசாலியாகக் கிளம்பிவிட்டான். அக்காலத்தில் நாம் ஞாதிகளுடனும் பந்துக்களுடனும்

ஒன்றுகூடி யோசனைசெய்ததாவது:—சத்துருக்களையழிக்கவல்ல மகாஸ்திரங்களின்வலிமையால் இடைவிடாமலும் ஓயாமலும் 300 வருஷகாலம் யுத்தம் செய்தாலும் ஜராசந்தன்சேனையை மிச்ச மின்றி அழிக்கமுடியாது. தேவர்களுக்குச் சமானமானவர்களாயும், தேஜஸ்விகளாயும் பலசாலிகளாயுமுள்ள 'ஹம்ஸ' னென்றும் 'டிம்ப' னென்றும் இரண்டு வீரர்கள் அவனுடன் கூடவேயிருக்கிறார்கள். அவர்களை அஸ்திரங்களால் ஒருகாலும் கொல்லமுடியாது. இவ் விருவரும் ஜராஸந்தனும் ஒன்றுசேர்ந்தால் மூவுலகங்களையும் ஜயிக்க வல்லவர்கள். ஹே! தர்மபுத்திரரே! இது என்னுடைய அபிப் பிராயமாத்திரமல்ல. மற்றை அரசர்களும் இவ்வாறே கூறுகிறார் கள். "ஹம்ஸன்" என்று பெயர்பெற்ற ஓர் அசுரன் இருந்தான். பல தேவர் அவனை யுத்தத்தில் கொன்றார். ஹம்ஸன் கொல்லப்பட்டான் என்கிற சங்கதியை ஜனங்களின் மூலமாக டிம்பகன் கேள்வியுற்று, ஒரே பெயருள்ள அவனுடைய தோழனான ஹம்ஸனே கொல்லப் பட்டான் என்று நிச்சயம்செய்து அவன் கங்காநதியில் விழுந்து பிராணனைவிட்டான். இந்த இரண்டுபேர்களும் இறந்துவிட்ட தை ஜராசந்தன் கேட்டுத் தனது ஊருக்குத் திரும்பிட்டான். அப்பொழுது நாம் மதுரையில் சந்தோஷத்துடன் வசிக்கவாரம்பித் தோம்."

"சில நாட்கள் கழித்துத் தனது புருஷன் மரணத்தால் துக் கத்தையடைந்தவளான ஜராஸந்தன் குமாரி தன் புருஷனைக் கொன்றவனை மாய்க்கும்படி தன் தகப்பனிடம் மன்றாடினாள். ஜராஸந்தன் பலத்தையும் சாமர்த்தியத்தையும் குறித்து முன்ன மே நாம் சொல்லியிருக்கிறோம். மறுபடியும் தங்களுக்கு ஞாபகப் படுத்துகிறோம்:—'எங்களுடைய மிகுந்த செல்வத்தைப் பங்கு போட்டு அதை யெடுத்துக்கொண்டு மேற்குத்திசைக்கு ஓடிவிட் டோம். மிகவும் அழகான "குசஸ்தலி" என்ற பட்டணத்தில் வாசம்செய்தோம். அவ்விடத்திற் கோட்டைகளைக் கட்டினோம்; விருஷ்ணிவம்சஸ்தர்கள் யுத்தப்பிரியர்கள் என்பதில் அதிசய மில்லை. ஸ்திரீகள்கூடச் சிரமமின்றிப் போர்புரிய வல்லவர்களா யிருந்தார்கள்".

"ஹே! அரசனே! நாங்கள் பயமில்லாமல் அவ்வூரில் வசித்து வந்தோம். மகததேசம்முழுமையும் வியாபித்துவிட்டோம். உயர்ந்தான 'ரைவத' மலையைப்பார்த்து மிகுந்த சந்தோஷத்தையடைந்தோம். ஹே! குலத்தின் விளக்கே! நாங்கள் யாவரும் சாமர்த்தியமுள்ளவர்களாயிருந்தும், ஜராஸந்தனுடைய தொந்தரவுக்குப் பயந்து மலையையடுத்தோம். 'இப்பருவதத்தின் நீளம் மூன்று யோஜனை; அகலம் ஒரு யோஜனைக்கதிகம். ஒவ்வொரு யோஜனைக்கும் 100–100 வாசல்களும் தோரணங்களு மிருந்தன. 21 கொடுமுடிகளும் உண்டு. யுத்தத்தில் பிரியமுள்ளவர்களும் பலசாலிகளுமான க்ஷத்திரியர்கள் அங்கே எப்பொழுது மிருந்துவந்தார்கள். ஹே! அரசனே! எங்களுடைய குலத்தில் 18000 பெயர்கள் அண்ணன் தம்பிமார்கள். ஆஹுகருக்கு 101 பிள்ளைகள். அவர்களெல்லோரும்தேவர்களுக்கொப்பானவர்கள்; சாருதேஷ்ணன், அவருடைய பிராதா, சக்ரதேவன், ஸாத்யகி, நாம், பலபத்திரர், சாம்பன் ஆகிய 7-பேர்களும் ரதிகர்கள். கிருதவர்மா, அநாதிருஷ்டி, சமீகன், ஸமிதிஞ்சயன், கக்ஷன், சங்கு, குந்திபோஜன் ஆகிய 7 பேர்களும் மகாரதர்கள். போஜனின் இருபுதல்வர்களும், அவ்வரசனும் மிகவும் பலமுள்ள வீரர்கள். மத்திமதேசமானது ஜராசந்தனால் ஆக்கிரமிக்கப்பட்டதைநினைத்து இவர்கள் யாவரும் யதுவம்சஸ்தருடன் கூடிக்கொண்டார்கள்." என்று பகவான் சொல்லியிருக்கிறார்.

ஜராசந்தனின் உண்மையான விவரத்தில் ஒரு பகுதி மூல பாரதத்திற் காணப்படுகிறதென்பது நமது உறுதி. இரண்டொரு கதைகள் 'வ்ருக்ஷிவ்ருத'ங்களாகவு மிருக்கலாம். ஹரிவம்சத்தைக் காட்டிலும் புராணங்களைக்காட்டிலும் மூல மகாபாரதமானது மிகவும் பழமையானது. அதை நாம் நம்புவோமானால் ஸ்ரீகிருஷ்ணனை ஜராசந்தன் எதிர்த்ததும் அவனால் 18-தடவை மதுரை தாக்கப்பட்டதும் அவன் 18-தடவை தோல்வியடைந்ததும் பொய்க்கதையாய்முடியும். அது எப்படியிருப்பினும், ஜராசந்தனால் மதுரை ஒருதடவை எதிர்க்கப்பட்டதும் அவன் முறிபட்டதும்மட்டும் உண்மை.

"அவன் எதிர்க்க யத்தனம்செய்யுமுன் நான்குபக்கத்தும் பரவிய நிலப்பரப்புடைய மதுரையில் நாங்கள் இருந்தால் ஜராஸந்தனது எண்ணிறந்தசேனையை வெல்வது முடியாதகாரியமென்று நினைத்து, எவ்விடத்திற் கோட்டைகளைக்கட்டிச் சிறிய சேனையின் உதவியால் நாங்கள் எங்களைக் காத்துக்கொள்ளக் கூடுமோ அவ்விடத்திற்கு ராஜதானியை மாற்றினோம். ஜராஸந்தன் அவ்விடத்திற்கு வரவில்லை. ஜயம் அபஜயம் இவ்வார்த்தைகள் ஒன்றுமில்லை." என்று ஸ்ரீகிருஷ்ணன் கூறியிருக்கிறார்.

இதிலிருந்து காணக்கிடைப்பது யாதெனில், போர்த்துறையில் ஸ்ரீகிருஷ்ணன் கரைகண்டவர்; அரசநீதியில் வல்லவர்; மேலும் காரியமில்லாமல் மனிதர்களை வதைப்பதில் மிகவும் வெறுப்புள்ளவர். ஆதர்சபுருஷரின் எல்லாக் குணங்களும் அவரிடம் படிப்படியாக விருத்தியடைந்தன.

---

## நான்காம் அதிகாரம்.

### ஸ்ரீகிருஷ்ணவிவாகம்.

ஸ்ரீகிருஷ்ணனின் முதலாவதுபாரியை ருக்மிணி. இவள் விதர்ப்பதேசத்தரசனான பீஷ்மகரின் குமாரி. ருக்மிணியின் ரூபத்தையும் குணத்தையும் கேட்டு ஸ்ரீகிருஷ்ணன் அவளைத் தனக்கு விவாகம்செய்துகொடுக்கும்படி பீஷ்மகரைக் கேட்டுக் கொண்டார். ருக்மிணியும் ஸ்ரீகிருஷ்ணனிடம் ஆசைகொண்டவளாயிருந்தாள். ஆனால் ஸ்ரீகிருஷ்ணனின் எதிரியால் தூண்டப்பட்ட பீஷ்மகவரசர் ருக்மிணியை அவருக்குக் கொடுக்க இசையவில்லை. ஆனாலும் யாதவர்களும் தானும் பீஷ்மகருடைய நகர்சென்று அவளுடைய பந்துக்களின் சம்மதமில்லாமல் ருக்மிணியை எடுத்து வந்து தானாகவே கல்யாணம் செய்துகொள்வதென ஸ்ரீகிருஷ்ணன் நிச்சயம்பண்ணினார். அவ்விதமே செய்தார். விவாகதினத்தன்று ருக்மிணியானவள் தேவாலயத்தில் தரிசனம்செய்துகொண்டு அதைவிட்டு வெளியேறிவரும்போது, ஸ்ரீகிருஷ்ணன் அவளையெடுத்துத் தனது தேர்மீதுவைத்துக்கொண்டார். ஸ்ரீகிருஷ்ணன் வரவைக்கேட்டு பீஷ்மகரும் அவருடைய பிள்ளைகளும்,

அவரைச்சார்ந்த அரசர்களும், ஏதோ அநர்த்தம்வந்துவிட்டதாக நினைத்தார்கள். ஆதலால் அவர்கள் எல்லோரும் ஆயத்தமாயிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் தங்களுடைய சைன்யங்களுடன் ஸ்ரீகிருஷ்ணனைப் பின்பற்றி யோடினார்கள். ஸ்ரீகிருஷ்ணனையும் யாதவசேனையையும் வெல்லமுடியவில்லை. ஸ்ரீகிருஷ்ணன் ருக்மிணியைத் துவாரகைக்கு அழைத்துக்கொண்டுபோய் அவளைச் சாஸ்திரப்பிரகாரம் விவாஹம்செய்துகொண்டார்.

இதைத்தான் 'ஹரணம்' என்று சொல்லுகிறார்கள். 'ஹரணம்' என்றால் கன்னிகைக்குக் கெடுதிசெய்வது என்று அர்த்தம். கன்னிகையிடம் வரன் பிரியமாயிருந்து அவளும் மணம்செய்து கொள்ள விரும்பினால் அக்கல்யாணத்தை முடிப்பதில் என்ன கெடுதியிருக்கிறது? ருக்மிணியின் ஹரணத்தில் எவ்விதத்தவறும் இல்லை. ஏனெனில் ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் ருக்மிணிக்கு அதிக விருப்பம். இவ்விதமாக ஸ்ரீகிருஷ்ணனுடைய அனுமோதனத்தின்மேல் சுபத்திரையை அர்ஜுனன் அபஹரித்தது தவறல்லவென்பதை நீங்கள் இக்கிரந்தத்தில் பின்பாகத்தில் காண்பீர்கள். ஸ்ரீகிருஷ்ணன் இவ்வாறு ருக்மிணியையபகரித்தது சரியா? தவறா? என்று விசாரிக்கவேண்டியது நமக்கு அவசியமாயிருக்கிறது. க்ஷத்திரிய அரசர்களின் விவாகத்தில் இரண்டுவகை உண்டு.— ஒன்று ஸ்வயம்வரவிவாகம், மற்றொன்று 'ஹரணம்'. ஒவ்வொரு சமயத்தில் க்ஷத்திரியர்களுடைய விவாகத்தில் இரண்டுவகையும் நிகழ்ந்திருக்கின்றன. அவ்விதமே காசியரசன்புதல்வியான அம்பிகையின்விவாகத்தில் நடந்தது. அக்காலத்தில் ஸ்வயம்வரத்தை நடத்தியிருக்கலாம். ஆனாலும் பீஷ்மர் அவ்விதம் செய்யாமல் கன்னிகையை யபஹரித்துக்கொண்டுவந்தார்; ஸ்வயம்வரம் நடந்தாலும் ஹரணம் நடந்தாலும் யுத்தத்தில் பிரியமுள்ளவர்களான க்ஷத்திரியர்கள் சண்டைக்குக் கிளம்பிவிடுவார்கள். ருக்மிணியின் ஹரணத்திலும் காவியத்தில் கூறியிருக்கிறதான இந்துமதியின் ஸ்வயம்வரத்திலும் யுத்தம் நிகழ்ந்ததெனக் காணலாம். மகாபாரதம் மூலபாகத்தில் ருக்மிணியை ஸ்ரீகிருஷ்ணன் அபகரித்தார் என்ற கதை காணப்படவில்லை. சிசுபாலவத அத்யாயத்தில் ஸ்ரீகிருஷ்ணன்—

ருக்மிண்யாமஸ்ய மூடஸ்ய ப்ரார்தநாஸீந்முமூர்ஷத: ।
ந ச தாம் ப்ராப்தவாந் மூட: ஶூத்ரோ வேதஶ்ருதீமிவ ॥
ஶிஶுபாலவத பர்வணி 45 தம அத்யாயே 15 தம ஶ்லோக:

"சூத்திரன் சுருதியை யடைய முடியாததுபோல் ருக்மிணியிடம் ஆசைவைத்தவனும், மூடனும், இறக்கப்போகிறவனுமான சிசுபாலன் அவளை யடையவில்லை" என்று கூறியுள்ளார்.

உத்யோகபர்வத்தில் வேறோரிடத்தில்,

"யோ ருக்மிணீமேகரதேந ஜித்வா
உத்வாஹ்ய ராஜ்ஞ: ஸமரே ப்ரஸஹ்ய ।
உவாஹ பார்யாம் யஶஸா ஜ்வலந்தீம்
யஸ்யாம் ஜஜ்ஞே ரௌக்மிணேயோ மஹாத்மா ॥

"எவர் ஒரே தேருடையவராயிருந்தும், ருக்மிணியை அபகரித்துக்கொண்டு சண்டையில் அரசர்களை வென்று அவளை விவாகம் செய்துகொண்டாரோ, எவருக்கு ருக்மிணியிடம் மகாத்மாவான ஒரு புதல்வன் பிறந்தானோ அந்த ஸ்ரீகிருஷ்ணன்" என்று வருணித்திருக்கிறது. மறுபடி வேறிடத்திலும் ருக்மிணிஹரணத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. உத்யோகபருவத்தில் சேனையை யணிவகுக்கும் சமயத்தில் ருக்குமிணியின் சகோதரனை ருக்மி யென்பான் பாண்டவர் படையினிடையே வந்துசேர்ந்தான். அந்த ருக்மியைப் பற்றியும் அங்கே பின்வருமாறு சொல்லியிருக்கிறது. "தனது புஜபலத்தினால் கர்வமடைந்த 'ருக்மி'யானவன் ஸ்ரீ கிருஷ்ணன் ருக்மிணியை யெடுத்துப்போவதைப் பொறாமல் ஸ்ரீ கிருஷ்ணனைப் பங்கப்படுத்தாமல் தான் ஊருக்குத் திரும்புவதில்லை யென்று உறுதிசெய்தான். பிறகு வெள்ளம்பெருகின கங்காநதி போல் படைக்கலமுடைய பெரிய சேனையை யழைத்துக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணனைத் தொடர்ந்து ஓடிவந்தான். அவருக்குச் சமீபத்தில் நெருங்கவே, அவரால் தாக்கப்பட்டுத் தோல்வியடைந்து வெட்கத்துடன் திரும்பிவிட்டான். அவன் பெரிய சேனையுடனும் அநேக யானைகளுடனும் கூடியதான 'போஜகூடம்' என்ற ஒரு நகரை

ஸ்தாபித்தான். தற்காலம் அந்த போஜகூடவரசனுன 'ருக்மி' ஒரு அக்ஷௌகிணி சேனையுடன் பாண்டவர்களின்சமீபத்தில் வந்து சேர்ந்தான். ஸ்ரீகிருஷ்ணனுக்குப் பிரியம்செய்யும்பொருட்டு, கவசம் வில் கத்தி முதலான ஆயுதங்களுடனும், சூரியனைப்போல் ஒளி வீசும் கொடியுடனும் பாண்டவர்களுக்குத் தெரியாமல் அவர்களுடைய படையிடையே நுழைந்தான்." இந்தக்கதை உத்யோக பர்வம் 158-ஆவது அத்தியாயத்திலிருக்கிறது. மகாபாரதத்தின் பர்வசங்கிரக அத்தியாயத்தின் விவரம் முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே உத்யோகபர்வத்தில் 186 அத்தியாயங்களும் 6698-சுலோகங்களும் முன்பிருந்தன எனச் சொல்லியிருக்கிறோம்.

இப்பொழுது உத்யோகபர்வத்தில் 196 அத்தியாயங்களும் 7657-சுலோகங்களும் காணப்படுகின்றன. ஆகையால் 'வவ-் ஸம ஹாயூாய'ம் எழுதப்பட்ட பிறகு 10 அத்தியாயங்களும் சற்றேறத்தாழ ஆயிரம் சுலோகங்களும் பிரக்ஷிப்தங்களாகப் பொருத்தப்பட்டிருக்கின்றன. இந்த 10 அத்தியாயங்களும், 1000 சுலோகங்களும் எவை? இதைக்குறித்து விசாரித்தல்வேண்டும். ருக்மியை வெருட்டிவிட்டதைச் சொல்லுகிற அத்யாயத்திற்கும் மகாபாரதத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. சைன்யத்துடன் 'ருக்மி' வந்ததும் அர்ஜுனனால் தள்ளப்பட்டதும் பிறகு துர்யோதனனாலும் தள்ளிவிடப்பட்டதும் பிறகு தன்னூருக்குத் திரும்பிப்போனதுமான விவரங்கள் சொல்லப்பட்டுள்ள இந்த 158-ஆம் அத்தியாயம் பிரக்ஷிப்தம். ருக்மிணி ஹரண விருத்தாந்தமும் பிரக்ஷிப்தம். மேலும், மகாபாரத யுத்தத்துக்குமுன்னமே ருக்மியானவன் பலராமருடன் சூதாடினதில் கலகம் வந்து அவரால் கொல்லப்பட்டான் என்று "விஷ்ணு புராண"த்திலிருக்கிறது. ருக்மிணியைச் சிசுபாலன் விரும்பினான். இது உண்மை. அவனுக்கு ருக்மிணி வாழ்க்கைப்படவில்லை. ஸ்ரீகிருஷ்ணன் அவளை மணந்தார். விவாகத்துக்குப் பிறகு யுத்தம் நிகழ்ந்தது. ஆனால் ஹரணம் செய்ததான கதை மூல பாரதத்திற் காணப்படவில்லை. அக்கதை ஹரிவம்சத்திலும் புராணங்களிலும் காணப்படுகிறது.

சிசுபாலன் பீஷ்மரை நிந்திக்கும்சமயத்தில், காசியரசன்கன்னிகைகளை யபகரித்ததற்காக அவரைத் திட்டினன். ஸ்ரீகிருஷ்ணனைத் திரஸ்கரித்தசமயத்தில் ருக்மிணி ஹரணத்தின் செய்தியாதொன்றும் காணப்படவில்லை. ஆகையால் 'ருக்மிணி' எடுத்துக்கொண்டுபோகப்படவில்லை என்று நிச்சயிக்கலாம். முன் சொல்லிய விஷயங்களால் சிசுபாலன் ருக்மிணியைத் தனக்கு விவாகம் செய்விக்கும்படி பீஷ்மகரை விரும்பிக் கேட்டான். ஆனால் அவர் அவளை ஸ்ரீகிருஷ்ணனுக்கே கொடுத்துவிட்டார். உடனே அவருடைய குமாரன் 'ருக்மி' சிசுபாலன்சார்பாக விவாதத்தைக் கிளப்பிவிட்டான். அநிருத்தனின் விவாககாலத்தில், ருக்மி பலராமருடன் சூதாடிக் கலகம்வந்து அடிபட்டு மடிந்தான்.

---

## ஐந்தாம் அதிகாரம்.

### நரகவதம்.

நரகன் என்று பூமிதேவிக்கு ஒரு புத்திரன் இருந்தான். பிராக்ஜோதிஷமென்பது அவனுடைய ராஜதானி. அவன் மிகவும் கொடியவனயிருந்தான். இந்திரனே துவாரகைக்கு வந்து அவனைப் பற்றி ஸ்ரீகிருஷ்ணனிடம் முறையிட்டான். அவன் அநேக துர்நடத்தைகளையுடையவன். இந்திரன் விஷ்ணு இவர்களின் தாயாரான 'அதிதி' தேவியின் குண்டலத்தைத் திருடிக்கொண்டும் வந்துவிட்டான். ஸ்ரீகிருஷ்ணன் இந்திரனிடம் உறுதிசொல்லி பிராக்ஜோதிஷத்துக்குச் சென்று நரகாசுரனை வதைத்தார். நரகனுக்கு 16000 கன்னிகைகளிருந்தார்கள். அவர்கள் யாவரையும் கிருஷ்ணன் அழைத்துவந்து விவாகஞ்செய்துகொண்டார். நரகன் தாயாரான பூமியானவள் 'அதிதி'யின் குண்டலத்தைக் கொணர்ந்து ஸ்ரீகிருஷ்ணனிடம் கொடுத்தாள். ஸ்ரீகிருஷ்ணன் வராக அவதாரம் எடுத்துப் பூமியைக் கிளப்பிவிடுவதற்காகப் பூமியைத்தொட்டபோது அந்தஸ்பர்சத்தால் பூமி கர்ப்பமாகி நரகனைப் பெற்றாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா விஷயங்களும் பிராகிருதமானவைகள். பொய்யானவைகள். விஷ்ணு வராகாவதாரம் எடுக்கவில்லை. ஆனால் பிரஜாபதியானவர் பிருதிவியைக்

கிளப்பிவிடுவதற்காக வாராஹரூபத்தைக் கைக்கொண்டார் என்று வேதத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணன்காலத்தில் நரகாஸுரன் பிராக்ஜோதிஷத்தில் அரசனாக இருக்கவில்லை. அக்காலத்தில் பகதத்தன் என்பான் அந்நகருக்கு ராஜாவாக இருந்தான். இவன் குருக்ஷேத்திர யுத்தத்தில் அர்ஜுனன்கையால் மாண்டான். ஆகையால் இந்திரன் துவாரகைக்குவந்ததும் பூமி கர்ப்பவதியானதும் ஒரேமனிதனுக்கு 16000 பெண்கள் இருந்தார்கள் என்பதும் பிராகிருதமான உபந்யாஸங்கள். ஸ்ரீகிருஷ்ணன் 16000 கன்னிகைகளை விவாகம்செய்துகொண்டார் என்பதும் கட்டுக்கதை. இதை வாசிப்போருக்கு அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை.

விஷ்ணுபுராணரீதியாக நரகாசுரவதம்முதல் பாரிஜாத ஹரணம்வரை உண்மையல்ல. ஸ்ரீகிருஷ்ணன் 'ஷிதி'யின் குண்டலத்தையெடுத்துக்கொண்டு அதை அவளுக்குக்கொடுப்பதற்காகச் சத்தியபாமையையும் அழைத்துக்கொண்டு இந்திரன் ஆலயத்துக்குச் சென்றார். அவ்விடத்தில் சத்தியபாமை, பாரிஜாதத்தைவிரும்பினாள். பாரிஜாதத்தை யபகரித்ததிலிருந்து, இந்திரனுக்கும் கிருஷ்ணனுக்கும் போர்நேர்ந்தது. இந்திரனே சண்டையில் தோற்றான். நாம் முன்னமே விஷ்ணுபுராணத்தை ஹரிவம்சத்துக்கு முந்தியதென்று நிரூபித்திருக்கிறோம். ஆதலால் இவ்விடத்தில் விஷ்ணுபுராணத்தையே யனுசரிக்கிறோம். இவ்விரு கிரந்தங்களிலும் சொல்லியிருக்கிற விருத்தாந்தங்கள் அற்புதமானவைகள், பிராகிருதமானவைகள். இந்திரன், இந்திராலயம், பாரிஜாதம் இவைகளே நிச்சயமற்றிருக்கும்போது பாரிஜாதஹரண விருத்தாந்தம் முழுமையும் நம்மால் நம்பத்தக்கதில்லை.

இதற்குப் பிறகு பாணாஸுர வதவிருத்தாந்தம் உளது. அதிலும் அதிப்ராகிருதமான விஷயங்களும் நிகழக்கூடாத நிகழ்ச்சிகளும் நிரம்பியிருக்கின்றன. அவற்றையும் நாம் தள்ளிவிடவேண்டியது. அதன்பிறகு பௌண்டிர வாசுதேவன் வதமும் வாராணஸியை நெருப்புக்கிரையாக்கியதும் காணப்படுகிறது. இக்கதையில் கொஞ்சம் உண்மையிருக்கிறதென்று தெரிகிறது. பௌண்டிர

வாசுதேவன் இருந்தான் என்பது உண்மை. இவ்விதமே பௌண்டிராஜாதி யென ஒரு ஜாதி யிருந்ததும் உண்மை. இது இதிஹாஸ காலத்துக்குமுன்பே பரதேச சரித்திர புத்தகங்களிலே காணப்படுகிறது. ஸ்ரீராமாயணத்தில் பௌண்டிரர்களை தாக்ஷிணாத்யர்கள் என்று சொல்லியிருக்கிறது. மகாபாரதத்தில் அவர்களைத் தற்கால வங்காளதேசத்தில் மேற்குப் பக்கத்திலிருப்பவர்களாக வருணித்திருக்கிறது. குருக்ஷேத்திர யுத்தத்தில் பௌண்டிரர்கள் வந்திருந்தபோது அவர்களை நாகரிகமற்ற ஜாதிகளினிடையில் கணக்கிட்டிருக்கிறார்கள். தசகுமார சரித்திரத்தில் அவர்களுடைய விருத்தாந்தமிருக்கிறது. சீனதேசத்து யாத்திரிகன், அவர்கள் வங்காளதேசத்தில் ஸ்தாபிக்கப்பெற்றதைப் பார்த்துவிட்டுப் போயிருக்கிறான். பௌண்டிரவர்த்தனமென்ற ஊரில் அவர்களுடைய ராஜதானியிருந்ததை அவன் கண்ணுற்றுச்சென்றிருக்கிறான். ஸ்ரீகிருஷ்ணனுடையகாலத்தில் அவர்களுக்கரசனாயிருந்தவன்பெயர் வாஸுதேவன். வாஸுதேவன் என்ற வார்த்தைக்கு அநேக அர்த்தங்கள் உள்ளன. வசுதேவரின்புத்திரன் வாஸுதேவன். எவன் எல்லாப்பிராணிகளுக்கும் விராமஸ்தானமோ அல்லது எல்லாப்பூதங்களுக்கும் வாஸஸ்தானமோ அவனும் வாஸுதேவன். வஸுவென்றால் எல்லாருக்கும் வாஸஸ்தானம். எவருடைய ரோமங்களில் எல்லா உலகங்களுமிருக்கின்றனவோ அவரே பரப்பிரும்மம்; ஈசுவரன். அவர் வாஸுதேவர் என்று அழைக்கப்படுகிறார். ஆகையால் எவர் ஈசுவரன் அவதாரமோ அவரே வாஸுதேவர் என்ற பெயருக்குரியவர். துவாரகையிலிருக்கிற வாஸுதேவன் போலிவாஸுதேவன் என்றும், தானே உண்மையான வாசுதேவனாகிய ஈசுவராவதாரம் என்றும், பௌண்டிரவாஸுதேவன் முழங்கினான். சக்கிரம் 'ஹஸ்தம்' 'மஹா' முதலானவைகளுக்குத் தானே அதிகாரியென்றும் தன்னிடமே அவைகளை அனுப்பிவிடவேண்டுமென்றும் அவைகளைத் தன்னிடம் ஒப்புவிக்கும்படிக்கும் அவன் ஸ்ரீகிருஷ்ணனுக்குச் சொல்லியனுப்பினான். ஸ்ரீகிருஷ்ணன் அப்படியேயாகட்டும் என்று சொல்லிப் பௌண்டிராராஜ்யத்துக்குப்போய் அஸ்திரங்களைப் பௌண்டிரகனிடம் விட்டெறிந்து அவனைக் கொன்றுவிட்டார். வாராணஸியின் அதிபதிகள் பௌண்

டிரகனின்கக்ஷியைச் சேர்ந்தவர்களாகையால் அவனிறந்தபிறகு ஸ்ரீகிருஷ்ணனுடன் விரோதித்து யுத்தம்செய்தார்கள். ஆகையால் அவர் வாராணஸியை யாக்கிரமித்து அந்நகரை யெரித்துவிட்டார். இவ்விடத்தில், சத்துருவைக் கொல்லுதல் அதர்மமில்லை. ஆனால் பட்டணத்தைக் கொளுத்துதல் தர்மமாகாது. மிகவும் தர்மாத்மாவான கிருஷ்ணன் இவ்வித அக்கிரமச்செய்கையை எதற்காகச் செய்தார் என்பதைக்குறித்து நம்பக்கூடியதான விவரம் ஓரிடத்திலும் கிடைக்கவில்லை.

விஷ்ணுபுராணத்திற் சொல்லப்பட்டதாவது:—

காசியரசன் ஸ்ரீகிருஷ்ணனுடைய கையால் மாண்டான். அவனுடைய மகன் மகாதேவரைக்குறித்துத் தவஞ்செய்து கிருஷ்ணனைக்கொல்வதற்காக 'க்ருத்யா' என்பது உண்டாகும்படி வரமளிக்குமாறு அவரைப் பிரார்த்தித்தான். அவ்விதமே பகவானான மகாதேவர் வரம் தந்தருளினார். 'க்ருத்யா' என்பதை 'சூனியம்' என்று சொல்லுவார்கள். அதாவது எக்ஞத்திலிருந்து ஒரு பெரிய சக்தி கிளம்பி எதிரியைக் கொல்லமுயலும். கிருத்தியையானது கிளம்பிப் பயங்கரமான உருவத்துடன் கிருஷ்ணனைக்கொல்வதற்காக ஓடிற்று. ஸ்ரீகிருஷ்ணன் தனது சுதர்சன சக்கரத்துக்குக் கட்டளையிட்டார். விஷ்ணுவின் சக்கிரத்தின் சக்தியால் மகாதேவரின் வரத்தாலுண்டானதாயிருந்தும் 'க்ருத்யா' தன் வலிமையிழந்ததாக ஓடிற்று. அது வாராணஸியில் புகுந்தது. அதைப் பின்பற்றிவந்த சக்கிராயுதத்தின் ஜ்வாலையால் வாராணஸி எரிந்தது. இது மிகவும் பிராகிருதமானதும் நம்பத்தகாததுமான விருத்தாந்தம். ஹரிவம்சத்தில் பௌண்டிரகவத கதை யிருக்கிறது, ஆனால் அதில் வாராணஸி எரிந்த கதை இல்லை. இதைப்பற்றிய பிரசங்கத்தின் சிறுபகுதி மகாபாரதத்தில் இருக்கிறது. ஆகையால் வாராணஸி தீவாய்ப்பட்ட கதை முழுப்பொய்யென்று நாம் தள்ளிவிடக்கூடாது. ஸ்ரீகிருஷ்ணன் வாராணஸியை எரித்ததான கெட்ட காரியத்துக்கு ஏன் உடன்பட்டார் என்றதற்குத் தகுந்த காரணம் ஒன்றும் புலப்படவில்லை.

யுத்தத்தின் விருத்தாந்தம் ஒருபுறமிருக்கட்டும். அதைத் தவிர உத்யோகபர்வம் 41-வது அத்தியாயத்தில் அர்ஜுன வாக்கியத்தால் ஸ்ரீகிருஷ்ணனால் முடிக்கப்பட்ட காந்தாரஜயம், பாண்டியஜயம், கலிங்கஜயம், சால்வஜயம், ஏகலவ்யனின்வதம் முதலிய கதைகளிருக்கின்றன. இவைகளில் சால்வராஜனை ஜயித்த விருத்தாந்தம் மகாபாரதம் வனபர்வத்திலிருக்கிறது. இதைத்தவிர விஸ்தாரமான விருத்தாந்தத்தை நாம் யாதொரு கிரந்தத்திலும் காணவில்லை. ஹரிவம்சம் புராணங்கள் இவைகள் இயற்றப்பட்ட காலத்துக்குமுன்னமேயே யுத்தத்தைப்பற்றிய "கிம்வதந்தீ" (ஜனங்களின் வார்த்தை) அழிந்துபோய்விட்டதென்று தோன்றுகிறது; ஹரிவம்சத்திலும் பாகவதத்திலும் புதிய விருத்தாந்தங்கள் அநேகமிருக்கின்றன. அவைகள் மகாபாரதத்திலாவது விஷ்ணுபுராணத்திலாவது காணப்பெறாமையால் அவைகளை நாம் தள்ளிவிடுகிறோம்.

---

## ஆறும் அதிகாரம்.

### துவாரகையில் வாசம்—ஸ்யமந்தகம்.

துவாரகையில் ஸ்ரீகிருஷ்ணன் அரசனாக இருக்கவில்லை. மிகவும் ஆராய்ந்துபார்த்ததில் தெரியவருகிறதென்னவென்றால், ஐரோப்பிய தேச சரித்திரத்தில் எதை ஸ்வல்ப ஜனங்களின் ஆளுகை (Oligarchy) என்று சொல்லுகிறார்களோ அவ்வித ஆளுகையே துவாரகையில் இருந்துவந்தது. துவாரகையில் ஜனங்களின் தலைவர்களாக யாதவர்கள் இருந்தார்கள். அவர்களுக்குள் ஒவ்வொருவரும் ஏற்றத் தாழ்ச்சியின்றிச் சமானமானவர்களாகவேயிருந்தார்கள். அவர்கள் தங்களுக்குள் வயதுசென்றவர்களை முக்கியஸ்தர்களாகக் கருதிவந்தார்கள். ஆகையால் உக்ரஸேனனுக்கு அரசன் என்ற பெயர் வந்தது. ஆனாலும் இம்முக்கியஸ்தனுக்கு எல்லாக்காரியங்களிலும் முக்கிய அதிகாரம் இல்லை. பராக்கிரமத்தில் எவர் சிறந்தவரோ அவருக்கே தலைமை கிடைக்கும். பலத்திலும் வீர்யத்திலும் புத்தியிலும் பிரதாபத்திலும் ஸ்ரீகிருஷ்ணனே யாதவர்களுக்குள் சிறந்தவர். ஆதலால் அவரே தலைவராயிருந்தார்.

அவருடைய அண்ணனான பலராமனும், வயதில் பெரியோரான கிருதவர்மாமுதலிய மற்ற யாதவர்களும் அவருக்கடங்கியிருந்தார்கள். ஸ்ரீகிருஷ்ணன் அவர்களுடைய நன்மையையே கருதிவந்தார். ஸ்ரீகிருஷ்ணன் அங்கே யிருந்துவந்ததால் எல்லாக் காரியங்களும் நிறைவேறின. ஸ்ரீகிருஷ்ணன் அநேக இராச்சியங்களை வென்று மிகவும் பொருள் தேடியும் அவற்றை ஞாதிகளுக்குக் கொடாமல் தானே எடுத்துக்கொள்ளவில்லை; தானுகமட்டும் அனுபவிக்கவில்லை. அவர் எல்லோரிடத்திலும் ஓரே மாதிரியாக நடந்துவந்தார். ஓரேவிதமாகப் பிரியம் உள்ளவராயிருந்துவந்தார். யாவர்க்கும் நன்மைசெய்துவந்தார். அவருடைய பலத்துக்கும் பராக்கிரமத்துக்கும் அஞ்சி யாதவர்கள் அவருக்குட்பட்டிருந்தார்கள் என்பது சரி. ஆனாலும் அவர்களுக்கு அவரிடம் பொறாமையால் விரோதமில்லாமலிருக்கவில்லை. இவ்விஷயத்தைக்குறித்து ஸ்ரீகிருஷ்ணன் நாரதரிடம் சொல்லி, நாரதர்வாக்கிலிருந்து பீஷ்மர் கேள்வியுற்றுப் பின் அவர் யுதிஷ்டிரருக்குச்சொல்லியிருக்கிறார். அக்கதை உண்மையாயிருப்பினும் பொய்யாயிருப்பினும் உலகத்துக்குப் புத்திபுகட்டுவதற்காக நாம் மகாபாரதம் சாந்திபர்வத்திலிருந்து அவர் சொன்னதை எடுத்தெழுதுகிறோம். அது,

"ஞாதிகளுக்கு ஐசுவரியத்தில் ஒருபகுதியைக் கொடுத்து அவர்களின் தீயசொற்களைக் கேட்டுக்கொண்டு அவர்களின் அடிமைபோல் நாம் இருந்துவந்தோம். பலராமரும் 'கத'ரும் வடிவிலும் நம்முடையகுமாரனான பிரத்யும்நன் அழகிலும் ஒப்பற்றவர்கள் என்று யாவராலும் கருதப்பட்டார்கள். மேலும் 'அந்தக' 'வ்ருஷ்ணி' வம்சஸ்தர்கள் மிகவும் பராக்கிரமசாலிகளாயும், உற்சாகமுள்ளவர்களாயும், முயற்சியுள்ளவர்களாயுமிருந்தார்கள். அவர்களுக்கு உதவிசெய்யாதவர்கள் நஷ்டமடைந்தார்கள். எவர்கள் உதவிசெய்தார்களோ அவர்கள் மிகுந்த லாபத்தையுமடைந்தார்கள். அவர்கள் எல்லோரும் நமக்கு உதவிசெய்ததால் நாம் இனிதே காலத்தைக் கழித்துவந்தோம். ஆஹுகரும், அக்ரூரரும் நமக்கு மிகவும் நண்பர்கள். ஆனாலும் ஒருவரிடம் அதிக நட்புக் காட்டினால் மற்றவருக்குக் கோபம்வந்துவிடுமென்று நாம் ஒருவ

ரிடமும் நட்பை வெளிக்காட்டவில்லை. எல்லோரிடமும் அதிகமாகப் பிரீதிவைத்திருந்ததால் ஒருவரை விட்டுவிடுவதும் நமக்கு மிகவும் கடினமாயிருந்தது. அதன்பிறகு நாம் நிச்சயம் செய்ததாவது:—ஆஹுகரும் அக்குரூரரும் எவருடைய பக்ஷத்திலிருக்கிறார்களோ அவருக்குத் துக்கத்துக்கே இடமில்லை; மேலும் அவர்கள் யாருடையசார்பாக இருக்கவில்லையோ அவரைக்காட்டிலும் துக்கம் உள்ளவர் வேறு ஒருவருமில்லை. எப்படியிருந்தாலும் சூதாடுகிற இரு சகோதரர்களின் தாயைப்போல் இருவருடைய ஜயத்தையும் நாம் விரும்பினோம். இவ் விருநண்பர்களையும் பிரியப்படுத்தும்பொருட்டு நாம் இவ்விதக் கஷ்டத்துக்குள்ளானோம்''. என்பது.

இக்கதைக்குத் திருஷ்டாந்தமாக ஸ்யமந்தகமணியின் விருத்தாந்தத்தை இதைப்படிப்போருக்குச் சொல்லவிரும்புகிறோம். ஸ்யமந்தகமணியின்விருத்தாந்தம் 'வ்யாகரூத' சங்கதிகள் நிரம்பியது. அச்சங்கதிகளில் எவை உண்மையானவைகளோ, எவை பொய்யானவைகளோ நம்மாற் சொல்லமுடியாது. அவை எப்படியிருந்தாலும் படிப்போருக்கு அதைச் சொல்ல விரும்புகிறோம்.

ஸத்ராஜித்தென்று ஒரு யாதவன் துவாரகையிலிருந்துவந்தான். அவனுக்கு எல்லோராலும் விரும்பத்தகுந்ததும், மிகவும் ஒளியுள்ளதுமான ஒரு மணி கிடைத்தது. அந்த மணியின்பெயர் ஸ்யமந்தகம். அது யாதவர்களுக்குத் தலைவரான உக்ரஸேநருக்கே தகுந்தது. ஆனால் ஞாதிகளுக்குள் விரோதம் ஏற்படுமென்று பயந்து, உக்ரஸேநருக்குக் கொடுக்கவேண்டுமென்று ஸத்ராஜித்தை ஸ்ரீகிருஷ்ணன் கேட்கவில்லை. ஆனால் ஸ்ரீகிருஷ்ணன் இவ் விரத்நத்தை விரும்புவாரோ என்று ஸத்ராஜித்து அஞ்சினான். அதை அவர் கேட்டால் மறுக்க முடியாதேயென்று பயந்து மணியைத் தன்னிடம்வைத்துக்கொள்ளாமல் தன்னுடைய பிராதாவான பிரஸேநனுக்குக் கொடுத்தான். பிரஸேநன் அதையணிந்துகொண்டு வேட்டைக்காகக் கானகம் சென்றான். ஒருசிங்கம் காட்டில் பிரஸேநனைக் கொன்று மணியை வாயிற் கௌவிக்கொண்டு ஓடிவிட்டது. ஜாம்பவான் அச்சிங்கத்தைக்கொன்று மணியையெடுத்துக்

கொண்டார். ஜாம்பவான் ஒரு கரடி. அவர் திரேதாயுகத்தில் ஸ்ரீ ராமன் வானரசேனையிலிருந்து அவருடையசார்பில் யுத்தம்செய்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இப்பொழுது பிரஸேநன் மாண்டதையும், மணி காணமற் போனதையும் தெரிந்துகொண்டு துவாரகையில் இருந்தோர் எல்லோரும் ஸ்ரீகிருஷ்ணன் மணியை விரும்பியிருந்ததால் அவரே பிரஸேநனைக் கொன்று மணியை யபகரித்திருப்பாரென்று ஐயுற்றனர். இவ்வபவாதத்தை ஸ்ரீகிருஷ்ணன் சகிக்கமுடியாமல் மணியைத் தேடுவதற்காக வெளியே புறப்பட்டார். எவ்விடத்தில் பிரஸேநனின் சரீரம் காணப்பட்டதோ அவ்விடத்தில் சிங்கத்தின் அடிச்சுவடுகளேயும் அவர் கண்டார். அவைகளை எல்லோருக்கும் காண்பித்து அபவாதத்தை அவர் நீக்கிக்கொண்டார். அவர் சிங்கத்தின் காலடிகளைப் பின்பற்றிப் பிறகு கரடியின் அடிச்சுவடுகளைக் கண்ணுற்றார். அச்சுவடுகளின்வழியேபோய் ஒரு குகையின்மத்தியில் நுழைந்தார். அங்கே ஜாம்பவானுடைய குழந்தைகளை வளர்ப்பவளான ஒரு தாதியின்கையில் அதே ஸ்யமந்தகமணியைக் கண்டார். பிறகு ஜாம்பவானுடன் சண்டை செய்து வென்றார். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணனிடம் ஜாம்பவான் ஸ்யமந்தகமணியைக் கொடுத்தார்; தன்னுடைய கன்னிகையான ஜாம்பவதியையும் அவருக்கே கொடுத்தார். ஸ்ரீகிருஷ்ணன் மணியை யெடுத்துக்கொண்டு துவாரகைசென்று அதை ஸத்ராஜித்தினிடமே கொடுத்துவிட்டார். அவர் பிறர்பொருளுக்கு ஆசைப்படுகிறவர் அல்லர். ஸ்ரீ கிருஷ்ணன்மேல் தான் அநியாயமாய்ப் பழி சுமத்தினதற்காக, ஸத்ராஜித்து பயந்து அவரைச் சமாதானப்படுத்துவதற்காகத் தன் பெண்ணான சத்யபாமாவை அவருக்கே கொடுத்துவிட்டான். ஸத்யபாமையானவள் யாவரும் ஆசைப்படும்படியான அழகுநிறைந்த கன்னிகையாயிருந்தாள். ஆதலால் முக்கியமான சததந்வா 1 மகாவீரனை கிருதவர்மா 2 ஸ்ரீகிருஷ்ணனுடைய பக்தனையும் மித்திரனையுமுள்ள அக்குரூரன் 3 ஆக மூவர்களும் இக்கன்னிகையை விரும்பினார்கள். அவர்கள் ஸத்யபாமாவை ஸ்ரீகிருஷ்ணனுக்குக் கொடுத்துவிட்டதால் தங்களை அவமானப்படுத்தினதாகநினைத்து, ஸத்ராஜித்தைக்

கொல்ல உபாயம் தேடினார்கள். அக்குரூரரும், கிருதவர்மாவும் ஸத்ராஜித்தைக் கொன்று மணியைக் கொண்டுவரும்படி சததன்வாவைத் தூண்டிவிட்டார்கள். ஸ்ரீகிருஷ்ணன் வந்து அவனுக்கு விரோதம் செய்யும்பக்ஷத்தில் தாங்கள் அவனுக்குச் சகாயம்செய்து ஸ்ரீகிருஷ்ணனை எதிர்ப்பதாயும் சொன்னார்கள். சததன்வா அவர்களுடையவார்த்தைக்குடன்பட்டு, ஸ்ரீகிருஷ்ணன் வாரணாவதம் சென்றிருந்த சமயத்தில் சத்ராஜித்து தூங்கிக் கொண்டிருக்கும்போது அவனைக் கொன்று மணியைக் களவாடி வந்தான். ஸத்யபாமை தன் தகப்பன் கொல்லப்பட்டதால் வருத்தமடைந்து ஸ்ரீகிருஷ்ணனிடம் முறையிட்டாள். ஸ்ரீகிருஷ்ணன் துவாரகைக்குத் திரும்பிவந்து பலராமனுடன்கூடிச் சததன்வாவைக் கொல்லமுயற்சித்தார். அம்முயற்சியையறிந்து சததன்வாவானவன் கிருதவர்மாவையும் அக்குரூரரையும் உதவிக்கு அழைத்தான். அவர்கள் ஸ்ரீகிருஷ்ணனுடனும் பலராமருடனும் விரோதங்கொள்ள மறுத்தார்கள். அப்பொழுது சததன்வாவானவன் வேறு கதியின்றி அக்குரூரரிடம் மணியை யொப்புவித்துவிட்டு விரைவாய்ச் செல்லக்கூடிய ஓர் குதிரையின்மேலேறிக்கொண்டு ஓடிவிட்டான். ஸ்ரீகிருஷ்ணனும் பலராமரும் ரதத்திலேறிச் சென்றதால் குதிரையுடன் தொடர்ந்துபோக அவர்களால் முடியவில்லை. சததன்வாவின் குதிரை நடுவழியி லிறந்துவிட்டது. பிறகு சததன்வா கால்நடையாக ஓட ஆரம்பித்தான். அப்பொழுது நியாயம் தவறாமல் யுத்தம்செய்பவரான ஸ்ரீகிருஷ்ணன் தேரில் பலராமரை இருக்கச்செய்து தான் கால்நடையாகச் சததன்வாவைப் பின்பற்றியோடினார். ஸ்ரீகிருஷ்ணன் இரண்டுகுரோச தூரம் ஓடிச் சததன்வாவைப் பிடித்து அவன் தலையை நறுக்கிவிட்டுத் திரும்பிவந்து பலராமரிடம் இந்தச் செய்தியைச் சொன்னார். ஆனால் அவர் செய்தியை நம்பவில்லை. ஸ்ரீகிருஷ்ணன் பொய்சொன்னதாகப் பலராமர் நினைத்தார். ரத்நத்தில் தனக்குக் கிடைக்கவேண்டிய பாகத்தைத் தனக்குக் கொடாமல் ஸ்ரீகிருஷ்ணன் மோசம்செய்கிறானென்று நினைத்த பலராமன் கிருஷ்ணனிடம் "உன்னைச் சுடவேண்டும்; நீ பேராசைகொண்டவன்; இதோ வழியிருக்கிறது, நீ துவாரகைக்குப் போய்விடு; நான் இனித் துவாரகைக்கு வருவதில்லை"யென்று சொல்லி ஸ்ரீகிருஷ்ணனை விட்டுப்பிரிந்து பரதேசம்போய்விட்டார்.

அங்கேயே மூன்றுவருஷம் வாசம்செய்தார். அப்பொழுது அக்ரூரரும் துவாரகையைவிட்டு ஓடிவிட்டார். யாதவர்கள் போய் அக்ரூரருடைய பயத்தை நீக்கி அவரைத் துவாரகைக்கு அழைத்துவந்தார்கள். ஒருநாள் ஸ்ரீ கிருஷ்ணன் எல்லா யாதவர்களையும் கூட்டிவைத்து அக்ரூரரிடம் "மணி உன்னிடம் இருக்கிறது; நமக்குத் தெரியும்; அது உன்னிடமே யிருக்கட்டும்; அதை ஒருதடவை எல்லா யாதவர்களுக்கும் காண்பித்துவிடு" என்று கூறினார். அக்ரூரரானவர், மணியை நாமாகவே காட்டாவிடில் எவ்விதத்திலும் மணி நம்மிடமிருந்து வெளியேறிவிடும் என்று நினைத்துத் தானாகவே மணியைக் காட்டினார். அதைப் பார்த்துப் பலராமரும், சத்யபாமையும் அந்த மணியைக் கவர்ந்து கொள்ள மிகவும் விரும்பினார்கள். ஆனால் ஸத்யப்பிரதிஜ்ஞரான ஸ்ரீகிருஷ்ணன் அதை அவர்களுக்குக் கொடுக்கவில்லை. தானும் எடுத்துக்கொள்ளவில்லை. அக்ரூரரிடமே திருப்பிக்கொடுத்து விட்டார். இவ்விதம் விஷ்ணுபுராணத்திலிருக்கிறது. [தானே அணிந்துகொண்டாரென்று ஹரிவம்சத்திலிருக்கிறது.]

ஸ்யமந்தக மணியின் விருத்தாந்தத்திலிருந்து ஸ்ரீகிருஷ்ணன் நியாயத்துக்குக் கட்டுப்பட்டவரென்றும், தன்னலம் பாராட்டாதவரென்றும், சத்தியப்பிரதிஜ்ஞர் என்றும், காரியத்தை நிறைவேற்ற வல்லவரென்றும் வெளியாகின்றன. ஆனால் ஸ்யமந்தகமணியின் விருத்தாந்தம் உண்மையா என்று ஆராயவேண்டும்.

---

## ஏழாம் அதிகாரம்.

### கிருஷ்ணனின் அநேக விவாகங்கள்.

ஸ்யமந்தகமணியின் விருத்தாந்தத்திலிருந்து ஸ்ரீகிருஷ்ணனுக்கு அநேக விவாஹங்கள் நிகழ்ந்திருக்குமென்று நீங்கள் ஊஹித்திருப்பீர்கள். முதலில் ருக்மிணியை விவாகம்செய்தார்; ஸ்யமந்தகமணியின் பிரபாவத்தால் வேறு இரு கன்னிகைகளையும் அதாவது ஜாம்பவதியையும் ஸத்யபாமையையும் அடைந்தார்; இம் மட்டுமே விஷ்ணுபுராணத்தில் சொல்லியிருக்கிறது. ஹரிவம்சத்

தில் கிருஷ்ணன் 4 கன்னிகைகளை மணந்ததாகச் சொல்லியிருக்கிறது. ஸத்ராஜித்துக்கு வேறு கன்னிகைகளுமிருந்தார்கள். 1. ஸத்யபாமை 2. பிரஸ்வாபினி 3. விரதினீ இம்மூவர்களையும் ஸ்ரீ கிருஷ்ணனுக்கு ஸத்ராஜித்து அர்ப்பணம் செய்தான். இந்த நான்குகன்னிகைகளுடன்மட்டும்நிற்கவில்லை 16000-க்கு மேலாகிவிட்டது. இவ்விதமாகவே சாமான்யஜனங்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

விஷ்ணுபுராணம் 4-வது அம்சத்தில்—மனித உலகிலவதரித்த பகவானுக்கு 16101 ஸ்திரீகள் இருந்தார்கள் என்றும் இந்த ஸ்திரீகளின் கருப்பத்தில் ஸ்ரீகிருஷ்ணனுக்கு ஒரு லட்சத்து எண்பதினாயிரம்பிள்ளைகள் பிறந்தார்களென்றும், 150 வருஷகாலம் பூலோகத்தில் இருந்தாரென்றும் சொல்லியிருக்கிறது. பிரித்துக் கணக்குப்போட்டால் ஒரு வருஷத்துக்கு 1440 பிள்ளைகள் வீதமும் நாளொன்றுக்கு நான்குபிள்ளைகள் வீதமும் ஜனித்திருக்கவேண்டும். இதேயிடத்தில் ஸ்ரீகிருஷ்ணனின் இச்சையினாலேயே அவருடையபார்யைகள் கர்ப்பம் தரித்தார்கள் என்று சொல்லியிருக்கிறது. நரகாசுரனுக்கு 16000 கன்னிகைகளிருந்ததாகச்சொல்வது பொய்யென்று முன்னமே சொல்லியிருக்கிறோம். இவர்களைத் தவிர ஸ்ரீகிருஷ்ணனுக்கு 8 முக்கியமான ஸ்திரீகள் இருந்தார்கள் என்று மற்றும் 7 பெயர்களையும் பெயர்குறித்து விஷ்ணுபுராணத்திற் கூறியிருக்கிறது. ஆனால் 5-வது அம்சம் 28-வது அத்தியாயத்தில் ருக்மிணியைத் தவிர்த்து 8 பெயர்களையும் பெயரைச்சொல்லிக் குறித்திருக்கிறது.

‘𑌰𑍁𑌕𑍍𑌮𑌿𑌣𑍀 𑌮𑌿𑌤𑍍𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌾 𑌚 𑌸𑌤𑍍𑌯𑌾 𑌨𑌾𑌗𑍍𑌨𑌜𑌿𑌤𑍀 𑌤𑌥𑌾 ।
𑌦𑍇𑌵𑍀 𑌜𑌾𑌂𑌬𑌵𑌤𑍀𑌚𑌾𑌪𑌿 𑌰𑍋𑌹𑌿𑌣𑍀 𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌿𑌣𑍀 ॥

𑌮𑌦𑍍𑌰𑌰𑌾𑌜𑌸𑍁𑌤𑌾𑌚𑌾𑌨𑍍𑌯𑌾 𑌸𑍁𑌶𑍀𑌲𑌾 𑌶𑍀𑌲𑌮𑌣𑍍𑌡𑌨𑌾 ।
𑌸𑌾𑌤𑍍𑌰𑌾𑌜𑌿𑌤𑍀 𑌸𑌤𑍍𑌯𑌭𑌾𑌮𑌾 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌾 𑌚𑌾𑌰𑍁𑌹𑌾𑌸𑌿𑌨𑍀 ॥

1. காளிந்தீ, 2. மித்ரவிந்தா, 3. நக்னஜித்தின் பெண் ஸத்யை, 4. ஜாம்பவதீ, 5. ரோகிணீ (இவள் 𑌕𑌾𑌮𑌰𑍂𑌪𑌿𑌣𑍀—நினைத்த உருவத்தை யெடுத்துக்கொள்ளக்கூடியவள்) 6. மத்ரராஜனின்

குமாரி சுசீலை 7. ஸத்ராஜித்தின் குமாரி ஸத்யபாமை 8. லக்ஷ்மணை. ருக்மிணியைச்சேர்த்து 9 பெயர்களாகிறது.

[குறிப்பு:—விஷ்ணுபுராணத்தையும் ஹரிவம்சத்தையும் அத்தியாயங்கள் தோறும் பரிசீலனைசெய்து இந்தக் கிருஷ்ணசரித்திரம் எழுதுபவர் முடிவாக ஒருவார்த்தை சொல்லியிருக்கிறார். ஸ்ரீகிருஷ்ணனின் பார்யைகள் குமாரர்கள் இவர்களின் பெயரைக் குறித்தும் விரிவாக எழுதியிருக்கிறார். அவைகள் எல்லாவற்றையும் தமிழில் மொழிபெயர்த்தால் வாசிப்போருக்கு ரஸமாக இருக்காது என்று நினைத்து இங்கே எழுதவில்லை.]

ஸ்ரீகிருஷ்ணனின் பார்யைகளுக்குள் சைப்யை, காளிந்தீ, மித்திரவிந்தை, லக்ஷ்மணை, மாத்ரீ, சுசீலை இவர்கள் ஐவரையும் கிருஷ்ணன் எங்கே மணந்தார்? எப்படி விவாகம் நடந்தது? என்கிற விவரம் ஒன்றும் சொல்லப்படவில்லை. ஸ்ரீகிருஷ்ணனின் வாழ் நாட்களில் இவர்களை அவர் ஸ்பர்சம் செய்ததில்லை. ஆனால் விஷ்ணு புராணக்காரர் ஸ்ரீகிருஷ்ணனின் பிள்ளைகளைக் கணக்கிடும்போது மேற்கண்டிருக்கிற ஐந்துஸ்திரீகளின் புதல்வரையும் சேர்த்துக் கணக்கிட்டிருக்கிறார். அவர்கள் ஒருவரைப்பற்றியும் பிறகு காரியங்கள் நடந்தபோது நாம் கேள்விப்படவேயில்லை. இவ்வைந்துஸ்திரீகளும் எத்தேயத்தைச் சேர்ந்தவர்கள்? எவர்களுடைய குமாரிகள்? என்ற விருத்தாந்தம் ஒன்றும் அங்கே எழுதப்படவில்லை. சுசீலையென்பவள் 'மத்ர' ராஜனின் கன்னிகை யென்பதுமட்டும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணன்காலத்திலிருந்த மத்ரவரசனுனவன் நகுல சகாதேவர்களின் அம்மான். அவன் குருக்ஷேத்ர யுத்தத்தில் 17-நாட்கள்மட்டும் இரு சேனைகளுக்கும் மத்தியில் இருந்தான். அவன் அநேகசமயங்களில் சத்ருவின் சேனையுடன் இருந்தான். அவனே ஸ்ரீகிருஷ்ணனைப்பற்றிய கதைகளைச் சல்லியனுக்குச் சொல்லியிருக்கிறான். சல்லியனைப்பற்றிய விருத்தாந்தங்களையும் கிருஷ்ணனுக்குச் சொல்லியிருக்கிறான். இவ்விருவருக்குள் ஒவ்வொருவரின் கதைகளையும் மற்றவரிடமிருந்து கேட்டுமிருக்கிறான். ஸ்ரீகிருஷ்ணனுனவர், சல்யனின் மாப்பிள்ளையா அல்லது சகோதரியின் புருஷனு அல்லது அவர்களுக்குள் வேறு யாது சம்பந்தம் என்று புலப்படவில்லை. ஆனால் கர்ணனிடம் சல்யன் "அர்ஜுனனுக்கும் வாசுதேவனுக்கும் இவ்விடந்தான் விவாகம்

நடந்தது" என்று சொல்லியிருக்கிறான். சல்யனைக் கொல்லும்படி ஸ்ரீகிருஷ்ணன், யுதிஷ்டிரரைத் தூண்டிவிட்டு அவர் அவனுக்கு யமஸ்வரூபமாக இருந்தார். ஸ்ரீகிருஷ்ணன் மாத்ரீயை விவாகம் செய்துகொண்டார் என்பது பொய்யாகத்தோன்றுகிறது. சைப்யை, காளிந்தி, மித்ரவிந்தை, லக்ஷ்மணை இவர்களின் குலம், குணம், தேசம், விவாகம் இவைகள் எவையென்று சிறிதும் காணக் கிடைக்கவில்லை. ஆனால் அவர்களைப்பற்றிய காவியங்களும், அலங்காரக் கிரந்தங்களும் இருக்கின்றன. மாத்ரீ, ஜாம்பவதி, ரோகிணி, ஸத்யபாமை இவர்களைப்பற்றி இவ்விதமாகக் காண்கிறோம். ஆனால் ஜாம்பவதியின் கதைக்கும் காளிந்தியின் கதைக்கும் வித்தியாசம் என்னவென்றால், அவளுடைய புத்திரனை சாம்பனின் பெயர், பாஞ்சஜனர்களான யாதவர்களின் மத்தியில் காணப்படுகிறது. ஆனால் சாம்பன் லக்ஷ்மணஹரணத்தில்மட்டும் உபயோகமாயிருந்தான். லக்ஷ்மணை துர்யோதனனின் கன்னிகை. மகாபாரதத்தில் பாண்டவர்களின் ஜீவியசரித்திரம் எவ்வளவு சொல்லப்பட்டிருக்கிறதோ அவ்வளவே கௌரவர்களின் ஜீவியசரித்திரமும் சொல்லப்பட்டிருக்கிறது. லக்ஷ்மணையின் ஹரணமென்பது உண்மையாயிருப்பின் மகாபாரதத்தில் அதைப்பற்றிச் சொல்லியிருக்கக்கூடும். அப்படிக் காணப்படவில்லை. ஜாம்பவதி, கரடியின் கன்னிகை. அவள் பெண்கரடி. பெண்கரடி கிருஷ்ணனின் பார்யையாகவாவது அல்லது வேறு மனிதனின் பார்யையாகவாவது இருப்பது இயலாது. அவள் காமரூபிணியாயிருந்ததால் பெண் கரடியாயிருந்தும், மனித உருவத்தை எடுத்திருத்தல்கூடும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் பெண்கரடியானது மனித உருவம் எடுத்ததென்று நாம் நம்பவில்லை. கிருஷ்ணன், கரடியின் பெண்ணை விவாகம்செய்துகொண்டாரென்றும் நம்மால் நம்பக்கூடவில்லை.

ஸத்யபாமாவுக்குப் புத்திரன் இருந்ததாகக் கேள்விப்படுகிறோம். ஆனால் அவன் காரியங்களில் ஈடுபட்டதாக ஓரிடத்திலும் எழுதப்படவில்லை. இதுதான் அவனிருந்ததைப்பற்றிச் சந்தேகித்தற்கு முதலாவது காரணம். ஆனால் ருக்மிணியைப்போல், சத்தியபாமையையும் காரியங்கள் நிகழும்போது இடையிடையே காண்கிறோம். அவளுடைய விவாகத்தைப்பற்றி விரிவாய் முன்பே விசாரித்திருக்கிறோம்.

மகாபாரதம் வனபர்வத்தில் 'மார்க்கண்டேய ஸமஸ்யா' அத்தியாயத்தில் ஸத்யபாமாவைக் காண்கிறோம். இந்த அத்தியாயம் பிரக்ஷிப்தம். மகாபாரதம் வனபர்வத்தைக்குறித்துப் பரிசீலனை செய்யும்போது இதைப்பற்றி விஸ்தாரமாக இதைப் படிப்போர் காண்பார்கள். இவ்விடத்தில் ருக்மிணிக்கும், ஸத்யபாமைக்கும் சம்வாதம் என்று ஒரு சிறு அத்தியாயமிருக்கிறது. அதுவும் பிரக்ஷிப்தம். மகாபாரதக் கதைக்கும் அவ்வத்தியாயத்திற் சொல்லப்பட்ட கதைக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. அவ்வத்தியாயத்தில் ஸ்திரீகள் தங்களுடைய கணவர்களின் விஷயத்தில் எவ்விதம் நடந்துகொள்ளல்வேண்டுமென்பதுமுதலான சங்கதிகள் மட்டும் அடங்கியிருக்கின்றன. மேலும் அந்த அத்தியாயத்தில் பிரபந்தலக்ஷணமும் நவீனமாயிருக்கிறது.

அதன்பிறகு உத்யோகபர்வத்திலும் ஸத்யபாமாவைக் காணலாம். 'யானஸந்தி பர்வா'த்தியாயத்திலும் காணலாம். அந்த அத்தியாயமும் பிரக்ஷிப்தமென்று அந்த அத்தியாயத்தைப் பரிசீலனை செய்யுங்காலத்தில் தெரியவரும். குருக்ஷேத்திர யுத்தத்துக் கழைக்கப்பட்டுக் கிருஷ்ணன் 'உபப்லாவ்ய' நகரத்துக்கு வந்தார். யுத்தத்துக்குச்செல்லும்போது ஸ்திரீயை அழைத்துச் செல்ல வேண்டிய அவசியமொன்றுமில்லாததால், சத்யபாமையைக் கூட்டிக்கொண்டுபோகவில்லையென்று மகாபாரதத்தைப் படித்தால் தெரியவரும். யுத்தத்தைப்பற்றிய விவரங்களிலும் மற்றையிடங்களிலும் சத்யபாமையின் கதையொன்றுமில்லை. ஸ்ரீகிருஷ்ணனின் மனுஷ்யலீலைமுடிந்தபின்னர் 'மௌஸல' பர்வத்தில் ஸத்யபாமையின்பெயர் காணப்படுகிறது. ஆனால் அந்த மௌஸலபர்வமும் பிரக்ஷிப்தமென்பதைப் பின்னால் காண்பீர்கள்.

முடிவாக, மகாபாரதத்தின் எந்தப் பாகங்கள் சந்தேகமின்றி மூலபாரதத்தைச் சேர்ந்தவைகளென்று அங்கீகரிக்கப்படுகின்றனவோ, அந்தப் பாகங்களில் சத்தியபாமையின் பெயரில்லை. பிரக்ஷிப்தங்களென்று கொள்ளப்படுகிற எல்லாப்பாகங்களிலும் அப்பெயர் காணப்படுகிறது. ஸத்யபாமையின் சம்பந்தமான சந்தேகத்துக்கு இது இரண்டாவது காரணம்.

அதன்பிறகு விஷ்ணுபுராணத்தில் ஸ்யமந்தகமணியின் விருத்தாந்தத்தின் நடுவில் அவளுடைய விவாகக்கதை யிருக்கிறது. [ஸ்ரீகிருஷ்ணனுக்குக் கரடியின்பெண்ணைக் கல்யாணம்செய்தன ரென்பதும் கட்டுக்கதை.] இந்த விவாகத்தைக் காரணமாகக் கொண்டு, துவேஷத்தை யடைந்து சததன்வாவானவன் சத்யபாமாவின் தகப்பனை ஸத்ராஜித்தைக் கொன்றுவிட்டான். அக்காலத்தில் பாண்டவர்கள் அரக்குமாளிகையி லகப்பட்டதாகக் கேள்விப்பட்டு, ஸ்ரீகிருஷ்ணன் அவர்களைத் தேடுவதற்காக 'வாரணவதம்' சென்றிருந்தார். அதேசமயம் சத்தியபாமை ஸ்ரீகிருஷ்ணனிடம் முறையிட்டாள் என்று எழுதியிருக்கிறது. இக்கதை பொய். ஸ்ரீகிருஷ்ணன் வாரணவதம் சென்றிருந்தால் மகாபாரதத்தில் குறிக்கப்பட்டிருக்கும். அங்கே சொல்லவில்லை. இந்தக் கதையைப்பற்றிச் சந்தேகங்கொள்வதற்கு இது மூன்றாவது காரணம்.

விஷ்ணுபுராணத்தில் பாரிஜாதஹரண விருத்தாந்தம் காணப்படுகிறது. அது நிகழக்கூடாத பொய்க்கதை. இது சம்பந்தமான விஷயங்களில் பிரகிருதமானதும் நம்பத்தகுந்ததுமான கதை விஷ்ணுபுராணத்தில் ஓரிடத்திலுமில்லை. சந்தேகத்துக்கு இது நான்காவது காரணம்.

மகாபாரதம் ஆதிபர்வத்தில் ஸம்பவ பர்வாத்தியாயத்தில் 67-வது அத்தியாயத்தின் பெயர் அம்சாவதரணம். மகாபாரதத்தில் காணப்படுகிற நாயகர்கள் நாயகிகள் இவர்களுக்குள் எவர்கள் தெய்வாம்சம்பெற்றும், எவர்கள் அஸுரராக்ஷஸாம்சங்கள் பெற்றும் ஜனித்தார்கள் என்பதைக்குறித்து அவ்வத்தியாயத்தில் எழுதப்பட்டிருக்கிறது. சேஷபாகத்தில் ஸ்ரீகிருஷ்ணன் நாராயணன் அம்சமென்றும், பலராமன் ஆதிசேஷனின் அம்சமென்றும் பிரத்யும்நன் ஸநத்குமாரன் அம்சமென்றும், துரௌபதி 'ஶசீ'யின் அம்சமெனவும், குந்தியும், மாத்ரியும் 'ஸித்தி'யுடையவும் 'த்ருதி' யுடையவும் அம்சமென்றும் எழுதப்பட்டிருக்கிறது. கிருஷ்ணனுடைய 16000 மகிஷிகளும் 'அப்ஸரஸ்'களின் அம்சமென்றும் ருக்மிணி லக்ஷ்மிதேவியின் அம்சமென்றும் எழுதப்பட்டிருக்கிறது.

கிருஷ்ணனின் வேறு மகிஷியின் பெயரைக் காணவில்லை. சந்தேகத்துக்கு இது ஐந்தாவது காரணம். சந்தேகமானது சத்யபாமையைப்பற்றிமட்டிலுமில்லை. ருக்மிணியைத்தவிர்த்து கிருஷ்ணனின் மகிஷிகளாகச் சொல்லப்படுகிற எல்லாரைப்பற்றியும் சந்தேகமிருக்கிறது. நரகாசுரனுக்கு 16000 பெண்களிருந்தார்கள் என்பது ஸம்பவிக்கக்கூடாதது என்பதுமட்டிலுமில்லை. ருக்மிணியைத் தவிரக் கிருஷ்ணனுக்கு வேறு பார்யைகளே கிடையாதென்று மகாபாரதத்தின் இந்தப் பாகத்தின்மூலமாக உறுதியாகிறது.

கரடியின் தௌஹித்திரனை சாம்பன்சம்பந்தமாக நாம் சொன்னதை ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். ருக்மிணியை ஒழிய வேறுமகிஷிகளாவது அவர்களின் பிள்ளைகள் பேரன்களாவது காரியம்செய்வதில் பிரயோஜனப்பட்டார்களென்று காணப்படவில்லை. ருக்மிணியின் வம்சத்தில் அரசர்கள் இருந்தார்கள். வேறு மகிஷிகளின் வம்சத்தில் யாராவது அரசர்கள் எங்கேயாவது எப்பொழுதாவது இருந்ததாகப் புலப்படவில்லை. இந்தக்காரணங்களையிட்டு ருக்மிணியைத்தவிர்த்து ஸ்ரீ கிருஷ்ணனுக்கு வேறு பார்யை யிருந்ததில்லையென்று நம்மால் உறுதியாகச் சொல்லமுடியும். அவருக்கு ஒரே பார்யைதான். பஞ்சபாண்டவர்களுக்குள் ஒவ்வொருவருக்கும் பல பல பத்நிகள் இருந்தார்கள். ஆதர்ச தர்மாத்மாவான பீஷ்மர் தனது கனிஷ்டப் பிராதாவுக்காகக் காசியரசனின் மூன்றுகன்னிகைகளை அபஹரணம் செய்துகொண்டு வந்தார். ஆனால் ஸ்ரீகிருஷ்ணனுக்கு ஒரே விவாகத்தைத்தவிர வேறு விவாகம் நடக்கவேயில்லை; வேறுவிவாகத்தில் அவருக்கு விருப்பம் இல்லை.

ஒரு புருஷனுக்கு ஒரு விவாகத்தைத்தவிர மறுவிவாகம் செய்வது எல்லா நிலைமைகளிலும் அதர்மம். சரியான காரணமில்லாமல் ஒரு புருஷன் மறுவிவாகம்செய்துகொள்வது அதர்மமென்று நாம் நிச்சயம் செய்கிறோம். ஆனால் அப்படிச்செய்வது எல்லாநிலைமைகளிலும் அதர்மமன்று. பத்நி, குஷ்டவியாதியால் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தால் அவள் தன் புருஷனுக்கு உலகவாழ்க்கையில் எவ்விதத்திலும் உதவியாயிருக்கமுடியாது. அந்த நிலைமை ஏற்பட்டிருந்தாலொழிய மற்ற இடங்களில் மறுதாரம் கல்யாணம் செய்து கொள்வது நியாயமென்று நமக்குத்தோன்றவில்லை. ஒருவனுடைய

ஸ்திரீயானவள் தர்மப்பிரஷ்டையாயும் குலத்தைக் கெடுப்பவளாயு மிருந்தால் நியாயஸ்தலத்தில் முறையிட்டு அவளை விலக்கிவிடாமல் மறுகல்யாணம் செய்துகொள்வது சரியென்று நமது சிற்றறிவுக் கெட்டவில்லை. நியாயஸ்தலத்தினிடம் மரியாதையான எண்ணம் எவ்வளவிருக்கிறதென்று நாகரிகமுள்ளவர்களைப்பார்த்தால்தெரிய வரும். எவனுக்கு உத்தராதிகாரி (சந்ததி) அவசியமோ அவ னுடைய ஸ்திரீ மலடியாயிருப்பாளானால், அவன் மறுகல்யாணம் செய்துகொள்ளாமலிருப்பதை நாமறியவில்லை. ஐரோப்பியர்களின் வழக்கத்தில் எந்நிலைமையிலும் புருஷன் இரண்டாவது விவாகம் செய்துகொள்ளுவதில்லை. ஐரோப்பியர்களுக்குள் இவ்விதமான கெட்டவழக்கமில்லாமலிருந்தால் நெப்போலியன் ஜோஸபைனைத் தள்ளிவிட்டதான கொடிய பாவச்செய்கையில் விழுந்திருக்கமாட் டான். எட்டாவது ஹென்றி தன் மனைவியைக் கொன்றிருக்கமாட் டான். ஐரோப்பாவில் நாகரிகம் என்று சொல்லிக்கொண்டு இக் கொடியவழக்கம் இருந்துவருவதால் எவ்வளவு பெண்களின் கொலைகளும் புருஷர்களின் கொலைகளும் நடந்திருக்கின்றன. நமது சிக்ஷித (நாகரிகமான) ரீதி யென்னவென்றால் ஐரோப்பியர்களின் வழக்கம்போலல்லாமல் பரிசுத்தமானது, தோஷமற்றது, முன் னும் பின்னும் 14 தலைமுறைகளைக் கரையேற்றக்கூடியது. நாம் ஐரோப்பியர்களிடமிருந்து எத்தனை நல்ல காரியங்களைக் கற்றுக் கொள்ளுவது அவசியமோ அத்தனை காரியங்களை அவர்களும் நம் மிடமிருந்து கற்றுக்கொள்ளல்வேண்டும். விவாகவிஷயமும் இவைகளில் ஒன்று.

ஸ்ரீகிருஷ்ணன் ஒரு விவாகத்தைத்தவிர மறுவிவாகம் செய்து கொள்ளவில்லையென்ற விஷயத்தில் சரியான பிரமாணம் காட்டி யிருக்கிறோம். ஒருகால் அவர் மறுவிவாகம் செய்திருந்தால் எதற் காக அப்படிச் செய்தார் என்று தெரிவிக்கும் இதிஹாஸம் ஒன்றும் அகப்படவில்லை. அவருக்கு எவரெவர் ஸ்யமந்தகமணியைக் கொடுத்தாரோ அவரவர் ஓரோர் சமயத்திலும் ஓரோர் கன்னிகை யைக் கொடுத்தார் என்பது பாட்டியின் கதைபோலாகும். நரகாசு ரனுக்கு 16000 கன்னிகைகளென்பதும் பாட்டியின் கதையை யொக்கும். அவைகளைக்கேட்டு நாம் மௌனமாயிருப்போம்.

## நான்காவது கண்டம்.

### இந்திரப்பிரஸ்தம்.

𑌅𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑌾𑌰𑍍𑌯𑍇𑌷𑍁 𑌯𑌃 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌰𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌮𑍁𑌦𑍍𑌯𑌤𑌂 ।
𑌵𑍈𑌕𑍁𑌣𑍍𑌠𑌸𑍍𑌯 𑌚 𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌵𑌂 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 𑌨𑌮𑌃 ॥

சாந்திபர்வம் 41-வது அத்தியாயம்.

### முதல் அதிகாரம்.

#### துரௌபதியின் ஸ்வயம்வரம்.

மகாபாரதத்தில் ஸ்ரீகிருஷ்ணனைக்குறித்துச் சொல்லப்பட்ட வ்ருத்தாந்தங்களுட் சிலபாகம் மூல பாரதத்திலிருக்கிறதென்கிற காரணத்தினாலேயே நம்பத்தக்கதாகும். இதைப்பற்றி இக்கிரந்தத்தின் முதலாவது கண்டத்தில் எவ்விதமான ஏற்பாடுகளை நாம் செய்துகொண்டோமோ அவைகளை இப்போது நினைவுக்குக் கொண்டுவரவேண்டுமென்று இதைப் படிப்போர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மகாபாரதத்தில் ஸ்ரீகிருஷ்ணனை, முதன்முதல் துரௌபதியின் ஸ்வயம்வரத்திற் காண்கிறோம். நம்முடைய பரிசீலனையில், இந்த அம்சம் மூலபாரதத்தைச் சார்ந்ததென்பதற்கு யாதொரு சந்தேகமும் காணப்படவில்லை.

துருபதவரசன் அக்கினியிலிருந்து கன்னிகையை யடைந்தானென்பதை நாம் நம்பவில்லை. அந்தக் கன்னிகை ஐந்து கணவர்களை அடைந்தாளென்பதையும் நம்மால் நம்பவியலாது. அவள் துருபதவரசனின் ஔரஸபுத்திரியாயிருந்திருக்கலாம் அவளுக்கு ஸ்வயம்வரவிவாகம் நடந்தது. அதில் அர்ஜுனன் குறியைத் தன் பாணத்தால் அடித்துவிட்டான் என்பதும் சம்பாவிதமே. அவளுக்கு ஒரே புருஷனிருந்தானா அல்லது ஐவர்களிருந்தார்களாவென்று விசாரிப்பதில் யாதொரு பயனுமில்லை. மகாபாரதத்தில் துரௌபதியின் ஸ்வயம்வரத்தில் ஸ்ரீகிருஷ்ணனை நாம் காண்கிறோம். அவர் தெய்வத்தன்மை பொருந்தியவர் என்பதற்கு அக்காலத்தில் யாதொரு குறிப்புமில்லை.

மற்ற க்ஷத்திரியர்களைப்போலவும், மற்ற யாதவர்களைப் போலவும் கிருஷ்ணன் அழைக்கப்பெற்றுப் பாஞ்சாலத்துக்கு வந்திருந்தார். மற்ற க்ஷத்திரியர்களும் துரௌபதியை யடைய வேண்டுமென்ற நோக்கத்தால் குறியையடிப்பதில் பிரயாசையெடுத்துக்கொண்டார்கள். ஆனால் யாதவர்களில் ஒருவனாவது அம் முயற்சியைச் செய்யவில்லை.

பாண்டவர்கள் அழைக்கப்படாமலே சபைக்கு வந்திருந்தார்கள். அவர்களைக் கொல்லவேண்டுமெனத் துரியோதனன் ஏற்பாடு செய்திருந்தான். பாண்டவர்கள் வேஷம் மாறுடிக்கொண்டு, காடுகளில் திரிந்துகொண்டிருந்தார்கள். துரௌபதியின் ஸ்வயம்வர சமாசாரத்தைக் கேள்விப்பட்டு மாறுவேஷத்துடன் சபைக்கு வந்தார்கள். பிராமணர்களும் க்ஷத்திரியர்களும் நிறைந்த அச்சபையில் மாறுவேஷத்துடனிருந்த பாண்டவர்களை ஸ்ரீகிருஷ்ணன்மட்டும் அடையாளம் கண்டுகொண்டார். அவர் தமது தெய்விகசக்தியாலே அடையாளம் கண்டுகொண்டார் என்பதற்குக் குறிப்பு ஒன்றுமில்லை. மனுஷ்யனுக்குள்ள இயற்கையான புத்தியால்மட்டும் அவர் தெரிந்துகொண்டார் என்பது ஸ்ரீகிருஷ்ணனின் வார்த்தையாலே வெளியாகிறது. அவர் பலதேவரிடம், "ஐயா! பெரியதான இந்த வில்லை எவன் நாணேற்றினனோ அவனே அர்ஜுனன். அதில் யாதொரு சந்தேகமும் இல்லை. எவன் தனது கைவலிமையால் விருக்ஷமொன்றைப் பிடுங்கிக்கொண்டு அச்சமின்றிச் சபைநடுவில் நுழைந்தானோ அவனே பீமன்" என்றனர். இதன்பிறகு யுதிஷ்டிரர் ஸ்ரீகிருஷ்ணனைப்பார்த்து "நீர் எங்களையெவ்விதம் தெரிந்துகொண்டீர்" என்று கேட்டிருக்கிறார். அவர் அவ்விடத்திலிருந்தாரென்றும் ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது. ஸ்ரீகிருஷ்ணன் அவருக்கு "சாம்பலாற் சூழப்பட்ட நெருப்பு மறைபடுமா" வென்று பதில் சொல்லுகிறார். மாறுவேஷத்துடனிருக்கிற பாண்டவர்களைக் கண்டுபிடிப்பது எவராலும் முடியாத காரியம். மற்றவர்கள் ஒருவரும் அவர்களைத் தெரிந்துகொள்ளவில்லை யென்பதில் வியப்பொன்றுமில்லை. ஸ்ரீகிருஷ்ணன் தமது இயற்கையறிவினாலேயே அடையாளம் கண்டார் என்பதிலிருந்து அவர் மற்றவர்களைக் காட்டிலும் நுட்பவறிவுள்ளவரென்று தெரிகிறது.

இதைப்பற்றி ஓரிடத்திலும் வெளிப்படையாய்ச் சொல்லவில்லை. ஆனாலும் ஸ்ரீகிருஷ்ணன் மனித அறிவைக்கொண்டே காரியங்களைச் சாதித்தார். எல்லோரையுங்காட்டிலும் அவர் புத்திக் கூர்மையுள்ளவர். ஸ்ரீகிருஷ்ணன் மற்றைக் காரியங்களிற்போல் புத்தியிலும் ஆதர்சபுருஷர்.

அர்ஜுனன் இலக்கையடித்துவிட்டதால் அங்கு வந்திருந்த மற்றஅரசர்கள் அவனுடன் போர்தொடுத்தார்கள். பிச்சைக்காரனை பிராமணவேஷத்துடன் அர்ஜுனன் இருந்தான். ஒரு ஏழைப் பார்ப்பான் தங்களை அவமானப்படுத்தியதை அவர்களால் சகிக்க முடியவில்லை. அர்ஜுனனை அவர்கள் எதிர்த்தார்கள். சண்டையில் அர்ஜுனனே வென்றான். இவ்விவாதத்தைக் கிருஷ்ணனே தீர்த்துவிட்டார். மகாபாரதத்தில் ஸ்ரீகிருஷ்ணன் செய்த முதலாவது காரியம் இதுவே. அவர் எவ்விதமாக விவாதத்தைத் தீர்த்துவிட்டார் என்பதை விவரிப்பதும் நமது நோக்கம். விவாதத்தைத் தீர்க்க அநேக உபாயங்கள் இருந்தன. அவரே பெயர்பெற்ற வீரர். அவ்விதமே பலபத்ரரும் சிறந்த வீரர். ஸாத்யகி முதலான அநேக வீரர்களும் அவருக்கு உதவியாயிருந்தார்கள். அர்ஜுனன் அவருக்கு அத்தையின் மகன். ஸ்ரீகிருஷ்ணன் யாதவர்களை உதவிக்கு அழைத்துக்கொண்டு அர்ஜுனனுடன் போர்க்களத்துக்குச் சென்றிருந்தால், போர் அக்கணமே நின்றுவிடக்கூடும். பீமனும் அவ்வாறே போரை நிறுத்திவிடமுடியும். ஆனால் ஸ்ரீகிருஷ்ணன் தார்மிகரான ஆதர்சபுருஷராதலால் யுத்தமில்லாமலே சாதிக்கக்கூடிய காரியங்களில் அவர் போரை விரும்புவதில்லை. தன்னைக் காத்துக்கொள்ளவும், பிறரை ரக்ஷிக்கவும் யுத்தம்செய்வதும் தர்மமே. தன்னைக் காக்கவேண்டிய சமயத்திலும், பிறரைக் காப்பாற்றுதலிலும் சண்டைசெய்யாமலிருப்பது மிகவும் அதர்மம்.

ஸ்ரீகிருஷ்ணன் இவ்விதமான காரியங்களைத்தவிர வேறு காரியங்களில் ஒருகாலத்திலும் ஓரிடத்திலும் யுத்தத்துக்காக முயற்சி செய்ததில்லை. தர்மத்தை நிலைநிறுத்துவதற்காகச் சண்டைசெய்யப் பின்வாங்கினதுமில்லை.

இவ்விடத்தில் சண்டையைப்பற்றி அவர் நினைக்கவேயில்லை. யுத்தம்செய்ய ஆயத்தமாயிருந்தவர்களிடம் அவர், "அரசர்களே! பாண்டவர்கள் தர்மத்தினாலேயே ராஜகுமாரியையடைந்திருக்கிறார்கள். பொறுமைகொள்ளுங்கள்; போர்செய்வதிற் பயனில்லை" என்று சொன்னார். தர்மம் என்ற வார்த்தை சிலர்மனதில் தோன்றவில்லையானாலும் க்ஷத்திரியர்களில் அநேகம் பெயர்கள் தர்மசீலர்களாக இருந்தார்கள். அவர்கள் விருப்பத்துடன் போர்க்குச் செல்பவர்களில்லை. ஆனாலும் அவர்கள் கோபத்திலழுந்தித் தர்மத்தையே மறந்துவிட்டார்கள். ஆனால் எவர் தர்மாத்மாவோ, தர்மத்தை வளர்ப்பதே எவருக்கு ஆயுள்முழுமையும் உத்தேசமோ அந்தக் கிருஷ்ணனுக்குமட்டும் எந்தக்கக்ஷியில் தர்மமிருக்கிறதென்ற சங்கதி மறந்துபோகவில்லை. தர்மத்தை மறந்தவர்களுக்குத் தர்மத்தை நினைப்பூட்டுவதும், தருமமறியாதவர்களுக்கு அதைப் போதிப்பதுமே, அவருடைய காரியமாக இருந்தது.

அரசர்கூட்டத்தைநோக்கி ஸ்ரீகிருஷ்ணன் "இவர்கள் தர்மத்தால் கன்னிகையை யடைந்தார்கள். ஆகையால் யுத்தம்செய்வதிற் பிரயோஜனமில்லை" என்று சொன்னார். அதைக்கேட்டு அரசர்கள் போரை நிறுத்தினார்கள். பாண்டவர்கள் தங்களுடைய ஆச்சிரமம் சென்றார்கள். கொழுப்படைந்த அரசர்களைப்பார்த்து, அவர்களுக்குத் தர்மத்தைப் போதித்துப் 'போரை நிறுத்தும்படி வேறு மனிதன் சொல்லியிருந்தால் அவர்கள் போரைநிறுத்தியிருக்கவே மாட்டார்கள். இது நிச்சயம். தர்மத்தை எல்லோருக்கும் ஞாபகப்படுத்தின ஸ்ரீகிருஷ்ணன் கௌரவமுள்ளவர்; மகாபலசாலி; புத்தியிலும் தர்மத்திலும் கைவலிமையிலும் எல்லோருக்கும் முதன்மையானவர்; எல்லாக் காரியங்களையும் நன்றாகப் பரிசீலனைசெய்பவர். நன்றாகப் பரிசீலனை செய்யப்படாத காரியம் ஒருகாலும் பயனைத் தராது. இவ்விதமான தர்மமர்மங்கள் ஸ்ரீகிருஷ்ணசரித்திரத்தின் மூலமாக வெளியாகும்.

## இரண்டாவது அதிகாரம்.

### கிருஷ்ண யுதிஷ்டிர ஸம்வாதம்.

3187.

அர்ஜுனன் யுத்தத்தை நிறுத்திவிட்டுப்பிராதாக்களையழைத்துக்கொண்டு தனது ஆச்சிரமம் சென்றான். அரசர்களும் தம் இடங்களுக்குப் புறப்பட ஆரம்பித்தார்கள். துரௌபதியின் ஸ்வயம்வரம் நடந்தது. உற்சவங்களெல்லாம் தீர்ந்துவிட்டன. ஸ்ரீ கிருஷ்ணனுக்கு இனிப் பாஞ்சாலத்திலிருக்கவேண்டிய அவசியம் ஒன்றுமில்லை. ஆதலால் தன்னிடத்துக்குச்சென்றார். மற்ற அரசர்களும் தங்களுடைய ஊர்களுக்குச் சென்றார்கள்.

அவ்விடத்தில் ஸ்ரீகிருஷ்ணனுக்கு வேறு காரியம் இல்லை. அவருக்கு யுதிஷ்டிரருடன் அதற்குமுன் சேர்க்கையாவது சல்லாபமாவது ஏற்படவில்லை. "வாஸுதேவன் யுதிஷ்டிரரை யெதிர்கொண்டுபோய்ப் பாதங்களில் நமஸ்கரித்து அவருடன் நண்பு கொண்டார்" என்று மகாபாரதக்காரர் எழுதியிருக்கிறார். பலராமரும் அவ்விதமே செய்தார். ஸ்ரீகிருஷ்ணனுக்கும் பாண்டவர்களுக்கும் அப்பொழுதுதான் முதன்முதல் பரிசயம் ஏற்பட்டது. அத்தையின் குமாரர்கள் என்பதால்மட்டும் ஸ்ரீகிருஷ்ணன் அவர்களுடன் சல்லாபம் செய்திருக்கிறார். லௌகிக விவகார சம்பந்தமாக அவர்களுடன் யாதொருவார்த்தையும் சொல்லவில்லை.

தாய்வழியிலாவது தகப்பன்வழியிலாவது பிராதா என்ற முறையிலிருப்பவர்கள் அரசர்களாகவாவது அல்லது பெரிய மனிதர்களாகவாவது இருந்தால் அவர்களிடம் யாசிப்பதற்காக ஜனங்கள் அவர்களுடன் வார்த்தையாடுவது உலகவழக்கம். பாண்டவர்கள் யாசகர்கள்; ஸ்ரீகிருஷ்ணன் அவர்களுடன் வார்த்தையாடியதால் அவருக்கு யாதொரு பிரயோஜனமும் இல்லை. யாதொரு காரியமும் அவருக்கு ஆகவேண்டியதில்லை. அவர் விநயத்துடன் யுதிஷ்டிரரிடம் சல்லாபம்செய்து பாண்டவர்களுக்கு மங்களத்தை விரும்பினவராக விவாகம் முடியும்வரையில் பாஞ்சால நகரிலேயே தம்முடைய விடுதியிலிருந்துவந்தார்.

விவாகம் முடிந்தவுடன் பாண்டவர்களுக்குச் சீர்வரிசைகளாக, வைடூர்யமணிகள், சுவர்ணுபரணங்கள், விலையுயர்ந்த வஸ்திரங்கள், அழகிய படுக்கைகள், பலவித வீட்டுச்சாமான்கள், எண்ணிறந்த வேலையாட்கள், பழக்கப்பட்ட யானைகள், சிறந்த குதிரைகள், கணக்கிலடங்காத தேர்கள், கோடிக்கணக்கான தங்கம் வெள்ளிச் சாமான்கள் இவைகளை வரிசைவரிசையாகச்செய்து ஸ்ரீகிருஷ்ணன் அனுப்பிவைத்தார். அப்பொழுது பாண்டவர்களிடம் இவையில்லை. அவர்கள் பிச்சையெடுப்பவர்களாயும் கஷ்டப்படு கிறவர்களாயுமிருந்தார்கள். ஆதலால் இவையெல்லாம் அவர்களுக்கு அவசியமாயிருந்தன. ராஜகன்னிகையை மணந்ததால் அவர்கள் கிருகஸ்தர்களானுர்கள். கிருஷ்ணனுல் அனுப்பப்பட்ட வஸ்துக்களையெல்லாம் யுதிஷ்டிரர் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டார். கிருஷ்ணன் அவர்களிடம் போகாமல் தம்மிருப்பிடத்துக்குச் சென்ருர். அதன்பிறகு அவர் பாண்டவர்களை அணுகவில்லை. பிறகு அவர்கள் பாதி ராஜ்யத்தையடைந்து இந்திரப்பிரஸ்தத்தில் பட்டணத்தை நிர்மாணம்செய்து அதில் வாசம்செய்ய ஆரம்பித்தார்கள். கிருஷ்ணனுக்கும் பாண்டவர்களுக்கும் எவ்விதமாய்ச் சந்திப்பு ஏற்பட்டதென்பதைப்பற்றிப் பிறகு சொல்வோம். ஸ்வய நலம் பாராட்டாதவரும், கஷ்டமடைந்தோருக்கு ஹிதம்செய்தலையே விரதமாகக் கொண்டவரும் ஆகிய கிருஷ்ணனைக் குறித்து மேற்றிசையோரும் அவர்களைப் பின்பற்றுகிறவர்களும் தூஷண வார்த்தைசொல்லுகிருர்கள். அவரைக் கெட்டதொழில் செய்கிறவரென்றும், கெட்ட எண்ணமுள்ளவரென்றும், பாவம் செய்கிறவரென்றும் அவர்கள் தூற்றுகிருர்களேயென்பது நமக்கு மிகவும் ஆச்சர்யமாயிருக்கிறது. இதிஹாஸத்தின் உண்மையைப் பிரித்துத் தெரிந்துகொள்ளச் சக்தியற்றவர்களும், அதில் சிரத்தையில்லாதவர்களும், அதில் முயற்சிசெய்யாதவர்களும் இவ்விதமாக நினைப்பது இயல்புதான். இதிஹாஸத்தின் உண்மையைத் தெரிந்துகொண்டவர்களா யிருந்தால் அப்படிப் பிதற்றமாட்டார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் ஆதர்சபுருஷர். அவருடைய மற்ற வழக்கங்களைப் போல அவர் ஜனங்களின்பேரில் பிரீதியுடனிருப்பதான நல்ல குணமும் படிப்படியாக வெளிப்பட்டது.

நல்ல ஸ்திதியில் இருப்போர்க்கு உபகாரம் செய்து அவர்களின் பிரியத்தை எவன் பெறவிரும்புகிறானோ அவன் உத்தமனல்லன். கிருஷ்ணன் அவ்விதமானவர் இல்லை. தாழ்ந்த நிலைமையிலிருப்பவர்களையும் குடும்பிகளையும் தேடிப்பார்த்துத் தன்காரியங்களுக்குக் குறைவுவந்தாலும் அதைப் பாராட்டாமல், அவ்வேழைகளின் காரியத்தை நிறைவேற்றி, அவர்களிடம் பிரீதிவைத்துவந்தார். அவருடைய பிரீதிதான் ஆதர்சப்ரீதி. கிருஷ்ணன் இவ்விதம் செய்தது ஆச்சர்யமல்ல. சிறிய காரியங்களிலிருந்துதான் மனிதனுடைய உண்மையான ஸ்வபாவம் தெரியவரும். துஷ்டனும் ஒரு பெரியகாரியத்தைச் செய்யக்கூடும். ஆனால் சிறுகாரியங்களிலும் எவனுடைய தர்மம் வெளியாகிறதோ, அவனே உண்மையில் மகாத்மா. கிருஷ்ணனுடைய சிறியது அல்லது பெரியது எல்லாக்காரியங்களையும் பரிசீலனைசெய்ய நாம் பிரவர்த்திக்கிறோம். நாம் இதுவரை அவ்விதமான முயற்சியைச் செய்யாததற்காக வியசனிக்கிறோம். அவ்விதம்செய்யாமல் கிருஷ்ணசரித்திரத்தின் மத்தியில் “ஸுபத்ராஹரணம்” என்பதைமட்டும் கற்றுக்கொண்டோம். அது உண்மையான சரித்திரத்தைச்சார்ந்ததோ என்பதை நன்றாய் விசாரியாமல் பொய்யான கட்டுக்கதைகளைமட்டும் இதுவரை பரிசீலனைசெய்துவந்தோமே! அது நமது தூர்ப்பாக்கியம். ‘ஸுபத்ராஹரணம்’ என்கிற சங்கதியில் எவ்வளவுவரை பொய்யென்பதைத் துரோணவதம் என்கிற அத்யாயத்தில் பிரமாணமூலமாக நிரூபிப்போம்.

இந்த விவாகசம்பந்தமான பர்வத்திலே வியாஸரால் ஒரு வேடிக்கைக் கதை சொல்லப்பட்டிருக்கிறது. துருபதவரசன் தன் கன்னிகைக்கு ஐந்து புருஷர்கள் ஏற்பட்டார்களெனக் கேள்விப்பட்டு, அவர்களுக்குக் கெடுதி செய்தான். வியாஸர் கெடுதிசெய்யக்கூடாதென்று அவனைக் கண்டித்தார். அதற்காகத் துருபதனுக்கு ஒரு அற்புதமான உபாக்கியானத்தையும் அவர் சொன்னார். “ஒருகாலத்தில் இந்திரன் கங்காஜலத்தின் நடுவில் அழுதுகொண்டிருக்கிற ஓரழகிய ஸ்திரீயைக் கண்டான். அவளை அழுகிற காரணத்தை வினவினான். அதற்குப்பதிலாக அவள் இந்திரனைச் சமீபத்தில் வரவழைத்து அவனுக்கு அங்கே ஒரு வாலிபனும் ஒரு

யுவதியும் சொக்கட்டான் ஆடிக்கொண்டிருப்பதைக் காட்டினாள். அவர்கள் இந்திரனுக்கு மரியாதை செய்யவில்லை. இந்திரன் கோபமடைந்தான். அவ்வாலிபன் ஸாக்ஷாத் மகாதேவர். இந்திரன் கோபமடைந்ததைப் பார்த்து மகாதேவரும் கோபமடைந்து அவனை யொரு பள்ளத்தில் (குகையில்) நுழையும்படி சொன்னார். அவன் நுழைந்து பார்க்கும்போது தன்னைப்போல் வேறு நான்கு இந்திரர்கள் அங்கேயிருப்பதைக் கண்டான். மகாதேவர் அவ்வைந்து இந்திரர்களையும் பூமியில் மனிதர்களாக ஆகும்படி சபித்தார். அவர்கள் மகாதேவரிடம் வந்து "நாங்கள் இந்திரன் முதலான ஐந்து தேவர்கள்; யாங்கள் எந்த ஸ்திரீயின் கர்ப்பத்தில் உற்பத்தியாவோம்; சொல்லியருளவேண்டும்" எனப் பிரார்த்தித்தார்கள். பிறகு அவ் வைந்துதேவர்களுக்கும், பஞ்சபாண்டவர்கள் ஔரஸபுத்திரர்கள் ஆனார்கள். ஒரு குற்றமும் செய்யாத அந்த ஸ்திரீயைப்பார்த்து அவ்வைவர்களுக்கும் நீ பத்நியாவாய் என்று மகாதேவர் சபித்தார். இனிச் சொல்லப்போகிற சங்கதி மிகவும் ரகசியமானது. ஸ்ரீமந்நாராயணன் இச்சங்கதியைக் கேட்டுத் தன்னுடைய தலையிலிருந்து இரண்டு மயிர்களை யெடுத்து அவளிடம் விட்டெறிந்தார், அவைகளில் ஒரு மயிர் வெண்மைநிறமுள்ளது. மற்றொன்று கருப்புநிறமுள்ளது. வெளுப்புமயிர் பலராமராகவும் கருப்புமயிர் கிருஷ்ணனாகவும் ஆயின!"

மகாபாரதம் மூன்றுவது தடவை தொகுக்கப்பட்டபோது இக்கதை அதில் நுழைக்கப்பட்டதென்பதைப் படிப்போர்க்கு நாம்சொல்லவேண்டுவதில்லை. மூலபாரதத்தின் எந்த அம்சத்திலும் இக்கதை காணப்படவில்லை.

இந்த உபாக்கியானத்தின் வசனநடை மகாபாரதத்தின் மற்றைய பாகங்களின் வசனநடைக்கு மிகவும் தாழ்ந்தது. மகாபாரதத்தின் மற்றப் பாகங்களுக்கும் இந்த உபாக்கியானத்துக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. இவ்வுபாக்கியானம் எழுதப்படாமலிருந்தாலும் மகாபாரதத்தின் மற்றக் கதைகளை ஸ்பஷ்டமாய் அறிந்துகொள்ளக்கூடும். இந்த வித்தியாஸத்துக்கு வியாஸர் ஒரு உபாயம் சொல்லியிருக்கிறார். அதுவும் அதே அத்தியாயத்திலிருக்

கிறது. அது சுருக்கமாயும் தெளிவாயுமிருக்கிறது. ஆதிமகாபாரதத்தில் அது அடங்கியிருக்கிறது. முன்சொன்ன உபாக்கியானத்துக்கு அது முற்றிலும் வேறானது. இரண்டு கதைகளிலும் துரௌபதியின் பூர்வஜன்ம விருத்தாந்தம் வெவ்வேறாகக் காணப்படுகிறது. இரண்டுக்குள் ஒன்று பிரக்ஷிப்தம் என்பதில் சந்தேகமில்லை. நாம் இனிச்சொல்லப்போகிற காரணங்களால் முதலிற் சொல்லப்பெற்ற உபாக்கியானமே 'பிரக்ஷிப்தம்' என்று வெளியாகும். மகாபாரதத்தில் மற்ற எல்லாவிடங்களிலும் இந்திரன் ஒருவனே காணப்படுகிறான். இதிலோ இந்திரர்கள் ஐந்துபேர்கள். மகாபாரதத்தின் மற்றெல்லா இடங்களிலும் பாண்டவர்கள் முறையே தர்மன், வாயு, இந்திரன், அசுவினிகுமாரர்கள் என்ற இவர்களின் குமாரர்கள். இவ்விடத்திலோ பாண்டவர்களின் தகப்பன்மார் எல்லோரும் இந்திரர்களே.

ஒரு மூடன் பொய்க்கதையைத் தொகுத்திருக்கிறான். ஜகத்தை ஜயிக்கக்கூடியதான மகாபாரதத்தில் மூடனாற் சொல்லப்பட்ட கதையிருப்பது இயலாது என்பதற்குச் சந்தேகமில்லை. மகாபாரதம் மூன்று சமயங்களில் தொகுக்கப்பட்டிருக்கிறதென்பதை நாம் இதற்குமுன் உதாரணங்களின்மூலம் நிரூபித்திருக்கிறோம். எந்த விஷ்ணுவானவர் ஸூர்யமூர்த்தியாக வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறாரோ, அவர் இம்மூடர்களின் கையிலகப்பட்டு என்னபாடு படுகிறார்; அவருக்கு மீசை, தாடி, தலைமயிர், வெள்ளைமயிர், கறுப்பு மயிர் இவைகள் எல்லாம் உண்டாகிவிட்டன. இக்கதைகள் எல்லாம் பிரக்ஷிப்தங்கள். இவ்விடத்தில் மகாதேவரைச் சர்வேசுரனென்றும், ஸ்ரீமந்நாராயணனை அவருடைய கேசமாத்திரமாகவும் விவரித்திருக்கிறது. மகாபாரதத்தைப் பரிசீலனைசெய்யும்பக்ஷத்தில் அநேகவிடங்களில் கிருஷ்ணபக்தர்களுக்கும், சைவர்களுக்கும் விரோதத்தை ஏற்படுத்தக்கூடிய சங்கதிகள் காணப்படுகின்றன. விரோதங்கள் காணப்படுகிற பாகங்களெல்லாம் பிரக்ஷிப்தங்கள். இவ்வுபாக்கியானம் ஆதிபாரதம் தொகுக்கப்பட்டு வெகுகாலத்துக்குப்பிறகே தொகுக்கப்பட்டிருத்தல்வேண்டும். எவ்விடத்தில் ஸ்ரீகிருஷ்ணனின் உபாஸனையும் பரமசிவத்தின் உபாஸனையும் பலத்திருக்கின்றனவோ, அவ்விடத்தில் விவாதமும் அதிகமாக இருக்கின்றது. மகாபாரதம் இயற்றப்பட்ட காலத்தில் இவ்விரண்டுபாஸனைகளும் மிகுதியாயில்லை. அந்தச்சமயத்தில் வேதங்களிற்

கண்ட தேவதைகளைப்பற்றியே சொல்லிவந்தார்கள். பிறகு இரு கக்ஷிக்காரர்களும் தங்கள் தங்கள் பக்ஷத்தை யுறுதிசெய்வதற்காக அநேக புதுக்கதைகளை நுழைத்து, மகாபாரதக் கிரந்தத்தையே பெரிதாக்கிவிட்டார்கள். இருகக்ஷிக்காரரும் மூலமகாபாரதத்தை ஒருபுறம் ஒதுக்கிவிட்டுத் தங்களுடைய இஷ்டதேவதைகளைப் பெருமைப்படுத்தவேண்டியதற்காகச் சிவமாகாத்மியத்தையும் விஷ்ணுமாகாத்மியத்தையும் காட்டக்கூடியவையான புதுக்கதைகளைத் தொகுத்து மகாபாரதத்தில் புகவிட்டிருக்கிறார்கள். இதைப் பற்றி அநுசாஸந பர்வத்தில் அநேக சிறந்த உதாஹரணங்கள் காணக்கிடக்கின்றன. விருப்பமிருந்தால் அந்தப்பர்வத்தைப் படித்து அவ்வுதாஹரணங்களைத் தெரிந்துகொள்ளலாம்.

---

## மூன்றாவது அதிகாரம்.

### சுபத்திரையின் ஹரணம்.

துரௌபதியின் ஸ்வயம்வரத்தின்பிறகு ஸுபத்ராஹரணத்தில் நாம் ஸ்ரீகிருஷ்ணனைக் காண்கிறோம். ஸ்ரீகிருஷ்ணன் நிறைவேற்றியசுபத்ராஹரணத்தைக் கி. பி. 19-வது நூற்றாண்டிலிருப்பவர்கள் ஒத்துக்கொள்ளுகிறதில்லை. அந்நூற்றாண்டிலேயே அவர்களாற் கற்பிக்கப்பட்ட நீதிசாஸ்திரத்தைக் காட்டிலும் பெரியதான ஜகதீசுவரனின் நீதிசாஸ்திரம் ஒன்று இருக்கிறது. அது எக்காலத்திலும் எத்தேயத்திலும் விளங்கக்கூடியது. அந்தச் சாஸ்திரத்தின் ரீதியாகவே நாம் ஸ்ரீகிருஷ்ணனின் நடத்தைகளைப் பரீக்ஷைசெய்வோம். இவ்விதமான விசாரணையில் நாம் பிரவர்த்திக்குமுன், சுபத்ராஹரண விருத்தாந்தமானது மூலபாரதத்திலுள்ளதா? அல்லது பிரக்ஷிப்தமாவென்று நிச்சயித்தல்வேண்டுமெனக் கிருஷ்ணபக்தர்கள் கேட்கக்கூடும்.

சுபத்ராஹரண விருத்தாந்தத்தை மூலபாரதத்திலேயே காணலாகும். முதலாவது தொகுதியிலேயே இருக்கிறது. இந்த விருத்தாந்தம், அநுக்ரமணிகையிலும் பர்வசங்கிரகஅத்தியாயத்திலும் காணப்படுகிறது. பாரதத்தின் முதலாவது தொகுதி ஸரளமான

ரீதியிலிருக்கிறது. அதன் பின் தொகுதிகள் அலங்காரங்கள் நிரம்பியனவாயும் அதிசயோக்திகள் உள்ளனவாயும் இருக்கின்றன. ஆனால் சுபத்திராஹரணவிருத்தாந்தம் பெரும்பாலும் ஸ்வபாவமான ரீதியுள்ளதாயும் அலங்கார அதிசயோக்திகளைப் பெறாததாயுமிருக்கிறது. அக்கதையை மகாபாரதத்திலிருந்து எடுத்துவிட்டால் அக்கிரந்தத்துக்கே குறைவு ஏற்படும். மகாபாரதமும் நிறைவுபெறாது. சுபத்திரையிடம் அபிமன்யுவும், அபிமன்யுவிடம் பரீக்ஷித்தும், பரீக்ஷித்துவிடம் ஜனமேஜயனும் ஜனித்தார்கள். ஸுபத்திரையும் அர்ஜுனனுமாகிய இவர்கள் வழித்தோன்றின அரசர்கள் வெகுகாலம் வரையிலும் பாரதவர்ஷத்திற் சிறந்த அரசர்களாக விளங்கிவந்தார்கள். துரௌபதியின் வழித்தோன்றியவராக ஒரு அரசரும் காணப்படவில்லை.

* * * * * * * * *

யஜுர்வேதம் மாத்தியந்தினசாகை 23-வது அத்தியாயம் 18-வது கண்டிகை 4-வது மந்திரத்தைப் பிந்தின பாரதத்தில் உதாஹரித்திருக்கிறது. இம்மந்திரத்துக்கு மேனாட்டார் வேறு பொருள் கற்பிக்கிறார்கள். ஸ்ரீசாயணாசாரியார், "காம்பீல்ய ஶப்தேந ஶ்லாக்யோ வஸ்துவிஶேஷ உச்யதே" 'காம்பில்யம் என்ற வார்த்தையால், சிறந்ததோர் வஸ்து குறிக்கப்பட்டிருக்கிறது' என்று வியாக்கியானம்செய்திருக்கிறார். மேற்றிசையோர் சாயணாசாரியரைக் காட்டிலும் தங்களுக்கு ஸம்ஸ்கிருதத்தில் ஞானம் அதிகம் என்று நினைத்திருக்கிறார்கள்.

அசுவமேதயாகம் செய்கிற அரசர்களுடைய பத்தினிகளுக்கு இந்த மந்திரத்தைச் சொல்லிக்கொடுக்கிறார்கள். அவர்களும் தாங்கள் காம்பில்யத்திலிருக்கிற சுபத்ரா வென மந்திரபூர்வமாகப் பதிலையும் சொல்லுகிறார்கள். ஸாமசிரமீயென்பவர் காம்பில்யமென்ற சொல்லுக்குக் 'கல்யாணீ' என்றும் 'ஸௌபாக்யவதீ' யென்றும் அர்த்தம் செய்திருக்கிறார். மகீதரர் என்பவர் காம்பில்ய நகரத்திலுள்ள ஸ்திரீகள் எல்லோரும் மிகவும் ரூபலாவண்யமுள்ளவர்கள் என்று விவரித்திருக்கிறார். ஆகையால் இம்மந்திரத்தின்

அர்த்தம், "நான் ஸௌபாக்கியவதியாயும் ரூபலாவண்யமுள்ளவளாயுமிருப்பதால் அசுவத்தின் சமீபத்தில் வந்திருக்கிறேன்" என்பது.

யுதிஷ்டிரர் அசுவமேதயாகம் செய்தாரென்றும் அவருக்கு முன்னிருந்த அநேக அரசர்களும் அசுவமேதயாகம் நடத்தினர்களென்றும், மகாபாரதத்திலும், பழமையான கிரந்தங்களிலும் காணக்கிடக்கிறது. ஸ்ரீகிருஷ்ணனுக்கும் பாண்டவர்களுக்கும் வெகுகாலத்துக்குமுன்பே இந்த மந்திரம் இருந்துவருகிறது. தற்காலத்தவர்கள் காப்பியக் கிரந்தங்களிலிருந்து பெயர்களையெடுத்துத் தங்களுடைய குழந்தைகளுக்கு நாமகரணம் செய்வது வழக்கம். அதுபோல் அக்காலத்தவர்கள் வேதத்திலிருந்து பெயர்களையெடுத்துத் தங்களுடைய மக்களுக்குப் பெயர்வைத்தார்களென்பது பொருந்தும்.

வேதமந்திரத்திலிருந்தே காசியரசன் தன்னுடைய மூன்று பெண்களுக்கும் அம்பை அம்பிகை அம்பாலிகை யெனப் பெயரிட்டான். இவ்விதமாகவே ஸ்ரீகிருஷ்ணன்சகோதரிக்கு ஸுபத்ரையென வேதமந்திரத்தை யனுசரித்துப் பெயர்வைக்கப்பட்டிருக்கலாமென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆதலால் ஸுபத்ராஹரணத்தின் பரிசீலனையிற் பிரவர்த்திப்போம்.

நாம் இதைப் படிப்போர்களிடம் வேண்டுவதொன்றுண்டு. அது மற்றக் கிரந்தங்களிலிருந்தோ நாடகங்களிலிருந்தோ கதை சொல்பவர்களிடமிருந்தோ கிழவிகளின் பழங்கதைகளிலிருந்தோ தாங்கள் படித்தோ கேள்விப்பட்டோ தெரிந்துகொண்ட சங்கதிகளை அவர்கள் முற்றிலும் மறந்துவிடவேண்டுமென்பதே. மகாபாரதத்தில் எவ்விதமாகச் சொல்லியிருக்கிறதோ அவ்விதமாகவே நாம் ஸுபத்ராஹரணத்தைப்பற்றி விவரிக்கத் தொடங்குவோம்.

துரௌபதியின் விவாகத்தின்பிறகு பாண்டவர்கள் இந்திரப்பிரஸ்தத்திற் சௌக்யமாக வாசஞ்செய்துவந்தார்கள். என்னகாரணத்தாலோ அர்ஜுனன் இந்திரப்பிரஸ்தத்தைவிட்டு வெளியேறிப் பன்னிரண்டுவருஷகாலம்பிறதேசங்களிற்சுற்றிக்கொண்டிருந்தான்.

அநேக தேசங்களுக்குப் போனபிறகு துவாரகைக்கு அவன் வந்து சேர்ந்தான். யாதவர்கள் அவனுக்கு உபசாரமும் மரியாதையும் செய்தார்கள். அவன் சிலநாட்கள்வரை அங்கேயே இருந்தான். ஒரு சமயம் யாதவர்கள் 'ரைவதக' பர்வதத்தில் ஒரு பெரிய திரு விழாக் கொண்டாடினார்கள். அவ்விடத்தில் யாதவவீரர்களும் குலஸ்த்ரீகளும் வந்திருந்து களிப்படைந்தார்கள். மற்ற ஸ்த்ரீக ளுடன் சுபத்திரையும் வந்திருந்தாள். அவள் குமரிப்பெண்ணாக வும் சிறியவளாகவுமிருந்தாள். அவளைக்கண்டு அர்ஜுனன் மோகித் தான். ஸ்ரீகிருஷ்ணன் அதையறிந்து "தோழனே! நீ காட்டில் திரிகிறவனாயிருந்தும் அனங்கனின் பாணத்தால் பரபரப்பை யடைந்துவிட்டாய்" என்று அர்ஜுனனிடம் சொன்னார். அர்ஜு னன் தன்னுடைய தவற்றை ஒப்புக்கொண்டு தனக்குச் சுபத் திரை பார்யையாக ஆகும்படியான ஏற்பாட்டைச் செய்யும்படி ஸ்ரீகிருஷ்ணனைப் பிரார்த்தித்தான். ஸ்ரீகிருஷ்ணன், "ஹே! அர் ஜுனா! க்ஷத்திரியர்களுக்கு ஸ்வயம்வரமே செய்யத்தகுந்தது. நீ, ஸ்த்ரீகளின் ஸ்வபாவத்தை நன்றாயறிந்துகொள்ளவில்லை. அவ் விஷயத்தில் நமக்குச் சந்தேகம் உண்டாயிருக்கிறது. க்ஷத்திரியர் கள் விவாகம்செய்துகொள்வதற்காகத் தங்களுடைய கைவலிமை யால் கன்னிகைகளை யபஹரிப்பதே சிலாக்கியம் என்று தர்மசாஸ் திரம் தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். ஆதலால் நீ ஸ்வயம்வர காலத்தில் வருவாயானால் உனது புஜபலத்தைக்கொண்டு நமது சகோதரியான சுபத்திரையை அபஹரித்துப்போகலாம்" என்று பதிலுரைத்தார்.

இதை நினைத்துக்கொண்டே அர்ஜுனன் முதலில் குந்திக்கும் யுதிஷ்டிருக்கும் தெரிவிக்கும்படி தூதனையனுப்பினான். ரைவதக பர்வதத்தைப் பிரதக்ஷிணம்செய்துகொண்டு சுபத்திரை, துவார கையைநோக்கிச் செல்லும்போது அர்ஜுனன் அவளைப் பலவந்த மாக எடுத்துத் தனது தேர்மீதுவைத்துக்கொண்டு புறப்பட்டு விட்டான்.

தற்காலத்தில் ஒரு க்ஷத்திரியன் தனக்கு விவாகம்செய்து கொள்ளவேண்டுமென்று பிறருடைய சகோதரியைப் பலாத்கார

மாய் எடுத்துப்போவானேயானால், அவன் எல்லோராலும் நிந்திக்கப்படுவான். ராஜதண்டனைக்கும் உள்ளாவான். அக்காலத்தில் க்ஷத்திரியர்கள் அப்படிச்செய்வதில் யாதொருகுற்றமும் இல்லை. ஜனங்களின் கண்களில் மண்ணைத்தூவிக் கிருஷ்ணனை எவ்விதத்திலும் சிலாகிக்கவேண்டும் என்ற எண்ணம் நமக்கு இல்லை. அவ்வபிப்பிராயம் நமக்கு இருந்திருக்குமானால் ஸுபத்ராஹரணத்தியாயத்தைப் பிரக்ஷிப்தமென்று சொல்லியிருப்போம். ஒருவனை உயர்த்திக்கூறவேண்டுமென்று ஒருவனுக்கும் பொய்ப்புகழை நாம் கொடுக்கவிரும்பவில்லை. தர்மத்துக்கு விரோதமாக ஒருகாரியத்தையும் நாம் செய்யமாட்டோம். தர்மத்துக்கு உயர்வை விரும்புவோமேயொழிய அதன் தாழ்வை ஒருக்காலும் விரும்பமாட்டோம். உள்ளபடி விருத்தாந்தத்தைச் சொல்லுவோம். அதைக் கவனிப்பீர்களாக.

ஒருவனுடைய பெண்ணை மற்றொருவன் எடுத்துப்போனால் எதனால் குற்றம் ஏற்படுகிறது? குற்றத்திற்கு மூன்று காரணங்களுண்டு. முதலாவது, அந்தப்பெண்ணுக்கு அபவாதம் ஏற்படும்; இரண்டாவது, பெண்ணின் தாய் தகப்பன் பந்துக்களுக்கு நிந்தையேற்படும். மூன்றாவது, ஜனங்களின்மீது அபவாதம் வரக்கூடும்.

ஒருவனும் மற்றொருவனிடம் பலாத்காரமாக அக்கிரமம் செய்யக்கூடாது. அப்படிச்செய்தால் ஜனசமூகத்தின் ஒழுங்கு கெட்டுப்போகும். மேலும் அதில் மேலே விவரித்த மூன்று குறைகளுமிருக்கின்றன. ஸ்ரீகிருஷ்ணன் ஸுபத்திரைக்கு அண்ணன். எல்லாவிதத்திலும் வம்சத்தில் பெரியவன். எவ்வகையில் சுபத்திரைக்கு மங்களமுண்டாகுமோ அவ்வகையினையே செய்வது அவருடைய கடமை. சுபத்திரையை நல்ல வரனுக்கு விவாகம்செய்து கொடுப்பதே அவரால் அவசியம் செய்யத்தகுந்தது. தெரிந்தவர்களுக்குள், தனது சகோதரிக்கு நல்ல வரன் கிடைக்காவிட்டால் ஸ்ரீகிருஷ்ணனுக்குக் கஷ்டம் ஏற்பட்டிருக்கும். ஆதலால் ஸுபத்ரை அர்ஜுனனைக் கல்யாணம்செய்துகொள்ளும்படியான எல்லா முயற்சிகளையும் ஸ்ரீகிருஷ்ணன் செய்தார். பலாத்காரமாக அபஹரிப்பதைத்தவிர்த்து ஸுபத்ரைக்கு மங்களத்தைச்செய்ய அவருக்கு வேறு வழியில்லை.

ஆகையால் ஸ்ரீகிருஷ்ணன் ஸுபத்ரையின் க்ஷேமத்தைநாடித் தர்மகாரியத்தையே செய்தார். அக்கிரமம் ஒன்றும் செய்யவேயில்லை. ஸுபத்ரையை அபஹரிப்பதில் கெடுதல்களு மிருந்தன.

நல்ல பயனையடையவேண்டிக் கெட்ட உபாயங்களைக் கைக்கொள்ளுதல் நியாயமில்லையென்று (The end does not sanctify themeans.) சிலர் சொல்லுகிறார்கள்.

இதற்கு இரண்டுவிதமான சமாதானங்கள் சொல்லலாகும். முதலாவது அர்ஜுனன்பேரில் சுபத்திரைக்கு வெறுப்பில்லை; விருப்பமேயிருந்தது. விருப்பத்தையும் வெறுப்பையும் அவள் வெளிப்படையாய்க் காட்டவில்லை. ஹிந்துஜாதியிற் பிறந்த பெண் குழந்தைகள் விவாஹவிஷயமாகத் தங்களுடைய இஷ்டத்தை வெளிக்காட்டுவதில்லை. பெண்குழந்தைகள் வெட்கத்தினால் விருப்பத்தை வெளியிடாவிட்டாலும் பெரியோர்கள் அதை ஊஹித்தறிந்து பலாத்காரமாக விவாகத்தை நிறைவேற்றுவதில் என்ன குற்றமிருக்கிறது ?

காரியம் நல்லதாயிருந்தாலும் அதை விரும்பாதவனுக்குப் பலாத்காரமாகச்சாதித்துக்கொடுக்க எவருக்கும் அதிகாரமில்லை. சில சமயங்களில் பலாத்காரம் செய்தலும் நியாயமாகவிருக்கும். பிராணன்போகிற சமயத்தில் ஒருவன் வெறுப்பினால் மருந்தையுண்ண மறுத்தால் அவனைக் காப்பாற்றுவதற்காக அவனுக்குப் பலாத்காரமாக மருந்தை ஊட்டலாம். அவ்வதிகாரம் எல்லோருக்கும் இல்லை. மருத்துவர்களுக்குமட்டும் உண்டு. குழந்தைகள் எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ளமறுத்தால், அவர்களைக் கண்டித்துக் கல்விபுகட்டுவதற்குத் தாய் தந்தையர்க்கும் உபாத்தியாயருக்கும் அதிகாரம் உண்டு. வயதையடையாத பெண்குழந்தையோ ஆண் குழந்தையோ தெரியாத்தனத்தால் நெறியற்ற விவாகத்தை விரும்பினால், அவ்விவாகத்தைப் பலாத்காரத்தால் தடுக்கத் தாய் தந்தையர்க்கு அதிகாரமில்லையா ?

தற்காலத்தில் ஐரோப்பியர்களுள்ளும் தங்கள் குழந்தைகளை நெறியில்லாத விவாஹத்தைச் செய்துகொள்ளாதபடி தடுக்கிற வழக்கமிருக்கிறது. அதேபோல அறிவில்லாத குழந்தை

களை அவர்கள் நல்ல வரன்களை விவாகம் செய்துகொள்ளும்படி கட்டாயப்படுத்த, ஹிந்துஜாதித் தாய் தந்தையர்களுக்கு அதிகாரமில்லையா? நல்ல வரன்களிடம் தங்கள் பெண்குழந்தைகளை அவர்களின் க்ஷேமத்துக்காகவே கட்டாயப்படுத்தியாவது ஒப்புவித்துவிடத் தாய்தந்தையர்க்குப் பாத்தியமுண்டு.

அப்படியிருக்கும்போது சுபத்ராஹரணவிஷயத்தில் ஸ்ரீகிருஷ்ணன் அநுமதிகொடுத்தது ஏன் நிந்திக்கத்தக்கதாகும்?

இதற்கு இரண்டு பதில்களிருக்கின்றனவென்று முன்பே சொன்னோம். இரண்டாவது கெடுதியைப்பற்றி விசாரிக்கத் தொடங்குவோம். ஸ்ரீகிருஷ்ணன் ஸுபத்ரைக்கு மங்களத்தை விரும்பினார். அதை நிறைவேற்ற வேறு வழியில்லாமல் பலாத்காரமாக அபஹரித்துப்போவதே நலமென்றெண்ணி அதற்குடன்பட்டார். ஸ்வயம்வரம் நடந்திருந்தால், சிற்றறிவுள்ள பெண்குழந்தை தன் குலத்துக்குத் தகாதவனான ஒருவனுக்கு மறதியினால் மாலையிட்டுவிடக்கூடும். ஆகையால் ஸ்ரீகிருஷ்ணன் பலராமர் வஸுதேவர் முதலானவர்கள் தங்களுடைய குலவழக்கம்போல் நல்லவரனுக்கே பெண்ணைக்கொடுத்தார்கள். யாதவர்கள் எல்லோரும் கிருஷ்ணனுக்கு உட்பட்டவர்கள். அவர்களில் ஒருவனும் அதை யாக்ஷேபிக்கவில்லை. அர்ஜுனன் நல்ல வரன். யாருக்கு என்ன ஆக்ஷேபம் இருக்கக்கூடும்?

இக்காலத்திலேயே இந்தக்காரியம் ஒழுங்கானதென்று நினைக்கப்படுகிறது. ஆனால் பல வருஷங்களுக்கு முந்தினகாலத்தில் நடந்த ஸுபத்ராவிவாகம் இக்காலத்தில் நடக்கிற விவாகங்களைப் போல் இல்லை. அக்கால வழக்கங்களை நாம் நன்றாய்த் தெரிந்து கொள்ளாமல் ஸ்ரீகிருஷ்ணனுடைய ஆதர்ச புத்தியையும் ஆதர்சப் பிரீதியையும் தெரிந்துகொள்ளமுடியாது.

மநுதர்மசாஸ்திரத்தில் விவாகங்கள் பிராம்மம், தெய்வம், ஆர்ஷம், பிராஜாபத்யம், ஆஸுரம், காந்தர்வம், ராக்ஷஸம், பைசாசம் என்று எட்டுவிதமாகச் சொல்லப்பட்டுள்ளன. எட்டுவித விவாகங்களிலும் எல்லா வருணத்தாருக்கும் அதிகாரமில்லை.

க்ஷத்திரியர்களுக்கு எவ் விவாஹங்களில் அதிகாரமுண்டென்பது அடியிற்கண்ட வாக்கியத்தால் விசதமாகும்.

"ஷடாநுபூர்வ்யா விப்ரஸ்ய க்ஷத்ரஸ்ய சதுரோவராந்" என்னும் இதற்குக் குல்லூகபட்டர் "க்ஷத்ரியஸ்யாவராநுபரிதநாநாஸுராதீம்ஶ்சதுர:" "க்ஷத்திரியர்களுக்குப் பின்சொல்லப்பட்ட ஆஸுரம் முதல் நான்கும்" என்று வியாக்கியானம் செய்திருக்கிறார். அதாவது க்ஷத்திரியர்களுக்கு ஆஸுரம், காந்தர்வம், ராக்ஷஸம், பைசாசம் இந்நான்கும் சாஸ்திரீயமான விவாகங்கள். மற்றவை சாஸ்திரவிரோதமானவைகள். ஆனால் 25-வது சுலோகத்தில் "பைஶாசஶ்சாஸுரஶ்சைவ ந கர்தவ்யௌ கதாசந". பைசாச விவாகமும் ஆஸுரவிவாகமும் ஒருகாலும் யாராலும் அனுஷ்டிக்கத்தக்கதில்லை என்றிருக்கிறது. ஆகையால் க்ஷத்திரியர்களுக்குக் காந்தர்வவிவாஹமும், ராக்ஷஸ விவாகமுமே விதிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது.

இவைகளில் கன்னிகையும் வரனும் ஒருவருக்கொருவர் அனுராகத்தால் செய்துகொள்ளும் விவாகம் காந்தர்வம் என்பது. சுபத்திரைக்கு அர்ஜுனனிடம் அனுராகம் இருந்திராவிட்டால் அவர்களுக்கு விவாகம் நடந்திருக்கமாட்டாது. காந்தர்வவிவாகம் காமத்தாலேற்படக்கூடியதாகையால் நீதிமானான ஸ்ரீகிருஷ்ணனால் அது அனுமதிக்கப்பட்டிருக்கமாட்டாது. ஆகையால் க்ஷத்திரியர்களுக்கு ராக்ஷஸ விவாகத்தைத் தவிர வேறுவிவாகம் சாஸ்திரப்படி யுக்தமுமில்லை. நல்லதுமில்லை. கன்னிகையைப் பலாத்காரமாக அபஹரித்துப்போவதையே ராக்ஷஸவிவாகம் என்று சொல்லுகிறார்கள். அதுதான் க்ஷத்திரியர்களுக்கு உத்தமமான விவாகம்.

சதுரோ ராக்ஷஸாத்யாந் ப்ரஶஸ்தாந் கவயோ விது:।
ராக்ஷஸம் க்ஷத்ரியஸ்யைகமாஸுரம் வைஶ்யஶூத்ரயோ:॥

(3, அத்தி. 24-வது சுலோகம்.)

"ராக்ஷஸம் முதலிய நான்குவிவாஹங்கள் மேன்மையுள்ளவை யென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். க்ஷத்திரியர்களுக்கு

ராக்ஷஸவிவாகமும், வைசிய சூத்திரர்களுக்கு ஆஸுர விவாகமும், மிகவும் சிறந்தது" என்று மனு கூறுகிறார்.

ஸ்ரீகிருஷ்ணன் தன் சகோதரிக்கும் அவளுடைய கணவனுக்கும் நன்மையையும் கௌரவத்தையும், தன் குலத்தின் கௌரவத்தையும் உத்தேசித்துத் தர்மமானதும் சிலாக்கியமானதுமான விவாகத்தையே அவளுக்கு நடத்திவைக்கப் பாத்தியப்பட்டவராக இருந்தார். ஆதலால் ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்குச் சுபத்திரையை அபகரிக்கும்படி அனுமதிகொடுத்தார். இந்த விருத்தாந்தத்திலிருந்து ஸ்ரீகிருஷ்ணனுடைய சாஸ்திரப்பயிற்சியும், சிறந்த நீதியறிவும், நிலைத்ததான புத்தியும், எல்லாருடைய மரியாதையையும் காக்கும் விருப்பமும், யாவருக்கும் ஹிதம்செய்யவேண்டுமென்ற இச்சையும் காணப்படுகின்றன.

இவ்விஷயத்தில் மனுவின் சுலோகங்கள் பொருந்தாது என்று சிலர் சொல்லக்கூடும். பாண்டவர்களின் காலத்தில் மனுஸம்ஹிதையிருந்ததென்பதற்குப் பிரமாணம் எது? இதைப்பற்றி அநேக விவாதங்களேற்படுகின்றன. மனுநீதி யென்பது முன்பு அநுஷ்டானத்திலிருந்த வழக்கங்களையே ஒருங்குசேர்த்துத் தொகுக்கப்பட்ட ஒரு புஸ்தகம் என்று படித்தவர்களில் சிலர் நினைக்கிறார்கள். ஆகையால் யுதிஷ்டிருடைய காலத்தில் இவ்விதமான முறையிருந்ததாவென்று விசாரித்தல் அவசியமாயிருக்கிறது. மகாபாரதத்தில் இதைக்குறித்து என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்பதைப்பற்றி விசாரிப்போம். ஸுபத்ராஹரண அத்தியாயத்தை மட்டிலும் பரிசீலனைசெய்தால் போதாது. மற்ற அத்தியாயங்களையும் படித்தல்வேண்டும்.

அர்ஜுனன் ஸுபத்ரையையெடுத்துப் போனதைக் கேள்விப்பட்டு, யாதவர்கள் கோபமடைந்து யுத்தத்திற்கு ஆயத்தமானார்கள். அவர்கள் அக்கிரமத்தைச் செய்யுமுன் ஸ்ரீகிருஷ்ணன் என்ன செய்தாரென்பதை நாம் கவனிக்கவேண்டும். அவர் மௌனமாகவிருந்தார். தங்களுடைய குலத்துக்கே அவமானம் விளைந்ததென்று பலதேவர் கோபத்தையடைந்து, கிருஷ்ணனுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளவிரும்பினார். ஸ்ரீகிருஷ்ணன்

அவருக்கு "அர்ஜுனன் நமது குலத்துக்கு அவமானம் செய்ய வில்லை, ஸந்மாநத்தையே செய்திருக்கிறான். அவன் நம்மைப் பொருட்பற்றற்றவர்களென்று நினைத்துப் பணத்தைக் கொடுத்துச் சுபத்திரையைப் பெற்றுக்கொள்ள நினைக்கவில்லை. தாய் தகப்பன் மார்களின் அனுமதியின்பேரில் கொடுக்கப்பட்ட கன்னிகையை விவாகம்செய்வதில் வீர்யமுள்ள க்ஷத்திரியனுக்கு அழகில்லை. குந்திபுத்திரனான தனஞ்சயன் நம்முடைய நிச்சயத்தையறிந்து கொண்டும் மேற்சொல்லிய தோஷத்தைத் தெரிந்துகொண்டும் பலாத்காரமாகச் சுபத்திரையை யபஹரித்தான். அர்ஜுனனுடன் சம்பந்தமானது நமது குலத்துக்கு உசிதமானது. குலம், சீலம், வித்யை, புத்தி இவைகளில் நிறைவுபெற்றவனான பார்த்தன் பலாத்காரமாய் அபஹரித்தான் என்பதால் ஸுபத்திரைக்குப்புகழ் உண்டாகுமே தவிர வேறில்லை என்று மறுமொழி கூறினார். இவ்விடத்தில் ஸ்ரீகிருஷ்ணன் க்ஷத்திரியர்களுக்கு உசிதமான நான்கு விவாகங்களைப்பற்றி விவரமாகச் சொன்னார். அவை,

1. பணத்தைக்கொடுப்பதால் எந்த விவாகம் முடிவுபெறுமோ அது ஆஸுரம்.
2. ஸ்வயம்வர விவாகம்.
3. தாய்தந்தையர்களாற் கொடுக்கப்பட்ட கன்னிகையை விவாகம் செய்துகொள்ளுவது அல்லது பிராஜாபத்யம்.
4. ராக்ஷஸம்-பலாத்காரமா யபஹரித்தல். என்பனவாம்.

இவைகளில் முதலாவது விவாகம் கன்னிகையின் குலத்துக்கு அபகீர்த்தியைக் கொடுக்கக்கூடியது. இரண்டாவதன் முடிவு நிச்சயமற்றது. மூன்றாவது விவாஹத்தால் வரனுக்குக் கௌரவம் ஏற்படாது. காரியம் நிறைவேறுவதற்கு நான்காவதுதான் ஒழுங்கானது. இது ஸ்ரீகிருஷ்ணனுடைய வார்த்தையிலிருந்தே பிரகாசமாகிறது. நாம் எவ்விதத்திலும் ராக்ஷஸ விவாகத்தையே பெருமைப்படுத்துகிறோமென்று நினைக்கவேண்டாம். ராக்ஷஸ விவாகம் சிலாக்கியமானதில்லையென்று நினைத்து மங்களமான காரியத்தைக் கெடுத்துவிடுதல் பிரயோஜனமற்றது.

இதைக்குறித்து நாம் விஸ்தாரமாய் எழுதியதற்குக் காரணம் உண்டு. ஸ்ரீகிருஷ்ணனின் விரோதிகள்கூட ஸுபத்ரையை அபஹரிக்கும்படி அவர் அனுமதிகொடுத்ததற்காக அவரை ஓரிடத்திலும் நிந்திக்கவில்லை.

அயல்தேசத்து வழக்கங்கள் நல்லவையென்று சில அற்பக் காரியங்களை நாம் பின்பற்றினேமானால் நமது முன்னோர்களின் ஒப்பற்றவையான பழைய வழக்கங்களையும் நாம் இழக்கும்படி ஏற்படும். நம்மிடமிருக்கிற சில கெட்ட பழக்கங்களை நாம் விலக்கிவிடுதலும் வேண்டும்.

---

## நான்காவது அதிகாரம்.

### காண்டவவன தாகம்.

ஸுபத்ராஹரணத்திற்குப் பிறகு ஸ்ரீகிருஷ்ணனைக் காண்டவவனதாகத்திற் காண்கிறோம்.

பாண்டவர்கள் காண்டவப்பிரஸ்தத்தில் வாசம் செய்துகொண்டிருந்தார்கள். அவர்களுடைய ராஜதானிக்குச் சமீபத்தில் காண்டவம் என்ற பெரிய வனமொன்றிருந்தது. ஸ்ரீகிருஷ்ணனும் அர்ஜுனனும் அதை யெரித்துவிட்டார்கள். அதன் விருத்தாந்தம் இவ்வளவுதான். அதைப்பற்றிப் பொய்க்கதைகள் நிரம்ப நிறைந்துவிட்டன.

பூர்வகாலத்தில் சுவேதகியென்று பெயருள்ள ஒரு அரசன் இருந்தான். அவன் யஜ்ஞங்களைச்செய்வதில் மிகவும் பிரியமுள்ளவன். ரித்விக்குக்களான பிராமணர்கள் அவனுக்கு யாகங்களைச் செய்துவைத்துத் தவித்துப்போனார்கள். இனிமேல் தங்களால் யாகத்தைச் செய்துவைக்கமுடியாதென்று, அரசனை ருத்திரனிடம் போகும்படி அவர்கள் சொன்னார்கள். ருத்திரரோ, யாகம் செய்வித்தல் பிராமணர்களின் தொழிலென்றும், தன்னால் செய்விக்கமுடியாதென்றும், துர்வாஸர் என்ற ஓர் அந்தணரிருக்கிறாரென்றும், அவர் தன்னுடைய அம்சமென்றும், அவரிடம் தானே உத்திரவிட்டிருப்பதால் அவரிடம் செல்க என்றும் அரசனிடம்

தெரிவித்தார். ஸ்ரீருத்திரருடைய ஆஜ்ஞைப்பிரகாரம் துர்வாஸர் அரசனுடையவேள்வியை நடத்திவைத்தார். யாகமோ பெரியது. ஒருவருஷகாலம்வரை இடைவிடாமல் அக்நியில் நெய்யின் தாரை விழுந்துகொண்டிருந்தது. நெய்யைக் குடித்துக்குடித்து அக்கினிக்கு அஜீர்ணரோகம் ஏற்பட்டது. அக்னி, பிரமனிடம் போய் "ஐயா! பெரிய ஆபத்து வந்திருக்கிறது. அதிகமாயுணவு கொண்டதால், சரீரத்துக்குக் கெடுதியேற்பட்டிருக்கிறது. அதைத் தீர்க்கும் உபாயம் எது" என்று அவரைக் கேட்டார். பிரும்மாவானவர் வைத்தியர்கள் 'உஷ்ணம் உஷ்ணே ந ஶாம்யதி' என்று சொல்லியிருக்கிறார்கள். எதனால் வியாதி ஏற்பட்டதோ அதைக்கொண்டே அந்த வியாதியைப் போக்கவேண்டுமென்று அக்கினியிடம் சொல்லி மறுபடியும் நிரம்ப உணவெடுத்துக்கொள்ளச் சொன்னார். அக்கினி காண்டவவனத்தையணுகினான். நெருப்பு வனத்தை நாலுபக்கங்களிலும் சூழ்ந்துகொண்டது. அந்தக்காட்டில் அநேக ஜீவஜந்துக்கள் வசித்துவந்தன. யானைகள் தங்களுடைய துதிக்கைகள் நிறைய ஜலத்தை மொண்டுவந்து நெருப்பையணைத்துவிட்டன. ஜந்துக்கள் காக்கப்பட்டன. நெருப்பு ஏழுதடவை காட்டையெரித்தது. ஏழுதடவைகளிலும் யானைகள் நெருப்பையணைத்தன. பிறகு அக்கினி பிராமண வடிவங்கொண்டு கிருஷ்ணனையும் அர்ஜுனனையுமணுகித் தனக்கு மிகவும் பசியாயிருத்தலால் உணவுகொடுக்கும்படி பிரார்த்தித்தான். அவர்கள் சம்மதித்தார்கள். பிறகு அக்கினி சுயரூபம் கொண்டு தனக்குக் காண்டவவனத்தைச் சாப்பிட உத்திரவளிக்கும்படி பிரார்த்தித்தான். அவர்களும் ஆஜ்ஞை கொடுத்தார்கள். நெருப்பு காட்டை யெரிக்கத்தொடங்கியது. ஆனால் இந்திரன் பெரிய மழையைப் பெய்யச்செய்து அவ்வனத்தைக் காக்கத் தொடங்கினான். விருஷ்டியால் பயிர்களுக்கு நலம் என்பதுமட்டும் நமக்குத்தெரியும். அர்ஜுனன் காட்டுக்குச் சமீபம் வந்தான். இந்திரன் யுத்தத்துக்கு வந்தான். எல்லாத்தேவர்களும் தங்களுடைய அஸ்திரங்களுடன் இந்திரனுக்கு உதவிக்கு வந்தார்கள். எல்லோரும் அர்ஜுனனையெதிர்க்கமுடியவில்லை. இந்திரன் மலைகளையெடுத்து எறிந்தான். அர்ஜுனன் தனது பாணங்களால் கோட்டை கட்டி வனத்தைக் காத்தான். இந்திரன் வஜ்ராயுதத்தைக் கையி

லெடுத்து அடிக்கத் தொடங்கினன். அப்பொழுது ஆகாயவாணி தோன்றி, இவர்கள் நரநாராயணர்களென்ற பிராசீன ருஷிகளென்று சொல்லிற்று. ஆகாயவாணியின்வார்த்தையைக்கேட்டுத் தேவர்கள் விண்ணுலகம் சென்றூர்கள். கிருஷ்ணனும் அர்ஜுனனும் இஷ்டப் பிரகாரம் வனத்தை யெரித்தார்கள். பசுக்களும் பக்ஷிகளும் வனத்தைவிட்டு ஓட ஆரம்பித்தன. அவர்கள் அவைகளையும் பிடித்துப்பிடித்துக் கொன்று நெருப்பிலேயே எறிந்தார்கள். அவைகளின் கொழுப்பைச்சாப்பிட்டதால் அக்கினிக்கு அஜீர்ண ரோகம் தீர்ந்தது. விஷத்தால் விஷம் அடிபட்டது. அக்கினிபகவான் கிருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் வரம் தந்தருளினர்.

இப்பொய்க்கதைகளைப்பற்றி விவரிக்கப்புகுந்தால் கேலிக்கிடமாகும். வேறு பயனில்லை. இந்தவிருத்தாந்தத்தில் ஏதாவது உண்மையான சங்கதியிருக்குமானல் அதைக் கீழே விவரிக்கிறோம். பாண்டவர்களின் ராஜதானிக்குச் சமீபத்தில் ஒரு காடு இருந்தது. அதில் துஷ்டமிருகங்கள் அநேகமிருந்தன. கிருஷ்ணனும் அர்ஜுனனும் அதில் நெருப்பைவைத்துக் காட்டையழித்து ஜனவாஸத்துக்கு யோக்கியமாகச் செய்தார்கள். கிருஷ்ணனும் அர்ஜுனனும் அப்படிச்செய்ததிலிருந்து ஒரு அபகீர்த்தியும் பெறவில்லை.

நாம் இவ்விதம் சொல்வதற்குக் காரணங்களிருக்கின்றன. காண்டவதாக விருத்தாந்தத்தின் பெரும்பாகம் பாரதம் மூன்றுவது தொகுதியில் காணப்படுகிறது. முதலாவது தொகுதியில் அது இல்லை. பர்வஸங்கிரஹ அத்யாயத்திலும், அநுக்கிரமணிகாத்தியாயத்திலும் இதனுடைய பிரஸ்தாபம் இருக்கிறது. காண்டவ தாகத்திலிருந்து சபாபர்வம் ஆரம்பிக்கப்படுகிறது. இவ்வனத்தின் மத்தியில் மயனென்ற அசுரன் ஒருவன் வசித்தான். அவனுக்கு அபாயம் ஏற்பட்டது. அவன் அர்ஜுனனிடம் தன்னைக் காப்பாற்றும்படி கேட்டான். சரணமடைந்த மயனை அர்ஜுனன் காத்தான். இதற்குப் பதிலுபகாரமாக மயன் பாண்டவர்களுக்கு ஒரு விசித்திரமான சபையை நிர்மாணஞ்செய்துகொடுத்தான். அந்தச்சபையின் விருத்தாந்தத்திலிருந்து தொடங்குகிறது

ஸபாபர்வத்தின் கதை. இந்தப்பர்வத்தில் மகாபாரத யுத்தத்துக்கு விதை விதைக்கப்பட்டிருக்கிறது.

சபையும், அதில் ராஜஸூயயாகம் நடந்ததும் உண்மையான விருத்தாந்தங்கள். சபை வாஸ்தவமாயிருந்தால் அதைக் கட்டி முடிப்பதற்கு ஒரு மனிதன் இருந்திருக்கவேண்டும். அந்த மனிதன் அல்லது இஞ்சினீயரின் பெயர் மயன். மயனென்பான் ஆர்ய ஜாதியைச் சேர்ந்தவனல்லன். ஆகையால் அவனை அஸுரன் என்று சொல்லுகிறோம். அவன் அர்ஜுனனையண்டிப் பிழைத்தான். அர்ஜுனனிடமிருந்து அவன் எவ்விதமான உபகாரத்தைப்பெற்றான் என்பது காண்டவதாக விருத்தாந்தத்தில் காணப்படுகிறது. உண்மைக்கதையை அநேகவிதமான பொய்க்கதைகள் சூழ்ந்து உண்மையை இருட்டில் மறைத்திருக்கின்றன. இதைப்போல் அநேக சரித்திரவுண்மைகளும் இருளில் பொதிந்துகிடக்கின்றன. காண்டவதாகம் என்பதே ஒருகவியின் உல்லேகம் என்று சிலர் சொல்லுகிறார்கள். இருந்தாலும் கவியானவன் எந்த உத்தேசத்தையிட்டுக் கிருஷ்ணார்ஜுனர்களின் சரித்திரத்தைத் தொகுத்திருக்கிறானோ, அந்த உத்தேசம் மிகவும் நல்லது.

மயனானவன் உயிர் காப்பாற்றப் பெற்று அர்ஜுனனிடம் சென்று "தாங்கள் என்னை ரக்ஷித்தீர்கள்; நான் தங்களுக்கு என்ன பிரத்யுபகாரம் செய்யவேண்டும், உத்திரவிடுங்கள்" எனப் பிரார்த்தித்தான். அர்ஜுனன் பிரத்யுபகாரத்தை விரும்பவில்லை. அவனுடைய பிரியத்தைமட்டும் விரும்பினான். ஆனால் மயன் அம்மட்டில் விடவில்லை. தான் ஏதாவது காரியம் செய்து கொடுப்பதாகக் கட்டாயப்படுத்தினான். அப்பொழுது அர்ஜுனன் "ஓ! கிருதஜ்ஞனே! நீ சாகுந்தருவாயிலிருந்தபோது, என்னால் காக்கப்பட்டாய் என்பதை நினைத்துப் பிரத்யுபகாரஞ்செய்யவிரும்புகிறாய். இதன் நிமித்தம் உன் மூலமாக நான் ஒரு உபகாரத்தையும் பெற்றுக்கொள்ளமாட்டேன்" என்று மயனிடம் சொன்னான்.

இதுதான் நிஷ்காமகர்மம். அயனாட்டில் இவ்விதமில்லை. ஐரோப்பியர்களுடைய கிரந்தங்களிலிருந்து நாம் தர்மத்தையும் நீதியையும் கற்றுக்கொள்ளவிரும்புகிறோம்; அது நமது துர்ப்பாக்கியம்.

அர்ஜுனனுடைய வாக்கியத்தின் பின்பாகத்திலிருந்து நிஷ்காம கருமம் எது என்று தெரிந்துகொள்ளலாம். ஆனால் மயன் அர்ஜுனனுக்கு ஏதாவது காரியம் செய்துகொடுத்து மனத்திருப்தியையடைவதாயிருந்தால் அதைக்கெடுக்க அர்ஜுனனுக்கு இஷ்டமில்லை. அர்ஜுனன் மயனிடத்தில் "நான் உன்னுடைய அபிப்பிராயத்தை வீணாக்க இஷ்டப்படவில்லை. ஆகையால் நீ, ஸ்ரீகிருஷ்ணனுக்கு ஏதாவது காரியம் செய்துகொடுத்தால், அதுவே எனக்குப் பிரத்யுபகாரஞ் செய்ததாக ஆகும்" என்று சொன்னான்.

மயன் கிருஷ்ணனைத் தனக்கு உத்திரவிடும்படி கேட்டான். மயன் தானவர்களுக்குள் விசுவகர்மா. ஸ்ரீ கிருஷ்ணன் தனக்காக ஏதாவது காரியம் செய்யும்படி மயனிடம் சொல்லவில்லை. யுதிஷ்டிரருக்கு ஒரு சபை கட்டிக்கொடுக்கும்படி மயனிடம் ஸ்ரீகிருஷ்ணன் சொன்னார். அச்சபையைப்போல் வேறு ஒருவரும் சபை கட்டமுடியாதபடி அவ்வளவு சிறந்ததாகச் சபையைக்கட்டி முடிக்கும்படி ஸ்ரீகிருஷ்ணன் உத்திரவிட்டார். ஸ்ரீகிருஷ்ணனுக்கு இது தனது கார்யமில்லாமலிருந்தாலும், அவருக்கு அது சொந்தக் காரியமேதான். ஸ்ரீகிருஷ்ணனுக்கு இரண்டே நோக்கங்கள்; தர்மத்தைப் பிரசாரம் செய்தலும், தர்மராஜ்யத்தை ஸ்தாபித்தலும். தர்மப் பிரசாரத்தைக்குறித்து நாம் இப்பொழுது பிரஸ்தாபிக்கவில்லை. இந்தச்சபையைச் செய்வித்ததே தர்மராஜ்ய ஸ்தாபனத்தின் முதலாவது அங்கம். சபை நிர்மாணம்செய்யப்பட்டதிலிருந்தே யுதிஷ்டிரருக்கு மற்றக்காரியங்களும் நிறைவேறின. தர்மராஜ்யத்தை ஸ்தாபித்தல் ஜகத்தின் காரியம். ஜகத்துக்கு உபகாரமான காரியம் எதுவோ அதைத் தன்னுடைய சொந்தக்காரியமாக ஸ்ரீகிருஷ்ணன் கருதிவந்தார்.

ஒரு மரத்தை வளர்ப்பதற்குக் கிளைகளில் தண்ணீர் வார்க்காமல், வேரில் ஜலத்தை ஊற்றுவதுபோல, ஸ்ரீகிருஷ்ணன் எல்லோருடைய நன்மைக்குமாக அதற்கு மூலமான தர்மத்தை வளர்ப்பதில் எண்ணமுள்ளவராக இருந்தார். ஜனங்கட்கு நன்மைசெய்வதால் நமக்கொரு பிரயோஜனமில்லையே என்று வேற்றுமையாக நினைத்து நாம் அதில் பிரவர்த்திப்பதில்லை. நமக்குக் கீர்த்தி வருவ

தாயிருந்தால், அந்தக்காரியத்தில் நாம் பிரவர்த்திக்கிறோம். வெள்ளைக்காரர்கள் ஒப்புக்கொள்ளுகிற காரியங்களையே, பெரியவையென்று நாம் நினைக்கிறோம். தர்மத்தை மறந்துவிட்டோம். தர்மத்தின் உயர்வைத்தவிர வேறெதைக் கைப்பிடித்து நாம் முன்னுக்கு வரக்கூடும்? ஆகையால் நாமெல்லோரும் ஒரே மனதுள்ளவர்களாகத் தர்மத்தின் உயர்வில் எண்ணத்தை வைப்போம். ஸமாஜத்தைச் சீர்திருத்துவதற்கு வேறு வேலை செய்யவேண்டாம். தர்மத்தைக் காப்பாற்றுவிடில் ஸமாஜஸம்ஸ்காரம் ஏற்படாது.

## ஐந்தாவது அதிகாரம்.

### ஸ்ரீகிருஷ்ணனின் (ஆதர்சமான) மனிதத்தன்மை.

ஸ்ரீகிருஷ்ணனைப் பற்றிய இந்தச் சரித்திரத்தில் அவருடைய மனிதத்தன்மையை மட்டும் நாம் கவனித்து வந்தோம். அவர் ஈசுவரரோ அல்லரோ? இதைப்பற்றி நாமொன்றும் சொல்லவில்லை.

தர்மமென்பது ஓர் உத்தமமான வஸ்து. ஒருவன் எப்படியிருப்பினும் தர்மத்தை அநுஷ்டானம்செய்துவந்தால், அவன் பயனடையாமற்போகவேமாட்டான்.

நாம் ஸ்ரீகிருஷ்ணனின் ஈசுவரத்தன்மையைப்பற்றி விவரிக்கப் புகவில்லை. அவருடைய ஆதர்ச மனுஷ்யத்தன்மையைப்பற்றி மட்டும் பரிசீலனைசெய்கிறோம். அவர் ஆதர்சபுருஷரென்று முன்பே சொல்லியிருக்கிறோம். மனித சக்திக்கு மீறினதாக அவர் எந்தக் காரியத்தையாவது செய்திருந்தால், அவருடைய மனித சக்தி விகாஸத்தையடைந்ததாகக் கொள்ளவேண்டும். மனிதர்களுக்குப் புத்திபுகட்டுவதற்காகவே ஈசுவரன் மனிதரூபமாக இவ்வுலகில் அவதரிக்கிறார் என்று முன்னமே நாம் சொல்லியிருக்கிறோம். ஸ்ரீகிருஷ்ணன் ஓரிடத்திலும் உலகத்துக்கு மீறினசக்தியால் காரியங்களை நிர்வாகம்செய்துவரவில்லை, ஏனென்றால் மனிதனுக்கு உலகத்தை மீறின வல்லமையில்லை. ஆதலால் ஸ்ரீகிருஷ்ணன் ஈசுவராவதாரமாயிருந்தும், அவர் தம்மை ஈசுவரனென்று சொல்லிக்கொள்ளவுமில்லை. பிறர் அவரை ஈசுவரனென்று சொன்னாலும் அதை அவர் ஆமோதிப்பதுமில்லை. "நம்மால் இயன்றமட்டிலும் முயற்சியைப் பிரகாசப்படுத்தமுடியும். தெய்வம்போல் நடக்க

நம்மால் முடியாது" என்று அவர் ஓரிடத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கிறார். மனுஷ்யருக்குள்ள ஆசார வியவகாரங்களையே அவர் அனுஷ்டானம்செய்துவந்திருக்கிறார். தன்னைத் தெய்வம் என்று பிறர் நினைக்கவேண்டுமென்ற எண்ணம் அவருக்கு ஒரு நாளு மிருந்ததாகத் தெரியவில்லை. அவர் காண்டவ வனதாகத்திலும் மற்றக் காரியங்களிலும் எப்படி நடந்துகொண்டாரோ அதைப் பற்றி யிப்பொழுது சொல்லுகிறோம்.

வைசம்பாயனர் "பகவான் வாஸுதேவர் பாண்டவர்களாற் பூசிக்கப்பெற்று மிகவும் பிரீதியடைந்து கொஞ்சகாலம் காண்டவப் பிரஸ்தத்தில் வாசஞ்செய்துவந்தார். பிறகு தம்முடைய தந்தையைக் காணவிரும்பியதால் தம் கிருகத்துக்குப்போக நினைத்தார். அவர் முதலில் யுதிஷ்டிரரை அடுத்து, அத்தையான குந்தி தேவிக்கு வந்தனம் செய்தார். பிறகு தனது சகோதரியான ஸுபத்திரையைப் பார்க்கவேண்டி அவளுடைய சமீபத்துக்குச்சென்றார். உண்மையானவைகளாயும், அர்த்தம் நிரம்பினவைகளாயும், சுருக்கமானவைகளாயும், ஹிதம்செய்யக்கூடியவைகளாயும், ஆக்ஷேபிக்கத் தகாதவைகளாயும் உள்ள வார்த்தைகளால் சுபத்திரைக்கு ஸ்ரீகிருஷ்ணன் புத்திமதியைச் சொன்னார். விருஷ்ணிவம்சத்துக்கு அலங்காரமான ஸ்ரீகிருஷ்ணன், அவளிடம் விடைபெற்றுக் கொண்டு திரௌபதியையும் தௌம்யரையும் கண்டார். தௌம்யரை வந்தனம் செய்து, திரௌபதியுடன் ஹிதமாகச் சம்பாஷணை செய்தார். பிறகு அர்ஜுனனுடன் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு, யுதிஷ்டிரர் முதலியோரிடம் சென்றார். ஸ்ரீகிருஷ்ணன் பஞ்ச பாண்டவர்களாற் சூழப்பெற்றுத் தேவர்களுடன் கூடின இந்திரனைப்போல் விளங்கினார். பிறகு ஸ்நாநஜபங்களை முடித்துக்கொண்டும், யாத்திரைக்காக வஸ்திராபரணங்களால் அலங்காரம்செய்துகொண்டும், புஷ்பங்களாலும் மாலைகளாலும் வாசனைத்திரவியங்களாலும் தேவர்களையும் பிராமணர்களையும் பூஜைசெய்துமுடித்துத் தம் நகரத்துக்குப் போகவேண்டுமென்று வெளிக்கட்டிடத்துக்கு வந்தார்; அங்கே தயிர், பழம், புஷ்பம் முதலான மங்கள வஸ்துக்களுடன் பிராமணர்கள் அவருக்கு ஆசிகூறினார்கள். ஸ்ரீவாஸுதேவர் அவர்களுக்குத் திரவியங்களைக் கொடுத்து,

அவர்களைப் பிரதக்ஷிணம் செய்தார். பிறகு உத்தமமான திதி நக்ஷத்திரத்துடன் கூடின நல்ல முகூர்த்தத்தில், குடை, கத்தி, தனுசு முதலிய ஆயுதங்களையெடுத்துக்கொண்டு கருடக்கொடியுடன் கூடின தேர்மீதேறிக்கொண்டு தம் நகருக்குச் சென்றார். அந்தத் தேர்மீது, யுதிஷ்டிரரை ஆதரவுடன் ஏற்றிவைத்து, ஸாரதியான தாருகனை விலகியிருக்கச்சொல்லித் தானே ஸாரதியாகக் குதிரைக்கடிவாளங்களைக் கைகளில் பிடித்துக்கொண்டார்; அந்தத் தேர்மீதில், அர்ஜுனன் தானும் ஏறிக்கொண்டு ஸ்வர்ணத்தண்டுடன் கூடின வெண்சாமரத்தை வீசிக்கொண்டு ஸ்ரீகிருஷ்ணனை வலம் வந்தான். மகாபலசாலியான பீமனும் மற்றப் பாண்டவர்களும் புரோகிதர்களும் அவரைப் பின்தொடர்ந்தார்கள். சத்துருக்களை ஜயிக்கவல்ல ஸ்ரீகிருஷ்ணன் யுதிஷ்டிரர் முதலான பாண்டவர்களாற் சூழப்பெற்றுச் சிஷ்யர்களுடன் கூடின குருமார்களைப் போல் பிரகாசித்தார். அவர் அர்ஜுனனை இறுகத்தழுவினார், யுதிஷ்டிரரையும் பீமசேனனையும் பூஜைசெய்தார். நகுல ஸகாதேவர்களைக் கௌரவித்தார். யுதிஷ்டிரரும் பீமனும் அர்ஜுனனும் அவரை ஆலிங்கனஞ்செய்தார்கள். நகுல சகாதேவர்கள் அவரை நமஸ்காரம் செய்தார்கள். ஸ்ரீகிருஷ்ணன் யுதிஷ்டிரரையழைத்து அவரைத் திரும்பிப்போகும்படி சொல்லி அவர்கால்களில் விழுந்தார். தர்மராஜாவான யுதிஷ்டிரர் காலில்விழுந்த தாமரைக் கண்ணனைக் கைகளாலெழுப்பிவிட்டு, உச்சி முகந்துபார்த்துச் சொந்த ஊருக்குப்போக அனுமதி கொடுத்தார். ஸ்ரீகிருஷ்ணனும் வருத்தத்துடன் அவர்களை விட்டுப்பிரிந்து துவாரகையை நோக்கிப் புறப்பட்டார். அப்பொழுது அவர் அமராவதிக்குச்செல்லுகிற இந்திரன்போலக் காணப்பட்டார். ஸ்ரீகிருஷ்ணன் எப்போது காணக்கிடைத்தாரோ அப்போது அவரைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டும், கண்களுக்கு எட்டுகிற வரையில் மனதினாலேயே அவரைத் தொடர்ந்தும் சென்றார்கள்; ஸ்ரீகிருஷ்ணன் தங்களுடைய பார்வைக்கு மறைந்த பிறகு அவரையே தியானித்துக்கொண்டு பாண்டவர்கள் தங்களுடைய நகரத்துக்குத் திரும்பினார்கள். ஸ்ரீகிருஷ்ணன் சந்தோஷத்துடன் துவாரகைக்குச்சென்றார், உக்ரஸேனர் முதலான யாதவர்கள், அவருக்கு

உபசாரஞ்செய்தார்கள். வாஸுதேவர், வயதுசென்றவர்களான தனது பிதாவையும், ஆஹுகரையும், பலபத்திரரையும், நமஸ்கரித்தார். பிறகு பிரத்யும்நன், சாம்பன், நிசடன், சாருதேஷ்ணன், கதன், அநிருத்தன், பானு: இவர்களை ஆலிங்கனஞ்செய்து பெரியோர்களின் அனுமதியின்பேரில் ருக்மிணியின் கிருகத்துக்குச் சென்றார்'' என்று சொல்லுகிறார்.

---

## ஆறுவது அதிகாரம்.

### ஜராஸந்தவதத்தின் பரிசீலனை.

சபை நிர்மாணம் முடிந்தவுடன் ராஜஸூய யாகத்தின் பிரஸ்தாபம் வந்தது. யாகம்செய்யும்படி யுதிஷ்டிாருக்கு எல்லோரும் அனுமதிகொடுத்தார்கள். ஆனல் அவர், ஸ்ரீகிருஷ்ணனுடைய உத்தரவில்லாமல் அவ்விஷயத்தில் பிரவர்த்திக்கச் சம்மதிக்கவில்லை. ஸ்ரீகிருஷ்ணன் சிறந்த நீதிமானகையால், அவரையழைத்துவர யுதிஷ்டிரர் ஆள் அனுப்பினர். ஸ்ரீகிருஷ்ணன் இந்தச்சமாசாரம் தெரிந்தவுடன் காண்டவப்பிரஸ்தத்துக்குப் புறப்பட்டு வந்தார். அவர், யுதிஷ்டிரரிடம், ''நானும் யாகம் செய்வதில் விருப்பமுள்ளவனே. இந்த யாகத்தை, நினைத்தவுடன் செய்யமுடியாது. அது தங்களுக்குத் தெரிந்த விஷயமே. எவனுக்கு எல்லாச் செல்வமும் இருக்கிறதோ, எவன் எல்லாராலும் பூஜிக்கப்பெறுகிறானே, எவன் பூலோகம் முழுவதற்கும் அரசனே, அவனே அந்த யாகத்தைச் செய்யத்தகுதியுள்ளவன்.'' என்று சொன்னர். யுதிஷ்டிரர் ஸ்ரீகிருஷ்ணனிடம் வணக்கத்துடன் ''நான் அவ்விதமான அரசனா? எல்லா சம்பத்துக்களும் என்னிடம் இருக்கின்றனவா? நான் எல்லாவிடங்களிலும் பூஜிக்கப்பெறுகிறேன?'' என்று வினவினர்.

தன் பிராதாக்களின் பலத்தினல் ஒருவன் பெரிய அரசனகக் கிளம்பியிருக்கலாம். அதனல் அவன் ராஜஸூய யாகம் செய்யத் தகுந்தவனகமுடியுமா? தானே பெரிய அரசனென்று ஒருவனும் தன்னலேயே நிர்ணயிக்கமுடியாது. துராத்மாவும் ஆடம்பரமுள்ளவனுமான மனிதன், தானே பெரியோன் என நினைத்துக் களிப்

படைவது சகஜந்தான். ஆனால் யுதிஷ்டிரரைப்போல் ஸாவதான முள்ளவனுக்கும் வினயமுள்ளவனுக்கும் அவ்விதமான நினைவு ஏற்படாது. தான் பெரிய அரசனென்ற எண்ணம் அவர் மனதில் உதிக்கவில்லை. அவர் மந்திரிமார்களையும் பிராதாக்களையும் அழைத்து இவ் விஷயத்தில் ஆலோசனைசெய்தார். அவர்கள் அவர் தகுதியானவரென்று பதில் சொன்னார்கள். யுதிஷ்டிரரின் மனம் சமாதானமடையவில்லை. தனக்கு அந்தரங்கமானவர்களிடம் யோசனைசெய்யாமல் அவ்விஷயத்தை அவரால் ஸ்திரப் படுத்த முடியவில்லை. மகாபாகுவாயும் ஸர்வோத்தமனுயுமுள்ள ஸ்ரீகிருஷ்ணனிடம் கேட்க நினைந்தார். கிருஷ்ணனே ஸர்வஜ்ஞரென்றும் ஸர்வசக்தரென்றும், நல்ல யோசனை சொல்லத்தகுந்தவரென்றும் அவர் நினைத்தார். ஸ்ரீகிருஷ்ணனுக்குச் சொல்லியனுப்பினார். அவர் வந்துசேர்ந்தவுடன், யுதிஷ்டிரர் அவரிடம் "எனது இஷ்டர்கள் எல்லோரும் இந்த யாகத்தை நடத்தும்படி என்னைத் தூண்டினார்கள். நான் தங்களைக் கேட்டுத்தான் நிச்சயம் செய்யவேண்டுமென்றிருந்தேன். பந்துக்களைத் தூஷிப்பவர் பலரிருக்கிறார்கள். தன்னலம் பாராட்டிக்கொண்டு பிரியவசனம் சொல்வோர் அநேகர். தங்களுக்கு எக்காரியத்தால் லாபமேற்படுமோ அதையே ஸ்திரப் படுத்துவதற்காகப் புத்திசொல்ல முன்வருவோர் பலர். ஹே! மகாத்மாவே! இப்பூமியில் மேலே சொல்லப்பட்ட மனிதர்களே அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு ஒரு காரியமும் செய்தல் கூடாது" என்று யுதிஷ்டிரர் ஸ்ரீ கிருஷ்ணனிடம் சொன்னார்.

யுதிஷ்டிரரைச் சார்ந்தவர்கள் தங்களுடைய சொந்தக்காரியத்தை முடித்துக்கொள்வதற்காகவே அவரை யாகம் செய்யும்படி நிர்ப்பந்தித்துவந்தார்கள். ஆனால் அதை யுதிஷ்டிரர் ஏற்றுக் கொள்ளவில்லை. ஸ்ரீகிருஷ்ணனை, அவர்கள் எல்லோரும் காமக் குரோதமற்றவரென்றும், ஸத்யவானென்றும், தோஷமற்றவரென்றும், ஸர்வோத்தமரென்றும், ஸர்வஜ்ஞரென்றும், எல்லாம்செய்ய வல்லவரென்றும் நினைத்திருந்தார்கள். ஆனால் நாமோவென்றால் ஸ்ரீகிருஷ்ணனை ஸ்த்ரீலோலரென்றும், தயிர் வெண்ணெய் திருடியவரென்றும், கெட்டநடையுள்ளவரென்றும், மற்றுமநேக

தோஷங்களுள்ளவரென்றும் நினைக்கிறோம். பிராசீன கிரந்தங்களில் எவரைத் தர்மத்திற் சிறந்தவரென்று கூறியிருக்கிறதோ, அவரைக் குற்றஞ்சொல்லும் நம்மவர்களிடம் தர்மக்குறைவு ஏற்பட்டிருக்கிறதென்பதில் ஆச்சரியமென்னை ?

யுதிஷ்டிரர் எவ்விதமாக நினைத்தாரோ அவ்விதமே முடிந்தது. ஸத்யவானுன ஸ்ரீகிருஷ்ணன் யுதிஷ்டிரரைநோக்கி "நீர் ராஜஸூய யாகம் செய்யத்தகுதியற்றவர். ஸம்ராட்டைத்தவிர வேறு அரசன் ராஜஸூயயாகம்செய்தல் கூடாது. நீர் 'ஸம்ராட்' அல்ல. மகத தேசத்தரசனுன ஜராஸந்தன் ஒருவனே ஸம்ராட். அவனை ஜயிக்காமல் நீர் ராஜஸூய யாகம் செய்யத்தகாது. நம்மாலும் சம்மதிக்க முடியாது" என்று சொன்னுர்.

ஸ்ரீகிருஷ்ணனைக் கெட்டவர் என்றும் சுயநலம் பாராட்டுகிறவரென்றும் எவர்கள் சொல்லுகிறுர்களோ அவர்கள், "கிருஷ்ணனுக்கு ஜராஸந்தன் விரோதி, அவரால் அவனை ஜயிக்க முடியவில்லை, தன்னிஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ள இதுவே சமயமென நினைத்துப் பலசாலிகளான பாண்டவர்களைக்கொண்டு தன்னுடைய காரியத்தை முடித்துக்கொள்ள ஸ்ரீகிருஷ்ணன் நினைத்தார்" என்று சொல்லுகிறுர்கள்.

ஜராஸந்தன் சக்கரவர்த்திதான். ஆனுல் அவன் தாமர்லேன் (Tamerlane) போலவும் நெப்போலியனைப்போலவும் அக்கிரமம் செய்துவந்தான்.

ஜராஸந்தன் ராஜஸூயயாகம் செய்வதாகப் பிரதிஜ்ஞைசெய்து தனது புஜபலத்தால் எல்லா அரசர்களேயும் பிடித்துவந்து யானைகளைச் சிங்கம் எவ்விதம் குகையில் தள்ளிவிடுமோ அவ்விதமாகவே அவர்களைக் காராக்கிருஹத்தில் அடைத்துவிடவேண்டுமென்று உத்தேசம்செய்தான். அவனுடைய இந்தக் கெட்டநினைப்புப் பிறர்கள்மூலம் ஸ்ரீகிருஷ்ணனுக்குத் தெரிந்தது. முன்காலங்களில் யாகத்தில் நரபலிகள் கொடுக்கப்பட்டனவென்று இதிஹாஸம் படிப்போர்க்கு நாம் சொல்லவேண்டுவதில்லை.

ஸ்ரீகிருஷ்ணன் யுதிஷ்டிரரை நோக்கி, 'ஹே! பரதகுலத்தின் விளக்கே! ஜராஸந்தன் தன்னுல் பிணித்துக்கொண்டுவரப்பட்ட

அரசர்களை, மாடுகளைக் கொட்டத்தில் அடைப்பதுபோல் சிறையில் அடைத்திருக்கிறான். சீக்கிரம் அவர்களைப் பலியிடப்போகிறான்; ஆதலால் நாம் உம்மை அவனுடன் யுத்தம்செய்யும்படி சொன்னோம். அந்த அரசர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்தத் துஷ்டன் 86-அரசர்களை முன்னமே கொண்டுவந்திருக்கிறான். இன்னும் 14-அரசர்களைக் கொண்டுவர நினைத்திருக்கிறான். எல்லோரையும் ஒரேகாலத்தில் ஸம்ஹாரஞ்செய்ய உத்தேசித்திருக்கிறான். இந்த அயோக்கியனைக் கொன்று கீர்த்திபெற எவன் பிரவர்த்திக்கிறானோ! அவனே வாஸ்தவத்தில் ஸம்ராட்' என்று கூறினார்.

ஆதலால் ஜராஸந்தனைக் கொல்லும்படி யுதிஷ்டிரரை ஸ்ரீகிருஷ்ணன் கேட்டுக்கொண்டது சுயநலத்தைக்கருதியல்ல. அதனால் யுதிஷ்டிரரின் காரியம் சித்திப்பதிலும் ஸ்ரீ கிருஷ்ணனுக்குத் தாத்பர்யமில்லை. அடைபட்டுக்கிடக்கிற அரசர்களை விடுவிக்கவேண்டுமென்பதே அவருடைய தாத்பர்யம். அவனுடைய தொந்தரவினால் கஷ்டமடைந்துவந்த பாரதவர்ஷத்தைக் காக்கவேண்டுமென்பதும் சாதாரண ஜனஸமூகத்தை ரக்ஷிக்கவேண்டுமென்பதும் அவருக்கு விருப்பம்.

ரைவதக மலைக்கோட்டையிலிருக்கிற கிருஷ்ணனை யெதிர்ப்பதும் ஜயிப்பதும் ஜராஸந்தனால் முடியாத காரியம். ஸ்ரீகிருஷ்ணனுக்கு ஜராஸந்தனைக்கொல்வது உத்தேசமில்லை. எக்காரியத்தால் உலகத்துக்கு நன்மைவிளையுமோ அதைச் செய்யும்படி ஏவுதல் தர்மாத்மாவான ஸ்ரீகிருஷ்ணன் கடமை. தனதுகடமையை நிறைவேற்றுவதற்கு எந்தக்காரியம் அவசியமோ அதைச்செய்யும்படி உபதேசம்செய்ய அவருக்குப் பாத்தியமுண்டு. அநேகர் அவரைச் சுயநலம் பாராட்டுகிறவரென்று அபவாதம்சொன்னாலும், அதைப் பொறுத்துக்கொண்டு அவர் உலகத்துக்கு நன்மையையே செய்துவந்தார். அவர் தர்மாத்மா.

யுதிஷ்டிரர் ஸாவதானமுள்ள மனிதர். ஜராஸந்தனுடன் போர்புரிய அவர் இஷ்டப்படவில்லை. அப்படியிருந்தும் பீமசேனனின் சிறந்த பலத்தினாலும், அர்ஜுனனின் வீரவாக்கியங்களாலும், ஸ்ரீ கிருஷ்ணனுடைய தூண்டுதலாலும், முடிவில் அவர் யுத்தத்துக்கு

இணங்கினார். பீமனும் அர்ஜுனனும் ஸ்ரீ கிருஷ்ணனுடன் புறப்பட்டார்கள். ஜராஸந்தனை ஜயிப்பதற்காகச் சீக்கிரமாக வெளியேறினார்கள். துராத்மாவான ஜராஸந்தனை வதைப்பது நியாயந்தான். ஆனால் அவனுடைய ஸைந்நியங்களை யேன் வீணே கொல்லவேண்டும் என்று நினைத்து இம்மூவர்களும் தங்களுடைய சேனைகளைக் கூட அழைத்துப்போகவில்லை. சேனைகளையழைத்துப்போய்ச் சண்டை செய்வதில் நல்லோர்களுமிறப்பார்கள்; கெட்டவர்களும் சாவார்கள்; ஜராஸந்தனின் சேனை பெரியது. அக்காலத்தில் க்ஷத்திரியர்களுக்குள் ஒரு நியாயமிருந்தது. ஒரு க்ஷத்திரியனை வேறொருவன் தனிமையாகச் சண்டைக்கழைத்தால் (த்வந்த்வயுத்தம்) அவன் மறுக்கக்கூடாது. ஆகையால் பிரயோசனமின்றி ஜனங்களை நாசம் செய்யாமல், அம் மூவரும் ஜராஸந்தனிடம்சென்று, அவனைத் தனிமையாக யுத்தத்திற்கழைத்தார்கள். மூன்று பெயர்களுக்குள் ஒருவருடனாவது தனித்த யுத்தம்செய்ய அவன் அவசியம் இணங்குவான். எவனுக்குச் சரீரபலமும், ஸாஹஸமும், பயிற்சியும் மிகுதியாயிருக்கிறதோ அவனுக்கே வெற்றியேற்படும். இவ்விஷயத்தில் நான்குபேர்களுமே சிறந்தவர்கள். ஸ்ரீகிருஷ்ணன், பீமன், அர்ஜுனன் ஆகிய மூவர்களும் ஜராஸந்தனிடம் பிராமணவேஷத்துடன் சென்றார்கள். ஜராஸந்தனால் அவர்களை அடையாளம் கண்டுகொள்ளமுடியவில்லை. அவர்கள் அவனது அரண்மனைவாசலிலிருந்துகொண்டு பேரிகை முதலானவைகளையுடைத்து, கோட்டைகளைத் தகர்த்து, ஜராஸந்தனது சபையில் பிரவேசித்தார்கள். நீதிமான்களான அவர்கள் ஜராஸந்தனுடன் மறைவாயிருந்து சண்டைசெய்யவில்லை. பீமனும் பார்த்தனும் ஜராஸந்தனுடைய சமீபத்திற்சென்றும், நீதி தவறவில்லை. அவர்கள் நியமத்திலிருந்ததால் ஜராஸந்தனுடன் வார்த்தையொன்றும்சொல்லவில்லை. அவனுடன் சம்பாஷணைசெய்கிற காரியம் ஸ்ரீகிருஷ்ணனுக்கு ஏற்பட்டது. ஸ்ரீகிருஷ்ணன் "இவர்கள் நியமத்துடனிருக்கிறார்கள். இப்பொழுது பேசமாட்டார்கள். ராத்திரியின் முன்பகுதி கழிந்த பின்னர் நம்முடன் வார்த்தையாடுவார்கள்" என்று ஜராஸந்தனிடம் சொன்னார். ஜராஸந்தன் ஸ்ரீகிருஷ்ணனுடைய வார்த்தையைக்கேட்டு அவர்களைத் தன்னுடைய யாகசாலையில் இருக்கச்

செய்து தன்னுடைய வீடுசென்றான். இரவில் இருட்டானபிறகு மறுபடியும் அவன் அவர்களிடம் வந்தான்.

இங்கே காணப்படுகிற சாதுர்யமும் தர்மாத்மாக்களுக்குத் தகாது. இதுவரை நாம் கிருஷ்ணனையும் அர்ஜுனனையும் தர்மத்துக்கு ஆதர்சபுருஷர்களென நினைத்திருந்தோம். அவர்கள் தங்களுடைய காரியம் நிறைவேறுவதற்காக வஞ்சனைசெய்வது நியாயமா? ஆகையால் அவர்கள் தர்மாத்மாக்களல்லர்; ஸ்ரீகிருஷ்ணனது சரித்திரம் நாம் நினைத்தபடி தூய்மையுள்ளதல்ல; என்று ஜராஸந்தனின் விருத்தாந்தத்தை ஆரம்பமுதல் முடிவுவரை படியாதவர்களுக்குத் தோன்றலாம். நள்ளிருளில் ஜராஸந்தன் தனிமையாயிருக்கும்போது அவனை வஞ்சகமாயழைத்துவந்து கொல்வதற்காகவே இவ்வுபாயம் செய்யப்பட்டதுபோல் தோன்றுகிறது. ஆனால் அவர்கள் அப்பொழுது ஜராஸந்தனைப் பிடிக்கவுமில்லை, இரவில் யுத்தம் நடத்தவுமில்லை, பகலிலேயே சண்டை நிகழ்ந்தது. இரகசியத்தில் நடக்கவில்லை. மகததேசத்து ஜனங்களின் முன்னிலையிலேயே நடந்தது. ஒரேநாளில் யுத்தம் முடியவில்லை. நான்குநாட்கள்வரை சண்டை நடந்தது. மூன்றுமனிதர்களும் அவனுடன் சண்டை செய்யவில்லை. ஒரேமனிதன்தான் போர்புரிந்தான். ஜராஸந்தனைப் பலாத்காரமாய் இழுத்துவரவில்லை. யுத்தத்துக்கு ஆயத்தமாயிருக்கும்படிக்குப் போதுமான அவகாசம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. ஒருகால் யுத்தத்தில் அபஜயம் அடைந்து தனக்கு ஆபத்து வந்துவிடுமோவென்று நினைத்து, அவன் தன் குமாரனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்தான். அவ்வளவுகாலம்வரை அவனுக்கு அவகாசம் கொடுக்கப்பட்டது. அவர்கள் நிராயுதபாணிகளாய் அவனிடம் சென்றார்கள். வேறு சூழ்ச்சியொன்றும் செய்யவில்லை. அவன் விரும்பினவுடன் தாங்களின்னாரென்பதை அவனுக்குத் தெரிவித்தார்கள், யுத்தத்தில் ஏற்படக்கூடிய காயங்களையாற்றுவதற்குரிய சகல ஔஷதிகளுடன் ஜராஸந்தனுடைய உபாத்தியாயர்கள் அவ்விடத்தில் சித்தமாயிருந்தார்கள். ஸ்ரீகிருஷ்ணனிடம் அவ்விதமான சகாயம் ஒன்றுமில்லை. அவர்கள் அநியாயமாக யுத்தம்

நடத்தவில்லை. யுத்தத்தில் ஜராஸந்தனுக்கு ஹிம்சைசெய்த பீம சேனனையும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி தயவின்மிகுதியால், அப்படிச் செய்யாதபடி தடுத்தார். எவருடைய உண்மையான சரித்திரம் இவ் விதமிருக்கிறதோ அவர் கெட்டகாரியம் ஏதாவது செய்வாரா? அவரைக் குறைகூறும் கதை பிரக்ஷிப்தமா? இதைப்பற்றி நன்ருய் விசாரித்தல்வேண்டும். மகாபாரதத்தில் ஓரிடத்தில் சில அத்தியாயங்கள் பிரக்ஷிப்தங்களென்றும், பிறிதோரிடத்தில் வேறு அத்தியாயங்கள் பிரக்ஷிப்தங்களெனவும் நாம் காண்கிருேம். அதேவிதமாக ஒரே அத்தியாயத்தில் சில சுலோகங்களே பிரக்ஷிப்தங்களாக இருக்கவும் கூடும். இது ஆச்சரியமல்ல. அநேக பிராசீன கிரந்தங்களில் பிரக்ஷிப்தங்கள் நிரம்பவும் காணப்படுகின்றன. இது யாவருக்கும் தெரிந்தவிஷயம் ஆகையாலேயே வேதங்களுக்கு வெவ்வேறு சாகைகளும் ஸ்ரீராமாயணம் முதலிய பிராசீன கிரந்தங்களுக்குப் பாடபேதங்களும் காணக்கிடக்கின்றன. ஒவ்வொரு கிரந்தத்துக்கும் மூலபாடம் ஏற்பட்டபிறகு ஒரு சுலோகமோ இரண்டு நான்கு சுலோகங்களோ பிரக்ஷிப்தங்களாக நுழைக்கப்பட்டிருக்கின்றன. மகாபாரதத்தின் மூலக்கிரந்தம் இயற்றப்பட்டபிறகு, அதில் பிரக்ஷிப்தங்கள் ஏற்பட்டனவென்பதில் என்ன ஆச்சரியமிருக்கிறது?

ஆனால் சில சுலோகங்கள் பிரக்ஷிப்தங்களென்றும், சில அவ்விதமில்லையென்றும் நாம் சொல்லுவதால், அவ்விஷயத்தில் நன்ருகப் பரீக்ஷைசெய்யவேண்டியது அவசியம். நாம் எந்தச்சுலோகங்களைப் பிரக்ஷிப்தங்கள் என்று சொல்லுகிருேமோ, அவைகளுக்குள்ளேயே நிராக்ஷேபணையான அடையாளங்கள் காணப்படுகின்றன. அவ்வடையாளங்களைப்பார்த்து நாம் அவைகளைப் பிரக்ஷிப்தங்களென நினைக்கிருேம். அவைகளைத் தவிர வேறு ஹேதுக்கள் அகப்படவில்லை. அவைகளில் ஏற்றுக்கொள்ளக்கூடிய பிரமாணங்கள் சில. உபயோகமற்றவை அநேகம். ஒருகிரந்தத்தில் ஒருகதை காணப்பட்டு அக்கதையானது அக்கிரந்தத்தின் மற்ற அம்சங்களுக்கு முற்றிலும் விரோதமாயிருந்தால் கிரந்த கர்த்தாவோ, அதைப் பிரதிசெய்த எழுத்தாளனே அந்தக் கதையைக் கைப்

பிசகினால் எழுதிவிட்டானென்று கொள்ளாமல், அதைப் பிரக்ஷிப்தங்களென்று நாம் ஸ்திரப்படுத்தலாகும். தவறுதலாக எழுதப்பட்ட பிரக்ஷிப்தங்கள் எவை யென்பதை இலகுவாகக் காணலாம். ஸ்ரீராமாயணக்கிரந்தத்தின் ஒரு பிரதியில் இராமன் ஊர்மிளையைக் கல்யாணம்செய்துகொண்டான் என்று கண்டிருக்குமேயானால் அது மறதியினால் எழுதப்பட்டதென்று நினைக்கலாம். ஆனால் ஸ்ரீராமன் ஊர்மிளையை விவாஹம் செய்துகொள்ளவேண்டுமென்று லக்ஷ்மணனுடன் விவாதம் செய்தான். பின்னர் சகோதரவாஞ்சையால் அவனுக்கு அவளைக் கொடுத்துவிட்டான் என்று ஒரு பிரதியில் இருக்குமானால், அதைப் பிரக்ஷிப்தம் என்றுகொள்ளவேண்டும். ஸ்ரீராமன் தனது பிராதாக்களிடம் மிகவும் பிரியமுள்ளவனென்ற உத்தம குணத்தை யெடுத்துக் காட்டுவதற்காகவே ரஸிகனொருவனால் அந்தக்கதை தொகுக்கப்பட்டது என்று கொள்ளுதல் நியாயமேயாகும்.

மகாபாரதத்திற்கு மூன்று தொகுதிகள் காணப்படுகின்றன வென்று நாம் அடிக்கடி சொல்லியிருக்கிறோம். முதலாவது தொகுதி ஒருவராலும் இரண்டாவது தொகுதி வேறொருவராலும் இயற்றப்பட்டிருக்கிறது. இருவரும் சிறந்த கவிகள். ஆனால் அவர்களுடைய வாக்கியநடை (ரசநாரீதி) வேறுவேறாயிருக்கிறது. இது ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது.

அதைத்தொகுத்தவர் ஸ்ரீகிருஷ்ணனை ராஜதந்திரத்தில் மகாசமர்த்தர் எனக் கருதியிருந்தார்போலும். இத்தகையவர்களுக்குப் புத்திசாதுர்யமே எல்லாக்குணங்களிலும் மேலானதென்று தோன்றியிருக்கலாம். புத்திகௌசலமுள்ளவனையே உத்தமனெனக்கொள்ளுகிற படிப்பாளிகளின் நினைவில் அவனே ஆதர்சபுருஷன். ஐரோப்பிய ஜனங்கள் இம்மாதிரியான கௌசலத்தை (Diplomacy) என்று மிகவும் கொண்டாடுகிறார்கள். ஏமாற்றுதல் (Diplomacy) என்பது அதிகமாகப் படித்தவர்களுக்குத்தான் தெரியக்கூடும்.

## ஏழாவது அதிகாரம்.

### ஸ்ரீகிருஷ்ண ஜராஸந்த ஸம்வாதம்.

---

நடுராத்திரியில் யாகசாலையில் ஸ்நாதகவேஷம் தரித்தவர்களான அந்த மூன்று மனிதர்களையும் சந்தித்து ஜராஸந்தன் அவர்களைப் பூஜித்தான். தன்னுடைய பூஜையை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று ஜராஸந்தன் வார்த்தையால் தெரிகிறது. ஒருவருக்கொருவர் க்ஷேமசமாசாரங்களை விசாரித்ததின் பிறகு, அவர்களிடம் ஜராஸந்தன் "ஹே பிராமணர்களே! ஸ்நாதகர்களான பிராமணர்கள் சபைக்கு வரும்போதல்லாமல் வேறு சமயத்திற் சந்தனத்தையாவது புஷ்பத்தையாவது அணிந்துகொள்வதில்லையே. நீங்கள் யார்? உங்களுடைய வஸ்திரங்கள் ரக்தவர்ணமுள்ளவையாயிருக்கின்றன. அங்கங்களில் சந்தனப்பூச்சும், புஷ்பமாலைகளும் அலங்காரங்களும் காணப்படுகின்றன. உங்களுடைய தோள்களில் ஒளி விளங்குகிறது. உருவங்களைக் கவனிக்கும்போது அவைகளில் தேஜஸ் விளங்குகிறது. என்னிடம் நீங்கள் பிராமணர்கள் என்று தெரிவித்தீர்கள். உண்மையாக நீங்கள் எவர்! அரசர்கள் முன்னிலையில் உண்மையே புகலத்தக்கது. மேலும், நீங்கள் வாசற்கதவைத்திறந்துகொண்டு வீட்டுக்குள்ளே வராமல் அச்சமின்றிக் கோட்டையின் மேற்பாகத்தையுடைத்து எதற்காக உள்ளே நுழைந்தீர்கள்? பிராமணர்கள் வார்த்தையால்மட்டும் வீரியத்தைக் காட்டுவார்கள். நீங்கள் செய்கையால் வலிமையைக் காட்டி, மிகவும் ஒவ்வாதகாரியத்தைச் செய்திருக்கிறீர்கள். நீங்கள் என்னிடம் நேரில் வந்ததால், நான் உங்களுக்கு முறைப்படி பூஜைசெய்தேன். அதை நீங்கள் ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை? என்னகாரியத்தை உத்தேசித்து நீங்கள் இங்கே வந்தீர்களென்று இந்தக்கணத்திற் சொல்லவேண்டும்" என்று ஜராஸந்தனுரைத்தான்.

அதற்குப் பதிலாக ஸ்ரீகிருஷ்ணன், மதுரமானதும் கம்பீரமானதுமான குரலுடன் ஜராஸந்தனிடம் "ஹே! அரசனே! நீ

எங்களை விரதத்துடனிருக்கிற அந்தணர்களென்று நினைத்தாய். ஆனால் பிராமண க்ஷத்திரிய வைசியர்களென்ற மூன்று ஜாதிகளும், ஸ்நாதகவிரதத்தை அநுஷ்டிக்கக்கூடும். இவர்களுக்குள் விசேஷநியமமும் சாமான்யநியமமும் இருக்கின்றன. க்ஷத்திரியர் விசேஷநியமத்தை யனுஷ்டித்துச் சம்பத்தையடைகிறார்கள். புஷ்பத்தையணிந்தவன் ஸ்ரீமானாகிறானென்று நாமெல்லோரும் புஷ்பத்தைத் தரித்துக்கொள்ளுகிறோம். க்ஷத்திரியன் கைவலிமையாற் சிறந்தவன்; வார்த்தையால் வீரியம்பேசமாட்டான். ஆகையால் க்ஷத்திரியனிடம் கடுமையான வார்த்தையையுரைக்கக்கூடாதென்று கிரந்தங்களில் நிச்சயம் செய்யப்பட்டிருக்கிறது." என்று சொன்னார்.

இந்தக்கதையானது சாஸ்திரானுஸாரமாயும் சாதுர்யம்பொருந்தினதாயுமிருக்கிறது. ஆனால் இது தர்மப்பிரியரும், தர்மாத்மாவுமான ஸ்ரீகிருஷ்ணவிருத்தாந்தமாகுமா என்று ஆராயத்தக்கது.

தங்களைப்பிராமணர்களென்றுசொல்லிக்கொள்வதில் கிருஷ்ணனுக்கு ஒரு உத்தேசமும் இல்லை. தாங்கள் க்ஷத்திரியர்கள் என்றே ஸ்பஷ்டமாய் ஜராஸந்தனிடமும் அவனுடன் வந்தவர்களிடமும் அவர் சொல்லியிருக்கிறார்.

"ஈசுவரன் க்ஷத்திரியர்களுக்குக் கைவலிமையைக் கொடுத்திருக்கிறார். எங்களுடைய கைத்திறத்தை யின்றே காண்பாய். சந்தேகமில்லை. ஹே! பிருஹத்ரதன் புதல்வனே! வீரர்கள் தங்கள் சத்துருக்கள்வீட்டில் மறைவாகவும் மித்திரர்கிருகத்தில் வெளிப்படையாகவும் பிரவேசிப்பார்கள். நாங்கள் சொந்தக்காரியத்தைச் சாதித்துக்கொள்வதற்காகச் சத்துருவின்வீட்டிற்கு வந்திருக்கிறபடியால், அவனாலளிக்கப்பட்ட பூஜையை ஏற்றுக்கொள்ளவில்லை. எங்களுக்கு இதுவே நித்திய விரதம்" என்று ஸ்ரீ கிருஷ்ணன் கூறுவதனால் அந்த அத்தியாயத்தின் பின்பாகத்தில் மாறுவேஷவிருத்தாந்தம் குறைந்துகொண்டேவருவது விளங்கும். மாறுவேஷம் தரித்துக்கொள்ளவேண்டுமென்ற எண்ணமே அவர்களுக்கில்லை. அடுத்த அத்தியாயத்திற் சொல்லியிருக்கிற விருத்தாந்தங்கள்முழுவதும் வேறுவிதமானவை.

நாம் இதுவரை கண்டுவந்தவைகளான ஸ்ரீகிருஷ்ணனுடைய சிறந்த செயல்கள் அவருக்குத் தகுந்தனவே. முந்தின அத்தியாயத்தில் எழுதப்பட்ட கிருஷ்ணசரித்திரத்திற்கும், பிந்தின அத்தியாயத்திற் காணப்படுகிற விருத்தாந்தத்திற்கும் நிரம்ப வித்தியாசமிருக்கிறது. ஆகையால் அவைகளைப் பரிசீலனைசெய்ய நமக்கு அதிகாரமுண்டு.

தன்னுடையவீட்டைச் சத்துருவின்வீடென்று ஸ்ரீகிருஷ்ணன் குறிப்பிட்டதால், ஜராஸந்தன் ஸ்ரீகிருஷ்ணனைநோக்கி "நான் எப்பொழுதாவது உங்களிடத்தில் விரோதத்தைக்காட்டியிருக்கிறேனா? உங்களுக்கு எப்பொழுதாவது அபகாரம் செய்திருக்கிறேனா? அப்படிச் செய்ததாக எனக்கு ஞாபகமில்லை. நீங்கள் என்னைக் காரணமின்றிச் சத்துருவென்று எதற்காகநினைத்தீர்கள்?" என்று வினவினான்.

அதற்குப்பதிலாக ஸ்ரீகிருஷ்ணன், வாஸ்தவத்தில் ஜராஸந்தனுடன் தங்களுக்கு என்னவிரோதமோ அதையே சொன்னார். தனக்கு நேரில் அவன் விரோதம் செய்தானென்று சொல்லவில்லை. தனக்கு விரோதம்செய்தானென்று ஒருவனுடனும் அவர் விவாதம் செய்ததில்லை. எல்லோரிடமும் அவர் சமதிருஷ்டியுள்ளவர். சத்துருமித்திரர்களைச் சமமாகப் பார்ப்பவர். ஆனால், சாமான்ய ஜனங்கள் அவரைப் பாண்டவமித்திரர் என்றும், கௌரவசத்துருவென்றும்நினைத்தார்கள். நாம் மூலபாரதத்தைப் பரிசீலனைசெய்யச் செய்ய ஸ்ரீகிருஷ்ணன் தர்மாநுகூலி, அதர்மத்துக்கு விரோதியென்பதையும், அதைத்தவிர அவருக்குச் சத்துருமித்திரபாவனையே கிடையாதென்பதையும் காண்போம். யாசிக்கும்பொருட்டு ஸ்ரீகிருஷ்ணன் ஜராஸந்தனை மித்திரனென்று அழைக்கவுமில்லை; அவனுடன் விவாதம் தொடுக்கநினைந்து சத்துருவென்றழைக்கவுமில்லை. எவன் மனுஷ்யஜாதிக்கே சத்துருவோ, அவனே ஸ்ரீகிருஷ்ணனுக்கும் சத்துரு. ஏனென்றால் ஆதர்சபுருஷன் எல்லாப் பிராணிகளையும் தானாகவே கருதுவான். அதைத்தவிர அவனுக்கு வேறு ஆத்மஞானம் இல்லை. ஜராஸந்தன் விவரமாக அவரைக் கேட்டபிறகு அவனால் தனக்குச்செய்யப்பட்ட

கெடுதியைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஸாமான்ய ஜனங்களுக்கு அவன் என்ன அபகாரம் செய்தானே அதைப்பற்றி மட்டும் அவனிடம் சொன்னார். அது,—"மகாதேவருக்குப் பலியிட வேண்டுமென்று நீ அரசர்களைச் சிறையிட்டுவைத்திருக்கிறாய். யுதிஷ்டிரருடைய உத்திரவின்படி நாங்கள் உன்னை யெதிர்த்தோம்" என்பது. மேலும் அவர் அவனைநோக்கி "ஹே! ப்ருஹத்ரதனின் புத்திரனே! உனது பாபத்தால் எங்களையும் நீ பாபிகளாக ஆக்கிவிடலாம்; ஏனெனில் நாங்கள் தர்மாசாரமுள்ளவர்கள். தர்மத்தைக் காப்பதில் பிரியமுள்ளவர்கள்" என்று உரைத்தார். இதைப் படிப்போர் இதைப்பற்றி மிகவும் யோசனைசெய்வார்கள்.

எவனொருவன் சமர்த்தனாயிருந்தும் தர்மத்தைக் காத்தலிலும் பாபத்தை யடக்குதலிலும் முயற்சிசெய்யவில்லையோ, பிறன் பாபத்தைச் செய்தால் நமக்கென்னவென்று கவலையில்லாமல் இருக்கிறானே, அவனே பாபியாவான். ஒவ்வொருவனும் தன்னாலியன்றமட்டில் பிறன் பாபம் செய்தலைத் தடுக்கவேண்டும். ஜகத்தில் ஜன்மமெடுத்த உத்தமபுருஷர்கள் இவ்விதமாகத் தர்மத்தைக் காத்தலையும், பாபத்தை விலக்குதலையும், விரதமாகக்கொள்வார்கள். சாக்யஸிம்ஹர் (புத்தர்) கிறிஸ்து முதலானவர்களுக்குத் "தர்மத்தைக் காக்கவேண்டும்" (யதோ தர்ம ரக்ஷதி ரக்ஷிதஃ) என்ற வாக்கியமே மூலஸூத்திரம். ஸ்ரீகிருஷ்ணனுக்கும் அதுவே விரதம். நாம் இந்த மகாவாக்கியத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளாவிடில், ஸ்ரீகிருஷ்ணனுடைய ஜீவிய சரித்திரத்தை அறிந்துகொள்ள முடியாது. ஜராஸந்த கம்ஸ சிசுபால வதமும் மகாபாரத யுத்தத்தில் பாண்டவர்களுக்கு ஸ்ரீகிருஷ்ணன் செய்த உதவியும் அவருடைய எல்லாக்காரியங்களும் இந்த மூலஸூத்ரத்தின் உதவியைக்கொண்டு நன்றாயறியத்தகுந்தவை. இதையே பூமியின் பாரத்தைக் குறைத்தல் என்று புராணகாரர்கள் சொல்லுகிறார்கள். தர்மப்பிரசாரமென்பது பாபத்தைவிலக்குதலேயாம். அது இரண்டு விதமாயிருக்கும். ஒன்று வார்த்தையால்மட்டும். அதாவது: தர்ம சம்பந்தமான உபதேசத்தின் மூலமாக. மற்றொன்று காரியத்தால்;

அதாவது; தன்னுடைய காரியங்களையெல்லாம் தர்மம்தழைப்பதற்கு உதவியாயிருக்கும்படி செய்து பிறகு அப்படியே நடத்திக் காட்டலால். புத்தர், ஸ்ரீகிருஷ்ணன் இருவரும் இந்த இரண்டு விதமான காரியங்களையும் அனுஷ்டித்துவந்தார்கள். ஆனால் புத்தரால் செய்யப்பட்ட தர்மப்பிரசாரம் உபதேசத்தையே முக்கியமாகக்கொண்டது. ஸ்ரீகிருஷ்ணன் செய்த தர்மப்பிரசாரமே சிறந்தது. ஏனெனில் வார்த்தையால் உபதேசம் செய்வது சுலபம்; காரியத்தால் புகட்டுவது கடினம். இவைகளில் பிந்தியது நிரம்பப் பயனைத்தரக்கூடியது. ஸ்ரீகிருஷ்ணன் கேவலம் மனிதனாகமட்டுமிருந்து இந்தக்காரியங்களைச் சாதித்தல் இயலுமாவென்று விசாரணைசெய்ய இப்போது நமக்கு உத்தேசமில்லை.

கம்சவதத்தைப் பற்றியும் சிசுபாலவதத்தைப்பற்றியும் நாம் சொல்லியிருக்கிறோம். ஜராஸந்தனைக் கொல்வதற்காகவே கிருஷ்ணன் புறப்பட்டுவந்தாரென்றும் சொன்னோம். ஆனால் பாபிகளை வதைத்தல் ஆதர்சபுருஷரின் காரியமா? எவர் எல்லாப்பிராணிகளிடமும் சமதிருஷ்டியை வைத்திருக்கிறாரோ, அவர் பாபிகளையும் தன்னைப்போலவே பாவித்து, அவர்களுக்கும் நன்மைசெய்கிறவராக ஏன் இருக்கக்கூடாது?

அப்படியிருப்பது நலமே. ஆனால் பாபிகளை உயிருடன் விடுவதால் ஜகத்துக்கு நன்மையில்லை. அவர்களைக் கொல்லுதலே உலகத்தின் முன்னேற்றத்திற்கு உபாயம். பாபங்களைச்செய்யாதபடி பாபிகளை நிவர்த்திப்பித்தலும் தர்மப்பிரசாரம் செய்தலும் அந்தப்பாபிகளுக்கும் ஸகலஜகத்துக்கும் மங்களத்தை ஒரே காலத்தில் சாதிக்கக்கூடும். அதைக்காட்டிலும் சிறந்த உபாயம் வேறொன்றுமில்லை. ஆதர்சபுருஷர் அதைச்செய்வது உசிதமன்றோ! புத்தரும் சைதன்யதேவரும் இவ்விதமாகவே பாபிகளை உத்தாரணஞ் செய்வதில் பிரவர்த்தித்தார்கள்.

ஸ்ரீகிருஷ்ணனுடைய சரித்திரத்தில் இவ்விதமான தர்மங்கள் எவ்விடத்திலும் காணப்பெறுகின்றன. ஆனால் க்ஷேத்திரங்களின் பேதத்தால் பயனிலும் வேற்றுமை காணப்படுகிறது. ஸ்ரீகிருஷ்ணன் மனுஷசக்தியின் மூலமாகவே எல்லாக்கார்யங்களையும் நிறை

வேற்றிவந்தார். இயற்கையிலேயே முடியாதகாரியம், எவ்வித முயற்சிசெய்தும் சிற்சில இடங்களில் பயனைத் தருவதில்லை.

ஸ்ரீகிருஷ்ணன் சிசுபாலனது நூறுகுற்றங்களைப் பொறுத்தார். அந்த உண்மையான சிசுபாலவிருத்தாந்தம், அலௌகிகங்களான வேறுகதைகளால் மறைக்கப்பட்டிருக்கிறது. கம்ஸனை நல்லவழியில் திருப்புவது ஸ்ரீகிருஷ்ணனுக்கு அஸாத்தியமாயிருந்தது, ஜராஸந்தன்விஷயத்திலும் அவ்விதமே. அவன்விஷயத்தில், ஸ்ரீகிருஷ்ணனுக்குக் கதைகளும் உபகதைகளும் ஏற்பட்டன. ஜராஸந்தன் கிருஷ்ணனுக்குத் தர்மவிஷயமாக ஒரு உபந்நியாஸம் செய்தான். தர்மத்தையறிந்த ஒரு க்ஷத்திரியன் நிரபராதியான ஒருமனிதனுடைய தர்மம் அர்த்தம் இவைகளைக் கெடுத்துவிட்டால், அந்த க்ஷத்திரியனுக்கு இம்மையில் க்ஷேமக்குறைவு, பரலோகத்தில் நரகமே. இதிற் சந்தேகமொன்றுமில்லை. ஜராஸந்தனை நல்லவழியில் திருப்பவே முடியாது.

ஸ்ரீகிருஷ்ணசரித்திரம், அதிமானுஷமான காரியங்களுக்குப் புறம்பானது. ஜராஸந்தனைக் கொல்லவேவேண்டுமென்று ஸ்ரீகிருஷ்ணனுக்கு உத்தேசமில்லை. தர்மத்தைக்காத்தலும், அடைபட்டுக்கிடக்கிற நிரபராதிகளான அரசர்களை விடுவித்தலுமே அவருக்கு உத்தேசம். அவர் ஜராஸந்தனுக்கு அநேக புத்திமதிகளை உபதேசஞ்செய்தபிறகு "நாம் வஸுதேவனின் புதல்வனான கிருஷ்ணன். மற்ற இருவீரர்களும் பாண்டுபுத்திரர்கள். நாங்கள் உன்னை யுத்தத்துக்கு அழைக்கிறோம். இக்கணமே எல்லாவரசர்களையும் விட்டுவிடு, அல்லது சண்டைசெய்து யமனுலகுக்குச்செல்" என்று சொல்லியிருக்கிறார்.

ஜராஸந்தன் அரசர்களை விட்டிருந்தால் ஸ்ரீகிருஷ்ணன் அவனை மன்னித்திருப்பார். அவன் அவ்விதம் செய்ய உடன்படாமல் யுத்தத்தையே விரும்பினான். போர் நிகழ்ந்தது. ஜராஸந்தன் யுத்தத்தைத்தவிர வேறு வழியிற் செல்லக்கூடிய நல்லோனல்லன்.

இரண்டாவது உத்தரம் இதுவே. புத்த சரித்திரத்தில், தாழ்ந்தோரை உத்தாரணம்செய்யக் காண்கிறோம். ஸ்ரீ கிருஷ்ண சரித்திரத்தில் அவ்விதமான காரியத்தை நாம் காணவில்லை. புத்த விவகாரம், தர்மத்தைப் பிரசாரம் செய்வதிலிருந்தது. ஸ்ரீகிருஷ்ணனும் தர்மப்பிரசாரம் செய்துவந்தார். ஆனால் அதுவே அவருடைய முக்கியமான நோக்கமில்லை. ஆதர்சபுருஷரின் ஆதர்சகாரியங்களில், அது நடுவில் வந்த பயனாகும்.

நாம் ஹிந்துஜாதியிற்பிறந்தவர்களாகையால் ஹிந்து ஆதர்சம் எதுவென்று யோசித்தல்வேண்டும். சடை மரவுரிகளைத்தரித்துக்கொண்டும், வெளுத்த மீசைதாடிகளை வைத்துக்கொண்டுமிருக்கிற ரிஷிகளையே நாம் கொண்டாடுகிறோம். அவர்கள் ஆதர்சபுருஷர்களா? அவர்களையே ஆதர்சபுருஷர்களென்று நாம் கொண்டாடுவதற்குக் காரணமென்ன? என்றறியவேண்டும். பூலோகம் முழுமையிலும் ஹிந்துஜாதியே சிறந்ததெனக்கொண்டாடின காலமும் இருந்தது. ஆதர்சபுருஷன் எவனென்பதைப்பற்றி முன்னமே விவரித்திருக்கிறோம். ஸ்ரீராமசந்திரன் முதலிய க்ஷத்திரியர்கள் ஆதர்சபுருஷருக்குச் சமானமானவர்களே. ஆனால் ஸ்ரீகிருஷ்ணனே வாஸ்தவமான ஹிந்து ஆதர்சபுருஷர்.

ஏன் அப்படிச் சொல்லுகிறோம்? மனுஷ்யத்தன்மையெது? என்று விசாரித்தல் அவசியமானது. மனிதனுடைய இயற்கையறிவுகளெல்லாம் எவனிடம் பூரணமாக விகஸித்து நல்வழிகளிற் செல்லுகின்றனவோ, அவற்றையுடைய அவனே ஆதர்சபுருஷன். ஸ்ரீகிருஷ்ணன் அவ்விதமிருந்தார். வேறொருவனும் அவ்விதமில்லை.

ஸ்ரீ கிருஷ்ணன் ராஜ்யகாரியங்களிலும் மற்ற விஷயங்களிலும் நிரம்பிய அறிவாளி. அவர் நீதிகள் முழுவதுமறிந்தவரென்பது பிரஸித்தம். மகாபாரதத்திலும் அவரை அவ்விதமே வர்ணித்திருக்கிறது. யுதிஷ்டிரராவது உக்ரஸேனராவது அவருடைய உத்தரவுக்கு விரோதமாகப் பெரிய ராஜ்யகாரியமொன்றும் நடத்தினதில்லை; ஸ்ரீகிருஷ்ணன் தனக்கென்று ராஜ்யத்தை விரும்பாமல், ஸகல பிரஜைகளுக்கும் எல்லாவிதமான மங்களங்களையுஞ் சாதித்து வந்தார். ஜராஸந்தனால் அடைபட்ட அரசர்களை அவர் விடு

வித்தது, ஓர் உதாஹரணம். ஸ்ரீகிருஷ்ணன் தாமாக யுத்தத்துக்கு முயற்சிசெய்கிறவரில்லை. ஆனால் தர்மத்தை ஸ்தாபிப்பதற்காக யுத்தம் நிகழ்ந்தால் அதிலிருந்து அவர் பின்வாங்கினவருமில்லை. யுத்தங்களில் அவர் தோற்றவருமில்லை.

எல்லாக்குணங்களிலும் நிறைவுபெறாத மனிதன், ஒரு நல்ல காரியத்தில் தன்னுயிரைக்கொடுக்க முன்வரமாட்டான். ஒரு முக்கியமானகாரியம் ஏற்பட்டால் மற்றவர்கள் தங்களுடைய சொந்தக் காரியங்களுக்குப் பாதகமில்லாமல், அந்த முக்கியமான காரியத்தையும் கவனிப்பார்கள். சரித்திரபேதத்தாலும், நிலைமையின் மாறுபாட்டினாலும், பயிற்சியின் வித்தியாஸத்தாலும், வெவ்வேறு காரியங்களையும் மனிதன் செய்யத்தகுந்தவன் ஆவான். ஆதர்சபுருஷனேவென்றால் எல்லாக்காரியங்களிலும் ஆதர்சமான அதிகாரி.

ஸ்ரீகிருஷ்ணன் குடும்ப வாழ்க்கையிலிருந்துகொண்டு கிருக கிருத்யங்களைக் கவனிப்பவராயும், ராஜநீதிகளைத் தெரிந்தவராயும், யுத்தத்தில் வல்லவராயும், குற்றவாளிகளைத் தண்டிக்கத்தகுந்தவராயும், தவம்புரிபவராயும், தர்மத்தைப் பிரசாரம் செய்பவராயும் இருந்தார். அவர் மனிதர்க்குரியகாரியங்கள் எல்லாவற்றிலும் நிறைவுபெற்ற ஆதர்சபுருஷர். ஆதர்சபுருஷனாலும் ஆதர்ச அரசனாலும் ஜராஸந்தன் முதலான துஷ்டர்களைக் கொல்லுதலானது அவசியமாய் அனுஷ்டிக்கப்படவேண்டும்.

ஹிந்து தர்மத்தின் ஆதர்சபுருஷன் எல்லாக்காரியங்களையும் தடையின்றிச் சாதிக்கக்கூடியவன். ஆனால் தற்கால ஹிந்துக்கள் ஒரு காரியத்திற்கும் உதவாதவர்களாயிருக்கிறார்கள். அவர்களுடைய சித்தம் கெட்டுவிட்டதால், பிராசீன ஆதர்சம் இன்னதென்பது அவர்களுக்கு மறந்துபோயிற்று. பிராசீன ஹிந்து அரசர்கள் எல்லாக்குணங்களிலும் நிறைவுபெற்றிருந்தார்களென்பதே அவ்விதமான ஆதர்சம் நமது தேசத்திலிருந்தது என்பதற்குப் பிரமாணம். தற்கால ஹிந்துக்களோவென்றால், ஜயதேவரின் கீதகோவிந்தம் என்ற காவியத்தில் வர்ணிக்கப்பெற்ற கிருஷ்ணனையே போற்றுகிறார்கள். மகாபாரதத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற கிருஷ்ணனைப் பற்றி நினைப்பதில்லை. அவ்விதமான ஆதர்சபுருஷனை

நாம் எப்போதும் ஹிருதயத்தில் தியானித்துக்கொண்டிருக்க வேண்டும் என்ற விஷயத்தில் இந்தக் கிருஷ்ணசரித்திரவிமர்சம் கொஞ்சம் அநுகூலம் செய்யுமென்று நாம் நம்புகிறோம்.

---

## எட்டாவது அதிகாரம்.

*பீமனுக்கும் ஜராஸந்தனுக்கும் யுத்தம்.*

ஸ்ரீகிருஷ்ணனை மகாபாரதத்தில் ஓரிடத்திலும் விஷ்ணுவென்று குறிப்பிட்டதாக அவருடைய சரித்திரத்திற் காணவில்லை. யாரும் அவரை விஷ்ணுவென்று அழைக்கவுமில்லை; விஷ்ணுவென்ற நினைப்புடன் அவருடன் ஒருவரும் சம்பாஷிக்கவுமில்லை. அவர் விஷ்ணுவின் அவதாரமாயிருந்தாலென்ன? இல்லாவிட்டாலென்ன? கிருஷ்ணசரித்திரமர்மம், மனுஷ்யசக்தியைக்கொண்டே எல்லாக் காரியங்களையும் சாதித்தலென்று நாம் அடிக்கடி தெரிவித்திருக்கிறோம்.

ஆனால் இதற்குப்பிறகு மகாபாரதத்தில் ஸ்ரீ கிருஷ்ணனை விஷ்ணுவென்றழைத்தலையும், விஷ்ணுவென்ற பாவனைபாற் பரிசயம் செய்தலையும், அநேக இடங்களில் நாம் காண்கிறோம்; அவரை விஷ்ணுவென்று பலர் பூசித்தலையும் பார்க்கிறோம்; சிற்சில சமயங்களில் வைஷ்ணவசக்தியால் அவர் அற்புதமானகாரியங்களைச்செய்ததையும் நாம் காண்கிறோம். இவ்விடத்தில்மட்டும் அவ்விதம் பார்க்கிறோம். இவையிரண்டும் ஒன்றுக்கொன்று விரோதமாகத் தோன்றுமல்லவா?

எந்தச்சமயத்தில் தெய்வத்தன்மையைக் காட்டவேண்டிய ஆவசியகம் அவருக்கிருந்ததோ, அக்காலத்தில் கிருஷ்ணன் தெய்வத்தன்மையை வெளிப்படுத்தினர்; ஆவசியகமில்லாத இடங்களில் மனிதத்தன்மையாலேயே காரியங்களை நிறைவேற்றியிருக்கிறாரென்று சொல்லுகிறார்கள். இதுவிஷயமும் ஆராயத்தக்கது.

பிறகு ஸ்ரீகிருஷ்ணனும் பீமார்ஜுனர்களும் ஜராஸந்தனைத் தேர்மீதேறச்செய்து வெளியிற் கொணர்ந்தார்கள். அவர்கள் தெய்விகசக்தியைக்காட்டியிருந்தால் அவர்களிடம் தேவலோகத்துத் தேர்கள் குறைவில்லாமல் வந்துசேர்ந்திருக்கும். ஸ்ரீகிருஷ்ணன்

வைநதேயனை ஸ்மரித்தவுடன் கருடன்வந்து தோன்றி யிரதத்தைச் சுமந்திருப்பான். ஆனால் கெருடன் ஒரு காரியத்தையும் அங்கே செய்ததாகக் காணவில்லை. ஜராஸந்தனை வதம்செய்தபொழுது தெய்விகசக்தியின் பிரயோசனமொன்றுமில்லையே.

இந்த யுத்தத்துக்குமுன் ஒரு விருத்தாந்தம் காணப்படுகிறது. ஜராஸந்தன் யுத்தஞ்செய்வதாகத் தீர்மானஞ்செய்தபிறகு ஸ்ரீ கிருஷ்ணன் ஜராஸந்தனிடம், "ஹே! அரசனே! எங்களில் எவருடன் உனக்குச் சண்டைசெய்ய இஷ்டம்" என்று கேட்டார். அவன் பீமசேனனுடன் யுத்தஞ்செய்ய இஷ்டம் என்றான். 'ஜராஸந்தனை யாதவர்களால் வதைக்கமுடியாதென்று கருதி ஸ்ரீகிருஷ்ணன் பிரமதேவரின் உத்தரவின்வண்ணம் அவனைக் கொல்லப் புறப்பட்டார்' என்று பாரதக்ரந்தத்தின் பின்தொகுதியில், இந்த விருத்தாந்தத்தை யெழுதியிருக்கிற இதழ்களுக்கு இரண்டு இதழ்களுக்கு முன் எழுதியிருக்கிறது. மூலக்ரந்தத்தில் பிரும்மாவின் ஆக்ஞை காணக்கிடைக்கவில்லை. பிறகேற்பட்ட கிரந்தங்களில் மட்டும் காணப்படுகிறது.

மூலபாரதத்திற்குப் பிறகு இயற்றப்பட்ட கிரந்தங்களிற் காணப்படுகின்ற கற்பனையே யிது என்று இதை வாசிப்போர் அவசியம் நம்புவார்கள். பாரதத்தின் இரண்டாவதுதொகுதிக்காரர் எப்பொழுது எழுதத்தொடங்கினரோ அப்பொழுதுமுதல்தான் சில கற்பனை யேற்பட்டிருக்கவேண்டும். இதிற் சந்தேகமில்லை. சிறையிலிருந்து விடுபட்ட அரசர்கள் நன்றிகூறுமுகமாக ஸ்ரீகிருஷ்ணனைத் துதிக்கும்போது, அவர்கள் அவரை விஷ்ணுவின் வேறுபெயர்களைக்கொண்டு துதிக்கவில்லை. ஸ்ரீகிருஷ்ணன் மனிதனாற் செய்யமுடியாத ஒரு காரியத்தைச் செய்தால், அக்காரியத்தைத் தெய்வத்தாலன்றி மனிதனாற் செய்யவியலாதென்று நினைக்கிறார்கள். ஜராஸந்தனை அவர் வதைக்கவில்லை. ஜனங்களுக்கெதிரில் பீமசேனனே அவனைக் கொன்றான். அவனைக் கொல்லும்படி தூண்டினவர் ஸ்ரீகிருஷ்ணனே. சிறையிலடைபட்டுக்கிடந்த அரசர்களுக்கு இது தெரியாது. ஆகையால் அவ்வரசர்கள் கிருஷ்ணனை விஷ்ணுவென்று துதித்தார்களெனச் சொல்வது பொருந்தாது.

20

இம்மூன்று கதைகளும் ஒரே எழுத்தாளரின் கைச்சரக்கு. மூன்றும் மூலபாரதத்துக்குப் புறம்பானவைகளே.

ஜராஸந்தவதாத்தியாயத்தில் ஸ்ரீகிருஷ்ணனை விஷ்ணு வென்று வழங்குதலும், அவர் மாறுவேஷத்துடன் ஜராஸந்த னிடம் கபடமாகச் சென்றார் என்பதும் முதலான அசந்தர்ப்பக் கதைகளையெல்லாம் பிரக்ஷிப்தங்கள் என்று ஏன் தள்ளிவிடக் கூடாது? அவை தள்ளிவிடத்தக்கனவே என்று பிரமாணங்களால் நிரூபிப்போம்.

உண்மையாக இந்த இரண்டுவிஷயங்களையும் ஒருங்கு சேர்த்துப்பார்த்தால், அவை ஒரேகவியின் உல்லேகங்கள் என்று தெரியவரும். ஸ்ரீகிருஷ்ணன் ஜராஸந்தனுடைய பூர்வவிருத்தாந் தத்தை யுதிஷ்டிரரிடம் உரைத்தாரென்பதைக் குறித்து முன்ன மேயே சொல்லியிருக்கிறோம். ஸ்ரீகிருஷ்ணன் கம்ஸனைக் கொன்றதி லிருந்து அவர்மீது ஜராஸந்தனுக்கு ஏற்பட்ட பகைமையைப் பற்றியும் அவ்விடத்திலேயே கூறியிருக்கிறோம். அதன் பிறகு மகாபாரதகாரர் என்ன இயம்பியிருக்கிறார் என்பதைக் கேட்பீர்க ளாக.

வைசம்பாயனர், "பிருகத்ரதவரசன் தன்னுடைய இரண்டு பார்யைகளுடன் தபோவனத்தில் வெகுகாலம் தவம்புரிந்து சுவர்க் கத்துக்குச் சென்றான். ஜராஸந்தன் சண்டகௌசிகரிடம் வரம் பெற்று நிஷ்கண்டகமாய் ராஜ்யத்தை ஆண்டுவந்தான். இச்சமயத் தில் ஸ்ரீகிருஷ்ணன் கம்சனை வதைத்தார். அதனால் ஜராஸந்தனுக் குக் கிருஷ்ணனிடம் கொடிய விரோதம் ஏற்பட்டது" என்று சொல்லுகிறார். இக்கதையை ஸ்ரீகிருஷ்ணனே சொன்னாரா? அல் லது வேறொருவன் சொன்னனா? என்று விசாரிப்பதில் நமக்கு என்ன பயன்? மூலபாரதம் இயற்றியவருக்கு அற்புதரசத்தில் விருப்பமில்லை. ஸ்ரீகிருஷ்ணன் அலௌகிகமான யாதொரு காரியத் தையும் செய்தாரென்று அவர் சொல்லவுமில்லை. அதுவே சரி யென்பது பின்வருவதால் தெரியவரும். "மகாபலசாலியான ஜரா ஸந்தன் ஒரு பெரிய கெதையை (கதா) எடுத்து 99 தடவை சுழற்றியெறிந்தான். மதுரையிலிருந்தவரும் அற்புதச்செய்கை

களைச் செய்யக்கூடியவருமான ஸ்ரீகிருஷ்ணனுக்கு 100 யோசனை தூரத்துக்கப்பால் அந்தக் கெதை விழுந்தது. பட்டினத்துச்சனங்கள் அவ்வாயுதம் விழுந்ததைப்பற்றிக் கிருஷ்ணனிடம் தெரிவித்தார்கள். அதுமுதல் மதுரைக்குச் சமீபத்திலுள்ள அவ்விடம் கெதாவஸானம் (கஷாவஸா_நo) என்று வழங்கப்பட்டது.'' இந்த விருத்தாந்தம் மகாபாரதம் மூலக்கிரந்தத்தில் வாஸ்தவமாகக் காணப்பட்டாலும், பாரதத்தின் தொகுதிகளெல்லாம் ஒரே கிரந்த கர்த்தாவால் உண்மையில் இயற்றப்பட்டாலும், ஸ்ரீகிருஷ்ணன் வேஷம் மாறுடிக்கொண்டு கிரிவிரஜத்துக்கு வந்தது வாஸ்தவமாயிருந்தாலும் நாம் புராண இதிகாஸங்களில் பொதிந்துகிடக்கும் உண்மையான சரித்திர தத்துவங்களையெல்லாம் தள்ளிவிடுவோம். இந்தத் திக்கை நோக்கிப் பார்க்கமாட்டோம்.

பிறகு ஜராஸந்த விருத்தாந்தத்தின் பிற்பகுதி வருகிறது. அதனுடன் இவ்வத்தியாயம் முடிகிறது. அது மிகவும் சாதாரணமான விருத்தாந்தம். ஜராஸந்தன் பீமனைப் போருக்கு அழைத்துவிட்டு, யசஸ்விகளான பிராம்மணர்களால் ஸ்வஸ்திவாசநம்செய்யப்பெற்று, க்ஷத்திரியதர்மத்துக்கு உவந்ததாய்க் கவசகிரீடங்களைக் களைந்துவிட்டுப் போர்க்களத்திற் புகுந்தான். அப்பொழுது நகரிலுள்ள நான்குவருணத்தார்களும், பெண்டிர்கள் பெரியோர்கள் எல்லோரும் போரைக் காண்பதற்காக எழுந்துவந்தார்கள். போர்க்களம் முழுவதும் ஜனங்களால் நிறைந்துவிட்டது. நாறு பக்கங்களிலும் கடுமையான போர் நிகழ்ந்தது. (இது உண்மையானுல், இடைவிட்டு இடைவிட்டு யுத்தம் நடந்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.) யுத்தஞ்செய்து களைத்துப்போன ஜராஸந்தனையும், களைப்படையாமல் போர்புரிகிற பீமசேனனையும் பார்த்து ஸ்ரீகிருஷ்ணன் "ஹே! குந்தியின்புதல்வ! களைப்படைந்த எதிரியை வருத்துவது ஒழுங்கன்று. அவன் இறந்துவிடுவான்போலிருக்கிறுன். இனிமேல் நீ அவனை இம்சிக்கக்கூடாது. ஹே! பரதர்ஷபனே! நீ அவனுடன் கைச்சண்டைசெய்'' என்று சொன்னுர். ஆனுல் பீமன் ஜராஸந்தனை இம்சைசெய்தே மாய்த்தான். பீமனிடத்தில் ஸ்ரீகிருஷ்ணனைப்போல் தர்மஞானம் இல்லை.

அப்பொழுது கிருஷ்ணன், அர்ஜுனன், பீமன் இவர்கள் சிறையிலடைபட்ட அரசர்களை விடுவித்தார்கள். அதுவே ஜராசந்த வதத்தின் உத்தேசம். அரசர்களெல்லோரையும் விடுவித்து, அவர்கள் வேறுகாரியஞ்செய்யாமல், தங்களுடைய ஊர்சென்றார்கள். அவர்கள் ஜராஸந்தனுடையராஜ்யத்தை அபகரிக்கவேண்டுமென்று விரும்பவில்லை. தந்தையின் குற்றத்துக்காக மைந்தனுடைய நாட்டைக் கவரவில்லை. அவர்கள் ஜராஸந்தன்புதல்வனான ஸகதேவனை ராஜ்பத்தில் பட்டாபிஷேகஞ்செய்வித்தார்கள். ஸகதேவனால் பிரியத்துடன் கொடுக்கப்பட்ட காணிக்கையைமட்டும் பெற்றுக் கொண்டார்கள். சிறையிலிருந்து விடுதலையடைந்த அரசர்கள், ஊழியர்களான தங்களுக்கு ஏதாவது ஒருபணிசெய்ய உத்திரவிட வேண்டுமென்று மன்றாடினார்கள். ஸ்ரீகிருஷ்ணன் அவர்களைநோக்கி "யுதிஷ்டிரர் ராஜஸூயயாகஞ்செய்யவிரும்புகிறார். நீங்கள் எல்லோரும் தர்மாத்மாவான தர்மபுத்திரருக்கு உதவிசெய்யுங்கள்" என்று சொன்னார்.

யுதிஷ்டிரரை மத்தியில்வைத்துத் தர்மராஜ்யத்தைஸ்தாபிக்க வேண்டுமென்பதே ஸ்ரீகிருஷ்ணனின் உத்தேசம். ஆகையால் அதை ஸ்ரீகிருஷ்ணன் அடிக்கடி சொல்லிவந்தார்.

ஜராஸந்தவதத்தில் ஸ்ரீகிருஷ்ணசரித்திரத்தின்மகிமை விளங்குகிறது. ஆனால் பிறருடைய துர்ப்புத்தியால் அம்மகிமை சற்று மழுங்கிவிட்டது. சிசுபாலவதவிருத்தாந்தத்திலும் பொய்கள் காணப்படுகின்றன.

---

## ஒன்பதாவது அதிகாரம்.

### அர்க்கியாபிஹரணம்.

யுதிஷ்டிரரின் ராஜஸூயயாகம் தொடங்கப்பெற்றது. நானு திக்குக்களிலிருந்தும் அரசர்களும் இருடிகளும், மற்றுள்ள மக்களும் திரள்திரளாக வந்ததால், ராஜதானி நிறைந்துவிட்டது. இந்தப் பெரியகாரியம் நன்கு நிறைவேறுவதற்காகப் பாண்டவர்கள், தங்களுடைய உறவினர்களைப் பலபல வேலைகளில் நியமித்தார்கள்.

துச்சாதனனைப் போஜனதிரவியங்களைப் பரீக்ஷைசெய்வதிலும் ஸஞ்சயனை அதிதிகளை உபசரிப்பதிலும், கிருபாசாரியரை இரத்நங்களைக் காத்தலிலும், துரியோதனனைக் காணிக்கைகளைக் கண்காணித்தலிலும், இவ்வாறே எல்லாச் சுற்றத்தாரையும் நியமித்தார்கள்.

இந்த ராஜஸூயயாக மகாசபையில், சிசுபாலனென்ற பராக்கிரமசாலியான அரசன் ஸ்ரீகிருஷ்ணனால் கொல்லப்பட்டான். பாண்டவர்களுடன் சேர்ந்ததால், ஸ்ரீகிருஷ்ணன் விசேஷமான அஸ்திரங்களைத் தரித்துக்கொள்ளநேர்ந்தது. காண்டவவன தாகத்தில் நிகழ்ந்த யுத்தமானது மூலபாரதத்திற் காணக்கிடைக்கவில்லை. சிசுபாலவத அத்தியாயத்தில் ஒரு பெரிய ஐதிஹாஸிக உண்மை பொதிந்துவைக்கப்பட்டிருக்கிறது.

காண்டவவனதாகத்தில் யுத்தத்தை நாம் உண்மையென்று ஒப்புக்கொள்ளவில்லை. ஜராஸந்தவதத்திற்குமுன்பு மகாபாரதத்தில் எங்கேயாவது ஸ்ரீகிருஷ்ணனைத் தெய்வம் என்றாவது ஈசுவர அவதாரமென்றாவது சொல்லவில்லை. ஜராஸந்தவதத்தில், ஸ்ரீகிருஷ்ணன் ஈசுவர அவதாரம் என்கிற கதையை நாம் மறைவாகக் காண்கிறோம். சிசுபாலவதாத்தியாயத்திலோ, ஸ்ரீகிருஷ்ணனைச் சார்ந்தவர்களான ஜனங்களால் அவருக்கு ஈசுவரத்தன்மை இருக்கிறதென்று ஸ்பஷ்டமாய் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. குருவம்சத்தலைவரான பீஷ்மரே இந்த அபிப்பிராயத்தைப் பரவச்செய்தார்.

*　　*　　*　　*　　*　　*　　*

தான் ஈசுவரன் என்று ஸ்ரீகிருஷ்ணன் அங்கீகரித்தாரா? என்ற கேள்விக்கு நாம் விடையளிக்கமாட்டோம். இதைப் படிப்போர்க்குப் பின்னால் தானாகவே விளங்கும் என்று நம்புகிறோம். சிசுபாலவத அத்தியாயம் மூலபாரதத்தைச் சேர்ந்தது என்று நாம் ஒப்புக்கொண்டால், ஸ்ரீகிருஷ்ணன் ஈசுவரனே என்றும், அவ்விதம் இல்லையென்றும் இரு பக்ஷங்கள் இருந்தனவென்று காணலாகும். பிந்தினகக்ஷிக்குத் தலைவன் சிசுபாலன். பீஷ்மர் முதலானவர்கள் அந்தச்சபையின்நடுவிலே ஸ்ரீகிருஷ்ணனுக்கு முதன்மையளிக்க

முயற்சிசெய்ததே, சிசுபாலவதத்தின் மூலமென்று இலகுவாய் விளங்கும். சிசுபாலன் அந்த முயற்சியை எதிர்த்தான். அதி லிருந்து பெரிய விவாதம் ஏற்பட்டது. அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் சிசுபாலனைக் கொன்றார். உடனே கலகம் அடங்கிவிட்டது. வேள்வியின் தடையொழிந்தது. யாகம் நிர்விக்னமாய் நிறை வேறியது.

இவ்வெல்லா விருத்தாந்தங்களுக்கும் இடையில் உண்மை ஏதாவது இருக்கிறதா? இல்லையா? என்பதைப் பற்றி முன்பே பரி சிலனைசெய்திருக்கிறோம். ஏதாவது உண்மையான கதை இருக்கும் பக்ஷத்தில், அதற்கும் மூலபாரதத்திற்கும் ஏதாவது சம்பந்தமிருக் கிறதா? என்பதை இலகுவாய்க் கண்டுபிடிக்கமுடியாது. ஆனால் அது "பிரக்ஷிப்தம்" என்று சொல்லவும் இயலாது. மகாபாரதத் தில் அநேக இடங்களில் சிசுபாலன் என்று பெயருள்ளவனும், பராக்கிரமசாலியுமான ஒரு அரசனுடைய விருத்தாந்தத்தை நாம் காண்கிறோம். பின்னால் சிசுபாலன்கதையை நாம் காணவில்லை; அவனுக்கு மரணம் முன்பே ஏற்பட்டுவிட்டது. பாண்டவர்சபை யில், ஸ்ரீகிருஷ்ணனுடைய கைகளாலேயே அவனுக்குச் சாவு கிட்டிற்று. இதற்குப் புறம்பாக வேறுகதையொன்றும் காணக் கிடைக்கவில்லை. அநுக்கிரமணிகாத்தியாயத்திலும் பர்வசங்கிர காத்தியாயத்திலும் இக்கதையைப்பற்றிக் குறித்திருக்கிறது. மேலும், வசனநடையைப் பார்க்கும்போது, சிசுபாலவத அத்தியா யம் மூலபாரதத்தைச் சார்ந்ததென்று சொல்லக்கூடும். இவ்வத்தி யாயத்தைப் "பிரக்ஷிப்தம்" என்று தள்ளிவிடவும் கூடாது. அதைப் பரிசிலனைசெய்யும்போது, அதில் இரண்டு எழுத்தாளர்க ளுடைய கை பட்டிருக்கிறதென்று தெரியவரும். ஜராஸந்தவத பர்வாத்தியாயத்தில் நாம் எவ்விதமாக இருவருடைய நடையைப் பார்த்தோமோ, அப்படியே இந்த அத்தியாயத்திலும், அடிக்கதை மூலபாரதத்தைச் சேர்ந்ததாயினும், அதில் இரண்டு எழுத்தாளர்க ளின் கை பட்டிருக்கிறதென்று நிச்சயமாய்க் காணலாகும்.

இப்பொழுது சிசுபாலன் விருத்தாந்தத்தை விஸ்தரித்துக் கூறுவோம். ஒரு பெரிய மனிதனுடைய கிருகத்தில் சபை நடக்கு மானால் அங்கே பிரதானமான ஒருவருக்கு முதலிற் சந்தன புஷ்ப

தாம்பூலாதிகளைக் கொடுக்கும் வழக்கம் தொன்றுதொட்டு நம் தேசத்தில் அநுஷ்டானத்தில் இருந்துவருகிறது என்று நாம் கண்டிருக்கிறோம். மரியாதையானது அம்மனிதனின் குணத்தைக் குறித்துச் செய்யப்படுவதில்லை; ஆனால் அவனுடைய வம்சத்தின் பெருமையைக் குறித்தே செய்யப்படுகிறது. நல்லகுலத்தில் பிறந்தவர்களில் முதன்மையான புருஷனுக்கே அந்த மரியாதை வழங்கப்படுகிறது. ஆனால் ஸ்ரீகிருஷ்ணனுடைய காலத்திலோ "அக்ரபூஜை" வம்சமரியாதைக்காகச் செய்யப்படவில்லை. சபையோர்களில் எல்லாவிதத்தாலும் பிரதானமான புருஷனுக்கே மரியாதைசெய்யப்பட்டது. புருஷனுடைய சொந்தத்தகுதிக்காகவே மரியாதை அளிக்கப்பட்டது.

யுதிஷ்டிராருடைய சபையில் ஒருவருக்கு மரியாதை செய்ய வேண்டும். தகுதியுள்ளவர் யார்? பாரதவர்ஷத்திலுள்ள எல்லா அரசர்களும் சபைக்கு வந்திருக்கிறார்கள். இவர்களுள் எவன் சிரேஷ்டன்? யார் தகுதி உள்ளவன்? இதை விசாரித்தல் வேண்டும். ஸ்ரீகிருஷ்ணனே சிரேஷ்டர்; அவருக்கே அர்க்கியப் பிரதானம் செய்யவேண்டுமென்று பீஷ்மர் சொன்னார். அவர் ஸ்ரீகிருஷ்ணனை ஈசுவரனெனக் கருதி அவரே எல்லாரிலும் மேம்பட்டவர் எனச் சொன்னார் என்பதற்கு யாதொரு குறிப்பும் அவ்விடம் காணப்படவில்லை. தேஜஸ், பலம், பராக்கிரமம் இவைகளில் ஸ்ரீகிருஷ்ணன் சிரேஷ்டன் என்றே பீஷ்மர் அவருக்கு அர்க்கியப் பிரதானம் செய்யச்சொன்னார். க்ஷத்திரியர்கூட்டத்தில் ஸ்ரீகிருஷ்ணனே சிரேஷ்டன் என்று அவருக்கு அர்க்கியப்பிரதானம் செய்யச்சொன்னார். இதனால் பீஷ்மர் ஸ்ரீகிருஷ்ணனின் மனுஷ்ய சரித்திரத்தையே கவனித்தாரென்று தெரியவரும். இதை அநுசரித்தே ஸ்ரீகிருஷ்ணனுக்கு அர்க்கியப்பிரதானமும் செய்யப்பெற்றது.

இதைச் சிசுபாலனால் சகிக்கமுடியவில்லை. பீஷ்மர், கிருஷ்ணன், பாண்டவர்கள்: இவர்களை ஒரேகாலத்தில் அவன் எவ்விதமாக நிந்தித்தானோ அது, மேல்நாட்டுப் பார்லிமெண்டு சபையில் செய்யப்படுகிற உபந்நியாஸங்களுக்குச் சமானமாக இருந்தது. அவன்

உரத்த குரலுடன் கடினமாகப் பேசத்தொடங்கினான்:—ஸ்ரீகிருஷ்ணன் அரசனில்லை. இத்தனை அரசர்கள் இருக்கும்போது அவனுக்கு ஏன் அர்க்கியம் கொடுக்கவேண்டும்? வயதுசென்றவனுக்கு அர்க்கியம் கொடுக்கவேண்டுமென்றால், பெரியோரான வஸுதேவருக்கு ஏன் அர்க்கியம் கொடுக்கப்படவில்லை? அவன் தங்களைச் சார்ந்தவன் என்றும், தங்களுக்கு அவன் உபகாரம் செய்வான் என்றும் அவனுக்குப் பூஜைசெய்யப்பட்டதோ? அப்படியாயின் மாமனாரான துருபதவரசரை விட்டுவிட்டு அவனுக்கு ஏன் பூஜை செய்யவேண்டும்? கிருஷ்ணனை ஆசாரியன் என்று மனதிற்கொண்டீர்களா? அங்ஙனமாயின் துரோணாசாரியர் இருக்கும்போது அவனுக்கு அர்ச்சனை எதற்காக? "ருத்விக்" என்க்கருதி அவனுக்கு அர்க்கியமா? ஆனால் வேதவியாஸர் இருக்கும்போது கிருஷ்ணன் எம்மாத்திரம்? இவை முதலான அநேக தூஷணைகளைச் சிசுபாலன் செய்தான்.

சிசுபாலன் இவ்விதமாக நிந்தித்து மிகவும் சினந்து வெட்கத்தைத்துறந்து யோசனையை இழந்து பலவாறு பழித்தான். அலங்காரசாஸ்திரம் கற்றவனாதலால், சிசுபாலன் வேறு பலபடியாய் நிந்தித்ததுமன்றி லக்ஷணமற்றவன் கெட்டநடத்தையுள்ளவன் என்றும் தூஷிக்கத்தொடங்கினான். முடிவில், நெய்யைத் திருடின நாய் என்றும், விவாகம்செய்துகொண்ட நபும்ஸகனென்றும் மற்ற வசைச்சொற்களாலும் பழிக்கத்தொடங்கினான். அவனால் தொடுக்கப்பட்ட வசைச்சொற்களிற் சிலவற்றைமட்டும் இங்கே குறிப்பிட்டோம். இவைகளைக் கேட்டும் பொறுமைக்கு இடமாயும், யோகியாயும், ஆதர்சபுருஷராயுமுள்ள ஸ்ரீகிருஷ்ணன் யாதொரு பதிலையும் உரைக்கவில்லை. சிசுபாலனை ஒரே அடியாய் அடித்து மாய்க்க ஸ்ரீகிருஷ்ணனிடம் வல்லமை இருந்ததென்பது இதைப்படிப்போர்க்குத் தெரியும். சிசுபாலன் ஸ்ரீகிருஷ்ணனை நிந்தித்ததுபோல், அவரை யாரும் எவ்விடத்திலும் பழிக்கவில்லை. அப்படியிருந்தும் அவர் சிசுபாலனைத் திரஸ்கரிக்கவில்லை. கிருஷ்ணன் அவனைநோக்கி "ஏ! சிசுபாலனே! பொறுமையென்பது பெரிய தர்மம். உன்னை நாம் மன்னித்தோம்" என்று மென்மையான குரலிற் கூறினார். யாகதீக்ஷையிலிருக்கிற யுதிஷ்டிரரும்

அவ்விடத்தில் வந்திருக்கிற அரசர்களின் சினத்தைக்கண்டு அவர்களைச் சாந்தப்படுத்தினர். யஜ்ஞதீக்ஷையிலிருப்போர் இவ்விதமாகவே இருத்தல்வேண்டும். கிருஷ்ணனை நிந்தித்த சிசுபாலனை யுதிஷ்டிரர் நல்வார்த்தைகளால் சமாதானஞ்செய்யத்தொடங்கினர். பெரியோரான பீஷ்மரோ இரும்பால் ஆக்கப்பட்டவர். அவருக்கு இவையொன்றும் பிடிக்கவில்லை. அவர், 'கிருஷ்ணனுக்குப் பூசைசெய்தல் எவனுக்குப் பிடிக்கவில்லையோ அவனைச் சமாதானம் செய்தல் உசிதமில்லை' எனச் சொல்லிக் கிருஷ்ணனைத் துதிக்கத்தொடங்கினர்.

அந்தத்துதியின் ஸாரத்தை எடுத்தெழுதுகிறோம். அதில் ஒரு மறைபொருள் பொதிந்துகிடக்கிறது. அதைப் பிறகு விவரிப்போம்.

'மனுஷ்யர்களுக்குள் நல்லகுணங்கள் எவை இருக்கின்றனவோ, விசேஷமாய் க்ஷத்திரியர்களுக்குள் எந்த நற்குணங்கள் விளங்குகின்றனவோ அந்த எல்லாக் குணங்களாலும் கிருஷ்ணன் மேம்பட்டவர்; அவரே அக்ரபூஜைக்குத்தகுந்தவர். எல்லோராலும் அவர் பூஜிக்கத்தகுந்தவர். மேலும் கிருஷ்ணனுல் ஜயிக்கக்கூடாத அரசன் ஒருவனுமே இச்சபையில் இல்லை' என்று பீஷ்மர் கூறினர்.

பீஷ்மர் கிருஷ்ணனை மனித சிரேஷ்டர் என்றும், மற்றோரிடத்தில் அவர் ஈசுவரத்தன்மைவாய்ந்தவரென்றும், பிறிதோரிடத்தில் அவர் உத்தமமான மானிடனென்றும், திரும்பித் திரும்பி அவர் கிருஷ்ணனைத் துதித்தார். "யுத்தத்தில் அவர் கணக்கிலடங்காத க்ஷத்திரியர்களை ஜயிக்கவல்லவர். அவர் சிறு குழந்தையாயிருக்கும்போதே அவரை நாம் பரீக்ஷைசெய்திருக்கிறோம். அவருடைய சௌர்யம், வீர்யம், கீர்த்தி, விஜயம், முதலியவைகளை நாம் அறிந்திருக்கிறோம். கிருஷ்ணனைப் பூஜைசெய்வதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன; (1) அவர் வேத வேதாங்கங்களில் கரைகண்டவர்; மிகவும் பலசாலி. உலகத்தில் அவரைப்போல் வேத வேதாங்கங்கள் கற்றவனும் பலசாலியுமான மற்றொரு மனிதனைக் காண்பதரிது.

(2) கொடை, தாக்ஷண்யம், ஞானம், லஜ்ஜை, கீர்த்தி, புத்தி, விநயம், ஒப்பற்ற பெருமை, தைரியம், சந்தோஷம் முதலிய எல்லாக்குணங்களும் அவரிடம் ஒருங்கே எப்போதும் விளங்குகின்றன. ஆகையால் அவரே எல்லாக்குணங்களும் நிறைந்த ஆசார்யர்; எவ்விதத்திலும் கொண்டாடத்தகுந்தவர்; அவர்விஷயத்தில் நீங்கள் எல்லோரும் பொறுமையைக் காட்டவேண்டும்'' என்றும் கூறினர்.

ஸ்ரீகிருஷ்ணனுடைய ஒப்பற்ற பராக்கிரமத்தைப்பற்றி இக்கிரந்தத்தில் அநேக இடங்களில் சொல்லியிருக்கிறோம். ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் ஒப்பற்ற வேதஞானம் இருந்ததென்பதற்குப் பகவத்கீதையே சான்றாகும்.

* * * * * *

இவ்விதமாக எவன் பராக்கிரமத்திலும் பாண்டித்யத்திலும், வீர்யத்திலும், படிப்பிலும், கர்மத்திலும், ஞானத்திலும், தயையிலும், பொறுமையிலும் ஒரேவிதமாகச் சர்வசிரேட்டனே அவனே ஆதர்சபுருஷன்.

---

## பத்தாவது அதிகாரம்.

### சிசுபாலவதம்.

பீஷ்மர் தன்னுடைய மொழிகளை முடித்துவிட்டுச் சிசுபாலனை மிகவும் இகழ்ந்துநோக்கி "ஸ்ரீகிருஷ்ணனைப்பூசித்தல் சிசுபாலனுக்கு அஸஹ்யமாயிருக்கும்பக்ஷத்தில் அவன் இஷ்டப்படிசெய்யலாம். அவன் அவ்விடத்தைவிட்டு விலகலாம்'' என்று கூறினர். ஸ்ரீ கிருஷ்ணன் அர்ச்சிக்கப்பெற்றதைப்பார்த்து, ஸுநீதனென்ற ஒரு வீரபுருஷன், கோபத்தால் உடல் நடுங்கிக் கண்கள்சிவந்து அரசர்களைப்பார்த்து "நாம் முன்பு சேநாபதியாக இருந்தோம். இப்பொழுது பாண்டவகுலத்தை வேருடன் களைவதற்காக இன்றைக்கே யுத்தமாகிற கடலில் இறங்குவோம்'' என்று சொன்னன். சேதிராசனை சிசுபாலன் எல்லா அரசர்களும் உற்சாகத்துடன் இருப்பதைப்பார்த்துத் தானும் தைரியமுள்ளவனகி, வேள்வியைக் கெடுப்பதற்காக வேந்தர்களுடன் யோசனைசெய்தான். "யுதிஷ்டிர

ருடைய வேள்வியும் கிருஷ்ணனைப் பூசித்தலும் நிறைவேருதபடி நாமெல்லோரும் ஒரேமனதுடன் காரியம்செய்தல்வேண்டும்" என்று ஸுநீதனென்றவன் மற்ற அரசர்களிடம் சொன்னான். அரசர்களும் தங்களுக்கு "முதன்மரியாதை" கிடைக்காததால் நிரம்பவும் கோபத்தையடைந்து கூடிக்கூடி ஆலோசனைசெய்வதைப்பார்த்து, அவர்கள் எல்லோரும் யுத்தத்துக்குச் சித்தமாயிருக்கிறார்களென்று ஸ்ரீகிருஷ்ணன் தெரிந்துகொண்டார். யுதிஷ்டிரர் கடல்போல் திரண்டுவந்த அரசர்கள் கோபமடைவதைப் பார்த்துப் பீஷ்மரைநோக்கி, "மூதாதையே! இந்தப் பெரிய அரசர் கூட்டமாகிற சமுத்திரம் கலக்கமடைந்து எழுந்துவிட்டது. இப்பொழுது நான் என்னசெய்யவேண்டும்? உத்திரவிடுங்கள்" என்று வினவினார். சிசுபாலவதத்துக்கு இதுவே உண்மையான காரணம். அவன் கொல்லப்படாதிருந்தால், மற்றஅரசர்களுடன் கூடிக்கொண்டு யாகத்தைக் கெடுத்தேயிருப்பான்.

சிசுபாலன் மறுபடியும் பீஷ்மரையும் ஸ்ரீகிருஷ்ணனையும் நிந்தித்தான். எவ்வாறு பழித்தால் சிறுவர்கள்கூட வருத்தமடைவார்களோ அவ்வாறு துராத்மாவென்றும் இடையனென்றும் பிறவாறும் வசைச்சொற்களைச் சொரிந்தான். பரமயோகியான ஸ்ரீகிருஷ்ணன் அவனை மன்னித்து யாதொன்றும் பேசாமல் மௌனமாயிருந்தார். ஸ்ரீகிருஷ்ணன் வலிமையால் எவ்விதம் ஆதர்சபுருஷரோ அவ்விதமே பொறுமையிலும் ஆதர்சபுருஷர். பீஷ்மர் முதலில் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் பீமன் அதிக கோபத்தையடைந்து சிசுபாலனைப் பிடிப்பதற்காக எழுந்தான். பீஷ்மர் அவனைத் தடுத்துச் சிசுபாலனுடைய பூர்வவிருத்தாந்தத்தைச் சொல்லத் தொடங்கினார். இந்த விருத்தாந்தம் நிகழக்கூடியதன்று. இயற்கையில் அமையமுடியாதது, நம்பக்கூடியதன்று. அந்தக் கதை யிதுவே:—

சிசுபாலன் பிறக்கும்போது அவனுக்கு "மூன்றுகண்களும் நான்குகைகளும் இருந்தன. அவன் கழுதையைப்போல் கனைத்தான். இப்படி அவலக்ஷணங்களமைந்த பிள்ளையை எறிந்துவிடுவதே நலமென்று அவனுடைய தாய்தந்தையர் கருதினார்கள்.

இச்சமயத்தில் ஆகாயவாணிதோன்றி, "நல்லது; குழந்தையைத் தள்ளிவிடவேண்டாம்; சிரமப்பட்டாவது பிள்ளையைக் காப்பாற்றுங்கள்; யமனும் இதற்கு ஒன்றும் செய்யமுடியாது; இப்பொழுது இதைக்கொன்றாலும் மறுபடியும் உயிருடன் எழுந்துவிடும்." என்று கூறிற்று. தாய்தந்தையர்கள் "ஓ! ஆகாயவாணியே! இதை எவன் கொல்வான்? பெயரைச்சொல்லக்கூடாதா?" என்று வினவினர். ஆகாயவாணி ஸ்ரீகிருஷ்ணனை கொல்வான் என்று முன்பே சொல்லியிருந்தால் இச்சமயம் சச்சரவு குறைந்திருக்கும். அப்படி நடந்திருந்தால் கதை சுவையுடையதாகாது. இந்தக் குழந்தையின் நான்குகைகளும் எவனைக்கண்டால் இரண்டாக ஆகிவிடுமோ கண்களும் சரியாகுமோ அவனே இந்தக் குழந்தையைக் கொல்வான் என்று ஆகாயவாணி சொல்லிற்று. சிசுபாலனுடைய தகப்பன் குழந்தையைச் சுமந்துசென்று எல்லோரிடமும் காண்பித்தான். எவனுடைய முன்னிலையிலும் குழந்தையின் கைகளும் கண்களும் ஒழுங்காகவில்லை. சிசுபாலன் ஸ்ரீகிருஷ்ணனுக்குச் சமமான வயதுள்ளவன்; இருவரும் ருக்மிணியை விவாகஞ்செய்துகொள்ள முயன்றனர். ஆகாயவாணியும் இவ்விதமான குறிப்பைக் கொடுத்தது. அப்படியிருந்தும், துவாரகையிலிருந்து ஸ்ரீகிருஷ்ணன் சேதிதேசத்துக்குச் சென்று சிசுபாலனுக்குக் காட்சிகொடுத்தார். அப்பொழுதே அவனுடைய இரண்டு கைகளும் ஒருகண்ணும் மறைந்துவிட்டன. சிசுபாலனின் தாய் ஸ்ரீகிருஷ்ணனுக்கு முறையில் அத்தை. ஸ்ரீகிருஷ்ணனை அவள் பலவந்தமாய்ப் பிடித்துக்கொண்டாள். சிசுபாலனைக் கொல்லக்கூடாதென்று வரம் கேட்டாள். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் சிசுபாலனுடைய வயதுக்குத் தகுந்தவையான நூறுகுற்றங்களைப் பொறுத்துக்கொள்ள இசைந்தார்." இக்கதை இயற்கைநிகழ்ச்சியென்று நாம் நம்பவில்லை. இந்த உபந்யாசத்தைப் படிப்போர்களும் நம்பார்கள் என நினைக்கிறோம்.

* * * * * *

கிருஷ்ணசரிதத்தின் மகிமையைத் தெரிந்துகொள்ளாமலும், கிருஷ்ணனின் அற்புதமான பொறுமையை அறிந்துகொள்ளாமலும், அவர் சிசுபாலனை வதைத்ததற்குக் காரணத்தைக் கற்பனை

செய்யவேண்டுமென்றே இப்பொய்க்கதை கட்டிவிடப்பட்டது போலும்.

* * * * * *

கிருஷ்ணனை ஆதர்சபுருஷர் என்றும் மனிதத்தன்மையின் விகாஸத்துக்காகவே அவர் அவதரித்தார் என்றும் நாம் கொள்வோமானால், அவருடைய எல்லாச்செய்கைகளும் விசதமாக நமக்குப் புலப்படும். கிருஷ்ணசரித்திர ரூபமான இரத்தினப்பெட்டியைத் திறப்பதற்கு அவருடைய ஆதர்சத்தன்மையே திறவுகோலாகும்.

சிசுபாலனுடைய வசைச்சொற்களை அவர் பொறுத்தார் என்பது அவருக்கு ஒரு பெருமையன்று. சிசுபாலன் இதற்குமுன்பே அவருக்கு அநேக கெடுதல்களைச் செய்திருக்கிறான். கிருஷ்ணன் எப்போது பிராக்ஜோதிஷநகரம் (ஜராஸந்தனுடைய நகரம்) சென்றிருந்தாரோ, அப்போது துவாரகையை எரிப்பதற்காகச் சிசுபாலன் ஓடினான். ஒருசமயம் போஜராஜன் விளையாடுவதற்காக ரைவதகபர்வதம் சென்றார். அதுதெரிந்து சிசுபாலன் துவாரகை வந்து அநேக யாதவர்களைக் கொன்று பலரைச் சிறைப்படுத்தியதுமன்றி வஸுதேவருடைய அசுவமேதயாகக் குதிரையையும் களவுகொண்டுசென்றான். அக்காலத்து க்ஷத்திரியர்களுக்குள் இதுவே பெரியகுற்றமாகக்கருதப்பட்டது. இக்குற்றங்களையெல்லாம்கிருஷ்ணன் பொறுத்தார். அவ்விதமே ஜராஸந்தனுடைய பெரிய குற்றங்களையும் பொறுத்தார். எப்பொழுது அவன் சிறையில் அகப்பட்ட அரசர்களைப் பலியிட நினைத்தானோ, அப்பொழுதுதான் ஜராஸந்தன்மீது அவர் விரோதத்தைக் காட்டினார். அதுபோலவே, சிசுபாலன் கிருஷ்ணனுக்கு விரோதஞ்செய்தபொழுதும் அவர் அவனுக்கு யாதொருகெடுதியும் செய்யவில்லை. எப்பொழுது அவன் பாண்டவர்களின் வேள்வியைக் கெடுக்கவும் தர்மராஜ்ய ஸ்தாபனத்தைத் தடுக்கவும் முயன்றானோ, அப்பொழுதுதான் கிருஷ்ணன் அவனைக் கொன்றார். பொறுமையில் ஆதர்சபுருஷரான கிருஷ்ணன், ஜனங்களுக்குக் கெடுதிசெய்தவனைத் தண்டிப்பதில் பின்வாங்கவில்லை.

கிருஷ்ணனுடைய பொறுமையைப்பற்றிச் சொல்லும்போது கர்ணன் துரியோதனன் முதலானவர்களிடம் அவர் எவ்விதம் பொறுமைகாட்டினார் என்று சொல்லாமல் இருப்பதற்கில்லை. அது உத்தியோகபர்வக்கதையாயிருந்தாலும் அதைப்பற்றி இவ்விடத்திலே பிரஸ்தாபிப்பது நலம். கர்ண துரியோதனர்கள் அவரைக் கட்டிவிடுவதற்காக ஏற்பாடுசெய்தபோதும், கிருஷ்ணன் அவர்களை க்ஷமித்தார்; மேலும் பந்துக்கள் என்ற முறையில் அவர்களுடன் சம்பாஷணைசெய்தார். அவர்களுக்கு விரோதமாக ஆயுதங்களைக் கையில் எடுக்கவில்லை. பீஷ்மரும் மற்றவர்களும் பரபரப்புக் கொண்டார்கள். கிருஷ்ணன்மட்டும் சமாதானமாயிருந்தார்.

சிசுபாலவத சமயத்தில் பீஷ்மர், "ஸ்ரீ கிருஷ்ணனின் தேஜஸால் சிசுபாலனுக்குத் தேஜஸ் உண்டாயிற்று; அவரே அவனுடைய தேஜஸை அபகரிப்பார்" என்று கூறினார். சிசுபாலன் கோபத்தால் ஜ்வலித்துக்கொண்டு எழுந்து பீஷ்மரைப் பலபட நிந்தித்து இறுதியில் "க்ஷத்திரியர்களின் அனுக்கிரகத்தாலேயே உம்முடைய ஜீவனம் நடக்கிறது. இதை மனதில் வைத்துக்கொண்டு உம்மைக் கொல்லாமல் விடுகிறேன்" என்று சொன்னான். க்ஷத்திரியர்களுக்குச் சிறந்ததான போர்புரியவல்லவரான பீஷ்மர், "நாம் இவர்களைத் துரும்புக்குச்சமானமாக நினைக்கிறோம்" என்று சொன்னார். இதைக்கேட்டு அங்கே கூடியிருந்த அரசர்களெல்லாரும் கோபத்துடன் எழுந்து "இந்தப் பீஷ்மனை மாட்டை அடிப்பதுபோல் அடித்துக் கொன்றுவிடுங்கள்; அல்லது எரிகிறநெருப்பில் தள்ளிவிடுங்கள்" என்று ஆரவாரித்தார்கள். அதுகேட்ட பீஷ்மர், "எதை வேண்டுமானாலும் செய்யுங்கள். நான் உங்கள் தலையில் என்காலை வைக்கிறேன்" என்று கூறினார். அவர் அப்படி உரைத்ததின் கருத்து, "நல்லது, கிருஷ்ணனுக்கு அக்ரபூஜைசெய்யப்படுகிறதென்று நீங்கள் கலகம்செய்கிறீர்கள். அவருடைய உயர்வை நீங்கள் அங்கீகரிக்கவில்லை. கலகம் ஏன்? அவர் எதிரிலேயே இருக்கிறார். பரீக்ஷைசெய்து பாருங்கள். எவனுக்குச் சாவதற்குத் தினவு எடுத்திருக்கிறதோ, அவன் ஒருதடவை கிருஷ்ணனை யுத்தத்துக்கு அழைத்துப்பார்க்கலாகாதா?" என்பதே. இதைக் கேட்டுச் சிசுபாலனால் சும்மா இருக்கமுடியுமா? அவன் கிருஷ்ணனை

நோக்கி "உன்னைப் போருக்கு அழைக்கிறேன்; உடனே வா" என்றான். அவர் சிசுபாலனுடன் போர்செய்தார். அதனால் தர்மத்துக்குப் பயன் உண்டாயிற்று.

அப்பொழுது கிருஷ்ணன் சபையோரைநோக்கிச் சிசுபாலனால் செய்யப்பட்ட குற்றங்களையெல்லாம் ஒன்றுசேர்த்து வெளியிட்டு 'இதுவரை நாம் பொறுத்திருந்தோம். இனிமேல் நாம் பொறுப்பதில்லை' என்று கூறினர். அதன்பிறகு இயற்கைக்கு விரோதமான ஒரு விஷயம் எழுந்தது. ஸ்ரீகிருஷ்ணன் சக்ராயுதத்தை நினைத்தவுடன் அது அவருடைய கையில் வந்து சேர்ந்தது. ஸ்ரீகிருஷ்ணன் சக்கிராயுதத்தால் அவனுடைய தலையை வெட்டியெறிந்தார். இதை ஐதிஹாஸிகக் கதையென்று எவன் நம்புவான்? சிசுபாலனைச் சக்ராயுதத்தாற் கொல்லவேண்டியிருந்தால் ஸ்ரீகிருஷ்ணன் மனுஷ்யசரீரத்தை யெடுத்ததில் என்ன பிரயோசனம்? சக்கிராயுதமானது உயிருள்ள பிராணிபோல் உத்திரவுப்படி தானகவே வந்து போமானல் மகாவிஷ்ணுவானவர் வைகுந்தத்திலிருந்தே சிசுபாலன் தலையைக் கொய்வதற்காக அதை ஏன் அனுப்பியிருக்கக்கூடாது? இக்காரியத்துக்காக அவர் மனுஷ்ய சரீரத்தை ஏன் எடுக்கவேண்டும்? ஈசுவரன் தனது இச்சாமாத்திரத்தினலேயே ஒருவனுக்கு மிருத்யுவைச் செய்வதாயிருந்தால், அவர் மனிதசரீரத்தை எடுத்துக்கொண்டிருப்பாரா? மனுஷ்யதேகத்தைக் கொண்டும் அவரிடம் சக்தி இல்லையா? அவர் தெய்விக அஸ்திரத்தை ஏன் நினைக்கவேண்டும்.

ஸ்ரீகிருஷ்ணன் ஈசுவரத்தன்மை பொருந்தினவர் என்பதை நாம் அங்கீகரிக்காதவர்களில்லை. ஆனல் நமது கொள்கை, ஸ்ரீகிருஷ்ணன் மனுஷ சக்தியைத்தவிர மற்ற வலிமைகளை யெடுத்துக்கொள்ளவில்லை. அவர் சக்ராயுதத்தை நினைத்தார் என்ற விருத்தாந்தம் உண்மையன்று. அது பிரக்ஷிப்தம் என்பதே. அவர் மானுஷசக்தியைக்கொண்டே மானுஷ யுத்தத்திலே சிசுபாலனைக் கொன்றார் என்று மகாபாரதத்திலேயேபிரமாணம் காணப்படுகிறது.

உத்தியோகபர்வத்தில் திருதராஷ்டிரன் சிசுபாலவதத்தின் இதிகாஸத்தைப்பற்றி, "ராஜஸூயயாகத்தில் சேதிராஜன்

கரூஷகன் முதலிய எல்லா அரசர்களும் பலமான முயற்சியுடனும் எண்ணிறந்த வீரபுருஷர்களுடனும் ஒரே இடத்திற் கூடியிருந்தார்கள்; அவர்களுள் சேதியரசன்புதல்வன் பரிதிபோற் பிரதாபமுள்ளவன்; சிறந்த வில்லாளி; போரில் ஒருவராலும் புறக்கணிக்க முடியாதவன். ஸ்ரீகிருஷ்ணன் ஒரு விநாடிப்பொழுதில் அவனை வென்று க்ஷத்திரியக்கூட்டத்தின் உற்சாகத்தைப் பங்கப்படுத்தினார். சிசுபாலனைச் சன்மானித்துவந்தவர்களான கரூஷன் முதலான அரசர்கள் சிங்கம்போல் தேர்மீதேறின ஸ்ரீகிருஷ்ணனைப் பார்த்துச் சேதியரசனை விட்டுவிட்டு அற்பப்பிராணிகளைப்போல் ஓடிவிட்டார்கள். ஸ்ரீகிருஷ்ணன் விளையாட்டாகச் சிசுபாலனைக் கொன்று பாண்டவர்களின் புகழையும் மானத்தையும் காப்பாற்றினார்" என்று கூறினன். இவ்விடத்தில் சக்ராயுதத்தைப்பற்றிய வார்த்தையொன்றும் இல்லை. ஸ்ரீகிருஷ்ணன் தேர்மீதேறி ஒழுங்காக மானுஷயுத்தத்தினாலேயே சிசுபாலனையும் அவனை யனுசரித்தவர்களையும் வென்றார் என்றும் காணப்பெறுகிறது. எவ்விடத்தில் ஒரே கிரந்தத்தில் ஒரே விஷயத்தைப்பற்றி இரண்டுவிதமாக வர்ணிக்கப்படுகிறதோ, (அதாவது இயற்கைக்கு ஒத்ததாயும் ஒவ்வாததாயும் கூறப்படுகிறதோ) அவ்விடத்தில் இயற்கைக்குப் பொருந்தாததைத் தள்ளிவிட்டுப் பொருந்தியதை 'ஐதிஹாஸிக' மென்று கொள்ளல்வேண்டும். புராண இதிகாஸங்களில் இவ்விதமாக வேற்றுமை காணப்பட்டால் உண்மையான விருத்தாந்தத்தையே கிரகித்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் முயற்சியெல்லாம் பயனற்றதாகும்.

சிசுபாலவதத்தின் விருத்தாந்தத்தை நாம் பரிசீலனஞ்செய்த அளவில் கீழேவிவரித்திருப்பதுதான் ஐதிஹாஸிக உண்மையென்று தெரியவருகிறது.

ராஜஸூயயாக மகாசபையில் க்ஷத்திரியர்களுக்குள் கிருஷ்ணனே சிரேஷ்டன் என்று அங்கீகரிக்கலாயிற்று. அப்போது சிசுபாலன் முதலிய சில அரசர்கள் கோபத்தையடைந்து யாகத்தைக் கெடுப்பதற்காகப் போர்தொடுத்தார்கள். கிருஷ்ணன் அவர்களுடன் போர்புரிந்து அவர்களைத் தோற்கடித்துச் சிசுபாலனைக் கொன்றார். பிறகு யாகம் யாதொருதடையுமின்றி நன்கு நிறைவேறியது.

ஸ்ரீகிருஷ்ணன் பெரும்பாலும் போரில்விருப்பமில்லாதவரென நாம் காண்கிறோம். போர்செய்யவல்லவர்களான அர்ஜுனன் முதலியவர்கள் இருக்கும்போது கிருஷ்ணன் ஏன் போர்செய்யவேண்டும்? ராஜஸூயயாகத்தில் எந்தக்காரியத்தின்சுமை ஸ்ரீகிருஷ்ணன்மேல் இறங்கியதோ, அதை நினைவில்வைத்துக்கொண்டால் இந்த வினவுக்குரிய விடையை இதைப் படிப்போர்கள் சுலபமாய் அறிவார்கள். வேள்வியைக் காக்கவேண்டியபொறுப்பு ஸ்ரீகிருஷ்ணனுக்கு ஏற்பட்டது. எவனுக்கு எந்தப்பொறுப்பு ஏற்பட்டதோ அதைச் சரிவரநிறைவேற்றுவதே அவன் கடமை. தன்கடமையை நிறைவேற்றுவதற்காகவே கிருஷ்ணன் போரில் இறங்கிச் சிசுபாலனைக் கொன்றார்.

---

## பதினோன்றாவது அதிகாரம்.

### பாண்டவர் வனவாசம்.

இராஜஸூயயாகம் முடிவுபெற்றது. ஸ்ரீ கிருஷ்ணன் துவாரகைக்குத் திரும்பிச்சென்றார். ஸபாபர்வத்தில் மறுபடியும் அவரைக் காணக்கிடைக்கவில்லை. இருந்தாலும் ஓரிடத்தில் அவர் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சூதாட்டத்தில் யுதிஷ்டிரர் துரோபதையைப் பணயமாக வைத்துத் தோற்றார். அதன்பிறகு துரோபதையின் தலைமயிரைப் பிடித்து இழுத்தல், சபையின் நடுவில் ஆடையைக் களைதல் முதலிய செயல்கள் நிகழ்ந்தன. மகாபாரதத்தில் இந்தப்பகுதியைப் போல் உயர்ந்ததான காவ்யரசனையுள்ள பகுதியை உலகத்திலேயுள்ள வேறெந்தக்காவியங்களிலும் காண்பதரிது. காவியத்தின் அழகைப் பார்ப்பதிலேயே நாம் காலங்கழிக்கவேண்டாம்; ஐதிகாஸிக உண்மை யேதாவது இருக்கிறதா என்று பரீக்ஷைசெய்வோம். எப்பொழுது துச்சாதனன் சபையின்மத்தியில் துரோபதியின் தலைமயிரைப்பற்றி இழுத்தானோ, அப்பொழுது அவள் வேறு கதியின்றி ஸ்ரீகிருஷ்ணனை நினைந்து அழைத்தாள். அந்தப்பாகம்,

“கோவிந்த த்வாரகாவாஸிந் க்ருஷ்ண கோபீஜநப்ரிய।”

துவாரகையில் வசிப்பவரான கோவிந்த! கிருஷ்ண! கோபிஜனங்களுக்குப் பிரியமானவரே! என்பது. இந்த அம்சத்தில் அவசியமாய்ச் சொல்லவேண்டியவைகளை நாம் முன்பே சொல்லிவிட்டோம்.

அதன்பிறகு வனபர்வம். வனபர்வத்தில் மூன்றுமுறைதான் நாம் ஸ்ரீகிருஷ்ணனைக் காண்கிறோம். முதலிற் பாண்டவர்கள் கானகம் சென்றார்களென்று கேள்விப்பட்டு விருஷ்ணிபோஜர்கள் எல்லாரும் அவர்களைக் காணவந்தார்கள்; ஸ்ரீகிருஷ்ணனும் அவர்களுடன் வந்தார். இது இயல்பே; ஆனால் இந்த விருத்தாந்தம் எங்கே வர்ணிக்கப்பட்டுளதோ, அந்தப் பாகம் மகாபாரதத்தில் முதற்றொகுதியைச் சேர்ந்ததன்று. வசனநடையும் நன்றாயில்லை. இதில் உண்மையான சரித்திரம் சிறிதும் இல்லை. அவ்வமயத்தில் யாரும் பாண்டவருடன் பகைத்துவரவில்லை; போரும் நிகழவில்லை. * * * * ஸ்ரீகிருஷ்ணன் திரும்பிச் சென்றபிறகு அவர் எங்கே சென்றார் என்று யுதிஷ்டிரன் விசாரிக்கத் தொடங்கினன். அப்பொழுது சால்வவதத்தின் கதை எழுந்தது. அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் சால்வனோடு போர்புரிந்தார். அப்பொழுதும் ஸ்ரீகிருஷ்ணன் பிரஸ்தாவம் வருகிறது. சால்வவதமென்பது ஒரு அற்புதமான நிகழ்ச்சி. "ஸௌபம்" என்பது அவனுடைய ராஜதானி. அந்நகரம் ஆகாயமார்க்கமாய்ப் பறந்துசெல்லும்; அதிலிருந்து சால்வன் யுத்தம்செய்வான். ஸ்ரீகிருஷ்ணனுடன் அவன் போர்புரிந்தான். சால்வன் மாயையால் வஸுதேவரைப்போல் ஓர் உருவம் செய்து அதை ஸ்ரீகிருஷ்ணனுக்கு எதிரே வதம் செய்ததால், அவர் அழுது மூர்ச்சையடைந்தார். இது ஜகதீசுவரனுடைய விசித்திரமும் அன்று, மனிதனுடைய விசித்திரமுமன்று; அநுக்கிரமணிகாத்தியாயத்திலும் பர்வசங்கிரகாத்தியாயத்திலும் இந்தக்கதை சொல்லப்படவேயில்லை. இந்த உபந்நியாஸத்தைப் படிப்போர் ஒருவரும் இதைப்பற்றிச் சிந்திக்கமாட்டார்களென்று நாம் நினைக்கிறோம்.

அதன்பின் துர்வாஸருக்கும் அவருடைய சிடர்களுக்கும் உணவளித்ததாகக் காணப்படும் கதையும் இயல்புக்குப் புறம்பானது. அநுக்கிரமணிகாத்தியாயத்தில் அக்கதை காணப்பட்டாலும் அதற்கு ஐதிகாஸிகமான ஆதாரம் ஒன்றுமில்லை. நாம் அதைப்பற்றிச் சிந்திக்கவேண்டுவதில்லை.

அதன்பிறகு வநபர்வத்தில், மார்க்கண்டேய ஸமஸ்யாபர்வாத்தியாயத்தில் மறுபடியும் ஸ்ரீகிருஷ்ணன் ப்ரஸ்தாவம் வருகிறது. பாண்டவர்கள் காமாக்கிய வனத்தில் இருக்கிறார்களென்று கேள்வியுற்று ஸ்ரீகிருஷ்ணன் அவர்களைப் பார்ப்பதற்காக அந்த வனத்துக்குச் சத்தியபாமையுடன் சென்றார். மார்க்கண்டேய ஸமஸ்யாபர்வாத்தியாயமென்பது ஒரு பெரிய கிரந்தமென்று சொல்லுதல் பொருந்தும். ஆனால் அதற்கும் மகாபாரதக் கதைக்கும் சற்றேனும் பொருத்தமில்லை. இந்த அத்தியாயம் பிரக்ஷிப்தமென்று தோன்றுகிறது. பர்வசங்கிரகாத்தியாயத்தில் மார்க்கண்டேய ஸமஸ்யாபர்வாத்தியாயத்தைப்பற்றிக் குறித்திருப்பது சரி. ஆனால் அதைப்பற்றி அநுக்கிரமணிகாத்தியாயத்தில் ஒரு குறிப்பும் இல்லை. மகாபாரதத்தின் முதற்றொகுதியுடனாவது இரண்டாவதுதொகுதியுடனாவது இது ஒத்திருக்கவில்லை. இது மூலமகாபாரதத்தைச் சேர்ந்ததோ அன்றோ என்று விசாரிப்பதில் ஒரு பயனுமில்லை. ஏனெனில் ஸ்ரீகிருஷ்ணன் இங்கே ஒரு காரியமும் செய்யவில்லை. இங்கே வந்து யுதிஷ்டிரர் துரௌபதி இவர்களுடன் உரையாடி அவர்களுடைய மதுரமான வார்த்தைகளுக்கும் செவிசாய்த்துப் பிறகு அங்குக்கூடியிருந்த இருடிகள் மக்கள் இவர்களுடன் உரையாடியும் சென்றார்.

மார்க்கண்டேயர்கதையினிறுதியில், சத்தியபாமையுடன் துரௌபதி பேசிக்கொண்டிருந்ததாகக் காணப்படுகிறது. பர்வசங்கிரகாத்தியாயத்தில் துரௌபதி, சத்தியபாமை ஆகிய இருவருடைய ஸம்வாதமும் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அநுக்கிரமணிகாத்தியாயத்தில் இதைப்பற்றிய பிரசங்கமேயில்லை. இந்த அத்தியாயம் பிரக்ஷிப்தம் என்று முன்னமே சொல்லியிருக்கிறோம்.

அதன் பிறகு விராடபர்வம். விராடபர்வத்தில் ஸ்ரீகிருஷ்ணன் பிரஸ்தாவமில்லை. அந்தப்பர்வத்தினிறுதியில் உத்தரையின் விவாகத்தின்பொழுது அவருடைய பிரஸ்தாவம் வருகிறது. அங்கு வந்திருந்தவர்களுடன் உரையாடின விருத்தாந்தங்களெல்லாம் உத்தியோகபர்வத்திலேயே காணப்பெறுகின்றன. உத்தியோக பர்வத்தில் ஸ்ரீகிருஷ்ணனுடைய கதைகள் பல இருக்கின்றன. கிரமமாக அவைகளைப்பற்றி ஆலோசிப்போம்.

---

## ஐந்தாவது கண்டம்.

---

### உபப்லவ்யம்.

𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌤𑍍𑌮𑌭𑍂𑌤𑌾𑌯 𑌭𑍂𑌤𑌾𑌦𑌿𑌨𑌿𑌧𑌨𑌾𑌯 𑌚 ।
𑌅𑌕𑍍𑌰𑍋𑌧𑌦𑍍𑌰𑍋𑌹𑌮𑍋𑌹𑌾𑌯 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 𑌨𑌮𑌃 ॥

(சாந்திபர்வம் 41-வது அத்தியாயம்.)

எல்லாப்பூதங்களிலும் ஆத்மாவாக விளங்குகிறவராயும், பூதங்கள் முதலானவைகளுக்குச் சம்ஹாரரூபியாயும், கோபம், துரோகம், மோகம் இவைகளற்றவராயும், சாந்தஸ்வரூபியாயுமிருக்கிற அவரை வணங்குகிறேன்.

### முதல் அதிகாரம்.

மகாபாரதப்போர்க்குப் படைசேர்த்தல்.

இப்பொழுது உத்தியோகபர்வத்தைப்பற்றி யாலோசிக்கத் தொடங்குவோம்.

மக்கட்டொகுதியில் குற்றஞ்செய்கிறவர்கள் இருப்பார்கள். மனிதர்கள் ஒருவருக்கொருவர் எப்போதும் தவறு செய்து கொண்டேயிருப்பார்கள். குற்றவாளிகளையடக்குதலே மக்கட் கூட்டத்தின் முக்கிய காரியமாகும். ராஜநீதி, ராஜதண்டனை, தர்ம சாஸ்திரம், அரசன்சட்டம், நியாயஸ்தலம்: இவைகள் எல்லாவற்றிற்கும் இதுவே முக்கியநோக்கம்.

அபராதிகளின் விஷயத்தில் எவ்விதமாக நடத்தல்வேண்டும் என்பதில் இரண்டு கக்ஷிகள் இருக்கின்றன.

(1) தண்டித்தல் மூலமாய், அதாவது பலத்தை உபயோகித்துக் குற்றங்களையடக்குதல்.

(2) அபராதிகளை மன்னித்தல்.

தண்டித்தலும் மன்னித்தலும் ஒன்றுக்கொன்று மாறுபட்டன. இவையிரண்டனுள்ளும் எதைத் தள்ளிவிடவேண்டுமென்று தீர்மானித்தல் எளிதன்று. குற்றவாளிகளையெல்லாம் விடுதலை செய்தால் மக்கட்கூட்டம் நிலைபெறாது; அழிந்தேபோகும். குற்றவாளிகள் யாவரையும் தண்டித்தலால் மனிதஸமூகம் மிருகத்தன்மையையடைந்துவிடும். ஆகையால் தண்டித்தலையும் மன்னித்தலையும் ஒன்றோடொன்று ஒக்கும்படிசெய்தல் மிகவும் கடினமான காரியம். தற்காலத்தில் நாகரிகம் வாய்ந்த ஐரோப்பியர்களாலும் இவ்விரண்டையும் ஒக்கச்செய்ய முடியவில்லை. அவர்களுக்குள் கிறிஸ்துதர்மத்தின்படி, குற்றவாளிகளை மன்னித்துவிடவேண்டும்; ராஜநீதியின் பிரகாரம் குற்றவாளிகளெல்லோரையும் தண்டித்தல் வேண்டும். அவர்களது கொள்கைப்படி தர்மத்தைக்காட்டிலும் ராஜநீதியே மேலானது. ஆகையால் மன்னித்தலென்பது ஐரோப்பாவில் மறைந்துவிட்டதுபோலும். தண்டித்தலே யோங்கியிருக்கிறது. தண்டனையையும் மன்னிப்பையும் ஒக்கும்படி செய்தலே உத்தியோகபர்வத்திற் காணப்படும் முக்கியமான காரியம். ஸ்ரீகிருஷ்ணனே அதைப்பற்றிப் பரியாலோசனைசெய்தார். உத்தியோக பர்வத்துக்கு அவரே நாயகராக விளங்குகிறார். வலிமையும் பொறுமையும் ஆகிய இவை ஒப்பாதலை அவர் செயலால் ஆதர்சமாகக் காட்டியிருக்கிறார்; பிரசாரமும் செய்திருக்கிறார். தனக்குக்கெடுதல் செய்தவனையும் அவர் க்ஷமித்திருக்கிறார். எவன் ஜனங்களுக்குக் கெடுதிசெய்தானோ அவனைப் பலாத்காரமாகத் தண்டித்துமிருக்கிறார். குற்றவாளிகளைத் தண்டித்தல் உசிதமா, அல்லது மன்னித்தல் உசிதமா என்று தீர்மானித்தல் அநேக ஸமயங்களில் கடினமாயிருந்தது. ஜனங்கள் குற்றம்செய்வதால் தம்முடைய செல்வமே போய்விட்டதென அவர் கருதினார். மக்கட்கூட்டத்தைச் சீர்திருத்தலையே அவர் ஸ்வதர்மமாகக்கொண்டார். தங்கள் தங்களுடைய செல்வத்தைக் காப்பதில் எவராவது பராமுகமாயிருந்தால், மக்கட்கூட்டத்தின் செல்வம் அழிந்தேபோகும். ஒவ்வொரு மனிதனும் இழந்துபோன தன் செல்வத்தைத் திரும்பப்பெறுதல்வேண்டும். தற்காலத்தில் நாகரிகமிக்க நாமெல்லோரும் நியாயஸ்தலங்களின் மூலமாகவே இழந்துபோனபொருள்களைத் திரும்பப்பெறுகிறோம்.

அரசனுடைய சட்டமும் நியாயஸ்தலங்களும் ஆகிய இவற்றின் உதவியை நாம் பெருவிட்டால், நாம் தாமாகவே பலப்பிரயோகம் செய்வது நியாயமாகுமா? க்ஷமையையும் தண்டனையையும் ஒக்கச் செய்கிறவிஷயத்தில் தர்க்கவிதர்க்கங்கள் ஏற்பட்டன. எவன் வலியவனே அவன் தனது வலிமையாலேயே காரியத்தைச் சாதித்துக்கொள்வான். கையாலாகாதவனுக்குப் பொறுமையே யெளிது. ஆனல் வலியவனும், பொறுமையுள்ளவனுமாயிருப்பவன் என்ன செய்தல்வேண்டும்? இதைப்பற்றிய ஆலோசனையை உத்யோக பர்வத்தின் தொடக்கத்திலேயே ஸ்ரீகிருஷ்ணனுடைய வாக்கியங்களிலிருந்து நாம் தெரிந்துகொண்டிருக்கிறோம்.

பாண்டவர்கள் சூதுபோரில் சகுனியிடம் தோல்வியடைந்தார்கள். அவர்கள் தங்களுடைய ராஜ்பத்தைத் துரியோதனனிடம் ஒப்புவிக்கவும், தாங்கள் பன்னிரண்டுவருஷகாலம் வனவாசம் செய்யவும் ஏற்பட்டதென்பதை இதைப்படிப்போர்கள் அறிவார்கள். அதன்பிறகு ஒருவருஷகாலம் அஞ்ஞாதவாசம் (ஒருவருமறியாதபடி மறைவாயிருத்தல்) செய்யவேண்டுமென்றும், அக்காலத்தில் அவர்களை யாராவது கண்டுபிடித்துவிட்டால், மறுபடியும் பன்னிரண்டுவருஷகாலம் வனத்துக்குப் போகவேண்டுமென்றும், ஒருவரும் அவர்களை அடையாளம் காணுவிடில் துரியோதனனிடமிருந்து அவர்கள் திரும்பவும் ராஜ்யத்தைப் பெறலாமென்றும், நிபந்தனையேற்பட்டது.

இப்பொழுது அவர்கள் வனவாஸத்தைக் கழித்தும் விராடவரசனது நகரத்தில் ஒருவருஷகாலம் அஞ்ஞாதவாசத்தை முடித்துவிட்டும் ராஜ்பத்தைத் திரும்பஅடைய அறநெறிமுறையால் உரிமையுடையராயினர்கள். ஆனல் துரியோதனன் அவர்களிடம் நாட்டைத் திருப்பிக்கொடுப்பானே? கொடுப்பானென்ற நம்பிக்கையில்லை. கொடுக்காவிடில் என்னசெய்யவேண்டும்? யுத்தம் தொடுத்துத் துரியோதனன் முதலானவர்களைக் கொன்று அவர்கள் நாட்டையடையவேண்டியது நியாயமன்றோ?

அஞ்ஞாதவாசம் கழிந்தபின்னர் விராடவரசன்நட்புப் பாண்டவர்களுக்குக் கிடைத்தது. அவர்களுடன்கொண்ட நட்பினல்

விராட அரசன் மிகவும் களிப்புற்றுத் தன்னுடைய கன்னிகை உத்தரையென்பாளை அர்ஜுனன்குமாரன் அபிமன்யுவுக்கு விவாகஞ்செய்துகொடுத்தான். அந்தக்கல்யாணத்துக்கு மணமகனுக்குத் தாய்மாமன்மாரான, ஸ்ரீகிருஷ்ணனும், பலதேவரும் யாதவர்களுடன் வந்திருந்தார்கள். அவர்கள் யாவரும் விராட அரசனது சபையில் கூடியிருந்தபோது பாண்டவர்கள் நாடடைவதைப்பற்றிப் பேச்சுநிகழ்ந்தது. அங்கே கூடியிருந்தவர் யாவரும் ஸ்ரீகிருஷ்ணனைநோக்கி மௌனமாயிருந்தார்கள். அப்பொழுது கிருஷ்ணன் அவர்களைப்பார்த்து, நடந்தவரலாறுகளை அவர்களிடம் உரைத்து, அவ்வமயம், கௌரவர் பாண்டவர் ஆகிய இருபிரிவினருக்கும் எது நலமோ, எது அறமோ, எது புகழ்தரக்கூடியதோ அதைப்பற்றி நீங்களெல்லோரும் ஆலோசிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். 'எதனால் அறமும் நலமும் புகழும் நாட்டைவிட்டு விலகினவோ, அதைப்பற்றி மறுபடியும் சிந்திக்கவேண்டாம். யுதிஷ்டிரர் அக்கிரமமாக நாடுமுழுவதையும் விரும்பவில்லை. தர்மமாக ஒருகிராமத்தையாவது பெறவிரும்புகிறார்;' என்று ஆதர்சபுருஷரான ஸ்ரீகிருஷ்ணன் சொன்னார்.

** ** ** ** **

"யுதிஷ்டிரர் தனக்கு முறைப்படி கிடைக்கவேண்டிய ராஜ்யத்தையே அடையவிரும்புகிறார். ஒரு எள் அளவு பூமியையாவது வஞ்சகமாகக் கைப்பற்ற அவர் விரும்பவில்லை. நாம் துக்கமுள்ளவர்களாயில்லாவிட்டாலும் பிறரை வருத்தமடையும்படி செய்வது கொடியபாவம். மக்கட்கூட்டத்தைக் கெடுத்ததானபாவம் நமக்கு வந்துசேரும்" என்று பகவான் ஸ்ரீகிருஷ்ணன் சொன்னார்.

அதன்பிறகு அவர் கௌரவர்களின் பேராசையையும், யுதிஷ்டிரரின் தர்மபுத்தியையும் நன்றாய்க்கவனித்து நடத்தவேண்டிய கார்யத்தையும் இவ்வாறென நிச்சயித்துச் சபையோர்களைநோக்கிச் சிலவார்த்தைகளை யுரைத்தார். தம் முழு அபிப்பிராயத்தையும் வெளியிடவில்லை. சமாதானம் செய்வதற்காகத் தாமே துராத்மாவான துரியோதனனிடம் தூதுபோக அவர் இசைந்தார். ஸ்ரீகிருஷ்ணனுக்குப் போரில் விருப்பமில்லை. சமாதானத்திலேயே

விருப்பம். நாடு யுதிஷ்டிரருக்குக் கிடைத்தால் அதைக்கண்டு சந்தோஷமே; கிடைக்காவிட்டாலும் போர்செய்யக்கூடாதென்றும், எவ்வாறேனும் சமாதானமே செய்யவேண்டுமென்றும் அவர் சொன்னார். போர் நிகழ்ந்தாலும் போரில் கையில் ஆயுதத்தை யெடுப்பதில்லையென்றும் ஸ்ரீகிருஷ்ணன் பிரதிக்ஞைசெய்தார்.

ஸ்ரீகிருஷ்ணன்பேச்சு முடிந்தவுடன், பலதேவரும் அதைப் பின்பற்றிப்பேசினார். சூதாடினதைப்பற்றி யுதிஷ்டிரரை நிந்தித்தார். சமாதானத்தாற் கிடைத்தசொத்தே பயனுள்ளதாகும்; போரால் வந்த சொத்துப் பயன்படாதென்றும் பலராமர் சொன்னார். பலராமனுரைத்த வார்த்தைகளைத் தங்கள் தங்கள் வீடுகளில் பொன்னெழுத்துக்களில் ஐரோப்பியர்கள் வரைந்துவைத்துக்கொண்டிருந்தால் மனிதஜாதிக்கே மங்களமுண்டாகியிருக்கும்.

பலதேவரின் உபந்நியாஸம் முடிந்தபிறகு சாத்தகியென்பான் எழுந்து பதிலுரைத்தான். (அக்காலத்திலும், ஒருவன் சொல்லி முடியும்வரை பிறன் பேசக்கூடாது; சபையில் நின்றுகொண்டே உபந்யாஸம்செய்யவேண்டும், என்ற நியமமிருந்ததென்பதை இதைப்படிப்போர் கவனித்தல்வேண்டும்.) சாத்தகி பலவானான வீரபுருஷன்; ஸ்ரீகிருஷ்ணனுடைய மாணவன்; மகாபாரத யுத்தத்தில் அர்ஜுனனுக்கும் அபிமன்யுவுக்கும் அடுத்தபடியான வீரனென்று புகழையடைந்தவன். ஸ்ரீகிருஷ்ணன்பேசும்போது அவன் மௌனமாயிருந்தான். ஆனால் பலதேவர்பேசியதைக் கேட்டவுடன், அவனுக்குக் கோபம் பிறந்தது. அவரை நபும்ஸகனென்றும் உபயோகமற்றவனென்றும் திட்டினான். சூதாடினதைப்பற்றி யுதிஷ்டிரரையும் நிந்தித்தான். பாண்டவர்களின் பிதிரார்ஜிதசொத்தை அவர்களிடம் திருப்பி ஒப்பிக்காதபக்ஷத்தில் கௌரவர்களை வேருடன் களையவேண்டியதே நியாயமாகுமென்று சாத்தகி எதிர்வாதம்செய்தான்.

அதன்பிறகு பெரியோரான துருபதவரசர் சிலவார்த்தைகளையுரைத்தார். அவரும் சாத்தகி சொல்லியவற்றுக் கிசைந்தார். போர்க்குரிய முயற்சிகளைச் செய்யும்படிக்கும், படைகளைத் திரட்டும்படிக்கும், நட்பரசர்கள் உதவிசெய்யும்படி அவர்களுக்குத்

தூதர்களை அனுப்பும்படிக்கும், பாண்டவர்களிடம் துருபதவரசர் வற்புறுத்தினர். ஸ்ரீகிருஷ்ணன் மறுபடியும் சொல்லத்தொடங்கினார். துருபதவரசர் பெரியோரென்றும் சம்பந்தத்தினால் தனக்கு 'மாமா' வென்றும் நினைத்து அவருடைய வார்த்தைகளை வெளிப்படையாய் ஸ்ரீகிருஷ்ணன் மறுக்கவில்லை. யுத்தம் நிகழ்வதாயிருந்தாலும் அதை நடக்கவொட்டாமல் தடுப்பதே நலமென்பது தமது எண்ணமென்று தெரிவித்தார்.

"கௌரவர்களும் பாண்டவர்களும் நமக்கு ஒரேதரத்தினர். அவர்கள் நம்முடன் ஒருநாளும் மரியாதைக்குறைவாக நடக்கவில்லை. உரையாடியதுமில்லை. நாமெல்லோரும் விவாஹத்துக்கு அழைக்கப்பெற்று இவ்விடம் வந்திருக்கிறோம். நீங்களும் அதற்காகவே இங்கு வந்திருக்கிறீர்கள். நாமெல்லோரும் சந்தோஷத்துடன் நம் வீடுபோய்ச்சேருவோம்" என்று ஸ்ரீகிருஷ்ணன் சொன்னார். பெரியோர்களிடம் அவர் இதையன்றி வேறெதைத்தான் சொல்லமுடியும்? மறுபடியும் அவர் "துர்யோதனன் ஸமாதானத்துக்கு உடன்படாவிட்டால், அப்பொழுது முதலில் மற்றவர்களிடம் தூதர்களை யனுப்பிவிட்டுப் பிறகே நம்மை யழையுங்கள். நமக்குப் போர்செய்வதில் அதிக அவாவில்லை? என்று சிலவார்த்தைகளையுரைத்துத் துவாரகைசென்றார்.

அவர் போரில மிகவும் வெறுப்புள்ளவர். ராஜ்யத்தை விட்டுக்கொடுக்கவும் பாண்டவர்களுக்கு உபதேசித்தார். கௌரவர்களிடமும் பாண்டவர்களிடமும் ஒரு படிப்பட்ட மனநிலையுடையராயிருந்தார். பிறகு நிகழ்ந்த விவஹாரங்களிலும் மேற்சொல்லிய இரண்டு விஷயங்களையும் உறுதிப்படுத்துவதற்காகச் சிறந்த காரணங்களையும் குறிப்பிட்டார்.

பிறகு இருபிரிவினரும் போர்க்கு முயற்சிசெய்யத் தொடங்கினார்கள். படைகளைத் திரட்டிக்கொண்டிருந்தார்கள். அரசர்களிடம் தூதர்களை விடுத்தார்கள். கிருஷ்ணனை உதவிக்கழைப்பதற்காக அர்ஜுனன் தானே துவாரகை சென்றான். துர்யோதனனும் அவ்விதமே செய்தான். ஒரேநாளில் அவ்விருவரும் கிருஷ்ணனை அணுகினர். அதன்பின் எது நிகழ்ந்ததோ அதை மகாபாரதத்திலிருந்து எடுத்தெழுதுகிறோம்,

"வாஸுதேவன் அப்பொழுது படுக்கையிற்படுத்து நித்திரை செய்துகொண்டிருந்தார். முதலில் துரியோதனன் அவரது பள்ளி யறையில் பிரவேசித்து அவருடைய முடியின்பக்கல் ஓர் உயர்ந்த ஆதனத்தில் உட்கார்ந்துகொண்டான். இந்திரகுமாரன் பிறகுவந்து வினயத்துடன் அஞ்சலிசெய்துகொண்டு ஸ்ரீகிருஷ்ண னுடைய பாதங்களினடியில் உட்கார்ந்துகொண்டான். யாதவநந்த னர் விழித்துக்கொண்டு முதலில் அர்ஜுனனையும் பிறகு துர்யோ தனனையும் கண்டருளினர்; அவர்களுக்கு நல்வரவுகூறி மரியாதை செய்து வந்தகாரணத்தை வினவினர்.

துரியோதனன் சிரித்துக்கொண்டே "ஓ! யாதவரே! நிகழ்கிற யுத்தத்தில் நீர் ஸஹாயம்செய்யவேண்டும். எங்களிருவரிடமும் உமக்குச் சமமான சம்பந்தமும் அன்பு மிருக்கிறது. இருந்தாலும் நான் முதலில் வந்தவனுயிருக்கிறேன். நல்லோர்கள் முதலில் வந்த வன்பக்கத்திலேயே சேர்வார்கள். தாங்களோ ஸாதுக்களிற் சிறந்த வர்; கொண்டாடத்தகுந்தவர். ஆகையால் அந்த நியமத்தைத் தாங் களும் பரிபாலனம் செய்யவேண்டும்" என்று சொன்னன்.

ஸ்ரீகிருஷ்ணன் துரியோதனனைநோக்கி "ஓ! குருகுலவீரனே! நீ முதலில் வந்ததிற் சந்தேகமில்லை. ஆனல் நான் குந்தியின் புதல் வனையே முதலிற் பார்த்தேன். ஆகையால் உங்களிருவர்க்கும் உதவி செய்வேன். சிறுவனுக்கே முதலில் வரம் கொடுக்கவேண்டும். ஆகை யால், குந்தியின் குமாரனுக்கு முதலில் வரத்தைக்கொடுக்கிறேன்". என்று இவ்வாறுரைத்துப் பகவானுன யதுநந்தனர் தனஞ்சயனிடம் "முதலில் நீயே வரத்தைப் பெற்றுக்கொள்வாயாக. என்னிடம் அற்புதநாராயணமென்று பெயர்பெற்றதும் எனக்குச்சமமாகப் போர்புரியக்கூடியதுமான ஒரு படையிருக்கிறது. அதை ஒருவர் உதவிக்காகப்பெற்றுக்கொள்ளுங்கள். நான் போர்புரிய விருப்ப மில்லாதவன். கையில் அஸ்திரமெடுக்காமல் வந்துசேர்வேன். அந் தச் சேனைக்குப் பதிலாக மற்றொருவன் என்னைப் பெற்றுக்கொள் ளட்டும். இவைகளிரண்டில் எது உங்கள் மனத்துக்குகந்ததோ அதையே பெற்றுக்கொள்ளுங்கள்" என்று சொன்னர்.

பகைவரை வெல்லவல்லவரான ஜநார்த்தனர் போர்செய்ய விருப்பமில்லாதவராய்ப் படைக்கலத்தைக் கையிலெடுக்கமாட்டே னென்று சொன்னதைக்கேட்டும் தனஞ்சயன் அவரையே வரித்துக்கொண்டான். துரியோதனன் அற்புதநாராயணமென்கிற படையையடைந்தான்; அன்றியும், ஸ்ரீகிருஷ்ணன் போரில் படைக்கலமெடுக்கமாட்டாரென்பதைத்தெரிந்து மிக்க மகிழ்ச்சியையுமடைந்தான்.

உத்தியோகபர்வத்தில் இந்த அம்சத்தைப் பரிசீலனை செய்ததில், கீழே குறிக்கப்பட்ட விஷயங்களை நாம் காண்கிறோம்:—

முதலாவது: ஸ்ரீகிருஷ்ணன் பொறுமையே பெரியதென்றும், பலத்தைப்பிரயோகிப்பதைக்காட்டிலும் நாட்டை இழப்பதே நலம் என்றும் கருதினர்.

இரண்டாவது: அவர் எல்லாரிடத்திலும் ஸமதிருஷ்டியுள்ளவர். அவர் பாண்டவர்பக்ஷத்தைச் சார்ந்தவரென்றும் கௌரவருக்கு விரோதியென்றும் ஸாமான்யஜனங்கள் நினைத்தார்கள். ஆனால் அவர், இருகக்ஷியிலும் பக்ஷபாதமில்லாதவரென்பதை இதைப்படிப்போர் மேலேகண்ட வாக்கியங்களிலிருந்து தெரிந்துகொள்வார்கள்.

மூன்றாவது: அவர் நிகரற்ற வீரராயிருந்தும் போரில் வெறுப்புள்ளவராயிருந்தார். போரே நடவாதபடி தடுக்கமுயன்றார். போர் அவசியம் நிகழுமென்றும், தாம் ஒருகக்ஷியிலிருக்கவேண்டியது இன்றியமையாததென்றும் அவருக்குத் தோன்றியவுடன், தாம் அஸ்திரத்தைக் கையிலெடுப்பதில்லையென்று பிரதிக்ஞைசெய்தார்.

இதற்குப்பிறகும், போர்நடவாதபடி தடுக்க ஸ்ரீகிருஷ்ணன் முயன்றார். எவர் போரில் வெறுப்புள்ளவரோ எவர் எல்லாவிடங்களிலும் ஸமதிருஷ்டியுள்ளவரோ, அவரையே போரைத்தூண்டிவிட்டவரென்றும், பாண்டவர்பக்ஷத்திலிருந்து பலகபடங்களைச் செய்தவரென்றும், ஸாமான்ய ஜனங்கள் உறுதிப்படுத்துகிறார்களேயென்பதுதான் ஆச்சரியகரமான விஷயம். கிருஷ்ணசரித்திரத்தை விஸ்தாரமாய்ப் பரிசீலனைசெய்ததில் அவருடைய உண்மையான நோக்கத்தைத் தெரிந்துகொள்வதுதான் பிரயோசனம்.

அர்ஜுனன் கிருஷ்ணனை அழைத்துக்கொண்டுபோய், அவரை யெந்தக்காரியத்தில் நியமிக்கலாமென்று ஆலோசித்துத் தனக்கு ஸாரத்யம்செய்யும்படி அவரைக் கேட்டுக்கொண்டான். தேர்ப் பாகனுயிருப்பது க்ஷத்திரியர்களுக்குள் மிகவும் இழிவானசெயல். கர்ணனுக்கு ஸாரத்யம்செய்யும்படி மகாராஜனுன சல்யனைக் கேட்ட போது அவன் மிகவும் கோபமடைந்தான். ஆனால் ஸ்ரீகிருஷ்ணன் ஆதர்சபுருஷராயிருந்ததால் அவருக்குக் கோபம் வரவில்லை. தாம் ஸாரத்யம் செய்தற்கு இசைந்தார். அவர் தோஷமற்றவர்; எல்லாக் குணங்களும் நிரம்பப்பெற்றவர்.

---

## இரண்டாவது அதிகாரம்.

### சஞ்சயயாநம் (ஸஞ்சயன் தூது)

இருகக்ஷிகளிலும் யுத்தமுயற்சி நடந்தது. துருபதன் சொற் படி யவருடைய புரோகிதரை யுதிஷ்டிரர் திருதராஷ்டிரனிடம் ஸமா தானம் செய்வதற்காகத் தூதனுப்பினர். ஆனால் அந்தப்புரோகித ரால் ஒரு காரியத்தையும் சாதிக்கமுடியவில்லை. யுத்தமின்றி ஊசியின்முனையளவுள்ள பூமியைக்கூடக் கொடுப்பதற்குத் துரி யோதனன் உடன்படவில்லை. வீமன் அர்ஜுனன், கிருஷ்ணன் இவர்களிடத்துத் திருதராஷ்டிரனுக்கு அச்சமாதலால், எவ்வாறுவது பாண்டவர்கள் போர்தொடராமலிருக்கும்படி அவர்களைக் கேட்டுக் கொள்வதற்காகத் தன்னுடைய புரோகிதனுன சஞ்சயனை அவர்க ளிடம் அனுப்பினன். இவ்வாறு பொருத்தமற்ற செயலைச்செய்ய எவன்தான் உடன்படுவான். ஆனால் தூதனுக்கு வெட்கமில்லை. ஸஞ்சயன் பாண்டவர்களிடம் வந்து நீண்டதோர் உபந்நியாஸம் செய்தான். அவ்வுபந்நியாஸத்தின் உட்கிடை, "போர்செய்வது மிகவும் அதர்மம். நீங்கள் அவ்விதமான அதர்மத்தில் முயலுகிறீர் கள். ஆதலால் நீங்கள் அதார்மிகர்கள்". என்பதே. யுதிஷ்டிரனும் ஸஞ்சயனுக்குப்பதிலுரைத்தான்.—அதன் ஸாராம்சம், "தேவர்க ளாலும் விரும்பக்கூடிய எல்லாவிதமான பூமியிலுள்ள ஐசுவரியத் தாலும் புண்ணியத்தைத்தேடி ஸ்வர்க்கத்தையோ பிரும்மலோகத் தையோ அடையமுடியும். அதர்மத்தால் அவைகளையடையவே முடியாது." என்பதே.

மேலும், யுதிஷ்டிரன் சஞ்சயனிடம், "ஸ்ரீ கிருஷ்ணன் மகாத்மா, தர்மத்தை வளர்ப்பவர்; நீதிமான்; பிராமணர்களை வழிபடுகிறவர்; கௌரவர், பாண்டவர்: இருகுலத்தாருக்கும் நன்மையை விரும்புகிறவர்; பராக்ரமசாலிகளான எண்ணிறந்த அரசர்களையும் அடக்கியாளக்கூடியவர், 'ஸமாதானத்தைப் பரித்யாகம் செய்தால் நாம் நிந்திக்கத்தக்கவர்களேயாவோம். போர்செய்யாமலிருந்தால் ஸ்வதர்மத்தை விட்டவர்களாவோம்' என்று அவரே திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார். 'சிபியரசனின் கொள்பேரனான காசியரசன், சேதி, அந்தகன், விருஷ்ணி, போஜன், குகுரன், உத்தம வம்சத்தவர்கள்: இவர்கள் யாவரும் வாசுதேவருடைய புத்தி வலிமையால் தங்களுடைய பகைவரையடக்கி நட்பினர்களைச் சந்தோஷப்படுத்தியுமிருக்கிறார்கள். இந்திரனையொத்த உக்கிரஸேனர் முதலானவர்கள், ஸ்ரீகிருஷ்ணனே ரக்ஷகர் எனக்கருதிக் காசியரசனை 'பப்ரு'வென்பான் சிறந்தஸம்பத்தையடைந்தான். கோடை காலம் கழிந்தபின் மேகங்கள் எவ்விதம் நீரை வர்ஷிக்கின்றனவோ, அவ்வாறே வாஸுதேவர் காசியரசனுக்கு விரும்பிய ஸம்பத்துக்களை யளித்தருளினர். வினைகளின்பயனை யறிந்தவரான ஸ்ரீகேசவர் மிகவும் குணங்களால் நிறைந்தவர்; ஜனங்களுக்குப் பிரியமானவர்; மிகவும் நல்லவர்; நாம் ஒருபோதும் அவருடைய வார்த்தைகளை மீறி நடக்கமாட்டோம்." என்று சிலவார்த்தைகளைச் சொன்னன்.

பிறகு, வாஸுதேவர், "ஹே! சஞ்சய! நாம், பாண்டவர்களுக்குக் குறைவற்ற செல்வத்தையும், கௌரவர்களுக்கு க்ஷேமத்தையும் கோரிக்கொண்டேயிருக்கிறோம். கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் சமாதானம் எவ்விதத்திலும் நேரவேண்டுமென்பதே நமது எண்ணம். நாம் வேறுயோசனையைச் சொல்வதில்லை. பிராதாக்களின் முன்னிலையில் யுதிஷ்டிரர்வாக்கிலிருந்தே ஸமாதான வார்த்தையை நாம் பலமுறை கேட்டிருக்கிறோம். ஆனல் திருதராஷ்டிரனும் அவருடைய குமாரர்களும் மிகவும் பொருளாசை கொண்டவர்கள். பாண்டவர்களுடன் அவர்களைச் சேர்த்துவைப்பது மிகவும் அரிது. விரோதமே படிப்படியாய் வளரும். அதில் என்ன ஆச்சரியம். ஹே! ஸஞ்சய! தர்மராஜாவான யுதிஷ்டிரரும் நாமும் அறநெறியிலிருந்து ஒருபோதும் விலக்கியதில்லையென்பதை

நீர் தெரிந்துகொண்டும் கேள்விப்பட்டும் ஸர்வஜனரக்ஷகரான யுதிஷ்டிரரை அதார்மிகனென்று ஏன் குறிப்பிட்டீர்?" என்று கூறினார்.

ஸ்ரீகிருஷ்ணன் இதுவரையில் தர்மத்தை விளக்கிவந்தார். கிருஷ்ணசரித்திரத்தில் இந்தக்கதை மிகவும் பயனுள்ளது. அவருக்கு இரண்டு நோக்கங்களே உண்டு. அவை தர்மத்தைப்பிரசாரம் செய்தலும் தர்மராஜ்யத்தை ஸ்தாபித்தலுமேயென்று நாம் முன்னமே பலமுறை சொல்லியிருக்கிறோம். அவரால் செய்யப்பட்ட தர்மராஜ்யஸ்தாபனத்தைப்பற்றி மகாபாரதத்தில் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர் பிரசாரம் செய்ததான தர்மத்தின் விருத்தாந்தம் கீதாத்தியாயத்திற் காணப்படுகிறது.

** ** ** ** **

இச்சயமத்தில் ஸஞ்சயனிடம் ஸ்ரீ கிருஷ்ணன் சொன்னதைக் கேட்பீர்களாக. அது,

"பரிசுத்தமாயிருந்துகொண்டு, வேதாத்யாபனத்தால் குடும்ப பரிபாலனம்செய்வதே பிராமணர்களின் தர்மமாயிருந்தும் அவர்களுக்கு வேறுவேறுவிதமாய்ப் புத்தி மாறிவிடுகிறது. சிலர் கர்மங்களை யநுஷ்டித்துக்கொண்டும், வேறுசிலர் கர்மங்களைப் பரித்யாகம்செய்தும் தாங்கள் வேதத்தையறிந்தவர்களாக இருப்பதாலேயே மோக்ஷத்தையடையலாமென்று நினைக்கிறார்கள். பசியுள்ளவனுக்கு உணவாலன்றித் திருப்தி யெவ்விதம் ஏற்படாதோ, அவ்விதமே கர்மங்களையனுஷ்டிக்காமல் வேதத்தையறிந்தவர்களாக இருப்பதால்மட்டும் பிராமணர்கள் மோக்ஷத்தையடையார்கள். எந்த வித்தைகளால் கர்மாநுஷ்டானம் சித்திக்குமோ அவைகளே பயனுள்ளவைகள், எவைகளில் கர்மாநுஷ்டானத்தைப்பற்றிய நியமங்களில்லையோ, அவைகள் பயனற்றவைகள். எப்படி நீர்வேட்கையுற்றவனுக்கு நீராலன்றி விடாய்தீராதோ அப்படியே பயனுள்ள கர்மங்களை நாம் அனுஷ்டிப்பதாலன்றி நமது பாபம் விலகாது. ஹே! ஸஞ்சயனே! கர்மத்தினலேயே இவ்விதமான விதிகள் ஏற்படுகின்றன. கர்மமே முக்கியம். எவனொருவன் கர்மத்தைக்காட்டிலும் வேறொருவிஷயத்தை முக்கியமென்று நினைக்கிறானோ அவ

னுடைய காரியங்களெல்லாம், பயனற்றவைகளாக ஆகும். காண்டீ ராக! தேவர்கள் கர்மபலத்தினாலேயே பிரபாவசாலிகளானார்கள். கர்மபலத்தினாலேயே வாயு எப்பொழுதும் அசைந்துகொண்டிருக்கிறான். பூமியும் கர்மபலத்தினாலேயே சுமக்கமுடியாத பாரத்தைச் சுமந்துகொண்டிருக்கிறது. அதனாலேயே நதிகளும் வெள்ளங்களுடன் பிரவஹித்துப் பிராணிகளுக்குத் திருப்தியைச் செய்கின்றன. அக்கினியும் அதனாலேயே ஜனங்களுக்கு உபகாரத்தைச் செய்கிறது. தேவராஜனான இந்திரனும் பிரஜைகளுக்குள் முதன்மையை யடைவதற்காகவே கர்மாநுஷ்டானஞ்செய்துகொண்டிருக்கிறான். அவன் பத்துத்திசைகளையும், ஆகாசமண்டலத்தையும் ஒலிக்கும்படிசெய்து மேகங்களை வர்ஷிக்கச்செய்கிறான். அம்மாதிரியே போகங்களில் ஆசையையொழித்துச் சிறந்தவனாகி, அடக்கம் பொறுமை சமதிருஷ்டி ஸத்தியம் தர்மம் இவைகளைப் பரிபாலனஞ்செய்துகொண்டு தேவராஜ்பத்தில் அதிகாரத்தைச் செலுத்துகிறான். பிருகஸ்பதிபகவானும் அதனாலேயே சமாதானத்துடன் இந்திரியங்களையடக்கிப் பிரும்மசரியத்தை அனுஷ்டிக்கிறார். கந்தர்வர்கள், ருத்ரன், ஆதித்யன், யமன், குபேரன் யக்ஷர்கள், அப்ஸரசுகள், விசுவாவசு, நக்ஷத்திரங்கள்: இவர்கள் யாவரும் கர்மப்பிரபாவத்தாலேயே விளங்குகிறார்கள். பிரும்மவித்யை பிரும்மசரியம் முதலான சிறந்த கர்மங்களை அனுஷ்டானம்செய்தே மகர்ஷிகள் சிறப்பையடைந்திருக்கிறார்கள்'' என்பதே.

கர்மத்தைப்பற்றி ஸ்ரீகிருஷ்ணன் முன்பே சொல்லியிருக்கிறார். வைதிகக்கிரியைகளே 'கர்ம'மென்பது அவரது அபிப்பிராயம். மேற்றிசையோர் எதைக் கடமையென்று சொல்லுகிறார்களோ, அந்த அர்த்தத்தில்மாத்திரம் நாம் 'கர்ம'மென்ற சொல்லை உபயோகிப்பதில்லை. முன்செய்தவினையின்பயனாக நாம் எதை யனுஷ்டிக்கிறோமோ அதுவே கர்மமென்ற வார்த்தையின்பொருளாகுமென்று நாம் 'பகவத்கீதையிலே' கண்டிருக்கிறோம். ஸ்ரீகிருஷ்ணன் கீதையிலும் அதையே உபதேசித்திருக்கிறார். அநுஷ்டிக்க வேண்டிய கர்மங்களைச் சாஸ்திரவிதியின்பிரகாரம் அனுஷ்டிப்பதற்கு வேறுபெயர் 'ஸ்வதர்மபரிபாலனம்' என்பது. கீதையின் ஆரம்பத்திலேயே ஸ்ரீகிருஷ்ணன் ஸ்வதர்மத்தைப் பரிபாலனம்

செய்யும்படி அர்ஜுனனுக்கு உபதேசித்திருக்கிறார். அதேவிதமாக "ஹே! ஸஞ்சயரே! நீர் நான்குவருணத்தார்களுடைய தர்மங்களையும் நன்றாயறிந்திருந்தும் கௌரவர்களுக்கு நன்மைசெய்யும் விருப்பத்துடன் பாண்டவர்களைக் கெடுக்க முயற்சிசெய்தீர். தர்மராஜரான யுதிஷ்டிரர் வேதமறிந்தவர்; அசுவமேதம் ராஜஸூயம் முதலான யாகங்களைச் செய்தவர்; யுத்தசாஸ்திரத்தில் கரைகண்டவர்; யானை குதிரை தேர்களை நடத்துவதில் நிபுணர். இக்கணத்தில் கௌரவர்களைப் பாண்டவர்கள் வதைக்காமல் பீமசேனனைச் சாந்தப்படுத்துவதன்மூலம் ராஜ்யத்தைப் பெறுவதற்கு வேறு உபாயமிருக்குமானால், அதனாலே தர்மரக்ஷையும் புண்யகர்மத்தின் அநுஷ்டானமும் ஏற்படும். அல்லது க்ஷத்திரியர்களுக்கு ஸ்வதர்மமாகிற யுத்தத்தை நடத்தி மிருத்யுவின்வாயில் விழுந்தாலும் அதுவே மேன்மை. ஸமாதானத்தாலேயே சிரேயஸ்ஸை யடையலாமென்றும் அதுவே நலமென்றும் நீர் நினைக்கிறீர். யுத்தம் செய்தலாலே க்ஷத்திரியர்களுக்குத் தர்மரக்ஷை யேற்படுமா, யுத்தம் செய்யாமலே க்ஷத்திரியர்களுக்குத் தர்மரக்ஷையேற்படுமா வென்பதை யாலோசித்து இவைகளில் எது சிரேஷ்டமென்று உமக்குத் தோன்றுகிறதோ அதையே நாமும் அநுஷ்டானம் செய்வோம்" என்று இவ்விடத்திலும் அவர் ஸ்வதர்மபரிபாலனத்தைப்பற்றியே உபதேசித்திருக்கிறார்.

அதன் பிறகு ஸ்ரீகிருஷ்ணன் நான்கு வர்ணங்களின் தர்மத்தைப்பற்றிச் சொல்லத்தொடங்கினார். கீதையில் பதினெட்டத்தியாயங்களிலும், பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களின் தர்மங்கள் எவ்விதமாக உபதேசிக்கப்பெற்றிருக்கின்றனவோ அவ்விதமாகவே இங்கேயும் அந்தத்தர்மங்களைக் குறித்துச்சொல்லியிருக்கிறார். பகவத்கீதையிலும், பாரதத்தில் வெவ்வேறு இடங்களிலும் ஸ்ரீகிருஷ்ணனால் விவரிக்கப்பட்ட தர்மம் ஒன்றே.

அவர் ஸஞ்சயனுக்கு இன்னும் அநேக கதைகளைச் சொன்னார். அவைகளில் இரண்டொன்றை இங்கே யெடுத்துரைப்போம். வலியையுபயோகித்துப் போர்செய்து ரத்தவெள்ளத்தைப் பெருக்கிப் பிறருடைய ராஜ்யத்தை யபஹரித்தல் சரியானகாரியமென்று

ஐரோப்பியர்கள் நினைக்கிறார்கள். ஒருவனை அடித்துப்பறித்தல் சிறியகளவு; பேராற்றலால் பிறர்தேசத்தை யபஹரித்தல் பெரிய களவு. திக்குவிஜயத்திலாசைவைத்து அறிவையிழந்து க்ஷத்திரியர்கள் தர்மாதர்மங்களையு மிழந்துவிடுகிறார்கள். சிறிய களவு ரகஸ்யத்தில் நடக்கிறது. பெரிய களவு வெளிப்படையாய் நடக்கிறது. இவைகளுக்குள் வித்தியாஸ மிதுவே.

'திருடன் மறைந்தோ வெளிப்படையாகவோ வலிந்து பிறன் பொருளை யபஹரிக்கிறான். அது நிந்திக்கத்தக்கதே. அவ்விதம் துரியோதனன் காரியமும் இகழத்தகுந்ததே' என்று கிருஷ்ணன் சொல்லுகிறார்.

திருடர்களிடமிருந்து ஜநங்களைக் காப்பதையே கிருஷ்ணன் பரமதர்மமாகக்கொண்டார். தற்கால நீதிமான்களின்கருத்தும் அதுவே. சிறிய கள்வனுடைய கையிலிருந்து தனதுபொருளைக் காத்தலை இங்கிலீஷ் பாஷையில் நீதியென்று சொல்வார்கள். பெரிய திருடனிடமிருந்து தன்பொருளை வசப்பற்றுதலின் மறுபெயர் அந்தப்பாஷையில் தேசாபிமானம் என்பது. நமது தேசபாஷையில் அவ்விரண்டுக்கும் பெயர் ஸ்வதர்மபரிபாலனம் என்பது.

கிருஷ்ணன் மறுபடியும் சொல்லியதாவது: "இந்தக் காரியத்துக்காகப் பிராணனையும் இழக்கவேண்டியிருக்கும். பிராணனை விடுவதே சிலாக்யமானது. ஆனால் பரம்பரையாகக்கிடைத்த ராஜ்யத்தைத் திரும்பப்பெறுதலில் அஜாக்கிரதையாயிருப்பது உசிதமில்லை." என்பதே.

சஞ்சயனுடைய தர்மவிரோதமான வார்த்தைகளைக்கேட்டுக் கிருஷ்ணன் அவனைத்திரஸ்காரம்செய்து மறுபடியும் "யுதிஷ்டிரராசனுக்கு நீர் இப்பொழுது தர்மோபதேசம் செய்யவிரும்பினீர். ஆனால் துச்சாதனன் சபைநடுவில் துரோபதைக்கு மிகவும் கொடியதான அபசாரம் செய்தானே; அக்காலத்தில் நீர் அவனுக்குத் தர்மோபதேசம் செய்யவில்லையே" என்று கூறினார். கிருஷ்ணன் பெரும்பாலும் பிரியமான வார்த்தைசொல்பவர். உண்மையான கெடுதல்களை யெடுத்துரைப்பதில் ஸ்பஷ்டமாயும் சொல்லக்கூடியவர். அவருக்கு எப்போதும் ஸத்யத்திலே பிரியம். அவர் ஸத்யவான்.

பிறகு கிருஷ்ணன் இருகக்ஷிக்காரர்களுக்கும் நன்மைசெய்வதற்காகத் தாமே ஹஸ்தினபுரம்சென்றார். "பாண்டவர்களுக்கு நஷ்டமில்லாமலிருக்கும்படிக்கும் கௌரவர்களும் ஸமாதானத்துக்கு உடன்படும்படிக்கும் ஸமாதானத்தைச் செய்ய முயற்சி செய்வேன். அதனால் மிகவும் புண்யம் உண்டாகும். கௌரவர்களும், யமபாசத்திலிருந்து விடுபடுவார்கள்" என்று அவர் சொன்னார். உலகத்தின் நன்மைக்காகவும் எண்ணிறந்த மக்களின் பிராணரக்ஷைக்காகவும் கிருஷ்ணன் இந்தக் கடினமானதும் இழிவானதுமான காரியத்தில் தலைப்பட்டார். பாண்டவர்கள் எப்போது அவரை வரித்தார்களோ, அப்போதே கௌரவர்கள் அவரைச் சத்துருவென நினைத்து நிந்திக்கத்தொடங்கினார்கள். உலகத்தின் நன்மைக்காகவே அவர் நிராயுதபாணியாய்ப் பகைவருடைய நகரத்தில் நுழைந்தார்.

---

## மூன்றுவது அதிகாரம்.

### யாநஸந்தி

இதனுடன் ஸஞ்சய யாநபர்வாத்தியாயம் முடிவுபெற்றது. அந்த அத்தியாயத்தினிறுதியில் கிருஷ்ணன் ஹஸ்தினபுரம் சென்றார் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வாஸ்தவத்தில் அவர் அதன்பிறகே ஹஸ்தினபுரிக்குச் சென்றார். அந்த அத்தியாயத்துக்கும் கிருஷ்ணன் ஹஸ்தினபுரிக்குப் போன விருத்தாந்தத்தை வர்ணிக்கிற அத்தியாயத்துக்கும் மத்தியில் வேறு மூன்றத்தியாயங்களிருக்கின்றன. அவை 'பிரஜாகர,' 'ஸநத்ஸுஜாத', 'யாநஸந்தி'யென்பவை. அவற்றுள் முதல் இரண்டத்தியாயங்கள் பிரக்ஷிப்தங்களென்பதிற் சந்தேகமில்லை. இவைகளில் மகாபாரத ஸம்பந்தமான கதையொன்றுமில்லை. சிறந்த நீதிக்கதைகளும் தர்மத்தை விவரிக்கக்கூடிய கதைகளுமே அவ்வத்தியாயங்களிலிருக்கின்றன.

மூன்றுவதான யாநஸந்திபர்வாத்தியாயத்தில் ஸஞ்சயன் ஹஸ்தினபுரிசென்று திரும்பிவந்த விருத்தாந்தமும், திருதராஷ்டிரன் துரியோதனன் முதலிய கௌரவர்களின் வாதங்களும் அநுவாதங்களுமே காணப்படுகின்றன. நீண்ட உபந்நியாஸங்களும்

சொன்னதையே திரும்பத்திரும்பச் சொல்லுதலும் அவ்வத்தியாயத்தில் அதிகம். அவ்வுபந்நியாஸங்கள் உபயோகமற்றவை. கிருஷ்ணனைப்பற்றிய விருத்தாந்தங்கள் அதில் இரண்டேயிடங்களில் இருக்கின்றன.

58-வது அத்தியாயத்தில் திருதராஷ்டிரன் ஸஞ்சயனுடைய வார்த்தையைக்கேட்டு "வாஸுதேவரும் அர்ஜுனனும் என்ன சொன்னார்கள். அதைக்கேட்க மிகவும் ஆவலுள்ளவனாக இருக்கிறேன். அதையே விஸ்தாரமாய்ச் சொல்லுவாயாக" என்று சொன்னான் என்ற விருத்தாந்தமே காணப்படுகிறது. அதற்குப் பதிலாக ஸஞ்சயன் உண்மைவிருத்தாந்தத்தைச் சொல்லாமல் ஒரு பொய்க் கதையைத் தொடங்கினன். "நான் திருடனைப்போல் பாண்டவர்களுடைய அந்தப்புரத்தின் மத்தியில் அபிமன்யு முதலியவர்களும் புகக்கூடாத இடத்திற்குப்போய்க் கிருஷ்ணார்ஜுனர்களைக் கண்டேன். அவர்கள் கள் முதலியவற்றையுண்டு வெறிபிடித்தவர்களாயிருந்தார்கள். துரௌபதி, ஸத்யபாமை இவர்களுடைய பாதங்களின்மேல் அர்ஜுனன் தன் கால்களைப் போட்டுக்கொண்டிருந்தான்" என்றும், "நான் எப்பொழுது ஸஹாயமாயிருப்பேனோ அப்பொழுது அர்ஜுனன் கௌரவர்களைக் கொன்று எறிந்துவிடுவானென்று கிருஷ்ணன் சொன்னா" ரென்றும் ஸஞ்சயன் முடித்தான்.

59-வது அத்தியாயத்திலும் மேலேகண்ட விருத்தாந்தத்தையே திரும்பச்சொல்லியிருக்கிறது. வேறு புதியகதை ஒன்றுமில்லை. 60-வது அத்தியாயத்தில் திருதராஷ்டிரன் துரியோதனனிடம் ஸமாதானமாய்ப்போகும்படிசொன்னானென்றும் அதற்காகத் துரியோதனன் தகப்பனைக் கொடிய சொற்களால் நிந்தித்தான் என்றும், 61-வது அத்தியாயத்தில் கர்ணன் ஊடேவந்து சிலவார்த்தைகளைச் சொன்னான் என்றும், பீஷ்மர் அவைகளை உத்தமம், மத்திமம், அதமமென மூன்றுவிதமாகப் பிரித்துக்காட்டினார் என்றும் எழுதியிருக்கிறது. 62-வது அத்தியாயத்தில் துரியோதனன் பீஷ்மரை ஆக்ஷேபித்தான். 63-வதில் பீஷ்மரின் உபந்நியாஸம். 64-வது பரிச்சேதத்தில் திருதராஷ்டிரனுக்கும் அவன் மகனுக்கும் ஸம்வாதம்.

59-வது முதல் 64-வது முடியவுள்ள அத்தியாயங்கள் பிரக்ஷிப்தங்கள் என்பதிற் சந்தேகமில்லை. மகாபாரத ஸம்பந்தமான விஷயங்களொன்றும் அவ்வத்தியாயங்களிற் காணப்படவில்லை.

எந்தக்காரணங்களால் இந்த ஆறத்தியாயங்களையும் பிரக்ஷிப்தங்களெனக் கொள்ளுகிறோமோ அதே காரணங்களால் 58-வது அத்தியாயமும் பிரக்ஷிப்தமெனக் கொள்ளுகிறோம். அந்த அத்தியாயக்கதைகள் முன்பின் விரோதமுள்ளவையாகவும், ஸந்தர்ப்பத்துக்கு ஒவ்வாதவைகளாகவு மிருக்கின்றன.

இவ்வத்தியாயங்களைப்பற்றி அநுக்ரமணிகாத்தியாயத்திலாவது பர்வஸங்கிரகாத்தியாயத்திலாவது பிரஸ்தாவமொன்றுமே கிடையாது.

யானஸந்திபர்வாத்தியாயத்தில் கிருஷ்ணனைக் குறித்தது முதற் பிரசங்கம். இரண்டாவது பிரசங்கம் 67-வது அத்தியாயம் முதல் 70-வது அத்தியாயம்முடிய அதாவது நான்கு அத்தியாயங்களில் இருக்கிறது. இவ்வத்தியாயங்களில் கிருஷ்ணனைப்பற்றித் தோத்திரஞ்செய்யப்பட்டிருக்கிறது. முதலாவது பிரஸங்கத்தில் கிருஷ்ணனை மத்யபானம் செய்கிறவர் என்று சொன்னவன் இவ்வத்தியாயங்களில் அவரை ஜகதீசுவரனென வர்ணித்திருக்கிறான். இவைகள் பிரக்ஷிப்தங்களென்று நாம் முன்னமே தெரிவித்திருக்கிறோம். கிருஷ்ணன் ஈசுவரனென்று நமக்கு நம்பிக்கையிருக்குமானால், ஸஞ்சயன்வாக்கியத்தாலேயா அந்த நம்பிக்கை குறையப்போகிறது? அவர் ஈசுவரனில்லை, மனிதரே என்று நாம் நினைப்போமானால் ஸஞ்சயனது வாக்கியங்களாலேயா அவர் ஈசுவரனே என்று விசுவாசம் ஏற்படப்போகிறது? ஆகையால் ஸஞ்சயன்வாக்கியங்களைப் பரிசீலனைசெய்வதில் நமக்குப் பிரயோசனம் ஒன்றுமில்லை.

---

## நான்காவது அதிகாரம்.

### ஸ்ரீகிருஷ்ணன் ஹஸ்தினபுரிக்குப்போன பிரஸ்தாவம்.

முன்னால் இசைந்தபடி சமாதானஞ்செய்வதற்காகக் கிருஷ்ணன் ஹஸ்தினபுரிக்குப் புறப்படுவதாகப் பிரஸ்தாவித்தார். புறப்படும்பொழுதில் பாண்டவர்களும் துரௌபதியும் அவரிடம் ஏதோ சில விஷயங்களைத் தெரிவித்துக்கொண்டார்கள். அவர்களுக்கு

அவரும் பதிலுரைத்தார். இவ்வார்த்தைகள் எல்லாவற்றையுமே ஐதிஹாஸிகங்களென்று கிரகித்துக்கொள்வது ஆவசியகமில்லை. கிருஷ்ணனுடைய திருவாக்கிலிருந்து உதித்த வார்த்தைகளிற் சிலவற்றை இங்கே யெடுத்தெழுதுகிறோம்.

ஸ்ரீகிருஷ்ணன் யுதிஷ்டிரனுக்கு "ஹே! மகாராஜாவே! க்ஷத்திரியர்கள் பிரம்மசர்யம் முதலிய நியமங்களை அநுஷ்டிக்க வேண்டியது ஆவசியகமில்லை. எல்லா ஆசிரமஸ்தர்களும் க்ஷத்திரியர்கள் பிக்ஷையெடுக்கக்கூடாதென்று நிஷேதித்திருக்கிறார்கள். க்ஷத்திரியர்களிடம் எளிமைத்தனம் இருக்கக்கூடாது. ஹே! சத்துருக்களைக்கொல்லவல்லவரே! எளிமைத்தனத்தைக்கொண்டதால் நாம் ராஜ்யத்தைப் பெறமாட்டோம். ஆதலால் பிரதாபத்தை வெளிக்காட்டி யெதிரிகளை நாசம்செய்வீராக" என்று உபதேசித்தான்.

கீதையிலே கிருஷ்ணன் அர்ஜுனனுக்கும் இவ்விதமே உபதேசித்திருக்கிறார். அதைப்பற்றி முன்பே சொல்லியிருக்கிறோம். பீமனுக்கும் அவர், "மனிதன் முயற்சியைவிட்டுவிட்டுத் தெய்வத்தை மட்டும் நம்பியிருந்தாலும், தெய்வத்தினிடம் விசுவாசமில்லாமல் முயற்சியைமட்டும் செய்தாலும் விரும்பியசெயல் நிறைவேறாது. அவனது ஜீவனமும் நடக்காது. இவ்விதமான நிச்சயத்துடன் ஒருவன் கார்யத்தில் பிரவர்த்திப்பானானால், அது நிறைவேறாவிட்டாலும் அவன் துக்கத்தையடையமாட்டான். காரியம் சித்தித்தாலும் சந்தோஷம் கொள்ளமாட்டான்" என்று உபதேசித்தார். பகவத்கீதையிலும் இவ்விதமான உபதேசமிருக்கிறது.

அர்ஜுனனுக்கும், "உவர்நிலத்தில் சரியானபடி உழுது விதைத்தாலும், மழையில்லாமல் ஒருக்காலும் பலன் உண்டாகாது. மனிதன் தன்னுடைய முயற்சியினால் தண்ணீர்பாய்ச்சினாலும் தெய்வபலத்தால் அந்தப்பயிர் காய்ந்துபோனாலும் போகும். ஆகையால் புருஷப்பிரயத்நமும் தெய்வபலமும் சேர்ந்துதான் காரியம் ஸித்தியாகுமென்று பெரியோர்கள் நிச்சயஞ்செய்திருக்கிறார்கள். நம்மால் முடிந்தமட்டில் முயற்சிசெய்யமுடியும்; தெய்வபலத்தை மாற்ற முடியாது" என்று உபதேசிக்கிறார்.

கிருஷ்ணன் தெய்வபலத்தையே முக்கியமானதென்று கருதவில்லை. ஏனெனில் அவர் மனிதசக்தியின்மூலமாகவே கார்யங்களை நடத்தமுயன்றிருக்கிறார். ஈசுவரசக்தியைக்கொண்டு அவர் கார்யங்களைச் செய்வதாயிருந்தால் மனுஷ்யாவதாரம் எடுத்ததில் பிரயோசனமொன்றுமில்லை.

கிருஷ்ணனிடம் துரௌபதி சொன்ன வார்த்தைகளிற் சில பெண்பால் சொல்லக்கூடியவைகளல்ல. அவள் சொன்னதாவது:— "கொல்லத்தகாத மனிதனைக் கொன்றதால் எந்தப்பாவம் விளையுமோ, அதே பாவம் கொல்லத்தகுந்தவனைக் கொல்லாமல் விடுதலால் ஏற்படும்" என்பதாம். இவ்வார்த்தை ஒரு ஸ்திரீயின் வாக்கிலிருந்து வருவது ஆச்சரியகரமே. துரௌபதியின் வார்த்தை முடியுங்காலத்தில் கவியின்சாமர்த்தியம் ஒன்று காணப்படுகிறது. அதை இங்கே விவரிப்போம்:—

கறுத்த கடைக்கண்களோடு கூடிய துருபதவாசன் குமாரி, ஸ்ரீ கிருஷ்ணன்வார்த்தையைக்கேட்டுப் படிப்படியாய் வளர்ந்ததாயும், வாஸனைத்திரவியங்களால் மணம்பெற்றதாயும், ஸர்வலக்ஷணங்களும் பொருந்தியதாயும் கறுநாகம்போல் நீண்டதாயுமுள்ள கூந்தலுடனும், கண்ணீர்ததும்பப்பெற்ற அழகிய கண்களுடனும், துக்கத்தையடைந்த மனத்துடனும், கிருஷ்ணனை நோக்கி "ஹே! ஜநார்த்தனரே! துராத்மாவான துச்சாதனன் எனது இக்கூந்தலையே தொட்டிழுத்தான். எதிரிகளைச் சமாதானம் செய்யவேண்டுமென்று, நீர் முயற்சிசெய்யும்போது, இந்தக் கூந்தலை நினைத்துக்கொள்ளவேண்டும். கதிகெட்டவனை எளியோனைப்போல் நீங்கள் சமாதானஞ்செய்யமுயல்கிறீர்கள். அதனால் எங்களுக்கு ஒருகுறைவுமில்லை. மகாரதரான எனதுபிதா தன் புத்திரர்களுடன்கூடிச் சத்துருக்களுடன் போர்செய்தால் கௌரவர்களெல்லோரையும் ஒருக்ஷணத்தில் ஸம்ஹாரம் செய்துவிடுவார். அவ்வாறே என் புருஷர்களான பாண்டவர்கள், குமாரன் அபிமன்யுவைமுன்னிட்டுக்கொண்டு எதிரிகளுடன் போர்தொடுத்தால், அவர்களை நிச்சயமாய் வதைத்துவிடுவார்கள். துச்சாதனன் கையானது வெட்டுப்பட்டுப் புழுதியில்விழுவதைப் பார்த்தா

லொழிய என் மனத்துக்குச் சமாதானம் உண்டாகாது. எனது நெஞ்சில் நெருப்பு எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கிறது. நன்மையை எதிர்பார்த்துக்கொண்டு பதின்மூன்றுவருஷங்களையும் கழித்தாய்விட்டது. அவ்வருஷங்கள் முடிந்தும் நெஞ்சுநெருப்புத் தணிவதற்கு யாதொரு உபாயத்தையும் காணேம். விருகோதரருடைய (பீமனுடைய) சபதம் நிறைவேறுவதற்கும் வழியொன்றையும் காணேம்'' என்று கூறினள்.

பருத்த நிதம்பத்துடனும் நீண்ட கண்களுடனும் கூடியவளான துரௌபதியானவள் இவ்வார்த்தைகளைச் சொல்லி நெருப்பே உருகி வழிவதுபோல் உஷ்ணமானகண்ணீரால் தனது பருத்த ஸ்தனங்களை நனைத்தாள். அப்பொழுது மகாபாஹுவான கிருஷ்ணன், "ஹே துரௌபதியே! கௌரவர்களின் ஸ்திரீகளழுவதை நீ அதிசீக்கிரமாகக் காண்பாய். நீ யெவ்விதமாயழுதாயோ அவ்விதமே குருகுலத்து ஸ்திரீகளும் தங்களுடைய பந்துக்கள் நாசமடைந்ததால் அழுவார்கள். நாம், யுதிஷ்டிரன் ஆணைப்படி பீமன், அர்ஜுனன், நகுலன், ஸஹதேவன் இவர்களுடன் கூடிக்கொண்டு கௌரவர்களை வதம்செய்யமுயல்வோம். திருதராஷ்டிரன் புத்திரர்கள் நமது வார்த்தையை யாதரிக்கமறுத்தால் அவர்கள் சீக்கிரமாகவே வதைக்கப்பட்டு நாய் நரிகளால் கௌவப்பட்டுத் தரையில் விழுந்துகிடப்பார்கள். ஹிமாசலம் அசைந்தாலும் பூமி உயர எறியப்பட்டாலும் ஆகாயமண்டலம் நக்ஷத்திரங்களுடன் கீழே விழுந்தாலும் நம் வார்த்தை பொய்யாகாது. ஹே! கிருஷ்ணே! கண்ணீரைத் துடைத்துக்கொள்வாயாக. நாம் உண்மையுரைத்தோம். உன் கணவன்மார் சத்துருக்களை வதைத்து ராஜ்யத்தையடைவதை நீ சீக்கிரமாகவே காண்பாய்'' என்று அவளைச் சமாதானப்படுத்தினர்.

இந்த வார்த்தையானது உதிரவெள்ளத்தைப் பெருக்கக் கூடியவனான துஷ்டன் வார்த்தையல்ல. பின்வருவனவற்றையெல்லாம் அறிந்துசொன்ன ஒரு மகான் வார்த்தையே. துரியோதனன் ராஜ்யத்தைப் பாண்டவர்களிடம் ஒப்புவித்துச் சமாதானமாய்ப் போக உடன்படமாட்டான் என்று தெரிந்துகொண்டே பகவான்

கிருஷ்ணன் தம் கடமையைச் செலுத்துவதற்காகவே கௌரவர்களின் சபைக்குச் சென்றார். காரியம் நிறைவேறினாலும் நிறைவேறாவிட்டாலும் கடமையைச் செய்தே தீரவேண்டும். லாபநஷ்டங்களை யொன்றாகவே கருதவேண்டும். இதையே ஸ்ரீகிருஷ்ணன் கீதையில் அர்ஜுனனுக்கு உபதேசித்தருளியிருக்கிறார்.

ஆதர்சயோகியான ஸ்ரீகிருஷ்ணன் பின்வருவதை நன்றாயறிந்துகொண்டே கௌரவர்களின் சபைக்குச் சென்றார்.

---

## ஐந்தாவது அதிகாரம்.

### கிருஷ்ணனது யாத்திரை.

தூதுசென்றகாலத்தில் கிருஷ்ணன் நடத்தைகளெல்லாம் மனிதர்களுக்கு உபயோகமானவை; ஸமயத்துக்குத் தகுந்தவை.

ஸ்ரீகிருஷ்ணன் கார்த்திகைமாதத்தில் ரேவதிநக்ஷத்திரம் கூடின சுபதினத்தில் மைத்திரமுகூர்த்தத்தில் கௌரவர்களிடம் போகும் உத்தேசத்துடன், பிராமணர்களின் மங்களவசனங்களைக் கேட்டும், காலைவேளையில் செய்யவேண்டிய அநுஷ்டானங்களை முடித்தும் ஸ்நாநம்செய்து நல்லவஸ்திரங்களையுடுத்துக்கொண்டும் ஆபரணங்களை யணிந்துகொண்டும் ஸூர்யனையும், அக்கினியையும் பூஜித்தார்; விருஷபத்தின்வாலைத் தரிசனஞ்செய்தும் பிராமணர்களை நமஸ்கரித்தும், அக்கினியை வலம்வந்தும் யாத்திரைக்குப் புறப்பட்டார்.

ஸ்ரீகிருஷ்ணன் ஆதர்சபுருஷராயிருந்ததால் பிராமணர்களிடம் எவ்விதம் வியவகாரம் செய்வது உசிதமோ அவ்விதமே வியவஹாரம் செய்தார். அக்காலத்திலிருந்த பிராமணர்களில் பெரும்பாலார், வித்வான்களாகவும், ஞானிகளாகவும், சுயநலத்தைக் கருதாதவர்களாகவும் தர்மாத்மாக்களாகவும் இருந்து ஜனஸமூகத்தின் நன்மையையே விரும்பிவந்தார்கள். ஆகையால் மற்றை மூன்று வருணத்தார்களும் அவர்களைப் பூசிப்பது நியாயமாயிருந்தது. ஸ்ரீகிருஷ்ணனும் அத்தகைய பிராமணர்களைப் பூசித்தார். வழியிடையே ரிஷிகளின் ஸமாகமத்தைப் பாரதத்தில் வருணித்திருக்கிறபடி இங்கே யெடுத்தெழுதுகிறோம்.

"மகாபாஹுவான கேசவர் கொஞ்சதூரம்சென்று வழியின் இருபக்கங்களிலும் பிரும்மதேஜஸினால் ஜ்வலித்துக்கொண்டிருக்கிற சிலமகருஷிகளைத் தரிசனஞ்செய்தார். அவர்களைக் கண்டவுடன் தேரிலிருந்து இறங்கி அவர்களை வணங்கி, அவர்களிடம் 'ஹே! மகருஷிகளே! நீங்கள் எல்லோரும் சௌக்கியமாயிருக்கிறீர்களா? தர்மம் செவ்வனே அநுஷ்டிக்கப்பட்டுவருகிறதா? க்ஷத்திரியர் முதலான மூன்றுவருணத்தாரும் பிராமணர்களின் ஆணைப்படி நடக்கிறார்களா? நீங்கள் எவ்விடமிருந்து தவத்தைச்செய்தீர்கள்? எவ்விடம் ஸித்தியையடைந்தீர்கள்? தங்களுக்கு யாது பயன் கிடைத்தது? நம்மால் தங்களுக்கு யாது செய்தல்வேண்டும்? நாம் எதற்காகப் பூமியில் அவதரித்திருக்கிறோம்?" என்று வினவினார்.

அப்பொழுது ஜாமதக்கினியர் ஸ்ரீகிருஷ்ணனை ஆலிங்கனஞ் செய்துகொண்டு, "ஹே! மதுசூதனரே! நாங்கள் தேவர்களுடைய கூட்டத்தை அநேகசமயங்களிற் கண்டிருக்கிறோம். இவ்வமயம் அரசர்களும் தங்களைப்போன்ற க்ஷத்திரியர்களும் கூடியுள்ள கூட்டத்தைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டிருக்கிறோம். கௌரவர்களின் சபையில் தங்களுடைய தர்மயுக்தங்களான வார்த்தைகளைக் கேட்க ஆசையுள்ளவர்களாக இருக்கிறோம். ஹே! யாதவசிரேஷ்டரே! பீஷ்மர், துரோணர், விதுரர் முதலான மகாத்மாக்களும் தாங்களும் எந்த ஹிதவசனங்களைச் சொல்வீர்களோ அவைகளைக் கேட்க மிகவும் விருப்பமுள்ளவர்களாயிருக்கிறோம். நீர் விரைந்து கௌரவராஜ்யத்துக்குச் செல்வீராக. சபைநடுவில் திவ்யமான ஆஸனத்தில் அமர்ந்து ஒளியுடன் விளங்குபவரான தங்களுடன் நாங்கள் உரையாடுவோம்" என்று சொன்னார்.

** ** ** ** **

இவ்விடத்தில் ஜாமதக்கினியரான பரசுராமர் ஸ்ரீகிருஷ்ணன் காலத்திலிருந்தாரென்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ராமாயணத்தில் அவரை இராமசந்திரரின் ஸமகாலத்தவராகச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் புராணங்களில், பரசுராமனும் இராமனும் ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்துக்கு முந்திய விஷ்ணுவவதாரங்களென வர்ணித்திருக்கிறது. புராணங்களிற் சொல்லப்பட்ட தசாவதாரங்கள் எவ்வளவுமட்டில் ஸங்கதம் என்பதைப்பற்றி வேறிடத்தில் ஆராய்வோம்.

ஸ்ரீகிருஷ்ணனது ஹஸ்தினபுரியாத்திரையைப்பற்றி மகா பாரதத்திலிருந்து மறுபடியும் எடுத்தெழுதுகிறோம்.

"தேவகிநந்தனர் எல்லாவிதமான பயிர்களும் நிறைந்தனவாயும் அழகியவையாயும், இன்பத்தைத் தருவனவாயும் உள்ள நெற் கழனிகளைப்பார்த்துக்கொண்டு அநேக நகரங்களையும், கிராமங் களையும் கடந்துசென்றார். அவரைத் தரிசனம் செய்யும்விருப்பத் துடன் ஜநங்கள் எல்லாவிதத்திலும் சௌக்கியத்தையும் சந்தோஷத் தையுமடைந்து உபப்லாவ்யநகரத்தைவிட்டு வழிநடுவில் வந்து தங்கி ஸ்ரீகிருஷ்ணனுடையவரவை யெதிர்பார்த்துக்கொண்டிருந் தார்கள். சிறிதுகாலத்துக்குள் ஸ்ரீகிருஷ்ணனும் வந்துசேர்ந் தார். அவர்கள் அவருக்கு முறைப்படி பூஜை செய்தார்கள். அப் போது சூர்யபகவான் தன்னுடைய கிரணங்களைச் சுருக்கிச் சிவந்த உருவெடுத்துக்கொண்டார். மதுசூதனன் ஒரு விருக்ஷத்தடியில் வந்துசேர்ந்து தேரைவிட்டிறங்கிக் குதிரைகளை யவிழ்த்துவிட உத்திரவிட்டுச் சந்தியோபாஸனையை அநுஷ்டிக்கத் தொடங்கினார். அவரது ஆணைப்படி தாருகனும் குதிரைகளை அவிழ்த்துவிட்டும், அவைகளுக்குச் செய்யவேண்டிய உபசாரங்களைச் செய்தும், விரும்பியவாறு திரியும்படி அவைகளை வெளியேவிட்டுவிட்டான். மகாத்மாவான மதுசூதனன் ஸந்தியாவந்தனத்தை முடித்துத் தமது வேலைக்காரர்களைப் பார்த்து "ஹே! பரிசாரகர்களே! யுதிஷ்டிரரின் நன்மைக்காக நாம் இங்கேயிரவைக் கழிப்போம்" என்று சொன்னார்.

பரிசாரகர்கள் அவருடைய விருப்பத்தையறிந்து படமாடம் அமைத்து உருசியுள்ள அன்னபான பதார்த்தங்களைச் சேகரித் தார்கள். அப்பொழுது ஸ்வதர்மத்தை அநுஷ்டிப்பவர்களாயும் பெரியோர்களாயும் இருக்கிற பிராமணர்கள் எல்லோரும் ஸ்ரீரிஷீ கேசர்பக்கம் வந்து அவரை யாசீர்வதித்தார்கள்; தங்கள் தங்கள் கிருகங்களுக்கு அவரை அழைத்தார்கள். பகவான் மதுசூதனரும் சம்மதித்து அவர்கள் கிருகங்களுக்குச் சென்றார். அவர்களால் அர்ச்சிக்கப்பெற்று அவர்களுடன் சிறிதுநேரம் உரையாடியிருந்து பிறகு தமது படமாடத்துக்கு வந்துசேர்ந்தார். பிறகும் பிராமணர்க ளுடன் பேசிவிட்டுச் சுவையுள்ள உணவை யுண்டு இன்பத்துடன் இரவைக் கழித்தார். இது மனிதசரித்திரமட்டுமன்று; ஆதர்ச புருஷரின்சரித்திரமுமாகும்.

அவரே ஈசுவரன் என்று நினைத்து ஒருவரும் அவருக்குப் பூசைசெய்யவில்லையென்று இதிலிருந்து தெரியவருகிறது. சிரேஷ்டரான புருஷருக்கு எவ்வாறு மரியாதைகள் நடக்குமோ அவ்வாறே அவருக்கும் வழிபாடுகள் நடந்தன. ஆதர்சபுருஷர் எவ்வாறு வியவஹாரம் செய்வாரோ அவ்வாறே அவரும் உரையாடினர்.

---

## ஆறுவது அதிகாரம்.

### ஹஸ்தினபுரியில் முதல்நாள்.

ஸ்ரீகிருஷ்ணன்வரவைக் கேள்வியுற்றுத் திருதராஷ்டிரன் அவரை வரவேற்பதற்கும் அவருக்குச் சன்மானம் செய்வதற்கும் சிறந்த ஏற்பாடுகளைச் செய்தான். பலவகை மணிகளால் இழைக்கப்பட்ட சபையொன்றை அமைப்பித்தான். அவருக்கு மரியாதை செய்வதற்காக யானைகளையும், குதிரைகளையும், காலாட்களையும், நூற்றுக்கணக்கான தாதிகளையும், குதிரைக்குட்டிகளையும், ரத்நமாலைகளையும் சேகரித்துவைத்திருந்தான்.

விதுரன் இவைகளைப் பார்வையிட்டுத் திருதராஷ்டிரனிடம், "நீர் தார்மிகர்; புத்திமான்; ஆனால் குதிரைமுதலியவற்றைக் கொடுத்து ஸ்ரீகிருஷ்ணனை ஏமாற்றமுடியாது. அவர் எந்தக் காரியத்துக்காக இங்கே எழுந்தருளியிருக்கிறாரோ அந்தக் காரியத்தை நிறைவேற்றிக்கொடுப்பீராக. அதனால்மட்டுமே அவர் திருப்தியடைவார். திரவியத்தைக் கொடுத்து அவரையேமாற்றவியலாது. அவ்வாறால் அவர் உமது வசமாகமாட்டார்" என்று கூறினான்.

திருதராஷ்டிரன் கொடியவன்; விதுரன் நல்லோன். அவ்விருவரிடமும் துரியோதனன், "கிருஷ்ணன் பூசிக்கத்தகுந்தவரே. அவருக்குப் பூசையொன்றும் இங்கே நடக்காது. யுத்தத்தை நடத்தாவிடில் அவருக்கு இங்கே என்னகாரியமிருக்கிறது? அவர் விஷயத்தில் நாம் என்ன செய்யவேண்டுமென்பதை முன்பே ஆலோசித்து ஸ்திரப்படுத்திபிருக்கிறோம். நாம் அவரைக் கட்டிப்

போடுவோம். பாண்டவர்களுக்குக் கிருஷ்ணனே உதவி. கிருஷ்ணனைக் கட்டிவிட்டால் பாண்டவர்கள் நம் வசமாவார்கள்'' என்று கூறினான்.

இதைக்கேட்டுத் திருதராஷ்டிரன் புத்திரனைத் திரஸ்கரித்தான். ஏனெனில், கிருஷ்ணன் தூதனாக வந்தவரன்றோ. பீஷ்மரும் துரியோதனனைப் பலபடியாக நிந்தித்துச் சபையைவிட்டு எழுந்து வெளியே சென்றார். நகரமக்களும் கௌரவர்களும் ஸ்ரீகிருஷ்ணனை மிக்கமரியாதையுடன் சபைக்கு அழைத்துவந்தார்கள். மணிமயமான சபையையும், ஆரதநக்குவியல்களையும் அவர் கண்ணெடுத்துப்பார்க்கவில்லை. அவர் திருதராஷ்டிரன் அரண்மனைக்குச்சென்று அங்குச் சற்றுநேரம் வீற்றிருந்து அதைவிட்டு ஒரு எளியோன் வீட்டுக்குச் சென்றார்.

திருதராஷ்டிரனுக்கு விதுரன் ஒருமுறையில் சோதரன். இருவரும் வியாஸருடைய ஔரஸபுத்திரர்கள். ஆனால் திருதராஷ்டிரன் விசித்திரவீர்யனுக்கு க்ஷேத்திரஜபுத்திரன். விதுரன் அப்படியில்லை. அவன் விசித்திரவீர்யன் பணிப்பெண்ணான ஒரு வைசிய ஸ்திரீயின் கருப்பத்தில் பிறந்தவன். அவனுக்கு ஜாதிநிர்ணயமில்லை. அப்படியிருந்தும் அவன் பரமதார்மிகன். ஸ்ரீகிருஷ்ணன் அரசனரண்மனையைவிட்டு விதுரன்வீட்டுக்குச் சென்று அவன் செய்த உபசாரத்தை ஏற்றுக்கொண்டார். பாண்டவர்களின் தாயும், கிருஷ்ணனுடைய அத்தையுமான குந்திதேவி, விதுரன்கிருகத்திலேயே வசித்துவந்தாள். வனத்துக்குப்போகும்போது பாண்டவர்கள் குந்திதேவியை விதுரனிடம் விட்டுப்போனார்கள். குந்திதேவியைக் கிருஷ்ணன் வணங்கினார். அவரை வாழ்த்தியபிறகு குந்திதேவியானவள், புத்திரர்களின் கஷ்டத்தையும், மருமகளுடைய வருத்தத்தையும் நினைந்து ஸ்ரீகிருஷ்ணனிடம் முறையிட்டழுதாள். கிருஷ்ணன் அவளுக்குரைத்த ஸமாதானவார்த்தை விலையற்றது. எவன் மனிதசரித்திர முழுவதையும் அறிந்தவனோ அவனைத்தவிர மற்றவனுக்கு அந்தவார்த்தையின் உண்மை விளங்காது.

ஸ்ரீகிருஷ்ணன், "துக்கம், சோம்பல், கோபம், ஹர்ஷம், பசி, தாகம், பனி, வெய்யில்: இவைகளைவென்று இந்திரிய ஸுகங்களை விலக்கி, வீரர்களுக்கு உசிதமான இன்பத்தில் பாண்டவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். பராக்ரமசாலிகளான சூரர்கள் அற்ப ஸுகத்தினால் ஒருக்காலும் சந்தோஷமடையார்கள். வீரர்கள் கிலேசம் நேரிட்டாலும் ஸுகம்வந்தாலும், அவைகளைப் பாராட்ட மாட்டார்கள். இந்திரியஸுகங்களில் ஈடுபட்டவர்கள் கஷ்டம் வந்த காலத்தில் துக்கத்தையடைவார்கள். அவர்களுக்கு ராஜ்யத்தில் விருப்பமும் வனவாஸத்தில் வெறுப்பும் ஏற்படும்" என்று கூறினார். தற்காலத்தில் ஹிந்துக்களுக்கு இவ்விஷயம் நன்றாய்ப் புலப்படாது. அவர்கள் புராண இதிஹாஸங்களைப் படிக்காமல் அயலார் இயற்றிய கட்டுக்கதைகளையே படித்துக் காலங் கழிக்கிறார்கள். இந்திரிய ஸுகங்களையே பெரிதென நினைத்துப் பக்ஷிகளைப்போல் உரையாடிக்கொண்டிருக்கிறார்கள். இது மிகவும் துக்ககரமான விஷயம்.

ஸ்ரீகிருஷ்ணன் குந்திதேவியிடம் மறுபடியும் "உங்கள் புதல்வர்கள் பகைவரைவென்று எல்லா உலகத்தையும் ஆட்சிசெய்து ஒப்பற்ற செல்வத்தையனுபவிப்பதை நீங்கள் காண்பீர்கள்" என்று கூறினார்.

சமாதானம் ஏற்படமாட்டாது; போரே நிகழும்; என்பதைக் கிருஷ்ணன் அறிந்திருந்தும் சந்திசெய்வதற்காக அவர் ஹஸ்தினாபுரிக்கு வந்தார். ஏனெனில் பயனிருந்தாலும் இல்லாவிட்டாலும் எந்தக் கடமையைச் செய்யவேண்டுமோ அதைப் பயனைக்கருதாமற் செய்யவேண்டும். இதையே ஸ்ரீகிருஷ்ணன் கீதையில் 'கர்மயோக'மென்று சொல்லியிருக்கிறார். போரைக்காட்டிலும் ஸமாதானமே மேலானது; எப்பொழுது ஸமாதானஞ்செய்யமுடியவில்லையோ, அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணனே போரில் வெறுப்புற்ற அர்ஜுனனையும் உற்சாகப்படுத்தி அவனுக்கு உதவியும் செய்தார். கீதையில் அவர் உபதேசித்தபடி அவரே பெரிய கர்மயோகி.

ஸ்ரீ கிருஷ்ணன் குந்திதேவியைவிட்டுப் பிரிந்து மறுபடியும் கௌரவர்களுடைய சபைக்குச் சென்றார். அங்கே அவர் வந்த

வுடன் துரியோதனன் அவரைப் போஜனத்துக்கழைத்தான்; அவர் அங்கீகரிக்கவில்லை. துரியோதனன் காரணத்தை வினவினன். ஸ்ரீகிருஷ்ணன் அவனுக்கு உலகநீதிகளை ஞாபகப்படுத்திக் "காரியத்தை முடித்தபிறகே தூதர்கள் பூஜையையாவது போஜனத்தையாவது ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆகையால் நாம் எதற்காக வந்திருக்கிறோமோ அந்தக்காரியத்தை முடித்தவுடன் உங்களுடைய பூஜையை ஏற்றுக்கொள்வோம்" என்று கூறினர். துர்யோதனன் அம்மட்டில் அமையாமல் மறுபடியும் அவரை உணவுகொள்ளும்படி வற்புறுத்தினன்.

அப்பொழுது அவர் 'பிரீதியுடன் அழைக்கப்பட்டாலாவது அல்லது வேறுவழியின்றி ஆபத்தையடைந்திருந்தாலாவது, ஒருவன், மற்றொருவனுற் கொடுக்கப்பட்ட போஜனத்தையேற்றுக் கொள்ளவேண்டும். நீங்கள் பிரீதியுடன் என்னைப் போஜனத்துக்கழைக்கவுமில்லை. நாமும் விபத்தையடையவில்லை. ஆகையால் நாம் எதற்காக உங்கள் அன்னத்தைப் புசிக்கவேண்டும்?' என்று சொன்னர்.

** ** ** ** **

ஸ்ரீகிருஷ்ணன் அதன்பின் கௌரவர்களின் சபையைவிட்டு விதுரன்கிருகத்துக்குச்சென்றார். அன்றிரவு விதுரனுடன் பலவிதமாய்ப் பேசிக்கொண்டிருந்தார். 'துரியோதனன் எவ்வாற்றானும் சமாதானமாதற்குடன்படமாட்டானுதலால் ஸ்ரீகிருஷ்ணன் ஹஸ்தினபுரிக்குவந்தது அநுசித'மென்று விதுரன் சொன்னன்.

"எவன் உலகமுழுவதையும் காலபாசத்திலிருந்து விடுவிக்க வல்லவனே, அவனுக்கே சிறந்த தர்மலாபமேற்படும். கஷ்டத்தை அடைந்தவர்களானபந்துக்களைவிடுவிப்பதற்கு எவன் முயலவில்லையோ அவனைப் பண்டிதர்கள் தீயவனென்று சொல்லுகிறார்கள். நல்லோர்கள் தங்கள் நட்பினர்களை அகார்யத்திலிருந்து விலக்கமுயலுவார்கள். துர்யோதனன் நமது ஹிதவசனங்களைக் கேட்டும் நம்மிடம் சந்தேகம்கொண்டால், அதனால் நமக்கு என்ன குறை? நாம் நல்லதை யுரைப்பதால் நமக்கு மகிழ்ச்சி ஏற்படும். நாமும் கடமையைச்செய்தவர்களாக ஆவோம். ஞாதிகளுக்குள்

கலகம் ஏற்படும்போது உறவினனாயிருந்தும் சமாதானம் செய்ய முயலாதவன் உறவினனாகமாட்டான்" என்று விதுரனுக்கு ஸ்ரீ கிருஷ்ணன் விடையிறுத்தார்.

ஸ்ரீ கிருஷ்ணன் பரஸ்திரீலோலனென்று உண்மை தெரியாதவர்கள் நினைக்கிறார்கள். இத்தேசத்தில் சிலர், அவரை மக்கட்கூட்டத்தைய‌ழிப்பதற்காக அவதரித்தவர் என்றும் வேறுசிலர், அவர் தம் காரியத்தை நிவேற்றுவதற்காகத் தீயகாரியத்தைச்செய்பவர் என்றும் நினைக்கிறார்கள். அது சரியன்று. அவர் உலகத்துக்கு நன்மையை நாடுபவர்களில் முன்னெண்ணத்தக்கவர். ஞானிகளுக்குட் சிறந்தவர்; தர்மோபதேசம் செய்வதில் நிகரற்றவர்; என்பதை யாவருந் தெரிந்துகொள்வதற்காகவே இதை யெடுத்தெழுதினோம்.

---

## ஏழாவது அதிகாரம்.

### ஹஸ்தினாபுரியில் இரண்டாவது தினம்.

மறுநாட்காலையில் துரியோதனனும், சகுனியும் விதுரன் வீட்டுக்குவந்து ஸ்ரீகிருஷ்ணனைக் கௌரவர்களின்சபைக் கழைத்துப்போனார்கள். பெரிய சபை கூடிற்று. நாரதர் முதலான தேவருஷிகளும் ஜாமதக்நியர் முதலிய பிரும்மருஷிகளும் அங்கே வந்து சேர்ந்தார்கள். ஸ்ரீகிருஷ்ணன், ஸமாதானமாகப் போகும்படி திருதராஷ்டிரனுக்கு மிகவும் அழகாகவும் கம்பீரமாகவும் உபதேசித்தார். ருஷிகளும் அவ்விதமே சொன்னார்கள். அவைகளால் பயனொன்றுமில்லை. தம்மால் ஒன்றும்முடியவில்லையென்று அவர்களையே நேரில் துரியோதனனுக்கு உபதேசம்செய்யும்படி திருதராஷ்டிரன் வேண்டிக்கொண்டான். கிருஷ்ணனும், பீஷ்மரும், துரோணரும், மற்றவர்களும் துரியோதனனுக்குப் பலவிதமாய்ப் புத்திசொன்னார்கள். அதனால் ஒருபயனும் ஏற்படவில்லை. ஆனால் துரியோதனன் ஸ்ரீகிருஷ்ணனை வாய்க்குவந்தபடி நிந்தித்தான். கிருஷ்ணன் கோபங்கொள்ளாமல் அவனுக்கு யுக்தமான பதில் வார்த்தைகளை உரைத்தார். அவனுடைய துர்நடத்தைகளையும் பாவச்செயல்களையும் அவனுக்கு எடுத்துக்காட்டினார். துரியோதனன் மிகவும் சினங்கொண்டெழுந்து சென்றான்.

அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் திருதராஷ்டிரனிடம் ஸகல உலகநீதிக்கும் எது முக்கியநோக்கமோ அதையநுசரித்துக் காரியங்களை நடத்தும்படி சொன்னார். மக்கட்கூட்டத்தைக் காப்பதற்காகக் குற்றவாளிகளைத் தண்டித்தலே ராஜ்யத்தை ஆளுவதன் முக்கியநோக்கம். மக்கட்கூட்டத்தைப் பாதுகாக்கக் கொலையாளிகளை வதைப்பது நியாயமே. துஷ்டனைத் தண்டியாவிடில் அவனது கொடிய செயல்களால் பல்லாயிரமுயிர்களுக்குத் தீங்குகள் ஏற்படக்கூடும். ஆதலால் ஸ்ரீகிருஷ்ணன், துரியோதனனைச் சிறையிட்டுப் பாண்டவர்களுடன் சமாதானம் செய்துகொள்ளும்படி திருதராஷ்டிரனைப் பல்லாற்றானும் கேட்டுக்கொண்டார். ஸ்ரீகிருஷ்ணன் யாதவர்களைக் காப்பாற்றுவதற்காகவே, தன் மாமனான கம்சனை வதைத்தார். துரியோதனன் உபதேசமொன்றையும் கிரகித்துக் கொள்ளவில்லை; அவன் சினங்கொண்டு பகவானைக் கட்டுவதற்காகக் கர்ணனுடன் ஆலோசிக்கத் தொடங்கினான்.

ஸபையில் ஸாத்தகி கிருதவர்மன் முதலான கிருஷ்ணனுடைய ஞாதிகளும் வந்திருந்தார்கள். ஸாத்தகியென்பான் கிருஷ்ணனைப் பின்தொடர்பவன்; அவரிடம் மிகவும் பிரீதியுடையவன்; அஸ்திரவித்தையில் அர்ஜுனனுக்குச் சிஷ்யன்; அவனுக்குச் சமமான வீரன்.

துரியோதனனுடைய தீயநினைவைத் தெரிந்துகொண்டு, யாதவ வீரர்களைப் படைகளுடன் அரண்மனைவாயிலில் இருக்கும்படி ஸாத்தகியேற்பாடுசெய்து ஸ்ரீகிருஷ்ணனிடம் தெரிவித்தான். திருதராஷ்டிரனிடம் சபையிலும் அறிவித்தான். அதைக்கேட்டுத் திருதராஷ்டிரன், "எவ்வாறு விட்டிற்பூச்சிகள் விளக்குகளில் விழுந்து நாசமடையுமோ அவ்வாறான நிலைமையே துரியோதனன் முதலியவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஸ்ரீஜனார்த்தனர் நினைத்தால் யுத்தகாலத்தில் எல்லோரையும் யமனுலகுக்கனுப்பிவிடுவார்" என்று கூறினான்.

ஸ்ரீகிருஷ்ணன் அதைக்கேட்டுக் கோபமடையவில்லை. அவர் கோபமற்றவர்; க்ஷமையுள்ளவர். திருதராஷ்டிரனிடம் அவர், "துரியோதனன் முதலானவர்கள் கூடிச் சதியாலோசனைசெய்து

நம்மை வலிந்து கட்டிவிட யோசிக்கிறார்கள். நாம் தனியே இவர்களெல்லோரையும் கட்டிவிடுவோம். ஆனால் நிந்திக்கக்கூடிய பாவத்தொழிலை நாம் ஒருக்காலும் செய்யமாட்டோம். உம்முடைய புத்திரர்கள், பாண்டவர்களின் ராஜ்யத்தில் ஆசை கொண்டு, தங்களுடைய, ஸம்பத்து முழுவதையும் இழக்கப்போகிறார்கள். அவர்கள் நம்மைக் கட்டிவிட உத்தேசித்திருக்கிறார்கள். இன்றைக்கே இவர்களெல்லோரையும் ஒழித்துப் பாண்டவர்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க நம்மால் முடியும். அப்படிச்செய்வதால் பாவமேற்படாது. ஆனால் நம் முன்னிலையில், கோபமும் தீய செயல்களில் முயற்சியும் கூடாது. துராத்மாவான துரியோதனனது யோசனைப்படியே காரியம் நடக்கட்டுமென்று நாமும் அநுமதி கொடுக்கிறோம்" என்று கூறினார்.

இதன்பிறகு திருதராஷ்டிரன் துரியோதனனை வரவழைத்து அவனைப் பலபடியாக நிந்தித்து அவனிடம் அவன் "நீ, மிகவும் தீயவன், துர்ப்புத்தியுள்ளவன், ஒருவருக்கும் அடங்காதவன், புகழற்றவன், பெரியோர்களால் இகழப்பட்டவன். குலத்தைக் கெடுக்கவந்தவனாய்த் தீயவர்களுடன் கூடிக்கொண்டு பகவான் ஜனார்த்தனரைக் கட்டிவிடமுயலுகிறாய். குழந்தையானது சந்திரனைப்பிடிக்க ஆசைப்படுவதுபோல், நீயும் தேவகணங்களாலும்கட்ட முடியாத ஸ்ரீகேசவனைக் கட்டநினைக்கிறாய். தேவர்கள், மனிதர்கள், கந்தருவர்கள், அஸுரர்கள், உரகர்கள், யாவரும்சேர்ந்து எவருடன் போர்செய்யமுடியாதோ, அந்த ஸ்ரீகிருஷ்ணனை நீ அறியாயா? குழந்தாய்! கைகளால் காற்றைப் பிடிக்கமுடியாது; கைத்தலங்களால் நெருப்பைத் தொடமுடியாது; தலையால் பூமியைத் தாங்கமுடியாது; அதுபோல் ஸ்ரீகேசவனையும் கட்டமுடியாது." என்று கூறினான்.

அதன்பின்னர் விதுரனும் துரியோதனனுக்குப் புத்திசொன்னான். ஸ்ரீவாஸுதேவன் அதைக்கேட்டவுடன் உரக்கச்சிரித்தார்; பிறகு ஸாத்தகியையும் கிருதவர்மாவையும் கையிற் பிடித்துக் கொண்டு ஸபையைவிட்டு வெளியேறினார்.

இதுவரையில் மகாபாரதத்தில் சொல்லியபடி பகவானுடைய விருத்தாந்தம், ஸங்கதமாயும் ஸ்வாபாவிகமாயும் இருக்கிறது. அதில் நம்பக்கூடாத விஷயம் யாதொன்றும் இல்லை. பிறகு ஸ்ரீ கிருஷ்ணன் விசுவரூபத்தையெடுத்தாரென்று நம்பக்கூடாத சங்கதி யொன்று காணப்படுகிறது.

** ** ** ** **

மூர்க்கனும் பயனற்ற செயலைச் செய்யவிரும்பமாட்டான். விசுவரூபத்தைக் காட்டுவதால் பகவானுக்குப் பயனென்றுமில்லை. துரியோதனன் முதலானவர்கள் பலாத்காரத்தை யுபயோகிக்க நினைத்ததைத் தவிர மற்றொரு முயற்சியையும் செய்யவில்லை. பிதாவினாலும் சிற்றப்பனாலும் திரஸ்கரிக்கப்பட்டும் துரியோதனன் பதிலொன்றும் சொல்லவில்லை. அவன் பலாத்காரம் செய்திருந்தாலும் அது பயனற்றதாக ஆயிருக்கும். ஸ்ரீகிருஷ்ணன் மகா பலசாலியாதலால் அவரை ஒருவரும் பலத்தைக்கொண்டு கட்டிவிட இயலாது. அவர் தற்காத்துக்கொள்ளமுடியாதவரென நினைத்தாலும், அவருடைய உதவிக்காக, ஸாத்தகியும், கிருதவர்மாவும், மற்றும் யாதவர்களும் ஸித்தமாய்க் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய படைகளும் அரண்மனைவாயிலில் நிறுத்தப்பட்டிருந்தன. துரியோதனன்சேனை அங்கே வைக்கப்பட்டதாகக் காணப்படவில்லை. ஆகையால் கிருஷ்ணனை வலிந்து பிணிக்கமுடியாது. கிருஷ்ணனும் பயங்கொள்ளியல்லர். அச்சத்தினாலாவது கோபத்தினாலாவது தற்புகழ்ச்சியினாலாவது அவர் விசுவரூபம் எடுத்துக்கொண்டார் என்று சொல்லவும் இடமில்லை. அவர் கோபமற்றவர்; ஆடம்பரமில்லாதவர்.

ஆகையால் இச்சமயம் ஸ்ரீகிருஷ்ணன் விசுவரூபமெடுத்தார் என்பது பொருந்தாது. அந்த விருத்தாந்தத்தை அஸங்கதமென்று நாம் தள்ளிவிடவேண்டும். மனுஷ்யசக்தியைக்கொண்டே அவர் எல்லாக்காரியங்களையும் சாதித்திருக்கிறார் என்பதை நாம் அடிக்கடி பார்த்திருக்கிறோம். இவ்விடத்தில் அவர் தெய்வசக்தியை யவலம்பித்தார் என்பதற்கு ஹேதுவொன்றுமில்லை.

கௌரவர்களின் சபையைவிட்டுக் குந்திதேவியுடன் சம்பாஷணைசெய்வதற்காகக் கிருஷ்ணன் சென்றார். அவளுடன் பேசிய பிறகு அவர் பாண்டவர்களின் வாசஸ்தானமாகிய உபப்லாவ்யநகரம் சென்றார். தாம் போகும்போது கர்ணனையும் தமது ரதத்திலேற்றி அழைத்துப்போனார். அவர் எதற்காகக் கர்ணனையழைத்துப் போனாரென்பதைப்பற்றி அடுத்த அதிகாரத்தில் கூறுவோம்.

சமாதானத்திலும், தண்டநீதியிலும் ஸ்ரீகிருஷ்ணனுடைய ஸாமர்த்தியத்தை நாம் கண்டிருக்கிறோம். பேதோபாயத்திலும் அவருக்கிருந்த அறிவை இவ்விடத்திற் காண்போம். தயை, எல்லாஜீவர்களுக்கும் ஹிதம்செய்தல், ஞானம்: இவைகளில் ஸ்ரீ கிருஷ்ணன் உலகத்திலே சிறந்தவர் என்பதைப்பற்றி நாம் விசேஷமாய்ச் சொல்லவேண்டுவதில்லை.

---

## எட்டாவது அதிகாரம்.

### ஸ்ரீகிருஷ்ணனுக்கும் கர்ணனுக்கும் ஸம்வாதம்.

ஸ்ரீகிருஷ்ணன் ஸர்வபூததயாபரர். பாரதமஹாயுத்தத்தில் ஜனங்கள் மடிவதைப்பார்த்து வேறு க்ஷத்திரியனொருவனும் வருத்தமடையவில்லை. ஸ்ரீகிருஷ்ணன்மட்டும் சோகத்தையடைந்தார். விராடநகரத்தில் யுத்தத்தைப்பற்றியபேச்சு முதன்முதல் வந்தபோதே ஸ்ரீகிருஷ்ணன் யுத்தஞ்செய்யலாகாதென்று தன்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்.

இந்த ஸமயத்தில் அர்ஜுனன் கௌரவர்களைப் போர்செய்ய அழைத்தான். ஸ்ரீகிருஷ்ணன் யுத்தத்தில் அஸ்திரமெடுப்பதில்லையென்றும் சண்டைசெய்வதில்லையென்றும் பிரதிஜ்ஞைசெய்தார். அப்படியிருந்தும் யுத்தமுயற்சி நின்றுவிடவில்லை. ராஜநீதியில் நிபுணரான ஸ்ரீகிருஷ்ணன் வேறொரு உபாயத்தைப்பற்றி யாலோசனைசெய்தார்.

கர்ணன் மகாவீரன்; அர்ஜுனனுக்குச்சமமான தேராளி; கர்ணனுடைய தோள்வலியாலேயே, துர்யோதனன் தன்னை வலியோனெனக் கருதினான். அவனுடைய உதவியை நம்பியே

துர்யோதனன் பாண்டவர்களுடன் போர்புரிய முன்வந்தான். கர்ணன் அவனுடைய கக்ஷியில் இல்லாவிட்டால் துரியோதனன் போர்தொடங்கியிருக்கவேமாட்டான். அந்தக் கர்ணனை ஸ்ரீகிருஷ்ணன் தமதுதேரின்மீ தேற்றிக்கொண்டார். கர்ணனுடன் உரையாடுவதும் அவருக்கு ஆவசியகமாயிருந்தது. மற்றவர்கள் அறியாதபடி இரகசியத்தில் ஸ்ரீகிருஷ்ணன் ஒரு சூழ்ச்சிசெய்தார்.

கர்ணன் ஒருதேர்ப்பாகன்மகனென்பது வெளிப்படை. ஆனால் அவன் உண்மையில் தேர்ப்பாகன்மகனல்லன்; அவனால் வளர்க்கப்பட்டவனே. தன்பிறப்பைக் கர்ணன் அறிந்திலன். தேர்ப்பாகன் மனைவியான ராதையின் கருப்பத்தில் அவன் ஜனிக்கவில்லை. குந்திதேவியின் கருப்பத்தில் உதித்தவன்; ஸூர்யனுடைய ஔரஸபுத்திரன்; குந்திதேவி கன்னிப்பருவத்தில் அவனைப்பெற்றாள். அதனால் அவன் பிறந்தவுடனேயே அவனைக் குந்திதேவி பரித்யாகம் செய்தாள். உண்மையாக அவன் யுதிஷ்டிரன் முதலிய பாண்டவர்களுடைய மூத்தசகோதரன். இந்த விருத்தாந்தம் குந்தியைத்தவிர மற்றொருவருக்கும் தெரியாது. ஸ்ரீகிருஷ்ணனுக்குமட்டும் தெரியும். அலௌகிகமான மதிவலியால் அவருக்கு எல்லாவிருத்தாந்தங்களும் நன்றாய்த் தெரியும். குந்திதேவி அவருக்கு அத்தையாவாள். இந்த விருத்தாந்தம் போஜராஜன் அரண்மனையில் நிகழ்ந்தது. ஸ்ரீகிருஷ்ணன் மானுஷபுத்தியைக் கொண்டே அதை யறிந்தாரென்பதில் வியப்பொன்றுமில்லை. தேரேறிப்போகும்போது கிருஷ்ணன் இந்த விருத்தாந்தத்தைக் கர்ணனுக் குரைத்தார். அவர் அவனிடம், கன்னியாயிருக்கும்போதே பிள்ளையைப்பெற்ற ஒருஸ்திரீயை எவன் விவாகம்செய்துகொள்கிறானோ அவனே அந்தக் 'கானீந' புத்திரனுடைய தந்தையென்று சாஸ்திரமறிந்தோர் சொல்லுகிறார்கள். ஹே! கர்ண! உனது தாயார் விவாகமாகாமல் கன்னிகையாயிருக்கும்போது நீ பிறந்தவன். நீ தர்மத்தால் பாண்டுவின்புத்திரனே. நீயே நியாயப்படி ராஜ்யத்துக்கு அதிபதியாவாய்'' என்றுகூறினார். கர்ணனே மூத்தவனாதலால் ராஜ்யம் அவனுக்கே உரியதென்றும், யுதிஷ்டிரன் முதலிய மற்றைப் பாண்டவர்கள் அவனுக்குக் கீழ்ப்படிந்து அவன் விரும்பிய பணிகளைச்செய்வார்களென்றும் ஸ்ரீகிருஷ்ணன் அவனுக்கு அறிவித்தார்.

ஸ்ரீகிருஷ்ணனுடைய இத்தகைய யோசனையால் எல்லோருக்கும் நன்மையுண்டாகும். முதலாவது கர்ணனுக்கு நன்மையேற்படும். அவன் ராஜ்யாதிபதியாவான்; உடன்பிறந்தாருடன் பகையொழிந்து வாழ்வான். இதனால் துரியோதனனுக்கும் நன்மையேற்படும். ஏனெனில் போர்நிகழ்ந்தால் துரியோதனன் ராஜ்யத்தை இழப்பதுமன்றிக் கிளையுடன் மடியவேண்டியிருக்கும். போர் நிகழாதொழியின் துரியோதனனது ராஜ்யமும் நிலைக்கும்; பாண்டவர்க்குரிய பாகத்தைமட்டும் அவன் திருப்பிக்கொடுக்க வேண்டியிருக்கும். இதனால் பாண்டவர்களுக்கும் நன்மையேற்படும். அவர்களுடைய தர்மம் ஓங்கி வளரும்; போரென்னும் கொடியதொழிலில் அவர்கள் இறங்காமல் தம்மினத்தைக் காத்ததாகும். அவர்கள் மூத்தசகோதரனை கர்ணனுடன்கூடி ராஜ்யத்தையும் அனுபவிக்கலாம். ஸ்ரீகிருஷ்ணனுடைய ஆலோசனையால் வரக்கூடிய விசேஷமான நன்மையென்னவென்றால் எண்ணிறந்த மக்களுயிர் மடியாமல் காக்கப்படுவதே.

கர்ணனும் கிருஷ்ணனுடைய வார்த்தைகளை அங்கீகரித்துக்கொண்டான். போரில் துரியோதனன் மடிவானென்பது அவனுக்குத் தெரியும். ஸ்ரீகிருஷ்ணனுடைய வார்த்தைக்குக் கர்ணன் உடன்பட்டால் அவன் பெரிய தவறுடையவனாவான். அவன் தேர்ப்பாகனாலும் அவன் மனைவியாலும் வளர்க்கப்பெற்று அவர்களையடுத்துத் தேர்ப்பாகன்குலத்திலேயே அவன் விவாகஞ் செய்துகொண்டு புத்திரபௌத்திரர்களையும் பெற்றிருந்தான். அவர்களை விட்டுவிடுவது அவனால் முடியாதகாரியம். அவன் பதின்மூன்றுவருஷகாலம் துரியோதனனையடுத்துப் பிழைத்தான்; ராஜ்யமும் அவனுக்குத் துரியோதனனால் கொடுக்கப்பட்டது; துரியோதனனும் அவனையே நம்பியிருந்தான். அவன் இவ்வமயம் பாண்டவர்களுடன் சேர்ந்தால் உலகமே அவனை நிந்திக்கும். ஜனங்கள் அவனை நன்றிகெட்டவனென்றும் பேராசையுள்ளவனென்றும் பயங்கொள்ளியென்றும் பலவிதமாக நிந்திப்பார்கள். ஆகையால் கர்ணன் ஸ்ரீகிருஷ்ணன்வார்த்தைக் குடன்படவில்லை.

ஸ்ரீகிருஷ்ணன் அவனிடம் "நம்முடைய வார்த்தை உன் மனத்துக்கு எப்பொழுது ஒத்ததாகவில்லையோ அப்பொழுதே பூமிக்கு அழிவுகாலம் கிட்டிவிட்டது" என்று சொன்னார்.

கர்ணன் பொருத்தமான மறுமொழிகளைச் சொல்லி ஸ்ரீகிருஷ்ணனை யிறுகத்தழுவி வருத்தத்துடன் அவரை விட்டுப்பிரிந்தான். கிருஷ்ணனுடைய சரித்திரத்தைத் தெரிந்துகொள்வதற்குக் கர்ணனுடைய சரித்திரத்தை விரித்து ஆலோசித்தல் பிரயோசனமற்றதாகையால் அதைப்பற்றி நாமொன்றும் விசேஷமாய்ச் சொல்லவில்லை. கர்ணன் சரித்திரம் மிகவும் பெரியது; மனோஹரமானது.

---

## ஒன்பதாவது அதிகாரம்.

### உபஸம்ஹாரம் (முடிவு)

ஸ்ரீகிருஷ்ணன் உபப்லாவ்யநகரத்தை அடைந்தவுடன் யுதிஷ்டிரன் ஹஸ்தினாபுரியில் நடந்த விருத்தாந்தங்களைப்பற்றி அவரைக் கேட்டான். அவர் அவைகளைப்பற்றிச் சுருக்கமாகச் சொன்னார்.

இவ்வளவில் ஸ்ரீகிருஷ்ணனுடைய யாநவிருத்தாந்தம் முற்றுப்பெற்றது. அதன்பிறகு இருகக்ஷிக்காரர்களும் படைதிரட்டத் தொடங்கினார்கள். இந்தச்சமயத்தில் விசேஷமான விருத்தாந்தங்கள் ஒன்றும் நிகழவில்லை. ஸ்ரீகிருஷ்ணனைக்குறித்த கதைகள் கொஞ்சமேயிருக்கின்றன.

ஸ்ரீகிருஷ்ணனும் அர்ஜுனனும் விரும்பியவாறு யுதிஷ்டிரன் திருஷ்டத்யும்நனைப் படைத்தலைவனாக நியமித்தான். பலராமன், கள்ளைவிரும்பியமட்டும் குடித்துவிட்டுக் கௌரவர்களையும் பாண்டவர்களையும் கிருஷ்ணன் ஸமமாகக் கருதவில்லையென்று அவரை வாய்க்குவந்தபடி வைதான். வேறு விசேஷமொன்றுமில்லை.

அதன்பிறகு உலூகாகமனபர்வாத்தியாயம். இதில் இருகக்ஷிக்காரர்களும் ஒருவரையொருவர் நிந்தித்துக்கொள்வதைத் தவிர வேறொரு செய்தியும் காணப்படவில்லை. துரியோதனன் உலூகனைப் பாண்டவர்களிடம் அனுப்பினான். அவன் அங்கே

சென்று பாண்டவர்களையும் கிருஷ்ணனையும் மிகவும் நிந்தித்தமையால் பாண்டவர்களும் அவனை நன்றாக வைதார்கள். கிருஷ்ணன் கோபமற்றவராதலால் உலூகனை நிந்திக்கவில்லை. கலகம் ஏற்படுமுன் அவர் உலூகனிடம் சிலவார்த்தைகளையுரைத்து அவனை அனுப்பினார். அவர் அவனிடம் "நீ சீக்கிரமாக வெளியேறிப்போய்த் துரியோதனனிடம் சேர்வாயாக; பாண்டவர்கள் உங்களுடைய வார்த்தையை நன்றாய்க்கேட்டு அதன் பொருளையும் அறிந்துகொண்டார்கள். உங்களுடைய இஷ்டப்படி நடக்கலாமென்றும் சொன்னார்கள் என்று சொல்லுவாயாக" என்று கூறினார். உலூகன் தனது தீமதியைவிடவில்லை. மறுபடியும் பாண்டவர்களையும் கிருஷ்ணனையும் நிந்திக்கத்தொடங்கினான். ஸ்ரீகிருஷ்ணன் சினங்கொள்ளாமல் அவனைநோக்கி "நாம் அர்ஜுனனுக்குத் தேரோட்ட இசைந்திருக்கிறோம். நாம் போர்செய்வோமென்று துரியோதனன் அஞ்சவேண்டாம். நாம் போர்செய்வதில்லையென்று துரியோதனனிடம் தெரிவிப்பாயாக. நெருப்பு தன்பால்விழுந்த துரும்புகளை எவ்வாறு சாம்பலாய்த் தீய்த்துவிடுமோ அவ்வாறே நாம் கடைசிக்காலத்தில் எல்லா அரசர்களையும் நாசம்செய்வோம். இதிற் சந்தேகமொன்றுமில்லை" என்று கூறினார்.

உலூகபர்வாத்தியாயத்தில் மகாபாரதக்கதைக்கு யாதொரு பயனுமில்லை. இந்த அத்தியாயத்தில் வாக்கியங்களின் அழகாவது கவியின் ஸாமர்த்தியமாவது யாதொன்றுமில்லை. அநேக இடங்களில் மகாபாரதக்கதைக்கு முழுதும் விரோதமான செய்திகளும் காணப்படுகின்றன. அநுக்ரமணிகாத்தியாயத்தில், சஞ்சயன் தூதைப்பற்றியும் கிருஷ்ணன் ஹஸ்தினபுரம் சென்றதைப்பற்றியும் குறிக்கப்பட்டிருக்கிறது. உலூகவிருத்தாந்தம் அதிற் காணப்படவில்லை. இந்தக்காரணங்களால் இவ்வத்தியாயம் மகாபாரதத்தின் முதற்பெருகுதியைச் சேர்ந்ததில்லை என்று நாம் நிச்சயம்செய்கிறோம்.

இதன்பிறகு சமாதர், அதிரதர், மகாரதர், முதலானவர்களுடைய கணக்கு எடுக்கப்பட்டது. அதன்பிறகு அசுவோபாக்கியான பர்வாத்தியாயம். இந்த அத்தியாயங்களில் கிருஷ்ணனுடைய விருத்தாந்தம் யாதொன்று மில்லை. இவ்வளவில் உத்தியோகபர்வம் முடிவுபெற்றது.

## ஆருவது கண்டம்.

### குருக்ஷேத்திரம்.

யோ நிஷண்ணோ பவேத்ராத்ரௌ திவா பவதி விஷ்டித꞉ ।
இஷ்டாநிஷ்டஸ்ய ச த்ரஷ்டா தஸ்மை த்ரஷ்டாத்மநே நம꞉ ॥

(சாந்திபர்வம். 41-வது அத்தியாயம்.)

எவர் இரவிலும் பகலிலும் வீற்றிருக்கிருரோ, இஷ்டம் அநிஷ்டம் இவைகளைச் சாக்ஷியாகப் பார்த்துக்கொண்டிருக்கிருரோ அந்தத் திருஷ்டாத்மாவான பகவானை வணங்குகிறோம்.

### முதல் அதிகாரம்.

*பீஷ்மருடைய போர்.*

குருக்ஷேத்ரமகாயுத்தத்தை மகாபாரதத்தில் நான்கு பர்வங்களில் வர்ணித்திருக்கிறது. துர்யோதனனுடைய படைத்தலைவர் பெயர்களாலேயே, கிரமமாக பீஷ்மபர்வம், துரோணபர்வம், கர்ணபர்வம், சல்யபர்வம் என்று இந்நான்கு பர்வங்களுக்கும் பெயர்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்தப் பர்வங்களை மகாபாரதத்தில் தாழ்ந்ததான பகுதியென்று குறிக்கவேண்டியிருக்கிறது. புனருக்திகளும், ருசியற்ற வர்ணனைகளும், அத்யுக்திகளும் முதலிய தோஷங்கள் இவைகளில் நிரம்பக் காணப்படுகின்றன. எந்த அம்சங்கள் 'மௌலிக'ங்களென்றும், எவை 'அமௌலிகங்க'ளென்றும் நிச்சயம்செய்தல் மிகவும் அரிது. எவ்விடத்தில் முட்கள் மிகுதியோ, அவ்விடத்து மலர்கொய்வது அசாத்தியமாயிருக்கும். அவற்றுள் எவ்விடங்களில் கிருஷ்ணசரித்திரம் காணப்பெறுகிறதோ அவ்விடங்களை இதைப் படிப்போர்க்குத் தெரிவிப்போம்.

பீஷ்மபர்வத்தின் முதலத்தியாயம் ஜம்பூகண்ட பர்வாத்தியாயம் என்பது. அதில் யுத்த சம்பந்தமான விஷயமே கிடையாது. கிருஷ்ணனைப்பற்றிய கதை யாதொன்றுமில்லை. அதன்பிறகு பகவத்கீதாபர்வாத்தியாயம். இந்த அத்தியாயத்தில் 14. சர்க்கங்களுக்குப் பிறகே பகவத்கீதை தொடங்கப்பெறுகிறது. இந்த 14

சர்க்கங்களில் கிருஷ்ணசரித்திரசம்பந்தமான கதைகள் விசேஷமாயில்லை. போர் தொடங்குமுன் ஸ்ரீ துர்க்காதேவியைத் தோத்திரம் செய்யும்படி அர்ஜுனனுக்கு ஸ்ரீகிருஷ்ணன் கட்டளையிட்டார். ஆனால் அவன் போர்தொடங்கியபிறகே அவ்வாறுசெய்தான். ஏதாவது முக்கியமானகாரியத்தைத் தொடங்கும்போது இஷ்டதேவதையை ஆராதனம்செய்தே அந்தக்காரியத்தில் பிரவர்த்திக்கவேண்டும். அதனாலே ஸர்வேசுவரனை ஆராதனைசெய்ததாக ஏற்படும். ஈசுவரன் ஒருவனே.

அதன்பிறகு பகவத்கீதை. இதுவே கிருஷ்ணசரித்திரத்தின் முதலாவது அம்சம். கீதையில் உபதேசிக்கப்பெற்றதும் நிகரற்றதும் பரிசுத்தமானதும் ஆன தர்மத்தின் பிரசாரமே, ஸ்ரீகிருஷ்ணனது மகிமையை நமக்குத் தெரிவிக்கிறது.

ஆனால் கீதையைப்பற்றி நாம் இங்கே ஒன்றும் சொல்லப்போவதில்லை. கீதையில் உபதேசிக்கப்பெற்ற தர்மங்களைப்பற்றி நாம் தனிநூலொன்றெழுதி வெளியிட்டிருக்கிறோம். கீதையைப்பற்றிய நமது அபிப்பிராயத்தை அந்தநூலிற் காணலாம்.

பகவத்கீதாபர்வாத்யாயத்தின்பின் பீஷ்மபர்வாத்தியாயம். போரில் ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுடைய ஸாரதியாகமட்டும் இருந்தார். ரதிகர்கள் ஒருவரோடொருவர் போர்செய்யும்போது முதலில் சாரதியையோ குதிரைகளையோ வதைக்கமுயலுவார்கள். குதிரைகளோ சாரதிகளோ இறந்துவிட்டால், தேர் அசையாது; தேராளிக்கு ஆபத்து நேரும். சாரதிகள் போர்செய்யாவிட்டாலும், யாதொருகுற்றமுமின்றிக் கொல்லப்படுகிறார்கள். கிருஷ்ணனும் அந்த நிலைமையையே அனுபவித்தார். போரில் அவர் கொல்லப்படாவிட்டாலும், 18-நாள் போரிலும் அவர் பல காயங்களையடைந்தார். சாரதிகளால் தற்காத்துக்கொள்ளமுடியாது. அவர்கள் க்ஷத்திரியர்களல்லர்; பெரும்பாலும் அவர்கள் வைசியர்களே. ஸ்ரீகிருஷ்ணன் அம்பைக் கையிலெடுத்துத் தன்னைக் காத்துக்கொள்ளக்கூடியவராயிருந்தாலும், அவர் தம் கடமையைச் செலுத்துவதற்காகவே, இவ்விதமான துன்பத்தையடைந்தார். மகாபாரத யுத்தத்தில் அவர் அஸ்திரமேயெடுப்பதில்லையென்று செய்த

பிரதிஜ்ஞையை இப்போதும் ஞாபகப்படுத்துகிறோம். ஆனால் அவரும் ஒருநாள் அஸ்திரத்தை எடுக்கநேர்ந்தது; ஆனால் அதைப் பிரயோகம் செய்யவில்லை. அந்த விருத்தாந்தம் இதுவே.

பீஷ்மர் படைத்தலைவனாய் நின்று போரைநடத்தினார். அர்ஜுனனையொழிய வேறொருவனும் அவருடன் எதிர்த்துப் போராட முடியவில்லை. பீஷ்மர் போரில் நிகரற்றவர். அர்ஜுனன் முழு மனத்துடன் அவரோடு போர்செய்யவில்லை; பீஷ்மர் அவனுக்குப் பிதாமஹராவார். அவரே தகப்பனற்ற பாண்டவர்களைக் குழந்தைப்பருவமுதல் தகப்பனைப்போலிருந்து பரிபாலித்துவந்தார். பீஷ்மர் எதிர்க்கக்ஷியிலிருந்து யுத்தம்செய்தாலும், முந்திய விருத்தாந்தங்களை நினைத்துக்கொண்டு அவரைக் கொலைசெய்ய அர்ஜுனன் விரும்பவில்லை. பீஷ்மர் தம் நிகரற்ற வலிமையால் எண்ணிறந்த பாண்டவஸைந்யங்களை வதஞ்செய்தார். இதைப்பார்த்து ஸ்ரீகிருஷ்ணன் கையில் சக்கிராயுதத்தையெடுத்துக்கொண்டு தேரைவிட்டிறங்கிப் பீஷ்மரைநோக்கி விரைந்து ஓடினார்.

அதைக்கண்டு கிருஷ்ணபக்தரான பீஷ்மர் மிகவும் சந்தோஷமடைந்து,

> 𑌏𑌹𑍍𑌯𑍇𑌹𑌿 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵 𑌜𑌗𑌨𑍍𑌨𑌿𑌵𑌾𑌸
> 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇 𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌗𑌦𑌾𑌸𑌿𑌪𑌾𑌣𑍇।
> 𑌪𑍍𑌰𑌸𑌹𑍍𑌯 𑌮𑌾𑌂 𑌪𑌾𑌤𑌯 𑌲𑍋𑌕𑌨𑌾𑌥
> 𑌰𑌥𑍋𑌤𑍍𑌤𑌮𑌾𑌦𑍍𑌭𑍂𑌤𑌶𑌰𑌣𑍍𑌯 𑌸𑌂𑌖𑍍𑌯𑍇॥

"ஹே! தேவர்களுக்குந்தேவரே! எல்லாஉலகத்துக்கும் ஆச்சிரயமானவரே! சார்ங்கம், கதை, கத்தி இவைகளைக் கைகளில் தரித்துக்கொண்டவரே! உமக்கு நமஸ்காரம்; ஹே! லோகநாதரே! ஸர்வபூதசரண்யரே! போரில் எனது ரதத்திலிருந்து என்னைக் கீழே வீழ்த்திவிடும்" என்று கூறினார்.

அர்ஜுனன் ஸ்ரீகிருஷ்ணனைத் தொடர்ந்துசென்று, அவரைச் சமாதானஞ்செய்து தன்னால் முடிந்தமட்டில் போர்செய்வதாக உறுதிகூறித் திருப்பியழைத்துவந்தான்.

இதே விருத்தாந்தம் மூன்றுநாட்போரில் ஒருதடவையும், ஒன்பதாநாட்போரில் மற்றொரு தடவையும் நிகழ்ந்ததாகவுமிருக்கிறது. இந்த ஒரு சுலோகமே இரண்டுதடவைகளிலும் காணப்படுகிறது. இதனால், ஒரேநாளில் நிகழ்ந்த விருத்தாந்தத்தையே இரண்டுநாட்களிலும் நடந்ததாக, மறதியினாலேயோ அல்லது வேண்டுமென்றோ எழுத்தாளன் வரைந்திருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

மகாபாரதத்திற் காணப்படுகிறபடி இந்தக்கதையின்'ரசனை'யிலிருந்து, இது முதற்றொகுதியைச் சார்ந்ததென்று தெரியவருகிறது. வசனநடையானது, கம்பீரமுள்ளதாயும், ஸரளமானதாயும் இருக்கிறது. ஆகையால் இது'மௌலிக'விருத்தாந்தமென்று தெரியவருகிறது.

இந்தவிருத்தாந்தத்தைக்கொண்டு ஹரிகதைசெய்கிற பாகவதர்கள் 'ஸ்ரீகிருஷ்ணன் பக்தபராதீனன், பக்தனது பிரதிக்ஞையை நிறைவேற்றுவதற்காகத் தன்னுடைய பிரதிக்ஞையையும் விட்டுவிட்டார்' என்று அவருடைய மகிமையைக் கீர்த்தனம் செய்கிறார்கள். கிருஷ்ணன்முன்னிலையிலேயே பீஷ்மர், "நீர் போரில் படையெடுப்பதில்லையென்று பிரதிக்ஞைசெய்திருக்கிறீர். ஆனால் நான் உம்மைப் படையெடுக்கச்செய்வேன்" என்று சபதம் செய்தார். பக்தவத்ஸலனான கிருஷ்ணன் தன் பிரதிக்ஞையை நிறைவேற்றாவிட்டாலும், பக்தனுடைய சபதத்தையே நிறைவேற்றினார்!

பீஷ்மருடையபிரதிக்ஞை மூலபாரதத்திற் காணப்படவில்லை. ஸ்ரீகிருஷ்ணன் தன் பிரதிக்ஞைக்கு மாறாக நடக்கவில்லை. போர்த்தொழில்செய்வதில்லையென்பதுதான் அவருடைய பிரதிக்ஞை. துரியோதனனும் அர்ஜுனனும் உதவியைவேண்டி அவரிடம் சென்றபோது, தாம் இருவரிடமும் சமமாயிருக்கவேண்டுமென்றே அவர்களின் இஷ்டப்பிரகாரம் ஒருவனை 'அற்புதநாராயணம்' என்ற படையை அழைத்துப்போகும்படிக்கும், மற்றவன் தம்மைக்கூட்டிப்போகும்படிக்கும் அவர் உத்திரவிட்டார்.

'அயுத்யமாநஸ்ஸம்க்ராமே ந்யஸ்தஸஸ்த்ரோஹமேகத:'

(நான் அஸ்திரங்களைக் கீழேவைத்துவிடுவேன்; போர்புரிய மாட்டேன்) என்பதுதான் அவருடைய பிரதிக்ஞை. அவர் போர் செய்யவேயில்லை; பிரதிக்ஞையைக் காப்பாற்றினர். போர்புரிய விரும்பாத அர்ஜுனனை உற்சாகப்படுத்துவது பாகனுன கிருஷ்ணன்கார்யமே. அவருடைய எண்ணம் நிறைவேறியது.

** ** ** ** **

போரில் ஒன்பதாநாளிரவில், பீஷ்மர் தோல்வியடையவில்லையென்பதைத்தெரிந்து, யுதிஷ்டிரன் பீஷ்மரை எவ்வாறு வதைப்பதென்று தன்னுடைய சுற்றத்தாருடன் ஆலோசனைசெய்தான். ஒரு யோசனையையும் அவர்கள் சொல்லவில்லை. பிறகு சகோதரர்களையும் ஸ்ரீகிருஷ்ணனையும் அழைத்துக்கொண்டு பீஷ்மரிடம்சென்று அவரிடமிருந்தே அவரைக் கொல்வதற்குரிய உபாயத்தைத் தெரிந்துகொள்ளவிரும்பி அவரை வணங்கிக்கேட்டான். மகாத்மாவான பீஷ்மர் தம்மை வதைத்தற்குரிய உபாயத்தைத் தாமே தெரிவித்தார். அந்த உபாயத்தால் அவர் கொல்லப்பட்டார். அர்ஜுனன் அவரைச் சரங்களாலான படுக்கையில் படுக்கவைத்தான். மூலமகாபாரதத்தின்பிறகு இரண்டாவதுதொகுதியை யியற்றிய எழுத்தாளன், "சிகண்டி"யின்விருத்தாந்தமென்று பயனற்றதான ஒரு பொய்க்கதையைத் தொகுத்திருக்கிறுன். கிருஷ்ணன் சரித்திரத்திற்கும் அதற்கும் சம்பந்தம் ஒன்றுமில்லை. ஆகையால் அதைப் பற்றி நாம் பரிசீலனைசெய்யவில்லை.

---

## இரண்டாவது அதிகாரம்.

### ஜயத்ரதன் வதம்.

பீஷ்மருக்குப் பிறகு துரோணுசாரியர் படைத்தலைவராக நியமிக்கப்பட்டார். கிருஷ்ணன் விசேஷமானகாரியமொன்றும் செய்ததாகத் துரோணபர்வத்தின்ருெடக்கத்திற் காணப்படவில்லை. அவர் தேர்ப்பாகனுயிருந்து ஒழுங்காகச் சாரத்தியமே செய்து வந்தார். குருக்ஷேத்திரயுத்தத்தை அவரே நடத்தினவரென்ற பேச்சு உண்மையன்று. யுதிஷ்டிரனுக்கும் அர்ஜுனனுக்கும் நல்லஉபதேசங்களைச்செய்ததைத் தவிர அவர் வேருென்றுசெயலும்

செய்யவில்லை. துரோணாபிஷேகபர்வாத்தியாயத்தில் கிருஷ்ணனுடைய வலியையும் வீர்யத்தையும் மகிமையையும் சஞ்சயன் கீர்த்தனம்செய்த நீண்டதோர் உபந்நியாஸம் காணப்படுகிறது. அதனால் நமக்கு ஒருபிரயோசனமு மில்லை. நாம் கிருஷ்ணன்செய்த காரியங்களையே பரிசீலனை செய்வோம். துரோணபர்வத்தில் பகதத்தனுடைய வதத்தில் கிருஷ்ணன் காரியம் ஒன்றுமில்லை. பகதத்தன் மகாவீரன்; பாண்டவர்களைச்சார்ந்தவனில்லை. அர்ஜுனனைத்தவிர வேறொருவனும் அவனுடன் போர்புரியமுடியாது. அர்ஜுனன் போர்செய்தபோது பகதத்தன் வைஷ்ணவாஸ்திரத்தை அவன்மேல் ஏவினான். அந்த அஸ்திரத்தை ஒருவராலும் தடுக்க முடியவில்லை. அந்த அஸ்திரம் அர்ஜுனன்மீது தாக்காமல் அவனை மறைத்துக் கிருஷ்ணன் அதைத் தம் மார்பின்மேல் தாங்கிக்கொண்டார். அது 'வைஜயந்தி'மாலையாக மாறி அவர் கழுத்தில் விளங்கியது.

இந்த அஸ்திரவிருத்தாந்தம் இயற்கைக்கு விரோதமாயிருத்தலால் இதைத் தள்ளிவிடவேண்டும்.

துரோணபர்வத்தில் அபிமன்யுவதத்தின்பிறகு கிருஷ்ணனைச் செயலில் இறங்குகிறவராகக் காண்கிறோம். ஏழு தேராளிகள் ஒன்றுகூடி அபிமன்யுவை அக்கிரமமாகக்கொன்றபோது கிருஷ்ணனாவது அர்ஜுனனாவது யுத்தகளத்தில் இருக்கவில்லை. அவர்கள் அச்சமயம் 'அற்புதநாராயணம்' என்ற சேனையுடன் போர்செய்துகொண்டிருந்தார்கள். இந்த 'அற்புதநாராயணம்' என்ற படை கிருஷ்ணனால் துரியோதனனுக்கு உதவியாகக் கொடுக்கப்பட்டதென்பதை இதைப்படிப்போர்கள் அறிவார்கள்.

போர்முடிந்து கிருஷ்ணனும் அர்ஜுனனும், இரவு அவர்களிடத்துக்குத் திரும்பிவந்தபிறகே அபுமன்யு மடிந்தானென்ற சமாசாரம் அவர்களுக்குத் தெரியலாயிற்று. அபிமன்யுவென்பான் அர்ஜுனனுடைய புதல்வனென்றும் கிருஷ்ணனுடைய மருகனென்றும் இதைப்படிப்போர்கள் அறிவார்கள். அர்ஜுனன் மிகவும் வருந்தினான்; ஆனால் கிருஷ்ணன் சோகமோகங்களைக்கடந்தவராதலால், துக்கப்படவில்லை. அவருக்கு அர்ஜுனனைச் சமாதானப்

படுத்துவதான காரியம் ஏற்பட்டது. அவர் எந்த வார்த்தைகளால் அர்ஜுனனைச் சமாதானப்படுத்தினாரோ அவை மிகவும் உபயோக மானவை. கீதையில் எந்தத்தர்மத்தை அவர் உபதேசஞ்செய்திருக் கிறாரோ அந்தத் தர்மத்தோடுகூடிய மகாவாக்கியத்தின் மூலமாகவே அர்ஜுனனுடையசோகத்தை நீக்கினார். மகருஷிகளும் அவ்விடம் வந்து யுதிஷ்டிரனிடம் "மனிதர்கள் இறப்பது இயல்புதான், அதைப்பற்றி வருத்தமடையக்கூடாது" என்று ஆறுதலுரைத் தார்கள். கிருஷ்ணன் அர்ஜுனனிடம் அவ்வாறு சொல்லவில்லை. போரில் இறப்பதே க்ஷத்திரியர்களுக்கு மேன்மை; அதுவே அவர்க ளுடைய ஸநாதநதர்மம் என்று பகவான் உரைத்தார்.

புதல்வனிறந்தமையால் துக்கக்கடலில் மூழ்கிக்கிடந்தவளான சகோதரி சுபத்திரைக்கும் கிருஷ்ணபகவான் இந்தச் சமாதான வார்த்தைகளைச் சொல்லி அவளைத் தேற்றினார். அவை:

"நல்லகுலத்திற்பிறந்தவர்களாயும், தைர்யசாலிகளாயுமுள்ள க்ஷத்திரியர்களுக்கு எந்தமரணம் புகழைத் தருமோ அந்தமரணத் தையே உன் குமாரனும் அடைந்தான். நீ சோகப்படவேண்டாம். மகாரதனையும், வீரனையும், தகப்பனைப்போன்ற பராக்கிரமசாலி யாயுமுள்ள உன் புதல்வன், சூரர்களால் விரும்பப்படுகிற நல்ல கதியையே அடைந்தான். போரில் பகைவரைக்கொன்று அழியாத புண்ணியலோகத்துக் கேகியிருக்கிறான். தவம், பிரும்மசர்யம், நூ லறிவு இவைகளால் ஸாதுக்கள் எந்தக் கதியை விரும்புகிறார்களோ, அந்த நற்கதியையே உன் குமாரன் அடைந்திருக்கிறான். ஹே! ஸுபத்ரே! நீ வீரன்புதல்வி, வீரன்பத்நீ, வீரனைப்பெற்றவள், வீரர்களுக்குப் பந்துவானவள். புத்திரனைக்குறித்து வருத்தமடை வது உனக்குத் தகுந்ததில்லை" என்பனவாம்.

இவ்வார்த்தைகளால் பெற்றதாயின் சோகம் நீங்காதென்பது தெரியும். ஆனாலும் பாக்கியமற்ற இந்நாட்டில் இவ்வாறு சொல்ல வும் கேட்கவும் விரும்புகிறார்கள்.

அர்ஜுனன் மிகவும் சினங்கொண்டு மிகவும் கடினமான பிர திக்ஞையைச்செய்தான். 'அபிமன்யுவதத்துக்கு முக்கியகாரண மாயிருந்த ஜயத்திரதனை மறுநாள் சூர்யாஸ்தமனத்துக்குள் வதைப்

பேன். அப்படிச்செய்யத்தவறினால் நானே அக்நிப்ரவேசஞ்செய்து உயிரையிழப்பேன்' என்று அர்ஜுனன் சபதஞ் செய்யவே இந்தப் பிரதிக்ஞையால் இருகட்சியிலும் பெரிய குழப்பம் உண்டாயிற்று. பாண்டவர்படை மிகுந்த கோலாகலத்தையடைந்தது. கௌரவர்கள் நன்றாய் ஆலோசித்து ஜயத்திரதனைக் காப்பதற்காகப் பலவாறான யோசனைகளைச் செய்தார்கள்.

அர்ஜுனன் சபதத்தை நிறைவேற்றுவது மிகவும் கடினமென்பதைக்கிருஷ்ணன் தெரிந்துகொண்டார். ஜயத்திரதனோ மகாரதன்; ஸிந்து ஸௌவீர தேசங்களின் அதிபதி; துரியோதனனுடைய சகோதரியின் புருஷன்; அநேகபடைகளுக்கு நாயகன். கௌரவர்களைச் சேர்ந்தவர்களான வீரர்களும் அவனுக்கு உதவி செய்வார்கள். பாண்டவர்களைச்சேர்ந்தவர்களோ துக்கமடைந்தவர்களாயும் யோசனையற்றவர்களாயுமிருந்தார்கள். ஆதலால் கிருஷ்ணன் தாமே நாயகனாயிருந்து காரியம் செய்யத்தொடங்கினார். அவர் மறைந்து கௌரவசேனைக்குள் ஒற்றனாக நுழைந்தார். அங்கேநிகழ்ந்தவிருத்தாந்தங்களையறிந்துவந்து பாண்டவர்களிடம் தெரிவித்தார்.

கௌரவர்களும் அர்ஜுனனுடைய பிரதிக்ஞையைத் தெரிந்துகொண்டார்கள். துரோணரால் வகுக்கப்பட்ட வியூகத்தின் மத்தியில் ஜயத்திரதனை வைத்துக் கர்ணன்முதலிய வீரர்கள் ஒன்றுகூடி அவனைக் காத்துக்கொண்டிருந்தார்கள். வியூகத்தைப் பேதித்து எல்லாவீரர்களையும் ஒரேகாலத்தில் வெல்வது அர்ஜுனனால் முடியாதகாரியம். அவன் தற்கொலைபுரிந்துகொள்வது நிச்சயம். ஆகையால் கிருஷ்ணன், என்னசெய்வதென்பதை யோசித்துத் தன்மனத்துக்குள்ளேயே தீர்மானஞ்செய்துகொண்டார்.

தம் சாரதியான தாருகனை வரவழைத்துத் தேரில் சிறந்த குதிரைகளைப் பூட்டும்படிக்கும், அஸ்திரஸஸ்திரங்களைத் தேரில் வைக்கும்படிக்கும், அதிகாலையில் புறப்பட ஆயத்தமாயிருக்கும் படிக்கும் அவனுக்குக் கட்டளையிட்டார். ஒருக்கால் ஒரேநாளில் வியூகத்தையுடைத்து வீரர்கள் யாவரையும் வெல்ல அர்ஜுனனால் முடியாவிட்டால், தாமே நேரில் போர்செய்து படைத்தலைவரை

வதைத்து ஜயத்திரதனை அர்ஜுனன் கொல்லும்படியானவழியைத் தேடவேண்டுமெனக் கிருஷ்ணன் யோசித்துத் தீர்மானித்திருந்தார்.

அவர் நேரில் போர்செய்ய நேர்ந்தால் 'அஜுர்யோ ந ஸம்ஹராமி' யென்ற அவருடைய பிரதிக்ஞை வீணேயாகும். ஆனால் பாண்டவர்கள் ராஜ்யத்தையடைதல் தர்மமாகும். ஜயத்திரதன் வதைக்கப்படுவது ஒன்று; அர்ஜுனன் எரிபுகுவது மற்றொன்று. இவை யிரண்டனுள் ஒன்று அவசியமாக நிகழக்கூடியதே. கிருஷ்ணன் இந்தத் தர்மஸங்கடத்தில் அகப்பட்டிருந்தாலும் தம் சகோதரி கணவனான அர்ஜுனன் தற்கொலைபுரிந்துகொள்ளாமல் தடுப்பதே தம் கடமையென்றெண்ணித் தம் கடமையைச் செலுத்த அவர் யோசித்திருந்தார்.

பிறகு கிருஷ்ணனும் மற்றவர்களும் உறங்கினார்கள். அர்ஜுனன், உறங்கும்போது தானும் கிருஷ்ணனும் கயிலாயத்துக்குப் போய் மகாதேவரை வணங்கியதாயும், அவரிடமிருந்து தான் அநேக படைக்கலங்களைப் பெற்றதாயும், பிறவாறும் கனவுகண்டானென்றும் ஒரு கட்டுக்கதை யிருக்கிறது. அதைப்பற்றி ஆராய்வதிற் பயன் ஒன்றும் இல்லை.

ஆனால் ஸ்ரீகிருஷ்ணன் அஸ்திரங்களை உபயோகிக்கவேண்டிய ஆவசியகம் ஏற்படவில்லை. அர்ஜுனன் ஸூர்யாஸ்தமனத்துக்குள் ஜயத்திரதனைக் கொன்றுவிட்டான். இவ்விடத்தில் இன்னுமொரு பொய்க்கதையும் ஏற்பட்டிருக்கிறது. அது, "ஸ்ரீகிருஷ்ணன் தன் யோகமாயையாற் சூரியனை மறைத்தார். ஜயத்திரதன் இறந்தபிறகே சூரியனைப் பிரகாசிக்கச் செய்தார்" என்பதாம்.

அவர் ஸூர்யனை எதற்காக மறைத்தார்? ஸூர்யாஸ்தமனம் ஆகிவிட்டது; இனி அச்சமில்லையென நினைத்து ஜயத்திரதனும் அவனைச் சார்ந்தவர்களும் அர்ஜுனன் எதிரில் அச்சமற்றவர்களாய் வருவார்கள் என்ற நினைவினாலேயா? இந்தக்கதை அஸம்பாவிதமாயும் அஸங்கதமாயுமிருக்கிறது. உண்மையில் சூர்யன் மறையு முன்னமே அர்ஜுனன் ஜயத்திரதனைப் பார்த்துவிட்டான். அவன் மீது அம்பும் எய்தான். ஜயத்திரதனும் அர்ஜுனனை அம்பால்

அடித்தான். சூரியன் மறைந்தபிறகே அர்ஜுனனால் மற்ற வீரர்களைக் கொல்லமுடிந்தது. கௌரவவீரர்கள் எல்லோரையும் வெல்லாமல் அர்ஜுனன் ஜயத்திரதனை வதைத்திருக்கமுடியாது. அப்படியிருந்தும் இந்தப் பொய்க்கதை எதற்காக ஏற்பட்டதென்பதை நாம் அடுத்த அதிகாரத்தில் தெரிவிப்போம்.

---

## மூன்றாவது அதிகாரம்.

### இரண்டாவதுதொகுதியை யியற்றிய கவி.

நாம் இதுவரை நல்வழியிலேயே நடந்துவந்தோம். இதுமுதல் கோரமானவழியில் நடக்கவேண்டியிருக்கும். மகாபாரதமென்பது சமுத்திரம்போலிருக்கிறது. இதுவரை அசைவற்றிருக்கிற நீர்ப்பெருக்கின்மேல் இனிமையானதும் கம்பீரமானதுமான சொற்களைக் கேட்டுக்கொண்டு சுகமாகக் கப்பல்யாத்திரைசெய்தோம். இனி, புயற்காற்றில் அகப்பட்டு, அலைகளால் அடிபட்டு, இங்குமங்கும் அசைக்கப்பட்டு மிகவும் வருந்துவோம். மகாபாரதத்தின் இரண்டாவது தொகுதியை இயற்றிய கவியின் கையில் நாம் அகப்பட்டுவிட்டோம். அவரால் கிருஷ்ணசரித்திரம் முழுதும் மாற்றப்பட்டிருக்கிறது. அது, எவ்வளவுக்கெவ்வளவு மேன்மைபொருந்தியதாகவிருந்ததோ அவ்வளவுக்கவ்வளவு தாழ்ந்ததாக மாறிவிட்டது. உண்மைநிறைந்ததான அச்சரித்திரத்தில் பொய்களும் வஞ்சனைகளும் நிரம்பிவிட்டன.

அது இப்படி மாறினதற்குக் காரணமென்ன? இரண்டாவது தொகுதியை யியற்றிய கவியானவன் ஸாமான்யனல்லன்; கல்பனை செய்வதில் மிகவும் ஸமர்த்தன். அவன் தர்மாதர்மங்களில் ஞானமுள்ளவன். அப்படியிருந்தும் அவனால் ஸ்ரீகிருஷ்ணனுக்கு ஏன் இந்தத் துர்த்தசை யேற்பட்டது? அதன் மறைவான தாத்பர்யத்தை இப்போது காண்போம்.

மகாபாரதத்தின் முதற்றொகுதியில் ஸ்ரீகிருஷ்ணன் ஈசுவராவதாரமென்று எவ்விடத்திலும் வருணிக்கப்பெறவில்லையென்பதை நாம் அறிந்திருக்கிறோம். அவரும் ஈசுவராவதாரமென்று தம்மை

ஒருபோதும் சொல்லிக்கொள்ளவில்லை. தமது மனிதசக்தியாலேயே காரியங்களை நிறைவேற்றியிருக்கிறார். அக்காலத்தில் ஒருவரும் அவரை ஈசுவரனென்று கருதவில்லை. இரண்டாவது தொகுதியியற்றப்பட்டகாலத்தில் அவரை ஜனங்கள் ஈசுவராவதாரமென நினைத்தார்கள். அதை இயற்றிய கவியானவன், அவர் ஈசுவரபாவனையால் சகலகாரியங்களையும் நடத்தினார் என்று வர்ணித்திருக்கிறான். ஆனால் ஈசுவரன் புண்யஸ்வரூபியென்பதை அந்தக் கவி அறியவில்லைபோலும். ** ** **

பகவான் தயைநிறைந்தவனென்றும் கருணையினாலேயே எல்லா உயிர்த்தொகுதிகளையும் படைக்கிறான் என்றும் பொது மக்கள் நினைக்கிறார்கள். உயிர்களுக்கு மங்களமுண்டாகவேண்டுமென்பதே பகவானுடைய நோக்கம். அவரோ தர்மஸ்வரூபி. பூமியில் பாவமும் துக்கமும் எதனால் ஏற்பட்டன? இதைப்பற்றி விசாரித்தல் ஹிந்துக்களுக்கு இயல்பே. "அவர், சுகதுக்கம், பாபபுண்யம்: இவைகளைக் கடந்தவர். அவர் விளையாட்டாகவே படைக்கிறார். அவரையொழிய உலகம் வேறில்லை; அது அவருடைய அம்சமே. சுகதுக்கங்களும் பாபபுண்யங்களும் அவருடைய மாயையால் உண்டாக்கப்பட்டவைகள். அவருடைய மாயையால் நாம் சுகதுக்கங்களை யடைகிறோம்" விஷ்ணுபுராணத்தில் காளியமர்த்தன விருத்தாந்தத்தில், இந்த வாக்கியம் காணப்படுகிறது.

யதாஹம் பவதா ஸ்ருஷ்டோ ஜாத்யா ரூபேண சேஸ்வர ।
ஸ்வபாவேந ச ஸம்யுக்தஸ்ததேதம் சேஷ்டிதம் மம ॥

"நீர் என்னைப் பாம்பினத்திற் பிறக்கவைத்தீர்; எனது ஜாதிக்குணத்தின்படி நான் ஹிம்ஸைசெய்கிறேன்" என்று பிரஹலாதன் விஷ்ணுவைத் தோத்திரஞ்செய்கிறசமயத்தில் சொல்லுகிறான்.

"வித்யாவித்யே பவாநஸத்யம் ஸத்யம் த்வம் விஷாம்ருதே"

"வித்யை, அவித்யை, ஸத்யம், அஸத்யம், விஷம், அமிருதம்: எல்லாம் நீரே" என்றும் "ஜகத்தில் உம்மைத்தவிர மற்றொன்றில்லை" யென்றும் சொல்லியிருக்கிறான்.

"யே சைவ ஸாத்விகா பாவா ராஜஸாஸ்தாமஸாஶ்ச யே ।
மத்த ஏவேதி தான் வித்தி ந த்வஹம் தேஷு தே மயி ॥"

"எவைகள் ஸாத்விகங்களான பாவங்களோ அவையெல்லாம் நம்மிடமிருந்தே தோன்றின என்று அறிந்துகொள்வாயாக. நாம் அவைகளின்வசத்திலில்லை. அவைகளெல்லாம் நம் வசமாகவே இருக்கின்றன" என்று பகவானே பகவத்கீதையில் உரைத்திருக்கிறார். சாந்திபர்வத்தில் பீஷ்மர் கிருஷ்ணனை, 'ஸத்யாத்மனே நம:' 'யஜ்ஞாத்மனே நம:' என்றும், 'காலாத்மனே நம:' 'கோராத்மனே நம:' 'க்ரோதாத்மனே நம:' என்றும் துதித்து நமஸ்கரித்திருக்கிறார். முடிவில் 'ஸர்வாத்மனே நம:' என்று சொல்லியும் பகவானை வணங்கியிருக்கிறார். ஹிந்துக்களின் பிராசீனகிரந்தங்களிலிருந்து வாக்கியங்களையெடுத்தெழுதிக்கொண்டேபோனல் இப்புத்தகத்தில் பல பக்கங்களை நிரப்பிவிடலாம்.

இப்பொழுது பகவானுடைய மானுஷ்யகமான கதையைத் தெரிவிப்போம். உலகத்தில் துக்கமும் ஜகதீசுவரனுலேயே பிரேரிக்கப்படுகிறது. பாபியினுடைய பாபபுத்தியும் அவனுலேயே பிரேரணைசெய்யப்படுகிறது. அதைப்பற்றி ஜனங்களுக்கு விசாரமெதற்காக? மேற்றிசையறிஞர் எழுதிய காவ்யங்களையறிந்துகொள்வதற்கு நம்மவர்கள் தங்கள் மூளையைக் கலக்கிக்கொள்ளுகிறார்களேயன்றி, அபூர்வமான மகாபாரதக்கிரந்தத்தின் ஒரு அத்தியாயத்தின் உட்பொருளையாவது தெரிந்துகொள்ள அவர்கள் முயற்சிசெய்வதில்லை. மகாபாரதக்கதைகளெல்லாம் கட்டுக்கதைகள் என்றும் கேலிக்கிடமானவையென்றும் நினைக்கிறார்கள். இது மிகவும் துக்கத்தை விளைக்கிறது.

எல்லாம் ஈசுவரனே; எல்லாம் ஈசுவரனிடமிருந்து வந்தனவே. அவரிடமிருந்தே அறிவும் அவரிடமிருந்தே மெய்யும் அவரிடமிருந்தே பொய்யும் அவரிடமிருந்தே நற்புத்தியும், அவரிடமிருந்தே துர்ப்புத்தியும் தோன்றின. மனிதன்வாழ்வுக்கு முக்கியமான காரணம் ஞானமும் புத்தியுமே. இதை அறிய ஒருமுயற்சியும் ஹிந்துக்கள் செய்யவேண்டியதில்லை. அந்த அறிவு ஹிந்துக்களுக்கு

இயற்கையிலேயே ஏற்பட்டது. மகாபாரதத்தின் இரண்டாவது தொகுதியை யியற்றியவர் இவ்வாறே விவேசனம்செய்திருக்கிறார்.

நாம் சந்திரனுடைய ஒரேபக்கத்தைமட்டும் காண்கிறோம்; பின்பக்கத்தைக் காண்பதில்லையென்று வானசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். கவியானவர் கடவுளுடைய ரகஸ்யத்தின் பின்பக்கத்தை நமக்குக் காட்டவிரும்புகிறார். அவர், ஜயத்ரதவதத்தில் பிராந்தி ஈசுவரப்பிரேரிதமென்று காட்டியிருக்கிறார். கடோற்கசவதத்தில் துர்ப்புத்தி யீசுவரப்பிரேரிதமென்றும், துரோணவதத்தில் அஸத்யமும், துர்யோதனவதத்தில் அநியாயமும் ஈசுவரப்பிரேரிதங்களேயென்றும் தெரிவிப்பார்.

அறிவுவலி, மதிவலி, மெய்வலி, நீதிவலி, தோள்வலி இவைகளால் பயன் ஒன்றும் இல்லை; விசேஷமாய்த் தோள்வலியின்பயன் ராஜநீதியில் அதைச்செலுத்துவதுதான். மஹாபாரதம் ராஜநீதியைத் தெரிவிக்கிற இதிஹாஸம். இரண்டாவது தொகுதியை இயற்றியவர் அறிவு தோள்வலி முதலியவைகளாற் பயன் ஒன்றும் இல்லையென்று நினைத்தார்போலும். ஸ்ரீகிருஷ்ணன் ஸமீபத்தில்லாதவேளையில், அர்ஜுனன் உழவனொருவனால் தோல்வியுற்றானென்றும் அவர் எழுதியிருக்கிறார். அந்தக்கவியானவர் எல்லாக் கார்யங்களும் ஈசுவரப்ரேரிதங்களே யென்று உறுதிப்படுத்த முயலுகிறார். ஸ்ரீகிருஷ்ணனைக் கர்மக்ஷேத்திரத்திலிறக்கிவிட்டு அவரையும் ஈசுவரேச்சையால் நடப்பவர் என்று தெரிவிக்க முயலுகிறார்.

ஜயத்ரதவதத்தில் ஸ்ரீகிருஷ்ணனைப்பற்றி வேறொரு அசம்பாவிதமான கதையும் காணப்படுகிறது. அர்ஜுனன் ஜயத்ரதன் தலையைத் துணிக்கத்தொடங்கினான். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் அவனைத் தடுத்து "இவன் பிதா தனக்குப் புத்திரனுண்டாக வேண்டுமென்று தவஞ்செய்து, இவனைப்பெற்று மேல் என் புதல்வன்தலையை எவன் பூமியில் வீழ்த்துகிறானோ அவனுடையதலை நூறுதுண்டுகளாய் உடைக" என்றும் ஒருவரத்தைப் பெற்றிருக்கிறான். நீ ஜயத்திரதன்தலையைத் துணித்துக் கீழே யெறியவேண்டா. இவன் தகப்பன் சந்தியாவந்தனம்செய்கிற இடத்துக்கு இவனுடைய தலையை உன் பாணங்களால் தள்ளிக்கொண்டுபோய்

அவனுடைய மடியில் போட்டுவிடுவாயாக'' என்று கூறினர். அர்ஜுனன் அப்படியேசெய்தான். பெரியோனுன அவன்பிதா சந்தியா வந்தனத்தை முடித்து எழுந்தபொழுது அந்தத் தலை பூமியில் விழுந்தது. உடனே அந்தக் கிழவன் தலை வெடித்து நாலுபக்கங்களிலும் சிதறியது. இது அஸங்கதமானகதை.

---

## நான்காம் அதிகாரம்.

### கடோற்கசவதம்.

கடோற்கசவதமென்ற மிகவும் அருவருக்கத்தக்க ஒரு விருத்தாந்தத்தைப்பற்றிச் சொல்லுவோம்.

ஹிடிம்பனென்று ஓர் அரக்கன் இருந்தான். ஹிடிம்பையென்பவள் அவனுக்கு இளைய சகோதரி. பீமன் ஒருநாள் அந்த அரக்கனைக்கொன்று ஹிடிம்பியை விவாகஞ்செய்துகொண்டான். அவளுடைய கருப்பத்தில் வீமனுக்கு ஒரு புத்திரன் ஜனித்தான். அவனே மிகவும் வலியோனுன கடோற்கசன். தகப்பன், சிற்றப்பன் இவர்களுக்கு உதவிசெய்வதற்காகத் தன்னுடைய படைகளையும் அழைத்துக்கொண்டுவந்து கடோற்கசன் குருக்ஷேத்திரத்தில் பகைவருடன் போர்செய்தான்.

அவனுடைய மதிமாருட்டத்தை நாம் கவனிக்கவேண்டும். அவன் அரக்கனுயிருந்தும், மனிதர்களான எதிரிகளை விழுங்கிவிடாமல், அம்புகளையெய்து போர்செய்தானென்பது அவனுடைய பிரமை. அவனுடைய தௌர்ப்பாக்கியத்தால் துரியோதனனுடைய படையில் ஒரு அரக்கன் இருந்தான். இருவரும் போர்புரிந்தார்கள். அவர்களுடைய போர் ஓரேநாளில் முடியவில்லை. மறுநாள் பகலிலும் இரவில் தீவர்த்திகளின் ஒளியிலும் போர்நடந்தது. இரவில் அரக்கர்களுக்கு வலிமை அதிகமாதலால் கடோற்கசனை ஒருவராலும் வெல்லமுடியவில்லை. துரியோதனன் படையிலிருந்த அரக்கன் கடோற்கசனுற் கொல்லப்பட்டான். கர்ணனிடம் இந்திரனுலளிக்கப்பட்டதும் ஓரேமனிதனை வதைக்கக்கூடியதுமான அற்புதமான சக்தியாயுதமொன்றிருந்தது. அது ஒருபோதும் பயனற்ற

தாகாது: ஒருமனிதனைக்குறித்து ஏவப்பட்டால், அவன் தவறு திறப்பான். ஆனால் அது திரும்பவும் பயன்படாது. அது ஒரே மனிதனையே கொல்லும். அமோகமான இந்த ஆயுதத்தைக் கர்ணன் அர்ஜுனனைக் கொல்லுவதற்காகவே, பத்திரப்படுத்திவைத்திருந் தான். ஆனால் அவன் அன்று கடோற்கசன்போரில் மிகவும் ஆபத் தையடைந்து, இவ்வாயுதத்தை அவன்மீது பிரயோகித்து அவனைக் கொன்றான். இந்தப் பொய்க்கதை குழந்தைகளுக்கும் படிப்பில்லாத ஸ்திரீகளுக்குமே மநோஹரமாயிருக்கும். கடோற்கச னிறந்ததால் பாண்டவர்கள் அழத்தொடங்கினார்கள். ஆனால் ஸ்ரீகிருஷ்ணன் சந்தோஷத்தால் தேரின்மீது குதிக்கத்தொடங்கினார்; ஸிம்ஹநாத மும் செய்தார். அர்ஜுனன் இதைப்பார்த்துக் கிருஷ்ணனிடம் காரணத்தை வினவினான். "கர்ணன் உன்னைக்கொல்லுவதற்கென் றே வைத்திருந்த ஆயுதத்தைக் கடோற்கசன்மீது பிரயோகித்த தால் அது இனிப் பயன்படாது. நீ இனிக் கர்ணனுடன் அச்ச மின்றிப் போர்புரியலாம்" என்று ஸ்ரீகிருஷ்ணன் பதிலுரைத்தார்.

ஜயத்திரதனை வதைத்த சமயத்தில் கர்ணனுடன் அர்ச்சுனன் திரும்பத்திரும்பப் போர்செய்தானென்பதை நாம் கண்டிருக்கிறோம்; அச்சமயங்களில் கர்ணனே தோல்வியடைந்தான். அப்பொழுது கர்ணனுக்குச் சக்தியாயுதத்தின்ஞாபகம் வரவில்லைபோலும். இது கட்டுக்கதை.

இதை விரித்ததில் நாம் எடுத்துக்கொண்ட விருத்தாந்தத்தை மறந்துவிட்டோம்.

அர்ஜுனன் ஸமாதானமடையாமல் வருத்தப்படுவதைப் பார்த்து ஸ்ரீகிருஷ்ணன் மறுபடியும், "ஹே! தனஞ்சயனே! நாம் உனது நன்மைக்காகவே அநேக உபாயங்களை யோசித்து, வலி மிக்கவர்களான, ஜராஸந்தன், சிசுபாலன், ஏகலவ்யன், ஹிடிம்பன், கிம்மீரன், பகன், அலாயுதன், உக்ரகர்மா, கடோற்கசன்: முதலிய அரக்கர்களைக் கொல்வதற்கு உதவிபுரிந்தோம்" என்று கூறினார்.

இந்தக்கதை உண்மையற்றதென்பதை இந்தக் கிரந்தத்தைப் படிப்போர் நன்கறிவார்கள். சிசுபாலனைக் கிருஷ்ணன் கொன்றது

அர்ஜுனனுடைய நன்மைக்கன்று. சிசுபாலன் கிருஷ்ணனைச் சபையில் வைதான்; போரிலும் அவரை அடித்தான். இதற்காகவோ அல்லது யுதிஷ்டிரரின் ராஜஸூயயாகத்தைக் காப்பதற்காகவோ கிருஷ்ணன் சிசுபாலனைக் கொன்றார். ஜராஸந்தவதத்திலும் கிருஷ்ணன் கர்த்தாவில்லை. அவ்வதமும் அர்ஜுனனுடைய நன்மைக்காக நிகழ்ந்ததில்லை; சிறையிலடைபட்ட அரசர்களை விடுவிப்பதற்காகவே. பகன், ஹிடிம்பன், கிம்மீரன் முதலிய அரக்கர்வதத்திலும் கிருஷ்ணனுக்கு யாதொரு சம்பந்தமுமில்லை. ஏகலவ்யன் கட்டைவிரலை நறுக்கியதிலும் அவருக்கு எவ்வித உடன்பாடுமில்லை. அவருக்கு அந்த விருத்தாந்தங்களைப்பற்றி யொன்றுமே தெரியாது. அவைகள் நிகழ்ந்தகாலங்களில் கிருஷ்ணன் அவ்விடங்களில் இருக்கவேயில்லை. ஆகையால் இக்கதைகள் இயற்கைக்குப் புறம்பானவைகள். அப்படியிருந்தும் இந்தப் பொய்யுரையைக் கிருஷ்ணன்வாக்கில் புகவிட்டதன்காரணமென்ன?

இந்தச் சமயத்தில் இன்னும் ஒரு வார்த்தையை உரைப்போம். ஸ்ரீகிருஷ்ணன் தன் விருப்பமாத்திரத்தாலேயே எல்லாக்காரியங்களையும் நிறைவேற்றினார் என்று அன்பர்கள் சொல்லக்கூடும். தம் விருப்பத்தாலேயே அவர் காரியங்களைச் சாதிக்கக்கூடியவராயிருக்கும்பக்ஷத்தில், அவர் மனுஷ்யசரீரத்தையெடுத்து அவதாரம்செய்ததன் பயனென்ன? ஸ்ரீகிருஷ்ணன் முயற்சியைக் கைக்கொண்டவரென்று நாம் இதற்குமுன் அடிக்கடி காட்டியிருக்கிறோம்.

நற்புத்தியும் ஈசுவரனாற் பிரேரிக்கப்பட்டது, துர்ப்புத்தியும் ஈசுவரனாற் பிரேரிக்கப்பட்டது என்று கவி சொல்லப்புகுந்தார். அர்ஜுனனைக் கொல்லுவதற்காக வைத்திருந்த சக்தியாயுதத்தைக் கடோற்கசன்மீது ஏவியது கர்ணனுடைய துர்ப்புத்தி. துர்ப்புத்தியினாலேயே சிசுபாலனும் ஸ்ரீகிருஷ்ணனை மிகவும் அவமதித்தான்.

ஜராஸந்தன் தன்னுடைய பெரிய படையுடன்கூடியும் பாண்டவர்களை வெல்லமுடியவில்லையென்பது உண்மையே. கிருஷ்ணனைச் சேர்ந்த யாதவர்களும் அவனை வெல்லமுடியவில்லை. ஆனால் உடல்

வலியில் வீமன் அவனைக் காட்டிலும் மிக்கவன். ஜராஸந்தன் ஒருவனாயிருந்து வீமனுடன் போர்செய்தது அவனுடைய துர்ப்புத்தியாகும்.

துரோணாசாரியர் வேடனான ஏகலவ்யனிடம் கட்டைவிரல்களை நறுக்கிக்கொடுக்கும்படி கேட்டார். கட்டைவிரல்களையிழந்ததால் அவன் மிகவும் முயன்றுபெற்ற விற்பயிற்சி பயனற்றதாய்முடிந்தது. குருதக்ஷிணைக்காகத் தனது கைக்கட்டைவிரல்களை ஏகலவ்யன் கொடுத்ததும் அவனது துர்ப்புத்தியாகும். இதுவும் ஈசுவரப்பிரேரிதம் என்றும், ஸ்ரீகிருஷ்ணன் எல்லாக்கார்யங்களும் ஈசுவரப்பிரேரிதங்களாகவே நிகழ்கின்றனவென நினைத்திருந்தாரென்றும், இதுவே கிருஷ்ணசரித்திரத்தின் உள்ளுறையென்றும், இரண்டாவது தொகுதியை யெழுதியவர் கருதியிருந்தார்போலும்.

---

## ஐந்தாம் அதிகாரம்.

### துரோணவதம்.

முன்காலத்தில் நம் நாட்டில் க்ஷத்திரியர்மட்டும் போர்செய்வதென்பதில்லை. பிராமணர்களும் வைசியர்களும் போர்செய்தார்களென்று மகாபாரதத்திற் பல இடங்களில் நாம் காண்கிறோம். துரியோதனன் படைத்தலைவர்களில் மூன்றுபெயர்கள் பிராமணர்களாக இருந்தார்கள். அவர்கள் துரோணர், அவருடைய மைத்துனர் கிருபர், அவர்குமாரன் அசுவத்தாமா எனப்படுபவர். மற்றக் கலைத்துறைகளிற்போல் போர்த்துறையிலும் பிராமணர்கள் ஆசாரியர்களாயிருந்தார்கள். துரோணரும் கிருபரும் வில்வித்தையில் ஆசாரியர்களாயிருந்ததனாலேயே அவர்களுக்குத் துரோணாசாரியரென்றும் கிருபாசாரியரென்றும் நாமதேயங்கள் ஏற்பட்டன. பிராமணர்களுடன் போர்செய்தால் தோல்வியடைவதே க்ஷத்திரியர்களுக்கு நன்மையாகும். ஏனெனில் யுத்தத்தில் பிராமணர்களைக்கொன்றால் 'பிர்ம்மஹத்தி' தோஷம் சம்பவிக்கும். யுத்தத்தில் கௌரவர்களைச் சேர்ந்த வீரர்களெல்லோரும் மடிந்தும் கிருபாசாரியரும் அசுவத்தாமாவும் மடியவில்லை. பீஷ்மருக்குப் பிறகு துரோணாசாரியரே முதன்மையான போராளியாயிருந்தார். அர்ஜுனனொருவனே

அவருடன் எதிர்த்துப் போர்புரியக்கூடியவன். தனக்குக் குருவாகையால் அவரைக் கொல்வதற்கு அர்ஜுனன் விரும்பவில்லை.

பாண்டவர்களுடைய மாமனை துருபதவரசனுக்கும் துரோணருக்கும் முற்காலத்தில் பெரியதோர் விவாதம் நிகழ்ந்தது. அவன் துரோணருக்குச் சமானமான வீரனல்லனென்று அவமதிக்கப்பட்டான். ஆகையால் அவ்வரசன் துரோணரை வதைக்க வேண்டுமென ஒரு வேள்விசெய்தான். வேள்வித்தீயிலிருந்து திருஷ்டத்யும்னனென்று ஒரு வீரனை புத்திரன் பிறந்தான். பிறகு அவன் பாண்டவர்களின் படைத்தலைவனுயிருந்து துரோணரைக் கொன்றுன். அவன் தெய்வபலத்தால் பிறந்தவனுதலால் அவனைப் பிரும்மஹத்திதோஷம் அணுகாதென்று பாண்டவர்கள் நினைத்தார்கள்.

மகாபாரதம் ஒரேகைப்பாடாக எழுதப்படவில்லை. பல எழுத்தாளர்கள் அநேக சமயங்களில் வேறுவேறுன கதைகளைத் தங்கள் விருப்பப்படி தொகுத்திருக்கிருர்கள். போரில் திருஷ்டத்யும்னனுல் துரோணரை வெல்லமுடியவில்லை. திருஷ்டத்யும்னன் அவரால் தோல்வியுற்றுன். தினந்தோறும் பாண்டவர்களின் சைந்யம் குறைந்துகொண்டேவந்தது. துரோணர் மடிவாரென்ற நம்பிக்கையில்லை. துரோணரைக் கொல்லுவதற்காக ஒரு சூழ்ச்சியைச் செய்தே தீரவேண்டுமென்று சிலர் யோசித்து அதை ஸ்ரீகிருஷ்ணன் தலையில் வைத்தனராக அதை ஆதாரமாகக்கொண்டு அவரே அந்தப் பாவச்செயலைச் செய்தாரென்று கவியானவர் வருணித்திருக்கிருர்.

ஸ்ரீகிருஷ்ணன் "ஹே! பாண்டவர்களே! மற்றவர்களைப்பற்றிக் கவனிக்கவேண்டாம். தேவேந்திரனும் துரோணரை வெல்ல இயலாது. ஆனுல் அவர் அஸ்திரங்களைக் கீழேயெறிந்துவிட்டால் எவனும் அவரைக் கொல்லமுடியும். ஆகையால் நீங்கள் இவரை வெல்ல எவ்விதத்திலும் ஏற்பாடுசெய்யுங்கள்" என்று கூறினுர்.

எவர் பகவத்கீதையில் தர்மத்தை நிலைநிறுத்தற்காகத் தாம் யுகந்தோறும் அவதரிப்பதாகத் திருவாய்மலர்ந்திருக்கிருரோ, எவர் சரித்திரம் ஆதர்சபுருஷருடைய சரித்திரமென நாளிதுவரை

கொண்டாடப்பெற்றிருக்கிறதோ, எவருடைய தர்மபுத்தியைப் பற்றிச் சத்துருக்களும் புகழ்ந்திருக்கிறார்களோ, அந்தப் பகவான் தர்மத்தைத் தியாகம்செய்யும்படி சொல்லியிருப்பாரா? மகா பாரதம் பலபல கவிகளாற் றொகுக்கப்பட்டதென்று நாம் முன்பே கூறியுள்ளோம். ஒவ்வொருவரும் தத்தமக்குத் தோன்றியபடி யெழுதியிருக்கிறார்.

ஸ்ரீகிருஷ்ணன் மறுபடியும், "அசுவத்தாமா இறந்தானென்று துரோணருக்குத் தெரிந்தால் பிறகு அவர் போர்செய்யமாட்டார். ஆகையால் யாராவது அவரிடம் சென்று சண்டையில் அசுவத்தாமா இறந்தானென்று தெரிவித்தல்வேண்டும்" என்று கூறினார்.

அர்ஜுனன் பொய்சொல்ல உடன்படவில்லை. பீமன் ஒன்றும் சொல்லாமல் அசுவத்தாமா வென்ற ஒரு யானையைக் கொன்று, துரோணரிடம் அசுவத்தாமா இறந்தானென்று தெரிவித்தான். தன்புத்திரன் மகாசூரனென்பதும், அவனைப் பகைவர் வெல்ல முடியாதென்பதும் துரோணருக்கு நன்றாய்த் தெரியும். ஆதலால் வீமனுடைய வார்த்தையை அவர் நம்பவில்லை, அவர் யுதிஷ்டிரனிடம் அதன் உண்மையை வினவினார். யுதிஷ்டிரன் ஒருக்காலும் பொய்யுரைக்கமாட்டானென்றும், தர்மாத்மாவென்றும் துரோணர் நினைத்திருந்தார். அவன் அசுவத்தாமா வென்ற யானையிறந்தது என்றும் 'யானை'யென்கிற வார்த்தையைத் தெளிவாய்ச் சொல்லாமலும் பதிலுரைத்தான். அதனால் நிகழ்ந்ததென்னவெனில், துரோணர், திருஷ்டத்யும்னனுக்கு எமன்போல் அவனை நிரஸ்திரபாணியாகவும், சாகுந்தறுவாயிலிருப்பவனாயும் செய்துவிட்டார். அப்போது வீமன் திருஷ்டத்யும்னனுக்குதவிபுரியச்சென்று துரோணரின் தேரைப் பிடித்து நிறுத்தி அவரிடம் "ஹே! பிராம்மணோத்தமரே! உம்மை யொத்த பிராமணர்கள் ஸ்வதர்மத்தைவிட்டு, அஸ்திரவித்தையை அப்பியஸித்துப் போர்செய்யத் தலைப்படமாட்டார்கள். அதனால் க்ஷத்திரியர்களுக்கு யாதொருகுறைவும் ஏற்படாது. பிராணிகளை ஹிம்சிக்கக்கூடாதென்ற முக்கிய தர்மத்தைப் பிராமணர்கள் பரிபாலிக்கவேண்டும். நீரோ பிராமணசிரேஷ்டர். நீர் சண்டாளனைப்போல் அறியாமையில் மூழ்கிப் புத்திர களத்திரங்

களின் உதவிக்காக ஸ்வதர்மத்தை விட்டுவிட்டு மனிதர்களின் உயிரையொழிப்பதில் உமக்கு வெட்கமில்லையா'' என்று கூறினன்.

துரோணருக்கு இதைத்தவிர வேறு திரஸ்காரம் என்ன வேண்டும்? துரோணுசாரியர் தர்மாத்மாவாதலால் அவருக்கு இதுவே போதுமானதாயிருந்தது. துரோணுசாரியர் உடனே அஸ்திரங்களைக் கீழே யெறிந்தார். அப்பொழுது திருஷ்டத்யும்னன் அவருடைய தலையைக் கொய்து கையிற் கொணர்ந்தான்.

இதுவரை பூமிக்கு நான்கு அங்குலத்துக்கு மேலேயே நகர்ந்து கொண்டிருந்த யுதிஷ்டிரன் தேரானது அவன் பொய்யுரைத்ததால் பூமியைத் தொட்டது; மேலும், அவர் பரலோகத்தில் நரகத்தைப் பார்க்கும்படியும் நேர்ந்தது. பொய்யை யுரைத்துக் குருவைக் கொல்வித்ததற்கு இம்மட்டும் தண்டனைபோதாது. அளவிறந்த நரகம் கிடைக்குமென்பதே நம் அபிப்பிராயம்.

ஸ்ரீகிருஷ்ணனும் இந்தப் பாவச்செயலையேவிவிட்டவராதலால் அவரையும் பாபம் தொடரும். அவர் ஜகதீசுவரனென்றும், அவரே பாபபுண்ணியங்களைச் சிருஷ்டித்தவரென்றும் அவரைப் பாபபுண்ணியங்கள் அணுகாவென்றும் ஸமாதானம் கூறக்கூடும். தர்மத்தை ஸ்தாபிப்பதற்காக மனுஷ்யாவதாரமெடுத்தகாலத்தில் பாவத்தை அவர் செய்யவேண்டுமா?

"ஜனகர் முதலானவர்கள் கர்மத்தினலேயே ஸித்தியையடைந்திருக்கிறார்கள். அவரவர்கள் தத்தம் தர்மத்தை அநுஷ்டிக்க வேண்டுமென்கிறமுறைப்படி நீயும் கர்மத்தைச்செய்வாயாக. சிரேஷ்டர்கள் எதைச் செய்கிறார்களோ அதையே மற்றவர்களும் செய்கிறார்கள். ஹே! பார்த்தனே! மூன்றுலகங்களிலும் என்னால் செய்ய வேண்டியகாரிய மொன்றுமில்லை. அப்படியிருந்தும் நான் கர்மத்தைச் செய்துகொண்டேயிருக்கிறேன். நான் சோம்பலினல் கர்மத்தையொருக்கால் செய்யாமலிருப்பேனுனல் மனுஷ்யர்களெல்லாரும் எல்லாப்படியாலும் என் வழியையே பின்பற்றுவார்கள்'' (பகவத் கீதை 3-அத்தி. 20—23 சுலோகங்கள்) என்று அவர் அர்ஜுனனுக்கு உபதேசித்திருக்கிறார்.

ஸ்ரீகிருஷ்ணனே பாவம்செய்தால் அது பிறர்க்குத் திருஷ்டாந்தமாக ஏற்படுமாதலால் அவர் அவ்வாறுசெய்ய நினைத்திருக்கவும்மாட்டார். செய்திருக்கவும்மாட்டார். அப்படிப்பட்ட பகவானான கிருஷ்ணனைப்பற்றி இந்தப் பொருத்தமற்ற கதை ஏன் வந்ததென்பதைக்குறித்து நாம் தீர்மானஞ்செய்யாமல் கிருஷ்ண சரித்திரத்தை மேலும் எழுத முயலமாட்டோம்.

பிருந்தாவனத்தின்கதையும், அசுவத்தாமாவென்ற யானையின் விருத்தாந்தமுமே ஸ்ரீகிருஷ்ணனைப்பற்றிய முக்கியமான பழிகள். மகாபாரதம் பலதடவைகளில் பலபல கவிகளாலியற்றப்பட்டதென்பதை அடிக்கடி நாம் தெரிவித்திருக்கிறோம். வியாஸபகவானால் முதலில் இயற்றப்பட்ட மௌலிகக் கிரந்தத்தைப் பிறகு அநேக கவிகள் பலகதைகளை அதில் புகவிட்டுப் பெரிதாக்கிவிட்டார்கள். மௌலிகபாகத்தைத்தவிரப் பிறர்கையால் எழுதப்பட்டவைகள் இடைச்செருகல்கள். எவ்வளவுவரையில் 'மௌலிகம்', எவ்வளவு 'அமௌலிகம்' என்று நிச்சயிப்பது மிகவும் கடினம். அதை நிரூபணம்செய்வதற்குச் சில ஸங்கேதங்களைத் தெரிவிப்போம்.

(1) சிறந்த கவிகளால் இயற்றப்பெற்ற கிரந்தங்களில் எல்லா அம்சங்களிலும் 'ஸாஸம்கதி' (ஒன்றுக்கொன்று இயைபு) காணப்படும். எந்த அம்சத்தில் இந்தநியாயத்துக்கு மாறான விஷயம் காணப்படுமோ அவ்வம்சம் இடைச்செருகலே. உதாரணமாகப் பீஷ்மர் பரஸ்திரீயை யிச்சித்தார்; அவர் பயங்கொள்ளி; என்று எவ்விடத்திலாவது காணப்பட்டால் அந்த அம்சம் இடைச்செருகலெனத் தெரிந்துகொள்ளலாகும். தர்மாத்மாவான யுதிஷ்டிரன் விஷயத்தில் நன்றிமறத்தலும், பொய்யுரைத்து வஞ்சகம்செய்தலும் எவ்வளவு அஸங்கதமோ அதைப்போல் அஸங்கதமான செய்தியை வேறிடத்தில் காண்பதரிது. மிக்க ஒளியுடையவனும், வலிமையுடையவனும், அச்சமற்றவனும் ஆன வீமன்விஷயத்திலும் இவ்விதமான அஸங்கதி காணப்படுகிறது. வீமன் தன் கைவலிமையையும், மனவலிமையையும் தவிர மற்றவற்றைக் கவனித்தவனில்லை. அசுவத்தாமா, நாராயணாஸ்திரத்தை ஏவியபோது

பூமிமுழுவதும் அழிந்துபோயிருக்கும். திவ்யாஸ்திரங்களை நன்குணர்ந்தவனான அர்ஜுனனும் அதை மாற்றியொழிக்க முடியாதவன். அந்த அஸ்திரத்திலிருந்து தப்புவிக்க ஒரே உபாயமிருந்தது. போரிலிருந்து திரும்பின மனிதனை அது தொடாது. ஆகையால் ஸ்ரீகிருஷ்ணனுடைய கட்டளைப்படி பாண்டவர்களும் அவர்களுடைய படைத்தலைவரும் தங்களுடைய தேரிலிருந்தோ வாகனங்களிலிருந்தோ பூமியிலிறங்கி, அஸ்திரசஸ்திரங்களையெறிந்துவிட்டு யுத்தத்திலிருந்து மீண்டார்கள். வீமஸேநன்மட்டும் அப்படிச் செய்யவில்லை. அவன், "நாம், அசுவத்தாமாவின் பாணங்கள் விழும்போது அவைகளைத் தடுத்துவிட்டோம்; தங்கத்தாலான பிடியுடன் கூடின கதாயுதத்தைச் சுழற்றிக்கொண்டு நாராயணாஸ்திரத்தைத் தூளாக்கி, யுத்தபூமியில் யமனைப்போல் சஞ்சரிப்போம். வானமண்டலத்தில் சூரியன் ஒளியைப்போல் வேறொரு ஒளியுமில்லாதவாறுபோல நம்மைப்போன்ற பராக்ரமசாலி பூமியில் ஒருவனுமில்லை. ஐராவதத்தின் துதிக்கைபோலுள்ள நமது கையால் ஹிமாலயத்தையுங்கூடக் கீழே வீழ்த்துவோம். நமக்குப் பதினாயிரம் யானைகளின் பலம் உண்டு. தேவலோகத்தில் இந்திரன் நிகரற்று விளங்குவதுபோல் பூலோகத்தில் நாமும் விளங்குகிறோம். யாவிரும் நம் கைவலிமையைக் காண்பீர்களாக. அசுவத்தாமாவின் நாராயணாஸ்திரத்தை யெதிர்ப்பவன் ஒருவனும் இல்லாவிட்டால் நாமே அதை யெதிர்ப்போம்." என்று சொன்னான் இவ்விடத்தில் தற்புகழ்ச்சி அதிகமாயிருந்தாலும், வீமனது தைர்யம் மிகஅதிகமென்று தெரிகிறது. மௌலிகபாரதத்திலும் வீமனது தைர்யத்தைப்பற்றி யிவ்விதமேயுரைத்திருக்கிறது. ஆதலால் அவன் நரியைப்போல் வஞ்சகஞ்செய்து துரோணரை யேமாற்றினனென்பது பொருந்தாது. இவன்சத்துருவைக் கொல்வதற்காக மிகவும் இழிவானசெயல்களிற் பிரவர்த்தித்திருப்பானா? எவன் நாராயணாஸ்திரத்தின்முன் சிங்கம்போலெதிர்த்தானோ, எவன் வேறொருவரால் கீழே தள்ளப்படாமலிருந்தால் (அர்ஜுனனும் கிருஷ்ணனும் அவனை வலிந்து இரதத்திலிருந்து பூமியில் இறக்கிவிட்டார்கள்) நாராயணாஸ்திரத்தை யெதிர்த்துப் பொடிப்பொடியாய்ச் செய்திருப்பானோ, அவன் அர்ஜுனனையொத்த வீரரான துரோண

ருக்குப்பயந்து நரியைப்போல் இழிவானசெயலைச்செய்ய முயன்றுனென்று வருணிக்கிற கவி யொருகவியா? அவனால் மகாபாரதத்தை இயற்ற இயலுமா?

ஆகையால் அசுவத்தாமாவென்ற யானையைக் குறித்த பொய்க் கதையானது வீமன் சரித்திரத்துக் கொவ்வாதது. யுதிஷ்டிரனைக் குறித்து எழுதிய பொய்க்கதையையும் இங்கேயே கண்டிருக்கிறீர்கள். இவர்களைப்பற்றிய கட்டுக்கதைகளைக் காட்டிலும் கிருஷ்ணனைக்குறித்துச் சொன்ன செய்தியின் பொய் மிகவும் அதிகமானது. நம்மால் வருணிக்கப்பெற்ற விஷயங்களை இதைப்படிப்போர் நன்றாய் நோக்குவார்களானால், இது எவ்வளவுபெரிய அஸங்கதியென்று நன்றாயறிவார்கள். வெளிச்சத்தில் இருட்டு எப்படி அஸங்கதமோ, இனிப்பில் கசப்பு எவ்விதம் அஸங்கதமோ, வியாதியில் ஆரோக்கியம் எவ்வாறு அஸங்கதமோ அவ்வாறே இவ்விடத்திலும் அஸங்கதம் காணப்படுகிறது. உண்மையில் நிகழ்ந்த செயல்களில் பொய்யான செய்திகளைச் சேர்த்திருப்பதால் அவைகளை நாம் தள்ளிவிடுவோம்.

(2) நம்முடையவார்த்தை இன்னும் முடிவுபெறவில்லை. எந்த அம்சம் 'அமௌலிக'மெனத் தெரிந்துகொள்ளச் சில லக்ஷணங்களுண்டு. அவைகளைக்கொண்டு பரீக்ஷித்தால் யானையைக்கொன்ற விருத்தாந்தம் மௌலிகமல்லவென்று நன்றாய்த் தெரியும். ஒரே விஷயத்தைப்பற்றி யிரண்டுவிருத்தாந்தங்களிருந்து அவை ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்குமானால், அவைகளில் ஒன்றைப் பிரக்ஷிப்தமென்று கொள்ளலாகும்.

துரோணபர்வத்தில் இதேசமயத்தில் மற்றொரு விருத்தாந்தமும் காணப்படுகிறது. நாம் இந்தச்சமயத்தில் துரோணர் அதர்ம யுத்தஞ்செய்தாரென்று சொல்லவேண்டியிருக்கிறது. மகாபாரதத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற திவ்யாஸ்திரங்களுக்குள் பிரும்மாஸ்திரமும் ஒன்று. எவ்விதமான முயற்சியைச்செய்தும் சாதிக்கமுடியாத காரியத்தைப் 'பிரும்மாஸ்திர'மென்று சொல்லுகிற வழக்கம் நம்தேசத்தில் இன்றுவரை யிருந்துவருகிறது. பிரும்மாஸ்திரத்தை அஸ்திரவித்தையைத் தெரிந்துகொள்ளாதவரிடம் பிரயோகிப்பது

தகாது, அதர்மம். இதுவே ருஷிகளின் முடிவு. துரோணர் பிரும்மாஸ்திரத்தை அஸ்திரவித்தையறியாத படைகளிடையே பிரயோகித்து அவற்றை வதைத்தார். இச்சமயத்தில் விசுவாமித்திரர், ஜமதக்நி, பரத்வாஜர், கௌதமர், வஸிஷ்டர், அத்திரி, டுண்டு, அங்கிரஸ், ஸிகதர், பிரச்னி, கர்க்கர், வாலகில்யர், மரீசி: என்பவர்களும் மற்றும் அநேக ருஷிகளும், துரோணர் க்ஷத்திரியர்களேயற்றுப்போகும்படி செய்வதைக்கண்டு, அவரைப் பிரும்மலோகத்துக்கு அழைத்துப்போகும் உத்தேசத்துடன் யுத்தபூமிக்கு வந்துசேர்ந்தார்கள். "ஹே! துரோணரே! நீர் அதர்மயுத்தம் செய்தீராகையால் உமக்கு விநாசகாலம் கிட்டிவிட்டது. நீர் ஆயுதங்களை யெறிந்துவிட்டு எங்களைப் பார்ப்பீராக. நீர் வேதவேதாங்கங்களைக் கற்றறிந்தவர். நிலையான தர்மங்களைச்செய்வதில் விருப்பமுள்ளவர். இவ்வாறான காரியங்களைச் செய்வது உமக்கு உசிதமில்லை. ஆயுதங்களை எறிந்துவிட்டுச் சாசுவதமான நிலையைத் தேடும்; நீர் மோகத்தையடையவேண்டாம். மானிட உலகில் நீர்வசிக்குங் காலம் இன்றுடன் முடிந்துவிட்டது. ஹே! பிராமணரே! அஸ்திரவித்தை அறியாத ஜனங்களின்மீது பிரும்மாஸ்திரத்தை ஏவி, அவர்களை அழிப்பதான கெட்டசெயலை நீர் செய்திருக்கிறீர். கொடிய செயலைச்செய்தல் உமக்குத் தகாது. நீர்ஆயுதங்களை விரைந்தெறிவீராக" என்று ருஷிகள் உபதேசித்தார்கள். இப்பொழுதுதான் துரோணாசாரியர் போரை நிறுத்தினர். அசுவத்தாமா இறந்தானென்று அவர் யுதிஷ்டிரன் சொல்லக்கேட்டதால் போரை நிறுத்தவில்லை. அதன்பிறகும் திருஷ்டத்யும்னனைக் கொல்வதற்காக அவனுடன் போர்செய்துகொண்டேயிருந்தார். யதுவம்சத்திற்பிறந்த ஸாத்தகியென்பான் திருஷ்டத்யும்னனைக் காத்துக்கொண்டிருந்தான். துரோணராலும் அவனுக்கெதிர் நிற்கமுடியவில்லை. அப்போது யுதிஷ்டிரன் தன்னைச்சார்ந்த வீரர்களிடம் "நீங்களெல்லாரும் துரோணரை யெதிர்நோக்கியோடுங்கள். மகாவீரனான திருஷ்டத்யும்னன், தன்னாலியன்றவரை துரோணாசாரியரைக் கொல்லமுயலுவான். நீங்களும் ஒன்றுசேர்ந்து, துரோணருடன் போர்புரியுங்கள்." என்று கூறினன். இப்படி யுதிஷ்டிரனுரைத்ததன்பின், பாண்டவர்களைச் சேர்ந்த வீரர்கள், துரோணரைநோக்கி

யோடினார்கள். இங்கே மகாபாரதத்திலிருந்து சிலவாக்கியங்களை யெடுத்தெழுதுவோம். அவை:—

"ஸத்யஸந்தரும் மகாரதருமான துரோணர், சாகத்துணிந்து எதிர்த்துவந்தவீரர்களைநோக்கி வேகமாய்ப்போனார். அப்பொழுது பூமண்டலம் நடுங்கியது. பிரசண்டமான காற்றும் படைகளை யெதிர்த்துவீசத்தொடங்கியது. ஸூர்யனிடமிருந்து கொள்ளிகள் கிளம்பி ஜ்வாலையால் யாவரையும் நடுங்கும்படிசெய்தன. துரோணருடைய இடக்கண்ணும் இடக்கையும் துடிக்கத்தொடங்கின. தனக்கெதிரில் திருஷ்டத்யும்னனைக்கண்டு மகருஷிகளின் வாக்கியங்களைஸ்மரித்து, அவனுடன் தர்மயுத்தம்செய்தே பிராணனைவிட விரும்பினார்" என்பனவாம்.

அவரிறந்த காரணங்களில் அசுவத்தாமாவின் மரணவார்த்தை குறிக்கப்படவில்லை. அவர் மேலும் யுத்தத்தை நிறுத்தவில்லை. ஆயிரக்கணக்காக எதிரிஸைன்யங்களை வதைத்தார். திருஷ்டத்யும்னனை மறுபடியும் வென்றார். வீமன் அச்சமயம் அவனைக் காப்பாற்றினான். துரோணாசாரியரின் ரதத்தைப்பிடித்து நிறுத்தி அவரை முன்சொன்னபடி வீமன் நிந்தித்தான். (ரதங்களைப் பிடித்துநிறுத்துவதில் பீமனுக்குப் பலமும் அப்பியாசமு மிருந்தது.) அப்பொழுதுதான் துரோணர் அஸ்திரங்களையெறிந்தார். யோகத்தை யவலம்பித்து ஜீவர்கள் யாவருக்கும் அபயப்பிரதானம் செய்து உபரதியையடைந்தார். திருஷ்டத்யும்னனும் காயம் அடைந்து தனதுரதத்திலேயே வில்லையும் அம்புகளையும் வைத்துவிட்டுக், கையில் கத்தியேந்திக்கொண்டு துரோணரைநோக்கி ஓடிவந்தான். துரோணாசாரியரைத் திருஷ்டத்யும்னன் நெருங்கியவுடன் யுத்தபூமியில் பெரிய ஹாஹாகார சப்தம் எழுந்தது.

அப்போது ஒளிமயமான தவத்திலிருந்த துரோணாசாரியர், ஸமபாவனையையடைந்து, யோகநிஷ்டையிலிருந்து, அநாதிபுருஷனை விஷ்ணுவைத் தியானஞ்செய்யத் தொடங்கினார். தன் முகத்தைச்சற்று உயரத்தூக்கியும், மார்பைநிமிர்த்தும், கண்களைமூடிக்கொண்டும், ஏகாக்ஷரவேதமந்திரமான 'ஓங்'காரத்தையுச்சரித்துக்கொண்டும், ஸாதுக்களுக்கும் துர்லபமான சுவர்க்கலோகத்தை

யடைந்தார். அதன்பிறகே திருஷ்டத்யும்னன்வந்து இறந்தசரீரத்திலிருந்து தலையைவெட்டிக்கொண்டுபோனான்.

இவ்வாறு துரோணர் இறந்ததைப்பற்றி இரண்டுவிருத்தாந்தங்கள் இருக்கின்றன. இரண்டாவதில் அசுவத்தாமாவின்கதை காணப்படவில்லை. இரண்டுவிருத்தாந்தங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டால் எது மற்றக் கதைகளுக்கு இசைந்திருக்கிறதோ அதையே உண்மையென்று ஏற்றுக்கொள்ளவேண்டும். எந்தக் கதை மற்றவிருத்தாந்தங்களுக்கு மாறுபடுகிறதோ அதைப் பொய் யென்று தள்ளிவிடவேண்டும். அசுவத்தாமாவின் விருத்தாந்தம், கிருஷ்ணன், வீமன், யுதிஷ்டிரன் இவர்களின் விருத்தாந்தங்களுக்கு ஒவ்வாதது. ஆதலால் அசுவத்தாமாவின் விருத்தாந்தம் இடைச்செருகலென்பதில் ஐயமில்லை.

(3) அசுவத்தாமா இறந்தானென்று துரோணர் யுத்தத்தில் தளர்ச்சியடையவில்லை. அசுவத்தாமா சாகாவரத்தைப் பெற்றவன் என்பது துரோணருக்குத் தெரியும். அவர் அதை மறந்திருந்தாலும் அசுவத்தாமாவின் சாவைப்பற்றித் தன்னைச்சார்ந்தவன் ஒருவனிடமிருந்தாவது பொய்யா மெய்யா என்று விசாரித்திருக்க மாட்டாரா? ஆதலால் அசுவத்தாமா இறந்ததைக்கேட்டுத் துரோணர் உயிரைவிட்டாரென்பது மிகவும் அசம்பாவிதம். மகருஷிகளின்வார்த்தைகளைக்கேட்டுத் துரோணர் அஸ்திரங்களையெறிந்தாரென்பதுமட்டும் உண்மை. ருஷிகள் யுத்தபூமிக்குவந்தார்களென்பதும் இயற்கைக்கு விரோதமானது. வீமனது நிந்தனையே அவர்மனத்தில் தைத்தது. யுத்தத்தைவிட்டு விலக அவரால் முடியவில்லை. விலகியிருந்தால் அவர் திறமையற்றவரென்றும் துரியோதனனுக்கு ஆபத்துவந்தகாலத்தில் அவனை விட்டுவிட்டவரென்றும் அவருக்கு அபவாதம் ஏற்படும். ஆகையாலேயே அவர் இறக்கத்துணிந்தார்.

(4) அநுக்ரமணிகாத்தியாயத்திலும் பர்வஸங்கிரகாத்யாயத்திலும் இதைப்பற்றி என்னசொல்லப்பட்டிருக்கிறதென்பதைச் சற்றுக் கவனிப்போம். அநுக்ரமணிகாத்தியாயத்தில் யுதிஷ்டிரன்,

"யதாஶ்ரௌஷம் த்ரோணமாசார்யமேகம்
த்ருஷ்டத்யும்நேநாதிக்ருத்ய ஸூதம் ।
ரதோபஸ்தே ப்ராயகதம் விஶஸ்தம்
ததா நாஶம்ஸே விஜயாய ஸஞ்ஜய ॥

"ஹே! ஸஞ்சயனே! ஒருவராயிருக்கிற துரோணுசாரியர் பிராயோபவேசத்திலிருந்தபோது திருஷ்டத்யும்நன் அவரை அதர்மமாக ரதத்தின்மீதே கொன்றுவிட்டானுதலால் நமக்கு வெற்றி கிடைக்குமென்று நம்பிக்கையில்லை" என்று புலம்பியதாகக் காணப்படுகிறது. ("பிராயோபவேசம்" என்பது எல்லா ஆசைகளையுமொழித்துப் பூமியில் தர்ப்பங்களைப்பரப்பி அவைகளின்மேல் படுத்து அன்னபானமின்றி ஈசுவரனைத் தியானஞ்செய்து பிராணனைவிடுதலாம்.)

ஆகையால் திருஷ்டத்யும்நனைத்தவிர வேறொருவரும் அதர்மம் செய்யவில்லையென்று ஸ்பஷ்டமாய்த் தெரிகிறது. பிராயோபவேசத்திலிருந்த பெரியாரை அவன் வதைத்தானென்பது அவனது பாபச்செயல். துரோணர் எதற்காக அப்படிப் பிராயோபவேசம் செய்தார் என்ற ஹேதுவைப்பற்றி அங்கு ஒன்றும் சொல்லவில்லை. யுதிஷ்டிரன்வாக்கியத்திலாவது, ருஷிகளின்வார்த்தைகளிலாவது, அல்லது வீமன்செய்த திரஸ்காரத்திலாவது அதைப்பற்றி யொன்றும் காணப்படவில்லை. துரோணர் யுத்தஞ்செய்து களைப்படைந்தபிறகே கொல்லப்பட்டார். சாகுந்தருவாயிலிருக்கிற வயதுசென்றபிராமணருக்குப் பிராயோபவேசத்தை அவலம்பிக்க அதுவே சரியான காரணமாகும்.

(5) பர்வசங்கிரகாத்தியாயத்தில் 'த்ரோணே நிஹதே' (துரோணர் யுத்தத்தில் கொல்லப்பட்டபோது) என்கிறவார்த்தைகளைத்தவிர வேறொருவார்த்தையையும் காணேம். 'அசுவத்தாமாவென்ற யானை கொல்லப்பட்டது என்கிற விருத்தாந்தம் உண்மையாயிருக்குமாஞல் அது அந்த அத்தியாயத்தில் அவசியம் வருணிக்கப்பட்டிருக்கும். அபிமன்யு அதர்மயுத்தத்திற் கொல்லப்பட்டான் என்கிற விருத்தாந்தத்தை அதிற் காண்கிறோம்.

(6) அதன்பிறகு துரோணபர்வத்தின் 7-8-ஆவது அத்தியாயங்களில் துரோணயுத்தத்தின் விருத்தாந்தம் சுருக்கமாக வருணிக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்திலும் இந்தக் கட்டுக்கதைகளைப்பற்றிய பிரஸ்தாவமே இல்லை. திருஷ்டத்யும்நன் துரோணரைக்கொன்றான் என்பதுமட்டும் இருக்கிறது. இந்த அத்தியாயங்கள் எழுதப்பெற்றகாலத்தில் இவ்விதமான பொய்க்கதைகள் தொகுக்கப்படவில்லைப்போலும்.

(7) ஸ்ரீகிருஷ்ணன் துவாரகைக்குத் திரும்பிவந்தார்; அப்பொழுது வஸுதேவர் கிருஷ்ணனிடம் யுத்தசமாசாரத்தைப்பற்றி வினவினார்; என்றும் ஆசுவமேதிகபர்வத்திலிருக்கிறது. "துரோணாசாரியரும் திருஷ்டத்யும்நனும் ஐந்துநாட்கள் போர்புரிந்தார்கள். கடைசியில் துரோணர் சிரமபரிகாரம்செய்துகொண்டிருக்கும்பொழுது அவனால் வதைக்கப்பட்டார்" என்றுமட்டுமே கிருஷ்ணன் வஸுதேவரிடம் தெரிவித்தார். யுவர்களோடு சண்டைசெய்வதில் வயதுசென்றவர்கள் களைப்படைவது இயல்பே.

துரோணர் யுத்தத்திலிருந்து விலகியதற்கு இதுவே உண்மையான காரணம். மற்றவை கவியின் கற்பனைகள் என்பதற்கு ஏழு காரணங்கள் காட்டியிருக்கிறோம்.

ஆனால் இவ்வுபந்நியாசத்தின் மத்தியில் ஸ்ரீகிருஷ்ணன் பொய்யாக வஞ்சனைசெய்தார் என்று நிறுவுதல் எதற்காக? அதன் காரணத்தை முன்பே குறித்திருக்கிறோம். ஞானம் எவ்விதம் ஈசுவரனாலளிக்கப்பட்டதோ, அவ்விதமே அஞ்ஞானமும் பிரமையும் ஈசுவரனாற் கொடுக்கப்பட்டதே. ஜயத்திரதவதத்திலேயே அதைக் கவி தெரிவித்திருக்கிறான். நற்புத்தி எவ்விதம் ஈசுவரனாற் கொடுக்கப்பட்டதோ அவ்விதமே துர்ப்புத்தியும் அவராற் கொடுக்கப்பட்டதென்று கடோற்கசவதத்தில் அறிவித்திருக்கிறான். ஸத்யமும் அஸத்யமும் ஈசுவரனாலேயே கொடுக்கப்பட்டனவென்று துரோணபர்வத்திற் குறித்திருக்கிறான்.

இதன் பிறகு நாராயணாஸ்திரமோக்ஷபர்வாத்தியாயம். அதைப்பற்றிச் சுருக்கமாய் விவரிப்போம். விஸ்தாரமாயுரைப்பதிற் பயனில்லை. அந்த அத்தியாயத்திற்கண்ட கதையே யியற்கைக்குப்

புறம்பானது. ஆனாலும் அவ்வத்தியாயத்தில் ஒரு இரகசியம் காணப்படுகிறது. இதுவே அந்த இரகசியம்:—

துரோணர் வதைக்கப்பட்டதால் அர்ஜுனன் துக்கத்தை யடைந்து யுதிஷ்டிரன் பொய்யுரைத்துத் துரோணரைக் கொல்வித்ததற்காக அவனை மிகவும் நிந்தித்தான். திருஷ்டத்யும்நனையும் பழித்தான். யுதிஷ்டிரன் தர்மாத்மாவாகையால் பொறுமையுடனிருந்து யாதொரு மறுமொழியும் சொல்லவில்லை. அர்ஜுனன் சிஷ்யனான ஸாத்தகியென்பான், தன் ஆசானுடைய கக்ஷியை எடுத்துக்கொண்டு திருஷ்டத்யும்நனைப் பலமாக வைதான். அவனும் தன் தேர்ப்பாகனோடுவந்து ஸாத்தகியுடன் போர்தொடுத்தான். இருவரும் ஒருவரையொருவர் கொல்வதற்காக நெடுநேரம் போர்செய்தார்கள். வீமனும் சகதேவனும் கிருஷ்ணனுடைய குறிப்பை அறிவதற்காக அவரை நோக்கினார்கள். அவர் ஒன்றும் சொல்லவில்லை; பொய்க்கதையையுரைத்துத் துரோணரைவதைத்தல் நியாயமாவென்று கிருஷ்ணனை இருகக்ஷிக்காரர்களும் கேட்டார்கள். ஆனால் ஸ்ரீகிருஷ்ணனைக்குறித்து ஒருவருமே அபவாதமொன்றும் சொல்லவில்லை. ஸ்ரீகிருஷ்ணசரித்திரம் இவ்வாறு மிகவும் தூய்மையுள்ளதாயிருக்கிறது.

---

## ஆறும் அதிகாரம்.

### ஸ்ரீகிருஷ்ணன் உரைத்த தர்மதத்வம்.

எவன் அசுவத்தாமாவின் வதத்தைக்குறித்துச்சொல்லியிருக்கிறானோ அவனே, கிருஷ்ணன் யுதிஷ்டிரன் பீமன் இவர்களைக் காட்டிலும் அர்ஜுனனுடைய தர்மபுத்தியே மேலானதென்றும் சொல்லி அவனை உயர்ந்த ஸ்தானத்தில் வைத்திருக்கிறான். யுதிஷ்டிரன் முதலிய்வர்கள் பொய்யுரைத்ததைச் சகியாமல் அர்ஜுனன் யுதிஷ்டிரரை நிந்தித்தான். அவன் அப்போது மோகத்தை யடைந்திருந்தபடியால் அப்படிச்செய்தான். பிறகு ஸ்ரீகிருஷ்ணனிடமிருந்து நல்லுபதேசங்களைப்பெற்று நல்லவழியில் திரும்பினான். அவ்விருத்தாந்தம் இதுவே:—

துரோணருக்குப்பின் கர்ணன் படைத்தலைவனாக நியமிக்கப் பட்டான். அவனுடன் பாண்டவர்படை பொருதபொழுது துர்ப் பாக்கியவசத்தால் யுதிஷ்டிரன் கர்ணனையெதிர்த்து அவனால் அடி பட்டு மிகவும் அஞ்சிப் போர்க்களத்தைவிட்டோடித் தனது கூடா ரத்துக்குப்போய்ப் படுக்கையிற் களைப்புடன் விழுந்தான். அர்ஜுனன் வெற்றியடைந்து யுதிஷ்டிரனை அங்கே காணாமல் அவனைத் தேடிக்கொண்டு கூடாரத்துக்கு வந்தான். அப்பொழுது கர்ணன் மரிக்கவில்லை. கர்ணனை அர்ஜுனன் கொல்லவில்லையென்று யுதிஷ்டிரர்கேட்டு மிகவும் கோபத்தையும் வருத்தத்தையும் அடைந்து அர்ஜுனனை வாய்க்குவந்தபடி நிந்தித்து 'நீ யெதிரியைக் கொல்லாமல் போரைவிட்டுவந்தபடியால் உனக்கு இனிக் காண்டீபம் தகுந்ததில்லை; அதை ஸ்ரீகிருஷ்ணனிடம் கொடுப்பாயாக' என்று சொன்னான். அர்ஜுனன் மிகவும் சினந்து கத்தியையெடுத்துக் கொண்டு யுதிஷ்டிரனை வெட்டிவிட எழுந்தான். ஸ்ரீகிருஷ்ணன் அவனைத் தடுத்து 'எவனைக் கொல்லப்போகிறாய்' என்று கேட்டார்.

'உனது காண்டீபத்தைப் பிறனிடம் கொடுத்துவிடுவாயாக வென்று எவன் என்னிடம் சொல்லுகிறானோ அவனுடைய தலை யைக்கொய்வதென்பது என்னுடைய இரகசியமான விரதம்; உமக்கு முன்பே மகாராஜர் என்னிடம் அவ்வாறு சொன்னார். என் பிர திக்ஞையையும் சத்தியத்தையும் காப்பதற்காக அவரைக்கொன்று கவலையொழிந்திருப்பேன்' என்று அர்ஜுனன் மறுமொழிகூறினான்.

இந்த வார்த்தை மூடனும் பாஷண்டனும் பேசும்பேச்சாயிருக் கிறதேயன்றி அர்ஜுனன்வாக்கிலிருந்துவரக்கூடியவார்த்தையா யில்லை. பூசிக்கத்தகுந்தவனான மூத்தசகோதரனைக் கொல்ல நினைப்பது மிகவும் பாபமான செயலாகும். 'சத்தியத்தைக் காக்க யுதிஷ்டிரனைக் கொல்வது என் கடமையாயிருப்பதால் நான் இப் போது என்னசெய்யவேண்டு'மென்று கிருஷ்ணனை அர்ஜுனன் கேட்டான்.

இதற்கு விடைபர்க யாதுசொல்வதென்று இதைப்படிப்போர் களை நாம் கேட்கிறோம். அவர்களெல்லோரும் ஒரேமனத்துடன்,

அர்ஜுனன் யுதிஷ்டிரனைக்கொல்வது முறையில்லையென்று சொல்வார்களென்பது நிச்சயம். ஸ்ரீகிருஷ்ணனும் அதே மறுமொழியுரைத்தார். அவர் பாரதவர்ஷத்தில் அவதரித்தவராகையால் நமது புராதனமான நீதியைப் பின்பற்றி அவ்வாறுரைத்தார். அவர் நீதியிற் சிறந்த பண்டிதர்.

ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்குபதேசித்தவற்றுள் அஹிம்ஸா பரமோதர்ம: (இமிசைசெய்யாமலிருப்பதே சிறந்த தர்மமாகும்) என்பது முதன்மையானது.

இதன்மேல் சிலர், ஹிம்ஸை செய்யாதிருத்தல் எல்லா இடங்களிலும் தருமமாகுமா? இவ்வாறுபதேசித்த கிருஷ்ணனே அர்ஜுனனைப் போரிலிழியும்படிசெய்தது முறையாகுமா? என்று வினவலாம்.

எவர்கள் அஹிம்ஸாதத்வத்தை நன்குயறியவில்லையோ அவர்களே இவ்விதமான ஆக்ஷேபணையைச் செய்யக்கூடும். எந்தநிலைமையில் எவ்விதமான ஹிம்ஸைசெய்தல் அதர்மமென்பதை நன்குய்க் கவனித்துத் தெரிந்துகொள்ளவேண்டும்.

பிராணிஹிம்ஸையின்றி, நாம் கணப்பொழுதாவது ஜீவித்திருக்கமுடியாது. நாம் தண்ணீர்குடிக்கும்போது ஆயிரக்கணக்கானவையும், கண்களுக்குப்புலப்படாதவையும், பூதக்கண்ணாடியின் உதவியாலேயே காணக்கூடியனவுமான சிறு பூச்சிகள் நமது வயிற்றுக்குள் பிரவேசிக்கின்றன. நாம் சுவாசம்விடும்போது எண்ணிறந்த சிறுபூச்சிகள் நமது நாசியில் நுழைகின்றன. காய்கறிகளை நறுக்கும்போதும் வேகவைக்கும்போதும் பலபிராணிகள் வதைக்கப்படுகின்றன. நாம் ஒவ்வொருகாலடி வைக்கும்போதும் பலபூச்சிகள் நசுக்கப்பட்டு நாசமடைகின்றன. இவையெல்லாம் அறியாமற்செய்யப்படுகிறபடியால் யாதொருபாபமும் வராதென்று சொல்லக்கூடும். நம் உயிரைக்காப்பாற்றிக்கொள்வதற்காக அறிந்தே நாம் அநேகசமயங்களில் பிராணிஹிம்ஸை செய்யவேண்டியிருக்கும். நமது வீடுகளிலோ, படுக்கைகளிலோ கொடிய பாம்பாவது, தேளாவது காணப்படுமாயின், அவைகளை நாம் நாசம்செய்யாவிடில் அவை நம்மை நாசம்செய்துவிடும். புலியொன்று நம்மைக் குறிவைத்து நம்மீது பாய்வதற்கு ஆயத்தப்படுமாயின் அதை நாம்

கொல்லாவிட்டால் நம்மை அது கொன்றுவிடும். நம்மை வதைப்ப தென நிச்சயித்துப் பகைவனொருவன் கையிலாயுதத்தையெடுத்து வருவானாஞல் அவனை நாம் வதைக்காவிடில், நம்மை அவன் வதைப்பானென்பதிற் சந்தேகமில்லை. நள்ளிரவில் திருடனொரு வன் கையில் ஆயுதத்தையெடுத்துக்கொண்டு நமதுவீட்டில் நுழைந்து நமது சொத்துக்களைத் திருடும்போது அவனைக் கொல் லாமல் சொத்துக்களைக் காத்துக்கொள்ள வேறொரு உபாயமும் இல்லாவிட்டால் அப்போ தவனைக் கொல்வதே தர்மசம்மதமாகும். கொலைசெய்தவனை வதைப்பது ராஜநீதியாகும். கொடுங்கோலரசர் கள் பிறருடைய நாடுகளை அபகரிக்க அக்கிரமமாகப் படையெடுப் பார்களாஞல் அவர்களையாவருமொன்றுகூடி யெதிர்த்துச் கொல்லு தலும் தர்மமேயாகும். இவ்விடங்களிளெல்லாம் ஹிம்ஸைசெய்தல் தர்மமேயாகும்.

ஒரு பறவை ஆகாயத்தில் பறக்கும்போது அதைத் தின்பதற் காகவோ விளையாட்டாகவோ அதை யெறிந்துவீழ்த்தல் மிகவும் பாவம். ஒரு தேனீ தனது ஆகாரத்திற்காகப் புஷ்பங்களில் தே னைப் பருகப்போனல், அதை ஒரு சிறுவன் விளையாட்டுக்காகப் பிடித்துக்கொல்வதும் அதர்மமே. விலங்கோ கோழியோ, ஜீவன யாத்திரையை நடத்தும்பொருட்டு உலகத்தில் வசிக்கின்றன. தன் வயிற்றைவளர்ப்பதற்காக ஒருவன் அதைக் கொன்று தின்றால் அது வும் அதர்மமாகும். நாம் எவ்விதம் காற்றினுற் சூழப்பட்ட பூமி யில் ஜீவிக்கிறேமோ அவ்வாறே மீன்களும் நீரில் வாழுகின்றன. நாம் அவைகளைப் பிடித்து உண்போமானல் அதுவும் அதர்ம மாகும். தர்மகாரியங்களிலன்றி மற்றிடங்களில் ஹிம்ஸைசெய்யாம லிருப்பதே பரமதர்மம். ஹிம்ஸிக்கிறவர்களை நிவாரணம் செய்வ தற்காக நாம்செய்கிற ஹிம்ஸையும் அதர்மமன்று; தர்மமேயாகும். இந்த நீதியை அர்ஜுனனுக்குத் தெளிவாகத் தெரிவிப்பதற்காகவே யொருகதையை ஸ்ரீகிருஷ்ணன் அவனுக்குரைத்தார்.

"பாலகனென்று ஒரு வேடனிருந்தான். அவன் சகல பிராணி களையும் கொல்வதான புலியொன்றைக்கொன்ருன். கொன்ற வுடன் ஆகாசத்திலிருந்து அவனது தலையிற் பூமாரி பொழிந்தது;

அவனைச் சுவர்க்கத்துக் கழைத்துப்போவதற்காக விமானமும் தேவலோகத்திலிருந்து வந்திறங்கியது. ஹிம்சைசெய்வதான துஷ்டமிருகத்தைக் கொன்றதே அவனுக்குப் புண்ணியமாகமுடிந்தது.

* * * *

அர்ஜுனனுக்குப் பிராந்தி (மோகம்) ஏற்பட்டது. ஸத்தியத்தைக் காப்பதற்காக யுதிஷ்டிரனைக்கொல்வதே தர்மமென்றும் தனது கடமையென்றும் அவன் நினைத்தான். அஹிம்சை பரம தர்மமென்று அவனுக்குரைப்பதால்மட்டும் அவனுடைய மோகம் விலகாது. ஆகையால் ஸ்ரீகிருஷ்ணன் மறுபடியும் அவனுக் குபதேசஞ்செய்யவேண்டியதாயிற்று. அவருடைய இரண்டாவது உபதேசம்,

ப்ராணிநாமவதஸ்தாத ஸர்வஜ்யாயாந் மதோ மம।
அந்ருதாம் வா வதேத்வாசம் ந து ஹிம்ஸ்யாத் கதஞ்சந॥

'பிராணிகளை ஹிம்ஸைசெய்யாமலிருப்பதே பரமதர்மமென்பது என் அபிப்பிராயம்; பொய்யையாவது சொல்லலாம்; ஒருபோதும் ஹிம்சைசெய்யவேகூடாது' என்பதாம். அதாவது அஹிம்ஸை சத்தியம் என்னும் இரண்டனுள் அஹிம்ஸையே மேலானது. அநேகவிதங்களான தர்மங்களைப் புண்ணியமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். தானம், தபஸ், தெய்வபக்தி, ஸத்யம், சௌசம், அஹிம்ஸை முதலானவைகள் தர்மங்களெனப்படும். இவைகளில் ஒன்றிற்கும் மற்றொன்றிற்கும் வேறுபாடுண்டு. சௌசமும் கொடையும் சத்தியத்துக்கும் அஹிம்ஸைக்கும் ஸமானமாகுமா? அவைகளுக்குள் தாரதம்மியமிருக்குமானால் எது எல்லாவற்றிற்கும் சிறந்தது? ஸ்ரீ கிருஷ்ணன் சிறந்தது அஹிம்ஸையென்றும் மற்றவை அதற்குக் கீழ்ப்பட்டனவென்றும் உரைத்தார். மேலும் பொய்யையாவது சொல்லவேண்டும், அல்லது கொலையையாவது செய்யவேண்டும் என்று ஒருசமயத்தில் ஆவசியகமேற்படும்பக்ஷத்தில் பொய்யையாவது சொல்லலாம்; கொலைசெய்யவேகூடாது.

இதுவே ஸ்ரீகிருஷ்ணனுடைய அபிப்பிராயம். அவர்சொற்படி அவன் நடப்பானானால், பிராதாவைக்கொல்வதாகச்சொன்ன பாபம் அவனை அணுகாது.

அப்போது அர்ஜுனன் "உங்கள் அபிப்பிராயப்படி நான் செய்வேனானால் உலகத்தார் என்னைப் பொய்சொல்லுகிறவனென்றும், சத்தியத்திலிருந்து நழுவினவனென்றும் நிந்திப்பார்கள்." என்று சொன்னான்; ஆதலால் ஸ்ரீகிருஷ்ணன் அவனுக்கு உலக நீதியின்படியும் உபதேசித்தார்.

"ஏ! தனஞ்சய! உங்கள் பிதாமஹரான பீஷ்மர், தர்மராஜரான யுதிஷ்டிரர், விதுரர், குந்திதேவி: இவர்கள் எந்தத் தர்ம ரகசியத்தைச் சொல்லியிருக்கிறார்களோ அதையே நான் உனக்குச் சொல்லுவேன். ஸாதுக்களே உண்மையுரைப்பார்கள்; ஸத்யத்தைக்காட்டிலும் வேறொன்று பெரிதன்று; ஸத்யத்தின் தத்வத்தையறிதல் மிகவும் கடினமானது; உண்மையையே பேசவேண்டும்; இது பொதுப்படையான நீதி. ஆனால் எவ்விடத்தில் பொய்யானது உண்மைவடிவாயும், மெய்யானது பொய்யுருவாயுமிருக்கிறதோ அவ்விடத்தில் பொய்யையுரைப்பதில் யாதொரு பாபமுமில்லை. விவாகம், ரதிக்கிரீடை, உயிரைக் காப்பாற்றும் சமயம், எல்லாச் செல்வமும் அபகரிக்கப்படுங்காலம்: இவைகளிலும் பிராமணர் விஷயமாகவும், பொய்சொன்னால் பாபம் நேரிடாது" என்று கூறுகிறார்கள். நீதிநூல்களில் இவ்விஷயமாகச் சில சுலோகங்கள் காணப்படுகின்றன.

(1) 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌤𑍍𑌯𑌯𑍇 𑌵𑌿𑌵𑌾𑌹𑍇 𑌚 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑌨𑍃𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌪𑌹𑌾𑌰𑍇 𑌚 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑌨𑍃𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

(2) 𑌵𑌿𑌵𑌾𑌹𑌕𑌾𑌲𑍇 𑌰𑌤𑌿𑌸𑌂𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑍇
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌤𑍍𑌯𑌯𑍇 𑌸𑌰𑍍𑌵𑌧𑌨𑌾𑌪𑌹𑌾𑌰𑍇 ।
𑌵𑌿𑌪𑍍𑌰𑌸𑍍𑌯 𑌚𑌾𑌰𑍍𑌥𑍇 𑌹𑍍𑌯𑌨𑍃𑌤𑌂 𑌵𑌦𑍇𑌤
𑌪𑌞𑍍𑌚𑌾𑌨𑍃𑌤𑌾𑌨𑍍𑌯𑌾𑌹𑍁𑌰𑌪𑌾𑌤𑌕𑌾𑌨𑌿 ॥

இவ்விரு சுலோகங்களுக்கும் பொருள் ஒன்றுதான். ஆனால் முதற் சுலோகத்தில் பிராமணர்களைப்பற்றிய பிரஸ்தாவமில்லை. ஒரே அர்த்தமுள்ள இரண்டு சுலோகங்களை எடுத்துக்காட்டுவதாற் பயன் யாதென இதைப் படிப்போர் வினவக்கூடும். இவ்விரண்டு சுலோகங்களும் வெவ்வேறிடங்களிலிருந்து எடுத்தெழுதப்பட்டன வென்பதே அதற்குச் சரியான விடையாகும். அவைகள் ஸ்ரீ கிருஷ்ணனுடைய வாக்கியங்களல்ல. வெவ்வேறு கிரந்தங்களிலிருந்து எடுத்தெழுதப்பட்டவை. இரண்டாவது சுலோகம், வாஸிஷ்ட ஸ்மிருதியின் 35-வது அத்தியாயத்தில் 16-வது சுலோகம். மகாபாரதம் ஆதிபர்வத்தின் 3412 வது சுலோகமும் அதுவே. எவ்விடத்தில் ஸ்ரீகிருஷ்ணனுக்கு யாதொரு சம்பந்தமுமில்லையோ, அவ்விடத்தில் மேற்கண்ட சுலோகம் மாறுதலாய் எழுதப்பட்டிருக்கிறது.

𑌨 𑌨𑌰𑍍𑌮𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌵𑌚𑌨𑌂 𑌹𑌿𑌨𑌸𑍍𑌤𑌿
𑌨 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌷𑍁 𑌰𑌾𑌜𑌨𑍍 𑌨 𑌵𑌿𑌵𑌾𑌹𑌕𑌾𑌲𑍇 ;
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌤𑍍𑌯𑌯𑍇 𑌸𑌰𑍍𑌵𑌧𑌨𑌾𑌪𑌹𑌾𑌰𑍇
𑌪𑌂𑌚𑌾𑌨𑍃𑌤𑌾𑌨𑍍𑌯𑌾𑌹𑍁𑌰𑌪𑌾𑌤𑌕𑌾𑌨𑌿 ॥

நான்குவிஷயங்களைத்தவிர ஐந்தாவது விஷயத்தைப்பற்றிய வார்த்தையொன்று மிங்குக் காணவில்லை. ஆனால் வஸிஷ்டிர் வாக்கியமான ‘𑌪𑌂𑌚𑌾𑌨𑍃𑌤𑌾𑌨𑍍𑌯𑌾𑌹𑍁𑌰𑌪𑌾𑌤𑌕𑌾𑌨𑌿’ என்ற வசனத்தைமட்டும் காண்கிறோம். ஜனங்களால் அடிக்கடி உரைக்கப்பட்ட சுலோகங்கள் இவ்விதமாக மாறுதலையடைகின்றன. முந்தின சுலோகங்களில் முதலாவது சுலோகத்தையும் இதனுடன் சேர்த்தெழுதுவோம்:—

1. 𑌭𑌵𑍇𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌮𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑌨𑍃𑌤𑌂𑌭𑌵𑍇𑌤𑍍 !
2. 𑌯𑌤𑍍𑌰𑌾𑌨𑍃𑌤𑌂𑌭𑌵𑍇𑌤𑍍 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌚𑌾𑌪𑍍𑌯𑌨𑍃𑌤𑌂𑌭𑌵𑍇𑌤𑍍 ।
3. 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌤𑍍𑌯𑌯𑍇𑌵𑌿𑌵𑌾𑌹𑍇𑌚𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑌨𑍃𑌤𑌂𑌭𑌵𑍇𑌤𑍍 ।
4. 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌪𑌹𑌾𑌰𑍇𑌚𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑌨𑍃𑌤𑌂𑌭𑌵𑍇𑌤𑍍 ।

இப்பொழுது மகாபாரதம் ஸபாபர்வத்திலிருந்து 13544வது சுலோகத்தை யெடுத்தெழுதுவாம். (அவ்விடத்தில் ஸ்ரீகிருஷ்ணனுக்கு யாதொரு சம்பந்தமுமில்லை.)

5. ப்ராணாத்யயே விவாஹே ச வக்தவ்யமந்ருதம் பவேத் ।

6. அந்ருதே ச பவேத்ஸத்யம் ஸத்யே சைவாந்ருதம் பவேத் ।

3—5ஆவது சுலோகங்களும், 2—6ஆவது சுலோகங்களும் ஒன்றே யென்பதை யிதைப் படிப்போர் காணலாம். வார்த்தைகளும் பெரும்பாலும் ஒன்றே. இவைகள் எல்லா ஜனங்களாலும் அடிக்கடி சொல்லப்படுகிற புராணவசனங்கள்.

இது ஸ்ரீகிருஷ்ணனுடைய அபிப்பிராயமில்லை. இது தம்மால் அங்கீகரிக்கப்பட்ட நீதியென்றும் அவர் சொல்லவில்லை. பெரியோர்களான பீஷ்மர் முதலியவர்களிடமிருந்து தாம் கேள்விப்பட்ட பிரகாரம் அவர் அர்ஜுனனுக்கு அதை உபதேசித்தார். கிருஷ்ண சரித்திரத்தில் இவ்விதமான நீதிகள் யதார்த்தங்களா? அன்றா? வென்று விசாரிப்பதில் ஒரு பிரயோசனமும் ஏற்படாது.

நிலைமைகளின் மாறுபாட்டினால் பொய்யும் உண்மையாகலாம்; உண்மையும் பொய்யாகலாம். அதைப்பற்றி முதலில் விசாரித்தல் வேண்டும். எது தர்மத்துக்கு ஒத்ததோ அதே உண்மை; எது தர்மத்துக்கு ஒவ்வாததோ அதுவே பொய்யாகும். ஆகையால் ஸ்ரீகிருஷ்ணன் முதலில் தர்மதத்வத்தை நிர்ணயம் செய்தார். பகவத்கீதையில் உதாரமாயும் கெம்பீரமாயும் பகவான் சொல்லுகிறார்:—

தர்மத்தையும் அதர்மத்தையும் நன்றாய்த் தெரிந்துகொள்ள விசேஷமான லக்ஷணங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப்பற்றி நாம் குற்றங்கூறவில்லை. சுருதியிலிருந்து எடுக்கப்பட்டதாக அநேக தர்மங்கள் கூறப்பட்டிருக்கின்றன. சிற்சிலசமயங்களில் இரகசியதர்மங்கள் அநுமானத்தாலேயே நிர்த்தேசஞ்செய்யப்படுகின்றன. எவைகள் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவைகளையே ஆதாரமாகக்கொள்ளவேண்டும். நம் தேசத்தில் இன்றுவரை தர்மத்தையறிவதற்கு வேதங்களே ஆதாரமாயிருக்கின்றன. வேதங்களை யநுசரித்தவைகளும் ருஷிகளாற் சொல்லப்

பட்டனவுமான ஸ்மிருதிகளும் ஆதாரங்களே. அநுமானத்தால் தர்மத்தைத் தெரிந்துகொள்ளுதல் நிஷித்தம். ஆதர்சபுருஷரான ஸ்ரீகிருஷ்ணன் உலகத்தின் நன்மைக்காக இவ்விஷயத்தைக் குறித்து எவ்விதமாக வியாக்கியானம் செய்திருக்கிறாரென்பதை முன்னமேயே நாம் கண்டிருக்கிறோம். இவ்விதமாயிருக்கிற ஹிந்துக்களின் தர்மஞானத்தைக்கண்டு யாவரும் ஸ்ரீகிருஷ்ணனைச் சரணமடைய விரும்புவார்களென்பதிற் சந்தேகமில்லை.

* * * * *

"பிராணிகளைக் காத்ததலாலேயே தர்மத்துக்குத் 'தர்மம்' எனும் பெயர் வந்தது. அதாவது எதன்மூலம் சகலபிராணிகளுக்கும் காப்பு ஏற்படுமோ அதுவே தர்மமாகும். ஜகதீசன் எங்குமுள்ளவன், ஸர்வமயமானவன்; அவன் ஸர்வவியாபியாகையால் ஹிதமுரைப்பதும் அவனுடையதேயாகும். ஸ்ரீகிருஷ்ணன் வாக்கியங்களில் காணக்கூடிய தர்மலக்ஷணம் இதுவே.

எது தர்மத்துக்கு ஒத்ததோ அதுவே ஸத்தியம் என்பதை முன்பே சொல்லியிருக்கிறோம். இந்த உண்மையை அர்ஜுனனுக்குப்போதிக்குமுன் ஸ்ரீகிருஷ்ணன் முகவுரையாகக் கௌசிக விருத்தாந்தத்தையுரைத்தார். அந்தக் கதை இதுவே:—"கௌசிகனென்று பெயருடன், கற்றறிந்தவனும், தெய்வவழிபாடுடையவனுமான ஓர் அந்தணனிருந்தான். அவன் அநேக நதிகள் ஒன்றுகூடுகிற ஓரிடத்திலிருக்கிற அரண்யத்தில் வாசஞ்செய்தான். அவன் எப்பொழுதும் உண்மைபேசுபவன்; உண்மையுரைப்பவனெனப் பெயர்பெற்றிருந்தான். ஒருநாள் சில ஜனங்கள் திருடர்களுக்குப் பயந்து ஓடிவந்து அக்காட்டில் நுழைந்தார்கள். திருடர்கள் அந்த ஜனங்களை அங்குமிங்கும் தேடிக் காணாமல் கௌசிகனிடம் வந்து "ஹே! பகவானே! சிலஜனங்கள் இந்தத் திக்கைநோக்கி யோடி வந்தார்கள்; அவர்கள் எந்தவழியாகச் சென்றார்கள் என்பது உங்களுக்குத்தெரியுமானால் நீங்கள் சொல்லவேண்டும்; நீங்கள் உண்மையேயுரைப்பதென்ற விரதம்பூண்டவர்கள்; தயவுசெய்துசொல்லவேண்டும்" என்று வினயத்துடன் கேட்டார்கள். திருடர்களின் பிரார்த்தனையைக்கேட்டு உண்மையுரைப்பவனான பார்ப்பனன்,

"இந்த வனத்திலேயே மரங்களிலும் புதர்களிலும் செடிகொடிகள் படர்ந்த இடங்களிலும் மறைந்துகொண்டிருக்கிறார்கள்" என்று சொன்னான். அந்தத்துஷ்டர்கள் அந்த மனிதர்களைப்பிடித்து அவர்களின் சொத்துக்களைக் கொள்ளையடித்து அவர்களையும் வதைத்தார்கள். தர்மஸூக்ஷ்மத்தையறியாத அந்தப் பிராமண னும் சமயமில்லாதவிடத்தில் உண்மைசொன்னதற்காகப் பாபத் தையடைந்து கோரமான நரகத்தில் தள்ளப்பட்டான்."

இவர்கள் திருடர்களென்றும், ஜனங்களுக்குத் தீங்குசெய்யும் உத்தேசத்துடன் வனத்துக்கு வந்திருக்கிறார்களென்றும் கௌசிக னுக்குத்தெரியும். அந்த விஷயத்தையறிந்தவனாயிருந்தும் உண்மை யுரைத்ததால் அவனுக்குப் பாபம் சம்பவித்தது. அந்த விஷயம் அவனுக்குத் தெரியாவிடில் மெய்சொன்னதால் பாபம் ஏற்பட் டிராது. ஸ்ரீகிருஷ்ணனுடைய கொள்கையும் அதுவே. அவ ருடைய அபிப்பிராயம் சரியன்றென்று சிலர் நினைக்கலாம். அவர் கள் கௌசிகன் என்னசெய்திருத்தல்வேண்டுமென்றும் நம்மை வினவக்கூடும். நாம் பதில்சொல்லுவோம். "கௌசிகன்" ஏன் மௌனமாயிருக்கக்கூடாது? திருடர்கள் அவனைத் தொந்தரவு செய்தாலும் அவன் பிராணனையிழந்தாவது, பேசாமலிருப்பதே உசிதமன்றோ? இவ்விதம் உலகத்தில் நடப்பது சம்பாவிதமா? என்று நம்மைக் கேட்கலாம். இவ்விடத்துச் சாங்கிய சாஸ்திரத்தி லுள்ள ஒரு ஸூத்ரம் நமது ஞாபகத்துக்கு வருகிறது. மகருஷி யான கபிலர்,

"நாஶக்யோபதேஶவிதிருபதிஷ்டேऽப்யநுபதேஶ:"

(முதலாவது அத்தியாயம் 9-வது ஸூத்ரம்)

(உபதேசமென்றவிதியை விவரிக்கமுடியாது. உபதேசிக்கப் பட்டாலும் அது உபதேசிக்கப்படாததுபோலாகும்.) என்று சொல்லுகிறார்.

இவ்விதமான தர்மத்தைப் பிரசாரம்செய்வது பயனுள்ளதாக ஏற்படுமானால் மனுஷ்யஜாதிக்கே மங்களமுண்டாகும்.

ஸ்ரீகிருஷ்ணனுரைத்த நீதியை நாம் தழுவினால், கொலைசெய் தவன் உயிரைக் காப்பதற்காகப் பொய்யுரைத்தாலும் தர்மமாக

ஏற்படுமே என்று சிலர் ஆக்ஷேபிக்கக்கூடும். பகவான் அவ்விதம் சொல்லவேயில்லை. கொலைசெய்தவனைத் தண்டிக்கவேண்டும். அவனைத் தண்டித்தலே தர்மமாகும். கொலைசெய்தவனைத் தப்புவிப்பதற்காக எவன் பொய்சொல்லுகிறானோ அவன் அதர்மம் செய்தவனாகிறான். சத்தியத்தை யெக்காலத்திலும் காப்பாற்ற வேண்டுமென்கிற நியமமில்லாவிடில் மனிதர்களுக்குள் உண்மையே அற்றுப்போகும். பிராசீனர்களான மகருஷிகள் அவ்விதம் சொல்லவேயில்லை. எந்தச்சமயத்திற் பொய்சொல்லுவது நியாயமாகும் என்று அவர்கள் வகுத்திருக்கிறார்கள். "ப்ராணாத்யயே" என்பது முதலான விலக்குகளை நாம் ஏற்கனவே கூறியுள்ளோம். மனு, கௌதமர் முதலான ஸ்மிருதிகர்த்தர்களின் அபிப்பிராயமும் அதுவே.

தானம், தபஸ், சௌசம், ஆர்ஜவம் (ஒழுங்குதவறாமை) முதலிய அநேக தர்மங்களை நாம் தர்மமென்று சொல்லுகிறோம். இவைகள் சிலசமயங்களில் மட்டும் தர்மமாகும். வேறுசிலசமயங்களில் அதர்மமாகவும் ஏற்படும். பயனில்லாமல் வார்த்தைகளை யுரைப்பது அதர்மம். களவு முதலிய கொடியதொழில்களைச் செய்பவர்களுக்குக்கொடுத்தல் அதர்மமாகும்; கொடியவர் திரவியத்தைத் துர்வினியோகம் செய்வதால் ஏற்படும் பாபமும் திரவியம் கொடுத்தவனையே சேரும். உண்மை சம்பந்தமாயும் ஸ்ரீகிருஷ்ணன் இரண்டு உதாரணங்களைக்காட்டியிருக்கிறார். ஒன்றை முன்பே கூறியிருக்கிறோம். இரண்டாவது உதாரண மிதுவே:—

எச்சமயத்திற் பொய்சொல்லுவதால் திருடர்களிடமிருந்து ஜனங்கள் தப்பிவிடுவார்களோ அந்தச்சமயத்திற் பொய்சொல்லுவதே நல்லதாகும். அந்தப் பொய்யும் உண்மைவடிவாகவேயிருக்கும்.

ஸ்ரீகிருஷ்ணனால் சொல்லப்பட்ட தர்மத்தின் ஸூக்ஷ்மதத்வம் இதுவே:—

(1) எது தர்மத்துக்கு ஒத்ததோ அதுவே ஸத்யம். எது தர்மத்துக்கு விரோதமானதோ அது அஸத்யம்.

(2) எவைகள் உலகத்துக்கு நன்மைபயக்கக்கூடியவைகளோ அவைகளே தர்மமாகும்.

(3) ஆதலால் எவைகளிலிருந்து உலகத்திற்கு நன்மையேற் படுமோ அவைகளே ஸத்யம். அதற்கு விரோதமானது அஸத்ய மாகும்.

(4) இவ்விதமான ஸத்யத்தையே நாம் கைக்கொள்ளவேண் டும்.

ஸ்ரீகிருஷ்ணன்வாக்கியங்களைக்காட்டிலும் மேலான தர்மோப தேசம் எங்கேயாவது நாம் காண்போமானால், நாம் அந்த உபதே சத்தையே கடைப்பிடித்துக் கிருஷ்ணனது அபிப்பிராயத்தை விட்டுவிட ஸித்தமாயிருக்கிறோம். எதிர்வாதம் செய்கிறவர்களால் அவ்விதமான உபதேசத்தைக் காண்பிக்கமுடியாவிடில், ஆதர்ச புருஷரான ஸ்ரீகிருஷ்ணன்வாக்கியத்தையே அவர்களும் அவலம் பிக்கவேண்டும்.

முடிவாக நாம் சொல்லுவதாவது:—

எதனால் உலகத்துக்குக் காவலும் நன்மையும் ஏற்படுமோ அதுவே தர்மமாகும். ஸ்ரீகிருஷ்ணன் உபதேசப்படி ஹிந்துதர்மத் தின் மூலஸ்வரூபத்தை நாம் கிரகித்துக்கொண்டால் ஹிந்துதர்ம மும் ஹிந்துஜாதியும் விரைவில் உயர்வடையும்; மற்றைய தர்மங்க ளான சாம்பற்குவியல்களினிடையே ஹிந்துதர்மமாகிற பிரசண்ட மாருதம் ஓங்கிவீசுமானால், மற்றைய தர்மங்கள் போன இடம் தெரி யாமல் பறந்துபோம். தர்மவிரோதமானவற்றை நாம் தள்ளிவிட் டால் நந்தேசத்தைவிட்டுத் தீயகாரியங்கள் விலகிவிடும். ஸத்கர்மங்க ளும், நல்ல அநுஷ்டாநங்களும் நம்மிடையே ஓங்கிவளரும். அப் பொழுது பரஸ்பர விரோதம் நம்தேசத்தைவிட்டு விலகிப்போம். ஸ்ரீகிருஷ்ணனால் உபதேசிக்கப்பெற்ற உயர்ந்த தர்மத்தை அநுஷ் டானஞ்செய்யாவிட்டால் நாம் கிருஷ்ணபக்தர்களாகமாட்டோம். நாம் எல்லோரும் ஒரேமனதுள்ளவர்களாகி 'ஓம் நமோ பகவதே வாஸுதேவாய' என்று பலதடவையுரைத்துக் கிருஷ்ணமூர்த்தியி னுடைய பாதகமலங்களை வணங்கி அவரால் உபதேசிக்கப்பெற்ற தும் லோகத்துக்கு நன்மைபயப்பதுமான தர்மத்தைக் கைக்கொள் வோம். அப்போதுதான் நாம் ஹிந்துஜாதியின் உயர்வைக் கருதின வர்களாக ஆவோம்.

## ஏழாம் அதிகாரம்.

### கர்ணவதம்.

ஸ்ரீகிருஷ்ணன் உபதேசித்ததை அர்ஜுனன் தெரிந்துகொண்டான். ஆனாலும் அர்ஜுனன் க்ஷத்திரியனாகையால் தனது கடமையை நிறைவேற்றவேண்டியிருந்தது. தனது பிரதிக்ஞையைக் காப்பாற்றவேண்டியது அவன் கடமை. ஆகையால் நல்லுபதேசத்தையும், கடமையையும் காப்பாற்றுவதற்கு, ஒரு உபாயத்தை உரைக்கும்படி அவன் ஸ்ரீகிருஷ்ணனைக் கேட்டுக்கொண்டான்.

ஸ்ரீகிருஷ்ணன் "மரியாதையுள்ளவனுக்கு அவமானமே மிருத்யுஸ்வரூபம். யுதிஷ்டிரனை நீ அவமரியாதையாக ஒரு வார்த்தை சொல்வாயானால் அவ்வார்த்தையே அவனைக் கொன்றதுபோலாகும்." என்றார். உடனே அர்ஜுனன் யுதிஷ்டிரனிடம் அவமரியாதையாக ஒருவார்த்தையுரைத்தான். அவனுக்கு உடனே வருத்தமுண்டாகிப் பெரியோரை நிந்தித்ததற்காக மிகவும் தவித்தான். அவன் "நான் ஜேஷ்டப்பிராதாவை நிந்தித்த பெரிய பாவத்தைச் செய்தேன். ஆகையால் நான் தற்கொலைபுரிந்துகொள்வேன்" என்று சொல்லித் தனது கத்தியை யுருவினான். அப்பொழுது இறத்தலுக்குச் சமானமான ஒரு உபாயத்தை ஸ்ரீகிருஷ்ணன் அவனுக்குச் சொன்னார். தற்புகழ்ச்சிசெய்துகொள்வதே, இறத்தலுக்குச் சமானம். அர்ஜுனன் அநேகவிதமாகத் தன்னைப்பற்றியே புகழ்ந்துகொண்டான். அர்ஜுனன்வருத்தமும் நீங்கியது.

ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனது தேர்ப்பாகனாக இருந்து எவ்வாறு குதிரைகளை அடக்கியாண்டாரோ அவ்வாறே அவனையும் அடக்கியாண்டார். ஆனால் தேரை நடத்தும்போது அவர் அர்ஜுனனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார். இச்சமயம் கர்ணனை வதைக்கும்படி அர்ஜுனனுக்கு அவர் கட்டளையிட்டார்.

கர்ணவதமென்பது மகாபாரதத்திலே யாவருமறியமுடியாத ஓர் இரகசியச்செயல். வெகுநாளாகவே இதன் மர்மம் தெரியப்படாமலிருந்தது. அர்ஜுனனே கர்ணனுக்குத் தகுந்த எதிரியாவான். வீமன், அர்ஜுனன், நகுலன், சகதேவன் ஆகிய நான்கு

பெயர்களும் சேர்ந்து யுதிஷ்டிரனுக்காகத் திக்குவிஜயம் செய்தார்கள்; கர்ணன் ஒருவனுகவே துரியோதனனுக்காகத் திக்குவிஜயம் செய்தான். அர்ஜுனன் துரோணருடைய சிஷ்யன்; கர்ணனே துரோணரின் ஆசார்யரான பரசுராமனுடைய சிஷ்யன். அர்ஜுனனிடம் காண்டீபமென்ற வில் இருந்தது; கர்ணனிடமோ அதைக் காட்டிலும் சிறந்ததான விஜயமென்ற வில் இருந்தது. அர்ஜுனனுக்குக் கிருஷ்ணன் தேர்ப்பாகன்; கர்ணனுக்கோ மகாவீரனுன சல்லியவரசன் சாரதி. இருவரும் பல திவ்யாஸ்திரங்களைக் கற்றவர்கள். அவர்கள் ஒருவரையொருவர் கொல்லவேண்டுமென்று வெகுநாளாகப் பிரதிக்ஞைசெய்திருந்தார்கள். துரோணரைக் கொல்லுவதில் அர்ஜுனன் அதிகமுயற்சியெடுத்துக்கொல்லவில்லை; ஆனால் கர்ணனைக்கொல்லுவதில் அவனுக்கு மிகவும் சிரமமேற்பட்டது. குந்திதேவி கர்ணனிடம் தான் அவனைப் பெற்ற தாயெனத் தெரிவித்துப் பாண்டவர்களைக் காப்பாற்றும்படி அவனைக் கேட்டுக்கொண்டாள். கர்ணன் சம்மதித்தானுனலும் அர்ஜுனனைக்காக்க அவன் உடன்படவில்லை. நான் அவனைக்கொல்லவேண்டும்; அல்லது அவன்கையால் நான் சாகவேண்டுமென்று தாயான குந்திதேவியிடம் அவன் தெரிவித்துக்கொண்டான்.

அவனுடன் போர்செய்தற்கு ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனை அழைத்துப்போனுர். போர்க்குப்போகுமுன் அர்ஜுனனை, யுதிஷ்டிரனிடம் அழைத்துப்போனுர். அர்ஜுனன் யுதிஷ்டிரனை வணங்கி அவனிடம் மன்னிப்பைப் பிரார்த்தித்தான். பிறகு கர்ணனுடன் போர்செய்வது மிகவும் கடினமான காரியமென்றும், கர்ணன் போர்செய்து களைப்படையும்போது, அர்ஜுனன் தன்வலியை யுபயோகித்து அவனை வதைக்கவேண்டுமென்றும் ஸ்ரீகிருஷ்ணன் கட்டளையிட்டார். அவர் அர்ஜுனனை உற்சாகப்படுத்துவதற்காக அவனைப் பலவாறு புகழ்ந்து, அவன் முன்செய்த பெரிய காரியங்களையெல்லாம் அவனுக்கு நினைப்பூட்டினுர். துரௌபதியின் அவமானத்தையும், அபிமன்யுவைக் கொல்லுவதற்காகக் கர்ணன்செய்த அக்கிரமங்களையும், மற்றைக் கொடியகார்யங்களையும் அர்ஜுனனுக்கு நினைப்பூட்டினுர். இங்கே ஸ்ரீகிருஷ்ணன் தான்

விஷ்ணுவின் அவதாரம் என்று சொல்லிக்கொள்ளவேயில்லை. தன் தெய்வத்தன்மையை ஓரிடத்திலும் காட்டிக்கொள்ளவுமில்லை.

பிறகு கர்ணன் அர்ஜுனன் இருவர்க்கும் போர்தொடங்கியது. கர்ணன்விடுத்த நாகாஸ்திரத்திலிருந்து அர்ஜுனனை ஸ்ரீ கிருஷ்ணன் ரக்ஷித்தார். தானே இந்த அஸ்திரத்தைத்தடுப்பதற்கு அர்ஜுனனிடம் வல்லமையில்லை. ஆகையால் கிருஷ்ணன் தன் காலால் ரதத்தைப் பூமியில் சற்று அழுந்தும்படிசெய்தார். குதிரைகளும் முழங்கால்களைப் பூமியில்வைத்து மண்டியிட்டன. அர்ஜுனன் தலை தப்பியது; கிரீடம் உடைந்துவிட்டது. இந்தக் கதை பரிசிலனைசெய்யத்தகுந்ததில்லை.

போரினிறுதியில் கர்ணனுடைய தேர்ச்சக்கரங்கள் பூமியில் அழுந்தின. கர்ணன் தேரைக் கிளப்பிவிடமுயன்றும் பயன்படவில்லை. அப்பொழுது தனக்குச் சிறிது அவகாசம் கொடுக்கும்படி அவன் அர்ஜுனனைவேண்டினான். கர்ணன் அவகாசம்பெற்றுத் தன் தேரின்மீதேறி மறுபடியும் போர்செய்யத்தொடங்கினான்.

அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் கர்ணனிடம் "ஹே! ஸூதன் புதல்வனே! உனது பாக்கியவசத்தால் இக்கணத்தில் தர்மத்தை நினைத்தாய். வலிமையில்லாதவர்கள் தங்களுக் காபத்துவந்தபோது தெய்வத்தை நிந்திப்பார்கள்; தங்களுடைய கர்மத்தின் பயனென்று நினைப்பதில்லை. உனது தூண்டுதலால் ஒரே வஸ்திரத்துடனிருந்த திரௌபதியைத் துரியோதனனும் துச்சாதனனும் சபைக்கு இழுத்துவந்தார்களன்றோ! அப்பொழுது உனது தர்மம் எங்கேயிருந்தது? உனது அனுமதியின்பேரில் துஷ்டனான சகுனியானவன் சூதாடத்தெரியாதவனான யுதிஷ்டிரனை ஆட்டத்தில் தோற்கச்செய்தானே! அப்பொழுது உன் தர்மம் எங்கேயிருந்தது; ஹே! கர்ண! அக்காலங்களில் அதர்மங்களைச்செய்துவிட்டு, இப்பொழுதுமட்டும் 'தர்மம்', 'தர்மம்' என்று தொண்டையுலர்ந்துபோகக் கதறுகிறாயே! அதனால் என்னலாபம்? நீ இதுவரை அதர்மங்களைச் செய்துவிட்டு, வாழ்நாண்முடிவில் தர்மத்தை நினைப்பதால் முக்தியடையலாமென்று நினைக்கிறாயே! அந்த எண்ணம் வீணேயாகும். பூர்வத்தில் நிஷதவரசனான நளன் சூதாட்டத்தில்

ராஜ்யத்தையிழந்து எவ்வாறு மறுபடியும் ராஜ்யத்தையடைந்தானோ, அவ்வாறே தர்மத்தையே நம்பிக்கொண்டிருக்கிற பாண்டவர்களும் தங்கள் கைவலிமையால் ராஜ்யத்தைத் திரும்பவுமடைவார்கள். அவர்களுடைய கைகளினால் திருதராஷ்டிரன்புத்திரர்கள் கொல்லப்படுவார்கள்." என்று கூறினார்.

கிருஷ்ணன்வாக்கியங்களைக்கேட்டுக் கர்ணன் வெட்கத்தால் தலைகுனிந்தான். அதன்பிறகு முன்போல் போர்தொடுத்து அர்ஜுனனுடைய பாணத்தாற் கொல்லப்பட்டான்.

---

## எட்டாம் அதிகாரம்.

### துர்யோதனன்வதம்.

கர்ணனிறந்தபிறகு துரியோதனன் சல்லியனைச் சேனாபதியாக நியமித்தான். முந்தினநாட் போரில் யுதிஷ்டிரன் அபகீர்த்தியடைந்தான். இந்தக்களங்கத்தையழிப்பது மிகவும் ஆவசியகமாயிருந்ததால், ஸர்வதரிசியான ஸ்ரீகிருஷ்ணன் அவனை மறுநாள் பிரதான புருஷனாக யுத்தத்தில் நியமனஞ்செய்தார். அவனே முயன்று சல்லியனுடன் போர்புரிந்து அவனைக் கொன்றான்.

அன்றே கௌரவர் படையெல்லாம் பாண்டவர் படைகளால் அழிக்கப்பட்டன. கௌரவர் படையினருள் கிருபரும் அசுவத்தாமாவும் கிருதவர்மாவும், துரியோதனனும் ஆக நான்குபெயர்கள் மட்டும் உயிருடனிருந்தார்கள். துரியோதனன் ஓடிப்போய்த் துவைபாயன'மென்ற மடுவில் மூழ்கியிருந்தான். பாண்டவர்கள் அங்குமிங்கும் தேடி அந்த மடுவில் அவனைக் கண்டார்கள். ஆனால் மறுபடியும் போர்செய்யாமல் துரியோதனனைக் கொல்லக்கூடவில்லை.

யுதிஷ்டிரனுடையபுத்தி எப்பொழுதுமே கூர்மையில்லாதது. அவனுடைய புத்தியாலேயே பாண்டவர்களுக்குக் கஷ்டங்கள் நேரிட்டன. இப்பொழுதும் அவன் கூரிய மதியில்லாதவனாக நடந்துகொண்டான். துரியோதனனிடம் அவன் 'உனக்கிஷ்டமான ஆயுதத்தையெடுத்துக்கொண்டு எங்களுள் எவனுடனாவது போர்செய். நாம் யுத்தபூமியிலிருந்துகொண்டு சண்டையைக் கவனிப்

போம். எங்களுக்குள் எவனையாவது நீ கொல்வாயானால் ஸகலராஜ்ய மும் உன்னுடையதேயாகும்.'' என்று கூறினான்.

துர்யோதனன் "நான் கதாயுத்தம் செய்வேனெ''ன்று மறு மொழி கூறினான். கதாயுத்தத்தில் வீமனைத் தவிர மற்றொருவனும் துரியோதனனுக்கு நிகரில்லையென்பதை ஸ்ரீகிருஷ்ணன் அறிவார். துரியோதனன் பாண்டவர்களில் ஒருவனைக் கொன்றுவிடுவானானால் பாண்டவர்கள் மறுபடியும் பிச்சையெடுக்கவேண்டியிருக்கும். ஒரு வரும் வாய்திறக்கவில்லை. யுதிஷ்டிரனையடக்குகிறபொறுப்பை ஸ்ரீகிருஷ்ணனே யேற்றுக்கொண்டார்; காரியத்தையும் நன்றாக நிறைவேற்றினார்.

துரியோதனன் தானே பலமுள்ளவன் என்று கர்வமடைந்தவ னாதலால் யாரேனும் "என்னுடன் கதாயுத்தம் தொடுக்கட்டும்; அதில் எல்லோரையும் கொல்லுவேன்.'' என்று கூறினான். இப் பொழுது மகாபாரதத்தில் ஒருமாறுதலைக் காண்போம். பதி னெட்டுநாள் யுத்தம் நடந்தது. யுத்தகாலங்களில் வீமனுக்கும் துரியோதனனுக்கும் எப்பொழுதும் கதாயுத்தமே நடந்துவந்தது. துரியோதனனே அவ்வமயங்களில் தோல்வியடைந்தான். ஆனால் இன்று வீமன் தோல்வியடைவான்போற் காணப்பட்டான்.

வீமன் முன்பு சபாபர்வத்தில் துரியோதனன் யுதிஷ்டிரனுடன் ஆடிய சூதாட்டத்தில் சகுனியின் உதவியால் துரௌபதியையும் பந்தயத்தில் ஜயித்து ரஜஸ்வலையும் ஒரே வஸ்திரத்துடனிருந்தவளு மான அவளைத் துச்சாதனனால் தலைமயிரைப்பிடித் திழுத்துவரச் செய்து ஸபைநடுவில் அவளை வஸ்திரமில்லாதவளாகச் செய்வித் தான். அப்பொழுது வீமசேனன் "நான், துச்சாதனனைச் சுடு காட்டுக்குச் சமானமான போர்க்களத்தில் வதைத்து அவனுடைய குடலைக் கிழித்து அதிலிருந்து பெருகுகிற சூடான குருதியைக் குடித்து எல்லோரையும் நோக்கி "நான் அமிருதபானஞ்செய் கிறேன் என்று சொல்லுவேன்'' என்று கூறினான். மேலும், துரௌபதியை அவமானப்படுத்தினகாலத்தில் துரியோதனன் சபைநடுவிலிருந்து சிரித்துக்கொண்டு துரௌபதியை நோக்கித் தனது உறுதியுள்ள துடையைக் காட்டியபொழுது வீமசேனன்,

"மகாயுத்தத்தில் கதையின் அடியால் துரியோதனன் தொடையைத் தகர்க்காவிடில் நான் நரகம் செல்லுவேன்" என்றும் பிரதிக்ஞை செய்தான்.

இன்றைய யுத்தத்தில் அதே தொடையானது வீமசேனன்கதையின் அடியால் தகர்க்கப்பட்டது. ஆனால் நாபிக்குக்கீழே அடிக்கக் கூடாதென்றும் அப்படி அடித்தால் அது அநியாய யுத்தமென்றும் நியமமிருந்தது. அந்த நியமப்படி வீமன் போர்செய்து துரியோதனனைக்கொன்றிருந்தால் அவன் பிரதிக்ஞை நிறைவேறாமல்போய் விடும். * * * * *

வீம துரியோதனர்களின் யுத்தத்தைப் பார்த்து அர்ஜுனன் இவர்களில் எவன் யுத்தத்திற் சிறந்தவனென்று ஸ்ரீகிருஷ்ணனைக் கேட்டான். அவர் பீமனுக்குப் பலமதிகமென்றும் துரியோதனனுக்குச் சாதுர்யம் மிகுதியென்றும் கூறினார். அந்த வீரனை நியாயமாக யுத்தஞ்செய்து ஒருவராலும் வெல்லமுடியாது; அக்கிரமமாக யுத்தஞ்செய்தே அவனை வெல்லவேண்டுமென்றும் சொன்னார். இந்த வார்த்தையைக் கேட்டு அர்ஜுனன் தனது இடதுமுழங் காலைத் தட்டி அடையாளம் காட்டினன். உடனே வீமன் துரியோதனன் இடதுதொடையைப் பிளந்து அவனைக் கீழே வீழ்த்தினன். இந்தக் கதை கற்பனையானது. நியாயம் எவ்விதம் ஈசுவரனாற் பிரேரிக்கப்பட்டதோ அவ்விதமே அநியாயமும் ஈசுவரனாற் பிரேரிக்கப்பட்டதென்று நிரூபிக்க வேண்டுமென்று இரண்டாவது தொகுதியை யியற்றிய கவி நினைத்தான்போலும்.

கெதாயுத்தகாலத்தில் பலராமனும் வந்துசேர்ந்தான். வீம துரியோதனர்களிருவரும் அவனுடைய சிஷ்யர்கள். ஆனாலும் துரியோதனனிடம் அவனுக்குப் பிரியம் அதிகம்; அவனிடம் பக்ஷபாதமுள்ளவன். அநியாயமாக வீமன் போர்செய்து துரியோதனனை வீழ்த்தியதைக் கண்டு மிகவும் சினங்கொண்டு, பலராமன் தன் கலப்பையாயுதத்தை யெடுத்துக்கொண்டு வீமனைநோக்கி யோடினன். எப்பொழுதும் பலராமன் தோள்மீது கலப்பையாயுதம் இருக்கும்; கலப்பையை யெப்பொழுதும் தாங்கியிருத்தலால் அவனுக்கு 'ஹலதரன்' என நாமதேயம் வழங்கலாயிற்று. (ஹலம்=கலப்பை.)

ஸ்ரீகிருஷ்ணன் பலராமனைப் பலவிதமாகச் சாந்தப்படுத்தமுயன்றார். பலராமன் சமாதானமடையாமல் அந்த இடத்தைவிட்டு வெளியேறினன்.

அதன்பிறகு அருவருக்கத்தகுந்த ஒருசெயல் நிகழ்ந்தது. வீழ்ந்துகிடக்கிற துரியோதனன் தலையில் வீமன் தன்காலாலுதைத்தான். யுதிஷ்டிரன் தடுத்தும் வீமன் கேட்கவில்லை. ஸ்ரீகிருஷ்ணன் வீமனிடம் வெறுப்புக்கொண்டார். பாண்டவர்களைச் சார்ந்தவர்கள் வீமனைப் புகழவும், துரியோதனனை யிகழவும் தொடங்கினார்கள். கிருஷ்ணன் அவற்றைப்பொறுமல் அவர்களிடம், "சாகுந்தருவாயிலிருக்கிற பகைவனைக்குறித்துக் கெட்டவார்த்தைகளையுரைப்பது தகாது" என்று சொன்னார்.

இதுவரை ஸ்ரீகிருஷ்ணவிருத்தாந்தம் முழுமையும் ஆதர்சபுருஷனுக்குத் தகுந்ததே. இதன்பின் கிரந்தத்தில் ஆச்சரியகரமானதோர் வியாபாரம் காணப்படுகிறது. அது கற்பனை.

ஸ்ரீகிருஷ்ணன் இறக்கும்நிலையிலிருந்த துரியோதனனைக் குறித்துக் கொடியவார்த்தைகளைச் சொன்னார். துரியோதனன் துடைமுறிந்து கீழேவிழுந்தும் மரிக்கவில்லை. கிருஷ்ணனுடைய கொடியசொற்களைக் கேட்டுத் துரியோதனன் "ஹே! கம்ஸதாஸனுடைய புத்திரனே! உன் வாக்கியத்தையநுஸரித்துத் தனஞ்ஜயன் துடையிலடிக்கும்படி அடையாளஞ்செய்து வீமனை அதர்மயுத்தத்தில் இறக்கிவிட்டான். இதனால் உனக்கு வெட்கமில்லையா? உன்னுடைய அக்கிரமமான உபதேசத்தாலேயே ஆயிரக்கணக்கான அரசர்கள் யுத்தத்தில் மடிந்தார்கள். சிகண்டியை எதிரில் நிற்கச்செய்து பிதாமஹரைக் கொல்லச்செய்தாய். அசுவத்தாமாவென்ற யானையைக் கொன்று உனது கபடத்தால் ஆசாரியரை அஸ்திரங்களை யெறிந்துவிடச்செய்தாய். நிராயுதபாணியாயிருந்த அவரைச் சிகண்டி வதைக்கும்போது நீ தடுக்கவில்லை. அர்ஜுனனைக் கொல்லவேண்டுமென்று கர்ணன் வெகுநாளாய்க் காப்பாற்றிவைத்த சக்தியாயுதத்தைக் கௌசலத்தாலே கடோற்கசன்மீது பிரயோகிக்கும்படிசெய்து அவ்வஸ்திரத்தை வீணாக்கிவிட்டாய். வெட்டுப்பட்டகைகளுடன் பிராயோபவேசம்செய்துகொண்டிருந்த

பூரிசிரவஸைக் கொல்லும்படி சாத்தகியைத் தூண்டினாய்; மகாவீரனான கர்ணன் அர்ஜுனனைக் கொல்லமுயன்றகாலத்து அக்கிரமம்செய்து அவனுடைய நாகாஸ்திரத்தை அர்ஜுனன்மீது விழாமல் பாழாக்கினாய். முடிவில் கர்ணன் தேர்ச்சக்கரங்கள் பூமியிலழுந்தியதைக் கிளப்புவதற்காக முயன்றுகொண்டிருக்கும்போது அர்ஜுனனைக்கொண்டு அவனை வதைக்கச்செய்தாய். உன்னைப் போல் பாபாத்மாவும் தயவற்றவனும், வெட்கமில்லாதவனும் வேறு எவன்? நீங்களெல்லோரும் பீஷ்மருடனும் துரோணருடனும் கர்ணனுடனும் நம்முடனும் தர்மமாக யுத்தம்நடத்தியிருந்தால் உங்களுக்கு ஒருக்காலும் வெற்றிகிடைத்திருக்காது. நீங்கள் எல்லோரும் அநார்யமான உபாயத்தைச் செய்தீர்கள்; நாங்கள் ஸ்வதர்மத்தை யநுசரித்து தர்மயுத்தஞ்செய்து உயிர்துறந்தோம்.'' என்றுகூறினன்.

குறிப்பு:—மேற்சொல்லிய வாக்கியங்களில் பல மகாபாரதத்திலில்லை).

ஸ்ரீகிருஷ்ணன் இவ்வாக்கியங்களுக்கும் பதிலுரைத்தார் என்பது மூன்றுவது ஆச்சரியகரமான விஷயம். அவர் கெம்பீரஸ்வபாவமுள்ளவரென்றும், பொறுமையுள்ளவரென்றும், தம்மை யாராவது நிந்தித்தாலும், அந்த நிந்தனையை க்ஷமித்துக்கொள்பவரென்றும் நாம் இதற்குமுன் கண்டிருக்கிறோம். அரசர்சபைநடுவில் சிசுபாலன் அவரை வாய்க்குவந்தபடி நிந்தித்தபோதும், அவர் யாதொருபதிலும் சொல்லாமல் பொறுத்துக்கொண்டிருந்தார். இப்போது சாகுந்தருவாயிலுள்ள துரியோதனனை நிந்தித்தல் பிரயோசனமற்றதென்றும் தமக்கு இழிவான காரியமென்றும் நினைத்துச் சிலவார்த்தைகளையே அவர் சொன்னார். துரியோதனன் பாபகாரியங்களையெல்லாம் அவனுக்கு விவரித்துக்காட்டிக் கடைசியில் "நீசெய்த பாபங்களுக்குப் பலனை இப்போது அநுபவிக்கிறாய்'' என்று சொன்னார்.

துரியோதனன் அதற்கும், "நாம், அத்யயனம், விதியின்படி ஸ்நாநம், பூமிமுழுமையுமாளுதல், எதிரிகளை வெல்லுதல், யாவருக்கும் கிடைக்கக்கூடாத தேவபோகங்களையநுபவித்தல்: என்று இவ்வாறுகச் சிறந்த ஐசுவரியத்தை அடைந்தோம். ஆகையால் நம்மையொத்த பாக்கியசாலி எவனிருக்கிறான்? இப்பொழுது நாம்

உடன்பிறந்தாருடனும் பந்துக்களுடனும் சுவர்க்கம் செல்லுகிறோம். நீங்கள் சோகத்தையடைந்து சாகாப்பிணங்களாகப் பூமியிலேயே நிலைத்திருங்கள்" என்று பதில் கூறினான்.

துரியோதனன் இவ்வார்த்தையுரைத்தவுடன் ஆகாசத்திலிருந்து பூமாரி பொழிந்தது. கந்தருவர்கள் இனிமையாகப்பாடத் தொடங்கினார்கள். அப்சரஸுகளும் துரியோதனன் புகழைக் கானம்செய்தார்கள். சித்தர்கள் நன்றுநன்றென நவின்றார்கள். நல்ல வாசனை பொருந்தியதும், ஸ்பர்சத்துக்கினியதும், மிருதுவானதுமான மாருதமும் வீசவாரம்பித்தது. திக்குகளும் ஆகாயமண்டலமும் தெளிந்தன. அப்பொழுது பாண்டவர்களும் கிருஷ்ணனும் வெட்கமடைந்தார்கள். துரியோதனன் சொல்லியதைக்கேட்டுச் சோகத்தையும் அடைந்தார்கள்.

** ** ** ** **

துரியோதனன் செய்த திரஸ்காரம் முதலிய விருத்தாந்தங்கள் அமௌலிகங்கள். துரோணவதத்திலும் இவ்விடத்திலும் எது அமௌலிகமோ அதைக் குறிப்பிட்டிருக்கிறோம். இவ்விடத்தில் இரண்டாவதுகவியின் 'ரவனை'யொன்றுமில்லை; மூன்றாவதுகவியின் ரசனையென்று தெரிகிறது. இரண்டாவது தொகுதியையியற்றியவன் கிருஷ்ணபக்தன்; மூன்றாவதுதொகுதியை இயற்றியவன் கிருஷ்ணத்வேஷி. வைஷ்ணவத்வேஷிகள் மகாபாரதத்தையே பெரிதாக்கிவிட்டார்கள் என்பதை நாம் முன்னமே சொல்லியிருக்கிறோம். இந்த விருத்தாந்தத்தை அவர்களில் ஒருவன் எழுதியிருக்கக்கூடும்; அல்லது கிருஷ்ணபக்தனே நிந்தாஸ்துதிரூபமாக எழுதியிருத்தலும் சம்பாவிதமே. நம்தேசத்துக்கவிகளுக்கு நிந்தாஸ்துதியென்பதும் ஒரு சமத்காரந்தான்.

அது எவ்விதமிருப்பினும், துரியோதனன் அசுவத்தாமாவிடம், "பரமதேஜஸ்வியான வாஸுதேவரின்மகாத்மியத்தை நன்றாயறிந்திருக்கிறேன். அவர் நம்மை க்ஷத்திரியதர்மத்திலிருந்து நழுவவிடமாட்டார். ஆதலால் நீர் நம்மைக்குறித்துச் சோகமடையவேண்டாம்" என்று சொல்லியிருக்கிறான். ஸ்ரீகிருஷ்ணன்பெருமை இவ்வாறிருக்கிறது.

## ஒன்பதாவது அதிகாரம்.

### யுத்தசேஷம்.

---

துரியோதனனை அநியாயயுத்தத்தில் கொன்றதால், பதிவிரதையான, காந்தாரி தங்களைச் சாம்பராய்த் தீய்த்துவிடுவாளே யென்ற பயம் யுதிஷ்டிரனுக்குண்டாயிற்று. ஸ்ரீகிருஷ்ணனை ஹஸ்தினபுரிக்குப்போய்க் காந்தாரியையும் திருதராஷ்டிரனையும் சமாதானப்படுத்திவரும்படி யுதிஷ்டிரன் கேட்டுக்கொண்டான்.

இந்தக்கதை மகாபாரதத்தின் முதலாவது தொகுதியைச் சார்ந்ததன்று. ஸ்ரீகிருஷ்ணனைநோக்கி 'நீரே அழிவற்றவர்; சிருஷ்டிகர்த்தா; ஸம்ஹாரகர்த்தா' என்று யுதிஷ்டிரன் சொல்லியதும், அர்ஜுனனுடைய ரதத்திலிருந்து ஸ்ரீகிருஷ்ணன் கீழே யிறங்கியவுடன் அவ்விரதம் எரிந்துவிட அதன் காரணத்தை அர்ஜுனன் வினவியவுடன் கிருஷ்ணன், 'பிரும்மாஸ்திரத்தின் பிரபாவத்தாலே முன்பே ரதத்தில் தீப்பற்றிக்கொண்டது. நாம் தேர்மீதிருந்ததால் அதை அக்கினியால் எரிக்கமுடியவில்லை' என்று கூறியதும் இரண்டாவது அல்லது மூன்றாவது தொகுதியைச் சேர்ந்தது. முதற்றொகுதியைச் சேர்ந்ததன்று.

ஸ்ரீகிருஷ்ணன் ஹஸ்தினபுரம்சென்று திருதராஷ்டிரனிடமும் காந்தாரியிடமும் சிலவார்த்தைகளையுரைத்தார். அவைகளை விவரிப்பதில் பயனில்லை.

அதன்பின் துரியோதனன் அசுவத்தாமாவைச் சேனாபதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டான். அப்பொழுது சேனையின் மத்தியில், அசுவத்தாமாவும், கிருபரும், கிருதவர்மாவும் மட்டும் இருந்தார்கள். இவ்வளவில் சல்லியபர்வம் முடிந்தது.

அதன்பின் "ஸௌப்திக"பர்வம். அந்தப்பர்வத்தில் மிகவும் பயங்கரமான வியாபாரங்கள் நிறைந்திருக்கின்றன. திருடனைப் போல் அர்த்தராத்திரிவேளையில் பாண்டவர்களின் கூடாரத்தில்

அசுவத்தாமா நுழைந்து, நித்திரையிலிருந்தவர்களான, திருஷ்டத்யும்னன், சிகண்டி, திரௌபதியின் ஐந்துபுத்திரர்கள், பாஞ்சாலர்கள், பாண்டவசேநாபதிகள் இவர்கள் யாவரையும் வதைத்தான். பஞ்சபாண்டவர்களையும் கிருஷ்ணனையும் தவிர வேறொருவரும் எஞ்சவில்லை. குருக்ஷேத்திரயுத்தம் வாஸ்தவத்தில் இருவகுப்புப் பாஞ்சாலர்களின் யுத்தமே. அவர்கள் நிர்மூலமாகத் தொலைந்த பிறகுதான் யுத்தம் முடிந்தது.

ஸௌப்திகபர்வத்தில் ஐஷீகாத்தியாயமென்று ஒரு அத்தியாயமிருக்கிறது. அசுவத்தாமா திருட்டுத்தொழில்செய்ததால் பாண்டவர்களுக்குப் பயந்து காட்டில் ஒளிந்துகொண்டான். பாண்டவர்கள் மறுநாள் அவனைத் தேடி அங்கே சென்றார்கள். அப்பொழுது அவன் பூமியில்விழுந்து தன்னைக்காத்துக்கொள்வதற்காகப் ‘பிரும்மசிரம்’என்கிற அஸ்திரத்தை ஏவினான். அர்ஜுனனும் அதே அஸ்திரத்தைத் தொடுத்தான். இரண்டு அஸ்திரங்களும் ஒன்றோடொன்று மோதிக்கொண்டு கிளம்பிய தேஜஸ்ஸினால் பிரும்மாண்டமே யெரிந்துபோகக்கூடிய நிலைமையில் இருந்தது. அதைக் கண்டு ருஷிகள் எல்லோரும் கூடி அசுவத்தாமாவின் தலையில் பிறவியிலே அமைந்த மணியைப் பறித்துத் திரௌபதிக்குக் காணிக்கையாகக்கொடுத்தார்கள். அப்பொழுது பிரும்மசிரம் பாண்டவர்களின் மருகியான உத்தரையின் கருப்பத்தை யெரித்தது. இந்த விருத்தாந்தமும் இயற்கைக்கு விரோதமாதலால் இதையும் இடைச்செருகலென்று நாம் தள்ளிவிடவேண்டும். இதில் நாம் நம்பக்கூடிய கிருஷ்ணசரித்திரம் ஒன்றுமில்லை.

அதன்பிறகு ஸ்திரீபர்வம். அது மிகவும் பயங்கரமானது. இறந்துபோன வீரர்களின் ஸ்திரீகளுடைய அழுகைக்குரலே அங்கே கேட்கப்படுகிறது. இவ்வளவு அச்சத்தை விளைக்கும் அழுகையை வேறெங்கும் கேட்கமுடியாது. ஆனால் ஸ்ரீகிருஷ்ணன் சம்பந்தமாக இங்கே சில கதைகளிருக்கின்றன.

(1) திருதராஷ்டிரன் வீமசேனனை ஆலிங்கனஞ்செய்துகொண்டு அவனைப் பொடிப்பொடியாக்கிவிட நினைத்தான். ஸ்ரீகிருஷ்ணன் இரும்பினால் வீமனுருவம் ஒன்று செய்துவைத்திருந்தார்.

கண்தெரியாத அரசன் அதையே வீமனெனநினைத்து இருகத் தழுவி அதைச் சூர்ணமாக்கிவிட்டான். இது இயற்கையல்லாத விருத்தாந்தமாகையால் நம்மால் தள்ளிவிடத்தகுந்தது.

(2) காந்தாரி ஸ்ரீகிருஷ்ணன்முன்னிலையில் பிரலாபித்தழுது, "ஜனார்த்தனரே! கௌரவர்களும், பாண்டவர்களும் ஒருவரோடொருவர் எதிர்த்துக் கோபாக்கினியா லெரிக்கப்பட்டார்களே; அப்பொழுது நீர் ஏன் உபேக்ஷையாயிருந்தீர்? உமக்கு எண்ணிறந்த வேலைக்காரர்களும் படைகளும் இருந்தும் நீர் ஏன் இந்தவிஷயத்தைக் கவனிக்கவில்லை? நீர் சாஸ்திரஞானமுள்ளவராயிருந்தும் நன்றாய்ப் பேசத்தெரிந்தவராயிருந்தும் ஜனங்கள் ஸர்வநாசமடைவதைப் பார்த்தும் ஏன் உபேக்ஷையாயிருந்தீர்? உம்மால் அதன் பலனை அவசியம் அனுபவிக்கவேண்டியிருக்கும். கணவனுக்குப் பணிவிடைசெய்து நான் தவத்தையடைந்திருக்கிறேன். அந்தத் தவமகிமையால் உமக்குச் சாபங்கொடுக்கிறேன். ஞாதிகளான கௌரவபாண்டவர்கள் ஒருவரோடொருவர்போர்செய்து நாசமடைவதை நீர் உபேக்ஷையாகப் பார்த்துக்கொண்டிருந்ததனால், உமது ஞாதிகளும் உம்மாலேயே நாசமடைவார்கள். இதுமுதல் 36 வருஷங்கள் சென்றதும் நீர், மந்திரிகள் ஞாதிகள் புத்திரர்கள் யாவரையுமிழந்தவராய்க் காட்டில்திரியுங்காலத்தில் ஓர் இழிவான உபாயத்தாற் கொல்லப்படுவீர். உமது குலஸ்திரீகளும், பாரதர்களின் ஸ்திரீகளைப்போல் பிள்ளையற்றவர்களாகவும், பந்துக்களை யிழந்தவர்களாகவும் துக்கமடைந்து பிரலாபிப்பார்கள்." என்று கூறினாள்.

ஸ்ரீகிருஷ்ணன் சிரித்துக்கொண்டு "நம்மைத்தவிர வேறொருவனும் யதுவம்சத்தவர்களை நாசஞ்செய்யமுடியாது. நாமே யாதவர்களை வதம்செய்வோம். யாதவர்கள் வேறு மனுஷ்யர்களாலும் தேவ தானவர்களாலும் வதைக்கமுடியாதவர்கள். பெரும்பாலும் அவர்கள் ஒருவரையொருவர் அழிப்பார்கள்" என்று கூறினார்.

இரண்டாவதுதொகுதியை யியற்றிய கவியானவன் 'மௌஸல'பர்வத்தைக்குறித்து முன்பே 'ஸூசனை'செய்திருக்கிறான்.

## பத்தாம் அதிகாரம்.

### விதிஸம்ஸ்தாபனம்.

இப்பொழுது நாம் குருக்ஷேத்திரயுத்தமாகிற மகாசமுத்திரத்தைக் கடந்துவிட்டோம். ஸ்ரீகிருஷ்ணசரித்திரம், முன்போல் களங்கமற்ற பிரகாசத்துடன் விளங்கத்தொடங்கியது. ஆனால் சாந்திபர்வத்திலும், அநுசாஸநபர்வத்திலும் ஸ்ரீகிருஷ்ணன் ஸர்வேசுவரனென்று குறிக்கப்பெற்றிருக்கிறார்.

யுத்தம் முடிந்தபிறகு யுதிஷ்டிரனுக்கு ஒருயோசனை தோன்றிற்று. "ஞாதிகள் யாவரும் நாசமடைந்ததால் நமது மனத்துக்குச் சமாதானமில்லை. துக்கமே மேலிடுகிறது. ஆகையால் நாம் மறுபடியும் வனஞ்செல்வோம், பிக்ஷையெடுப்போம்" என்று அர்ஜுனனிடம் அவன் சொன்னான். அர்ஜுனனுக்குக் கோபம் மேலிட்டது; பலவாறு பதிலுரைத்தான். இருவர்க்குள்ளும் வாதாநுவாதங்கள் ஏற்பட்டன. பிறகு வீமன், நகுலன், ஸஹதேவன், திரௌபதி என்போரும் யுதிஷ்டிரனிடம் மிகவும் தெரிவித்தார்கள். ஒருவருடைய வார்த்தையையும் அவன்கேட்கவில்லை. வியாஸர், நாரதர் முதலிய மகருஷிகளும் அவனிடம் தெரிவித்தும் பயன்படவில்லை. முடிவில் ஸ்ரீகிருஷ்ணனுடைய வார்த்தையின்பேரில் யுதிஷ்டிரன் ஹஸ்தினபுரியில் நுழைந்தான். ஸ்ரீகிருஷ்ணனே அவனுக்கு ராஜ்யாபிஷேகம் செய்வித்தார். யுதிஷ்டிரன் அவரைத் துதித்து நமஸ்காரமும் செய்தான். அந்த ஸ்துதி ஜகதீசுவரனுக்கே தகுந்தது. ஸ்ரீகிருஷ்ணன் அவனுக்கு வயதில் இளையவர். யுதிஷ்டிரன் அவரை வேறுசமயத்தில் வணங்கியதே இல்லை.

இப்பொழுது கௌரவசிரேஷ்டரான பீஷ்மர் கணையணையில் படுத்துக்கொண்டு ஜகதீசுவரனைத் தியானஞ்செய்தபடி உத்தராயணத்தை எதிர்பார்த்துக்கொண்டு சரீரத்தைக் காப்பாற்றிவந்தார். யுதிஷ்டிரன் சஞ்சலமடைந்தமனத்துடன், கிருஷ்ணன் அர்ஜுனன் முதலியவர்களை அழைத்துக்கொண்டு பீஷ்மரைத் தரிசனஞ்செய்வதற்காகச் சென்றான். போகும்வழியில் பரசுராமன் உபாக்கியானத்தைக் கிருஷ்ணனிடம் கேட்டுக்கொண்டேபோனான். "பீஷ்மரே யெல்லாத்தர்மங்களையும் அறிந்தவர்; அவர் பரலோகம்போனால்

அவருடைய ஞானம் அவருடனே மடிந்துவிடும். அவருடைய ஞானம் உலகத்தில் பிரசாரமடையவேண்டுமென்பது அவர் விருப்பம். அவரிடமிருந்து நீ ஞானோபதேசத்தைப்பெற்றுக்கொள்க" என்று ஸ்ரீகிருஷ்ணன் யுதிஷ்டிரனிடமுரைத்துப் பீஷ்மரை யுபதேசிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

பீஷ்மர் இணங்கவில்லை. அவர் ஸ்ரீகிருஷ்ணனிடம், "தர்மங்கள் கர்மங்கள் எல்லாம் உம்மிடமிருந்தே வந்தன; நீரே ஞானமயன்; யுதிஷ்டிரனுக்குபதேசஞ்செய்வீராக. நான் சரப்படுக்கையிற் படுத்துக் கிலேசத்தையடைந்திருக்கிறேன். சாகுந்தருவாயிலிருக்கிற எனக்குப் புத்திமயக்கமும் உண்டாகியிருக்கிறது. என்னால் எழுந்திருக்கவும் முடியாது" என்று கூறினர். அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன், "கணையணையில்படுத்திருந்ததால் உமக்கு உண்டாயிருக்கிற கிலேசத்தை நாம் போக்குவோம். உம்முடைய மனத்தில் ஞானமாகிற பிரகாசம் உண்டாகும். உமது புத்தியையும் ஸத்வ குணம் நிரம்பியதாகச்செய்வோம். உமக்குத் தெய்வத்தன்மையுள்ள கண்ணை யளிப்போம். நீர் சென்றது வருவது எல்லாவற்றையும் காண்பீர்" என்று கூறினர்.

ஸ்ரீகிருஷ்ணன்கிருபையால் அவ்வாறே நிகழ்ந்தது. அப்பொழுதும் பீஷ்மர் ஆக்ஷேபித்துக் கிருஷ்ணனிடம் "நீரே யுதிஷ்டிரனுக்கு ஏன் உபதேசிக்கக்கூடாது" என்று வினவினர். அதற்குப்பதிலாக ஸ்ரீகிருஷ்ணன், "நன்மை தீமைகளான கர்மங்களெல்லாம் நம்மிடமிருந்தே உண்டாயின. சந்திரனது நிலவுபோல்வன நமது புகழும் ஒளியும். உமக்குப் புகழ்வளரவேண்டுமென்றே உமக்கு எல்லா விதமான ஞானத்தையும் கொடுத்திருக்கிறோம்" என்று கூறினர். அப்பொழுது பீஷ்மருக்குப் புத்திதெளிந்தது; யுதிஷ்டிரனுக்குத் தர்மத்தின்தத்வத்தை யுபதேசிக்கத் தொடங்கினர். மோக்ஷ தர்மத்தையுபதேசித்ததுடன் சாந்திபர்வம் முடிவுபெற்றது.

சாந்திபர்வத்தில் மூன்றுபிரிவுகள் காணப்படுகின்றன. தார்மிகனொருவனை அரசனாகநியமித்தால்மட்டும் போதாது. தர்மராஜ்யம் நிலைக்காது. இப்பொழுது அரசனான யுதிஷ்டிரன் தர்மாத்மா. பின்காலத்தில் பாபாத்மாவும் அரசனாக ஆகக்கூடும்.

ஆதலால் தர்மராஜ்யத்தை ஸ்தாபித்து அதை நிலைநிறுத்துவதற்கும் தர்மவியவஸ்தையைப் பற்றிய சட்டதிட்டங்களை யேற்படுத்துவதற்கும் ஸ்ரீகிருஷ்ணன் விரும்பினார். சட்டதிட்டங்களை யியற்றுவதே (Legislation) முக்கியமானகாரியம். அந்தக்காரியத்தில் ஸ்ரீகிருஷ்ணன் பீஷ்மரை நியமனஞ்செய்து தாமும் உதவியாயிருந்தார். ஸ்ரீகிருஷ்ணன் பீஷ்மருக்கு "நீர் வயோவிருத்தராயும், சாஸ்திர ஞானமுள்ளவராயும், நல்லொழுக்கமுள்ளவராயும் இருக்கிறீர். உமக்கு ராஜதர்மமோ மற்றத்தர்மமோ எல்லாம் நன்றாய்த் தெரியும். ஜனனம்முதல் நீர் ஒருபாபத்தையும் செய்தவரில்லை. சகலதர்மங்களையுமறிந்தவரென்று உம்மை எல்லா அரசர்களும் புகழ்கிறார்கள். ஆகையால் பிதாவைப்போல் இவ்வரசர்களுக்கு நீர் நீதியை யுபதேசஞ்செய்வீராக: நீர் நியமத்துடன் ருஷிகளையும் தேவதைகளையும் உபாஸனைசெய்திருக்கிறீர். அரசர்கள் உம்மிடமிருந்து நீதியைத் தெரிந்துகொள்ள ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் நீர் அவர்களுக்கு நீதியை விஸ்தாரமாய் உபதேசம்செய்ய வேண்டும்" என்று தெரிவித்தார். அதன்பின் ஆநுசாஸநபர்வம். இங்கேயும் ஹிதோபதேசமே நடந்தது. அதில் சில அரசர்களின் கதைகளும் காணப்படுகின்றன. அதில் நமக்குப் பயன்படும் விஷயமொன்றுமில்லை.

முடிவில் பீஷ்மர் சுவர்க்கலோகம் சென்றார்.

---

## பதினோராம் அதிகாரம்.

### காமகீதை.

பீஷ்மர் சுவர்க்கத்துக்கேகினபிறகு யுதிஷ்டிரன் மிகவும் சோகமடைந்து அழுதான். தான் வனத்துக்குப் போவதாகச்சொல்லி முறையிட்டான். ஸ்ரீகிருஷ்ணன் இந்தநோய்க்குத் தகுந்த ஔஷதத்தைப் பிரயோகித்தார். அந்தநோய் அகங்காரமே. யுதிஷ்டிரன் நோய் இன்னதென்று வேறொருவராலும் அறியமுடியவில்லை.

ஆங்கிலத்தில் கர்வம் ('pride') என்கிற வார்த்தையே அகங்காரத்துக்கு மறுபெயராகச் சொல்லப்படுகிறது. உண்மையில் அப்படியில்லை. அகங்காரமும் கர்வமும் வெவ்வேறானவை.

'நாமே இக்காரியத்தைச் செய்தோம்', 'இவை நம்முடையவை', 'இது நமது சுகம்', 'இது நமது துக்கம்' என்கிற இவ்விதமான ஞானமே அகங்காரமென்பது. இதுவே யுதிஷ்டிரனின் சோகத் துக்குக் காரணம். நான் பாபம் செய்தேன்; எனக்குத் துக்கம் வந்தது. நான் எல்லாவற்றையும் அபகரித்தேன்; ஆதலால் நான் வனஞ்செல்வேன். என்று இவ்விதமான ஆத்மாபிமானமே யுதிஷ்டிரன்சோகத்துக்கு மூலகாரணம். அந்த மூலத்தைக் கோடரியால் வெட்டியெடுப்பதே, தர்மமறிந்தவரான ஸ்ரீகிருஷ்ணனது உத்தேசம். அதற்காக அவர் யுதிஷ்டிரனிடம் கடினமானவார்த்தைகளை யுரைத்தார். அவர் தத்துவஞானத்தால் அகங்காரத்தை நாசஞ்செய்ய நினைத்தார். அவர் கீதையில் உபதேசித்திருக்கிறபடி இங்கேயும் உபதேசஞ்செய்தார். இவ்விதமான மகோபதேசமே கிருஷ்ணசரித்திரத்தின் மர்மமாகும். அவ்வுபதேசம்:—"ஹே! தர்மராஜனே! வியாதியானது சாரீரகமென்றும் மானஸிகமென்றும் இருவகைப்படும். இவையிரண்டும் ஒன்றுக்கொன்று உதவிசெய்து ஒன்றையொன்று வளர்க்கின்றன. சரீரத்தில் வியாதிவந்தால் அதைச் சாரீரகமென்றும், மனத்தை வியாதிபற்றினால் அதை மானஸிகமென்றும் சொல்லுவார்கள். கபம், பித்தம், வாதம் இவை மூன்றும் சரீரத்தின் குணங்கள். எப்பொழுது இந்த மூன்று குணங்களும் சமமாகவிருக்குமோ அப்பொழுது சரீரம் சௌக்கியமாயிருக்கிறதென்றும், எப்பொழுது இக்குணங்களில் வைஷம்யம் ஏற்படுமோ அப்பொழுது சரீரம் அசௌக்கியமாயிருக்கிறதென்றும் சொல்லுவார்கள். பித்தம் அதிகப்படும்போது கபம் குறைவுபடும். கபம் அதிகரிக்கும்போது பித்தம் குறையும். சரீரத்தைப் போலவே மனத்திலும் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்று மூன்று குணங்களுள்ளன. இம்மூன்று குணங்களும் ஸமமாகவிருந்தால் ஆத்மாவுக்குச் சௌகரியமுண்டாகும். இவைகளில் ஒன்று அதிகப்பட்டால் மற்றது குறைவுபடும். ஹர்ஷம் தோன்றும்போது சோகம் மறையும். சோகம் வரும்போது ஹர்ஷம் விலகிவிடும். துக்கம் வரும்போது சுகம் எப்படிவந்தடையும்? சுகம் வரும்போது துக்கானுபவம் ஏது? அது எப்படியிருப்பினும் தத்க்ஷணத்தில் அவைகளைப்பற்றி நாம் நினைக்கவேண்டாம். சுகதுக்கங்களுக்கு

எட்டாத பரப்பிரும்மத்தையே நாம் நினைக்கவேண்டும். அதுவே நமது கடமையாகும். பாரதயுத்தத்தைக்காட்டிலும் மிகவும் கோர மான யுத்தத்தை அகங்காரமென்ற வலிமையுள்ள ஒரே சத்துரு வுடன் தொடுக்கவேண்டியிருக்கிறது. இந்த யுத்தத்திற் பின் வாங்காமல் எதிர்த்துப் போர்புரிவதே நமது கடமை. யோகத்தை யோ அதற்குத்தகுந்த சாதனங்களையோ அவலம்பித்தால்மட்டும் நாம் வெற்றியடையலாம். இந்த யுத்தத்தில் அஸ்திரங்களாலும், வேலைக்காரர்களாலும் பந்துக்களாலும் ஒருபிரயோஜனமுமில்லை. மனத்தையே சகாயமாய்க்கொண்டு இந்த யுத்தத்தில் இறங்கவேண் டும். இந்த யுத்தத்தில் நாம் தோற்றால் நாம் அடைகிற துக்கத் துக்கு எல்லையேயில்லை. ஆகையால் நீர் நமது உபதேசப்படி சீக்கி ரத்தில் அகங்காரத்தை வென்று சோகத்தை விலக்கி, ஸ்வஸ்தமான மனத்துடன் பிதாவின் ராஜ்யத்தைப் பரிபாலனஞ்செய்வீராக.

ஹே! தர்மராஜரே! ராஜ்யத்தை விட்டுவிட்டதால் ஒருக்கா லும் 'சித்தி'யடையமுடியாது. இந்திரியங்களை வென்றால்மட்டும் 'சித்தி'யை யடையலாம். ராஜ்யமுதலானவற்றை விட்டும் எவன் விஷயபோகங்களின்வாசனையை மனத்தில் தியானமாவது செய்கி றானோ, அவனுடைய தர்மத்தையும் சுகத்தையும் சத்துருக்கள் அடைகிறார்கள். 'மமதை'யென்பது மறுஜன்மத்துக்குக் காரண மாகும். மமதையற்றிருப்பது மோக்ஷத்துக்கு ஹேதுவாகும். இவ் விதமாகப் பெரியோர்கள் நிர்த்தேசம் செய்திருக்கிறார்கள். மமதை யென்பது மனிதர்களின் சித்தத்தில் மறைவாகவிருந்து மனிதனைக் கெட்டகாரியங்களில், தூண்டிவிடுகிறது.

ஈசுவரன் ஒருவன் உளன், உலகம் அழியக்கூடியது என்ற நம்பிக்கையுடன் ஒருவன் பிராணிகளின் சரீரத்தை யழித்தாலும், அவனைப் பாபம் அணுகாது. ஸர்வஜகத்துக்கும் அரசனாயிருத்தலை யடைந்திருந்தும், மமதையை விட்டுவிட்டவன் ஒருக்காலும் ஸம் ஸாரபாசத்திற் கட்டுப்படமாட்டான். காட்டில்வசித்துக் காய்கனிக ளைத்தின்று ஜீவித்தாலும் எவன் விஷயவாஸனையைத் துறக்கவில்லை யோ, அவன் ஸம்ஸாரமாகிற வலையில் சிக்கிக்கொள்வான். ஆகை யால் இந்திரியங்களையும் விஷயங்களையும் மாயாமயங்கள் என

நினைத்தல்வேண்டும். எவன் இந்த ஸமுதாயங்களைக்குறித்து 'மமதை'கொள்ளவில்லையோ அவன் நிச்சயமாக ஸம்ஸாரத்தில் இருந்து விடுதலையடைவான். காமத்தின் வசப்பட்ட மூடர்கள் ஒருக்காலும் புகழுடையார்கள். காமமென்பது மனத்திலிருந்து உண்டாகிறது. காமத்தின்சேர்க்கையே பிரவிருத்திக்கு மூலகாரணம். எந்த மகாத்மா அநேகஜன்மங்களில் செய்த அப்பியாஸத்தால், காமனையே அதர்மமென்றறிந்து, கர்மங்களின் பலத்தில் ஆசையற்றவனுய்த் தானம், வேதாத்தியயனம், தவம், விரதம், யாகம், தியானம், யோகம் இவைகளை ஆசிரயித்திருக்கிருனே, அவன் ஏககாலத்தில் காமனைகளை ஜயிக்கிருன். காமத்தையடக்குதலே உண்மையான தர்மம்; அதுவே மோக்ஷத்துக்கு விதைமுதல் என்பதிற் சந்தேகமில்லை. பண்டிதர்களான முன்னோர்கள் எந்தக் 'காமகீதை'யை யுபதேசஞ்செய்திருக்கிருர்களோ அதை யிப்போது உமக்குரைப்போம். கவனத்துடன் கேட்பீராக. 'மமதையற்றிருத்தல், யோகாப்பியாஸம் இவைகளைத்தவிர மற்றவற்ருல் என்னை வெல்லமுடியாது. என்னை எவன் வேறு உபாயங்களால் வெல்ல முயலுகிருனே அவன்மனத்தில் நான் திரும்பத்திரும்ப ஆவிர்ப்பவித்து அவனைக் கெடுத்துவிடுவேன். எவன் மோக்ஷத்தில் விருப்பத்தால் என்னை வெல்லமுயலுகிருனே அவனை நான் இகழ்வேன். நான் எப்போதுமுள்ளவன்; ஒருவராலும் வதைக்கமுடியாதவன் என்று பண்டிதர்கள் முடிவுசெய்திருக்கிருர்கள்' என்று காமமே கூறியிருக்கிறது.

ஹே! தர்மராஜனே! நாம் உமக்குக் காமகீதையை விரிவாகத் தெரிவித்தோம். காமனையை வெல்வது மிகவும்கடினமான காரியம். நீர் சாஸ்திரப்படி அசுவமேதம் முதலான மகாயாகங்களைச்செய்து 'காமனை'யைத் தர்மவிஷயத்தில் செலுத்துவீராக. பந்துக்களின் அழிவை அடிக்கடிநினைத்துச் சோகமடைவதிற் பயனில்லை. நீர் அநுதாபப்பட்டதால் அவர்களைக் காணமுடியாது. இப்பொழுதே நீர் யாகங்களைச் செவ்வனே நடத்தி இவ்வுலகத்தில் நிகரற்ற கீர்த்தியையடைவீராக; பரலோகத்தில் உயர்ந்த கதியையும் அடையத்தக்கவராவீர்''. என்பதாம்.

## பன்னிரண்டாவது அதிகாரம்.

### கிருஷ்ணன் செலவு.

தர்மராஜ்யம் பிரதிஷ்டைசெய்யப்பெற்றது. தர்மமும் பிரசாரஞ்செய்யப்பெற்றது. கிருஷ்ணனுடைய விருத்தாந்தத்தை வருணிப்பதே இந்தக்கிரந்தத்தின் நோக்கம். ஸ்ரீகிருஷ்ணனுடைய சரித்திரத்தை (மகாபாரதசம்பந்தமாக) முன்பே வருணித்திருக்கிறோம். மகாபாரதசம்பந்தமாக அவர் வந்த காரியங்கள் முடிவு பெற்றன. இப்பொழுது அவர் மறைவதே உசிதமாகும். ஆனாலும் கைத்தினவினால் அவரைக்குறித்து மற்றொருகதையையும் கவியானவன் தொகுத்திருக்கிறான்.

அர்ஜுனன் அவரிடம் "நீர் எனக்கு யுத்தகாலத்தில் உபதேசித்த தர்மங்களெல்லாம் மறந்துவிட்டன; மறுபடியும் உபதேசிப்பீராக" என்று கூறினான். அப்பொழுது கிருஷ்ணனுடைய பதில் மிகவு மாச்சரியகரமானது. "என் ஞாபகத்துக்கே அது வரவில்லை. நான் யோகபலத்தால் உனக்குரைத்தேன். சிரத்தையற்றவனாய் நீ அதை மறந்துவிட்டாய். இனி நான் உனக் குபதேசிக்க மாட்டேன்" என்று கூறினார். அப்படிக் கூறினபிறகும் பழமையான இதிஹாஸமொன்றை அவர் எடுத்துரைத்தார்; தத்துவ ஞானத்தையும் உபதேசித்தார்.

முன்பு அர்ஜுனனுக்கு அவர் உபதேசித்த கிரந்தத்தின் நாமதேயம் பகவத்கீதையென்பது பிரசித்தம். இப்பொழுது அவரால் உபதேசிக்கப்பட்ட கிரந்தத்துக்கு 'அநுகீதை'யெனப் பெயரிட்டிருக்கிறார்கள். இதன் ஒருபகுதியின்பெயர் பிரும்மகீதை என்பது.

பகவத்கீதை, பிரஜாகரம், ஸநத்ஸுஜாதீயம், மார்க்கண்டேய ஸமஸ்யை, அநுகீதை முதலிய தர்மசம்பந்தமான கிரந்தங்களும் மகாபாரதத்தில் புகவிடப்பட்டுள்ளன. அவைகளும் மகாபாரதத்தின் அம்சங்களென்றே பிரசாரத்திலிருக்கின்றன. கிரந்தங்களெல்லாவற்றிலும் மிகவும் மேலானது 'பகவத்கீதையே.' அநுகீதையும் சிறந்த கிரந்தமே. மோக்ஷமூலர் (Max Muller) என்ற மேல்நாட்டு வித்வான் தன்னாற் பிரசுரிக்கப்பட்ட கீழ்த்திசைத் தத்துவநூல்கள்

(Sacred books of the East) என்ற தொடர்களில் இதையும் சேர்த்திருக்கிறான். தற்காலம் பம்பாயில் ஹைகோர்ட்டு ஜட்ஜா யிருக்கிற 'ஸ்ரீகாசிநாத திரியம்பக தெலாங்க்' என்கிற மகாவித்வான் அநுகீதையை ஆங்கில பாஷையில் மொழிபெயர்த்திருக்கிறார். அது ஸ்ரீகிருஷ்ணனாலுரைக்கப்படவில்லை. பகவத்கீதையில் உபதேசிக்கப்பெற்ற தர்மங்களுக்கும் அநுகீதையில் சொல்லப்பட்ட தர்மங்களுக்கும் யாதொருசம்பந்தமு மில்லையென்று இரண்டு கிரந்தங்களையும் படித்தால் தெரியவரும். அநுகீதைக்கு ஆங்கில அனுவாதமியற்றிய 'தெலாங்கு' என்பவர் முகவுரை யெழுதியிருக்கிறார். பகவத்கீதைக்கு வெகுநூற்றாண்டுகளுக்குப்பிறகே அநுகீதை யியற்றப்பட்டதென்பதைப் பலகாரணங்களால் அவர் அதில் நிரூபித்திருக்கிறார். அநுகீதையும், பிராம்மணகீதையும் இடைச்செருகல்களென்பதற்குப் பர்வசங்கிரகாத்தியாயத்தில் இவைகளைப்பற்றிய வார்த்தையொன்றுமே இல்லாமலிருப்பதே போதுமான சான்றாகும்.

அர்ஜுனனுக்குபதேசித்தபிறகு ஸ்ரீகிருஷ்ணன் மனவருத்தத்துடன், யுதிஷ்டிரன் முதலானவர்களைவிட்டுப் பிரிந்து துவாரகைக்குச் சென்றார்.

போகும்வழியில் ஸ்ரீகிருஷ்ணன் உதங்கமுனிவரைச் சந்தித்ததாகவும் எழுதியிருக்கிறது. அம்முனிவர் ஸ்ரீகிருஷ்ணன் பாரதயுத்தத்தைத் தடுக்காததற்காக அவரைச் சபிக்கநினைத்தார். ஸ்ரீகிருஷ்ணன் அதைத் தெரிந்துகொண்டு "நீர் சாபம்கொடுத்தால் உமது தவத்துக்குக் குறைவுவரும். நாம் சமாதானம் செய்யவேண்டிய முயற்சியையும் செய்தோம். ஒன்றும் பயன்படவில்லை." என்று கூறினார். அப்பொழுது சண்டாளனொருவனும் சுவானமொன்றும் தோன்றியதாகவும் அந்தச் சண்டாளன் முனிவரை நாயின் மாமிசத்தைத் தின்னச்சொன்னதாகவும் பலவிதமான தாறுமாறான விருத்தாந்தங்கள் காணப்படுகின்றன. உதங்கமுனிவர் வந்த சமாசாரத்தைக் குறித்துப் பர்வஸங்கிரகாத்தியாயத்திற் காணப்படவில்லை. இவைகள் இடைச்செருகல்களென்றும், மகாபாரதத்தின் மூன்றுவதுதொகுதியைச் சார்ந்தவைகளென்றும் நன்றாய்த் தெரிகிறது.

ஸ்ரீகிருஷ்ணன் துவாரகைசென்றபிறகு தம்முடைய பந்துக்களுடன் கூடியிருந்தபொழுது வஸுதேவர், யுத்தவிருத்தாந்தங்களைப்பற்றி வினவினார். கிருஷ்ணன், யுத்தத்தில் நடந்த சங்கதிகளைச் சுருக்கமாகச்சொல்லி, அபிமன்யுவதத்தைப்பற்றிச் சொல்லாமல் மறைத்தார். சுபத்திரை, துவாரகைவந்தபோது அவள் தானாகவே அபிமன்யுவின் பிரஸ்தாவத்தையெடுத்தாள். அப்பொழுதுதான் கிருஷ்ணன் அபிமன்யுவதத்தைப்பற்றி விஸ்தாரமாயுரைத்தார்.

ஸ்ரீகிருஷ்ணன் யுதிஷ்டிரனைவிட்டுப் பிரியும்போது, தமது அசுவமேதயாகத்திற்கு அவசியம் வரவேண்டுமென்று கிருஷ்ணனை அவன் கேட்டுக்கொண்டிருந்தான். அந்த யாகஸமயம் வந்தது. கிருஷ்ணன் யாதவர்களையும் கூட்டிக்கொண்டு ஹஸ்தினபுரி சென்றார்.

ஸ்ரீகிருஷ்ணன் அங்கேயிருந்தபோது அபிமன்யுவின் மனைவியான 'உத்தரை' இறந்துபோனதான ஒரு மகவைப்பெற்றாள். கிருஷ்ணன் அதை யுயிர்ப்பித்தார். அவர் தமது தெய்விகசக்தியால் பிழைக்கவைத்தாரென்று சொல்லக்கூடாது. இக்காலத்தில் 'மிருதசஞ்சீவினி'யென்ற ஒஷதியால் இறந்தவர்களைப் பிழைக்கவைக்கிறார்களென்பது நமக்குத் தெரியும். ஆனால் அக்காலத்தில் அந்த ஒளஷதம் தெரிந்த வைத்தியர்களில்லை. கிருஷ்ணன்மட்டும் அதையறிந்திருந்தார். அவர் ஆதர்சபுருஷராயிருந்ததால் எவ்விதமான வித்தைகளிலும் ஞானத்திலும் அதிகாரியாவார்.

அசுவமேதயாகம் விக்கினமின்றி நிறைவேறியது. ஸ்ரீகிருஷ்ணன் மறுபடியும் துவாரகைசென்றார். அதன்பிறகு அவர் பாண்டவர்களைக் காணவேயில்லை.

# ஏழாவது கண்டம்

## பிரபாஸம்

𑌯𑍋𑌽𑌸𑍌 𑌯𑍁𑌗𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌦𑍀𑌪𑍍𑌤𑌾𑌰𑍍𑌚𑌿𑌰𑍍𑌵𑌿𑌭𑌾𑌵𑌸𑍁𑌃।
𑌸𑌂𑌭𑌕𑍍𑌷𑌯𑌤𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌘𑍋𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 𑌨𑌮𑌃॥

(சாந்திபர்வம் 41-வது அத்தியாயம்.)

ஆயிரயுகங்களின் முடிவில் ஜ்வாலையுடன் கூடின அக்நியாயிருந்துகொண்டு பூதங்களை விழுங்குபவரான கோரமூர்த்தியாகிய பகவானுக்கு நமஸ்காரம்.

## முதல் அதிகாரம்.

### யதுவம்சத்தின் அழிவு.

பிறகு ஆசிரமவாஸிகபர்வம். இதில் கிருஷ்ணன் சம்பந்தம் ஒன்றுமில்லை. அதன்பிறகு அதிக பயங்கரமான 'மௌஸல'பர்வம். இதில் யாதவர்களின் அழிவும், கிருஷ்ண பலராமர்களின் சரீரத்தியாகமும் கூறப்பட்டிருக்கிறது. யதுவம்சத்தவர்கள் ஒருவரையொருவர் வதைத்தபோது கிருஷ்ணன் அதைத் தடுக்க யாதொரு உபாயமும் செய்யவில்லை. அவருடைய கைகளாலேயே அநேகம் யாதவர்கள் மாண்டார்கள்.

காந்தாரி சொன்னபடியே 36 வருஷங்கள் சென்றபிறகு யாதவர்கள் மிகவும் துஷ்டர்களாகக்கிளம்பினார்கள். ஒருகாலத்தில் விசுவாமித்திரரும் கண்வரும் உலகத்தில் பெயர்பெற்ற க்ஷத்திரியர்களும் துவாரகைக்கு வந்தார்கள்.

அப்போது யாதவர்கள் ஒன்றுகூடி கிருஷ்ணன்புதல்வனான சாம்பனுக்குப் பெண்வேடம் அணிவித்து இருடிகளின்பக்கல் சென்று, "இவள் கருப்பவதியாயிருக்கிறாள். இவளுக்கு என்ன குழந்தை பிறக்கும்" என்று வினவினார்கள். பொறிகளைவென்றவர்களாயும் இறைவனிடத்தன்புடையவர்களாயும் இருந்தாலும், மகருஷிகளுக்கு இந்த அக்கிரமமான வார்த்தையைச் சகிக்கமுடியவில்லை. அவர்கள் இந்தக் கருப்பத்திலிருந்து தோன்றுவதால் யதுவம்சத்தார் நாசமடைவார்களென்று சாபங்கொடுத்தார்கள்.

கிருஷ்ணன் இந்தச் செய்தியைத் தெரிந்துகொண்டு, "மகருஷிகள் எவ்வாறுரைத்தார்களோ அவ்வாறே தவறுமல் நிகழும். இருடிகளின் சாபத்தை விலக்க நம்மால் இயலாது" என்று கூறினர். சாம்பன் ஒரு இருப்புலக்கையை ஈன்றான். யாதவர்களின் அரசனான உக்ரஸேனன் (கிருஷ்ணன் யாதவர்களுக்கு அரசரல்லர்) அந்த உலக்கையைத் தூளாக்கிக் கடலில் எறியும்படி கட்டளையிட்டான். உலக்கையும் சூர்ணமாக்கப்பட்டுச் சமுத்திரத்தில் எறியப்பட்டது. யாதவர்கள் தர்மத்தை முழுதும் இழந்துவிட்டதைக் கண்டு கிருஷ்ணன் அவர்களைப் பிரபாஸதீர்த்தத்துக்குப் போகும்படி கட்டளையிட்டார்.

யாதவர்கள் அந்தப் புண்யக்ஷேத்திரத்துக்குவந்தும், தங்களுடைய தீயவொழுக்கத்தை விட்டுவிடாமல் கள்ளைக்குடித்துப் பலபலவிளையாட்டுக்களை ஆடத்தொடங்கினர்கள். குருக்ஷேத்திர யுத்தத்தில் மகாரதனுகவிளங்கிய சாத்தகியே முதலில் கலகத்தைத் தொடங்கினுன். அவன் கிருதவர்மாவுடன் விவாதம் தொடுத்தபோது, பிரத்யும்னன் சாத்தகியின்கக்ஷியைச் சேர்ந்தான். அப்போது கொழுப்புக்கொண்டவனுன சாத்தகியானவன் கிருதவர்மாவின்தலையை வெட்டியெறிந்தான். அப்போது கிருதவர்மாவின் கோஷ்டியைச்சேர்ந்தவர்களான அந்தக, விருஷ்ணி, போஜ, குகுர ஜாதியினரான யாதவர்கள் மிகவும் சினங்கொண்டு எழுந்தார்கள். ஸாத்தகியும் சினங்கொண்டு பிரத்யும்னன் தலையைத் துண்டித்தான். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் ஒருபிடி சரப்புற்களைக் கையிலெடுத்துச் சினத்துடன் அவைகளால் பல யாதவர்களை வீழ்த்திஞர். ஸ்ரீகிருஷ்ணன்கையில் அந்தப் புற்கள் உலக்கைகளாக மாறினவென்று மகாபாரதத்திற் கூறப்பட்டிருக்கிறது. அரசன் கட்டளையாற் கடலில் எறியப்பட்ட உலக்கைச் சூர்ணங்களே நாணற்புற்களாக முளைத்தனவென்று வேறு கிரந்தங்களிற் கூறப்பட்டிருக்கிறது; ஆனல் மகாபாரதத்தில் அந்தக் கதை காணப்படவில்லை. இந்த நாணற்புற்களைக் கைகளில் எடுத்துக்கொண்டு யாதவர்கள் ஒருவரை யொருவர் வதைக்கத்தொடங்கினர்கள். யாதவர்களெல்லாரும் இவ்வாறு ஒருவரை ஒருவர் தாக்கி எல்லா யாதவர்களும் மடிந்தபின் கிருஷ்ணனுடைய சாரதியான தாருக

னும் பப்ருவென்ற யாதவனும் அவரை யணுகி, "ஜநார்த்தனரே! நீர் இக்கணத்தில் எண்ணிறந்த யாதவர்களை வதைத்துவிட்டீர்; இனிமேல் எங்கேயாவது போய்விடும்; நாங்கள் மகாத்மாவான பலராமனிடம் போய்ச்சேர்வோம்" என்று உரைத்தார்கள்.

ஸ்ரீகிருஷ்ணன் தாருகனை ஹஸ்தினபுரிக்குப் போகும்படி கட்டளையிட்டார். அவன் அங்கேபோய் அர்ஜுனனையழைத்து வந்ததும் யாதவர் பெண்டிர்களை ஹஸ்தினபுரிக்கு அழைத்துச் செல்லும்படி ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனுக்குக் கட்டளையிட்டார். பின், பலராமன் யோகாஸநத்தில் வீற்றிருப்பதையும் ஸ்ரீகிருஷ்ணன் கண்ணுற்றார். அப்பொழுது பலராமன் முகத்திலிருந்து ஆயிரந்தலையுடைய பாம்பொன்று வெளிப்பட்டுக் கடலும் ஆறுகளும் ஆகிய இவற்றிலிருந்து எழுந்துவந்தவைகளான வாஸுகி முதலிய சர்ப்பங்களால் துதிக்கப்பெற்றுச் சமுத்திரத்தின் மத்தியில் பிரவேசித்தது. உடனே பலராமன் சரீரம் உயிரற்றதாகி விட்டது. அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணனும், மத்தியலோகத்தை விட்டுச் செல்லநினைத்து மகாயோகத்தை யவலம்பித்துத் தரையில் பள்ளிகொண்டார். அப்பொழுது ஜரையென்ற வேடன் அவரை ஒரு மிருகமென எண்ணி அவருடைய பாதகமலத்தை அம்பினால் அடித்தான். உடனே அவ்வேடன் தன்னுடைய தவற்றைத் தெரிந்துகொண்டு மிகவும் நடுநடுங்கி அவருடைய பாதங்களில் வீழ்ந்தான். ஸ்ரீகிருஷ்ணன் அவனைத் தேற்றி ஆகாசமண்டலத்தைத் தனது ஒளியினால் விளங்கச்செய்து சுவர்க்கத்துக்கு ஏகினார்.

அர்ஜுனனே ராமகிருஷ்ணர்களின் ஈமச்சடங்குகளை முடித்து யாதவஸ்திரீகளை ஹஸ்தினபுரிக்கு அழைத்துச்சென்றான். வழி நடுவில் கழிகளைக் கையிற்கொண்ட திருடர்கள் அவர்களை ஆக்கிரமித்தார்கள். எவன் உலகமுழுவதையும் வென்றானோ, எவன் மகாவீரர்களான, பீஷ்மரையும், கர்ணனையும், யுத்தத்திற் கொன்றானோ அந்த அர்ஜுனனே கேவலம் தடியர்களான திருடர்களை வெல்ல முடியவில்லை! காண்டீவத்தைக் கையில் எடுக்கக்கூட அவனால் முடியவில்லை. ஸத்யபாமை, ஹைமவதீ, ஜாம்பவதி முதலான முக்கிய மகிஷிகளைத்தவிர மற்ற ஸ்திரீகளைத் திருடர்கள் அபகரித்துச் சென்றார்கள்.

இந்தக் கதை மௌஸிகமா? உலக்கையின் விருத்தாந்தம் இடைச்செருகலென்பதில் ஐயமில்லை. ஸ்தூலரூபமான மிகுதிக் கதையை இடைச்செருகலென்று தள்ளிவிடக்கூடாது. யாதவர்கள் கட்குடியர்களாகவும் தீய ஒழுக்கமுள்ளவர்களாகவு மிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் ஒரே வம்மிசத்தைச் சார்ந்தவர்களில்லை; வெவ்வேறு வம்மிசத்தைச் சார்ந்தவர்கள். குருக்ஷேத்திர யுத்தத்தில் ஸாத்தகியும் ஸ்ரீகிருஷ்ணனும் பாண்டவர்களைச் சேர்ந்திருந்தார்கள். அந்தகனும், கிருதவர்மாவும் துர்யோதனன் பக்ஷத்தைச் சார்ந்தவர்கள்.

அதன்பிறகு யாதவர்களுக்கு ஒருவனும் அரசனாகவில்லை. ஸ்ரீகிருஷ்ணன் தம்முடைய குணவிசேஷங்களால் யாதவர்களுக்கு நாயகராக விளங்கினார். ஆனால் அவருக்கும் பலராமனுக்கும் அபிப்பிராயபேதமிருந்தது. எப்பொழுது யாதவர்கள் மதம்பிடித்தவர்களாகி ஒருவரையொருவர் தாக்கி நாசமடைந்தார்களோ, அப்பொழுது கிருஷ்ணனும் பலராமனும் தேகாந்தத்தையடைந்தார்களென்பது இயற்கைதான். இதை வைத்துக்கொண்டு புராணக்காரர்கள் கட்டுக்கதைகளைக் கட்டிவிட்டார்கள். இதைப்பற்றி விரிவாய்ப் பரிசீலனைசெய்வதில் நமக்குப் பயனொன்றுமில்லாவிட்டாலும் ஒரு கதையைமட்டும் நாம் அவசியம் சொல்லவேண்டும். பரமதுஷ்டர்களான யாதவர்கள் நாசமடைவதற்கு ஸ்ரீகிருஷ்ணன் உதவியையே செய்தார். அதனால் ஸ்ரீகிருஷ்ணசரித்திரத்தில் இழிவொன்றையும் நாம் காணவில்லை. ஆதர்சபுருஷரான ஸ்ரீகிருஷ்ணன் ஆதர்சங்களான காரியங்களையே செய்திருக்கிறார். யாதவர்கள் எப்பொழுது தீயவொழுக்கமுள்ளவர்களானார்களோ, அப்பொழுது அவர்களைத் தண்டித்தலும், மீறி மறுபடியும் அவர்கள் அக்கிரமம் செய்வார்களானால் அவர்களை வதைத்தலும் அவருடைய கடமையேயாகும். எவர் ஜராஸந்தன் முதலானவர்களை அதார்மிகர்களென்று நாசஞ்செய்தாரோ, அவர் அதார்மிகர்களான யாதவர்களைமட்டும் வதைக்காமல்விட்டிருந்தால் அவர் தர்மத்துக்கு அநுகூலியாகமாட்டார்; தம்மைச் சார்ந்தவர்களிடம் பக்ஷபாதியாவார். ஆதர்சதர்மாத்மாவாகமாட்டார். ஆனால் ஸ்ரீகிருஷ்ணன் அப்படிப்பட்டவரல்லர். அவர் மிகவும் தர்மாத்மா; தர்மத்தை நிலைநிறுத்த அவதரித்தவர்.

ஸ்ரீகிருஷ்ணன் தேகவியோகத்துக்குக் காரணம் இதுதானென்று நிச்சயிக்கமுடியவில்லை. அவருடைய விரோதிகளால் அவர் கொல்லப்பட்டாரென்று மேல்நாட்டார் ஒருவர் சொல்லுகிறார். நமது கிரந்தங்களொன்றிலும் அவ்வாறு காணப்படவில்லை.

இரண்டாவது ஸ்ரீகிருஷ்ணன் யோகத்தை யவலம்பித்துப் பிராணனை விட்டாரென்பது. இதை யோகத்தின்மகிமையை யறியாதவர்கள் நம்பமாட்டார்கள்; அவர்களை நம்பும்படி செய்வது கடினம். இவ்வாறு செய்யமுடியுமென்று (அதாவது யோகத்தால் பரலோகம் போக இயலுமென்று) 'விஸூஸ' ஸூத்திரத்தில் நாம் காண்கிறோம். பகவானான ஸ்ரீகிருஷ்ணன் ஆத்மஹத்தி செய்துகொண்டாரென்று வேறுசிலர் சொல்லுகிறார்கள். ஆத்மஹத்தியென்பது மகாபாவமானசெயல். ஆதர்சபுருஷர் அவ்வாறு செய்திருக்கவேமாட்டார். உயிர்த்திருக்குங்காற் செய்யவேண்டியவற்றையெல்லாம் செய்துமுடித்துவிட்டு முதிர்ந்த வயதில் பரமேசுவரனிடம் மனதைப் பதியவைத்துத் தன்மயமாகவே யிருந்துகொண்டு சுவாசத்தையடக்குவதை ஆத்மஹத்தியென்று சொல்லக்கூடாது. ஆத்மஹத்தியென்பது மகாபாவமான காரியமென்று நன்றாயறிந்துகொண்டு வாழ்நாளின் இறுதியில் யோகவலியினால் பிராணனைவிடுவது ஆத்மஹத்தியாகுமா?

மூன்றாவது 'ஜரா' என்ற வேடனால் அம்பினாலடிக்கப்பட்டாரென்பது. இச்சமயம் ஸ்ரீகிருஷ்ணனுக்கு வயது நூறுக்குமேலாகிவிட்டதென்று விஷ்ணுபுராணத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. ஜராவ்யாதனென்பது ஜராவியாதியாயிருக்கக்கூடாதா? (ஜரா = கிழட்டுத்தனம்)

எவர்கள் கிருஷ்ணனை ஈசுவரனென்று கொள்ளாமல் மனுஷ்யனென்றுமட்டும் கொள்ளுகிறார்களோ அவர்கள் மேலேகண்ட விஷயங்களில் ஏதாவதொன்றைக் கிரகித்துக்கொள்வார்கள். நாமோ கிருஷ்ணனை யீசுவராவதாரமென்றுகொள்கிறோம். அவர் தேகத்தைப் பரித்தியாகம் செய்தற்குக்காரணம் அவருடைய இச்சையே.

பிறப்பும் இறப்புமாகிய இவைகள் அவருடைய ஸ்வாதீனத்திலேயிருந்தன. ஆகையால் கிருஷ்ணனுடைய தேகவியோகத்துக்குக் காரணம் அவருடைய இச்சையே என்று நாம் கூறுகிறோம்.

மௌஸலபர்வத்தின் ஸ்தூலமான கதை, உண்மையுள்ளதென்று தெரிகிறது. புராணங்களிலும் ஹரிவம்சத்திலும் கிருஷ்ணனுடைய ஜீவனசரித்திரம் எவ்வாறு வருணிக்கப்பெற்றிருக்கிறதோ அவ்வாறு மகாபாரதத்தில் வருணிக்கப்பெறவில்லை. பாண்டவர்பொருட்டு ஸ்ரீகிருஷ்ணன் எந்தச்செயல்களைச் செய்தாரோ, அவைகளையன்றி வேறுவிருத்தாந்தங்கள் மகாபாரதத்திற் காணப்படவில்லை.

மௌஸலபர்வத்தைப்பற்றி அநுக்ரமணிகாத்தியாயத்தில் யாதொரு வார்த்தையுமில்லை. "பரீக்ஷித்து"ப் பிறந்தபின் நடந்த விருத்தாந்தங்களொன்றும் அவ்வத்தியாயத்திற் காணப்படவில்லை. "பரீக்ஷித்தின்" ஜனனமே ஆதிமகாபாரதத்தின் முடிவு என்றும், பிந்திய விருத்தாந்தங்கள் இரண்டாவது அல்லது மூன்றாவது தொகுதியைச்சார்ந்தவையென்றும் நாம் நினைக்கிறோம்.

---

## இரண்டாவது அதிகாரம்.

### முடிப்புரை.

இரண்டு பயன்களுக்காக அறிவாளிகள் நன்குசிந்திக்கிறார்கள்:- ஒன்று பழைய தீயவழக்கங்களை விலக்குதல், மற்றொன்று சத்தியத்தை நிலைநிறுத்துதல். கிருஷ்ணசரித்திரத்தில் முதற்குறித்த பயனே தலைமையுடையதாயமைந்தது. நமது காலத்தையும் முயற்சியையும் கிருஷ்ணசரித்திரத்தை ஆராய்வதிலேயே செலவழித்தோம். அநேக எழுத்தாளர்கள் தங்கள்தங்கள் மனத்துக்குத் தோன்றியபடி பலபல புதுக்கதைகளைக் கிருஷ்ணசரித்திரத்திற் புகவிட்டிருக்கிறார்கள். நெருப்பைச் சாம்பல்மறைத்ததுபோலப் பொய்யும் இயற்கைக்கு ஒவ்வாதவைகளும் உண்மையை மறைத்திருக்கின்றன. தூய்மைவாய்ந்த கிருஷ்ணசரித்திர சம்பந்தமான

உண்மைகளைத் தேடமுயல்வோமானால், பொய்க்கடலில் மூழ்க வேண்டியிருக்கும். நம்மால் முடிந்தமட்டில் பரிசீலனைசெய்து நாம் கிருஷ்ணசரித்திரத்தைத் தொகுத்திருக்கிறோம்.

பாலப்பருவத்தில் கிருஷ்ணன் ஆதர்சபலவானாயிருந்தார். பிருந்தாவனத்தில் வசித்துவந்த மக்கள் அவருடைய வலிமையால் கொடியமிருகங்களின் ஹிம்சையிலிருந்து காக்கப்பட்டனர். அவருடைய இயற்கையான உடல்வலியால் கம்ஸனுடைய மல்லர்கள் வதைக்கப்பட்டார்கள். பசு மேய்த்தகாலத்தில் இடைச்சிறுவர்களுடன் விளையாடியதாலும் உடற்பயிற்சிசெய்ததாலும் அவருக்குச் சரீரவலிமை மிகுந்தது. விரைவில் நடத்தலில் காலயவனனால் அவரைத் தொடரமுடியவில்லை. தேரைநடத்துவதில் அவருக்கிருந்த திறமையைக் குருக்ஷேத்திரயுத்தத்தில் நாம் கண்டிருக்கிறோம்.

அஸ்திரவித்தை கற்றுக்கொள்ளுங்காலத்திலேயே, அவர் க்ஷத்திரியர்களுக்குள் அஸ்திரமறிந்தவர்களுட்சிறந்தவரென்று குறிக்கப்பட்டிருக்கிறார். மற்றவர் ஒருவராலும் அவரை வெல்ல முடியவில்லை. கம்ஸன், ஜராஸந்தன், சிசுபாலன் முதலிய பலவீரர்களுடன் போர்செய்யும்போதும், மற்ற அரசர்களுடன் போர்புரியும் காலத்திலும், காசியரசன், கலிங்கன், பௌண்டிரகன், காந்தாரன் முதலிய அரசர்கள் அவரையெதிர்த்தபோதும், அவர்கள் யாவரையும் அவர் வென்றார். அவருடைய சீடர்களான ஸாத்தகியும் அபிமன்னுவும் போர்களில் பகைவர்களை வென்றார்கள். அர்ஜுனனும், யுத்த சம்பந்தமான சிற்சில விஷயங்களில், தான் அவருடைய சீடனென்று கூறுகிறான். பிறருக்குக் கற்பிப்பதிலும் அவர் மிகவும் திறமைவாய்ந்தவர். உடல்வலியினாலும் பயிற்சியாலும் க்ஷத்திரியர்கள் நிரம்பப்பெயர்பெற்ற போர்வீரர்கள் ஆகிறார்கள். மிகவும் சிறந்த வீரர்களே சேனாபதிகளாவார்கள். மகாபாரதத்திலும் புராணங்களிலும் அப்படிப்பட்ட சேனாபதிகளைக் காணக்கிடைக்கவில்லை. பீஷ்மரிடமாவது அர்ஜுனனிடமாவது அவ்வளவு உயர்ந்த

திறமை இல்லை. சேநாபதியாயிருத்தலில் கிருஷ்ணனுக்குச் சிறந்த திறமை உண்டு என்பதை ஜாராஸந்தயுத்தத்தில் நாம் அறிந்திருக்கிறோம். யாதவசேனை, மிகச்சிறியதாயிருந்தும் சேனபதியான கிருஷ்ணனுடைய திறமையாலேயே ஜாராஸந்தனுடைய கணக்கிலடங்காத படையை மதுரையிலிருந்து வெருட்டிவிட்டது. ஜாராஸந்தனுடன் போர்புரிந்து, எண்ணிறந்ததான அவனுடைய படையைக் குறைக்கமுடியாதெனக்கருதியே கிருஷ்ணன் மதுரையை விட்டுத் துவாரகைசென்றார். ஸமுத்திரமத்தியிலிருக்கிற துவாரகையில் புதியதாக ஓர் நகரத்தை அமைப்பித்து, அடுத்திருக்கிற 'ரைவதக'பருவத வரிசையில் தகர்க்கமுடியாத கோட்டைகளையும் கட்டுவித்தார். புராணேதிஹாஸக்கதையில் க்ஷத்திரியர்களிடம் போர்களை நடத்துவதில் இத்தகைய மதிநுட்பத்தையும் திறமையையும் காணமுடியாது. கிருஷ்ணனுடைய ஞானமோ முதிர்ந்த நிலைமையையடைந்தது. அவர் வேதமறிந்தவர்களுள் நிகரற்றவர் என்றே பீஷ்மர் அவருக்கு முதல்மரியாதை செய்யவேண்டுமென்று வற்புறுத்தினர். சிசுபாலனும் இதை மறுக்கமுடியவில்லை. வேதவியாஸர் இருக்கும்போது அவருக்கு ஏன் அக்ரபூஜைசெய்யவேண்டும் என்றுமட்டும் சொன்னன். கிருஷ்ணனுடைய பிரும்மக்ஞானமும் உயர்ந்தநிலையையடைந்தது. அவரால் பிரசாரம்செய்யப்பெற்ற பகவத்கீதையே அதற்கு உறுதியான பிரமாணம். கிருஷ்ணனல் உபதேசிக்கப்பெற்ற தர்மத்தைக்காட்டிலும், உயர்ந்ததாயும் மக்களுக்கு நன்மைபயக்கக்கூடியதாயும், எல்லோராலும் அநுஷ்டிக்கக்கூடியதாயும் உள்ள தர்மம், பூமியில் வேறெவ்விடத்திலும் பிரசாரம்செய்யப்படவில்லையென்பதை நாம் வேறு கிரந்தத்தில் கூறியுள்ளோம். இத்தகைய தர்மமும், ஞானமும் பெரும்பாலும் மானிடசக்திக்கு மேலானது. ஆனல் ஆதர்சசக்திவாய்ந்த கிருஷ்ணன் மானிடசக்தியைக்கொண்டே எல்லாக்காரியங்களையும் சாதித்திருக்கிறர் என்பதை ஆதாரங்கள் மூலமாக நாம் அடிக்கடி நிரூபித்திருக்கிறோம். பகவத்கீதையிலிருந்தே அவருடைய அநந்தமான ஞானம் வெளியாகிறது.

ராஜதர்மம், ராஜநீதி இவைகளைப்பற்றியும் ஆலோசிப்போம். அவைகளிலும் ஸ்ரீகிருஷ்ணனே மேலானவர். அவருடன் ஆலோசியாமல் ராஜஸூயயாகத்தைத் தொடங்கக்கூடாதென்று வியாஸரிடம் யுதிஷ்டிரன் சொன்னான் என்பதே ஸ்ரீகிருஷ்ணன் ராஜநீதியறிந்தவர்களிற் சிறந்தவரென்பதைத் தெரிவிக்கிறது. ஜராஸந்தனை வதைத்துச் சிறையிலடைபட்ட அரசர்களை விடுவித்ததே சிறந்த நீதியாகும். அதனாலேயே அதிக வருத்தமின்றி எளிதாகச் சாம்ராஜ்யத்தை யடையமுடிந்தது. தர்மராஜ்யத்தை ஸ்தாபித்தபிறகு ராஜதர்மங்களை வகுப்பதற்காகப் பீஷ்மரைக்கொண்டு ராஜ்யவியவஸ்தை செய்வித்தாரென்பது ராஜநீதியில் அவருடைய சிறந்த அறிவுக்கு இரண்டாவது உதாரணமாகும். இன்னும் வேறு பல உதாரணங்களை யிதைப்படிப்போர் தெரிந்துகொண்டிருக்கலாம்.

ஸ்ரீகிருஷ்ணனுடைய புத்தியும் உயர்ந்த நிலைமையை யடைந்திருந்தது. அவருடைய புத்தியானது எங்கும் செல்லக்கூடியது, எல்லாவற்றையும் அறியக்கூடியது, ஸமயத்துக்குத் தக்கபடி உபாயங்களைச் செய்யக்கூடியது என்பதை நாம் அடிக்கடி அறிந்திருக்கிறோம். மானிடஜன்மத்தில் எவ்வளவுமட்டில் ஸர்வக்ஞராயிருக்கமுடியுமோ அவ்வளவும் ஸ்ரீகிருஷ்ணன் ஸர்வக்ஞராயிருந்தார். அபூர்வமான வைத்தியவித்தை, ஸங்கீதம், அசுவங்களைப் பழக்குதல் முதலான எல்லா வித்தைகளிலும் அவர் நிபுணராயிருந்தார். உத்தரையின் இறந்த குழந்தையை உயிர்ப்பித்தது வைத்தியவித்தையில் இவரடைந்திருந்த சிறந்த பயிற்சிக்கு உதாரணம்; பெயர்பெற்ற வேணுகானம் இரண்டாவதற்கு உதாரணம். ஜயத்திரதனைவதைத்தநாளில் குதிரைகளின் சல்யோத்தாரணம் மூன்றாவதன் உதாரணம்.

காரியங்களை நிறைவேற்றுவதிலும் ஸ்ரீகிருஷ்ணனுடைய மதியுயர்ந்தநிலைமையை யடைந்திருந்தது. அவரது ஸாகஸமும் காரியநிர்வாஹசக்தியும் இதை வாசிப்போர்க்கு நன்றாய்ப் புலப்பட்டிருக்கும். எல்லா மக்களிடமும் அவருக்கு அன்பும் தயையும் நிரம்பு

இருந்தது என்பதற்கு உதாரணங்கள் இவ்விதிஹாஸத்தில் நிறைந்திருக்கின்றன. சரீரவலியில் அவர் எல்லாரிலும் மேம்பட்டவராயிருந்தும், உலகநன்மைக்காகச் சமாதானமடைவதில் தளராத கடைப்பிடியுடையராயிருந்தார். அவர் எல்லோருக்கும் நன்மையையே விரும்புபவர்; மனிதர்கள் முதல் பசுக்கள், கன்றுகள் ஈறுக எல்லாப்பிராணிகளிடமும் அவர் தயையுடையவர்; கோவர்த்தன மலையில் அவர் யாகத்தை நடத்தினரென்பது வெளிப்படை. பாகவதர்கள் சொல்லுகிறபடி குழந்தைப்பருவத்தில் வெண்ணெய் திருடினார் என்பது முதலிய கதை கர்ணபரம்பரையாய்க் கேள்விப்பட்ட விருத்தாந்தங்களாயிருந்தாலும் பசுக்களுக்கும், கன்றுகளுக்கும் அவர் இனிய உணவையளித்தார் என்பது உண்மையுள்ள கதையே. அவர் தன்னைச்சார்ந்தவர்களுக்கு நன்மையை விரும்புபவர்; தன்னைச் சேர்ந்தவனானாலும் ஒருவன் பாவம் செய்வானானல் அவனிடம் வெறுப்புக்கொள்பவர். அவர் பொறுமையுள்ளவர், சமயம்வாய்த்தபோது இரும்பைப்போற் கடினமான மனத்துடன் இருந்து குற்றவாளிகளைத் தண்டித்திருக்கிறார் என்பதையும் நாம் கண்டிருக்கிறோம். அவர் எல்லா மக்களிடமும் பிரியமுள்ளவராயிருந்தாலும் உலகத்தின் நன்மைக்காகத் தன் மக்களையும் கொல்வதிற் பிற்படவில்லை. கம்ஸன் அவருக்குத் தாய்மாமன். பாண்டவர்கள் அவருக்கு எவ்வாறு உறவினர்களோ அவ்வாறே சிசுபாலனும் உறவினன்; இருவரையும் தண்டித்தார். முடிவில் தன்னைச்சார்ந்தவர்களான யாதவர்கள் கட்குடியர்களாகவும் தீயநடத்தையுள்ளவர்களாகவும் ஆனபொழுது அவர்களை அவர் காக்கவில்லை. ஆதர்சபுருஷரான ஸ்ரீகிருஷ்ணன் மனிதர்களை மகிழ்விப்பதிலும் பிற்படவில்லை. பாலப்பருவத்தில் பிருந்தாவனத்தில் விரஜலீலையையும் யௌவநத்தில் சமுத்திரத்திலும், யமுனையாற்றிலும், ரைவதக பர்வதத்திலும் விளையாட்டுக்களையும் நடத்தினர். அவைகளைப் பற்றி விரிவாய் உரைக்கவேண்டியதில்லை.

ஒருவிருத்தாந்தம் மாத்திரம் எஞ்சியிருக்கிறது. பக்தியென்பது மனிதர்களுக்குமுக்கியமானது. ஸ்ரீகிருஷ்ணன் ஆதர்சபுருஷர்; அவருடைய பக்தியை எங்கேகண்டிருக்கிறோம்? அவரே ஈசுவராவதாரமாயிருந்தால் அவர் யாரைக்குறித்துப் பக்திசெய்வது? அவர்

தம்மையே பூஜித்துக்கொள்வதா? (அவர் சிவபூஜைசெய்தார் என்று மகாபாரதத்திற் சொல்லியிருக்கிறது. ஆனால் அந்த விருத்தாந்தம் இடைச்செருகல் என்று அநேக காரணங்களால் வெளியாகிறது.) தானும் பரமாத்மாவும் ஒன்றே வேறில்லையென்ற ஞானம் ஏற்பட்டால் மட்டும் தன்னைப்பற்றிப் பக்திசெய்தல்கூடும். இது ஞானமார்க்கத்தின் கடைசியெல்லை. இதைத்தான் ஆத்மரதி (ஆத்மரதி) யென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். சாந்தோக்யோபநிஷத்தில்,

"ஸ ஏஷ ஏவம் பச்யந்நேவம் மந்வாந ஏவம் விஜாநந்நாத்மரதி ராத்மக்ரீட ஆத்மமிதுந ஆத்மாநந்தஸ் ஸ ஸ்வராட் பவதீதி"

"எவன் இவ்வாறுபார்த்து இவ்வாறுநினைந்து, இவ்வாறறிந்து, ஆத்மாவிலே ரமிப்பவனாய், ஆத்மாவிலே விளையாடுபவனாய், ஆத்மாவையே தனக்கு உதவியாகக்கொண்டு ஆத்மாவிலேயே ஆநந்தத்தையடைவானோ அவனே 'ஸ்வராட்' ஆவான்" என்று கூறியிருக்கிறது.

இதனாலேயே பகவத்கீதை வியாக்கியானஞ்செய்யப்பட்டதாயிற்று. ஸ்ரீகிருஷ்ணன் ஆத்மாராமன். ஆத்மாவென்பது ஜகத்ஸ்வரூபமே. அவர் அந்த ஜகத்தில் பற்றுடையவர். பரமாத்மாவாயிருப்பவருக்கு ஆத்மரதியென்பதை வேறுவிதமாய் வருணிக்க முடியாது. இதைக்காட்டிலும் விசேஷமாய் நம்மால் சொல்லவும் இயலாது.

ஸ்ரீகிருஷ்ணன் எவ்வகையிலும் எக்காலத்திலும் எல்லாக் குணங்களாலும் நிரம்பிய ஒளியுடையவர். ஒருவராலும் வெல்ல முடியாதவர்; தூய்மையுள்ளவர்; புண்ணியசாலி; எல்லோரிடமும் பற்றுள்ளவர்; தயையுள்ளவர்; செய்யவேண்டிய கர்மங்களைச் செவ்வனே செய்பவர்; தர்மாத்துமா; வேதங்களையறிந்தவர்; நீதிமான்; உலகத்துக்கு நன்மையையே விரும்புபவர்; நியாயம் தவறாதவர்; பொறுமையுள்ளவர்; எல்லோரையும் அடக்கியாளக்கூடியவர்;

மமதையற்றவர்; அக்ஙகாரமில்லாதவர்; மகாயோகி; தவஞ்செய்ப வர். அவர் மனுஷ்யசக்தியைக்கொண்டே எல்லாக்காரியங்களேயும் நிறைவேற்றியிருக்கிறூர். ஆனல் அவருடைய சரித்திரமோ அமா நுஷமானது. இப்படியிருக்கும்போது அவர் மனிதனு? ஈசுவரனு? என்று விசாரித்தலில் பயனென்றுமில்லே. அவர் மனிதனேயென்று நிேக்கும்பக்ஷத்தில், ரைஸ் டேவிஸ் (Rhys Davis) என்ற ஆங்கிலப் புலவன், புத்தபகவானைப்பற்றிக் கூறியிருக்கிறபடி "The Wisest and Greatest of all the Hindus" "ஹிந்துக்கள் யாவரினும் சிறந்த ஞானமுள்ளவர்; மிகப்பெரியோர்; புருஷோத்தமர்" என்று ஸ்ரீகிருஷ்ணனைப்பற்றிச் சொல்லக்கூடும். எவர்கள் கிருஷ்ணசரித் திரத்தில் ஈசுவரப் பிரபாவத்தைக் கண்டிருக்கிறூர்களோ அவர்கள் கைகூப்பி, வணக்கத்துடன் இந்தக்கிரந்தம் முடிவுபெறுங் காலத் தில் நம்முடன்சேர்ந்து,

"நாகாரணாகூ காரணா த்வா காரணாகாரணாநுவ।
ஶரீரக்ரஹணம் வாபி யர்ம்மத்ராணாய தெவாம்॥

("காரணத்துடனே காரணமில்லாமலோ நீர் உத்தமமான சரீரத்தை எடுத்துக்கொண்டது, தர்மரக்ஷைக்காகவே யாகும்") என்று துதிக்கக் கடமைப்பட்டிருக்கிறூர்கள்.

முற்றுப்பெற்றது.

சுபம்.